சிதம்பரம்
ஸ்ரீசபாநாயகர்
(நடராஜர்) கோயில்
கும்பாபிஷேக மலர்

2623



திருப்பணிக்குழு வெளியீடு
11 - 2 - 1987

MSICPL

MADURA SOUTH INDIA CORPORATION PRIVATE LIMITED

Registered Office:

Rani Seethai Hall 3rd Floor,
No. 603, Anna Salai,
Madras-600 006. Phone: 478143 & 470322.

WHOLESALERS & RETAILERS OF

IRON & STEEL

DISTRIBUTORS OF

MADURA COATS LIMITED

YARN AND CLOTH

BRANCHES AT:

MADRAS □ COIMBATORE □ COCHIN □ BANGALORE



தலைவர்

Dr. M.A.M. இராமசாமி B.A. D.Litt.

துணைத்தலைவர்

பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார்

செயலாளர்கள்

திரு. K. சுவாமிநாதன்

திரு. A.V. இராமகிருஷ்ணன்

உறுப்பினர்கள்

திரு. R. இராமலிங்கம் பிள்ளை

திரு. G. வாகீசம் பிள்ளை

திரு. R. பாலசுப்பிரமணியன்

திரு. R. S. ராஜரத்தின தீட்சதர்
செகரட்டரி, பொது தீட்சதர் கமிட்டி

திரு. V. S. வைத்தியநாத தீட்சதர்

Dr. A. ஆனந்த நடராஜ தீட்சதர்

புலவர் திரு. ஸ்ரீ. நா. ஆனந்த குஞ்சிதபாத தீட்சதர்

Dr. M.S. கோவிந்தசாமி

புலவர் திரு. த. முருகேசன்

திரு. R. K. கணபதி

திரு. R. சம்பந்தம் பிள்ளை



11. 2. 87 அன்று நடைபெற்ற கும்பாபிஷேகம்

உள்ளுரை

பதிப்புரை:

– டாக்டர் மு. அ. மு. இராமசாமி
தலைவர், கும்பாபிஷேக மலர்க்குழு

ஆசியுரை:

– ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்

ஆசியுரை:

– சிவப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள்

ஆசியுரை:

– ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

ஆசியுரை:

– தவத்திரு குன்றக்குடி அடிகளார்

ஆசியுரை:

– சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

MESSAGE:

– R. Venkataraman
VICE-PRESIDENT, INDIA

வாழ்த்துச் செய்தி:

– எம். ஜி. இராமச்சந்திரன்
தமிழக முதல்வர்

வாழ்த்து:

– ப. சிதம்பரம்
மத்திய அமைச்சர்

வாழ்த்து:

– வி. வி. சுவாமிநாதன்
சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர்

வாழ்த்து:

– டாக்டர் மு. அ. மு. இராமசாமி
இணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

வாழ்த்து:

– கே. ஆர். கணபதி
சட்டமன்ற உறுப்பினர்

வாழ்த்து:

– இராம. வீரப்பன்
சட்டமன்ற உறுப்பினர்

கோயில் திருப்பணி:

– ஜி. வாகீசம் பிள்ளை
செயலாளர்

இயன்மொழி வாழ்த்து:

– புலவர் த. முருகேசன்

இலக்கியம்:

1. பாட்டும் பொருளும்	...	1
2. குஞ்சித சரண மகிமை	...	4
3. நகரத்தார்கள் சிதம்பரத்தில் செய்த அறச்செயல்கள்	...	7
4. ராஜராஜன் திருமுறை கண்டது	...	10
5. சிதம்பரச் சிற்றிலக்கியங்கள்	...	13
6. தில்லையும் செந்தமிழும்	...	18
7. ஸ்ரீ நடராஜர் தத்துவம்	...	23
8. குஞ்சிதாங்கிரிஸ்தவம்	...	25
9. பெரிய திருத்தாண்டகத்தில் சித்தாந்த விளக்கம்	...	36
10. திருச்சிற்றம்பல முடையாரும் திருவாசகமும்	...	46
11. கோயில் நான்மணி மாலை	...	49
12. கோயில் மூத்த திருப்பதிகத்தில் ஒரு கணக்குக் குறிப்பு	...	59
13. நம்பியாரூரர் கண்ட தில்லைத் தரிசனம்	...	65
14. அருச்சனை பாட்டேயாகும்	...	69
15. தில்லைக் கலம்பகம்	...	77
16. மனித்தப்பிறவியும் வேண்டுவதே	...	82
17. சேக்கிழாரும் திருத்தில்லையும்	...	87
18. எடுத்த பொற்பாதம்	...	96
19. அப்பய்ய தீட்சதர்–சிதம்பரம்–சைவம்	...	105
20. கூத்தர் நூல் காட்டும் தில்லைத் திருப்பணிகள்	...	111
21. சிற்சபை நாதரும் சிவாகமங்களும்	...	117
22. பெருநெறி	...	122
23. திருவாசகமும் பண்டிதமணியும்	...	131
24. சிதம்பர புராணம்	...	136
25. சேரமான்பெருமானும், தில்லைச்சிற்றம்பலமும்	...	140
26. எடுத்துச்சுமப்பான்	...	146

27. சிதம்பரமும் குமரகுருபரரும் ... 151
28. தில்லையுட் கூத்தனும் வான் புகழடியவரும் ... 155
29. நடராச சதகம்—ஓர் அறிமுகம் ... 161
30. அருணகிரிநாதர் காட்டும் ஆடல்வல்லான் ... 166

வரலாறு

31. சிம்மவர்மனின் தில்லைத் திருப்பணி ... 176
32. இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் ... 180
33. பாண்டிய மன்னர்களும், தில்லை திருக்கோயில்களும் ... 186
34. பச்சையப்ப முதலியாரின் வாழ்க்கையும் அவரது அறக்கட்டளைகளும் ... 192

கலை

35. தில்லைத் தலத்து நடன சிற்பங்கள் ... 197
36. சிதம்பரம் கோயில் ஓவியங்கள் ... 203
37. கோயில் முழுவதும் காணமுயற்சி ... 208
38. நடராஜ தத்துவமும் ஆனந்தகுமார சுவாமியும் ... 215
39. தில்லைக் கூத்தனும் செந்தமிழிசையும் ... 218
40. கலைக்கோயில் ... 220
41. தில்லையின் தனிச்சிறப்பு ... 224

தத்துவம்

42. தில்லைச் சிற்றம்பலவன் திருக்கூத்தும் தமிழ் நெறி விளக்கமும் ... 226
43. கச்சியப்பர் காட்டும் சமயம் ... 232
44. தில்லை – ஒரு தனியூர் ... 240
45. சதரத்ன சங்கிரகமும் பௌஷ்கரவிருத்தியும் ... 243
46. சாத்திர நூல்களும் தில்லையும் ... 247
47. சிதம்பரேசர் சிந்தியல் வெண்பா ... 251
48. இலக்கியங்களில் திருமஞ்சனக் குறிப்புகள் ... 255
49. தில்லைத் திருமடங்கள் ... 258
50. தருமையும் தில்லையும் ... 267
51. கோயில் புராணம் ... 271
52. தில்லையும் சைவசித்தாந்தமும் ... 277

53. சிவலோகமாவதும் தில்லைச்சிற்றம்பலமே ... 282
54. அருள் வழி நிற்றல் ... 287
55. திருநாவுக்கரசர் தில்லைக் காட்சி ... 295
56. அன்பே திருமஞ்சனம் ... 298
57. கோயில் ஸ்ரீ காரியம் ... 300
58. Nataraja and the Art of Dance ... 307

கோயில் படங்கள் உதவி:
Dr. R. நாகசுவாமி M.A., P.h.D.,
இயக்குநர், தொல்பொருள் ஆராய்ச்சித் துறை, சென்னை

அருள்மிகு சபாநாயகர் (ஸ்ரீ நடராஜா) கோயில் திருப்பணிக்குழு
சிதம்பரம்

டாக்டர். மு.அ.மு. இராமசாமி
தலைவர், கும்பாபிஷேக மலர்க் குழு

பதிப்புரை

பூலோக கயிலாயம் எனப் போற்றப்பெறும் சிறப்புடையது சிதம்பரம். சைவர்களால் 'கோயில்' என வழங்கப் பெறும் நிலைமை வாய்ந்தது, தில்லை நடராஜப் பெருமான் திருக்கோயிலே என்பதனைப் பலரும் அறிவார்கள். தன வணிகச் செல்வர் களாகிய நகரத்தார் சார்பில் சிதம்பரம் திருக்கோயிலைப் புதுப்பித்துத் திருப்பணி செய்தவர் செட்டி நாட்டரசர் ராஜாசர் அண்ணமலைச் செட்டியார் அவர்களின் தந்தையார் சா. ராம. முத்தையா செட்டியார் ஆவார். அவர்களால் 1891 – இல் தில்லைப் பெருங் கோயில் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. அதன் பின் ஆடுர் பெருநிலக்கிழார் தருமபூஷணம் எம். இரத்தினசபாபதிப் பிள்ளை, சிதம்பரம் அணிகல வணிகர் தரும பூஷணம் செ. இரத்தினசாமி செட்டியார் ஆகிய அன்பர் களால் திருப்பணி செய்யப்பெற்று 1955 இல் ஒரு கும்பாபிஷேகம் நடைபெற்றதனை நாம் அறிவோம். இப்பொழுது இக் கோயிலின் நான்கு கோயில்கள் வெளி மதில், உள் மதிலை யொட்டிய திருமாளிகைப் பத்தி, ஆயிரங்கால் மண்டபம் முதலிய எல்லாப் பகுதிகளும் திருப்பணி செய்யப்பெற்று அட்சய ஆண்டு தை 29 ஆம் நாள் (11-2-87) மகா கும்பாபிஷேகம் நடை பெறுகின்றது. இப்பெரும் திருப்பணிக்குத் தமிழக அரசினரும் பொதுமக்களும் பெரும் நிதியுதவி அளித்தமை பெரிதும் பாராட்டுக் குரியது.

இக்கும்பாபிஷேகத்தின் அங்கமாகத் தில்லைப் பெருங் கோயிலின் வரலாறு, இலக்கியம், கலை, சமய நுட்பங்கள் பற்றிய மலர் ஒன்றினை என் பொருட்செலவில் வெளியிடும்படி திருப்பணிக்குழுவினர் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் விரும்பிய வண்ணம் அப்பொறுப்பினை ஏற்றுக் கொண்டு

இம்மலருக்குச் சமயப் பெரியோர்களின் ஆசியுரையும், இந்திய குடியரசுத் துணைத்தலைவர், மாண்புமிகு அமைச்சர்கள் ஆகியோரும் நல்வாழ்த்தும் நல்கியுள்ளனர். பேரறிஞர் அறிவு வளம் சார்ந்த சிறந்த கட்டுரைகளை எழுதியுதவினர். இம்மலர் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் புதிதாக வந்த அச்சகம் தனது முதல் வெளியீடாக இம்மலரை அச்சிடும்பணியை அன்புடன் ஏற்றுக் கொண்டது.

இம்மலர் வனப்புற வெளி வர உதவிய பெரியோர்கட்கும் கட்டுரை எழுதியுதவிய அறிஞர்கட்கும் திருப்பணிக்குழுவினர் களுக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரியனவாகும். தில்லைப் பெருங்கோயிலின் சிறப்பினை விளக்கும் இக் கும்பாபிஷேக மலரினைத் தமிழ் மக்கள் அன்புடன் வாங்கிப் பயன் பெறுவார்கள் என நம்புகிறேன்.

அன்பன்

சென்னை.
நாள்: 7.2.1987

மு. அ. மு. இராமசாமி



தமிழ்நாடு ஆளுநர்
மேதகு எஸ். எல். குரானா



தமிழக முதல்வர்

பொன்மனச்செம்மல் மாண்புமிகு

டாக்டர் **எம். ஜி. இராமச்சந்திரன்**



தமிழக அறநிலையத்துறை அமைச்சர்

மாண்புமிகு

வி. வி. சுவாமிநாதன்



அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைவேந்தர்
மலர்க்குழுத் தலைவர்
டாக்டர் மு. அ. மு. இராமசாமி



தில்லைத்திருப்பணிக் குழு முன்னாள் தலைவர்
அமரர் ஆர். சுனகசபை



அமரர் ஜி. வாகீசம் பிள்ளை

Sri Chandramouleeswaraya Namaha

SRI SANKARA BHAGAVADPADACHARYA PARAMAPARAGATHA
His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL

SRIMATHAM, SAMASTHANAM, KANCHEEPURAM - 631 502

ஆசியுரை

அருள் மிகு சபாநாயகர் (ஸ்ரீநடராஜா) கோயில் "கும்பாபிஷேக விழா மலருக்கு" ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரிய ஸ்வாமிகள் ஆசி உரை!

"கோயில்" என்றுல் சிதம்பரத்தையே குறிக்கும் என்பார்கள். "சித்" என்றுல் "சைதன்யம்", "அறிவு", "ஞானம்"; "அம்பரம்" என்றுல் "இடைவெளி", "ஆகாசம்"; "சிதாகாசம்", "ஞானஒளி", எங்கும் நிறைந்த "ஞான அறிவு ஒளி" என "சிதம்பரம்" என்ற சொல்லிற்குப் பொருள். கைலயம்பதியான ஸ்ரீபரமேஸ்வரன் நர்த்தனமாடி சப்த ஒலிகளை எழுப்பி அதன் மூலமே உலகிலுள்ள அனைத்தும் – "ஒலி", "எழுத்து", "தத்துவம்", "படைப்பு" இத்தனையும் – வெளி வந்ததாகக் கூறுவார்கள். தமிழிற்கு தெய்வீக நூல்களாக "தேவாரம்", "திருவாசகம்" போன்ற நூல்கள் சிதம்பர ஷேத்திரத்தி லிருந்தே ஸ்ரீநடராஜ பெருமானுடைய அருளினுலேயே கிடைத்தது என்ற உண்மையை யாவரும் அறிவார்கள். ஸ்ரீஆதிசங்கரரும் கைலாயத்திலிருந்து கொண்டு வந்துள்ள 5 ஸ்படிகலிங்கத்துக்குள் ஒன்றுன "மோஷ லிங்கத்தை" இங்கு வைத்ததாக சங்கர விஜய நூல்கள் கூறுகின்றன. இப்போதும் அந்த லிங்கத்துக்கு தீக்ஷதர்கள் பூஜை செய்து வருகிறார்கள். ஸ்ரீகாமகோடி பீடத்திலிருந்து ஸ்ரீநடராஜபெருமானுக்கு வைரத்தில் குஞ்சிதபாதமும் அபயஹஸ்தமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது வைரக் கிரீடமும் தயாராகிக் கொண்டிருக்கிறது.

1975– ஆம் ஆண்டு தொடங்கப் பட்டு பல லக்ஷக்கணக்கான ரூபாய்களில் திருப்பணி செய்யப்பட்டு 11-2-1987 கும்பாபிஷேகம் நடக்கப் போவது கேட்டு சந்தோஷமடைகிறோம். எல்லா அன்பர்களும் இந்தக்குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்டு ஆனந்த நடராஜ மூர்த்தியைத் தரிசித்து பரமானந்தத்தைப் பெறுவோமாக!

திருக்கயிலாய பரம்பரை
ஸ்ரீ–ல–ஸ்ரீ
சிவப்பிரகாசதேசிக
பரமாசாரியசுவாமிகள்
குருமகாசந்நிதானம்
திருவாவடுதுறை ஆதீனம்

திருவாவடுதுறை 609 803
தஞ்சாவூர் மாவட்டம்.

ஆசியுரை

முழுமுதற் பொருளாகிய சிவபெருமான் எழுந்தருளி விளங்கும் இடமெல்லாம் கோயில் எனப்பட்டாலும் கோயில் எனச் சிறப்பித்துச் சொல்லப் பெறுவது ஸ்ரீ நடராஜப் பெருமான் ஆனந்தக் கூத்து இயற்றியருளும் தில்லையம்பலத் திருக்கோயிலேயாகும்.அன்பர்கள் அன்புக் கொடையினாலும், சிவப்பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட நல்லோர் பலரது சீரிய முயற்சியினாலும் இத்திருக்கோயில் திருப்பணிகள் நல்ல வண்ணம் நிறைவுபெற்று அட்சய - தை -புனர்பூச (11-2-1987) நன்னாளில் திருக்குடமுழுக்கு விழா நிகழவுள்ளமை யறிந்து பெரிதும் மகிழ்கின்றோம்.

திருக்குடமுழுக்கு விழா இனிது நிகழவும், விழா நினைவு என்றும் நின்று இன்பம் பெருக்க வெளியிடப் பெரும் விழா மலர் பொலிவு பெற மலர்ந்து சிவானந்தத் தேன் பிலிற்றிச் செம்மை நலம் பயக்கவும், இப்பெரும்பணிகளை முன்னின்று நடத்திய திரு ஜி. வாகீசம் பிள்ளையும் இப்பணிகளிற் பல நிலைகளிலும் பங்குகொண்டு சிறப்பாகச் செயலாற்றிய அன்பர்களும் வாழ்வின் நலன்களையெல்லாம் எளிதினெய்தி மேன்மை பெறவும் எம் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ ஞானமா நடராஜப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள்

அதிபர், ஸ்ரீ காசிமடம்
திருப்பனந்தாள் - 612 504 தஞ்சைமாவட்டம்.

ஆசியுரை

"சிர்பூத்த தெய்வத் திருத்தில்லை மன்றகம்என்
கார்பூத்த நெஞ்சகமாக் கைக்கொண்டாள்–ஏர்பூத்துன்
ஐயம் ஒருங்கின்ற அந்நுண் மருங்கொசிய
வையம் ஒருங்கின்ற மான்"

தெரிசிக்க முத்திதரும் தில்லை ஸ்ரீமந் நடராஜப் பெருமான் திருக்கோயில் கும்பாபிஷேகம் 32 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு அன்பர்களின் பெருமுயற்சியால் மிகு சிறப்புடன் நடக்கிறது. உலகம் பசியும், பிணியும் பகையும் இன்றி வசியும் வளனும் சுரங்க வாழுதற்காகவே இவ்வைபவம் நிகழ்த்தப் பெறுகிறது.

"கொண்டலோடும் குழற் கோதையோடும் கறைக்
கண்டனாடும்திறம் காண்மினோ காண்மினோ"

என்று ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உலகவர்களை ஆனந்த மாநடனம் கண்டுய்ய அழைக்கிறார்கள். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சிதம்பர மும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை, தில்லைச் சிவகாமி யம்மை இரட்டைமணிமாலை ஆகிய பிரபந்தங்களைப் பாடி இத்தலத்தைத் துதித்த அருளாளர் ஆவார்கள்.

அளப்பரும் பெருமைகளின் அளக்கர் என விளங்கும் இத்திருத்தலத்தின் கும்பாபிஷேகத்தை யொட்டி இத்தலத்தின் வரலாற்றுச் சிற்புகள், புராணப் பெருமைகள், இலக்கிய ஏற்றங்கள், தெய்வீக ஆற்றல்கள், ஆகம அமைதிகள், சாத்திரச் சால்புகள் அனைத்தும் பொலிய, அருமைமிகு மலர் வெளியிடவிருப்பதறிந்து மிக்க மகிழ்ச்சி. தில்லைக் கலைக் களஞ்சியம் எனக் கற்றோரும் மற்றோரும் போற்றும் வண்ணம் இம்மலர் மிகு சிறப்புடன் இலங்க வாழ்த்துகின்றோம்.

இத்தெய்வப் பெரும் பணியில் ஈடுற்ற அன்பர்கள் அனைவருக்கும் எல்லா நலன்களும் நனிதழைக்க நம் செந்தில்மேய வள்ளி மணாளனின் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி - 623 206.
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.

ஆசியுரை

நமது சமுதாயத்தில் "கோயில்" என்று சிறப்பிக்கப்பெறும் திருக்கோயில் சிதம்பரமேயாகும். ஆடல்வல்லான் எழுந்தருளி நட்டமாடி உயிர்கள் உய்யுமாறு ஆட்கொண்டருளும் திருத்தலம், இத்திருத்தலம். சைவத்தின் தலைநகர் சிதம்பரமேயாகும். தமிழ்நாட்டு அரசர்கள் பலரும் தில்லையில் ஈடுபாடு கொண்டு போற்றி வணங்கினர்; திருக்கோயில் விமானங்களுக்குப்பொன் ஓடு வேய்ந்தனர். செந்தமிழும் சிவநெறியும் வளர்க்க எழுந்தருளிய நால்வர் பெருமக்கள், தில்லைச் சிற்றம்பலத்தை ஊனுருக, உயிருருக நின்று பாடியுள்ளனர். திருவாசகத்தில் பாதிப் பாடல்கள் தில்லைச் சிற்றம்பலத்தைப் பற்றியதேயாம். அப்பரடிகள் அருளிய பதிகங்கள் ஞானப் பனுவல்கள். எண்ணற்ற உயிர்கள் உய்வான் வேண்டி ஐந்தொழில் நிகழ்த்திட ஞானத்திருக்கூத்து ஆடிடும் எம்பெருமான் திருக்கோலம் வணங்குதலுக்குரியது! வாழ்த்துதலுக்குரியது! ஆடல்வல்லான் திருக்கூத்தைக் காணும் பிறவியே பயனுடைய பிறவி! இத்தகு மானுடப் பிறவியே விரும்பத் தக்க ஒன்று.

தில்லைவாழ் அந்தணரும் வேளாண் பெருங்குடியினரும் மற்றவர்களும் ஒரு சேர நின்று திருக்கோயிலைத் திருப்பணி செய்து பெருஞ்சாந்தி விழா எடுப்பது பாராட்டுதலுக்குரியது; வரலாற்றுப் புகழ்மிக்க பணி! பெருஞ்சாந்தி விழா இனிதே நிறைவெய்தத் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

திருப்பணியில் ஈடுபட்ட அனைவரும் எல்லா நலன்களும் எய்தி இன்புற்று வாழ்வார்களாக!

இன்ப அன்பு.

ஸ்ரீ தொண்டை மண்டலாதீனம்
கயிலைப்புனிதர்
சிலத்திரு ஞானப்பிரகாச தேசிக
பரமாசாரிய சுவாமிகள்
57, உபதலைவர் பரமசிவம் தெரு
பெரிய காஞ்சிபுரம் - 631 502

ஆசியுரை

திருச்சிற்றம்பலம்

வில்லைவட் டப்பட வாங்கி அவுணர்தம்
வல்லைவட் டம்மதில் மூன்றுடன் மாய்த்தவன்
தில்லைவட் டந்திசை கைதொழு வார்வினை
ஒல்லைவட் டங்கடந் தோடுதல் உண்மையே.

–அப்பர்.

தீர்த்தம் என்பது சிவகங்கையே
ஏத்தருந் தலம் எழிற் புலியூரே
மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே.

–குமரகுருபரர்.

சைவ மரபில் கோயில் என்றால் சிதம்பரத்தையே குறிக்கும். இதனாலேயே இத்தலப் பெருமை நன்கு விளங்கும். சைவசமய சந்தானாசிரியர்களுள் ஒருவரான உமாபதிசிவம் தாம் அருளிச் செய்த திருப்பதிக் கோவையில் "கோயில் திருவேட்களம் நெல்வாயில்" எனத் தொடங்கி இத்தலத்தைக் 'கோயில்', என்றே கூறியுள்ளார். இத்திருப்பதிக் கோவையின் துணை கொண்டே தேவாரத் தலமுறை விளக்கம் தோன்றியது. மேலும், சிதம்பரத் தலபுராணம் கோயிற் புராணம் என்றே வழங்குகிறது. ஏட்டுச்சுவடிகளில் இப்பெயர் அப்படி இருந்திருக்க வேண்டும். அதனாலேயே உமாபதிசிவம் இவ்வாறு கருதுகிறார் என்று கூறுவாரும் உண்டு.

விராட் புருடனுக்கு இத்தலம் இருதயத்தானமாகப் பேசப்பெறுகிறது. அதுவே இத்தல நடேசப் பெருமானின் தனிச் சிறப்பிற்கு ஒரு காரணம் எனலாம். அண்டத்தில் சிதம்பரமாகிய தலத்திலும், பிண்டத்தில் இதய கமலத்திலும் கூத்தப் பிரான் எழுந்தருளியுள்ளார் என்பதைச் ''சிறைவான் புனல் தில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும் உறைவான்'' என மணிவாசகப் பெருந்தகையார் அருளிச் செய்துள்ளார்.

இறைவன் உயிர்கள் பொருட்டுச் செய்யும் நடனங்கள் இருவகையாம்: பெத்தான்மாக்கள் பொருட்டு நிகழ்த்துவது பஞ்சகிருத்திய நடனம்; முத்தான்மாக்களுக்காகச் செய்வது ஞானநடனம். இதனை உண்மை விளக்கம் ''தோற்றம்.....நாடு'' எனவும் ''மாயைதனை உதறி'' எனவும் குறிக்கிறது. இத் திருக்கோயில் பொது தீட்சதர்களின் நிர்வாகத்தில் சிறப்பாக இருப்பது போற்றுதற்குரியது.

இத்தகு சிறப்புக்களையுடைய சிதம்பரம் திருக்கோயில் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு திருப்பணி முழுமையாக நிறைவு பெற்றுத் திருக்குட நன்னீராட்டு விழா அண்மையில் நடைபெற இருப்பது சைவ சமயத்தார் அனைவருக்கும் பெருமகிழ்ச்சியைத் தருவதாகும்.

இச்சிறந்த திருத்தொண்டில் ஈடுபாடு கொண்ட பெருமக்கள் அனைவருக்கும் குறிப்பாக இக்குழுவின் செயலர் சைவத்திருவாளர் வாகீசம் பிள்ளை அவர்களுக்கும் இத்-திருப்பணியை இதற்குச்சில ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கி ஆயிரங்கால் மண்டபத்தை முழுமையாகப் புதுப்பித்த அமரர் ஆடூர் உயர்திரு இரத்தினசபாபதி பிள்ளை அவர்களுக்கும், இத்திருப்பணியில் இன்றும் பங்கு பற்றிச் சிறப்பித்து வரும் இவரது வழித்தோன்றல்களுக்கும், மற்றும் இத்திருப்பணிக்கு தக்கதொரு பொருளுதவி புரிந்த அன்பரும், தொழிலதிபர் அமரர் உயர்திரு கருமுத்துத் தியாகராச செட்டியார் அவர்களின் பேரனுமான உயர்திரு சொக்கலிங்கம் செட்டியார் அவர்களுக்கும், பாண்டியநாயகம் (ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி) ஆலயத்தை முன்பு திருப்பணிசெய்த சிதம்பரம் ஆபரண மாளிகை உரிமையாளர் அமரர் உயர்திரு இரத்தினசாமி செட்டியார் அவர்களுக்கும், தற்போதும் பாண்டியநாயகம் ஆலயத்திருப்பணிக்குப் பொருள் உதவி செய்த அவர்கள் வழித்தோன்றல்களுக்கும், மற்றும் இதில் பங்கு பற்றியுள்ள அனைவருக்கும் திருவருள் நலஞ் சிறக்க வாழ்த்துகின்றேம்.

सत्यमेव जयते

उपराष्ट्रपति, भारत
नई दिल्ली
VICE-PRESIDENT
INDIA
NEW DELHI



MESSAGE

I am glad to learn that the Mahakumbabishekam of Sri Nataraja is to take place in the temple of Chidambaram. On this happy and auspicious occasion, I extend my prayerful wishes for the fulfilment of devotees.

R. Venkataraman



எம். ஜி. இராமச்சந்திரன்
முதலமைச்சர்

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை-600 009

வாழ்த்துச் செய்தி

தமிழகத்துக்குப் பெருமை சேர்க்கும் திருத்தலங்களில் சிறந்ததொரு திருத்தலமாக சிதம்பரம் விளங்கிவருகிறது. இலக்கியங்களிலும் புராணங்களிலும் மிக உயர்ந்த நிலையில் வைத்து வழங்கப்படும் இத்தலம், இறை நம்பிக்கை உள்ள மக்களுக்கு மட்டுமின்றி கலை கலாச்சாரத்துறையில் நாட்டம் உள்ள மக்களுக்கும் யாத்திரைக்குரிய நகராகத் திகழ்கிறது. பல நூறு ஆண்டுகளாகவே சிதம்பரம் திருக்கோயில் கலை அன்பர்களைக் கவர்ந்து வந்துள்ளது. சிதம்பரம் கோயிலின் மூர்த்தியான நடராஜ வடிவம்தான் நமது இந்திய நாட்டின் கலைகளுக்கெல்லாம் ஆதாரமானது என்பது வல்லுநர்களின் முடிவு. நடராஜ வடிவத்தை ஆராய்ச்சிப் பொருளாகக் கொண்டு ஆய்வுரை செய்யப்பட்ட நூல்களும் குறிப்பாக நாட்டிய சாத்திர நூல்களும் ஏராளமாக வெளிவந்துள்ளன. சோழர்கள் முதற்கொண்டு பிற்காலத்தில் வாழ்ந்த மன்னர்கள் குறுநில மன்னர்கள் வரை பல அரசர்கள் இக்கோயிலுக்கு திருப்பணி புரிவதை பெரும் பேறாகக் கருதி வந்துள்ளனர். அவ்வகையில் நீண்ட இடைவெளிக்குப்பிறகு சிதம்பரம் திருக்கோயிலில் திருப்பணிகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு அவை நிறைவுற்று குடமுழுக்கு விழா நடைபெறுவது தமிழக மக்கள் அனைவருமே மகிழத்தக்க நிகழ்ச்சியாகும். இந்த அறப்பணிக்கு பொறுப்பேற்றவர்களையும் உதவி செய்தவர்களையும் நான் மனமாரப்பாராட்டுகிறேன்.

குடமுழுக்கு விழா சிறப்பு மலருக்கு என் இனிய நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஒம்) எம். ஜி. இராமச்சந்திரன்

MINISTER OF STATE
MINISTRY OF PERSONNEL, PUBLIC GRIEVANCES
AND PENSIONS
INDIA
NEW DELHI



வாழ்த்து

சிதம்பரம் அருள்மிகு நடராஜப் பெருமான் திருக்கோவில் கும்பாபிஷேக வைபவத்தினை ஒட்டி மலர் ஒன்று வெளியிடுவது அறிந்து அகம் மிக மகிழ்கிறேன். விழா சிறப்புறவும் மலர் மணம் பெறவும் எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்

ப. சிதம்பரம்

வி. வி. சுவாமிநாதன்

அமைச்சர்

சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை

தலைமைச் செயலகம்

சென்னை - 600 009

வாழ்த்து

1987 வரலாற்று சிறப்புமிக்க ஆண்டு. 1977 இல் ஆட்சி பொறுப்பேற்ற புரட்சித்தலைவர் 1987 லிலும் தமிழக முதல்வராக இருக்கிறார். சோழப்பேரரசன் ராசராசனுக்குப் பிறகு தில்லையம்பதியில் அம்பலத்தின்மீது கூத்தப்பெரு மானுக்குமுன் தேவாரத் திருவாசகப் பாசுரங்கள் ஒலிப்பது தமிழகத்தை ஆளும் தன்னிகரில்லாத முதலமைச்சர் மாண்புமிகு எம். ஜி. ஆர் ஆட்சியில்தான். சபாநாயகர் கோயிலுக்கு 11.2.1987 குடமுழுக்கு வருவதற்கு முன் 1.2.1987 லிருந்தே நாள்தோறும் காலை 9 மணிக்கும் மாலை 6 மணிக்கும் தீட்சிதர் ஒருவர் நடராஜப்பெருமானுக்கு முன் அம்பலத்தில் தமிழில் தேவாரம், திருவாசகங்களை ஆராதனையின்போது பாடவும் வாரத்திற்கு ஒரு நாள் பிராமணரல்லாத ஓதுவார் மூர்த்தி ஒருவர் அம்பலத்தில் அதே ஆண்டவன் சந்நிதியில் தேவாரம், திருவாசகம் பாடவும் இசைவு தந்த அத்தனை தீட்சிதர் பெரி யவர்களும் எம். ஜி. ஆர் அரசின் பாராட்டுதலுக்குரியவர்கள். தீட்சிதர்களின் மனமாறுதல் ஒரு யுகப்புரட்சிக்கு சமம். இது புரட்சித்தலைவர் ஆட்சியில் நடக்கவேண்டும் என்று விதி இருக்கிறது. வள்ளலார் இராமலிங்க அடிகள் காலத்தில் கூட நடக்காத நிகழ்ச்சி இந்த கும்பாபிஷேகத்தை ஒட்டி நடக்கிறது.

மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்தால் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்றூர் 2000 ஆண்டுகளுக்குமுன் வள்ளுவர். திருமூலமந்திரத்தை தந்த திருமூலர் என்னும் சித்தர் வாழுமிடம் தில்லையம்பலம். இங்கு அருவமாகவும் உருவமாகவும் இரண்டுமாகவும் தெய்வீகம் விளங்குகிறது. இது பக்தர்களின் நிரந்தர திருத்தலமாக மாத்திரமல்லாமல் பெரிய கலாச்சார மையமாகவும் பிரகாசிக்கப்போகிறது.

குடமுழுக்கு சிறப்பாக நடந்தேற உதவிய எம். ஜி. ஆர் அரசும், திருப்பணி குழுவும், தீட்சிதர்களும் வாழ்க!

வி. வி. சுவாமிநாதன்

டாக்டர். மு. அ. மு. இராமசாமி,
பி. ஏ., டி. லிட்.,
இணைவேந்தர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

செட்டிநாடு இல்லம்
சென்னை - 600 028

வாழ்த்து

சைவர்கள் கோயில் என்று குறிப்பிட்டாலே, அது சிதம்பரத்தைக் குறிக்கும். தமிழ் நாட்டில் சைவப் பெருமக்களுக்கு எத்தனையோ திருக்கோயில்கள் வழிபாட்டிற்கென இருந்தாலும், தில்லை என வழங்கப் பெறும் சிதம்பரமே பெருங்கோயில் என்றும், கோயில் என்றும் வழங்கப் பெறுகின்றது. திருவாசகம் தந்த மாணிக்கவாசக சுவாமிகள் இத் திருத்தலத்தைத் தம் திருக் கோவையாரில் 'புலியூர்' என்று குறிப்பிடுகின்றார். தில்லை மரங்கள் மிகுந்திருந்த காரணத்தினால் இத்திருத்தலம் தில்லை ஆனது. இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் கூத்தரசனும் நடராசப் பெருமான் ஆவர். இவர் தம் திருக்கூத்தைக் காணவே "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம் மாநிலத்தே" என்று திருநாவுக்கரசர் பெருமான் தம் தேவாரப் பதிகத்திற் குறிப்பிட்டார். தில்லையாம் சிதம்பரத்தைப் பாடாத சைவப் பெரும் புலவர்கள் இல்லை என்னும் அளவிற்குச் சிதம்பரம் பண்டு தொட்டுப் புகழ் வாய்ந்த திருக்கோயிலாக விளங்கு கின்றது.

பிற்காலச் சோழர்கள் காலத்தில் சிதம்பரம் பெருஞ் சிறப் பினைப் பெற்றது. சோழப் பெரு வேந்தர்கள் இத் திருக்கோயிலுக்கு ஆற்றிய பணிகள் பலவாகும். திருமுறைகள் மறைந்து கிடந்த இடமே இச் சிற்றம்பலம் என்னில் சிதம்பரத்தின் பெருமை விண்டுரைக்க முடியுமா? மேலும் சுந்தரர் "தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று தம் திருத்தொண்டத் தொகையைத் தொடங்கினர். நம்பியாண்டார் நம்பி அவர்கள் திருத் தொண்டர் திருவந்தாதி பாடினர். அறுபத்து மூன்று நாயன் மார்களுடைய வரலாறு உலகிற்குத் தெரிய உதவிய திருத்தலம் இதுவே. தெய்வப்புலமைச்

சேக்கிழார் பெருமான் 'திருத் தொண்டர் மாக்கதை' என்னும் பெரிய புராணம் பாடச் சிவபெருமானே அசரீரியாக 'உலகெலாம்' என அடி எடுத்துக் கொடுத்த இடம் இத் திருக் கோயிலே என்பர். இரண்டாம் குலோத்துங்க சோழன் சேக் கிழார் பெருமான் பெரியபுராணம் பாடி முடித்ததும், தஞ்சை யிலிருந்து சிதம்பரம் வந்து சித்திரைத் திருவாதிரை நாள் தொடங்கி மறு ஆண்டு சித்திரைத் திருவாதிரை வரை திருக்கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் பெரியபுராண விரிவுரை விரிக்கக் கேட்டுச் சேக்கிழார் பெருமானுக்குத் 'தொண்டர் சீர் பரவுவார்' எனும் பெயரும் சூட்டிப் பல்வேறு சிறப்புக்களைச் செய்தனன் என்பர்.

தொன்றுதொட்டு இக்கோயில் திருப்பணிகளை நிறை வேற்றுவதில் என் முன்னோர்கள் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்தனர். 1891-ல் நடைபெற்ற கும்பாபிஷேகத்தை என் பாட்டனார் டாக்டர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் தந்தையார் சா. ராம. முத்தைய செட்டியார் அவர்கள் நடத்தி வைத்தார்கள். என்பாட்டனார் ராஜா. சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தில்லை கோவிந்தராஜப் பெருமாள் கோயிலையும், முன்மண்டபத்தையும் கட்டி 1934–35ஆம் ஆண்டில் குடமுழுக்குச் செய்தார்கள். பிறகு என் தந்தையார் அவர்கள் இத்திருத்தலத்தின் தெற்குக் கோபுரத்தைத் திருப்பணி செய்தார்கள். நானும் என் குடும்பத்தினரும் பக்தியுடனும், ஆர்வத் துடனும் என் முன்னோர்களைத் தொடர்ந்து என்றும் நடராஜப் பெருமானையே வணங்கி வழிபடுவோம்.

இவ்வாறுகப் பழமையும், புராணப் பெருமையும், இலக் கியச் சிறப்பும் நிறைந்த சிதம்பரம் திருக்கோயில் கும்பாபிஷேக விழா மதிப்பிற்குரிய அமைச்சர் மாண்புமிகு வி. வி. சுவாமி நாதன் அவர்கள் உறு துணையுடனும் சைவப் பேரன்பர் திருவாளர் வாசீசம் பிள்ளை அவர்கள் உள்ளிட்ட பெருமக்கள் முயற்சியாலும் 11.2.1987 புதன்கிழமை நடைபெறவிருப்பதறிந்து பெரிதும் மகிழ்கிறேன். இப் புண்ணிய விழாவில் அனைவரும் பங்கு கொண்டு தில்லை நடராசப் பெருமானின் திருவருளுக்குப் பாத்திரர்களாகும்படி கேட்டுக் கொள்கிறேன்.

'மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்!

திருச்சிற்றம்பலம்!

மு. அ. மு. இராமசாமி



கே. ஆர். கணபதி

சட்டமன்ற உறுப்பினர்
சென்ட் உறுப்பினர்
அண்ணமலைப் பல்கலைக்கழகம்
சிதம்பரம்.

வாழ்த்து

இறைவன், அணுவினுக்கணுவாய், அப்பாலுக்கப்பாலாய் அம்பலத்தாடும் இப்பதி பழம்பெருமை வாய்ந்தது. கோயில் எனச் சைவர்களால் போற்றப்படும் பெருமை வாய்ந்தது. மக்கள் உயிர் வாழ இதயம் இடையருது இயங்குவது போல, இறைவனின் கூத்தும் உலகம் இடையருது இயங்கக் காரணமாகிறது. மேலும் இக்கோயில் சிற்பக்கலைக்கும், நடனக் கலைக்கும் கருவூலமாகவும் திகழ்கிறது.

சோழ, பாண்டிய,நாயக்க மன்னர்களால் கட்டப்பெற்றுத் திருப்பணி செய்யப்பெற்ற இக்கோயிலுக்கு இந்நூற்றாண்டில் மிகச் சிறந்த முறையில் திருப்பணியும், குடமுழுக்கும் நடைபெறுவது நாம் காணுதற்கரிய பெரும் பேருகும்.

இவ்வரிய திருப்பணியிலும், குடமுழுக்கு விழாவிலும் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு தொண்டாற்றிய பெருமக்கள் நலம் பல பெற்று வாழக் கூத்தப்பெருமான் திருவடிகளை எண்ணி வாழ்த்துகிறேன். குடமுழுக்கு விழா மலர் சிறக்க என் உளமார்ந்த வாழ்த்துக்கள்.

அன்பன்

கே. ஆர். கணபதி

இராம. வீரப்பன்

சட்டமன்ற உறுப்பினர்

9, திருமலை சாலை,
தியாகராயநகர்
சென்னை - 600 017.



வாழ்த்து

உலகம் இயங்குவதற்கு அடிப்படையாக அமைந்துள்ள ஆற்றல்களை FIVE BASIC ELEMENTS என்று பிற நாட்டு விஞ்ஞானிகள் எடுத்து விளக்குகின்றனர். அவர்களின் இந்தக் கருத்து சென்ற சில நூற்றாண்டுக் காலங்களில் கண்டு பிடிக்கப்பட்ட ஒன்றாகும்.

ஆனால் அடிப்படை ஆற்றல்களைப் பஞ்சபூதத் தத்துவங்களாக ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துக் காட்டி, நிலம், நீர், நெருப்பு, காற்று, வான் என்ற அந்த பஞ்ச பூதங்களின் சின்னங்களாக ஆலயங்களை உருவாக்கியவர்கள் நம்முடைய அறிவாற்றல் மிக்க சான்றோர்கள்.

நீருக்கு, திருவானைக்காவையும், நிலத்திற்கு, காஞ்சியையும்; நெருப்புக்கு திருவண்ணாமலையையும், காற்றுக்கு, திருக்காளத்தியையும்; வான்வெளிக்குச் சிதம்பரத்தையும் பல நூற்றாண்டுக் காலங்களுக்கு முன்பே உருவாக்கி விஞ்ஞான அடிப்படையில் மெய்ஞ்ஞானத்தை நம்முடைய முன்னோர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

உலகம் உருண்டை வடிவமானது, ஐந்து அடிப்படை ஆற்றல்களால் இயங்குவது. காற்றுக்குள் மிதந்து கொண்டிருக்கும் தூசிகளைப் போல சூரியன், சந்திரன், பூமி முதலான கோள்கள் அண்டத்தில் மிதந்து கொண்டிருக்கின்றன என்பன போன்ற அறிவியல் ஆராய்ச்சிக் கருத்துக்களைத் திருவாசகத்தில் மாணிக்கவாசகப் பெருமான் அமைத்துப் பாடியிருக்கும் அற்புதத்தைக் காண்கின்றோம்.

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பரும் தன்மை வளப்பெரும் காட்சி
ஒன்றனுக் கொன்று நன்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழை கதிரின் நுண்அணுப் புரைய
சிறிய ஆகப் பெரியோன் தெரியின்"

"அருக்கனிற் சோதி அமைத்தோன் திருத்தகு
மதியிற் தண்மை வைத்தோன் திண்டிறல்
தீயில் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கம் கண்டோன் நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்த்தோன் வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன்"

என வரும் திருவாசகம் அண்டங்களைப் பற்றியும், பஞ்ச பூதங்களின் நுட்பங்களைப் பற்றியும் எடுத்து விளக்குகிற ஆராய்ச்சித் தொடர்களாகும்.

தமிழ் நாட்டிற்கு வரலாற்றை வழங்கிய சேக்கிழார் பெருமான்,

"பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்
மாதோர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்"

என்று பாடுகிறார். இவையெல்லாம் நம் முன்னோர்களின் பரந்த விஞ்ஞான அறிவிற்குச் சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன.

அப்படிப்பட்ட பஞ்சபூதத்திருத்தலங்களில் விண்வெளித் திருத்தலமாக விளங்குவதுதான் இந்தத் தில்லைத் திருத்தலம். சைவப் பெருமக்கள் "கோயில்" எனப் பெருமையுடன் போற்றிவருவதும் இந்தத் தில்லைத் திருத்தலம் தான்.

திருமந்திரம் கண்ட திருமூலர் போற்றியதும், சமய குரவர் நால்வரும் நெக்குருகி நின்றதும், சேக்கிழார்பெருமான் திருத்தொண்டர் வரலாறு பாடி அரங்கேற்றியதும், திருநீல கண்டர், திருநாளைப் போவார் முதலான தொண்டர்கள் வணங்கியதும் எல்லாம் இந்தத் திருத்தலம்தான்.

மண்ணாண்ட மன்னர்கள் தில்லை அம்பலத்தைப் பொன்வேய்ந்து பொன்னம்பலம் ஆக்கிப் பெருமை கொண்டுள்ளார்கள். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் முதலான எண்ணற்ற தமிழ்ச் சான்றோர்கள் பண்வேய்ந்து, பண்ணம்பலமாகவும் இப் பொன்னம்பலத்தைப் போற்றியுள்ளார்கள். அம்பல வாணனே வந்து மாணிக்கவாசகரின் திருவாசகத்தை ஒரு படி எடுத்துக் கொண்டான். அவனே சேக்கிழார் பெரியபுராணம் இயற்றவும் ''உலகெலாம்'' என தமிழ்ச் சொல்லால் அடி எடுத்துத்தந்தான்.

இராஜராஜசோழன் திருமுறைகளை எல்லாம் இத் தில்லைத் திருத்தலத்தில்தான் கண்டு, தொகுத்து, தமிழ் துய்த்துப் பயன்கொள்ள வழங்கியுள்ளான். தமிழையும் சமயத் தையும் பிரிக்க முடியாதபடி பின்னிப் பிணைத்து பெருமைக்குப் பெருமை சேர்ப்பது இத் தில்லைத் திருத்தலம்.

இத்தகைய அருமையும், பெருமையும் வாய்ந்த தில்லை சபாநாயகர் ஆலயத்தின் திருப்பணி நிறைவுபெற்று திருக்குட முழுக்குவிழா மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக்காலத்தில் நடைபெறுவது கண்டு நான் பேருவகை அடைகிறேன். காரணம் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆலயங்களில் குடமுழுக்கு விழாக்கள் நடைபெற வேண்டுமென நம்முடைய சமயச்சான்றோர்கள் வகுத்துச் சென்றிருக்கிறார்கள்.

ஆனால் கடந்த ஒரு நூற்றாண்டுக் காலமாகத் தில்லை ஆலயத்தில் திருப்பணிகள் முழுமையாக நடத்தப்படாத குறையை அன்பர்கள் பலரும சுட்டிக் காட்டிய பொழுது, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரின் ஆட்சியில் நான் அறநிலையத் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த காலத்தில் திருப் பணிகள் வேகப்படுத்தப்பட்டு இன்று குடமுழுக்கு விழா நடை பெறுகிறது. எனக்கு இப்படிப்பட்ட பேற்றினை அளித்த மாண்பு மிகு டாக்டர் தமிழக முதல்வர் அவர்களுக்கு என் இதயப் பூர்வமான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். வரலாற்றில் இடம்பெறப்போகும் இத்திருப் பணியில் முழுநேரமும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு பத் தாண்டுகளுக்கு மேலாக தவமிருந்து வேள்வி நடத்தியதைப் போன்று பாடுபட்டு உழைத்த பெரியவர் திரு. வாகீசம்பிள்ளை அவர்களையும் அவர்களுக்குத் துணை நின்ற சான்றோர்களையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

குடமுழுக்கு விழா இனிதே நிறைவேற எனது வாழ்த்துக்கள்.

அன்பன்

இராம. வீரப்பன்

கோயில் திருப்பணி

செயலாளர். **ஜி. வாகீசம் பிள்ளை**

(1) சைவ சமயத்தில் கோயில் எனப் போற்றப் பெறுவது, சிதம்பரம் சபா நாயகர் திருக்கோயில் ஆகும். சைவ சமயாச்சாரியார்களால் போற்றப் பெற்றதும், முடி அணி வேந்தர்களால் திருப்பணி செய்யப்பட்டதும், தில்லைப் பெருங்கோயிலே ஆகும். இக்கோயிலுக்கு நிகழும் திருப்பணி களில் 1955ம் வருடம் முதல் நாள் ஈடுபட்டுக் கொண்டு வருகிறேன். 1955ல் தில்லைக் கூத்தனுக்கு சிறிய அளவில் திருப்பணி செய்து சிற்சபை மட்டும் நன்கு பழுது பார்க்கப்பட்டு என்னுடைய மாமா ஆடூர் திரு. இரத்தின சபாபதிப் பிள்ளை அவர்களால் குடமுழுக்கு செய்து முடிக்கப் பட்டது. அது சமயம் நான் அரசியலில் ஈடுபட்டிருந்தேன். உதவிச் செயலாளராக மட்டுமே பணியாற்றினேன். அதன் பின்பு ஆயிரங்கால் மண்டபத்திருப் பணியும் நடைபெற்றது. பிறகு 1947ல் தொடங்கப் பட்டதும் இடையில் சிறிது நின்றும் இருந்த திருமதில் திருப்பணி 1963ல் அப்போதைய தமிழக அரசின் அறநிலை அமைச்சராக இருந்த திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் மீண்டும் துவங்கி நடந்து வந்தது. இத்திருப்பணியும் சிறிது சிறிதாக நடந்து வந்தது. அப்போது நான் கமிட்டியில் இருந்தாலும் திரு. எஸ். ரத்தினசாமி செட்டியார் அவர்களே கவனித்து வந்தார்கள்.

(2) நான் அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற பின்பு தில்லைக் கூத்தனே ஒரு மண்டல காலம் நாள்தோறும் ஆறுகாலமும் தரிசிக்க வேண்டும் என்ற எண்ணமும் தோன்றியது. அது சமயம் பொது தீக்ஷிதர்களின் சிலர் திருப்பணி செய்ய வேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறினார்கள். அப்போது ஒன்றும் திருப்பணி செய்வது பற்றிய சிந்தனையே இல்லை. ஆனல் இடைவிடாமல் தெரிசனம் செய்ததாலும் தீக்ஷிதர்கள் தினமும்

சொல்லியதாலும் நேரில் பார்த்ததாலும் அது பற்றிப் பிறகு சிந்தனை செய்ய ஆரம்பித்தேன். அது சமயம் திருப்பணி கமிட்டி மூலம் நவகிரக சந்நிதியும் முன் மண்டபமும், கொடி மரமும் எனது நண்பர் வலிவலம் மனைத்துணைநாத தேசிகர் நன்கொடை கொண்டு நடன பத்தி மண்டப வேலையும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அத்துடன் என் மாமா ஆடூர் இரத்தினசபாபதிப் பிள்ளை அறக்கட்டளை முலம் மேல் மண்டப தளவரிசை வேலையும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இது தொடர்பாக இந்து சமய அறநிலையத் துறையினருடன் கடிதப் போக்குவரத்து ஏற்பாடுகள் இருந்து வந்தன.

(3) இச்சமயம் அறநிலைய ஆணையராக திரு எம். கே. பாலசுப்ரமணியம் அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டு தில்லைக்கூத்தனை தெரிசிக்க வந்த போது திருப்பணிகளை பார்வையிட்டார்கள். அப்போது நான் உடன் இருந்து திருப்பணி செய்ய வேண்டிய அவசியத்தை எடுத்து கூறினேன். அதற்கு அவர்களும் சென்னையில் இருந்து அறநிலையத்துறை பொறியாளர் களை வரச் செய்து மதிப்பீடு செய்து மாஸ்டர் பிளான் போட ஏற்பாடு செய்தார்கள்.

(4) அவ்வாறு 1976ம் ஆண்டு பொது தீஷிதர்கள் ஒத்துழைப்புடன் மதிப்பீடு செய்யப் பெற்று திருப்பணிகள் தொடங்கப்பட்டன. முன்பே தொடங்கிய திருப்பணிகளும் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டு திருப்பணி கள் நிறைவேற்றப்பெற்றன. திருப்பணி மதிப்பீடு வரையப்பட்டுக் கோயில் முழுவதும் செய்யவேண்டிய திருப்பணிகள் ஒரு வரைமுறை செய்யப்பட்டுப் பல பகுதிகளாக பிரிக்கப் பட்டன. அவற்றில் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு பணி துவக்கிவைக்கப் பட்டது. அதன்படி பெரிய திருப் பணிகளாக நான்கு கோபுரங்களும் மற்றும் திரு நடன பத்தி மண்டபமும், முகப்பு மண்டம் போன்ற திருப்பணிகளும், சிவகாமி அம்மன் கோயில் மதில் சார்புச் சுவர்கள் எழுப்பும் பணியும் மற்றும் அம்மன் கோயில் உள் வெளி மண்டபப் பணிகளும், திருப்பணி செய்யப் பெற்றன. முக்குறுணி விநாயகர், சுப்பிரமணியர், கற்பக விநாயகர் சந்நதிகளிலும் சிறிய அளவில் திட்டங்களை போட்டு திருப்பணி செய்யப் பெற்றன. மேலும் பாண்டியநாயகம் திருக்கோயில் மண்டபமும், ஓவியங்களும் பெரும் பொருட் செலவில் பழுது பார்த்து செப்பஞ் செய்யப்பெற்றன. நவலிங்கம் கோயிலில் இருந்து மழைநீர் வெளியில் செல்லும் வடிகாலும், சுத்தம் செய்யப்பட்டது. வடக்குப்புற வாயின்மேல் மணிமண்டபம் புதிதாகக் கட்டப்பட்டது. வெளி மதில் வடக்குப் பக்கமும், மேற்குப் பக்கமும், அஸ்திவாரம் முதல் மேல்மட்டம் வரை சில இடத்திலும், சில இடத்தில் பூமி மட்டம் முதல் மேல் மட்டம் வரையிலும் கட்டப்பட்டு திருப்பணிகள்

செய்யப்பட்டன. உட்பக்கம் உள்ள திருமாளிகைப் பத்தி மண்டபங்களும் மதில்களும் திருப்பணி செய்யப்பட்டன. சிவகங்கை மண்டபங்கள் பழுது பார்க்கப்பட்டு வர்ணம் தீட்டப்பெற்று இரும்புக் கதவுகள் பொருத்தப் பெற்றன. இவ்வாறு தில்லைத் திருப்பணிகள் பெரிய அளவில் தற்போது தான் நடைபெற்று வருகின்றது. இதிலும் மேலும் செய்ய வேண்டிய பணிகள் உள்ளன.

(5) என் மாமாவின் குமாரர் திரு. ஆர். கனகசபை பிள்ளை தலைமையில் நான் திருப்பணி உறுப்பனராகவும், மற்றும் கோயில் நிர்வாகத்தில் இருக்கும் திருப்பணி கமிட்டி உறுப்பனர் பொது தீஷிதர் அடங்கிய திருப்பணி குழுவும் 1963ம் ஆண்டு அரசின் அங்கீகாரம் பெறப்பட்டது. திருப்பணிகளும் தொடர்ந்து நடந்தேறி வந்தன. மீண்டும் 1974ம் ஆண்டு மாஸ்டர் பிளான் போடப்பட்டு கமிட்டி சீர்திருத்தி அமைக்கப்பட்டது. அதுமுதல் திருப்பணி துவங்கி நடந்து வருகிறது. திருப்பணிகள் மாஸ்டர் பிளானில் கண்டுள்ளபடி ஒவ்வொரு வேலையை செயலையும் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினரால் அனுமதிக்கப்பட்டும் பிறகு அதற்கு உரிய அளவீடுகள் சரிபார்க்கப்பட்டும் வரவு செலவு அதிகாரியால் தணிக்கை செய்யப்பட்டும் வருகின்றது.

இங்கு நடைபெறும் வேலைகளை மேற்பார்வை செய்ய இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரின் முன் அனுமதி பெற்று அண்ணாமலைப் பல்கலை கழக பொறியியல் துறைவல்லுநர்களைக் கொண்டு, பொறியியல் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டு அதன் ஆலோசனைப்படி எல்லா வித வேலைகளும் நடைபெற்று வருகின்றது. வேலைகள் முடிந்தபின்பு சிதம்பரம் பொதுப்பணித் துறை பொறியாளர் அவர்களால் சரி பார்க்கப்பட்டும் இந்துசமய அறநிலைய ஆட்சி துறை மீண்டும் சரிபார்த்து வேலைகள் முடிக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு வேலை முடிந்த பின்பு அது பற்றி சம்பந்தப்பட்ட அறிக்கைகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளது.

மற்ற வகைச் செலவுகள் அதிகப்படி தணிக்கை செய்து செலவுகள் நிர்வாகம் கட்டுப்பாட்டு வரவு செலவு கட்டுமானத்திற்குள் இருந்து வருகின்றது.

தில்லை திருப்பணிக்கு வேண்டிய பொருளுதவி அரசாங்க மானியம் ரூபாய் 19 லட்சம், மற்றபடி சென்னை மருத்துவர் டாக்டர். இரத்தின வேலு சுப்பிரமணியம் மூலமாக ரூபாய் 5 லட்சமும் பழனி தேவஸ்தானம் மூலம் ரூபாய் 5 லட்சமும் பொது மக்களிடம் திருப்பணிச் சீட்டு மூலம் வசூல் செய்த தொகையும் செலவிடப் பட்டுள்ளன. அத்துடன் தணிக்கை டிரஸ்ட் மூலம் 1 லட்சம் ஆடுர் இரத்தினசபாபதிப் பிள்ளை பெயரிலுள்ள அறக்கட்டளை மூலம் செலவிடப் பட்டது. முக்குறுணி

விநாயகர் கோயில் திரு. என். எம். பொன்னம்பலம் பிள்ளையவர்களாலும் திருமூலட்டானத் திருக்கோயில் சிவகாமியம்மன் கோயில், துர்க்கை அம்மன் கோயில் திருப்பணிகள் மதுரை ஆலைத் தொழில் முதல்வர் கருமுத்து சொக்கலிங்கம் செட்டியார் அவர்களாலும், பாண்டிய நாயகம், நவலிங்கம் கோயில்கள் தருமபூஷணம் இரத்தினசாமி செட்டியார் குமாரர் களாலும் திருப்பணி செய்யப் பெற்றன. மேற்குக் கோபுரம் பழனி தண்டாயுதபாணி தேவஸ்தான நிதிமூலமாகவும், மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் கோயில் திரு. எம். சுப்புராயப் பிள்ளை அவர்களாலும், ஒற்றைக் கால் மண்டப விநாயகர் கோயில் சேனை கூட்டுறவு வங்கி ஊழியர்களாலும் கற்பக விநாயகர் கோயில் திரு. இரத்தின சாமி செட்டியார் குமாரர் களாலும், அணிகல வணிகத்தினர்களாலும், மேற்கு கோபுர குமரகோயில் செங்குந்த முதலியார் சமூகத்தினராலும், உட்பிர காரத்தில் உள்ள திருமுறை காட்டிய விநாயகர் சந்தானாச்சாரியர்கள் நால்வர் சந்நிதி களையும், கமயாசார்கள் சந்நிதிகளையும் பழுது பார்க்கவும், கும்பாபிஷேகம் செய்யும் பணி தருமை ஆதின குருமகாசந்நிதானங் களாலும், சனி பகவான் சன்னதி குடந்தை வெங்கட்ராமய்யர் அவர் களாலும், காலசம் ஹாரமூர்த்தி நிர்த்தசபை சென்னை அட்வகேட் சந்திரபோஸ் அவர்க ளாலும், தண்டாயுத பாணி ஸ்வாமி மற்றும் உள்ள சன்னதிகளும் இராஜேந் திரன் சகோதரர்களாலும் கொடிமரம் முகப்பு மண்டபம் தில்லை சிவகாமி அம்மை மகளிர் வார வழி பாட்டுக் குழுவினராலும் வலிவலம் தேசிகர் நடனபத்தியும், வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, கோபுரங்களெல்லாம் அரசு மானியத்திலும், சென்னை கமிட்டியாராலும், ராஜராசர் குடும்பத்தினராலும் மற்றும் பொது நிதியிலிருந்தும் பெரிய மதில், உள் மதில், போன்ற திருப்பணிகளும் தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டிருக் கின்றன. நூற்றுக்கால் மண்டபம் திருப்பணி இன்னும் முடிவுபெறுமல் உள்ளது. அதுவும் நடராசப் பெருமான் கிருபையால் சீக்கிரத்தில் நடை பெற்று நிறைவு பெறும்.

இவ்வாறு திருப்பணிகள் செய்யும் போது பல விஷயங்களில் முன் நடவடிக்கையாக கவனித்துச் செய்ய வேண்டியது அவசியம் ஆகும். கவனிக்க வேண்டியது பற்றி ஓர் அனுபவத்தை இங்கு சொல்ல நினைக் கிறேன். திருப்பணிக்கு வேண்டிய செங்கற்கள் நன்கு சுட்ட கற்களாகவும், தூளைத் தீப்பிடிபடாத கல்லாகவும் ' சொல்லி சேகரித்துக் கொள்ள வேண்டும். அதை ஒட்டுவதற்கும் சில் உடைக்க நல்ல கற்கள் தேவைப்படும். சுண்ணும்பு நல்ல முறையில் வெட்டி எடுத்த தூளாகவும் இருத்தல் நல்லது. மற்றும் சுடும் போது உப்பு போடாமல் சுடவேண்டும். இந்த சுண்ணும்பில் நீராக எடுத்து வந்து மணலுடன் கலந்து தண்ணீர் விட்டு புளிக்கரைத்து பிறகு பல்வேறு நிலைகளுக்கும் தேவைப் படும் அளவில் மட்டப்பூச்சு, சுவர்

ஒட்ட மற்றும் அதையே மேல் பூச்சு, தீர்வை ஆகியவற்றில் தகுந்த அளவில் அரைத்து சுண்ணும்பு, நீர்-மணல் ஆகியவற்றைக் கலந்து புளிக்கரைத்து அரைத்து மீண்டும் புளிக்க வைத்து உபயோகிக்க வேண்டும்.

மணலும் உப்பு இல்லாததாகவும் இருப்பதும், நல்ல பெரு மணலாக இருப்பதும் அவசியம்; தவிட்டு மணலாக இருந்தால் ஒன்றுக இராது. இப்பெரு மணலை சலித்து களிமண், கூழாங்கற்கள், சுக்காங்கல், ஆகிய வற்றை நீக்கி உபயோகிக்க வேண்டும். தேவைப்படும் இடங்களுக்கு சிமெண்ட் உபயோகிக்கலாம். ஆனால் ஒரே சிமெண்டாகவும் தரமுள்ள தாகவும் இருத்தல் வேண்டும். கலப்படம் கட்டி தட்டியது, நாள் பட்டது இவை நீக்கி விடவேண்டும்.

தண்ணீர் உப்பு இல்லாத நீராக இருக்கவேண்டும். மற்றும் கோபுரமாக இருந்தால் மேல் நிலையில் உள்ள ஸ்தூபிக்கு மேல் போடும் சுண்ணும்பு மின் மோட்டார் மூலம் பைப்பு மூலம் மேலே கொண்டு செல்ல வேண்டும். தண்ணீரை சிக்கனமின்றி வேண்டுமளவு உபயோகிக்க வேண்டும். பழைய கட்டுமானத்தை கழுவுவதற்கும் சுண்ணும்பு அழுக்கு போகவும் நிரம்ப தண்ணீர் விட்டு கழுவுதல் வேண்டும். பிறகு காயாத வண்ணம் சுண்ணும்புத் தண்ணீர் விடவேண்டும்.

கோபுரம் போன்ற பழைய கட்டுமானத்தின் மீது அதில் பொம்மை முதலியன ஒட்டும் போதும், புதிய கட்டுகள் கட்டும் போதும் முதலில் பழைய கட்டின் மீது புளிக்கரைத்த கடுக்காய் தண்ணீரை ஊற்ற வேண்டும். பிறகு புதிய சுண்ணும்புடன் வீணுகிப் போன வெல்லம் கரைத்த புளித்த நீரை ஊற்ற வேண்டும். இவ்வாறு செய்தால் பழைய கட்டில் புதிய சுண்ணும்பு நன்கு இணைந்து கொள்ளும்.

இவ்வித முறையில் திருப்பணிகளைச் செய்யும் பொழுது அவ்வாறு கட்டப் பெறும் ஆலயங்கள் பல தலைமுறைகளுக்கு சீர் கெடாமல் இருக்கும். எனவே இக்கருத்துக்களை மனதில் கொண்டு, வருகின்ற தலைமுறையினரும் ஆலயத் திருப்பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு தாமும் உய்ந்து இச்சமுதாயமும் உய்ய வேண்டுமென்பதே எனது அவா.

'தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் — நெல்லைகளார்
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சிய மென முத்தி வரும்.'

தில்லைப் பெருங்கோயில் திருப்பணி புரிந்த அறநெறிச் செல்வர்களை உளமுவந்து வாழ்த்திய

இயன்மொழி வாழ்த்து

1. உலகமெனும் புருடனுக்கு நெஞ்சத் தாமரையாகுந் தில்லை தன்னுள்
நிலவுலகில் வாழுயிர்கள் நெஞ்சத்தின் துடிப்பதுவே நிகழ் கூத்தாகும்
வலமிகுஞ்சீர் வானவரும் முனிவரரும் கண்டுமகிழ் கூத்துத்தன்னை
நிலமிசையில் கண்டிடவே பதஞ்சலியும் புலிமுனியும் நிகழச் செய்தார்

2. பார்புகழும் பாரதத்தைச் சிவபூமி எனப்பகர்ந்தார் திருமூலர்தான்
பேர்மிகுந்த பாரதத்தில் கோயிலெனில் தில்லையெனுஞ் சிதம்பரந்தான்
சீர்மிகுந்த மனுமைந்தன் சிங்கவர்மன் சிவகங்கை தன்னில் மூழ்கி
ஏர்மிகுந்த பொன்னுடலைப் பெற்றிரண்ய வர்மனெனப் பெயரும் பூண்டான்

3. கொற்றவன்தன் குடியமர்ந்து கோயில்பணி விழாக்களையும் நிரம்பச் செய்தான்
மற்றிவன்றன் வழிவந்த சோழர்களுள் கோச்செங்கட் சோழன் ஐந்தும்
செற்றவர்கள் வாழ்தில்லைத் தீட்சிதர்கள் உறைவதற்கு இல்லம் தந்தான்
பிற்றைநாள் ஆதித்தன் பராந்தகனும் பொன்வேய்ந்து பேணிக் காத்தார்

4. கங்கைகொண்ட சோழன்தான் ஆணியொடு மார்கழியும் விழா எடுத்தான்
எங்கும்புகழ் குலோத்துங்கன் அவன்றன்மகன் விக்கிரமன் பணிகள் செய்தான்

பொங்குமெழில் பொன்னேடு வேய்ந்திரண்டாம் குலோத்துங்கன்
பொலிவு செய்தான்
சிங்கநிகர் படைத்தலைவர் சீர்மணவிற் கூத்தன்கா லிங்கராயன்

5. திருமுதற்கோப் பெருஞ்சிங்கன் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன்
போன்றூர் தாமும்
பெருமைமிகு பாண்டியருள் சடையவர்மன் சுந்தரபாண்டிய னுரோடு
அருமைமிகும் அவர்வழியே சடையவர்மன் வீரபாண்டியனுர் தாமும்
பெருவிசய நகர்வேந்தர் கிருட்டினதேவ ரும்பணிகள் பேணிச்
செய்தார்.

6. மாவீரன் சிவாஜிமகன் சாம்போஜி பொன் வேய்ந்து சிறப்புச் செய்தான்
கோயில்களைப் புதுப்பித்து குடமுழுக்கைக் குறைவறவே செய்த செம்மல்
நாவினிக்கும் புகழ்மணக்கும் முத்தைய செட்டியாரின் நாமம் வாழ்க!
பாவலர்கள் புகழண்ணு மலையரசர் திருப்பணிகள் பலவும் செய்தார்

7. இறையுணர்வில் அனைவருமே ஒற்றுமையாய் இருந்திடவே வழிவகுத்துக்
குறைவறவே கோவிந்த ராசருமே நடராச ருடனிருக்க
மறைவழியே கோயிலொடு மண்டபமும் குடமுழுக்கும் செய்த எங்கள்
நிறைகுடமாம் செட்டிநாட் டரசர் அண்ணுமலை புகழ்தான் நீடுவாழ்க!

8. தில்லைநகர் நடராசர் திருக்கோயில் குடமுழுக்கைச் சிறப்பாய்ச் செய்து
எல்லையிலாப் புகழொளியை வின்னிருந்து வீசு மெழில்
இரத்தினங்கள்
சொல்லரிய பண்புநிறை இரத்தினசபா பதியாம் தூயாரோடு
நல்லியல்பு நிறைஇரத்தின சாமியெனும் சான்றோர்கள் நாமம் வாழ்க!

9. பாண்டிய நாயகமென்னும் திருமுருகன் கோயில்தனைப்பண்படுத்தி
மூண்டெழுந்த பேரன்பால் மூன்றுமுறை குடமுழுக்கைச்சிறப்பாய்ச்
செய்த
சண்டியநல் புகழிரத்தின சாமியவர் குடும்பத்தார் இனிது வாழ்க!
வேண்டும்வரம் தருவதற்கே அம்பலவன் வீற்றிருந்தே ஆடல்மேவும்

10. அரியதிரு ஆயிரங்கால் மண்டபத்தைச் சீர்திருத்தி அரணும் செய்தே
உரியதொரு முறையினொடு குடமுழுக்குச் செய்வித்த ஒப்பில்லாத
பெரியபிள்ளை யெனப்பலரும் பெட்புடனே கூறிவரும் பெருமை
மிக்கார்
தெரியவரும் இரத்தின சபாபதியார் குடும்பத்தார் சிறந்து வாழ்க!

11. முக்குறுணி விநாயகரின் திருக்கோயில் குடமுழுக்கை முறையாய்ச்
செய்த தக்க பல நூலாயும் சான்றோர் பொன்னம்பலனுர் வாழ்க!
தெற்குயர்நல் கோபுரத்தைச் சீர்செய்து குடமுழுக்கைச் சிறப்பாய்ச்
செய்த

மிக்குயர்ந்த முத்தைய வேள் பெறுமைந்தர் சுற்றமொடு விழைந்து வாழ்க.

12. அருள்மிகுஞ்சீர் சிவகாமி அம்மனது கோயில்திரு மூலட்டானம்
பொருள்மிகவே சீர்திருத்திக் குடமுழுக்குச் செய்வித்த பொருவில்லாத
தெருளுமெழில் இறைவள்ளல் சொக்கலிங்க செட்டியார் சிறந்து வாழ்க!
மருளறவே சனிபகவான் கோயிலினைப் புதுப்பித்த மாண்புமிக்கார்

13. செப்பமுறத் திருப்பணிசெய் வெங்கடராமையரவர் விழைந்து வாழ்க!
இப்புவியில் மீளுட்சி சுந்தரேசர் கோயிலினைச் சீர்திருத்தி
ஒப்பரிய குடமுழுக்கைச் செய்திட்ட சுப்பராயர் பிள்ளை வாழ்க!
ஒப்புரவில் தமிழ்நாடு கூட்டுறவு வங்கியினின் ஊழியர்கள்

14. திருமூல விநாயகரின் குடமுழுக்கைச் செய்தார்கள் செழித்து வாழ்க!
பெருநெறியாம் சிவநெறியை வளர்த்திட்ட அறுபத்து மூவர் கோயில்
பொருவருநல் நுழைவாயில் மண்டபமும் நிறுவியரன் பணிகள் செய்யும்
திருவளருஞ் சிவகாம சுந்தரியார் மகளிர்மன்றம் சிறந்து வாழ்க!

15. பொலிவுடனே நடராசர் நடனமிடும் காவணமாம் மண்டபத்தை
வலிவலத்தைச் சேர்ந்தமனத் துணைநாத தேசிகர்தாம் வனப்பிற் செய்தார்
வலிவுடனே கீழைக்கோ புரமதனைச் சீர்செய்து குடநீராட்டும்
நலம்பெறச் செய் மருத்துவராம் இரத்தினவேல் சுப்ரமணியம் நாளும் வாழ்க!

16. அறநிலையத் துறையினர்தாம் வடதிசையின் கோபுரத்தை அணிபெறவே
முறைமையொடு பணிசெய்து குடமுழுக்கைச் செய்தார்கள் முன்னுள் போன்ற
திறமுடனே குடதிசைக் கோபுரமதனின் குடமுழுக்கைத் தெளிவாய்ச் செய்த
அறம்வளரும் முருகனுறை பழநிமலை அறக்குழுவின் அன்பர் வாழ்க!

17. திருமுறையைக் காட்டியநல் விநாயகர்க்கும் சீர்தாயு மானவர்க்கும்
அருமைமிகு திருப்பணிகள் பலசெய்து குடமுழுக்கை அன்பாய்ச் செய்த
பெருமைமிகு வெங்கடேசச் செட்டியாரின் மைந்தர்கள்தாம் பெரிதும் வாழ்க!
தருமமிகும் ஐயப்பன் திருக்கோயில் குடமுழுக்கைத் தகவிற்செய்தோர்

18. தணிக்கையினில் வல்லவராம் வைத்திய நாதன்வாழ்க! தகவார்காளி
கணிக்கின்ற நுண்கூத்து ஊர்த்துவத் தாண்டவமூர்த்தி சோமாஸ்கந்தர்
பிணிக்கின்ற காலனேசம் காரம்செய் மூர்த்திகுட நீராட்டாகும்
பணிசெய்த சந்திரபோஸ் என்பவர்தம் சுற்றமுடன் பண்பின் வாழ்க!

19. திருசரப மூர்த்தியுறை நிருத்தசபைத் திருப்பணியும் குடமுழுக்கும்
பெருவிருப்பிற் செய்திட்ட பெருமைமிகு சீரரெங்க சாமியுந்தன்
அருமைமிகு மைந்தர்திரு நாரணனும் கந்தையன் ஆகியோரும்
திருமிகுநல் இந்திரலேகா முத்துசாமி என்போரும் சிறந்து வாழ்க!

20. பாலதண்டா யுதபாணி கோயில்திருக் குடமுழுக்கைப் பண்பாய்ச்செய்த
சீலமுடை இராஜேந்திரன் நல்லதம்பி சோதரர்கள் சிறந்து வாழ்க!
மேலக்கோ புரமருகில் வீற்றிருக்கும் குமாரகோட்டக் குட முழுக்கைக்
கோலமுடன் செய்திட்ட செங்குந்த மரபினர்கள் குலவி வாழ்க!

21. பேராளர் இரத்தின சபாபதியார்பேர் நிலவு நிதியின் மூலம்
சீர்மிகுநல் திருக்கோயில் மேல்தளங்கள் அனைத்தையுமே செப்பஞ் செய்து
ஆர்மிகு நடராசன் இராமலிங்கம் சுப்பிரமணியன் அன்பார் மைந்தர்
பார்போற்றும் கணபதியார் சிவகுமார் பல்லாண்டு வாழி நன்றே,

22. சீராரும் கற்பகவிநாயகர்தம் திருக்கோயில் குடநீ ராட்டை
பேராரும் பாலசுப் பிரமணிய னுடன்இராம நாதன் பேணும்
ஏராள்நாவுக்கரசு நகைவணிகர் அனைவருமே இயைந்து செய்தார்
ஆராத பேரன்பர் எல்லோரும் அம்பலவன் அருளால் வாழ்க!

23. செப்பரிய திருப்பணியின் குழுத்தலைவர் கனகசபை சிறப்பு மிக்க
ஒப்பரிய செயலாளர் வாகீசம் பிள்ளையெனும் இருவர்தாமும்
இப்புவியில் அரசியலில் கூட்டுறவில் பெரும்பொறுப்பை ஏற்றே உள்ளம்
துப்பரவாய்த்தொண்டு பல செய்திட்டபட்டறிவால் கணிந்த தூயோர்

24. பல்லாண்டு திருப்பணிகள் பலசெய்து கனகசபை அமர ரானார்,
இல்லாத குறைநீங்க அவரிளவல் இராமலிங்கம் பொறுப்பை யேற்று
நல்லார்க்கும் வல்லார்க்கும் நடு நின்று பாலமாய் அமைந்திலங்கி
எல்லாரும் இன்பமுறச் செயலருடன் மிகஇணைந்து பணிசெய்கின்றார்

25. பலநூரு யிரநிதியும் பல்வேறு பொருள்களையும் பரிவிற் சேர்த்தே
பலநூறு தொழிலாளர் தொழில் நுட்பக் கலைஞரொடு பண்பு மிக்க
பலநூறு நட்பினர்கள் தீட்சிதர்கள் அறிஞரொடு கலைவல் லார்கள்
பலவாண்டாய்ச் செய்ததிருப் பணிநிறைவே நடராசர் குடநீ ராட்டாம்

26. தமிழகத்தின் தனிமுதல்வர் தண்ணளியர் மாண்புமிகு இராமச்சந்திரன்
அமிழ்துநிகர் அறநிலையத் துறையமைச்சர் ஆணையரோ டலுவ லாளர்
இமிழ்கடலூர் மாவட்ட ஆட்சியினர் தில்லைநகர் மன்றத் தாரும்
மகிழ் வுடனே முன்வந்து உதவிபல செய்தார்கள் மகிழ்ந்து வாழ்க!

27 பொருளாளர் பாலசுப் பிரமணியன் துணைச்செயலர் சுவாமிநாதன்
அருளாளர் ராசரத்தின தீட்சிதர்பொன்னம்பலஞர் ஆகியோரும்
மருள்நீக்கும் இரத்தினவேல் சுப்ரமணியம் நடராசன் அரங்கசாமி
திரளாகச் சொக்கலிங்க செட்டியார் தொண்டு செய்தார் செழித்து
வாழ்க!

28. ஈராறு ஆண்டுகளாய் எண்ணரிய பணிசெய்த குழுவைச் சார்ந்த
பேராளர் பெருந்தலைவர் செயலாளர் பொருளாளர் துணையாய்
நின்றோர்
பாராளும் பிரதமர் ராஜீவ் காந்தி பாரதத்தின் மக்கள் எல்லாம்
சீராரும் தில்லைநகர் நடராசர் திருவருளைப் பெற்று வாழ்க!

29. வாழிதிருப் பணிக்குழுவின் தலைமைபெறும் இராமலிங்கம் பிள்ளை
வாழ்க!
வாழிதிருப் பணிக்குழுவின் செயலாளர் வாகீசம் பிள்ளைவாழ்க!
வாழியவர் கருத்தின்வழி துணைநின்ற அந்தணர்கள் அறிஞர் வாழ்க!
வாழியருள் நடராசர் திருவருளால் உலகமெலாம் மகிழ்ந்து வாழ்க!

புலவர். த. முருகேசன்,
சிதம்பரம்.

திருப்பணிக் குழு உறுப்பினர்கள்



திரு. R. இராமலிங்கம் பிள்ளை
தலைவர்



Dr. இரத்தினவேல் கப்பிரமணியன்
உதவித்தலைவர்



Dr. K. அரங்கசாமிப்பிள்ளை
உதவித்தலைவர்



திரு. N. M. பொன்னம்பலம் பிள்ளை
உதவித்தலைவர்



திரு. ராசி ராதரத்தின தீக்ஷிதர்
உதவிச்செயலாளர்



திரு. சுருமுத்து S. சொக்கலிங்கம் செட்டியார்
உதவித்தலைவர்



திரு. K. சுவாமிநாதன்
உதவிச்செயலாளர்



திரு. R. பாலசுப்பிரமணியச் செட்டியார்
பொருளாளர்



திரு. து. நில்லைநாயக தீக்ஷிதர்



திரு. து. நடராஜரத்ன தீக்ஷிதர்



திரு. க. சோமாஸ்கந்த தீக்ஷிதர்



திரு. ரெ. செ. ராஜாமணி தீக்ஷிதர்



திரு. த. லோமசுட தீக்ஷிதர்



திரு. வை. நில்வநடராஜ தீக்ஷிதர்



திரு. செ. ச. க.தாகராஜ தீக்ஷிதர்



திரு. B. B. லோமதாகதேவ தீக்ஷிதர்



திரு. A. K. சிதம்பரம் செட்டியார்



திரு. R. நடராஜம்பிள்ளை



திரு. S. திருநாவுக்கரசுப்பிள்ளை



திரு. R. சம்பந்தம்பிள்ளை



திரு. D. வீரப்ப முதலியார்



திரு. A. பாலசுப்பிரமணியன்



திரு. S. அருணாசல தேவர்



திரு. T. குற்றுல நாதவாணன்



திரு. R. சுப்பிரமணியன்



திரு. வெங்கட்ராம ஐயர்



திரு. M. இராமலிங்கம்



திரு. S. விசுவநாத முதலியார்



திரு. அ. சிவநேசன்



திரு. G. நாராயணசாமி படையாச்சி



திரு. M. L. குட்டையன் செட்டியார்



திருமதி. யொமளா அருளுசலம்



திரு. D. கோவிந்தசாமி படையாச்சி



திரு. R. K. கணபதி



திரு. A. C. முத்தையா



திரு. T. P. மோகன கிருஷ்ணன்
நிர்வாக அதிகாரி,
இந்து சமய அறநிலையத்துறை



திரு. V. முத்துக்குமாரசாமி



திரு. K. S. லோகவிநாயகம்



திரு. S. R. வாகதேவ்



திரு. R. சித்தாராமன்



திரு. J. சண்முகம்



திரு. T. V. தினவாசன்



உதவிக்கோட்டப்பொறியாளர்
திரு. M. சின்னரை
ஸ்தபதியார்



வைத்திய சுப்பிரமணிய அய்யர்

With best compliments from

CHETTINAD CLEARING AND FORWARDING AGENCY

TRANSPORT CONTRACTORS

Head Office:

PULIYUR C.F. POST 639114
KARUR TALUK
THIRUCHY Dt.

Branch Office:

KAILASANATHAR KOIL STREET,
ARIYALUR-621 704
THIRUCHY Dt.

Branch Office:

TIRUCHY MAIN ROAD
DALMIAPURAM
THIRUCHY Dt.

Forwarding Office:

CUDDALORE MAIN ROAD
NEYVELI-607 802
S.A. DISTRICT

PHONE: MADRAS : □ 452015 □ KARUR : 20037 □ NEYVELI 846.

TEL: CHETTINAD

With best compliments from

Arasee Meenakshi Lorry Forwarding Agencies

PULIYUR CEMENT FACTORY POST OFFICE □ 639 114
KARUR T.K. TRICHY Dt. TAMILNADU.

PHONE: 20930

FORWARDING AGENCIES:

M/s. CHETTINAD CEMENT CORPORATION LTD.,
PULIYUR.

மூலாதி மூல சிவமூர்த்தி

ராகம்: ரஞ்சனி தாளம்: ஆதி

பல்லவி

நீயேதான் எனக்கினி எல்லாமே என்று
சரணடைந்தேன் பொன் அம்பலமே
நானேதான் எல்லாம் என்றவனே உன்னைத்
தானே நான் தினமும் நம்புகின்றேன் (நீயேதான்)

அனுபல்லவி

சேயேன் எனைக்காக்கும் தாயே உனது உமை
மாயம் அவள் புரிய நானும் மயங்குகின்றேன்
ஓயாக் கடல் அலை போல் உள்ளம் கலங்குகின்றேன்
ஓங் காரப் பெருஞ்சுடரே உன்னைத் தினம் மறவேன் (நீயேதான்)

சரணம்

காலாதி காலமெலாம் ஆனந்த நடனமிடும்
ஆலாஸ்ய நாதன் எனக்காதாரம் உன் பதமே,
மேலான க்ஷேத்ரம் தில்லைச் சிதம்பரத்தில் உறைபவனே
மூலாதி மூல சிவ மூர்த்தி என்று ஆனவனே. (நீயேதான்)

இயற்றிவர்:
ந. ந. சோமநாக தேவ தீட்சதர்
கீழ வீதி, சிதம்பரம்.

மனக்கவலை மாற்றும் மருந்து

ராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

மனக்கவலை மாற்றும் மருந்து அது
மணிவாசகன் தந்த விருந்து நீ அருந்து (மன)

அனுபல்லவி

கணக்கற்ற கவிஞர்கள் கண்ணுறக் கண்டது
கற்பனைக்கும் எட்டாத கருத்துக்கள் நிறைந்தது (மன)

சரணம்

தனக்கென வாழா தன்மையை உடையது
தயை அன்புபண்பாம் தர்மங்கள் நிறைந்தது
மனம் துணிந்தொன்றும் மாற்றம் புரியாது
ஆனந்த நடமிடும் அம்பலவன் புகழ்ந்தது (மன)

ஆக்கியோன்:
சிதம்பரம் டி. நடராஜ தீட்சதர்
சங்கீத சாஹித்ய கர்த்தா
இசை அமைப்பாளர்
No. 19, தேரடிக்கடைத்தெரு
சிதம்பரம்.

கூத்தாடும் பாதம்

ராகம்: ரஞ்சனி — தாளம்: ஆதி
எடுப்பு சமம்

பல்லவி

கூத்தா என்றோரின் குறைகள் எல்லாம்
தீர்த்தே நலம்தர வந்திடுவான். (கூத்தா)

அனுபல்லவி

கூத்தாடும் பாதந்தனைப் பார்த்தவர்க்குக்
கீர்த்தியும் முத்தியும் தந்திடுவான் (கூத்தா)

சரணம்

அஞ்செழுத்தை அயராது அன்பர் ஓதும் தில்லை
நெஞ்சில் வைத்தோர் எதற்கும் அஞ்சத் தேவை இல்லை
தஞ்சம் என்று வந்தவர்க்கும் வாழ்வளிக்கும் தில்லை
நஞ்சை உண்ட கண்டன் நமை ஆளும் தில்லை (கூத்தா)

இயற்றியவர்:
ஸங்கீத ஸாகித்ய கர்த்தா,
S.S. சிவகுமார தீட்சதர், B.Com.
44/A, கீழ வீதி, சிதம்பரம்.

பேதமிலா நிறைவுண்டு

ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை
கன்றிய காலனைக்காலால் கடிந்தான் அடியவர்க்காய்
சென்று தொழுமின்கள் தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
என்று வந்தாய் என்னும் எம்பெருமான்தன் திருக்குறிப்பே.

ராகம்: சாமா தாளம்: ஆதி

பல்லவி

தாண்டவ தெரிசனம் உண்டு திருவருள் துணையுண்டு
வணங்கிப்பேறு பெற வள்ளல் கழல் உண்டு (தாண்)

அனுபல்லவி

பண்ணிசைத்துப் பாடப் பைந்தமிழ் உண்டு
எண்ணிய எண்ணமெல்லாம் ஈடேற வழி உண்டு (தாண்)

சரணம்

மன்னவனைக் கண்டுவிட்டால் முக்தி நலம் உண்டு
புண்ணியன் சந்நிதியில் பேதமிலா நிறைவுண்டு
எதற்கும் அஞ்சேல் என அபயக்கரம் உண்டு
சிதம்பரத்தே வாழும் சிற்றம்பலவன் உண்டு (தாண்)

இயற்றியவர்:
மீனாட்சிநாத தீட்சதர்
கீழ வீதி, சிதம்பரம்.

இலக்கியம்



திருஞானசம்பந்தர்
(தில்லை செப்புத்திருமேனி)

பாட்டும் பொருளும்

தவத்திரு. குன்றக்குடி அடிகளார்

திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி

'பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனும் .....''

என்பது குமரகுருபரர் வாக்கு. "பாட்டின் பொருள்" என்றால் பதவுரை, குறிப்புரை, பொழிப்புரை, தெளிவுரை என்றே பெருவழக்காகப் பொருள் கொள்ளப் பெறுகிறது. பொருள் என்ற சொல் வேறு பொருள் நோக்கிலும் வழங்கப் பெற்று வருகிறது.

"தம்பொருள் என்பதம் மக்கள்" என்று திருக் குறளில் வருவதும் .... யாம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமும் அல்ல.. " என்று பரிபாடலில் வருவதும் நினைவிற்குரியன. தமிழ் இலக்கியங்கள் பெரும்பான்மையும் கவிதை வடிவத்திலேயே அமைந்தவை. இந்த இலக்கியங்களுக்குப் பதவுரை பொழிப்புரை, கருத்துரை, தெளிவுரை ஆகியன காணும் முயற்சியில் தமிழகம் வெற்றி பெற்றுள்ளது. பொதுமறையாகிய திருக்குறளுக்குப்பதிமூன்று உரைகள் வெளிவந்துள்ளன. ஆயினும் திருக்குறளின் நோக்கமாகிய மெய்ப்பொருள் உணர்தல் நடைபெறவில்லை. செம்பொருள் காணும் அறிவும் கண்டோமில்லை. அருள்நூல்களாகிய திருமுறைகளுக்கு உரையெழுதுவது மரபன்று என்ற காரணத்தால் எழுதப்பெறவில்லை.

மகாவித்துவான் தியாகராசச் செட்டியார் அவர்களே, திருவாசகத்திற்கு உரை எழுதக்கேட்டு வற்புறுத்தியிருக்கிறார்கள். அவர்"திருவாசகத்திற்கு உரை எழுத இயலாது, திருவாசகம் ஒரு ஞானப்பனுவல், ஞாஞனுபவ நூல், ஞாஞனுபூதி நூலுக்கு உரை காண்பது கடினம், கூடாது, மேலும் எழுத வற்புறுத்தினால் காவிரியில் விழுந்து உயிர் நீத்து விடுவேன்" என்று கூறினார். ஆனாலும் பிற்காலத்தில் திருமுறைகளுக்கும் உரைகள் சிலர் எழுதியுள்ளனர். வெளிவந்துள்ளன.

"தில்லை பாதி--திருவாசகம் பாதி என்பது ஆன்மீகப் பழமொழி. தில்லை, திருவாசகத்திற்கு உரிய இடம் ஆடல்

வல்லான் -- நடராசப்பெருமான் விரும் பிக்கேட்ட, விரும்பி எழுதிய பாடல்கள் திருவாசகப் பாடல்கள். இதனைச் சிவப்பிர காச சுவாமிகள்...

''. . . . . .

திங்கள் வார்சடைத் தெய்வ நாயகன்
ஒருகலே யேனும் உணரான் அஃதான்று
கைகளோ முறிபடுங் கைகள் காணில்
கண்களோ ஒன்று காலேயிற் காணும்
மாலேயில் ஒன்று வயங்கித் தோன்றும்
பழிப்பின் ஒன்று விழிப்பின் எரியும்
ஆயினும் தன்னை நீ புகழ்ந்த துரைத்த
பழுதில் செய்யுள் எழுதினன் அதனுல்
புகழ்ச்சி விருப்பினன் போலும்
இகழ்ச்சி யறியா என்பணிவானே''

என்று நயம்படக் கூறி விளக்குகிறார். திரு வாசகத்தைப் பிரதி எடுத்தவன் ஆடல் வல்லனேயாம். ''ஏன், பிரதி எடுத்தான்? கடையூழிக் காலம் வரும் அல்லவா? அதாவது புவனங்கள் அனைத்தும் ஒடுங்கும் காலம் யுகாந்தரம் என்று சொல்லப் பெறும் கடையூழி. அந்தக் கடையூழிக் காலத்தில் ஒன்றும் இருக்காது. இறைவன் மட்டுமே தனித்து நிற்பான். அப்போது ஒரு தனிமை இருக்கும் அந்தத் தனிமைத் துன்பத்தை மறப்பதற்காகப் படித்துக் கொண்டிருக் கவே திருவாசகத்தைப் பிரதி எடுத்துக் கொண்டான் என்று மனேன்மணீயம் கூறும்

''கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றே
அம்பலத்துள்
உடையார் உன் வாசகத்தில் ஒரு பிரதி
கருதியதே''
என்பது மனேன்மணீயம்

திவாசகம்ஞானப் பனுவல், பிறவிப் பிணி நீக்கும் அரிய பனுவல், அல்லல் தீர்கும் அருமருந்து, ஆனந்தத்தை வழங்கும் இன்பத் தமிழமுது, அருளமுது; இன்ப அன்பினை அளிக்கும் அருளமுது. இத்தகு திருவாசகத்தின் பாடல்களை ''சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்ல வேண்டும் என்று மாணிக்கவாசகர் கூறு-கிறார் ''பாட்டின் பொருள் உணர்ந்து'' என்றல் என்ன? எழுத்து, சொல், பொருள் என்று ரிகார்டு அடிப்படையில் தெரிதலா இல்லை? இங்ஙனம் எழுத்தும் சொல்லும் பொருளும் மட்டுமே நாடியதால் நம்மனேர் வாழ்க்கையில் இன்று, வாழ்க்கையின் மிகப் பெரிய பேருகிய ஞானத்தைக் காணேம்! பத்தி இருக்கிறது! பூசனைகள் நடை பெறுகின்றன! ஆயினும், இவற்றின் பயனுகிய ஞானத்தைக் காணேம்! ''ஞானத்தால் அன்றி வீடு பேறு இல்லை'' என்பது மெய் கண்ட சிவம் தேறித் தெளிந்த உண்மை. பாட்டின் பொருளா வது சிவமேயாம்! மாணிக்கவாசகர் அருளிச் செய்துள்ள திருவாசகத்திற்குப் பொருள் யாதென உணர்த்து மாறு தில்லை வாழ்மக்கள் அவரைக் கேட்ட பொழுது, பொன்னம்பலத்தில் ஆடும் ஆடல் வல்-லானே பொருள் எனக் காட்டினர் என்பது திருவாதவூரடிகள் புராணம்.

''நின்றபுகழ்ப் புலியூரர் நேயமுடன் புடைசூழச் சென்றருளுக் கிடமான செம் பொனின் அம்பலம் எய்தி ஒன்றிய இத் தமிழ்மாலைப் பொருள் இவர் என்று உரை செய்து மன்றதனிற் கடிதேகி மறைந்தனர் அங்கு அவர் காண..''

என்பது திருவாதவூரடிகள் புராணம். சிற் சபையின் பெருமையைப் போற்றும் பொழுதும் ...

''தற்பரமாய்ப் பரபதமாய்த் தாவில் அநுபூதியதாய் அற்புதமாய் ஆரமுதாய் ஆனந்த நிலேய ஒளிப்பொற்பினதாய் அறிவரிதாய்ப் பொருளாகி அருளாகும் சிற்பரம் ஆம் அம்பரம் ஆம் திருச்சிற்றம்-பலம் போற்ற.....

என்று போற்றுவர். இப்பாடலில்''

பொருளாகி அருளாகும்'' என்று வரும் சொற்றொடர் அடைவு நோக்குக

கல்வியின் பயன் இறைவனின் திருவடிகள்! இறைவனின் திருவடிகளே அறிதலே ஞானம். இறைவனின் திருவடிகளைப் பற்றெனப் பற்றுதலே திருவடி ஞானம்! திருவடிப் பேற்றினே அடைதலே வீடு பேறு. பாட்டின் பொருளாக நாம் அடைவது திருவடி ஞானம்! திருவாசகத்தின் பொருள், திருச்சிற்றம்பலத்தில் நட்டமாடும் எம்பெருமானின் திருவடிகளே! அந்தத் தூக்கிய திருவடியே நமது சாதனம்! பொருள்! திருவாசகம் ஓதுவோம் இருள்மலம் கரைத்திடுவோம்! 'யான்' 'எனது' என்னும் செருக்கினே அகற்றிடுவோம்! ஆடல் வல்லானின் எடுத்த திருவடியே வாழ்க்கையின் பொருள், பாட்டின் பொருள் என்று போற்றி வாழ்வோம்! இன்ப அன்பினே எய்துவோம்! □



சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலம் தீங்கிலும் உன்னே மறந்தறியேன்
உன்நாம்என் நாவில் மறந்தறியேன்
தலந்தார் தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடல்உள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.



குஞ்சித சரண மகிமை

ஸ்ரீலஸ்ரீ ராஜ சோம கோபால சாமி தீட்சதர்

சிதம்பரம்

நீடாழி உலகத்து மறைநாலோடு
ஐந் தென்றும் நிலை நிற்கவே,
வாடாத தவவாய்மை முனிராஜன் மாபா
ரதம் சொன்னநாள் ஏடாக மாமேரு
வெற்பாக வங்கூர் எழுத்தாணிதன்
கோடாக எழுதும் பிராணைப் பணிந் தன்பு
கூர்வாமரோ

எஸ்மாத்சர்வம் சமுத்பர்ணம் சராசரம்
இதஞ்ஜகது
இதன் நாமோ நடேசாய தஸ்மை காருண்ய
மூர்த்தையே.

ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீமந் நடராஜ மூர்த்திக்கு நாளது அக்ஷய வருஷம் தை மாதம் 29-ஆம் தேதியன்று நடை பெறும் மஹா கும்பாபிஷேகத்தை நிர்விக்னமாய் நடைபெற வினயகரையும் குஞ்சித சரண மூர்த்தியாகிய நடராஜமூர்த்தியையும் பிரார்த்திக்கிறேம். நடராஜருக்குச் சென்ற கும்பாபிஷேகம் மன்மத வருஷம் ஆனி மாதம் 23-ஆம் தேதியன்று நடை பெற்றது.

ஸ்ரீ நடராஜமூர்த்தியின் குஞ்சித சரணத்திற்கு ஸ்ரீஆசாரிய சுவாமிகள் உயர்ந்த கற்கள் இழைத்த கவசம் அணிவித் தார்கள். அந்த ஆனந்த குஞ்சிதபாதம்

நம்மையும் ஸ்ரீநடராஜபக்தர்களையும் இரட்சித்து புங்காலு புங்கமாய் விளங்க பிராத்திக்கிறேம்.

"மௌளோ கங்கா-சுலோகப்படி"

சிரசில் கங்கையும் பூர்ண கலையுள்ள சந்திரனையும் ஜடாதரரும் கருணை பொருந்திய வாமபாக பார்வதியைக் கொண்டவரும் பிரும்ம கபால மாலை தரித்தவரும் சர்ப்ப ஆபரணத்தை உடையவரும் டமருகத்தில் ஏற்பட்ட 14 சூத்திர எழுத்துக்களை உண்டாக்கியவரும்.

"பயமுண்டோ வெமக்கே" என்ற சொல்படி

அபயஸ்தம் உடையவரும் என்னை அடைந்த பக்தர்களுக்கு மிருத்யு பாதை கிடையாது என்று குஞ்சித பாதம் காட்டும். பீஜ ஹஸ்தத்தையும் (சத்யம்வதா) வேதத்தின் அர்த்தத்தையும் உடைய அக்னி ஹஸ்தத்தையும் உடைய நடராஜமூர்த்தி குஞ்சித சரணத்தைப் பிராத்திக்கிறேம்.

ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு வருடம் ஆறு அபிஷேகம் உள்ளது. அதற்கு அங்கமாக ஸ்படிக சந்திர மௌளீஸ்வரருக்கு தினந்தோறும் காலை மூன்று கால அபிஷேக தீபாராதனையும் காலை பத்து மணிக்கு இரத்தின சபாபதி அபிஷேகமும் இரவு மூன்று கால அபிஷேக தீபாரதனையும் நடைபெறுகிறது. அதற்கு அங்கமாகக் காலையில் கலச பூஜையும் அக்னி ஹோமமும் ஷோட சோபசார (16) தீபாராதனைகளும் நடக்கிறது. விபரம்; பதஞ்சலி பூஜா சூத்திரப்படி வைதிக பூஜை நடைபெறுகிறது. (ஜெய்முனி) வேத பாதஸ்தபம் நூலைச் செய்துள்ளார். வியாக்ரபாதர் புஷ்பார்ச்சனை விதிப்படி செய்துள்ளார். 1. தூபம். 2. தீபம். 3. இரததீபம் (அடுக்கு தீபம்). 4. நாக தீபம். 5. புருஷாமிருக தீபம். 6. விருஷப தீபம். 7. இரண்யபாத்ர தீபம். 8. பஞ்சபிரும்ம தீபம் (ஐந்து) 9. அக்னி ஹோத்ரதீபம் 10. நக்ஷத்திர தீபம். 11. கற்பூர தீபம். 12. பஸ்பம் (விபூதி) 13. கண்ணுடி 14. குடை 15. சாமரம். 16. மந்திர புஷ்பம், எனப்பதினறு. சிதம்பரப் புராணப்படி மரப்பு, கொடிப்பு, நீர்ப்பு, நிலப்பு என நான்கு விதமான புஷ்பங்கள் சேர்ந்து மந்திரங்கள் ஓதி நடராஜர் குஞ்சித சரணங்களில் அர்ப்பணிப்பது. தமிழ் பஞ்ச புராணம் ஓதிச் சிற்சபையில் தீபாராதனை செய்து திரஸ்கரணி (திரைவிலக்கி) தரிசனம் காட்டுவது.

"நக்ஷக்குலம் நக்ஷ்ணம் நரத்தம் நபீதம்
ததக்கோ வசிஷ்ட சிவக்கேவலோகம்."

ஆச்சார்யஸ்மிருதிபடி ரகஸ்ய தரிசனத்தில் விபரம்:

முன் பக்கத்தில் வெள்ளித்தகடு, (துவாரத்தின் வழியாக) பின்புறம் கருப்புத் திரை அதற்குப் பின்புறம் சிகப்புத் திரை. அதற்குப் பின்புறம் மஞ்சள் தங்க வில்வ மாலை. இவை நான்கும் நீக்கி அதற்குக் கடைசியில் கருப்புச் சுவரில் எழுதப்பட்ட "தகரோ உபாசன" மந்திர எழுத்துக்களே இரகஸ்யமாகும்.

"சித் சபையில் உள்ள மூர்த்திகள்;

ஸ்ரீகணபதி, ஸ்ரீசுப்பிரமண்யர், லட்சுமி, முகலிங்கம், ஹஸ்தராஜர், ரத்னபாதுகை சந்திரமௌளீஸ்வரர். இரத்தினசபாபதி, சுவர்ணகாலபைரவர். சந்திரசேகரர் (நித்யோத்சவர்) 1. ஸ்ரீ நடராஜர் ரகஸ்யம் சேர்ந்த பிரகாரம். 2. பத்து ரிஷபம் கூடிய பிரகாரம். 3. தக்ஷணமூர்த்தி சன்னதியைச் சேர்ந்த பிரகாரம். 4. சிவகங்கையைச் சேர்ந்த பிரகாரம். 5. தேர் ஓடும் வீதி பிரகாரம். 6. மாலைகட்டித் தெரு பிரகாரம். 7. செங்கழுநீர் விஞ்யகர் தெரு பிரகாரம். புராணப்படி ஏழு பிரகாரங்கள். பதஞ்சலி வியாகரபாதர் அனுக்ஞைக்கு இணங்க தை மாத பூச நக்ஷத்திரத்தில் குருவாரம் சேர்ந்த தினத்தில் தரிசனம் கொடுக்கச் செய்த அன்று சுவாமி சிவகங்கைக் குளத்தில் நடராஜமூர்த்தி

பக்தரை வெளிப்படுத்தத்தான் கிழவடிவம் கொண்டு சிவகங்கையில் மிதந்தார். ''என்னைத் தூக்குபவர்கள்தான் பாவம் செய்யாதவர்'' என்றும் திட நம்பிக்கை யுள்ளவர்கள் என்னைத்தூக்குங்கள் என்றும் ஓலமிட்டார். எல்லோரும் பயந்தார்கள். ஸ்ரீ சுந்தரர் ஓடி வந்து குளத்தில் குதித்துக் கிழவரைக் கரையேற்றினார். ரிஷபா ரூபராய் ஆகாயத்தில் வந்து தரிசனம் கொடுத்து லௌகீகராய் உள்ள சுந்தரனே உயர்ந்த பக்தன் என்று காட்சியளித்தார். உயர்ந்த தீர்த்தம் சிவகங்கா தீர்த்தம்.

ஸ்ரீ நடராசமூர்த்தி இருப்பது ''சிற்-சபை'' நந்திகேஸ்வரர் இருப்பது ''கனக-சபை''. (3000) மூவாயிரம் தேர்கள் உள்ளதும் ஸ்ரீசாபரும் ஊர்த்துவதாண்ட-வரும் உள்ளதும் நிர்த்த சபை. தீக்ஷதர்கள் சபை கூடுவதும் உற்சவ மூர்த்தி ஆபர-ணங்கள் உள்ளதும் ஸ்ரீ சுந்தரர் வழக்கைத் தீர்த்தும், ''பித்தா பிறைசூடி'' தேவாரம் சொல்லியதும் தேவசபை. ''உலகெலாம்'' என முதலடி எடுத்துக் கொடுத்துத் திருத் தொண்டர்புராணம் கூற அருளியபடி சேக்-கிழார் (செய்-கிழார்) இயற்றிய பெரிய புராணம் உரை காண பிச்சபுரத்தில் இருந்த ஸ்ரீ மணிவாசகரை அழைத்து எழுதியதும், ஆனி உத்திரம், மார்கழித் திருவாதிரை நாட்களில் ஸ்ரீ நடராஜப் பெருமான் மஹாபிஷேகம் கொள்ளும் சபை ''ராஜ சபை'' (ஆயிரங்கால் மண்டபம்) உள்ளது. ஐந்து சபைகள்.

ஸ்ரீ பிர்மா ஒரு சமயம் அந்தர் வேதி யில் (ஆகாயத்தில்) வேள்வி செய்தார். அதற்குத் தில்லை வன தீக்ஷதர்கள் மூவா யிரவரும் அழைக்கப் பட்டு வேள்வி முடிவுற்றது. மூவாயிரவரையும் பிரமன் வைச்சுவ தேவம் செய்யச் சொன்னார். (போஜனம் ஏற்றல்) தாங்கள் ஸ்ரீநடராஜர் தரிசனம் செய்யாமல் போஜனம் செய் யோம் என்றார்கள். உடன் பிர்மா வானவர் யாக அக்னியைப் பிரார்த்தித்தார். உடன் ஒரு ஜோதி உண்டாயிற்று. அதை வேள்வி இடத்தில் உள்ள சந்தனம், பால், தேன் எடுத்து அபிஷேகித்து அக்னி பகவானை அழைத்தார். அதில் ஸ்ரீ ரத்னசபாபதி மூர்த்தி இருந்ததைக்கண்டு தீக்ஷதர்கள் பூஜை தரிசனம் செய்த பின்னர் போஜனம் முடிந்து ஸ்ரீ ரத்ன சபாபதியை எடுத்துக் கொண்டு மூவாயிரம் ரதத்தில் மூவாயிர வரும் புறப்பட்டு சித்தம்பரம் வடக்கு வீதியில் வந்தார்கள். உடனிருந்த ஹிரண்-யவர்ம சக்ரவர்த்தியானவர் எண்ணிப் பார்த்த போது ஒரு நபர் குறையக்கண்டு பயந்தார். அப்போது அசரீரி வாக்கில் ''நான் என் ஸ்தானத்தில் அமர்ந்தேன்'' மற்ற இரண்டாயிரத்துத் தொள்ளாயி-ரத்துத் தொண்ணூற்று ஒன்பதின்மரும் உள்ளனர். தீக்ஷதர்களும் யாமும் ஒன்றே'' என்று வந்த அசரீரி வாக்கியத்தை எல் லோரும் கேட்டு நமஸ்கரித்து வந்து சேர்ந் தார்கள். இவர்கள் வந்த மூவாயிரம் தேர்களும் தூணில் பொறிக்கப்பட்டுள்ள சபையே நிர்த்த சபையாகும். அது முதல் ரத்ன சபாபதி ஸ்வாமிக்குப் பால் தேன் சந்தனம் மட்டும் அபிஷேகம் செய்து வரப்படுகிறது. அப்படிப்பட்ட ஸ்ரீ சூஞ்சித சரணத்தைப் பிரார்த்திக்கிறோம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக!
ஆழ்க தீயதெல்லாம் அரன்நாமமே சூழ்க
வையமுந் துயர் தீர்கவே

ஞானசம்பந்தர் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

நாள்: 15.9.86
அக்ஷய ஆவணி 30 ஆம் நாள்

கற்றுங் கொியோம்பிக் கலியை வாராமே
செற்றூர் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய
முற்று வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்று நின்றுரைப் பற்று பாவமே

திருஞானசம்பந்தர் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

சுபமஸ்து.

நகரத்தார்கள் சிதம்பரத்தில் செய்த அறச்செயல்கள்

மகாமகோபாத்தியாய பண்டிதமணி
மு. கதிரேசச் செட்டியார்

சிற்சபையாகிய பொன்னம்பலம் ஆதியில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இரண்யவர்ம சக்கரவர்த்தியால் இனிது இயற்றப் பெற்றது. அப்பால் பல சோழமன்னர்களால் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பெருமைவாய்ந்த அப் பொன்னம்பலமும், அதைச் சூழ்ந்த கோவில் முதலியனவும்பழைமையுற்றிருந்தது கண்டு, நடராசர் திருவருளால், காளுடுகாத்தான் சா. ராம. முத்தையா செட்டியார் திருவுள்ளத்தில் திருப்பணி செய்தல் வேண்டும் என்ற எண்ணம் 1878 ஆம் ஆண்டில் உண்டாயிற்று.

1879 ஆம் ஆண்டில் சா. ராம. முத்தையா செட்டியார், தம் வகையினர் குடும்பப் பொருளாலும், பல ஊர் நகரத்தார்களின் பொருளுதவியாலும், 'முக்குறுணி அரிசிப் பிள்ளையார் கோவில்' முழுதும் புதிதாய்க் கட்டி, சிற்சபையில் பொற்றகடுகள் வேய்ந்து, இரண்டாம் பிரகாரத்தில் விசாலமான அணியொட்டிக் கால்மண்டபம் நாற்புறங்களிலும் புதிதாய் இயற்றி, திருமூலட்டானம் சுவாமி கோவில், அம்மை கோவில்கள், ஆயிரக்கால் மண்டபம், இவற்றைப் புதுக்கிப் பழுதுபார்த்து , சிவகங்கைத் திருக்குளம், படித்துறைகள், மண்டபம், புதிதாய்க் கட்டி, இராச கோபுரங்களைப் புதுக்கி, உற்சவமண்டபம், வாகன மண்டபம்

அமைத்து, திருத் தேர்கள், திருவா பரணங்கள் செய்வித்துப் பெரும் பொருள் ரூபாய் முப்பது லட்சம் (30,00,000) செலவு செய்து முடித்துக் கர வருஷம் சித்திரை மாதம் 4 ஆம் தேதி (15-4-1891) கும்பாபிடேகம் செய்வித்தனர்.

முப்பத்தைந்து வருடம், அதாவது 1914 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து பலவகைத் திருப்பணிகள் செய்யப்பெற்று வந்தன.

ஆதி முதல் திருப்பணியை நடத்திவந்த வர்கள், சா. ராம. முத்தையா செட்டி யார், அவர் சகோதரர் சா. ராம. சிதம்பரம் செட்டியார், ஷை முத்தையா செட்டியார் இரண்டாவது குமார்ர் திவான் பகதூர் மு. இராமசாமிச் செட்டியார் ஆகிய மூவரும் ஆவர்.

ராஜா ஸர் அண்ணமலைச் செட்டி யார், தில்லைக் கோவிந்தராசர் கோவில் திருப்பணியைச் சுக்கல ஆவணி 4 ஆம் நாள் (19-8-1929) தொடங்கி சிறப்புற முற்றுவித்து, பவ வைகாசி 11 ஆம் நாள் (24-5-1934) சம்புரோட்சனை நிறை வேற்றி வைத்தனர்.

திவான்பகதூர் சர. ராம. மு. ராம. இராமசாமிச் செட்டியார், ரூபாய் இரண்டு லட்சம் (2,00,000) செலவில், (23-2-1915) முதல் நகரம் முழுவதும் தண்ணீர்க் குழாய்கள் அமைத்து நீர்பெ ருக்கி, நகர மக்கள் வாழ்த்திற்கு உரிய ராஞர்.

ஷை யாரால், ரூபாய் ஒரு லட்சம் (1,00,000) செலவில், "இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப் பள்ளி" நிறுவப் பெற்றும் ரூபாய் அறுபதினாயிரம் (60,000) நன்கொடையளிக்கப் பெற் றும் சிறந்த முறையில் (12-11-1915) முதல் நடைபெற்று வருகின்றது.

காரைக்குடி ராம. சொ. சொக்கலிங்க ஐயாவால் ரூபாய் இருபதினாயிரம் (20,000) செலவில் "மெய்கண்ட சித் தாந்த வித்தியாசாலை" நிறுவப் பெற் றுள்ளது.

காரைக்குடி மெ. செ. மெ. பொதுவில் ரூபாய் பதினேயாயிரம் (15,000) செலவில் ஒரு வேத பாடசாலையும், காரைக்குடி சு. ராம. சு. அ. சு. நா. பொதுவில் ரூபாய் அறுபதினாயிரம் (60,000) செலவில் மற்றொரு வேத பாடசாலையும், காஞடுகாத்தான் வெ. சா. பொதுவில் ரூபாய்ஐயாயிரம் (5,000) செலவில் தேவாரப் பாடசாலையும் அமைக் கப் பெற்றுள்ளன.

பள்ளத்தூர் க. ப. குமரப்ப செட்டி யாரால் ரூபாய் எழுபதினாயிரம் (70,000) செலவில் குருபூசை மடமும், பள்ளத்தூர் சொ. மு. அ. வால் ரூபாய் இருபதினாயிரம் (20,000) செலவில் பசுமடமும், காரைக்குடி மெ. செ. பொது வில் ரூபாய் பதினேயாயிரம் (15,000) செலவில் திருநந்தவனமும், காஞடுகாத் தான் வெ. சா. பொதுவில் ரூபாய் ஒரு லட்சம் (1,00,000) செலவில் அன்ன சத்திரமும் அமைக்கப் பெற்றுள்ளன.

கோவிலூர் கிளை பொன்னம்பல சுவாமி களால், ரூபாய் ஒரு லட்சம் (1,00,000) மதிப்புடைய சொத்துக் களுடன் ரூபாய் எழுபதினாயிரம் (70,000) செலவில் வேதாந்த மடம் நிறுவப்பெற்றுள்ளது.

நகரத்தார் பொதுவில் ரூபாய் பதினா யிரம் (10,000) செலவில் நகரத்தார் விடுதியும் காரைக்குடி ஆவி. பழ. சிதம்பரம் செட்டியாரால் ரூபாய் பதினா யிரம் (10,000) செலவில் அன்னசத் திரமும், உச்சிக் காலத்தில் குளித்தனி கையும், தேவகோட்டை வெ. ஆதி.

சிதம்பரம் செட்டியாராலும் காரைக்குடி மெ. ப. சு. சுப்பிரமணியன் செட்டியாராலும் ரூபாய் பதினயிரம் (10,000) செலவில் இரண்டு தண்ணீர்ப் பந்தர் களும், அமைக்கப் பெற்றுள்ளன.

கானாடுகாத்தான் வெ. சா. குடும்பத் தாரால் ரூபாய் ஒரு லட்சம்(1,00,000) செலவில் சிவகெங்கைத் திருக்குளத் திருப்பணி செய்யப் பெற்றும், ரூபாய் இருபத்தையாயிரம் (25,000) செலவில் சாயரட்சைப் பாவாடையும் ஏற்படுத்தப் பெற்றுமுள்ளது.

காரைக்குடி மெ. செ. மெ. ரூபாய் மூன்று லட்சம் (3,00,000) மதிப்புடைய இராமங்களின் வருவாயிலிருந்து, காலை யில் பால் நிவேதனம், இரண்டாங்காலத் தில் தயிரமுது, ஏழுகாலத்தும் கோவில் களுக்குக் கற்பூரம் அளித்தல், திருநீறு அளித்தல், மாலைக் காலத்து நடராசருக்கு மாலையளித்தல், அர்த்தசாம நிவேதனம், பள்ளியறை நிவேதனம், கோவிந்தராசப் பெருமாளுக்கு அர்த்தசாமத்தில் பருப்புப் பொங்கல், பாற்சோறு, சர்க்கரைப் பொங்கல், வடை, பாயசம் முதலிய கட்டளைகள் வைத்து, மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஆயிரம் (1,000) செலவில் நடத்தி வருகின்றனர்.

கோவிலூர் மடத்தால், சாயரட்சை. இரண்டாங்காலம் சம்பா இருபதின் மர்க்குக் கட்டளைக்காக ரூபாய் பதினயிரம் (10,000) செலவிடப் பெற்றிருக்கிறது. □



சிவம் சக்தி நாதம் விந்து
சதாசிவன் திகழும் ஈசன்
உவந்தருள் உருத்தி ரன்தான்
மால்அயன் ஒன்றின் ஒன்றாய்ப்
பவந்தவரும் அருவம் நால்இங்(கு)
உருவம்நால் உபயம் ஒன்றாய்
நவந்தரும் பேதம் ஏக
நாதனே நடிப்பன் என்பர்.

ராஜராஜன் திருமுறை கண்டது

அமரர் சா. கணேசன்
(கம்பன் கழகம் காரைக்குடி.)

அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவர் முதலிகளால் பாடப் பெற்ற தேவாரத் திருமுறைகள்தில்லையம்பதியில் அடைபட்டுக் கிடந்தவற்றை நம்பியாண்டார் நம்பியார் பேருதவியால் கண்டு வெளிப்படுத்தியவன் நம் இராஜராஜனே. அப்பணியில் பண்சுமந்த பாடல்களும், தமிழும், சிவநெறியும். பக்தித்துறையும் பெற்ற பேறு அளப்பரிதாம். கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியார் அருளிய திருமுறை கண்ட புராணம் ஓரளவு அப் பெரும் பணியைப் புலப்படுத்திக் கொண் டிருக்கிறது. அதில் இராஜராஜன்,

''உலகம் மகிழ்தரு 'சையம்' மீது
தோன்றி

ஓவாது வரு பொன்னி சூழ் சோணாட்டின்
திலகம் என விளங்கும் மணி மாட ஆருர்த்
தியாகேசர் பதம் பணிந்து செங்கோல்
ஓச்சி

அலகு இல் புகழ்பெறு ராசராச மன்னன்--
அபய குல சேகரன்.''

என்று அருமையாகக் குறிக்கப் பெறுகிறான். கதை இதுதான்; சிவபெருமான் மீது எல்லையில்லாப்பக்தி பூண்டொழுகியவன் இராஜராஜன். ஒரு நாள் தேவாரப் பாசுரங்களில் சிலவற்றை ஓதக் கேட்டான். செவிக்குத் தேனென இனித்த அப் பாக்கள் அவன் உள்ளத்தில் பாய்ந்து மெய் புளகிக்க, விழிநீர் அருவிபாய, ஒப்பரிய ஓர் உணர்ச்சியை விளைத்தது. பாடியோரைக் கேட்டான் எவர் அருளிய பாடல் இவை என்று. அவர்கள் மூவரைப் பற்றியும், அவர்கள் அருளிய தெய்வப் பாசுரங்களைப் பற்றியும் அறிந்தவாறு எடுத்து உரைத்தார்கள். ஏனைய பல்லாயிரம் பாசுரங்கள் இருக்குமிடமெது எனக் கேட்க பிறவற்றின் இருப்பிடம் யாதென ப் புலப்படுத்த அவர்களால் இயலவில்லை.

மிக்க ஆர்வத்தனுய் நாடெல்லாம்
தேட ஆணையிடுகிறான். அப்படியும் அவை கிடைத்தபாடில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் திருநாரையூரில் ஆதிசைவ மரபில் தோன்றிய நம்பியாண்டார் நம்பிகள் அவ்வூர்ப்

பொல்லாப் பிள்ளையாரை அமுது படையலில உண்ணச் செய்யும் அற்புதம் நிகழ்த்தியும் அவர்பால் தமருடன் வளர்தரு சதுர் மறைகளைக் கேட்டு உணர்ந்தும் வருதலில இராஜராஜன் கேள்விப்படுகிறான். முக்கனிகளும், பால், தேன் முதலிய பற்பல உண்டிகளும் எடுத்துக் கொண்டு திருநாரையூருக்கு மல்லல் மிகு சேனையுடன் இராஜராஜன் மன்னனும் வந்து சேர்ந்தான். வந்த மக்களையும் பண்டங்களையும் கொள்ள அந்நகரமே போதவில்லை. இராஜராஜன் நம்பியை அடிபணிந்து வேழமுகத்தோனுக்குக் கொணர்ந்த பல பண்டங்களையும் எடுத்துரைத்து அனைத்தையும் இப்பொழுதே அவனுக்குப் படைத்தருள்க என வேண்டி நின்றான். நம்பி வினயகனை அடிபணிந்து அனைத்தையும் உண்டருள வேண்ட ஒன்றுவிடாமல் உண்டருளினார் பொல்லாப் பிள்ளையார். இந்த அற்புதத்தைக் கண்டு மெய் அரும்பி, உளம் நெகிழ்ந்து, விழிநீர் சோர வியந்து மகிழ்ந்து நின்ற மன்னர் மன்னன். இவர் உதவியால்தான் திருமுறைகளின் இருப்பிடத்தை அறிய முடியும் என்ற முடிவிற்கு வந்தான். மூவர் அருளிய திருமுறைகளை உலகில் விளக்கம்பெற நீர் அருள வேண்டும் என நம்பிகளை வேண்டி நின்றான். நம்பிகளோ கண்ணீர் மல்கி, உள்ளம் கசிந்துருகி, பிள்ளையார் அடி பணிந்து மூவர் தமிழ் இருந்தவிடம் தெரிந்தருள்க என, பொல்லாப் பிள்ளையார் தில்லைச் சிற்றம்பலத்தின் புறக்கடையின் பக்கம் கைமுத்திரையிட்ட அறையினுள்ளே அவை உள என உரைத்தார். கேட்ட மன்னன் இளர்ந்தெழு மனத்தினனாகி, திருச்சிற்றம்பலத்தை அடைந்து காத்துப் பணியும் மறையோர்கள் பலருக்கும் "கணபதி கூறியது இது" என்று நிகழ்ந்ததை எடுத்துரைத்தான். தில்லைவாழ் அந்தணர்களோ அவற்றைச் செய்துவைத்த மூவர் வந்தாலன்றி அறையைத் திறக்க முடியாது எனக் கூறினர்.

நுண்ணறிவுமிக்க இராஜராஜன் - கூத்து வல்லானுக்குரிய ஆதிரைத் திருநாள அன்று பெருவிழாவை எடுத்துத் தமிழ்விரகர் மூவர் திருமேனிகளையும் எழுந்தருளுவித்து மூவர் தமிழ் இருக்கும் அறையின் முன் கொணர்ந்து "மூவரும் வந்தாயிற்று. இனி அறை திறக்கப்படலாம்" என ஆணையாக வெளிப்பட்டது இராஜராஜன் குரல். வேறு வழியின்றி அறைக்கதவு அந்தணர்களால் திறக்கப்பட்டது. ஏடு இருந்த இடத்தில் எழும்பியிருந்தது கரையான்புற்று. மன்னன் மாதுயரம் உற்றான். மண் செறிவை எல்லாம் நீக்கி தைலக்குடங்கள் பல வற்றைச் சொரிந்து செல்மடியச்செய்து திரு ஏடுகளை எடுக்க, அளவற்ற ஏடுகள் அழிந்து பயனற்றதாய் விளங்கக் கண்டு உள்ளம் நைந்து அழுது புலம்பி அயர்ந்து நின்றான். அப்பொழுது "சைவநெறித் தலைவரெனும் மூவர் பாடல் வேய்ந்தனபோல் மண்மூடச் செய்தே - ஈண்டு வேண்டுவன வைத்தோம்" என்று ஓர் அசரீரி ஒலித்தது. அதைக் கேட்ட மன்னன் மண்டிய துயரம் மாற மகிழ்ச்சியுற்று நம்பியாண்டார் நம்பி அடிகள் முடி சேர்த்து நன்றிப் பெருக்கைப் புலப்படுத்தினான். சிவனடியார்க்கெல்லாம் உதவுக என்று தனது பண்டாரத்தைத் திறந்து விட்டான்.

அத்தெய்வப் பாடல்களுக்குப் பண்டிருந்த வகையில் இசை அமைப்பு செய்ய எண்ணினான். அந்த நோக்கத்தோடு திருவெருக்கத்தம்புலியூர் திருக்கோவில் சென்று சிவனை வணங்கிப் பண்ணமைக்கும் பணி சிறக்க உதவவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். இசையும் யாழும் வல்ல பாணர் குடியில் தோன்றிய நங்கை ஒருத்திக்குப் பண்ணியல்பு முழுதும் பொருந்த அருள்புரிந்துள்ளோம் என்று இறை சிவன் எதிர் மொழிந்தான். அதைக் கேட்டு உளம் மகிழ்ந்த இராஜராஜன் அவளை அழைத்து வந்து அவளைக் கொண்டு பண்ணமைக்கும் வழி என்ன என்று சிந்தித்தான். அப்பொழுது, அவளை அழைத்து வந்து திருச்-

சிற்றம்பலத்தின் உள்ளே கூத்தப்பிரான்-திருமுன்புசகல மரியாதைகளுடனும்-அமரச் செய்து அவள் பணித்தவாறு அப்பாடல்களுக்கு இசை அமைப்பது-பொருந்தும் என ஓர் ஒலி கேட்டது. அந்த ஒலியை மன்னன், நம்பி, மறையவர்கள், மற்ற பல சிவனடியார் முதலியோர்கள் கேட்டார்கள். எனவே அதற்கேற்ப ஏழு திருமுறைகளாக மூவர் தமிழை வகுத்து பண் அமைத்து ஒப்பரிய மெய்ப் பணியைச் செய்து உயர்ந்தான்.

சொல்லொணாப் பெருமுயற்சியின்-காரணமாக வெளிப்படுத்தப்பட்ட உண்-மையும். இயல்பாகவே அப்பாசுரங்களின் தத்துவச் செறிவிலும்இலக்கிய நயத்திலும் பக்திச் சுவையிலும் ஈடுபட்டு மகிழும்-ஆர்வமும் இராஜராஜனைத் திருமுறைச் செல்வனாகவே ஆக்கிவிட்டன. பல்லா-யிரம் பாடல்கள் அநியாயமாக அழிந்-தவை போக எஞ்சியுள்ள இச்சில்லா-யிரம் பாடல்களாவது பொன்னாது பொ-லிய வேண்டும் என்ற பெருங்காதலால் இதற்கென ஒரு பெரும் அறக்கொடை நிறு-வியிருக்கிறான். நாள் முழுவதும் இடையீடின்றித் தேவாரத் திருப்பதிகங்களை ஓதிக் கொண்டே இருப்பதற்காக நாற்பத்தெட்டு ஓதுவார்களையும் இரண்டு உடுக்கை, மத்-தளக்கலைஞர்களையும் நியமித்திருக்கிறான்-இவர்கள் ஐம்பது பேருக்கும் நா-ளொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் முக்-குறுணி (இருபத்துநான்கு பட்டனம் படி) நெல் சம்பளமாகக் கொடுத்து வந்திருக்-கிறான். இனியும் எக்காரணத்தினாலும்-உள்ள பாடல்களுக்கும் ஊறு வந்து விடப்-படாது என்ற அக்கறையும், ஆர்வமுமே இதைச் செய்ய இராஜராஜனைத் தூண்-டியிருக்க வேண்டும் □



அஞ்சக் கரமெனுங் கோடாலி
கொண்டிருந்த ஐம்புலனும்
வஞ்சப் பலக்காட்டை வேர் அற
வெட்டி வளங்கள் செய்து
விஞ்சத் திருத்திச் சதாசிவம்
என்கின்ற வித்தை யிட்டுப்
புஞ்சக்கலை பறித்தேன்
வளர்த்தேன் சிவபோகத்தையே.

சிதம்பரச் சிற்றிலக்கியங்கள்

கி. வா. ஜகந்நாதன்
கலை மகள் ஆசிரியர்
சென்னை

சைவர்கள் சிதம்பரத்தைக் கோயில் என்றே சொல்வார்கள். அடையில்லாமல் கோயில் என்று சொன்னால் அது சிதம்பரம் நடராஜப் பெருமான் திருக்கோயிலையே குறிக்கும். கோயிற்புராணம் என்ற பெயரைத் தாங்கிய புராணம் உமாபதி சிவாசாரியரால் இயற்றப் பெற்றது. சிதம்பரத்துக்குக் கோயில் என்ற பெயர் வழங்குவதை அந்தப் புராணத்தின் பெயரே புலப்படுத்தும். அந்தத் திருத்தலத்துக்கு வேறு புராணங்களும் உண்டு.

அத்தகைய சிறந்த தலத்தைப் பற்றிப் பல சிற்றிலக்கியங்கள் எழுந்துள்ளன. மூவர்பாடிய தேவாரத்தில் சிதம்பரத்தைப் பற்றிய பதிகங்கள் பல, மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்திலும் சில பதிகங்கள் உண்டு.

சிவ பெருமானே மாணிக்கவாசகர் சிதம்பரத்தில் எழுந்தருளியிருந்த போது தாமே ஏடும எழுத்தாணியும் கொண்டு தம் கையாலேயே திருவாசகத்தை எழுதினர் என்று ஒரு வரலாறு உண்டு. திருவாசகம் முழுவதும் எழுதிய பிறகு அப்பெருமான் மாணிக்க வாசகரை நோக்கி "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என்றாராம். உடனே மாணிக்கவாசகர் ஒரு கோவையை அப்போதே பாடினார். அதற்குத்திருக்கோவையார் என்றும் திருச்சிற்றம்பலக்கோவையார் என்றும் பெயர்கள் வழங்கும்.

மாணிக்கவாசகர் காலத்தைப்பற்றி இரு வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. மூவருக்கும் முந்தியவர் என்று ஒரு சாராரும் பிந்தியவர் என்று மற்றொரு சாராரும்,

கூறுவர். முந்தியவர் என்ற கருத்தை உடைய வர்கள் டாக்டர் உ.வே. சாமிநாதையர், மறைமலையடிகள்முதலியோர். அவர்கள் கருத்தின்படி தமிழில் முதல்முதலாகத் தோன்றிய கோவை திருக் கோவை-யாராகும். அருளாளர் எழுதிய நூலாதலின் அதற்கு ஆர் விகுதி கொடுத்துத் திருக்-கோவையார் என்று வழங்குவது மரபு.

தில்லையிலுள்ள நடராஜப்பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழுந்த காதற் பிரபந்தம் திருக்கோவையார். ஒரு கட்டழகியும் ஒரு வீரனும் தனியே சந்தித்து உள்ளம் ஒன்றிய காதல் பூண்டு ஒழுகு வதும், பிறகு திருமணம் செய்து கொண்டு வாழ்வதுமாகிய வரலாற்றைக் கோவை நூல்களில் காணலாம். அவற்றை ஐந்தி-ணைக் கோவையென்றும் சொல்வார்கள்

திருக் கோவையார் நானூறு பாடல் கலை உடையது. அது காதல் வர-லாற்றைச் சொல்வது போல அமைந்தாலும் பசுவானது பதியினிடம் அன்பு பூண்டு அவனை அடையும் வகையை உள்ளுறை யாகக் கொண்டது என்று புலவர்கள் கூறுவார்கள். வேத ஆகமக் கருத்துக்கள் நிரம்பியது என்றும் சொல்வர். அகப் பொருள் இலக்கணத்தைத் தெரிவதற்கு இந்நூல் உதவும் என்பது இலக்கணப் புலவர் கருத்து. இவற்றையெல்லாம் சொல்லும் ஒரு பாடல் திருக்கோவையாருக் குச்சிறப்புப்பாயிரமாக அமைந்திருக்கிறது.

அந்தப்பாடல் வருமாறு:

"ஆரணங் காண் என்பர் அந்தணர்,
யோகியர் ஆகமத்தின்
காரணங் காண்என்பர்; காமுகர்
காமநன்னூல் அது என்பர்;
ஏரணம் காண்என்பர் எண்ணர்;
எழுத்தென்பர் இன்புலவோர்;
சீர்அணங் காயசிற் றம்பலக்
கோவை யைச் செப்பிடினே.

(ஆரணம் – வேதம்; ஏரணம் – தருக்கம்; எண்ணர் – தருக்கப்புலவர்; எழுத்து – இலக்கணம்; அணங்கு – தெய்வத்தன்மை பொருந்தியது.)

இந்தப் பிரபந்தத்தில் மாணிக்க வாசகர் தில்லையையும் நடராஜப் பெரு மானையும் பலபடப் பாராட்டியிருக்கிறார்.

"அணியும் அமிழ்தும்என் ஆவியும்
ஆயவன், தில்லைச்சிந்தா
மணி, உம்பரார்அறி யாமறையோன்" (5)

என்று நடராஜப் பெருமானைப் போற்று கிறார்.

"ஏழுடை யான்பொழில், எட்டுடை
யான்புயம், என்னைமுன்னுள்
ஊழுடையான்" (7)

என்று அப்பெருமான் தம்மை ஆட்கொண்ட திறத்தைச் சொல்கிறார்.

"உணர்ந்தார்க் குணர்வரி யோன்
தில்லைச்
சிற்றம் பலத்தொருத்தன்" (9)

என்றும்,

"கூம்பல்அம் கைத்தலத் தன்பர்என்பு
ஊடுரு கக்குனிக்கும்
பாம்பலங் காரப் பரன்தில்லை
யம்பலம்" (11)

என்றும்,

"புணர்ப்போன் நிலனும் விசும்பும்,
பொருப்பும், தன் பூங்குழலின்
துணர்ப்போது எனக்கு அணிஆக்கும்தொல்
லோன், தில்லை" (17)

என்றும் பிறவாறும் வரும் பகுதிகள் மாணிக்கவாசகருக்கு நடராஜப் பெருமா-னிடமும் சிற்றம்பலத்திடமும் உள்ள பேரன் பைப்புலப்படுத்தும்.

பதினோராந் திருமுறையில் பட்டினத் தார் பாடிய கோயில் நான்மணி மாலை என்ற பிரபந்தமும், நம்பியாண்டார் நம்பி

அருளிய **கோயில் திருப்பண்ணியர் விருத்தம்** என்ற நூலும் தில்லையைப் பற்றிய வையாக உள்ளவை.

கோயில் நான்மணிமாலை என்பது, வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், அசிரியப்பா என்பவை அடுத் தடுத்து அந்தாதியாக அமைய நாற்பது பாடல்கள் கொண்டது.

முதல் செய்யுளில்,

''பாமேவும்
ஏத்துகந்தான், தில்லை இடத்துகந்தான்,
அம்பலத்தே கூத்துகந்தான்''
என்று கூத்தப்பிரானைப் பாடுகிறார்.

'தில்லை அம்பலத்தையன்றி வேறு யாரையும் நான் பாடமாட்டேன்'
என்று ஒரு செய்யுளில் சொல்கிறார்.

விரிசடையும், வெண்ணீரும், செவ்வானம் என்ன
ஒளிவந்த பொன்னிறமும், தொல்நடமும், காட்டும்'
உடையான் உயர்தில்லை அம்பலம் ஒன்று அல்லால்
எளிவந்து இனிப்பிறர்பாற் சென்று அவர்க்குப் பொய்கொண்டு
இடைமிடைந்த புன்மொழியால் இச்சை உரையோமே.

தில்லை மூயாயிரம் அந்தணர்களை,

''நெய்எரி வளர்த்துப் பெய்முகிற் பெயர் தரும்
தெய்வ வேதியர் தில்லை மூதூர்'' (20)

என்பது போலப் பலஇடங்களில் புகழ்ந்து பாடுகிறார்.

நம்பியாண்டார் நம்பி அருளிய **கோயில் திருப்பண்ணியர் விருத்தம்** என்பது எழுபது பாடல்களை உடையது. யாவும் அந்தாதியாகிய அமைந்தவை.

ஒருபாடலில், 'நடராஜப்பெருமானைத் தரிசிப்பதற்கு உடல் முழுவதும் கண்கள் இல்லையே! தொழுவதற்கு உடல் முழுவதும் கைகள் இல்லையே! அவன் திருநாமங்களைச் சொல்ல உடம் பெல்லாம் வாய்கள் இல்லையே! என்று ஏங்குகின்றார்.

''தன்னூர் புனல்தில்லைச் சிற்றம்
பலந்தன்னில் மன்னிநின்ற
விண்ணுளானைக்கண்ட நான்விரும்
பாய்என் உடல்முழுதும்
கண் ஆங்கு இலோ! தொழக் கைஆங்கு
இலோ! திரு நாமங்கள்கற்று
எண்ணும்பரிசுஎங்கும்வாய்ஆங்குஇலோ!
எனக் கிப்பிறப்பே!''

ஒரு பாடலில் மாணிக்கவாசகர் பாடிய திருக்கோவையை,

''வருவா சகத்தினில் முற்றுணர்த்
தோனை, வண் தில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன்
சொல்திருச் சிற்றம்பலம்
பொருளார் தருதிருக் கோவை''

என்று சிறப்பித்தார்.

இரட்டைப் புலவர்கள் சிதம்பரத்தைப் பற்றித்**தில்லைக் கலம்பகம்** என்ற பிரபந்தத் தைப்பாடியிருக்கிறார்கள். **சிதம்பரப் பாட்டியல்** என்ற பாட்டியல் நூலில் தில்லைப் பெருமான் புகழ் வருகிறது.

குமர குருபரமுனிவர் சிதம்பரமும் மணிக்கோவை சிதம்பரச்செய்யட்கோவை என்று சிதம்பரத்தைப் பற்றி இரண்டு பிரபந் தங்களைப் பாடியிருக்கிறார்.

சிதம்பரம் மும்மணிக் கோவை என்பது, **ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை** என்ற மூவகைச் செய்யுட்களும் அந்தாதியாக வர முப்பது பாடல்களைக் கொண்டது.

சிதம்பரத்துக்குப் புண்டரீக புரம் என்பது ஒரு பெயர். புலியூர் என்பதன் வடமொழிப் பெயர் அது. புண்டரீகம் என்பதற்குத் தாமரை என்றும் ஒரு பொருள்

உண்டு. அதை நினைத்து சிதம்பரம் தாமரை மலர் போல இருக்கிறது என்று சொல்கிறார். சிதம்பரத்திலுள்ள பொன் மன்றம் தாமரை மலரில் உள்ள கர்ணிகை போல இருக்கிறதாம். மதில் இதழ் வரிசை போல இருக்கிறது, மாடங்களின் மேல் உள்ள மேகங்கள் தாமரையை மொய்க்கும் வண்டு கூளைப் போல உள்ளன.

"மன்றம் பொகுட்டா, மதில் இதழா, மாடங்கள்
துன்றும் புயல்கள் சுரும்பராப்–பொன் தங்கும்
நற்புண்ட ரீகமே ஒக்கும், நடராசன்
பொற்புண்ட ரீக புரம்".

(பொகுட்டு – கர்ணிகை; சுரும்பர் – வண்டுகள்; பொன்–திருமகள்.)

பாவும் பாவினமுமாக அமைந்த எல்லாச் செய்யுள்களுக்கும் உதாரணமாக அமைந்த பாடல்களை உடைய நூல் **சிதம்பரச் செய்யுட் கோவை**, அது 84 செய்யுட்களை உடையது.

"வாழி திருமன்றம் கண்ட மலர்க்கண்கள்,
வாழி பெருமான் புகழ்கேட்ட வார் செவிகள்,
வாழி அவனே வணங்கும் முடிச்சென்னி,
வாழி அவன் சீர்பாடும் வாய்!"

என்பது அதில் வரும் பாடல்களில் ஒன்று.

தில்லை உலா என்னும் நூலின் ஆசிரியர் இன்னார் என்று தெரியவில்லை. இதன் தொடக்கத்தில் சிவகாமசுந்தரியின் பெருமை வருகிறது.

"சீர் கொண்ட செல்வச் சிவகாம சுந்தரி, பைத்
தார்கொண்ட கொன்றைநறுந் தாழ் குழலான்–ஏர்கொண்ட
வேதம் ஒரு நான்கும் விண்முதல் ஐந்தும் படைத்த
பேதை, அறம்வளர்க்கும் பேராட்டி"

சாக்கியர் என்னும் புலவர் **சிதம்பர அகவல்** என்ற நூலைப் பாடியிருக்கிறார்.

"சீரணி கமலத் தாரணி வாழ்க
வாரணன் முதலோர் நாரணன் போற்றத்
தில்லையின் மீதே திருநடஞ் செய்தாய்!"

என்று தொடங்கும் இந்நூல் எளிய நடையில் அமைந்திருக்கிறது.

இயற்றியவர் பெயர் தெரியாத **சிதம்பர வெண்பா** என்பது ஒரு நூல், ஒவ்வொரு வெண்பாவும் சிதம்பர தேவா என்று முடிகிறது.

சிதம்பர நாதர் பதிகம் என்பது பத்துப் பாடல்கள் அடங்கிய சிறியநூல். ஒவ்வொரு பாடலும், "செகம்பணி திகம்பர சிதம்பர நடேசனே சிற்சொருபானந்தனே" என்ற மகுடத்தைப் பெற்றிருக்கிறது.

பிற்காலத்தில் இராமசாமி ஐயர் என்பவர் பாடிய நடராசர் தூது என்ற நூலில் தரவு கொச்சகக் கலிப்பாக்கள் பத்து உள்ளன.

"அருளமரும் திருவிழியும் அழகமரும் திருமுகமும்,
இருளமரும் களமும்முய லிடத்தமரும் திருப்பதமும்
தெருளமரும் தில்லைமறைச் செல்வர்அமர் திருமுன்பு
மருளமரும் மனத்தேன்பொன் மன்ற மரக் கண்டேனே"

என்பது அதில் வரும் முதற்பாட்டு.

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்கள் இயற்றியது **தில்லையமக அந்தாதி** மிகவும் கடினமான நூல். உரை இல்லாவிட்டால் ஒன்றும் விளங்காது.

இந்தச் சிற்றிலக்கியங்களை அன்றித் தில்லையில் எழுந்தருளியிருக்கும் சிவகாமி அம்மையைப் புகழ்ந்து பாடிய பிரபந்தங்கள் பல உண்டு.

ஆசிரியர் பெயர் தெரியாத **சிவகாமி அம்மை பிள்ளைத்தமிழ்** என்பது ஒரு பிர

பத்தம். மற்றப் பெண்பாற் பிள்ளைத் தமிழ் களில் இல்லாத வீடுகட்டல் பருவம், குதலை மொழிப் பருவம், பாவை விளையாடற் பருவம் என்ற பருவங்கள் அதில் உள்ளன. குதலை மொழிப் பருவத்தில் வரும் பாட்டு ஒன்று வருமாறு:–

"முழுமதியின் அமுதமும் தெண்டிரைப் பாற்கடலின்
முன்கடைந்திடும் அமுதமும்
முத்ததருமோ, அதனை ஒப்பென
இசைத்திடின்
முக்கனி சருக்கரையோடும்
பழுதகல் பசுந்தேனும் இருசெவிக் கின்பம்
பயக்குமோ! காமதேனின்
பாற்சுவையும் நாச்சுவையும் கொஞ்சுகிளி
யின்சொலும்
பாசவிருள் நீக்கிவிடுமோ,
வழுவரும் இம்மைக்கும் மறுமைக்கும்
முத்திக்கும்
மற்றினி உரைப்பதேனே?
மைந்தர்தம் சொற்கேட்கின் இன்பம்
செவிக்கெனும்
வாய்மையும் பொய்யாகுமோ?
குழலினிது யாழினிது அன்று, நின்
பவழவாய்க்
குதலைமொழி யாடியருளே!
குழகன்மொழி சிவகாம சுந்தரிநின்
மழலைவாய்க்
குதலைமொழி யாடியருளே!

குமர குருபரமுனிவர் **சிவகாமி இரட்டை மணிமாலை** பாடியுள்ளார். அம்பிகை என்றும் குமரியாக இருத்தலை ஒரு பாடல் அழகாகச் சொல்கிறது.

"தலைவளைத்து நாணி எந்தை
தண்ணளிக்கே ஓல்கும்
குலைவளைத்த கற்பகப்பூங் கொம்பர்–
கலைமறைகள்
நான்கும்மரி யார்க்கிந்த உலகமெலாம்
ஈன்றளித்தும்
தான்குமரி ஆகியிருந்தாள்."

(கற்பகப்பூங் கொம்பு போன்றவள்: நான்கும் மரியார்–நான்கிலும் மருவியவர்)

சிவகாமியம்மை அகவல் என்ற நூலை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. முதலில் ஒரு வெண்பாவும் பின் அகவலு மாக அமைந்த நூல்.

சிவகாமியம்மை கலிவெண்பா; ஆசிரியர் பெயர் தெரியவில்லை. காப்பு வெண்பாவும் பின்பு கலிவெண்பாவுமாக அமைந்த நூல்.

"நான்அன்றி நீஅன்றி நாடும்பொருள்வேறு
தான்அன்றி நீங்காத் தமோமயமே–
ஏனைவினைப்
பந்தம் அறுக்கும் பரமசுகா தீதமே
தந்தருள்நின் தாளேசரண்

என்று முடிகிறது.

சிவகாமியம்மை அந்தாதி: ஆசிரியர் பெயர் அறியப்படாத இந்நூலில் காப்புச் செய்யுளும், நூறு கலித் துறைப்பாடல்களும் உள்ளன. காப்புச் செய்யுளில் விநாயகரும் நடராஜப் பெருமானோடு ஆடுவதாகப் பாடுகிறார் ஆசிரியர்.

"பேர்மேவும் அம்பலத் தப்பனே
டாடும் பெருவயிற்றுக்
கார்மேவு யானை முகன்மலர்த்
தாருண்டு காப்பதற்கே."

சிவகாமி அம்மை ஊசல்: ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஊஞ்சல் பாடல்கள் பத்தும் மங்களம் ஒன்றும் ஆகப்பதினொரு பாடல்கள் அடங்கியது.

சிவகாமவல்லி விருத்தம்: ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 13 ஆசிரிய விருத்தங்களைக் கொண்டது.

சிவகாமியம்மன்துதி: ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பத்துப் பாடல்கள் அடங்கியது.

"அடியிணையும் கொடிஇடையும் அருள் சுரக்கும்
தனதடமும் அம்பொற் பூணும்
மிடிஇரியக் சுதியனைய வேண்டுமலர்க்
கயமென விளங்கும் கையும்
வடிவுடை செவ்வாயும் வெண்ணகைமுக்
கண்ணுமலர்க் குழலு மாகச்
செடியகலத் தினம்போற்றிச் சிவகாம
சவுந்தரியைச் சிந்திப் போமே!

என்பது இந்த நூலில் வரும் இறுதிப் பாடல்

திருவையும் செந்தமிழும்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள்,
பேரூராதீனம்.

உலகத்தில் உள்ள பல்வேறு நாடுகளிலும் மேம்பட்ட சிறப்பு தமிழகத்திற்கு உண்டு. தமிழகம் சமயநெறி தழைத்த நாடு. தமிழகத்தில் உள்ள திருக்-கோயில்கள் அதற்குச் சான்றாக விளங்கு-கின்றன. அத்தோடு மட்டுமல்லாமல் அறநெறி, பண்பாடு, வாழ்வியல் முத-லான உணர்வுகளை வளர்க்கும் அரிய கருவூலங்களாகவும அமைகின்றன. மன-நலத்தையும் உடல்நலத்தையும் வளர்த்து உயிர் நலம் பெற வழிகாட்டும் பாங்கும் திருக் கோயில்களில் அமைந்துள்ளன. மனிதன் குணநலங்களுடன் சிறந்து விளங்-கவும் நல்ல நெறிகளைக் கடைப் பிடித்து வாழவும், ஆன்றோர் வழிகாட்ட அதன்-வழி வாழவும் முயல வேண்டும். அம் முயற்சி வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கையாகும். அத்தகைய வாழ்க்கை யில் மனிதனைச் செலுத்துவனவாகவே கோயில்-கள் அமைந்துள்ளன. நமது சங்க இலக்-கியங்கள் கூறும் வாழ்க்கை நெறி இவற்றை உள்ளடக்கியதாகும். சங்க இலக்கியத்தில் பழம் பதியாகிய பாண்டி நாட்டை ஆண்ட பாண்டியன் பல யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பற்றிய ஒரு பாடல் நமது சமய உணர்வின் சிறப்-பினை, வாழ்க்கை நெறியினைக் கூறும் வகையில் அமைந்துள்ளது. பாண்டிய மன்னன் வணங்காமுடி மன்னனுகத் திகழும் ஆண்மையும் ஆற்றலும் உடை-யவன். அவனது வெண்கொற்றக்குடை உலகம் முழுதும் வருந்திய குடிகளின் துன்பம் போக்க நிழல் பரப்புவது, ஒரு குடை நீழலின் உலகாண்ட பாண்டிய மன்னனின் வெண்கொற்றக் குடை அது

என்பதை உணர்ந்த புலவர் அவனைச் சமய நெறியில் ஊற்றங்கொள்ளச் செய்யும் வகையில்

"பணியய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான் மறை முனிவ ரேற்துகை யெதிரே"

என்று பாடியுள்ளார்.

நமது திருக்கோயில்கள் நகரம் போல பரந்து விரிந்து பல்கலைச் செல்வத்துடன் விளங்குவன என்பதை இன்றும் எடுத்துக் காட்டும் சிறப்பு தமிழகத்திற்கு உண்டு. உலகத்தில் எங்கும் காணாத அளவிற்கு வானுயர்ந்த கோபுரங்கள், கருங்கல் மண்ட பங்கள், கலைச்சிற்பங்கள் அறிஞர் வியக்கும் ஓவியங்கள்; மனங்கவரும் செப்புத் திருவுருவங்கள் அமைந்துள்ள திருக் கோயில்களைத் தமிழகத்திலன்றி வேறு எங்கு காணமுடியும்?

தமிழகத் திருக்கோயில்களுக்கு எல்லாம் எடுத்துக்காட்டாக விளங்கும் சில கோயில்களில் முதன்மையாக அதுவும் சிவநெறியாளர்கட்கு அல்லல் அகற்றி அருவினை போக்கித் தொல்லை தரும் வல்வினைகள் தொலைய அருள் வழங்கும் தெய்வத் திருத்தலமாக விளங்குவது தில்லை மாநகர். இது பக்தியின் பால ராகிப் பரமனுக்கு ஆளாம் அன்பர் எல்லையில் அன்பு பூண்டு இனித்தமுடைய எடுத்த பொற்பாதத்தை ஏத்தும் திருத் தலம் தில்லைப் பெரிய நகரம் செல்வ நெடுமாடங்கள் வானுற ஓங்கி மதிதோய விளங்குவது. அருட் செல்வர்களும், பொருட் செல்வர்களும் வாழும் இடம். இம்மாநகரம் மிகப்பழமையான ஊர் ஆதலின் தில்லை மூதூர் என்றருளினார் மாணிக்கவாசகர் - இங்கு மண்ணிலே வந்த இப்பிறவி தூய்மையடையவும், இன்பம் பெருகவும் அகங்குழைந்து அன்புருகி பூமாலை புனைந் தேந்திப் புகழ்ந்து பாடி த் தலையாரக் கும்பிட்டுக் கூத்தாடிக் கும்பிட குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும், பனித்த சடையும், பவளமேனியில் பால் வெண் ணீறுபூசி இனிய இன்பமிகும் எடுத்த பொற்பாதத்துடன் ஆடுகிறுன் ஆனந்தக் கூத்தன். அவன் ஆடும் திருக்கூத்தினைக் கண்டு பாணி தூக்கு சீர் என்றும் தாள முழக்க வாக்கினை நோக்கி நிற்கின்றுள் அன்னை சிவகாமி . இத்திருதலக்கோயில் சிற்றம்பலம். தில்லைச் சிற்றம்பலமேய செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம் என்பர் திருஞான சம்பந்தர். இத்திருத் தலத்தில் தேவர்கள் திருக்காட்சி காண நெருங்கி நிற்பர். வருணன் நீர் தெளிப்பான்; வாயு குப்பைக் கூளங்களை அப்புறப் படுத்தவான். இத்தகையோர் பணி முழுமையான அன்புப் பணியாக இல்லை என்று அது குறையுடைய தாகக் கருதி, செந்தமிழ்த் திறத்தினராகிய திரு நாவுக்கரசர் பார்வாழத் திருவீதிப் பணி செய்தார் என்று சேக்கிழார் போற்றும் திருத்தலம்.

திருச்சிறம்பலத்துள் நின்று பொற் டன் நடஞ்செய்கின்ற பூங்கழலை ஒன்றி யிருந்து நினைந்து வாழ்விலும் உயிரிலும் ஏற்படும் ஊனம் போக்கி வாழ்ந்தனர் அருளாளர்கள். அன்பர்கட்கு அருள் புரிந்து என்று வந்தாய் என்று வினவும் திருக் குறிப்புடன் விளங்குகிறுன் தேவ தேவன். தில்லையம் பலவனை – திருக் கூத்தை அக்கால முதல் அருட்சான்றோர் கள் தேனினும் இனிய செந்தமிழில் பாடிப் பரவித் தினைத்தனர். சங்க இலக்கியங் களுள் கற்றறிந்தோர் ஏத்துங் கலித் தொகையில் இறைவனுடைய அருட் கூத்தும் கூத்துக் கேற்ப அன்னை திருத் தாளம் போடுவதும் சிறப்பாகக் கூறப்படு கிறது. அப்பாடல்,

"படுபறை பலஇயம்பப் பல்உருவம் பெயர்த்து நீ
கொடுகொட்டி ஆடுங்கால் கோடியர்அக லல்குல்

கொடிபுரை நுசுப்பினாள் கொண்டசீர் தருவாளோ?
மண்டமர் பலகடந்து மதுகையால் நீற ணிந்து
பண்டரங்கம் ஆடுங்கால் பனையெழி வணிமெனறோள்
வண்டு -- அரற்றும் கூந்தலாள் வளர் தூக்குத் தருவாளோ?

கொலைஉழுவைத் தோள்அசைஇக் கொன்றைத்தார் சுவல்புரளத்
தலைஅங்கை கொண்டு நீகாபாலம் ஆடுங் கால்
முலைஅணிந்த முறுவலாள் முற்பாணி தருவாளோ?

பாணியும்தூக்கும் சீரும் என்றிவை
மாணிழை அரிவை காப்ப
ஆணமில் பொருள் எமக்கு அமர்ந்தனை ஆடீ'' என்பதாகும்

பொன்னம்பலத்தில் மூலமும் முடிவும் இல்லாத முதற்பொருளாக விளங்கும் அம்பலவாணனைத் தேனினும் இனிய செந்தமிழால் பாடிய அருளாளர் பலர். சமயப் பாடல்களில் முதன்மையானது திருமந்திரம்.

''தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு, என்னை நன்றாக
இறைவன் படைத்தான்'' என்பார் திருமூலர். உலகத்தின் இதயமாக விளங்கும் தில்லையை,.

''எங்குந் திருமேனி எங்குஞ்சிவசக்தி
எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமாயிருத்தலால் எங்கெங்குந
தங்குஞ் சிவனருட் டன்விளை யாட்டதே''
என்று பாடுகிறார் திருமூலர்.

தில்லைக்கூத்தப் பெருமான் உடுக்கை ஒலியில் தோற்றுவித்தது தமிழ். தமிழ் நெறியும் மரபும் வளர நால்வர் பெரு மக்கள் திருமுறைப் பாடல்களை அருளினர். தமிழ் உளமுருகும் கவிதை நலம் வாய்ந்தது. உடையவனாகிய இறை வனையும் உடைமை யாகிய உயிரையும் இணைக்க்கும் சிறப்புடையது. கருங்கால் மனமும் கரைந்துருகக் கண்கள் தொடு மணற் கேணியில் ஆரா அன்பு நீர் பெருக இறைவனுடன் இசைப்பது திருவாசகம். திருவாசகப் பாடல் தில்லைக் கூத்தனுக்கு கந்தது. வேதவியாசர் வேதங்களை வகைப்படுத்தியவர் என்பவர். ஐந்தாம் வேதமாகிய பாரதத்தை எழுத எண் ணினார். தான் கூறும் ஐந்தாம் வேதப் பொருளை எழுத அருள் பாலிக்க வேண்டும் எனச் சிவபெருமானிடம் வேண்டினார். சிவபெருமான் தனது மூத்த பிள்ளையைக் கொண்டு எழுது வித்தார் என்பர். ஆனால் மாணிக்க வாசகர் அருளிய அமுதப் பாடல்களைத் தாமே தம் திருக்கரத்தால் எழுதிக் கொண்டார் சிவ பெருமான். அப்பாடல்களை உமையம் மையின் தேன் மொழியினும் சிறப்பானது எனக் கொண்டு தில்லை அம்பலத்தில் ஆடும் பொற்சபையாகிய சிற்றம்பலத்தில் வைத்துக் கொண்டார். இதனைத் தண்ட பாணி சுவாமிகள்.

''வண்மைப் பராசன் மகன்சொல் ஐந் தாமறை வாசகத்தை
அண்மைப் புதல்வன் கரத்தால் வரைவித்த அண்ணல், அருள்
உண்மைத் தமிழ்த்திரு வாசகப்பாடல் ஒருங்கெழுதிப்
பெண்மைக்கு உவகை தரும் அரங் கூடுறப் பேணினனே''
என்று பாடியுள்ளார்.

பெண்ணொரு பாகத்தின னாகிய இறைவர் உவமைமிக ஆடும் ஆனந்தக் கூத்தர், பண்ணின் நேர்மொழியாள் உரையினும் இனிதாம் செந்தமிழ் திரு வாசகப் பாடலைச் சிற்றம் பலத்தில் வைத்துக் கொண்டார், இதனால் மாணிக்க வாசகர் சிற்றம்பலத்தும் என் சிந்தை

யுள்ளும் உறைவான் உயர்மதிக் கூடலில்
ஆய்ந்த ஒண்தீந்தமிழ் என்று அருளினர்,
செந்தமிழ்ப் பாடல்கள் ஒளிநெறியில்,
இசை இன்பத்தில் திளைக்கச் செய்வன.
இப்பாடல்களைப் பாடிய சமய குரவர்கள்
தில்லைப் பெருமானைக் கண்டு கைகள்
தலைமேற் குவித்துக் காதலாகிக் கண்ணீர்
மழை பெருக அகக்கருவிகளாகிய சித்தம்
மனம் ஆதிய உருகிட உணர்ந்து நெகிழ்ந்து
வழிபட்டனர். மெய்ஞ்ஞானமே ஆன அம்
பலமும் உள் நிறைந்த ஞானத்தெழும்
ஆனந்த ஒருபெருந் தனிக் கூத்தும்
கண்ணின் முன்புறக் கண்டனர். கும்
பிட்டுத் திளைத்து இறைவன் கழலேத்தும்
இன்பம் இன்பமே என்று பாடினர்.
இதனைச் சேக்கிழார்,

''அண்ண லார் தமக் களித்தமெய்ஞ் ஞான
மேயான அம்பலமும் தம்
உண்ணி றைந்தஞா னத்தெழும் ஆனந்த
ஒருபெருந் தனிக்கூத்துங்
கண்ணின் முன்புறக் கண்டுகும் பிட்
டெழுங் களிப்பொடுங் கடற்காழிப்
புண்ணி யக்கொழுந் தனையவர் போற்
றுவார்புனிதரா டிய பொற்பு''

எனத் திருஞான சம்பந்தர் வரலாற்றில்
அருளியுள்ளார்.

திருநாவுக்கரசர் வருணனும் வாயுவும் செய்
யும்பணி குறையுடையது எனத் திருத்
தொண்டர் ஆற்றும் திருவீதிப் பணியில்
ஈடுபட்டு அதன்பால் நெகிழ்ந்து தில்லை
யம்பலத்துட் சென்று

''குனித்த புருவமும் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில்
பால் வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற் பாதமும்
காணப்பெற்றால்
மனித்தப்பிறவியும் வேண்டுவ தே இந்த
மாநிலத்தே''

என்று பாடியருளினார், இந்நிலையைச்
சேக்கிழார் பெருமான்,

''கையுந் தலைமிசை புனைஅஞ் சலியன
கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யுந் தகையன; கரணங்களும் உடன்
உருகும் பரிவின பேறெய்தும்
மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரும்
மின்தாழ் சடையொடு நின்றுடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடும் அவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்றால்

என்று கூறுகின்றார்.

''அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலின்
மண்மேல் நம்மைச்சொற்றமிழ் பாடுக''
எனச் சிவபெருமான் அருள்செய்யப்
பாடிய சுந்தரர் தில்லைக்கு எழுந்தருளு
கிறார். அஞ்சேல் என்றருளும் அண்ணலை
அஞ்சலித்துக் குவித்த கைகளுடன் அந்தக்
கரணங்களாகிய மனம் சித்தம் புத்தியாகிய
ஒன்றிய அன்பால் நெகிழ்ந்துருக மாதவம்
செய்த தென்திசை வாழவந்த சுந்தரர்
திலலையம் பலத்துட் சென்று திருக்
கூத்தாடும் பெருமானின் திருமுன்பில்
திருக்களிற்றுப் படியின் அருகில் நிலமிசை
வீழ்ந்து வணங்குகிறார் என்பதை,

''வையகம் பொலிய மறைச்சிலம் பார்ப்ப
மன்றுளே மாலயன்தேட
ஐயர் தாம் வெளியே ஆடுகின் றாரை
அஞ்சலி மலர்த்திமுன் குவித்த
கைகளோ திளைத்த கண்களோ அந்தக்
கரணமோ கலந்த அன் புந்தச்
செய்தவப் பெரியோன் சென்று தாழ்ந்
தெழுந்தான் திருக்களிற்றுப்படி மருங்கு''

எனச்சேக்கிழார் அருளியுள்ளார்.

தில்லைப் பெருமான் செந்தமிழ்த்
திறம் வல்லான், ஆதலின் நச்சுப் பாம்
பாகிய நாகம் கையில்ஆட ஆடுகிறார்
என்பதைச் ''செந்தமிழ்த் திறம் வல்லிரோ
செங்கண் அரவம் முன்கையிலாடவே''
என்பர் தம்பிரான் தோழராகிய சுந்தரர்,
சேக்கிழார் திருத்தொண்டர் புராணம்

பாட உலகெலாம் என அடியெடுத்துக் கொடுத்தவர் தில்லைப் பிரான். உலகம் எலாம் ஒடுங்கிய பேரூழிக்காலத்தில் தன் தனிமையை இனிதாக்கிக் கொள்ளத் திருவாசகத்தை எடுத்து மன்றுள் வைத்த எம்பிரான் திருமுன் திருக்களிற்றுப்படி மருங்கிருந்து தேவாரத் திருமுறைகள் பாடப் பெறவேண்டும். உலகம் சிவ நெறியை அறிந்து வாழவிரும்புகிறது. அனைத்துலகும் பரவு சிவநெறியின் மூலமாகிய தில்லையம்பல செந்தமிழ்த் திருமுறைகள் பண்டுபோல் என்றும் இன்னிசை பரப்பத் தில்லைத் திருக்கூத்தன் திருவருள் துணைபுரிவதாகுக. □



ஊரி லான்குணங் குறியிலான்
செயலிலான் உரைக்கும்
பேரி லான்ஒரு பிறிதோர்
சாரி லான்வரல் போக்கிலான்
மேலிலான் தனக்கு
நேரி லான்உயிர்க் கடவுளாய்
என்னுளே நின்றான்-

—கந்தபுராணம்

"காணுத அருவினுக்கம்
உருவினுக்கும் காரணமாய்
நீள்நாகம் அணிந்தார்க்கு
நிகழ்குறியாம் சிவலிங்கம்"

—சாக்கியர் பெரிய புராணம்

ஸ்ரீ நடராஜர் தத்துவம்

சிரோமணி, ஜீ. நடராஜ சுந்தர தீக்ஷிதர்.

எல்லாவற்றையும் கடந்து நிற்கும் பரம்பொருள் நம்மீது கருணை கொண்டு சோதிப்பிழம்பாக வருகிறது. சோதி என்றால் நம் ஊனக்கண்ணால் காண முடியாத அளவுக்கு ஒளி வீசி வருகிறது. அப்படியும் நாம் அனைவரும் அதைக் கண்டு பயனடையமுடிவதில்லை, ஆகவே அது இன்னும் கீழே இறங்கி வருகிறது. நிலவையும் கங்கையையும் தலைமேல் சுமந்து கொண்டு அழகான உருவத்தோடு தோன்றுகிறது. அதனாலும் பயன்பெற முடியாதவர்களுக்காக இரக்கங் கொண்டு, அவர்களை ஈர்க்கும் பொருட்டு ஆட ஆரம்பிக்கிறது. எங்கே அந்த ஆட்டம் என்று கேட்போமேயானால் தில்லைப் பெருமன்றத்தில் பொன்னம் பலத்தில் நடைபெறுகிறது. அருளே மலர்ந்து அவருடைய திருவடியாகி இருக்கிறது. ஆண்டவனைக் காட்டிலும் அவருடைய திருவடிகள் சிறந்தது எனக் கூறுகிறார்கள் முன்னோர்கள்:-

"நின்னிற் சிறந்த நின் தாளிணையவை"

என்பது பரிபாடல்; மேலும்

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறை வனடி சேராதார்" - குறள்: என்றும் கூறப்பட்டிருக்கிறது. இத்தனைக் கருத்துக்களையும் உள்ளடக்கிச் சேக்கிழார் பெருமான் "உலகெலாமுணர்ந்து ஓதற் கரியவன்" என்று பாடுகிறார்.

இறைவன் ஐந்தொழில்களைச் செய்கிறார். சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோதனம் அனுக்ரஹம், என்பவை. துடி ஏந்திய கை ஆக்கல் செயலையும், அபயம் காட்டும் கை பாதுகாத்தலையும், அக்னி ஏந்திய கை அழித்தலையும், ஊன்றிய திருவடி—குஞ்சிதபாதம் அருளையும் குறிக்கிறது.

"தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா
ஊன்று மலர்ப் பதத்தில்உற்ற திரோதம்-முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு" - என்ற உண்மை
விளக்கப்பாட்டு இதனை உணர்த்துகிறது.

"அஜடா பால சந்த்ரேண,
அபலாந்தர சகூஷா,
அவாமா, வாமபாகேன
வபுஷா மம மூர்த்தய:"

இதன் கருத்து என்னவெனில்:-

விரிசடையின் கண்ணதாகிய பிறைச் சந்திரனை உடைய வாகாதனவும், நெற்றிக் கண்ணை உடைய வாகா தனவும், உமையொடு கூடிய இடபக்கத்தை இல் லாததாகவும், இருக்கின்ற எனது சொரூ பமுள்ள தம்மினின்றும் வேறுபட்டவர்கள் என்று ஈஸ்வரனுல் புகழப்பட்டவர்கள் தில்லைவாழ்தணர்கள் ஆவர். மேலும் ஞானசம்மந்தரும்

"நீலத்தார் கரிய மிடற்றர் நல்ல நெற்றி
மேலுற்ற கண்ணினர் பற்று
சூலத்தார் சுடலைப் பொடி நீறணிவார் சடையார்
சீலத்தார் தொழுதேத்து சிற்றம்பலம்
சேர்தலாற் கழற்சேவடி கைதொழக்
கோலத்தா யருளாயுன காரணங் கூறுதுமே
(ஞா. திரு. 3.1.3)

என்று இவ்வந்தணர்களை நடராஜர் ஸ்வரூபமாகவே கூறுகிறார்.

இத்தக் குடமுழுக்கு நன்னாளில் அவருடைய திருவடிகளை வாழ்த்துதலும் வணங்குதலுமே நாம் பெற்ற மானிடப் பிறிவியின் பயன்களாம்.

"நீலத்தார்கரிய மிடற்றர் நல்ல
நெற்றி மேலுற்ற கண்ணினர்பற்று
சூலத்தார் சுடலைப்பொடி நீறணி வார்சடையார்
சீலத்தார் தொழு தேத்து சிற்றம்பலஞ்
சேர்தவாற் கழற் சேவடி கைதொழக்
கோலத்தாயரு ளாயுள காரணங் கூறுதுமே"

—திருஞானசம்பந்தர்



குஞ்சிதாங்கிரிஸ்தவம்



சே. ஸ்ரீநிவாஸசர்மா

ஸம்ஸ்கிருத விரிவுரையாளர், அண்ணாமலைப்பல்கலைக்கழகம்

தமிழ் இலக்கியத்தில் 'கண்ட கவயம்' அல்லது சிறு காவியம் எனப் படும் ஒரு வகையைக் கணக்கிடுவர். மேற் கத்திய நாடுகளில் பரவிய (லிரிக்) (Lyric) காப்பிய அமைப்பையே அது தழுவியதாகவும் கூறுவர். 'லேர்' (Lyre) என்பது ஒருவித இசைக்கருவி. அக்கருவியின் பின்னிணைப்பில் பாடப்படும் சிறு இலக்கியப் படைப்பே லிரிக்' எனப்படும். காதல், பக்தி போன்ற உள்ளுணர்வைப் பிரதி பலிக்கும் மென்மையான வெளியாக்கமே அது எனவும், தன்னியல்பாக அமையும் அவ்வுணர்வு வெளியாக்கம் எல்லா உயிரினத்திற்கும் பொது எனவும், அது காப்பியக் கூறுகளுடன் அமைவதை விட 'பாவத்தையே' சிறப்பாகக் கொண்டு அமைவதாகவும் கூறுவர். மழைக்காக ஏங்கிய தவளைகள் முகிலைக் கண்டு, ஆரவாரித்து, ஒன்று சேர்ந்து குரலிசைப்பதையும் மழைமுகிலின் மெல்லிய துளிகளில் எக்களித்து, மயில் கூட்டங்கள் 'கேகா' என்று மெல்லிசைக் குரல் எழுப்புவதையும் இந்த 'பாவாவேசத் திற்கு' உதாரணமாகக் கூறலாம். இது போன்று, சகோரம், சக்ரவாகம், சாதகம், முதலிய பறவைகளின் 'பாவாவேச'ப்பாக்களும் இவ்வினத்தவையே.

தமிழ் இலக்கியத்தில் சிருங்காரம், பக்தி ஆகிய சுவைகளின் இழையாக அமைந்த இருசூறுகளைக் கொண்டது கண்ட கவ்யம். அது ஒரு சுலோகம், முதல் ஐந்து எட்டு, பத்து, பன்னிரண்டு, பதினாறு, இருபது, இருபத்தைந்து, ஐம்பது, அறுபது, எழுபது, நூறு என்ற கணக்கில் சுலோகங்களைக் கொண்ட காவியப் பகுதியாகும். தசகம், சதகம், ஸஹஸ்ரம் என்று எண்ணமைப்புடன் சேர்ந்தே பெயர் கூறுவதும்

உண்டு. பஞ்சரத்தனங்களும், மூகபஞ்சதீ, பாது காஸஉறஸ்ரம் முதலியன பக்திச் சுவையைப் பெருக்கும் கண்டகாவ்யங்கள். அவ்வாறு எண்ணமைப்பைக் குறிக்காவிடினும் முழு சிருங்கார உணர்வைச் சிறு இலக்கிய வடிவில் அமைத்தலும் உண்டு. அவை மேகதூதம், ஹம்ஸசந்தேசம் முதலியவையாகும்! வால்மீகி முனிவர் கிரௌஞ்சப் பறவை அடிபட்டு விழுந்ததைக் கண்டு, கருணே ததும்ப வாய்விட்டுப் பாடிய அந்த ஒரு பாவாவேச சுலோகமே இராமாயணத்தின் மூலக்கருவாக அமைந்த கண்டகாவ்யம் என்பர். அமருகரின் சதகத்தில் 'முக்தங்கள்' என்ற ஒவ்வொரு தனி சுலோகமும் சிருங்காரச் சுவைப் பெருக்காக அமைந்த ஒரு முழு பிரபந்த மேயாகும் என்பார்—ஆச்சர்ய ஆனந்தவர்தனர். கி. பி. பன்னிரண்டாம் நூற் ருண்டின் கவியான ஜெயதேவரின் கீத கோவிந்தம் ஸ்ரீகிருஷ்ணன்-ராதை ஆகி யோரின் சிருங் காரம் பெருக உரையாடலாக அமைக்கப்பெற்றது. எட்டு எட்டு சுலோகங்களாக அமைக்கப் பெற்றதால் 'அஷ்டபதீ' எனவும் அதைக் கூறுவர். இவை செய்யுள் வடிவில் மட்டுமின்றி, தண்ட தண்டவகணே கவசன வடிவிலும் அமையும். காளிதாலரின் ஷியாமளா தண்டகம், ஸ்ரீராமானுஜரின் கத்யத்ரயம் ஆகியவை அவ்வகையில் குறிப்பிடத் தக்கன.

இவ்வரிய 'கண்டகாவ்ய' வரிசையில் 'குஞ்சிதாங்கிரிஸ்தவம்' என்ற நூல் இடம் பெறுகிறது. முந்நூற்றுப் பதின்மூன்று சுலோகங்கள் கொண்ட இந்நூல், ஸகுண மூர்த்தியான பரமேச்சுவரனின் தாண்டவ கோலத்திலமைந்த ஸ்ரீமன் நடராஜமூர்த்தியைத் துதித்து, **சற்று வளைத்துத் தூக்கிய திருவடியுடைய அந்நடராஜப்பெருமானைச் சரண் புகுவதாக** இந்நூல் ஆசிரியர் பாடுகிறார். 'குஞ்சிதாங்கிரம் பஜேரஹம்' என்று ஈற்றடியில் முடிவதாக அமைத்துள்ளார். ஓரடியில் இருபத்தொரு எழுத்துக்கள் என்ற கணக்கில் நான்கு அடிகளில் 84 எழுத்துக்களாக மிக விரிந்து விளங்கும் 'ஸ்ரக்தரை' (மாலைதாங்கி) என்ற விருத்தத்தில் அமைந்துள்ளது — இந்தப் பாமாலை. பெரும் பாலும், சொல் வளமுடைய கௌடியரீதியும், நீண்ட தொகைச் சொற்களமையப் பெற்ற ஓஜோ குணமும் நிறைந்து காணப்படுகிறது. இது இந்நூலாசிரியரின் நீலைத்த பக்திப் பெருக்கையும், குறைவிலாத சொல் வளத்தையும் காட்டுகிறது. ஆயிரம் சுலோகங்களில் இத்துதியை அமைக்க விரும்பியவர் போல் தொடங்கி, ஏனே லகுஸஉறஸ்ரஸ் துதியாகவே முடித்துவிட்டார்! ஸ்ரீ ஆதி சங்கரர் தனது சிவானந்த லஹரியில், அனேத்து அணிகள் நிரம்பியும், மென்மையான பத (காலடி) ங்களைக் கொண்டும், நல்ல விருத்தம் (நல்லொழுக்கம்) அமையப் பெற்றும், நற்குணம். பொலிவு பொருட் செறிவு ஆகியவற்றையும் கொண்டு விளங்கும் தன் கவிதைக் கன்னியை ஏற்குமாறு பரமேச்வரனே வேண்டி நின்றது போல் இந்நூலாசிரியர் வேண்டுவாரோ.... இல்லை, அதற்கு முன், அவர் போற்றிப் பாடிய நடராஜப் பெருமானே அவர் துதியை ஏற்று, மகிழ்ச்சியைத் தருவதாக 'ஸத்வருத்தாம்' என்று தொடங்கும் 304 ஆம் பாட்டில் கூறி அமைதி கொள்வதைக் காண்கிறோம். இத்துதியின் 306-ஆவது சுலோகம் முதல் எட்டு சுலோகங்களில் இயல்பாக அமைந்த 'ணமுல்' விகுதிச் சொற்ருடரின் (க்ரோசம் க்ரோசம்; ஸ்தாவம் ஸ்தாவம்; தோஷம்தோஷம்; மந்தம் மந்தம்; ஸேகம்ஸேகம்; காலம் காலம்; லாபம் லாபம்) அழகை அறிஞர் வியந்து பாராட்டுவர்.

பரம்பொருளில் மூழ்கித்திளைத்த இந்நூலாசிரியர் 'குஞ்சிதாங்கிரிஸ்துதியைச் சொல்லுவேன் 'எனத்தொடங்கி, அத்துதியைப்பாடி முடித்தவுடன் 'ஸ்ரீசித்ஸபேசனே நேரில் கண்டு களித்தேன்' என முடிப்பதால் இத்துதியைப் பாடுகின்ற எவரும் அப்பேற்றைப் பெறலாம் எனக் கூறுவார் போலத் தோன்றுகிறது.

ஸ்தோத்திரத்தின் இலக்கணம்

குணக்கடலான இறைவனது குண நலனை வாயாரப் பாடுவது ஸ்தோத்திரம். அது மட்டுமன்று; அக்குணக்கடலை வணங்கி வழிபடுவதும், பல்லாண்டு கூறுவதும், அவரைச் சார்ந்த மதக்கோட்பாடுகளை நிச்சயித்துக் கூறுவதும், அவரது பராக்ரமம் ஐச்வர்யம் ஆகியவற்றை விரிவாகப் பாடுவதும், பின் வேண்டுகோள் விடுப்பதும் ஆகியவையும் ஸ்தோத்திரத்தின் கோட்பாடாகும். இந்த ஸ்தோத்திர இலக்கணத்தின்படி அமைந்துள்ளது குஞ்சிதாங்கிரிஸ்தவம் என்ற நூல், பரமேச்வரனைப் பற்றியும் குறிப்பாக ஸ்ரீமத் நடராஜப் பெருமானைப்பற்றியும் பலர் தோத்திரம் பாடியுள்ளனர். எனினும் இந்தோத்திரம் முற்றிலும் வேருனது; மேலானது என்பதைக் காணுமுன், பொதுவாக ஸ்மதோத்திரம் எதற்கு என்பதைக் காணலாம்.

ஸ்தோத்திரம் தேவையா?

இவ்வுலக வாழ்க்கையில் நாடோறும் நிகழும் சம்பவங்களைக் கூர்ந்து நோக்கும் எவரும் ஓர் உண்மையை உணராமலிருக்க முடியாது. அதுயாதெனில், எவ்வளவு திறமை வாய்ந்த வரும் சில சமயங்களில், தன் திறமை பயனற்றது; இதற்கும் மேலானதும், தன்னுல் உணரப்பட்டும் விவரித்துக் கூற முடியாததுமான ஒரு சக்தியே சில காரியங்களைத் தடைசெய்தும், வேறு சில எதிர் பாராத நன்மைகளையும் செயல்களையும் நடத்திச் செய்தும் வருகிறது என்பதே. இந்த சக்தி மானிடருக்குமட்டுமின்றி தெய்வங்களான மானிடர் வழிபடும் இந்திரன் முதலியவவர்களுக்கும் எட்டாத நிலையிலிருக்கிறது என்பதைக் கேனேபநிஷத் முதலிய நூல்கள் வலியுறுத்தும்.

இந்த சக்தி எங்கு முடிவடைகிறதோ, எந்த எல்லையை தெய்வப்பிறவியோ, மானிடப் பிறவியோ கடந்து செல்லும் திறமையற்றதாகிறதோ அந்த, எல்லையே–அந்தச் சக்தியே எல்லாம் வல்ல இறைவன்:–கடவுள் என்ற உண்மையை நம் முன்னோர்கள் உணர்ந்து, உலகமக்களுக்கு உணர்த்த எண்ணற்ற நூல்களை உருவாக்கித் தந்து உள்ளனர்.

எந்தப்பிறவியும் கடவுள் அருள் இல்லாமல் தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள இயலாது. அவன் அருளைப்பெற அவனை வழிபடுவது இன்றியமையாதது. எனவே கடவுளை வழிபடும் முறைகளை வேதங்கள், உபநிஷத்துக்கள், புராணங்கள், முதலிய பல நூல்கள் குறிக்கோளாகக் கொண்டு விவரிக்கின்றன. அந்த முறைகளில் 'உபாஸனம்' என்ற வழிபாட்டுமுறை சிறந்தது. அவற்றிலும் 'தஹரோபாஸனம்' என்பது மிகச் சிறந்ததென்பது சாந்தோக்கியோப நிஷத் முதலிய நூல்களின் தெளிவான கருத்து.

தஹரோபாஸனம் என்றால் என்ன?

நம் உடலில் தாமரைமொக்குவடிவில் அமைந்த 'ஹிருதயம்' என்ற முக்கியமான உறுப்பு இருப்பது யாவரும் அறிந்ததே. இந்த ஹிருதயத்தின் உதவி-இயக்கம் எந்தக் கணத்தில் நின்றுவிடுமோ அந்தக் கணமே வாழ்க்கையின் இறுதி எனக் கருதப்படும். ஆகவே ஹிருதயம் வாழ்க்கைக்கு ஆதாரமாகிறது.. அதன் சிறப்பும் நன்கு புலனுகிறது. இதைக் கொண்டுதான் நம் முன்னோர்கள் இவ்விதயத்தை கடவுளுக்கு உறைவிடமாகக் கூறினர். இதன் மையத்தில் ஒரு சிறிய-மிகச் சிறிய ஆகாசம் அல்லது இடைவெளி இருக்கிறது. இதுவே கடவுளின் உறைவிடம். அவர் ஆனந்தத் தாண்டவம் புரிவது இவ்விடம் தான் என்று யோகிகளும், வேதாந்திகளும் கண்டறிந்து கூறியுள்ளனர். இந்தச் சுத்த சிதாகாச வெளியில் எல்லாம் வல்ல இறைவனை வழிபடுவதே தஹரோபாஸனம் என்று கூறுவர். (தஹரம்–இதயத்தின் மையச் சிறுவெளி, உபாஸனம் – வழிபாடு).

சிதம்பர கூஷத்திரமே தஹராகாசம்

நம் தத்துவ சாஸ்திரங்கள் அண்டம்

எனவும், பிண்டம் எனவும் உலகை இரு கூறுகளாகப் பிரித்துக் கூறுகின்றன. இதில் என்பது சரீரம்-உடல் ஆகும். இதில் செய்யப்படும் வழிபாடு ஒருவகை. அவ்வாறே அண்டம் என்ற வெளியுலகிலும் தஹரோபாஸனம் உண்டு. அதெப்படி? வெளியுலகெலாம் ஓர் உடலாக (விராட் புருஷனுக்கு) அமைந்தது எனக்கொண்டால் அதில் ஒரு ஹிருதயம் இருக்க வேண்டுமே அந்த ஹிருதயம் சிதம்பர க்ஷேத்திரம். அதில் உள்ளவெளி என்பது சித்-ஸபை என்ற சிற்றம்பலமே. அதில் ஆனந்தத் தாண்டவம் புரியும் ஸ்ரீநடராஜப் பெருமானே உலகெலாம் ஆக்கவும், காக்கவும், அழிக்கவும் வல்ல இறைவன். உலகம் என்ற உடலின்கண் ஹிருதயமாகும் சிதம்பரத்தின் பெருமையை என்னவென்று வருணிப்பது? இந்த க்ஷேத்திரத்தில் இறைவனே வழிபடுவதே அண்டத்தில் செய்யும் தஹரோபாஸனமாகும். இதன் பயன் அளவிடற்கரிய பேரானந்தமே-மோக்ஷம் என்ற நிலையாகும்.

இந்த உபாஸனத்தைச் செய்து, முக்தி என்ற பேரானந்தப் பெரும் பேற்றை அடைந்தவர்கள் பதஞ்ஜலி வியாக்ரபாதர், ஜைமினி, உபமன்யு முதலிய எண்ணிறந்த முனிவர்களும், மஹான்களுமாவர்.

இவ்வரிய வழிபாட்டை எல்லோரும் கடைப் பிடிக்க முடியாது. எப்படியேனும் கடைத்தேற வேண்டும் என்று விழைக்கின்ற வருக்கு எளிதாக வழிபாட்டை வகுப்பதே இவ்வித ஸ்தோத்திரத்தின் அடிப்படையாகும். முனிவர்களும், சித்தர்களும், அனுபூதிமான்களும் தாம் கண்டுகளித்த அப் பேரானந்தத்தை எளிய மக்களும் பெற வேண்டி ஒரு வகையான வழியை ஸ்தோத்திரப் பாக்களின் மூலம் தந்துதவியதை எண்ணிப் பார்க்க வேண்டும்

இந்த ஸ்தோத்திரத்தின் பெருமை

இனி இவ்வரிய ஸ்தோத்திரப் பாடலின் பெருமை என்ன என்பதைக் காணலாம். பொதுவாக மேற் கூறிய தஹரோபாஸனத்தின் மாற்று வழியே இது என்பது தெளிந்த உண்மை. இதைப் பாடும் 'ஜீவனும், இப்பாட்டின் இலக்கான பரம் பொருளும் இணையத்தக்க ஒன்றிய பாவனை தோன்றச் செய்வது இதன் முதலாவது பெருமை. முதல் சுலோகத்தில் முதல் சொல்லாக பிரம்ம (பிரஹ்ம) என்பதையும் இறுதிசுலோகத்தில் நான் (அஹம்) என்ற சொல்லையும் அமைத்ததால், 'பிரஹ்மம் நான்' என்ற பொருள் கிடைக்கின்றது. இது குறிப்பாக முன்கூறிய 'அத்வைதத்தைப் பிரதி பலிக்கின்றது. மேலும், ஆங்காங்கே அத்வைதக் கொள்கைகள் தோன்றுமாறு பல செய்யுட்கள் அமைந்துள்ளது நோக்கத்தக்கது (சுலோ. 95, 242 முதலியன)

ஸ்தோத்திர இலக்ஷணத்திற்கேற்பச் சிவபெருமானின் லீலாவிலாச - விபூதிகளையும் சித்-ஸபை கனகஸபை முதலியவைகளின் தத்துவங்களையும் சிவபெருமானின் தத்துவ ரீதியான ஸ்வரூபம், இச்சா சக்தி-க்ரியா சக்தி-ஞான சக்தி ஆகிய சக்திகளின் ஒருமுகமான சேவைகளையும் வருணித்துள்ளது இந்த ஸ்தோத்திரத்தின் பெருமை. வேதம், உபநிஷதம், புராணம் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள படி திவ்விய சரித்திர நிகழ்ச்சிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளதால் பரமனின் ஐச்வர்யத்தை விளக்கும் அம்சங்களாக்கி இத்துதிப் பாமாலையைப் பெருமைமிக்க முறையில் ஆசிரியர் பாடியுள்ளார். ஆதிசங்கரரின் ஸௌந்தர்ய லஹரீ சுலோகங்கள் போன்று இந்நூலிலுள்ள ஒவ்வொரு சுலோகங்களும் அரிய மந்திரசக்தி வாய்ந்தவை என்றும் கூறுவர். ஸ்ரீ பதஞ்சலி முனிவரால் அருள் நோக்குடன் இயற்றப்பட்ட நித்ய பூஜா-மஹோத்ஸவ-சூத்திரங்களின் அடியொற்றித் தில்லை வாழந்தணர் புரியும் பூஜை முறைகளை யும் இவ்வரிய ஸ்தோத்திரம் வருணிப்பது மற்றொருபெருமை. இன்னும், தெளிவாகப் (பிரஸாத குணம் பிறழாமல்)

பொருள் விளங்குமாறு அமைந்த சுலோகங்களைக் கண்ணுற்றால இந்நூலாசிரியரது அருள் நோக்குப் புலனாகும்.

இந்நூலின் கருத்தாக அமைந்த செய்திகள் பழைய நூல்களிலிருந்து திரட்டப் பட்டவை எனத்தெரிகிறது. அவ்வரிய நூல்களின் பெயரைமட்டும் குறிப்பதே நீண்ட தொரு பட்டியலாக விரியும். உதாரணத்திற்காக ஒரு சில கீழே தரப்பட்டுள்ளன.

எண்	செய்தி	பழைய நூல்	இந்நூல் சுலோகஎண்
1.	நான்குவர்ணத்தார் தோற்றம்	புருஷசூக்தம்	78
2.	சிதம்பரத்தில் பதஞ்ஜலி மஹாபாஷ்யம் இயற்றியது.	பதஞ்ஜலிசரிதம்	80
3.	ஸ்ரீநடராஜரின் மனதிலிருந்தும் மற்றும் உறுப்புக்களிலிருந்தும் சந்திரன் முதலியோர் தோன்றினர் என்பது	புருஷசூக்தம்	82
4.	1000 முகங்களை உடையவர் சிவ பெருமான் என்பது.	சிதம்பர கல்பம்	90
5.	காஞ்சி, திருவானைக்கா, திருவண்ணாமலை, காளஹஸ்தி, தில்லை ஆகிய இடங்களில் முறையே பிருதிவி அப்பு, தேஜோ வாயு ஆகாச லிங்கங்கள்.	சிவபுராணம்	100
6.	யந்திர பூஜையும், முறைகளும்	பூஜாபாதஞ்சலம் திருமூலர்	109
7.	ஸ்ரீநடராஜப்பெருமானே அம்சி என்பது.	ஸ்ரீநடராஜஸஹஸ்ர நாமம்	111 & 175
8.	சிதம்பரஸம் மேளன-ஸபா நட மஹாவித்யா	தஹரவித்யாகண்டம்	112
9.	தசரதர், ஸ்ரீராமர் முதலிய நான்கு புதல்வர்களை தில்லையில் பெற்றது.	தில்வ ன மாகாத்ம்யம்	116
10.	நாரதர் சிவனருளால் ஸங்கீத வித்தையைப் பெறுதல்.	சிதம்பர ரஹஸ்யம்	121

எண்	செய்தி	பழைய நூல்	இந்நூல் சுலோகஎண்
11.	நரசிம்மரைச் சரபேச்வரர் அடக்கியது.	பிரத்யங்கிராமந்திர கல்பம்	126
12.	பவானி–(பாணசுரயுத்தம்)	லலிதோயிக்யானம்	128
13.	சிவபெருமான் வாமனரை (த்ரிவிக்ரமனை) அடக்கியது.	சங்கரஸம்ஹிஸ்யம்	127
14.	தேவி பண்டாசுரனையழித்தல.	லலிதோயிக்யானம்	129
15.	தாருகாவனத்தில் விஷ்ணு மோகினியானது.	சிதம்பர ரஹஸ்யம்	130
16.	ஒரு பிராமண பக்தனை கண்டபேருண்டத்திடமிருந்து பரமன் காத்தருளியது.	திருவையாற்றுப்புராணம்	134
17.	தருமபுத்திரர் சிவ-துர்காபிரஸாதத்தால் எதிரிகளை வென்றது.	மஹாபாரதம்	138
18.	கண்ணப்பர் வரலாறு	காளஹஸ்தி மாகாத்ம்யம்	144
19.	சண்டேச்வர நாயனார்	திருத்தொண்டர்புராணம்	145
20.	நந்திகேச்வரர் பிரமத-கணங்களுக்குத் தலைவரானது.	சிவபுராணம்	153
21.	சிருங்கி–ப்ருங்கி-ரிடர் வரலாறு.	சிவபுராணம்	154–55
22.	பார்வதி வைசியர் குலத்தில் பிறந்தது.	திருவிளையாடற்புராணம்	157
23.	மயிலின் உருவத்தில் பார்வதி தவம் புரிந்தது.	மாயூரமாகாத்ம்யம்	158
24.	பைரவர் சிதம்பரத்தில் பிரும்ம தத்வத்தை உபதேசித்தது.	புண்டரீகபுரமாகாத்ம்யம்	159
25.	வியாசருக்குச் சிவ பரத்வத்தை விஷ்ணு உபதேசித்தது.	சங்கரஸம் ஹிதை	160
26.	சுக்ராச்சார்யன் யோகத்தீயால பொசுங்கும் உலகை மிருத ஸஞ்ஜீவினியால் தேவர் காத்தது	கூர்மபுராணம்	161

எண்	செய்தி	பழையநூல்	இந்நூல் கலோக எண்
27.	விநாயகர் ராவணனைத் தண்டித்தது.	கோகர்ண மாகாத்ம்யம்	162
28.	சாகபுசுண்டர்வரலாறு	ஞானவாசிஷ்டம்	168
29.	சோமயாஜிமாற நயானூர்	பெரியபுராணம்	170
30.	தில்லைமூவாயிரவர் கலியில் இருநூற்றுவர் ஆவர் என்பது	சிதம்பர ரகஸ்யம் தஹரவித்யாகண்டம்.	176
31.	ஹரதத்தர் சிவபெருமான் அருளால் முக்தி பெற்றது.	ஹரதத்த சரிதம்	177
32.	காத்யனர்–காத்யாயனீ வரலாறு	திருவீழிமிழலைப்புராணம்	180
33	சீதை மணலில் பிடித்த லிங்கத்தை அசைக்க முயன்ற ஆஞ்சனேயர் தவித்தது.	ஸேது புராணம்	184
34.	திருமூலர் வரலாறு.	திருத்தொண்டர் புராணம்	185
35.	நளன் சிவபெருமான் அருளால் சனீச்சர துன்பத்தினின்று நிவர்த்தி பெற்றது.	திருநள்ளாறு ஸ்தல புராணம்	189
36.	சாஸ்தா என்ற ஐயனூர் வரலாறு.	சங்கரஸம் ஹிதை	188
37.	யமன் சிவபூஜைப் பெருமையை உணர்தல்	புண்டரீகபுரமாகாத்ம்யம் சிதம்பர புராணம்	197
38.	இயற்பகை நாயனூர்	திருத்தொண்டர் புராணம்	214
39.	பகீரதன் கங்கையைக் கொணர்ந்த வரலாறு.	மஹாபாரதம்	115
40.	ஸீமந்தினீ வரலாறு.	ப்ரஹ்மோத்தரகண்டம்	239
41.	ஹரிச்சந்திரன் சிவபூஜையால் பெருமை பெற்றது.	காசிகண்டம்	255
42.	கிராத வேஷத்தில் வந்த பரமனை அர்ஜுனன் வழிபட்டது	மஹாபாரதம்	260
43.	இறைவன் பாண்டியனூற் பிரம்படி பட்டது.	திருவிளையாடற்புராணம்	259

எண்	செய்தி	பழையநூல்	இந்நூல் சுலோக எண்
44.	தேவர்கள் சிவபூஜையால் யஜ்ஞபுருஷனைமீட்டது.	யஜுர்வேதம்	270
45.	ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்கு சிவன் பெருமையை உணர்த்தியது.	மஹாபாரதம்	271
46.	சந்திரமௌளீச்வரர் வரலாறு	தில்வவன மகாத்மீயம் தஹரவித்யாகண்டம் பாதஞ்ஜலபூஜாசூத்திரம்	276
47.	ஆதிசங்கரர் சிதம்பரத்தில் அவதரித்த வரலாறு.	ஸ்ரீசங்கரவிஜயடிண்டிமம்	295
48.	திருநீலகண்ட நாயனர்	பெரிய புராணம்	298

மேலும் ஸ்காந்த புராணம், தேவீ பாகவதம், லிங்கபுராணம், மார்க்கண்டேய புராணம் முதலிய பலநூல்களிலிருந்தும் செய்திகள் திரட்டப்பட்டுள்ளன.

இங்கு ஒரே எழுத்தில் தொடங்கும் பல சொற்களை அடுக்கி, எளிய முறையில் அழகாகப் பூஜையும் பாங்கு கவனிக்கத் தக்கது. அவ்வாறு சுலோகங்கள் பின்வரும் எண்களில் காணலாம்.

96, 97, 98, 99, 106, 210, 211, 225, 262, 280, இவ்வகைச் செய்யுள் அமைப்பு அக்ஷரமாலிகாஸ் தோத்திரங்களில்தான் காண முடியும்.

மேலும், இங்கு ஒரு சுலோகம் (182) ஒன்று, இரண்டு மூன்று என்று ஒன்றன் மேல் ஒன்றாக எண்களையடுக்கிப் பிரமனைக் காணும் அழகு திருமந்திரப் பாட்டோடு இயைபுடையது. குஞ்சிதாங்கிரிஸ்தவ சுலோகமும் திருமந்திரப் பாட்டும், பின் வருமாறு...

ஏகம் பிரஹ்மாத்விதீயம் த்ரிவதமபி
சதுர்வாங்மயம் பஞ்சபாண—
ப்ராத்ருவ்யம் ஷட்விக்ஷ த்விஷதபிஷனுதம்
ஸப்தஜஹ்வாவிகாக்ஷம்
அக்ஷ்டம்யேணுழங்க சூடம் நவரஸ
நடனலோல வாஸோதசாசம்
ருத்ரைஸ்ஸாதித்ய வர்கை: ஸத்த நதபதம்
குஞ்சிதாங்கிரீம் பஜேஹம்

ஒன்றவன் தானே இரண்டவன் இனனருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து
வென்றனன். ஆறுவிரிந்தனன் எழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந்தெட்டே
(திருமூலர் 1.1.1.)

மற்றோரு முக்கியப் பெருமை யாதெனில் ஸமஸ்கிருத காவிய இலக்கண வாசிரியர்கள் வகுத்தபடி தொகைச் சொற்களின் விரவிய அமைப்பு வசன நடை காவியத்திறகே அழகாகும். அது ஒஜோ குணத்தின் நடை. 'ஆரபடீ விருத்தி'

என்றும் அதைக் கூறுவர். ஆனால், இத்துதிப்பாலில் நூலாசிரியர் இவ்வோஜா குணத்தை - தொகைச் சொற்களைத் தொடராகக் கையாண்டுள்ளது நோக்கத்தக்கது

இந்நடை செய்யுட் காப்பியத்தில் வீரம், ரௌத்திரம் முதலிய சுவைகளில் வெகுவாகக் கையாளப்படலாம் என்பார் ஆசாரிய ஆனந்த வர்த்தனர். இத்தோத் திரப்பாடலில் ஓஜோ குணநடை பொருந்துமா என்னில், ஆம். இருவகையில் பொருந்தும். 1. வர்ணிக்கப்படும் செய்தி-யின் தரத்திற்கேற்ப நடை அமைவதை எவரும் மறுக்கமாட்டார். வீரம், ரௌத்ரம், பீபத்ஸம் ஆகிய சுவைகள் தோன்ற வர்ணனைப் பகுதி அமையுமானால் அங்கு ஓஜோ குணம் இன்றியமையாதது.

2. பக்திப் பெருக்கிலும் 'பாவாவேசம் தன்வயப் படாமல் வீறிட்டு எழும்பொழுது கவியின் தரத்திற்கேற்ப இயல்பாக ஓஜோ குணம் அமைவதும் உண்டு. இத்துதிப் பாடலின் ஆசிரியர் ஒரு தலைத்த யோகியும், ஞானியும் ஆவர். அவர் பாவாவேசத்தில் மூழ்கிய பொழுது 'காவியநடை எவ்வாறு அமைய வேண்டும்' என்ற தனி முயற்சியில் சிக்காமல், இயற்கையாக ஒன்றன்பின் அரும்பிய தொகைத் தொடரை, மல்லி கையை மாலையில் கோப்பது போல்கோத் துள்ளார் என்பது பாராட்டத் தக்கது. வர்ணிக்கப்படும்செய்தியும் அதற்குத்தூண செய்வதைக் கீழே காணும் பாக்களில் காணலாம்.

1. நடராஜப் பெருமான் 'தாண்டவம்' என்ற இறை கூத்துப்புரிகிறார். பாணன் முதலிய கணங்கள் ஆவேசத்துடன், தன் நீண்ட கரங்களால் வேகமாகக் கட வாத் தியம் முழக்குகின்றனர். திமிதிமி என்ற ஒலி எங்கும் எதிரொலிக்கிறது. வேறு சிலர் ஆயிரம் இழைக்கம்பிகள் கொண்ட வீணை வாசிக்கின்றனர். தாளு தாளு தள என்ற அனுகானத்தைக் கேட்டுத் தலை தூக்கிப் படம்விரித்தாடுகின்றன பரமனின் கையில் அணிகலன்களான சர்ப்பங்கள்:– இது வர்ணிக்கப் படும் செய்தி, இதற்கேற்ப ஓஜோ குணம் என்ற தொகைத் தொடர மைப்பு பொருத்தமானதே. இதோ அந்த சுலோகம்.

திருத்தேசம் பாணதைத்ய ப்ரமுககண
வரோத்தண்ட தோர்பிருந்தவர்ய
க்ரூரோத்வேகாஹதோத்யத்கட திமிதிமிக்
சப்த பாவானுகூலம்
தாளு தாளு தனேதிக்வணித தசசதி தந்த்ரி
வீணனுகாளெந்
மாதோத்க்ரீ வாஹிபூஷாவலய மபயதம்
குஞ்சிதாங்கிரிம் பஜேஹேம்

2. ஊர்த்துவ தாண்டவ வேளை. சிவ பெருமான் பாகம் பிரியாளான அம்பிகை இடது தோள் புறத்தில் நவரத்தினங்கள் இழைத்த ஆபரணங்கள் பூண்டு காட்சிய ளிக்கிறாள். அவ்வாபரணங்களின் பல நிறக் காந்தி சிவபெருமானின் நீலகண்டத்தில் பரவுகிறது. நீலநிறமான கண்டம் உருமாறி மாறிக் காட்சி யளிக்கிறது. 'முன் உட்கொண்ட ஆலகாலமே இப்பொழுது இவ்வாறு எங்கும் பரவுகிறது போலும்' எனப் பயந்து திக்குப் பாலகர்கள் ஓடுகின்றனர். இச்சமயம் காதணியாக வளைந்து கிட்க்கும் பாம்புகள் மருட்சியால் தலைதூக்கி சிவபெருமான் தலைச்சந்திரனை விழுங்க முயல்கின்றன. ஆனால், அவர் தலையிலிருக்கும் கங்கைக்குக் கரையோரக் காடு போன்ற ஜடை––காதுவரை தொங்கி அசைந்தாடுகின்ற ஜடை–அவற்றைத் தடுக்-கின்றது' –– இங்கும் பரபரப்பான ரௌத்-ரரசம் மிளிர்கிறது. ஆகவே, ஓஜோ குணம் எவ்வளவு பொருத்தமாக அமைகிறது என்-பதை படிப்போர் உணர்வர்:

ஆர்யாவமாம்ஸ பூஷா நவமணிகண
பாஸங்க வைவர்ண்ய நீல–
க்ரீவாலோகாதிசங்கி ப்ரஸ்ருத விஷபயாக்
ராந்த திக்பாலவர்கம்
கூடா சந்தராஜிஹீர்ஷா தரவிவ்ருத பணு
குண்டலீ கர்ணலோலத்

கங்கா கூலாயமான ஸ்வஸ்டவரணம் குஞ்சி
தாங்கிரிம் பஜேஹம்

இப்படி உதாரணங்கள் பெருகிக்கொண்டே போகும். ஆனால், வேண்டுமளவு பிரஸாத குணம் என்ற தெளிவான நடையும் ஆங்காங்கே பளிச்சிடத்தான் செய்கிறது. உதாரணமாக 'ஸ்ரீசித்ஸபேசனது ஆணை எவராலும் மீற முடியாது. அவரது தத்வாதீதமானஸ் ஸ்வரூபத்தை பிரமன் முதலியோரும்வர்ணிக்க முடியாது. எண்ணிறந்த ஐசவர்யம் படைத்த அம்முழுமுதற் கடவுளைக் கண்டறிய இன்றும் கூட வேதங்கள் முயற்சிக்கின்றன. ஜனகர் முதலியோர் போற்றும் அந்த அம்பிகை பாகனைப் போற்றுகிறேன்' என்ற இந்தச் செய்யுள் நினைக்குந் தோறும் எளிதாய் இனிக்கிறது.

ஆஜ்ஞா யஸ்யாகிலாஸும் நபவதி ஹிஸதா
லங்கனீயா, யதீயம்
தத்வா தீதஸ்வரூபம் விதிமுக விபுதா
வர்ணிதும் சைவசத்தா:
யம் த்ரஷ்டும் வேத வாசோர ப்யகணி
தவிபவம் நூனமத்யாபி யத்னம்
குர்வந்த்யம்பாஸஹாயம் ஸனகமுக குரும்
குஞ்சிதாங்கிரிதம் பஜேஹம்

இந்நூலாசிரியர்

இவ்வரிய கண்டகாவியம் பக்தி பாவாவேசப் பெருக்காய் உருவெடுத்துள்ளதை மேலே கண்டோம். இதை இயற்றியவர் யார் என்பதை சுருக்கமாகக் காண்போம்.

சிதம்பர க்ஷேத்திரத்தில் தில்லை வாழந்தணர் குலத்தில் சம்புதீக்ஷிதர் என்ற நடராஜ தீக்ஷிதருக்கும் கௌரீ என்ற அன்னைக்கும் புதல்வராக உதித்த ஸ்ரீஉமாபதி சிவம் என்ற ஞானியார் இத்தோத்திரப் பாமாலையைப் பாடினர். அவர் நான்கு வேதங்களையும் அனைத்துக் கலைகளையும் முறைப்படி கற்றுத்தேர்ந்தார். ஸ்ரீமந்திர மூர்த்தி தீக்ஷிதரிடம் ஸ்ரீவித்யோபதேசம் பெற்று ஸ்ரீசிவகாமசுந்தரியம்பாள் சன்னதியில் ஸ்ரீவித்யாஜ பயஜ்ஞயத்தை அனுஷ்டித்து, அம்பிகையின் அருளையும் அணிமாதி சித்திகளையும் அவர் பெற்றார். பல வேள்விகளையும் செவ்வனே நடத்தி அதன் மூலம் நீண்ட ஆயுளைப் பெற்று, உலகத்தில் வைதிக தர்மத்தையும், ஸனாதனமான சைவ மதத்தையும் வளர்த்தோங்கச் செய்தார்.

சுவேதாசாரியர் என்ற பெரியோரின் அருளாசியுடன் ஒரு ஸ்படிக லிங்கம் ஸ்ரீசிதம்பரமேருயந்திரம், வாஞ்சா கல்பலதா கணபதி மந்திரம் ஆகியவற்றைப் பெற்றார். மறை ஞானசம்பந்தரிடம் உபதேசம் பெற்று அத்துடன் எல்லா ஆகமங்களையும் கற்றறிந்து சைவ சித்தாந்த ஸாரங்களைத் தமிழிலும்வடமொழியிலும் தெளிவு விளம்பினர்.

இம்மஹானை சைவ சித்தாந்த ஸந்தான சார்யர்களில் ஒருவராகச் சைவ உலகம் போற்றி மகிழ்கிறது. இவரது ஆசிரமம் சிதம்பரம் இரயில் நிலையத்திற்குக் கிழக்கே கொற்றவன்குடியில் வெள்ளக்குளம் வடபுறத்தில் உள்ளது.

இவ்விதம் பெருமை வாய்ந்த ஸ்ரீஉமாபதி சிவத்தால் இயற்றப்பட்ட வடமொழி, தமிழ் நூல்கள் பல இருக்கின்றன. அவற்றில் இத்துதியும் ஒன்று.

அவரது சாதனைகள்

சிதம்பரம் மேலைக் கோபுரத்தைச் சேர்ந்த ஸ்ரீ கற்பகவிநாயகராலயத்தின் முன் புறத்திலுள்ள பிலத்து வாரத்தை யண்டியிருந்த நாகத்தை அகற்றி ஒரு வில்வ மரத்தை ஸ்தாபித்தார். அம்மரம் இன்றும் விளங்குகின்றது. தெற்குக் கோபுர வாயிலில் ஸ்ரீநடராஜரைத் தரிசிக்க வரும் இரு கழுகுகளின் நிலைய மண்டபத்தைப் புதுப்பித்தார். வடக்குக் கோபுரத்தில் துஷ்டர்களை அடக்க வேண்டி ஜடாதரர் என்னும் தேவதையை ஸ்தாபித்தார். பரமன் தன்னைப் பொருட்படுத்திக் கைச்சீட்டு அனுப்பிய காரணத்தால் பெற்றான் சாம்பான் என்ற புலையனுக்கும், சோழ மன்னனின் ஐயத்தைப் போக்க முளளிச்

செடிக்கும், குட உளுந்து முனிவருக்கும், ஒரு கருடனுக்கும் சிவஸாயுஜ்யம் பெறுமாறு அருளினர் எனக் கூறப்படுகிறது. ஒரு சமயம் ஆனித்திருமஞ்ஜன விழாவில் ஏறுமலிருந்த கொடியை நான்கு பாகரத்தால் தாஙக ஏறும்படி செய்தும், காச்மீரம் வரைசென்று ஸர்வஜ்ஞபீடமமர்ந்தும் எல்லோராலும் பாராட்டப் பெற்றார். நான்காம் வர்ணத்தாரை அனுக்கரஹிக்கும் வகையில் தனது பீடத்தில் சுவாமிநாத தேசிகர் என்பவரை நியமித்து ஆத்மார்த்த பூஜையையும் ஒப்படைத்து உலகிற்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் உணர்த்தினர்.

இவ்வாறு 76 ஆண்டுகள் பல சீடர்களுக்கு உபதேசித்தும் சைவதர்மத்தை விளக்கியும், சிவாலயங்களைப் புதுப்பித்தும் சீரிய வாழ்க்கை நடத்திக் கடைசியில் சித்திரை ஹஸ்த நக்ஷத்திரத்தில் ஸ்ரீநடராஜப் பெருமானின் ஜோதியில் கலந்தார் எனவும் கூறப்படுகிறது. □

"மறையனூர் மழுவொன்றேந்தி மணிநிலா எறிக்குஞ்சென்னி
இறைவனூர் எம்பிரானூர் ஏத்துவார் இடர்கள் தீர்ப்பார்
சிறைகொள் நிர்த்தில்லை
தன்னுள் திகழ்ந்த சிற்றம்பலத்தே
அறைகழலார்க்க நின்று
அனலெரி யாடுமாறே"

"அல்லல் என்செயும் அருவினை என்செய்யும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான்
என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனூர்க்
கெல்லை யில்லதோ ரடிமை பூண்டேனுக்கே"

–திருநாவுக்கரசர்

பெரிய திருத்தாண்டகத்தில் சித்தாந்த விளக்கம்

தருமையாதீனப்புலவர், செஞ்சொற்கொண்டல்
திருமுறை உரைமணி,

டாக்டர் சொ. சிங்காரவேலன்

எம். ஏ., பி. எச். டி.,
தமிழ்ப்பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை.

திருநாவுக்கரசர் அருளிய தில்லைத் திருப் பதிகங்களில் திருத்தாண்டகங்கள் இரண்டு பதிகங்கள்; ஒன்று பெரிய திருத்தாண்டகம்; மற்றது 'புக்க திருத்தாண்டகம்; 'மங்குல் மதிதவழும்', 'அரியானை அந்தணர் தம் சிந்தையானை' என்றும் தொடங் கும் திருப்பதிகங்கள் அவை இவற்றுள் பெரிய திருத்தாண்டகத்தில், காணப்பெறும் சித்தாந்த விளக்கத்தை மட்டும் இக்கட்டுரை ஆராய்கிறது.

'பெரிய திருத்தாண்டகம்' என்றது ஏன்?

முதற்கண் இத்திருத்தாண்டகத்திற்கு பெரிய திருத்தாண்டகம் என்ற பெயர் அமைந்ததற்கான காரணத்தை நோக்குதல் வேண்டும். பதிப்புகளில் இவ்வாறு இதற்குப் பெயர் அமைக்கப்பட்டுள்ளது. திருத்தாண்டங்களுக்குப் பெயர் அமைப் பதில் பின்பற்றப்பட்டுள்ள முறை ஒன்றை முதற்கண் கூறவேண்டும்.

பெயர் சூட்டும் முறைகள்:

பதிகங்களில் உள்ள பாட்டுகளில் அமைந்த ஈற்றடியைக் கொண்டு அதன்கண் திகழும் சொல்லைக் கொண்டு பெயர் சூட்டும் முறை ஒன்று.

''புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே' என்ற ஈற்றடியைக் கொண்ட பாடல்களைக் கொண்ட பதிகம் ஆதலின்

அதனைப் 'புக்க திருத் தாண்டகம்' என்றனர்.[2]

''ஏழையேன் நான் பண்டு இகழ்ந் தவாறே'' என்ற ஈற்றடியைக் கொண்ட பாடல்களைக் கொண்ட பதிகம், 'ஏழைத் திருத்தாண்டகம்'[3] எனப்பட்டது.
எல்லாப் பாட்டுகளிலும் இறைவனது அடையாளங்கள் எடுத்துக்கூறிப் பாடப் பெற்ற பாடல்களைக் கொண்ட பதிகம் 'அடையாளத் திருத்தாண்டகம்'[4] எனப் பட்டது.
''போற்றி'' ''போற்றி'' என்று பன் முறையாக அருளப்பட்ட பாடல்களைக் கொண்ட பதிகம், 'போற்றித் திருத் தாண்டகம்'[5] எனப்பெயர் பெற்றது.

எல்லாப் பாடல்களிலும் இறைவன் திருவடிகளையே சிறப்பித்துக் கூறிய பாடல் களைக் கொண்ட பதிகம். 'திருவடித்திருத் தாண்டகம்'[6] எனப்பெயர் பெற்றது. காக்கப்படுவதாகிய இடத்தைக் குறிக்கக் காப்பு என்ற சொல்லைப் பயன் படுத்தி, இவை ' இறைவனுடைய காப்புகள்' காப்புகள் (இடங்கள்) என்றே எல்லாப் பாடல்களும் முடியும் அமைப்பினை உடைய பதிகம், ''காப்புத் திருத்தாண்டகம் என்று வகுக்கப்பட்டுள்ளது.[7]

இறைவன் உலகமாய் நின்ற நிலை யினை வகுத்துக் கூறும் பாடல்களைக் கொண்ட திருத்தாண்டகம் 'நின்ற திருத் தாண்டகம் என்று குறிக்கப்பட்டது. ''அடிகள் நின்றவாறே என்ற தொடரும் பாடல் தோறும் பயின்று வருகின்றமை காணத் தக்கது.

இம்முறையே இங்கும்:

இவ்வனைத்தையும் நோக்குங் கால், 'பெரிய திருத்தாண்டகம்' என்பதும் இப்பதிகம் சொல் நோக்கும் பொருள் நோக்கும் தழுவியதாகவே அமைந்திருத்தல் வேண்டும் என்று கருதாலாம். இறை வனது பெருநிலையைப் பேசு பவையாகவே இப்பதிகப் பாடல் கள் எல்லாம் திகழ்தலே இப் பெயருக்குரிய காரணம் என்று முடிவு செய்யலாம். ஏனைய பதிகங் களுக் குச்சூட்டிய பெயர்களைப் போலவே இப்பதிகத்திற்கும் அமைந்திருக்கவேண்டும் என்று கருதுவது பிழை யன்று.

''பெரிய திருத்தாண்டகம்'' என்றது மேற்கூறிய அளவிற் குறை யாத அடிகளே பெற்ற தாண்டகம் என்றவாறு. அதனைக் குறைந்ததையும் சிலர் தாண்டகம் என்று வழங்குதல் பற்றி இவ்வாறு கூறப் பட்டது. இப்பெயரினை இத்திருமுறை முழுவதற்கும் உரியதாகக் கொள்க என்று சித்தாந்தக் கலைமணி திரு. சி. அருணை வடிவேலு முதலியார் கருது கின்றார்.[9]

இப்பதிகம் கோயில் என்ற தில்லை யைப்பற்றி யாததாலின் முன்னர் வைக்கப் பட்டுள்ளது. அவ்வமைப்பு பற்றி இந்தப் பெயர் இத்தொகுப்பு முழுவதற்கும் ஆகும். (திருமுறை – திருத்தாண்டகங்கள்) பொருந் துவது போல் தோன்று கின்றதே யன்றி பதிகங் களுக்குப் பெயர் சூட்டும் முறைக்கு ஏற்றதாகத் தோன்றவில்லை.

இருபத்தேழு எழுத்து முதலாகப் பெற்று வரும் அடிகளாலாகிய செய்யுட்கள் தாண்டகம் எனப்படும். இருபத்தேழு எழுத்துக்குக் குறைந்து வரும் அடிகளாகிய செய்யுட்கள் ''சந்தம்'' எனப்படும். யாப் பருங்கல விருத்தியுள் வரும் இக் கருத்தை ஒட்டியே சித்தாந்தக் கலைமணி அவர்களின் விளக்கம் அமை கிறது.[10]

பதிக ஈற்றடிகளே சான்றுகள்:

இத்தொகுப்பு முழுமைக்கும் இப் பெரிய திருத்தாண்டகம் என்ற பெயர மைப்பு பொருந்தா மையும், இத்தாண்டகப் பதிகம் ஒன்றற்கே பெரிதும் பொருந்து கின்றமை யும், இப்பதிகத்துப் பாடல் களின் ஈற்றடிகளைக் கூர்ந்து நோக்கும் போது புலனாகிறது.

கீழ்வரும் ஈற்றடித் தொடர் களில் இறைவனின் பெருமை விளக்கும் தொடர் கள் அனைத்தினுள்ளும் இருத்தலைக்காண்க.

''பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானே'' (1)
''பெருமானைப் பெரும்பற்றப் புலியூரானே (3)

''பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூரானே (4)
''பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானே'' (5)
''பெரும்பொருளைப் பெரும்பற்றப் புலியூரானே'' (6)
''பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூரானே'' (7)
''என்னில் பேரானைப் பெரும்பற்றப் புலியூரானே'' (8)
''பேரூராளியைப் பெரும்பற்றப் புலியூரானே'' (10)

இரண்டு பாடல்கள் நீங் கலாகப் பிற அனைத்திலும் இறைவ னின் 'பெருமை' (அளவின்மை, தலைமை) பேசப்பட்டுள் ளன. அவற் றிலும் 'பெரும் பற்று' என்ற தொடர் பெருமை இயல்பு கூறு வதாகவே அமைந்துள்ளது.

(1) பெரிய கோயிலாக விளங்கும் 'தில்லை' பற்றிய திருத் தாண்டகம் ஆதலாலும் (2) பெரும்பொருளாக ஒளி யாக துணையாக உள்ள இறைவனது அளவின்மைப் பண்பைப் பாடல் தோறும் உணர்த்தும் திருத்தாண்டகம், ஆதலாலும், (3) காய்-காய் மா மா காய் காய் மா மா என்ற யாப்பளவிற் சிறிதும் குறையாமல் பெரிய அளவிலேயே இதன் பாடல்கள் பலவும் அமைந்துள்ளன ஆதலாலும், (4) பெரும்பற்றுக (இடம்) உள்ள புலியூர் பற்றிய பாடல்களைக் கொண்ட பதிகம் ஆதலாலும் 'பெரிய திருத் தாண்டகம்' என்பது இவ்வொரு பதிகத்தையே குறித் தது என்று கொள்ளலாம்.

பெரிய திருத்தாண்டம் பதி இயல்பு கூறுவது:

''உணருரு அசத்தெனின் உணரா தின்மையின் இருதிற னல்லது சிவசத் தாமென இரண்டு வகையின் இசைக்கு மன்னுலகே''.

என்பது மெய்கண்டார் திருவாக்கு.[12] முதல் சூத்திரத்தில் ''உண்டு'' என்று கூறப்பட்ட பதிக்குரிய இலக்கணத்தை இவ்வாறும் சூத்திரத்து மெய்கண்டார் தெளிவுறுத்து கின்றார். பதிப்பொருள் சித்து சத்தாய் நிற்கும் சிறப்பியல்பு இச் சூத்திரத் துக் கூறப்பட்டமை காணலாம். ''முதல்வன் பாசஞான பசு ஞானங்களால் அறியப்படாதவன் பதிஞானம் ஒன்றினால் அறியப்படுபவன் என்பது இச்சூத்திரத்துக் கருத்து. (1) உயிர் அறிவினாலே அறியப் பட்ட எல்லாம் அழியும் என்பதும் (2) அப்பிரமேயாக அறியப்பட்டவனே அரன் என்பதும் சூர்ணிகை விளக்கம்.

இறைவனுக்குக் கூறப்படும் சிறப் பியல்புக்குணங்கள் எட்டு; அது பற்றியே திருவள்ளுவரும் **''எண் குணத்தான்''** என்று முதல்வனைக் குறித்தனர். 13. தன்வயத் தனுதல், தூய உடம்பினனுதல்; இயற்கை யுணர்வு, முற்றும் உணர்வு, இயல் பாகவே பாசங்களின் நீங்குதல்; பேரருள், முடிவிலா ஆற்றல், வரம்பில் இன்பம் என்பது அவ்வெண் குணங் களாம்.

'சத்து' 'சித்து' 'ஆனந்தம்' என்ற **மூன்றுள் எண்வகைக் குணங்களையும்** அடக்கி விடலாம். 'ஆனந்தம்' சித்துப் பொருட்கே உளது. ஆதலால் எல்லா குணங்களும் 'சத்து' 'சித்து' என்ற இரண்டில் அடங்கி விடும். எல்லாக் **காலத்திலும் ஒரேதன்மையாய் இருக்கும்** சத்துக்கே தன்வயமாம் தன்மை கூடும். **'தன்யத்தனுதல்' 'சந்தில்' அடங்கும்** தூய உடம்பே 'சித்து' எனப்படும். மீதியுள்ள ஆறு குணங்களும் இந்தச் 'சித்தின் வகைகளே என்று கூறலாம்

இறைவனின் பொது இயல்பு 'ஒன் றும்' 'வேறாய்' 'உடனாய்' இந்தத்தல்.

'சித்துச் சத்தாய்' நிற்றல் சிறப்பியல்பு. இவ்விரு வகை இயல்புகளையும் பெரும் பான்மையும் அப்பரடிகளாரின் ஆறும் திருமுறை முழுவதும் காணலாம், குறிப்பாக முதற் கண் இருக்கும் இப்பெரிய திருத்தாண்டகத் தில் மட்டுமே தெளிவாக உணரலாம்.

முதற்பாடலின் உண்மை:

இத்தாண்டகத்தின் முதற் பாட்டில் வரும் 'அரியானை' என்பதனுல் அடிகளார் உணர்த்துவது, இறைவன் பாசஞான பசு ஞானங்களால் அறியப்படாதவன் என்பதாகும் 'புறப்பொருளை அறியும் கருவியறிவினுலும், தன்னையறியும் உயிரறிவினுலும் அறிய வாராதவன் என்பதே அரியான் என்பதனுல் விளக்கப்பட்டதென்பர் சித்தாந்தக் கலைமணி. [14]

'அருமை என்பது இவ்விடத்து ஒருவற்குலும் அறியப்படாதவன் என்று இன்மைப் பொருளை உணர்த்துவது அன்று. சத்துப் பொருளாய் உள்ளவன் இறைவன் என்பது இதனுல் குறிக்கப் படுதல் காணலாம். அரியனுய் நிற்கும் முதல்வன் அரியனுய் நிற்கும் முறையை எடுத்து உணர்த்தவே "அந்தணர் தம் சிந்தையான்" என்று அடுத்து அருளினர். இறைவனை அணையுந்தோறும் அவ்வின்பத்தில் திளைத்தலேயன்றி அவனை முழுவதும் அகப்படுத்து உணரலாகாமை யார்க்கும் தெரியாத தத்துவன் என்பதால் தெளிவுறுத்தப்படுகிறது. அப்பெரும் பொருள் 'தானே விளங்கும் ஒளி' என்பது 'திகழ் ஒளி' என்பதனுல் விளங்கும்; 'சுயம் பிரகாசம்' என்பது வடலூர் வழக்கு. 'நுண்மையும்' உடையான் அளவின்மை (பெருமை) யும் உடையான் இறைவன் என்பதையே 'அணுவை' பெரியானை' என்பன உணர்த்துகின்றன.

இரண்டாம் பாடல் பொருள்:

அரியவனும், அந்தணர்தம் சிந்தையவனும் ஆகிய அம் முதல்வன் கங்கை வாரும் சடையவனுக உள்ளான் (கருணைப் பெருக்குச் சுட்டப்பட்டது; வேகம் கெடுத்தாளும் வேந்தன் என்பதனை விளக்கிற்று எனலுமாம்.) வலஞ்சுழி, ஆரூர் ஆகிய திருத்தலங்களில் திருவுருவத் திருமேனி கொண்டு எளிமைப் பண்பும் உடையவன் அவன். பலராகக் கூறப்படும் வானவர்கள் உயிர்களே ஆவர்; அவர்களால் வணங்கி ஏத்தப்பெற்ற வான் பொருள் அவன், அற்றார்க்கும் வருந்தியார்க்கும் அருளும் அருளாளன் அம்முதல்வன் என்பது இரண்டாம் பாட்டுக் கருத்துரை.

மூன்றும் பாடல் ஆடற் சிறப்பு

மூன்றும் பாட்டு இறைவன் புரியும் ஆடற்சிறப்பை உணர்த்துகின்றது. ஐந்தொழில் புரியும் ஆனந்தக் கூத்தனை அடிகளார், தம் கண்ணுரக் கண்டு இன்புற்றவர்; என்று வந்தாய் என்னும் எம் பெருமான் திருக்குறிப்பே என்று குறிப்புணர்ந்த பெருந்தகையார்: [15] அக்கூத்தனுபவத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றார். நான்காம் திருமுறையில், "குனித்த புருவமும்" "முடிகொண்ட மத்தமும்" என ற இரண்டு பாட்டுகளில் திருக்கூத்து அழகை எழுதிக் காட்டியவர். [16] இத்தாண்டகமும், ஆடலழகை அற்புதமாக ஓவியமாக்கு கின்றது.

நான்காம் பாடலில் 'விசுவரூபம்' விளக்கப்பட்டுள்ளது. கடல், மலை, விண், மண் விண்மீன்கள் எட்டுத்திசைகள் சூரிய சந்திரர்கள் ஆகிய அனைத்துமாய் இறைவன் என்ற நிலையினைக் காண்கிறோம். அத்தகைய பதி அருந்தவம் உடைய முனிவர்களுக்குத் தந்தையாகவும் அமர்களுக்குத் தலைவனுகவும் அமுதத்தை வழங்கிய வள்ளலாகவும் இருக்கின்றன் என்ற செய்தியும் இப்பாட்டின் முதற்பகுதி யாக உள்ளது. சிவபிரானின் அட்ட மூர்த்தி நிலையில ஒன்றுகவே இதனைக் கருதலாம்.

"இரவியும் மதியும் விண்ணும் இருநிலம்
புனலும் காற்றும் ..... ஒளி
உருவமானுய்" [17]

''நீருமாய்த் தீயுமாகி நிலமுமாய் விசும்பு
மாகி ஒருமைக் கதிர்களாகி'' [18]

''பாராஎன மதியாஎனப் பகலாஞஎனப்
பல்லுயிராய் நெடு வெளியாய்ப்
பரந்துநின்ற நீராஎனக் காற்றுஎனத்
ருயாஞஎன'' [19]

''பாரிலங்குபுனல்அனல் கால் பரமாகாசம்
பரிதிமதி (சுருதியுமாய்)
பரந்தார் போலும்'' [20]

எனவரும் அடிகளாரின் பிற பாடற்பகுதி களும் இவ்விடத்து ஒப்பிட்டு நோக்கத் தக்கன.

''ஆகாச மாமுடல் அங்கார் முயலகன்,
ஏகாசமாந் திசை எட்டும்
திருக்கைகள், மோகாய முக்கண்கள்
மூன்றெரளி தாஞக மாகாய முக்கண்
நடஞ்செய்கின்ருனன்றே''[21]

''எங்கும் திருமேனி எங்கும் சிவசக்தி,
எங்கும் சிதம்பரம் எங்கும்
திருநட்டம், எங்கும் சிவமாய்
இருத்தலால் எங்கெங்கும்,
தங்கும் சிவனருள் தன் விளையாட்டதே ''

எனவரும் திருமந்திரப் பாடல்களில் இத்தகு நிலையினையே காணலாம்.

ஐந்தாம் பாடல் – அருந்துணை மாண்பு:

ஐந்தாம் பாடல் உலகிற்குத் துணையா னவன் பரம்பொருளே என்று அறிவுறுத்தும் திறம் உடையது. அமணர் இழைத்த தீங்குகள் பலவற்றினின்றும் இறைவனே துணையாக நின்று காத்தமையை அடிகளார் அனுபவத்தில் கண்டருளினர். ஆதலின் அனுபவ விளக்கமாக இப்பாடல் உள்ளது என்று கூறலாம்.

கிடைத்தற்கரிய ஒப்பற்ற துணையாக உள்ளவன் இறைவன் ஆதலின் ''அருந்துணை'' என்றருளினர். அடியார் களது அல்ல தீர்க்கும் அமிழ்தமாக அரு மருந்தாக உள்ளவன் ஆதலின் ''அல்லல் தீர்க்கும் அருமருந்து என்றார். உலகினுள் தோன்றி உடன் வரும் துணைவர்கள் சுற்றம், பிற பற்றுக்கள் அனைத் தையும் விட்டு, வான் புலன்கள் அகத்து அடக்கி மடவாரோடும் பொருந்து கின்ற அணைமேல் வரும் பயனைப் போக மாற் றுதல் வேண்டும். கடவுளர் பலருள் ஒரு வனுக நினையாது அவரை எல்லார்க்கும் தலைவனுக நினைத்தல் வேண்டும். அப் போது எல்லா வற்றிற்கும் யாண்டும் உடனுய் நின்று உதவுந்துணையாக வுள்ள பரம்பொருளைப் ''பெருந்துணை'' என்ற ருளினர் [22].

'பொது நீக்கித் தனை நினைத்தல்' என்பது, அழகிய தொடர், பரம்பொரு ளாகிய இறைவனின் முதன்மையும் தலை மையும் கருதி எண்ணுதல் இதனுல் விளக் கப் பட்டது. ''எல்லாப் பொருட்கும்-அவற் றின் தோற்றத்திற்கெல்லாம் தானே நிமி த்த காரணுய் முதற்கண் நின்றவன் சிவ பிரானே'' என்பது அடிகளார் கோட் பாடு.

''முனைத்தானை எல்லார்க்கும் முன்னை தோன்றி'' என்றருளுவர் பின்னும் [23]

''சிவபிரான் மூவருள் ஒருவன் ஆகான்'' என்பதும் அடிகளார் வற்புறுத்தும் கொள் கைகளுள் ஒன்று.

''வானவன் காண்; வானவர்க்கும்
மேலானுன் காண்
என்றருளும் பகுதி நினைக்கத் தக்கது.

24. ''வானவர்க்கும் மேலான்காண்'' என்ற தொடர் ஆழம் உடையது. தேவருள் ஒருவன் போல நின்று வேண்டுவார் வேண்டுவன வற்றை அருளுபவன் என்ற கருத்தை இதனுல் உணர்த் தினர். சிவ பிரான் தேவருள் ஒருவனுய் நின்று அவர் கட்கும் மக்கட் முதலிய பிற உயிர்கட்கும் அருளுதல் பற்றி அவனைத்தேவருள் ஒருவ னுகவே எண்ணுவது மயக்க உணர்வு.

''தேவருள் ஒருவன் என்பர்''
திருவுருச் சிவனைத் தேவர்
மூவராய் நின்ற தோரார்!
முதலுருப் பாதி மாதர்

ஆவதும் உணரார்: ஆதி
அரியற்கரிய வொண்ணு
மேவரு நிலேயும் ஓரார்
அவனுரு விளேவும் ஓரார்''

என்ற சிவஞான சித்தியார், அப்பரடிகளாரின் கோட்பாட் டையே விளக்குவதாக அமைகிறது. 25.

''பழிப்பரிய திருமாலும் அயனும் காணப் பரிதியே சுருதி முடிக்கணியாய் வாய்த்த வழித்துணேயாம் மழபாடி வயிரத் தூணே என்றென்றே நானரற்றி நைகின் றேனே;''

''துணேயாய் என்னெஞ்சந் துறப்பிப்பாய் நீ''

''சொற்றுணே மாலே கொண்டு தொழு தெழு வார்கட் கெல்லாம் நற்றுணே யாவர் போலும் நாகஞ்சு வரனுரே''

''தோன்றுத் துணேயாய் இருந் தனன் தன் அடியோங்களுக்கே'' என்றெல்லாம் வரும் அடிகளார் திருப்பாடற் பகுதிகள் இங்கு **நினேத்தற்குரியவை.**[26]**தமக்குத்துணே என்று** அடிகளார் இறைவனேயே அறிந்து பற்றிக் கொண்டவர் உலகத் துத்துணே என்று பற்றிக் கொள்வன எல்லாம் ஓர் அளவில் நின்று விடும் இயல்பின; 'பரம்பொருளே மெய்த்துணே' என்ற உண்மை உலக வாழ்**வில் சிக்கிக் கிடக்கும் மக்களுக்கு மெய்ஞ் ஞானத்தால்** அன்றி வாராது; மெய்ஞ் **ஞானம் ஒன்றே விபரீத ஞானம்' என்ற** மயக்க உணர்வைத் தவிர்த் திடும்; இந்த மெய்ம்மை அடி களார் திருவாக்கில் பளிங்கு மாலையி னூடே நூலிழை போன்று உள்ளீடாக நிற்கின்றது எனலாம்.

ஆரும் பாடல் அமைதி:

அம்மையப்பனுக விளங்கும் சிவ பிரான் வெண்ணீறு சண்ணித்த திருமேனியான்; கனவயிரக் குன்றனேய திருக் காட்சி உடை யான், கொன்றை மாலே சூடிய குழகன் நான்மறையும் ஆறங்கமுமாக உலகிற்கு நெறிகாட்டும் நின்மலன். திருவாரூர் சுடர்க் கொழுந்து, அசையாத தெய்வ விளக்கொளிபோல் வான்மிக்க பெரும் பொருளாய் உள்ள பிரான், அவனேப் பேசாத நாள்எல்லாம் பிறவா நாள் என்கின்றது ஆரும் பாடல். இறைவன் எழுந்தருளியுள்ள இடங்களேயும் அருட்செயல்களேயும்அங்கங்கு நினேவு கூர்வது அடிகளார் இயல்பு. இவ்வாறே தில்லேயில் திருவாரூர்ப் பிரானே எண்ணி உருகுகின்றார்; நடராசர்; தியாகராசர், இருவரும் அரச நிலேயில் உள்ள தெய்வ மூர்த் தங்கள் என்பது இங்கு நினேக்கத் தக்கது.

ஏழாம் பாடல் பொருள் நோக்கு:

இனி ஏழாவது திருப்பாடலில், இறைவன் இசையாக பண்ணாகத் திகழ் பவன், முப்புரம் எரி செய்த முதல்வன்; உலகிற்காக விடமுண்ட வித்தகன், துறவி யர் நெஞ்சில் பெரும்பயனுக உள்ள பிரான்; என்கிறார். துறவியரைக் கூறுங்கால் மடவார் கடைக்கண் பார்வையில் சிறிதும் அசையாத திருவுள்ளம் படைத் தவர்கள் என்றருள்கின்றார். 'காமம்' வெகுளி, மயக்கம் இவை மூன்றன் நாமமும், கெட என்பார் திருவள்ளுவர்; [27] முதலில் கூறப் பெறுவது 'காம நீக்கம்' அந்தக் காமஉணர்வை வெல்லுவதே துறவியர்க்கு அழகு என்று குறித்தார். புலன்களே வெல்லும் வீரமே துறவியாரின் ஆன்ம வீரம் என்ற கருத்து அடிகளாரின் திருப் பாட்டில் விளங்கு கின்றன.

எட்டாம் பாடல்-இறைவன் கருணே:

எட்டாம் திருப்பாடல் விளக்கும் உண்மைகள் பல; ஆனேயை உரித்துப் போர்த்துக்கொண்ட அண்ணல்; கச்சி ஏகம்பத்தில் வீற்றிருக்கும் கடவுள்; அடியவர் ஆரயினும் அன்பு ஒன்றே கருதி ஆட் கொள்ளும் பெருமான்; அமரர்களால் அறிய அரியவன் மண்ணுலகத்தவர், விண்ணுலகத்தவர் பணியுமாறு திருநடனம் பயிலுகின்ற பரஞ்சுடர்; எண்ணற்ற திருப் பெயர்கள் உடைய அருளாளன்; என்பவை அவை;

அன்பு ஒன்றே இறைவன் விரும்பும் தகுதி. உள்ளம் கலந்த அன்பு இருந்தால், வேறு எதனையும் இறைவன் நோக்க மாட்டான் இது இறைவனின் பெருங் கருணை யைக் காட்டுவதாகும்.

திருக்களிற்றுப்படியார் தரும் திரு வெண்பா ஒன்றில் அடிகளாரின் கருத்து வெளிப்பட்டிருப்பதைக் காணலாம்[28].

''நல்லசிவ தன்மயத்தால் நல்ல சிவ
யோகத்தால்
நல்ல சிவ ஞானத்தால் நானழியா–
வல்லதனால்
ஆரேனும் அன்புசெயின் அங்கே
தலைப்படுங்காண்
ஆரெனும் காணு அரன்''

அறுபத்து மூவர் அன்பின் திறம கருதினுல் அடிகளாரின் கருத்து உறுதிப்படுவதைக் காணலாம்.

''ஆரொருவர் உள்குவார் உள்ளத் துள்ள
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும்
தோன்றும்''

என்று அடிகளார் பிறிதொரு, திருத்தாண் டகத்தில் அருளுவது இங்கே ஒப்பிட்டுணரத் தக்கது.[29]

''எவரேனும் தாமாக; இலாடத்திட்ட
திருநீறும், சாதனமும் கண்டால்
உள்கி
கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றூப்பூர் நடுதறியைக் காணலாமே''''
என்பர் அடிகளார் பிறிதொரு திருப் பாடலில்'' 30.

''அங்கமெலாம் குறைந்தழகு தொழு
தோயராய்
ஆவுரித்து தின்றுழலும் புலையராயினும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும்
கடவுளாரே''

என்ற இடத்தும் அடிகளாரின் கொள்கை ஒளிவிடக்காணலாம்.[31]

ஒன்பதாம் பாடல்–ஒன்றும் நிலை உணர்தல்

முற்றுத இளம் பிறையைத் தலையில் சூடிக்கொண்டவன்' மூவுலகும் தானுய் விளங்கும் முதல்வன்; பகைமை கொண்டு சினந்து வந்த முப்புரத்தவரை அழிக்க வல்ல வல்லாளன்; விளங்குகின்ற பேரொளி வடிவினன்; மரகதமாக விளங் குபவன், தேனும் பாலும் போன்று இனிப் பவன்; குற்றுலம் என்ற திருத்தலத்துக்கு விரும்பி எழுந்தருளியிருக்கம் குழகன், திருக்கூத்து ஆடவல்ல பிரான்; கோல் ஞானம் பெற்ற பேராளன்; அவன் பெரும் பற்றப் புலியூரில் வீற்றிருக்கும் பெருமான்; அவன் புகழ் பேசாத நாள்கள் நாள்களே அல்ல என்பது ஒன்பதாம் பாடலில் உரைக்கப் பட்டுள்ளது.

மூவுலகும் தானுக விளங்குவேன் என்பது 'ஒன்றுய்' நிற்கும் இறைநிலையைச் சுட்டுகின்றது. தன்னியல்பில் ஒருவனுய் நிற்கின்ற இறைவன், உலகை நோக்கி நிற்கும் பொதுநிலையில் தானும் தன் சக்தியும் என இருநிறப்பட்டு நிற்பன்; அவ்வுலகத்தோடு கலப்பினுல் அவையே யாய் பொருட்டன்மையால் அவையாகாது தானேயாய், யாண்டும் அவற்றினேடு உடனுய், இயங்கி வருவதல்ல அவையும் தானுமாய் நிற்பன் என்பது சைவசித்தாந்த முடிபு. இங்ஙனம் ஒன்றும், வேறும் உடனும் என்னும் மூன்றற்கும் பொதுவாய் நிற்கும் நிலையே 'அத்துவித நிலை' எனப்படும், 'அத்துவித நிலை' மூன்றனுள் ஒன்றுதல் உலக இயக்கத்திற்கு முதலாவது ஆதலின் அதனையே நம் சமயச் சான்றோர் பலரும் பலவற்றிற்கும் விதத்து ஓதி மகிழ்வர். நின்ற திருத்தாண்டகம் முழுமையும் இவ் வொன்றும் நிலை பற்றியதே; அதனைச் சுருக்கமாக இப்பெரிய திருத்தாண்டகத்து ஓதுவதே '' மூவுலகும் தானுய முதல்வன்'' என்ற தொடர் எனலாம்.

இறைவன் தம் உள்ளத்தில் 'ஒளி' வடிவாக விளங்கங்கண்ட அருளனுபவம் உடையவர் அப்பரடிகள். ஆதலின் ''திக

மொளி'' என்றனர்; அம்மையுடன் எழுந் தருளியுள்ள அருள் வடிவம் கண்டு ''மரகதத்தை'' என்றனர்; (''வெள்ளி வெற்பின் மேல் மரகதக் கொடியுடன் வீற்றிருக்கும் தெள்ளு பேரொளிப் பவள வெற்பென'' – சேக்கிழார்) இறைவனை அனுபவிக்க இன்ப அனுபவத்தைப் புலப் படுத்துவன ''தேன்'' ''பால்'' என்ற சொற்கள், திருக்கூத்து அனுபவம் திருக் குற்றாலத்தும் அடிகளார்க்கு உண்டு என்று விளக்குவதே ''குற்றாலத்து வல்லானே'' என்ற தொடர்; ஞான வடிவாக விளங்கு பவன் இறைவனுவான் என்பதை ''ஞானம் பெற்றான்'' என்று பான்மை வழக்குப் பட ஓதினர்.

இவ்வாறு இத்திருப்பாடல் சொல் நோக்கும், பொருள் நோக்கும், மெய்ப் பொருள் நோக்கும் பொருந்தத்திகழ்கின்றது

பத்தாம் பாடல்–பரம்பொருளின் உதவிகள்

இனிப்பதிகத்தின் இறுதிப்பாடலாகிய பத்தாவது பாடல் தரும் பொருளமைப்பை நோக்குவோம்.

''கருநிறத்தினனுகிய திருமாலும்'' மணம் நாறும் தாமரை மலரில் வீற்றிருக் கும் பிரமனும் காணவண்ணம் ஒளிவடி வாய் நின்ற பெருமான்; அவ்விருவர்க்கும், முன்னே நிற்கும் முழுமுதற் பொருள் இறைவனும் சிவபெருமான் என்பதை ''தொல்லே'' என்ற அடைமொழி விளக் கிற்று. ''உயிர்கள் கட்டுள்ள நிலையில் அவற்றிற்குத் தோன்றுது நின்று மறைத் தலைச்செய்தல் பற்றியும், அவை பருவம் எய்திய நிலையில் வெளிப்பட்டு நின்று அருளுதலைச் செய்தல் பற்றியும் ''காணு வண்ணம் நின்ற ஒலி என்றும் சித்தைதனை மயக்கம் தீர்கும் ஏரொளி'' என்றும் கூறி யருளினர்'' என விளக்கம் தருகின்றனர் மகாவித்துவான் சி. அருணைவடிவேலு முதலியார் மறைத்து நின்றதும் வெளிப் பட்டு நின்றதும், அப்பெரும் பொருளே என்பது கருத்து. காணும் உதவி; காட்டும் உதவி'' என்ற இரு நன்மைகளையும் உயிர் களுக்கு இறைவன் செய்து ''அருளுவன்'' என்பது சைவசிந்தாந்த முடிவு. 32 ''சிந்த னைகளை மயக்கும், தீர்க்கும் என்பதன்வழி மயக்கம் தீர்ந்து தெளிவித்துக் காட்டுவோன் சிவ பிரானே என விளக் கினர். ''உயிர்கள் இறைவனைக் காணு தல் அவன் அருளால் அன்றி நிகழாது; ஆதலின் முத்திக் காலத்திலும் உயிர்களுக்கு முதல்வனது உதவி இன்றி யமையாதது; இறைவன் காட்டுவிக்காத போது உயிர்கள் தாமே இறைவனைக் காணும் வண்மை உடையன அல்ல'' என்ற சைவ சித்தாந்த முடிவு.

''காட்டு வித்தால் ஆரொருவர் காணு தாரே காண்பார் ஆர்கண் ணுதலாய் காட்டாக்காலே'' என்னும் அடிகளார் திருவாக்கில் இனிது விளங்கும். உயிர்களிடத்தில் நிகழும் இறைவனின் கைம்மாறு கருதாது பேரு தவியை இனிது விளக்குவதே, முற் குறித்த தொடர் எனலாம்.

''இருநிலனும், விசும்பும், விண் ணும், ஏழு உலகங்களும் கடந்த அண்டங்களுக்கு அப்பால் நின்ற பேரொளி'' என்பது இறைவனின் கடந்த நிலையை எடுத்து விளக்குவது.

''தொண்டர்களுக்குத் தூநெறியாய் நின்றுன் தன்னைச்
சூழ்நரகில் வீழாமே காப்பான் தன்னை.

அண்டத்துக் கப்பாலைக்கு அப்பாலானை

ஆதிரை நாள் ஆதரித்த அம்மான் தன்னை''

எனவரும் திருத் தலையாங்காட்டுத் திருத்தாண்டகத்திலும் இத்தகைய அப்பாற் பட்ட அளவில் ஆற்றலை அடிகளார் பாடி உருகியுள்ளனர்.

அடிகளார் திருக்கூத்து தரிசன அனுபவங்கள்:

தில்லையில் திருக்கூத்துத் தரிசனம் பெற்ற அடிகளார்க்கு வேறு தலங்களிலும் இறைவனின் ஆடல் காணும் பேறு வாய்த்துள்ளது. திருவாரூர், திருவாலங்காடு, காஞ்சி, குடந்தை, குற்றாலம், குறுக்கை, என்னும் தலங்களும் திருக்கூத்து கண்ட அனுபவத்தை அடிகளார் உளம் உருகிப் பாடுகின்றார்.

''கொக்கரை குழல் வீணை
கொடுகொட்டி
ஒக்க ஆடல் உகந்துளன் கூத்தராய்
அக்கினோ டரவார்ப்பர் ஆரூரரே''

''ஆடிய அசைவு தீர ஆயிரம் அடியும்.
வைத்த அடிகள் ஆரூரனூரே''

என்பது திருவாரூரர் பெற்ற அனுபவ வெளிப்பாடு

''ஆடினூர் காளி காண ஆலங்காட்டு
அடிகளாரே''

என்பது திருவாலங்காட்டுக் கூத்து விளக்கம்.

''ஏகம்ப மேவினுன்தன் நடைமுறை
ஆடல் காண
ஞாலம்தான் உய்ந்தவாறே''

என்பது காஞ்சியிலும் திருக்கூத்துக் காட்சி பெற்ற அனுபவ விளக்கம்,

குழுமலத்திலும் ஆடல் காட்சி அனுபவம் உண்டு என்பதற்கு பின்வரும் தொடர் சான்றாக அமைகின்றது;

குழுமலவன் நிருத்தம் பழம்படி யாடும்
கழல் '' குடந்தை கீழ்க்கோட்டத்து
ஆடும் பெருமானே அடிகளார், ''குடந்தை கீழ்க் கோட்டத்தெம் கூத்தனூரே'' என்று பல்காற் பரவிப் பணிகின்றார்.

திருக்குற்றாலத்துத் திருக்கூத்து தரிசன அனுபவம் அடிகளார்க்கு நீருந்தமையும் பின்வரும் திருப்பாடல் பகுதிகள் தெளிவாக்குகின்றன. ''குற்றாலத்தில் அமர்ந்து உறையும் குழகன் தன்னைக் கூத்தாட வல்லானே''

''குற்றாலத்தில் அமர்ந்துறையும்
கூத்தன் கண்டாய்''

''குற்றாலம் மேய கூத்தா''

குறுக்கையில் நடராஜப் பெருமான் திருக்கூத்துத்தரிசனம் வீதியில் தீர்த்தத்திருநாளின் (அட்டமி) முன் ஏழு நாட்கள் தந்த குழகன் என்பது அடிகளார் திருவாக்கினால் தெளிவாகின்றது.

''தீர்த்தமாம் அட்டமி முன்
சீருடை ஏழு நாளும்
கூத்தராய் வீதிபோந்தார்
குறுக்கை வீரட்டனாரே''

பேசாநாள் பிறவாநாள் என்ற உண்மை:

பிறவியின் பயன் இறைவன் நற்றாள் தொழுது நல்லருள் பெறுவதே ஆகும். இறைவன் தாள் தொழுதலே அன்றி அவன் நல்ல அருள் பற்றிப்பேசி மகிழ்தலும் வேண்டத்தக்கது என்பது அடிகளார் திரு உள்ளம். அவன் திருப் புகழ்பேசி மகிழ்தல் விழையத்தக்க பேறு ஆகும். அவன் புகழ் ஒன்றே ''பொருள் சேர்புகழ்'' என்பது திருவள்ளுவர் திரு வுள்ளக் கிடக்கை, வேறுவகையாக உலகில் நிலை ஒன்றே உளங்கொண்டு, யாக்கைக்கே இறை தேடிப் பொழுது போக்குதல் 'பாழுக்கு நீர் இரைத்தலுக்கு ஒப்பானது என்பது திருநாவுக்கரசர் வற்புறுத்தும் உண்மை. பிறந்தும் பயனற்ற நாட்களாக வாழ்நாளை வீணுக் குதல் அறிவுடமை யன்று அன்றே.?

''வீழ்நாள் படாமை நன்று ஆற்றல்'' என்பது திருவள்ளுவர் திருவாக்கில் காணப் பெறுவது. **''விழுப்புண்** படாது வீழ்ந்த நாட்களை ஒரு வீரன் வழுக்கிய நாட்களுள் ஒன்றாகவே வைத்து இகழ்வான்'' என்பதும் குறள் செய்திகளுள்

ஒன்று அவ்வாறே சிறந்தது சிவனடியவர்கள் பரம் பொருளின் மெய்ப் புகழைப் பற்றிப்பேசி மகிழா நாட்களைப் பிறந்துபயன் பெரு நாட்களாகவே கருதுவர் என்ற உண்மை, இத் திருபதிகத்தால் வற்புறுத்தப் பட்டது.

இறைவன் அருளாடற் குறிப்புகள் பிற:

திருநாவுக்கரசர் இறைவனின் திரு நடனம் குறித்துக்கூறிய குணச் செய்தி. கலை இப்பதிக ஆய்வுள், சுருங்கிக் காணல் பொருந்துவது.

இறைவன் ஆடுங்கால் அரவம் பூண்பன், அக்கு மாலை அணிந்து ஆடுவன், சுடலையில் ஆடும் அழகன் அவன், அந்தி, சந்தி வேளையில் ஆடும் பிரான் அவன், நள்ளிருளில் நட்டம் பயின்று ஆடலும் அப்பெருமானுக்குப் பொருத்துவதே, பகலில் ஆடும் பரமனுகவும் அவன் திருக்காட்சி வழங்குவன் உமையம்மை-அஞ்சொல்லாள் காண நின்று அழகன் ஆடுவன், உமையிள் ஊடலைத் தவிர்க்கவும், சாம வேதம் பாடிப் பாடிய பாணிக்கேற்ப ஆடினன் அண்ணல், உமை பாட அண்ணல் ஆடும் அற்புதக் காட்சியும் உண்டு, மங்கை பாட: 'பாதம் கொப்பளித்த மாதர் பண்ணுடன் பாடி ஆட உமையும் உடன் ஆட ஐயன் ஆடும் ஆண்டவ தாண்டவமும் காணதற்கரிய காட்சியாகும். இனி கங்கை காண கண்ணுதலான் ஆடிய காட்சியும் கருதத்தக்கது. கங்கையும் திங்களும் கூடிக்கபாலம் ஏந்தி, எரி ஏந்தி, சொக்கம் (சுத்த திருத்தம்) ஆடிய சுந்தரன் அவன். கை வீசி தோள் வீசி, கால் வீசி, சடை தாழ சுழல ஐயன் ஆடும் போது திருநீறு பூசிய திரு மேனியை உடையவனாய் இருப்பன். "பாண்டரங்கம்" என்ற கூத்து வகையை குளிர்ந்தாடிய குழகின் அவன் ஆடும் போது பாடிய பண்பும் உடைய பரம்பொருள் ஆகவும் அவன் திருக்காட்சி வழங்குவன். அவன் ஆடுங்கால், மண் துளாகுதலும் உண்டு. வானம் முகடு தோய நட்டமாகும் வள்ளல் அவன். முயலகன் மீது கால் ஊன்றி ஆடுவன்.

தேவர் கணம் தொழுதேத்த இத் திருக்கூத்து நிகழும்; வாத்தியங்கள் ஒலிக்க நிகழும் இத்திருக் கூத்து, திரிபுர அசுரரையும் தாரகனையும் அழித்த பிறகு அவ்வீரச் செயலின் விளைவாகப் பெரு மான் ஆடிய காட்சியும் உண்டு. "ஓடிய தாரகன் தன் உடலும் பிளந்தும் ஓழியாத கோபத்துடன் ஆடிய மாநடனத்து ஏம் அனலாடி." என்றும் "ஆயிரம் அசுரம் வாழும் அணிமதில் மூன்றும் வேறு , ஆயிரம் தோளும் மட்டித்து ஆடிய" அடிகள் என்றும் அடிகளார் இவ்வீரத்திருக்கூத்து இரண்டையும் விதந்து ஓதும் திறன் காணத் தக்கது.

முடிவுரை:

சித்தாந்த முப்பொருள்களில் பதிப் பொருள் பற்றியநுண்பொருள்கள் பல வற்றைப் பெரிய திருக் தாண்டகம் பொதிந்து நிற்றல் இது காணும் ஆராய்ந்த வற்றுல் இனிது புலனகும். ஏனைய இருபொருள் திறனும் முதற் பொருள் பற்றி மொழியுங்கால் உடன் விளக்கம் பெற்றமையும் காணலாம். □

"போற்றுமின் போற்றுமின் போற்றுமின்
கூற்றங் குமைக்க வருமுன் னமரங்காள்
ஏற்றுவந்தான் பொற்ரு ளிணை"–சிதம்பரச் செய்யுட்கோவை

திருச்சிற்றம்பல முடையாரும் திருவாசகமும்

இரத்தின சம்பந்தம் பிள்ளை

சிதம்பரம்.

அலகில் சோதியனுய் அம்பலத் தாடும் நடராசப் பெருமான் விளங்கும் தில்லேயம் பதியுள் இடம் பெற்றுள்ள சைவம் பரப்பும் மடங்களுள் தொன்மை வாய்ந்தது ஸ்ரீலஸ்ரீ பாதபூஜை அம்பலத்தாடும் சுவாமிகள் மடம் இது வடக்கு ரதவீதியின் வடபாலுள்ள மடத்துத் தெருவில் அமைத்துள்ளது. இம்மடத்து வரலாற்றோடு தொடர்புடைய மற்றொரு மடம் தில்லேயம்மன் கோவிலுக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ள திருப்பாற் கடல் மடமாகும்.

மணிவாசகப்பெருமான் திருப்பெருத் துறைப் பெருமானுல் ஆட்கொள்ளப்பட்ட பின் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு தில்லேயை அடைந்து நடராசப்பெருமானே அகங்குழைந்து தொழுதுபாடி இத்திருப்பாற் கடல்மடத்தின்கண் தங்கியிருக்கும் நாளில், ஒருநாள் பொன்னம்பல நாதனே ஒரு விருத்த வேதியராக வாதவூரரின் முன் தோன்றி, "உனது பாடல்கள் அனேத்தையும் தொகுத்துக் கூறுவாயாக" என உணர்த்த அவரும் அங்ஙனமே கூற அனேத்தையும் தனது திருக்கரத்தால் எழுதி "வாதவூரன் சொல்ல அழகிய சிற்றம்பலமுடையான் கைநாட்டு" எனக் குறித்து கைச்சாத்துமிட்டு எடுத்துச்சென்று தமது இருப்பிடத்தில் பஞ்சாட்சரப்படியின் மீது வைத்து மறைந் தருளினர். மறுநாள் அந்தணர்கள் சிற்றம் பலத்தின் திருக்கடைக்காப்பு நீக்கியபோது

பஞ்சாட்சரப்படியின் கண் இருந்த திரு வாசக ஏட்டினை எடுத்துப்பார்க்கவும் இறை-வனது கையெழுத்துடன் இருப்பதையறிந்து திகைப்புற்றனர். பின்னர் இறைவனுல் அறிவுறுத்தப்பட்டு திருப்பாற்கடல் மடம் சென்று வாதவூரடிகளை அம்பலத்தில் கண்ட காட்சியினைக்கூறி அங்கு போந்து ஏட்டினுட் பொருளை விளக்குமாறு வேண்டினர். அங்ஙனமே சென்று கூத்தப் பெருமானை வணங்கி ''இந்நூற்குப் பொருள் இந் நடராசப்பெருமானே'' என்று அனைவரும் காண சோதியிற் கலந்தருளினர். இது நிகழ்ந்தது ஆனி மாத மகநட்சத்திரம்கூடிய நன்னாளாகும். தமிழ் மறையாகிய திருவாசக ஏடுகளைத் தமது உரிமைப் பொருளாகப் பெறுவதில் மடாதிபதிகள் அந்தணர்கள் அடியார்கள் அரசன் முதலியோரிடையே சர்ச்சைகள் ஏற்பட்டன. அவ்வமயம் அனைவரும் கேட்குமாறு ஒரு அசரீரி, ''இவ்வாசகத்தை சிவகங்கையில் விட்டிடுக அது மிதந்து யார் பக்கம் வந்து சேரு கின்றதோ அவரே அதைப் பெறுவதற் குரியவர்'' என்று கூறியது. அதன்படியே அச்சுவடியை ஒரு திருநீற்றுப்பை, அக்க-மணி மாலையுடன் ஒரு தட்டிவிட்டு சிவ கங்கையில் விடுத்து, நாற்புறமும் புடை சூழ்ந்து நின்றனர். அதுசமயம் நடராசப் பெருமானே ஒரு சங்கமராக உருத்தாங்கி வந்து ஏனையோரிடம் நின்றிருந்தார். திரு வாசக ஏடு நீந்தி அவ்வடியார் பக்கம் வந்து சேர்ந்தது. பின்னர் தில்லை வாழ் அந்தணர் களும் பிறரும் ஆச்சரியமடையும்படி ''எமது கலாரூபமாகத் திகழும் இச்சங்கமரே இந் நூலுக் குரியவராய் அம்பலத்தாடுவார் என்னும் திருநாமம் பூண்டு வழிவழியாய் பூசித்து சைவத்தைப் பரப்பி வருவதுடன் எம்முடியில் யாம் ஏற்கும் அபிடேகாதி உபசாரங்களை அவரது திருவடிகளுக்கு அளிப்பீராக'' என மற்றோர் அசரீரி எழுந்தது. அச்சங்கமரால் நிறுவப்பெற்றதே இன்று வரை விளங்கிக் கொண்டிருக்கும் பாத பூஜை அம்பலத்தாடும் மடம். அது முதல் பாதுகாக்கப் பட்டுள்ள அத்-திருவாசகம் வைத்திருக்கும் பெட்டகத் திற்கும் நடராசப் பெருமானுக்கும் வழி-பாடும், மடாலயத்தலைவருக்குப் பாத பூஜை யும் முறைவழுவாது இடையூறின்றி நடை பெற்று வருகிறது. ஆதிகுருநாதராம் சங்க மரின் அற்புதங்களைக் கேள்வியுற்ற அரி-மர்த்தன பாண்டியன் மதுரையினின்றும் தில்லைக்குப் போந்து சுவாமிகளை உரிய-முறைப்படி வணங்கி மாணிக்கவாசகருக்கு அழகிய உற்சவமூர்த்தி யொன்றையும் அளித்து நித்திய பூசை, விழா முதலியன நடைபெற ஏற்பாடுகளைச் செய்தும், திருப் பெருந்துறையில் மாணிக்கவாசகரால் நிறுவப்பெற்ற ஆத்மநாத சுவாமி ஆலய நிர்வாகத்தையும் இம்மடாதிபதிகளிடம் ஒப்படைத்து சிறப்பித்தான். இம்மடாலயத் தின் முதல் தலைவர் தமது நிர்ணய தசை ஏற்பாடு முன் தமது சீடர்களில் ஒருவருக்கு தமது பாதுகையையும் ஆவுடை நாயகர் திரு வாசகப் பெட்டகத்தையும் அளித்து திட்ச மாசம்ஸ்காரம் செய்வித்து அப்பீடத்திற் குறிய அதிகாரத்தையும் கொடுத்து சிவ-யோக சமாதிகூட ஜீவைக்கியம் ஆனார். ஏழாம் பட்டத்து சுவாமிகள் மடத்திற்கு விரிவாக சுத்துக்கட்டு மண்டபம், பிரகாரம் தோட்டச்சுவர் முதலிய திருப்பணியைச் செய்து சிறப்பித்தார்கள். கர்நாடக யுத்தத் தின் போது முஸ்லீம் நவாபின் படை-யெடுப்பில் மடத்தின் பெரும்பகுதி சிதைக்-கப்பெற்று மதமாற்றல் அச்சுருத்தல் காரண மாக அப்போதய மடாதிபதிகள் உயிரினும் பெரிதாய்ப் போற்றிய பேழையையும் மாணிக்கவாசகரையும் புதுச்சேரிக்கு எடுத்-துச்சென்று சீடர்களின் ஆதரவால் திருமடம் அமைத்து அதுமுதல் மடாதிபதிகள் அவ்-விடமே தங்கி வழிபாடும், சமயப்பணியும் புரிந்து வருகின்றனர். பின்வந்த தட்சிணா-மூர்த்தி சுவாமிகள் காசியாத்திரைக்குச் செல்ல திருப்பெருந்துறை ஆலய நிர்வா-கத்தை திருவாடுதுறை ஆதீனகர்த்தரிடம் தாம் திரும்பும் வரை தற்காலிகமாக பார்த்-துக்கொள்ளும்படி ஒப்படைத்துச்சென்று திரும்புங்கால் பரிபூரணமடைந்துவிடவே,

அவருக்குப்பின் பட்டமேற்ற சுவாமிகள் சென்று கேட்டபோது ஆலயப் பொறுப்பை திரும்பக் கொடுக்க மறுத்துவிட்டார்கள்.

புதுவை அம்பலத்தாடுமையர் வீதியில் அமைந்துள்ள இம்மடத்தின் பிரதிநிதிகள் சிதம்பரத்திலுள்ள ஆதிமடத்தின் கண்ணுள்ள நடராஜமூர்த்திக்கும், குருமூர்த்தங்களுக்கும் நித்திய பூசை நடத்துவதுடன் நடராஜப்பெருமானுக்கு நடைபெறுவது போலவே ஆனி மக உற்சவமும், மார்கழித் திருவாதிரை உற்சவமும் நடத்தி வருகின்றனர்.

இங்கு உயிருள்ள குருந்தமரத்தடியில் மணிவாசகப் பெருமானுக்கு ஆண்டு தோறும் திருவிழா நடத்தி வருவதும் இம்மடத்தின் சிறப்பு அம்சமாகும். இம்மடத்தின் இன்றைய தலைவர் 32-ஆம் பட்டத்து ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் சைவமும் தமிழும் பரப்பி அடியார்களுக்கு லிங்கதாரணம் வீரசைவ தீட்சையும் செய்வித்து பாதபூசை யேற்று நற்றொண்டாற்றி வருகிறார்கள்.

தில்லையம் பதியில் நடராசப் பெருமானது வடக்கு சந்நிதிக்கு வடக்கில் அமைந்துள்ள திருப்பணி விநாயகர் ஆலயம் இம்மடாலயத்தின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வருகிறது. நடராஜர் கோவில் திருப்பணியைத் தொடங்குமுன் இரணிய வர்ம சக்கரவர்த்தி இவ்விநாயகரை ஸ்தாபித்து வழிபட்டதாக வரலாறு. இம்மூர்த்தி சிரசில் சிவலிங்கம் தரித்திருப்பதும், சிலைக்கு நேரே பின்புறச் சுவற்றில் சிவகாமசுந்தரி சமேத நடராஜரின் படிவம் அமைக்கப்பட்டிருப்பதும் எங்கும் காணப்படாத சிறப்பு அம்சமாகும். திருப்பணி முடியும் வரை நாம் இங்கு கோயில் கொண்டிருப்போம் என்ன நடராஜப் பெருமான் தில்லைவாழந்தணர்களுக்குக் கூறி தங்கியிருந்ததாக ஐதீகம். மேற்படி கோயிலையும் மடாலயத்தையும் ஸ்ரீ அம்பலத்தாடும் மடாலயத்தின் தற்போதைய 32-ஆம் பட்டத்து சன்னிதானம் சிறப்பாக நடத்திக் கொண்டு வருகிறார்கள். □

"நீரிற் குமிழி யிளமை நிறை செல்வம்
நிரிற் சுருட்டு நெடுந்திரைகள்– நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று"

–சிதம்பரச் செய்யுட்கோவை



பேரம்பலத்தில் உள்ள
நடராஜர் – செப்புத்திருமேனி



பேரம்பலத்தில் உள்ள
சிவகாமி – செப்புத்திருமேனி



பிச்சத்தேவர் – தில்லை செப்புத்திருமேனி



கல்யாணசுந்தரர் – தில்லை செப்புத் திருமேனி



திரிபுரசம்காரமூர்த்தி – தில்லை செப்புத் திருமேனி



சோமாஸ்கந்தர் உமாதேவி –
தில்லை செப்புத்திருமேனி



பைரவர் – தில்லை செப்புத்திருமேனி



அதிகாரநந்தி



கிருஷ்ணதேவராயர் – வடக்குக் கோபுரம்



தில்லைகற்சிற்பம்



திருஞானசம்பந்தர்
(தில்லை செப்புத்திருமேனி)



வீணைதரதட்சிணமூர்த்தி
(தில்லை செப்புத்திருமேனி)



மாணிக்கவாசகர் – தில்லை செப்புத் திருமேனி



இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் – கிழைக்கோபுரம்



காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியார் தமக்கை சுப்பம்மாள் — கீழைக்கோபுரம்



ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் —மேலைக்கோபுரம்



சூரியன் – கோபுரச்சிற்பம்



வியாக்கிரபாதர் – தில்லை கிழக்குக் கோபுரம்



பதஞ்சலிமுனிவர் – கோபுரச்சிற்பம்



பதஞ்சலிமுனிவர் – தில்லை செப்புத் திருமேனி



தில்லைகோபுரப்பகுதி



தில்லைசிற்பம்





கோயில்சிற்பங்கள்

திலலைச் சிவகாமி அம்மன் கோயில் முன் மண்டப மேல் விதானத்தின் தென்புறத்தில் உள்ள தல புராண ஓவியங்கள்











சிதம்பரம் சபாநாயகர் (ஸ்ரீ நடராஜர்) திருக்கோயில்
மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறப் பாடுபட்ட
அன்பர்களுக்குப் பாராட்டுதல்கள்

அன்னம் லாரி பார்வேடிங் ஏஜன்ஸீஸ்

புலியூர் சிமிண்ட் பாக்டரி P.O.

639 114

கரூர் வட்டம் □ திருச்சி மாவட்டம் □ தமிழ்நாடு

போன் : 923

பார்வேடிங் ஏஜன்ஸீஸ்

M/s. செட்டிநாடு சிமிண்ட் கார்பரேஷன்

லிமிடெட்–புலியூர்.

With best compliments from

south india structural corporation limited

603 ANNA SALAI □ MADRAS-600 001.

civil and structural engineering contractors

WORKSHOP: 1050
T.H. ROAD, MADRAS—600 019.

கோயில் நான்மணி மாலை

டாக்டர் சோ. ந. கந்தசாமி
எம். ஏ. எம்.லிட்., பிஎச்.டி.,
தமிழ் இலக்கியத் துணைத்தலைவர்

பேராசிரியர், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

கோயில் என்பது சைவர்களுக்குப் பூலோக கைலாசமாகப் போற்றப் பெறும் திருத்தில்லையே யாகும். மலாய் மொழி இலக்கியங்களில் சிதம்பரம் என்ற சொல் கோயில் (Temple) என்ற பொருளில் வழங்கப்பெறுதல் பற்றி, அம்மொழி வல்ல பேராசிரியர் முனைவர் ச. சிங்காரவேலு ஆராய்ந்து நிறுவியுள்ளார்.

தமிழில் வழங்கும் எண்ணற்ற பிரபந்த வகைகளில் நான்மணிமாலை என்பதும் ஒன்றாகும். நான்குவேறு மணிகளை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கிய மாலையினைப் போல, வெண்பா, கட்டளை, கலித்துறை, விருத்தம், ஆசிரியம் என்ற நான்குவகை யாப்புகளினால் தொடுக்கப்பெற்ற பாமாலையினை நான்மணி மாலை என்று பாட்டியல் நூல்கள் பகர்கின்றன. ஒவ்வொரு பாவகைக்கும் பத்துப் பாடலாக நால்வகை பாக்களுமாக நாற்பது பாடல்கள் இந்நூலில் பாடப்பெற்றுள்ளன. இவை அந்தாதியாக அமைந்தவை. பனுவலில் முதற் பாடலின் முதற் சொல்லும் இறுதிப்பாடலின் இறுதிச் சொல்லும் மண்டலித்து முடிதலின் 'மாலை' என்று பெயர் பெற்றது. இவ்வகைப் பிரபந்தத்திற்குப் பட்டினத்தார் பாடியுள்ள

கோயில் நான்மணிமாலைதான் முதல் இலக்கியமாகத் திகழ்கிறது. சொற்சுவை, பொருட்சுவை, பொலியவும், கற்பனை வளம் கொழிக்கவும், சிந்தனை நலம் சிறக்கவும் பக்தி உணர்ச்சி பெருகவும், ஞானம் தழைக்கவும் சீரிய நேரிய தீஞ்சொற் களினுல் கற்போர் உள்ளம் பொற்புறும்த பாங்கில் இப்பனுவலைப் பட்டினத்துப் பிள்ளை பாடியிருத்தல் பயின்று மகிழற் பாலது.

இந்நூலிற் பொதிந்துள்ள கற்பனை வளம், பிரபந்தக் கூறுகள், சந்தயாப்பு, சமயக்கருத்துக்கள், மெய்ப் பொருள் சிந்தனைகள் பற்றி ஒரு சிறிது காண்போம்.

கற்பனை வளம்

அருளாளர் ஆகிய பட்டினத்தார் பழுத்த தமிழப் பாவலர். கற்பனைவளம் பொருந்தக் கருத்துக்களை மனத்தில் நிறுத்தும் பாங்கில் பாடும் வல்லமை பொருந்தியவர். உலகில் அன்றுடம் சராசரி மனிதர்கள் நடத்தும் நடைமுறை வாழ்வினையும் உலக ஓட்டத்தினின்றும் பின்வாங்கித் திருவருள் நாட்டத்தில் திளைத்தலாகிய அருள் வாழ்வினையும் உறழ்ந்து காட்டி, மேம்பட்ட உயர் வாழ்வினை மக்களுக்கு உணர்த்துவதே பக்தி இலக்கியத்தின் பணியும் பயனும் ஆகும். உலகியல் நடைமுறைகளைப்பார்த்தறிந்து பட்டியலிட்டுக் கற்பனைச் சுவைபடவும், உவமை உருவகம் முதலிய அணிநலம் வாய்ப்பவும், பாடிக் காட்டும் இலக்கியத்திறம் பட்டினத்துப் பிள்ளையிடம் நிரம்பக் காணப்படுகிறது. ஓரிரு சான்றுகளைக் கோயில் நான்மணி மாலையிலிருந்து காண்போம்.

உடம்பினை மரக்கலம் என்று உருவகம் செய்கிறார். வரம்பற்ற வியாபகமாக விளங்கும் இறைவனின் திருத்தாளில் அடங்கிய வியாபகமாகத் திகழ வேண்டிய உயிரினைத் தன்கண் அடக்கிச் சிறை வைத்தலின் உடம்பினைச்சிறைக்கலம் என்றும் எண்ணினுர். இவ்வுடம்பு மாயா காரியம், காரியம் ஆகிய உடம்பு அழியும் தன்மையது. எனவே, 'மாயப்பெயர்படு காயச் சிறைக்கலம்' என்றார். இந்த மரக்கலத்தில் ஏற்றப் பட்டிருக்கும் சரக்கினையும் அடிகள் வரிசைப் படுத்திக் கூறுகின்றார். தீமையினை ஒதுக்கி நன்மையின்கண் மனிதனைச் செலுத்துவது அறிவு. அத்தகைய நல்லறிவு இன்மையினுல் விளையும் தீயொழுக்கமும், ஒன்றைப் பிரிதொன்றுக இட்டுக்கட்டிச் செல்லும் பொய்யும், கொடிய நோய்களின் தொகுதியும் முதலாகிய பல்வேறு சரக்குகளையும் உடம்பென்னும் மரக்கலம் சுமக்கிறது. இத்தக்கலம் செல்வதற்குரிய நீர் நிலை கேவலம் தடாகமோ, ஆறே அன்று, பெருங்கடல். வள்ளுவர் சொல்லிய பிறவியாகிய பெருங்கடல். பட்டினத்தார், உடம்பாகிய மரக்கலம் இடும்பை முதலியவற்றின் கொள்கலமாய்ப் பிறவிப் பெருங்கடலில் செல்வதாக அமைக்கிறார். அக்கலத்தினை இயக்குவோன் யார்? ' வினை எனும் தொல் மீகாமன் உய்ப்ப' என்றார். இருவினைக்கு ஈடாக அக்கப்பல் செல்லுகிறது. எனின், வினை சடப்பொருள். அதுதானே இயக்குவது சமணர்க்குச் சாலும். சைவர்க்கு அக்கருத்து ஒவ்வாது. வினைப் பயனை அறிந்து அதற்குரியவனிடம் சேர்ப்பித்தல் எல்லாம் அறியும் இறைவனின் தொழிலாதலின், வினை எனும் மீகாமன் என்ற தொடர் இறைவனைக் குறித்தது. இதனையே தொல் காப்பியர், 'பால்வரை தெய்வம்' என்றும், வள்ளுவர் 'வகுத்தான் வகுத்தவை' என்றும் சுட்டினர். ஆதலின், வினைப்போகம் ஊட்டுகின்ற இறைவனே மாலுமியாக இருந்து உடம்பாகிய கப்பலைப் பிறவிக் கடலில் ஓடச்செய்கிறான் என்பது புலனுகும்.

கடலுக்குப் பல துறைகள் உண்டு. துறைகளில் ஊர்கள் உண்டு. உயிர் புகும் ஒவ்வொரு கருவும் அத்தகைய துறைநகராக உருவகிக்கப்படுகிறது. கருவுற்று, உருவுற்ற உயிர், பயணம் செய்யும் கப்பலாகிய உடம்பினைக் கொடிய சுறுமீன்கள் கொத்துகின்றன. இந்தச் சுறவுகள் யாவை?

அவையே ஐம்பொறிகள் வழியாக உள்ளே நுழையும் திருடர்களாகிய ஆசைகள். புலன்கள் என்றும் இவற்றைக் கூறுவர். 'காமவான் சுறவின் வாய்ப்பட்டு என்பர் மாணிக்க வாசகர். எனவே, பயணம் செம்மையுறச் செல்வதற்கு முதல்தடை, புலன் வழிப் போதலாகிய சுறவுமீன்கள். கடலில் அலை பாய்வது இயற்கை. அதுபோல், உடற்கலம் பிறவிக் கடலில் செல்லுங்கால் துயர் என்னும் அலைகள் ஆர்த்தார்த்து அடிக்கின்றன. ஒருபுறம் சுறவுமீன்களாகிய ஆசைகள், மறுபுறம் துயர்களாகிய அலைகள் தொடர்ந்து மோதும் போது, போதாக் குறைக்குப் பாறை வேறு முட்டுகின்றது. இப்பாறைதான், 'குடும்பம் என்னும் நெடுங்கல்' என்று சுட்டப்பெற்றது. இவ்வளவு இடற்பாட்டிற்கும் இடையில் உடல் ஆகிய மரக்கலம் ஓட முடியாமல் அதன்மேல் கட்டியுள்ள கம்பு முரிந்து விடுகிறது. இந்தக் கம்பு என்பது தன்னை அடக்கி ஆளும் தன்மையாகிய நிறை என்னும் உயர் பண்பு. துன்பங்களும் புலன் ஆசைகளும் மனிதனைப் பிய்த்து எடுக்கும் பொழுது நிறை என்பது நிற்க முடியவில்லை, என்பதை இதன்வழி அடிகள் உணர்த்தினர். நிறையுடன் கூடிய அறிவு கம்புடன் பொருந்தியுள்ள பாய்; அறிவாகிய நெடும்பாயும் சிதறியது. துன்பமும் ஆசைகளும் மிகும்பொழுது அறிவு செயல் படாது என்பது இதனால் புலனாகும். இங்ஙனம் உடல் எனும் மரக்கலத்தில் ஊர்ந்து உயிர் பிறவிப் பெருங்கடலில் தத்தளித்துப் பயணம் செய்கிறது. மரக்கலம் சுவிழாமல் கரையிற் போய்ச் சேருதல் வேண்டும். உடம்பும் அழிவுறுது இறைவனின் திருவடியாகிய கரையினைக்கண்டு இன்பறுதல் வேண்டும். இது யாரால் முடிகிற செயல்? அவன் அருளினால்தான் இது நடைபெறுதல் வேண்டும். திருவருளாகிய கயிற்றினை வீசிக் கலத்தினைப் பிடித்து இழுத்துக் கரை ஏற்றுவது அம்பலவாணன் ஆகிய ஆன்ம நாயகனின் ஆருஞ்செயல் ஆகும். அங்ஙனம் கரை சேர்க்கும்படி இறைவனிடம் வேண்டுகிறார்.

''வையர வணிந்த தெய்வ நாயக!
தொல்லெயில் உடுத்த தில்லை காவல!
வம்பலர் தும்பை அம்பல வாண! நின்
அருள்எனும் நலத்தார் பூட்டித்
திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே!
(16–15–19)

கருத்துக்கு விருந்தாக அமையும் இத்தகைய கற்பனைகள் படைப்பாளரின பண்பட்ட உள்ளத்தினைத் தெள்ளத் தெளிவாகப் புலப்படுத்துவன. அடிகள் வணிகர் என்பதற்கு இவர் படைத்துள்ள மரக்கலம் தொடர்பாக நீண்ட உருவகமும் ஒரு சான்று. அடிகள் வழங்கும் மற்றொரு சுவைமிகு கற்பனையினைக் காண்போம்.

உலகியல் அனுபவங்கள் அனைத்தும் ஐம்புலன், பொறிகள் வழியாக மனம் என்னும் அந்தக்கரணத்தை அடைகின்றன. இவை ஆசையோடு பொருந்தினவாயின், மனத்தினை மாசுறுத்தும். அதனால், பொருளியல்பு புரியாது மயக்கம் விளையும். அத்தகு மனத்தினைப் பார்த்து, 'மாசுறு மனமே பேசு' என்று விளிக்கிறார். சேற்று நீரே சேற்றினைப் போக்குவதற்கு உறுதுணையாதல் போல், அழுக்குடைய புலனே அழுக்கினைப் போக்க உதவுதல் வேண்டும். இது பற்றியே. 'மனத்தினை அடக்க மனம் துணையாகும்' என்று பாடினர் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர். அழுக்கு வழியில் செல்வதால் விளையும் கசப்பான அனுபவங்கள் ஒருவன் வருந்தவும் திருந்தவும் வகை செய்தல் உண்டு. எனினும், நல் வழியிற் செல்வதால் விளையும் இனிய அனுபவங்கள் இயல்பாகவே ஒருவன் நெறி நிற்கத் துணை செய்வன. இருவகை அனுபவங்களும் வருவதற்கு உரிய வாயில்கள் இரண்டல்ல. ஒன்றே ஆகும். எனவே, கசப்பான அனுபவங்கள் அழிவுக்கும் அதன் காரணமாகப் பிறவிக்கும் ஏதுவாகின்றன. அழுக்கு வழிப்பட்ட புலன்கள் ஒழுக்க நெறியினின்றும் நழுவி வழுவிச் சென்று துன்புறுவதற்கு ஐந்து உவமைகளைப் பட்டினத்தார் அடுக்கிச் சொல்லுகிறார்.

தூண்டிலில் வைக்கப்பெற்ற இரை-யினை விழுங்கச் சென்று சுவையால் கெடும் மீனைப் போலவும்; விளக்கின் ஒளியினால் விரைந்து சென்று விழுந்திறக்கும் விட்-டிலைப் போலவும்; ஆசையாகிய பரிசத்தால் கெடும் யானை ஒப்பவும்; ஓசையினால் கெடும் அசுணமா ஒப்பவும் மலரின் மனத்-தினால் மாயும் வண்டினைப் போலவும் அழுக்குடைய புலன்வழிச் சென்று இழுக்கி ஒழுகுவோர் அழிவது உறுதி. மீன், விட்டில், யானை, அசுணம், வண்டு என்ற ஐந்தும் முறையே சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து புலன்களாலும் ஈர்க்கப்பட்டு இடருறுதல் போல், மனமும் ஐம்புலன்களினால் தொடக்குற்று அழிந்து விடுதல் கூடாது என்ற மேலான மெய்ப் பொருட் கருத்தினை இனிய, எளிய, எழிலிய உவமைகளின் வாயிலாகப் பட்டி-னத்துப்பிள்ளை பாடம் புகுட்டுதல் அறிந்து மகிழத் தக்கது (28-22-29). இதே பாடலில், சிலந்தி தான் விரிக்கும் வலை-யினால் அழிவினைத் தேடிக்கொள்ளுதல் போல், தானே தோற்றுவிக்கும் ஆசைச் சங்கிலியால் மனிதன் இடர்ப்பட்டு ஒழியக் கூடாது என்று உணர்த்துகினறார். கற்றாரின் மனம்போலக் குழைந்துருகுதலான், மாசறு மனத்தினைப் பெறலாம். மாசற்ற நிலையில், அற்புதக் கூத்தனின் அருளைப் பெறலாம் என்று நம்பிக்கை தருகிறார்.

தசாங்கம்:

அரசனுக்கு உரிய மலை, ஆறு, நாடு, ஊர், முரசு, ஊர்தியாகிய களிறு, புரவி, தார், பெயர், என்னும் பத்து அங்கங்-களையும் பத்து நேரிசை வெண்பாக்களினால் பாடப்பெறும் பிரபந்தம் தசாங்கப்பத்து எனப் பெயர் பெறும். இப்பெயர் வடசொல் லாக இருப்பினும், வடமொழியில் இத்-தகைய இலக்கியவகை இடம்பெறுமை குறிப் பிடத்தக்கது. வேந்தனுக்குரிய தசாங்கம் இதுவரை கிடைக்கவில்லை. எனினும் சர்வ அண்டங்களுக்கும் வேந்தனாகிய ஈசனை பற்றிய தசாங்கம் திருவாசகத்தில் முதல் முதலில் காணப்படுகிறது. தசாங்கப்பத்து என்ற பதிகத்தினைத்தவிர, கீர்த்தித் திரு அகவலிலும் (104–124) திருத்தசாங்கம் கூறப்பட்டுள்ளது. பட்டினத்தார் கூறும் தசாங்கப் பகுதியினை இங்கு காண்போம்.

"தாதவிழ் கொன்றைத் தாரும் ஏதமில்
வீர வெண்விடைக் கொடியும் போரில்
தழங்கும் தமருகப் பறையும் முழங்கொலித்
தெய்வக் கங்கை யாறும் பொய்தீர்
விரையாய் கலியெனும் ஆணையும் நிரை நிரை
ஆயிரம் வகுத்த மாயிரு மருப்பின்
வெண்ணிறச்செங்கண் வேழமும்பண்ணியல்
வைதிகப் புரவியும் வான நாடும்
மையறு கனக மேருமால் வரையும்
செல்வயல் தில்லை யாகிய தொல்பெரும் பதியுமென்று
ஒருபதி னாயிரம் திருநெடு நாமமும்'
உரிமையிற் பாடி" (4,9–20).

இங்குப் பதினொரு அங்கங்கள் கூறப்-பெற்றன. எனின், ஆயிரம் மருப்புகள் கொண்ட வெள்ளை யானை ஆகிய அயிரா-வணத்தையும், வேதமாகிய குதிரையினையும் ஊர்தி என்ற ஓர் அங்கத்தில் அடக்கிக் கொண்டால், பத்து அரச உறுப்புக்களே கூறப்பட்டன எனலாம். இலலையேல், ஏகாதசாங்கம் என்று புதுப்பெயர் சூட்டுதல் வேண்டும். நச்சினார்க்கினியர், 'முற்கூறி யவற்றேடேடநாடும் ஊரும் மலையும் பறையும் கொடியும் குடையும் முரசும் நடைநவில் புரவியும் களிறும் தேரும் தாரும் பிறவும் வருவன எல்லாம் கொள்க' என்று தொல் காப்பியப் புறத்திணையியல் உரையில் பன் னிரண்டின் மிக்க அங்கங்களைச் சுட்டுதல் அறியத்தக்கது.

மாணிக்கவாசகர் கூறிய தசாங்கத் திற்கும் பட்டினத்துப் பிள்ளை பாடியவற் றிற்கும் குறிப்பிடத்தக்க சில வேறுபாடுகள் உள்ளன. முன்னவர் பாண்டி நாட்டவ ராதலின் நாடும் ஊரும் முறையே தென்-பாண்டி, உத்தரகோசமங்கை என்று குறித்-தனர். பின்னவர் முறையே வான நாட்டி-

னேயும் தில்லைத் தொல்பதியையும் சுட்டினர். திருவாசகத்தில் ஆனந்தம் ஆருகவும், அருள் மலையாகவும் கூறப்பட்டன. கோயில் நான்மணிமாலையில் கங்கையாறும், மேருமால் வரையும் இடம் பெற்றன. முன் நூலில் சூலப்படையும் பின் நூலில் விரையாக்கலி என்னும் ஆணையும் சுட்டப்பெற்றன. விரையாக்கலி என்னும் தொடர் குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவில் பேசும் தசாங்கப்பகுதியில், 'ஆக்கி அசைத்தருளும் ஆணையும்' என்று கூறப்பெற்றது. இத் தொடர் கல்வெட்டுக்களிலும் அரசன் ஆணையினைக் குறிக்க வழங்கப் பெறுதல காணலாம்.

கி.பி. 8, 9-ஆம் நூற்றாண்டில் தோன்றிய திவாகர நிகண்டு சுட்டும் தசாங்கத்தின் இலக்கணத்தில் தேர் என்னும் உறுப்பு சுட்டப்பெற்றது. இவ்வுறுப்பினை மேற்சுட்டிய திருமுறை நூல்கள் வெளிப்படையாக விளம்பவில்லை. எனினும், முப்புறத் தகனத்திற்குப் புறப்பட்ட சிவபிரானைப்பற்றிப் பாடும் பரிபாடல் என்னும் சங்கப் பனுவல், 'வையத்தேர் ஊர்ந்து' என்று சுட்டுவதால்[5] பரந்த வையகத் தினையே இறைவன் தேராகக் கொண்டு இயக்கும் உண்மை புலனாகும்.

உலா

ஆற்றலும் அழகும் மிக்க தலைவன் வீதி உலா வருவதைக்கண்டு, பேதை முதலாகப் பேரிளம் பெண் ஈறாக உள்ள ஏழ் பருவ மங்கையரும் மனம் அழிந்து மையலுற்றுப் பரவுதல் உலா என்னும் பிரபந்தத்தின் உட்பொருளாகும். சேரமான் பெருமாள் நாயனார் பாடியுள்ள திருக்கைலாய ஞான உலா, முதல் உலாப்பனுவல் என்பதால், ஆதி உலா என்று அருணகிரி நாதரால் பாராட்டப்பெற்றது. பட்டினத்துப் பிள்ளையார் இருபாடல்களில் நடராசப்பெருமான் தேரில் ஏறி உலாவரும் பொழுது பேதையர் பெற்ற மனநிலையைப் பாடியுள்ளார். அப்பாடல்களின் பொருளைக்காண்போம்.

"செம்மேனி எம்மான் ஆகிய அம்பலவாணன் தேரில் உலா வருகிறார். இந்தப் பெண் நிற்கும் இடத்திற்குத் தேர் இன்னும் வரவில்லை. சேய்மையில் தான் உள்ளது. தூரத்தில் உள்ள தேரில் திகழும் பெருமானைப் பார்த்த மாத்திரமே காதற் பெருக்கினால் உள்ளமும் உடலும் உருகிக் கைவளை சரிகிறதே! என்ன பித்து!" என்று செவிலி வியப்பதாக ஒருபாடல் அமைந்துள்ளது *(17)*

யானை உருவில் வந்த அசுரனை அழித்த கஜாரியாகிய சிற்றம்பலத்தான் புரவி பூண்ட தேரில் பவனி வருகிறான். அவன் உலா வரும் வீதியில் பேதைப் பெண்கள் தன்னொப்பில்லா அத்தலைவனைப் பார்த்துப்பரவசத்தால் அவனைச் சந்திக்கச் செல்கின்றனர். ஈன்ற தாய்மார்கள், பித்தேறித் தேரினை நோக்கி ஓடும் அப்பெண்களைப் பிடித்து வைக்க முயல்கிறார்கள். ஆனால், அவர்களோ அப்பிடியின்றும் நழுவி ஓடச் செவிலித்தாயார்கள் பின்தொடர்ந்தோடிச் சென்று பிடித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள் எனின், அவர்கள் கையிலும் அகப்படாமல் அப்பேதைப்பெண்கள் விரைந்தோடிச் சென்று தேர்முன் நின்று கைகூப்பித் தலைவனைத் தொழுகிறார்கள் என்று மற்றொரு பாடல் தொடுக்கிறார். *(21)*

இவ்விரு பாடல்களிலும் உலாப்பிரபந்தத்தின் ஒரு கூறு பொருந்தியுள்ள திறம் புலனாகும். கண்ணிகள் பெருகிவரும் நேரிசைக் கலிவெண்பாவினால் உலாப் பிரபந்தம் பாடப்பெறுதல் வேண்டும் என்பது விதி. பட்டினத்தாரின் இருபாடல்களும் சிற்றுலாவாக இருத்தலின் நேரிசை வெண்பாக்களினால் பாடப் பெற்றன எனலாம்.

கலம்பகக்கூறு:

கலம்பகத்தில் புயம், அம்மானை, ஊசல், முதலிய 18 உறுப்புக்கள் இடம் பெறும்; நால்வகைப் பாக்களினாலும் பாவி

னங்களினூலும் பாடப்பெறும். சைவக்கலம்-பங்களில் பெரும்பாலும் பிச்சியார் என்ற உறுப்பு வருதல் உண்டு. இறைவனிடம் கொண்ட எல்லையில்லாத பேரன்பு பித்தாக மாறித் தன்னையே அவனிடம் ஒப்படைக்கும் தலைவி, பிச்சி, எனப் போற்றப் பெறுவள். திருநாவுக்கரசர்,

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்"
(6. 25-7)

என்று இயம்புதல் இங்கு எண்ணத்தக்கது. இம்மரபினை நன்குணர்ந்த பட்டினத்துப் பிள்ளையார்,

"நினையார் மெலியார் நிறையழியார் வாளாப்
புனைவார்க்குக் கொன்றை பொதுவோ— அனைவீரும்
மெச்சியே காண வியன்தில்லை யான்அருள் என்
பிச்சியே நாளைப்பெறும்" (29)

என்று செவிலி கூற்றுகப் பாடுதல் நோக்கத் தக்கது. இறைவனை எண்ணுதவர்க்கும், உருகி மெலியாதவர்க்கும், நிறையழியாத வர்க்கும், உண்மையாகஅன்றி ஒப்புக்கு அவன் பெயரினைக் கூறுவார்க்கும் அவன் கொன்றை மாலை பொதுவாகப் பெறுவ தற்கு உரியதோ இல்லை. தில்லைப் பெருமானின் திருவருளை அனைவரும் மெச்சிக்கூறும்படி என் மகளாகிய பிச்சி நாளையே இம்மாலையினைப் பெறுவாள் என்பது இப்பாடற் பொருளாகும். இதன்-கண் நிறையழிதல் என்பது போலிமானம் கருதி ஓர் எல்லைக்குள் தன்னை நிறுத்துதலைக் குறிக்கும். இதனைக் கடந்துபோகும் மன-விரிவே இறைவன் அருளைப் பெறுவதற்கு உரியது.

இதுகாறும் அடிகளின் கற்பனைத்திறம், பிரபந்தக் கூறுகளை அமைத்துப் பாடும் ஆற்றல் முதலியன கண்டோம். இனி அவர் பயின்றுள்ள சந்த விருத்தங்கள் சிலவற்றின் அமைப்பினைக் குறித்து ஒரு சிறிது காண் போம்.

சந்தயாப்பு

தமிழ் யாப்பியல் வரலாற்றில் சங்க காலப் புலவர்கள் நாற்சீரடி மிகுதியும் பயின்றனர். ஒரே வழி ஐஞ்சீரடி அமைத்துப் பாடினர். அறுசீரடி, கலித்தொகை, பரி-பாடல் ஆகிய இரு பனுவல்களிலும் அருகி வருதல் காணலாம். எனின், இளங்கோ அடிகள்தான் முதன்முதல் அறுசீரடி, எழு-சீரடிப்பாடல்களைப் புனைந்தவர். மூவர் தேவாரத்திலும் நாலாயிரத் திவ்விய பிரப-ந்தத்திலும், எண் சீரடிப் பாடல்களும் பயிலப்பெற்றன. 'திருப்படையாட்சி' என்னும் பதிகத்தில் பன்னிரு சீரடி பயின்ற முதல்வர் மாணிக்கவாசகரே ஆவர். அவர்-க்குப்பின் பதினெறு சீரடி வரை பாடிய முதன்மை பட்டினத்துப் பிள்ளையார்க்கு உரியது. யாப்பு வளர்ச்சியை அடிப்படை யாகக் கொண்டு நோக்குமிடத்தும், மூவர்க்-குப்பின் மாணிக்கவாசகரும் இந்நால் வருக்குப் பின் பட்டினத்தாரும் வாழ்ந்த வர்கள் என்பது புலனாகும்.

முன்னோர் மொழிபொருள்:

பட்டினத்துப்பிள்ளையார் தமக்குமுன் வாழ்ந்த நாயன்மார்களின் அருளிச் செயல்-களை ஈடுபாட்டுடன் நன்கு பயின்றவர். அவர்தம் பாடல்களில் பொதிந்துள்ள விழுமிய சிந்தனைகளைப் பொன்னே போல் போற்றித் தம் பாடல்களில் எடுத் தாண்டனர். ஒரு சில சான்றுகள் காண்-போம்.

நடராசப்பெருமானின் ஐந்தொழில் இயற்றும் ஆனந்தத் தாண்டவத்தினை அடிகள் ஆறாவது பாடலில் அற்புதமாகச் சுட்டுகிறார். நடமாடும் பெருமானின் ஊன்றிய திருவடி கீழுலகங்கள் ஏழினுக்கும் அப்பாற் பட்டது. திருமுடி அண்ட-கோளங்கள் அனைத்தையும் கடந்து அப்புறத்

தது. வெண்ணீறு பூசிய எண்தோளும் எட்டுத்திசைகளையும் கடந்தன. இங்ஙனம் இனைத்தெனச் சுட்டியறியப்படும் எல்லைகளுக்கும் அப்பாலாய்ச் சர்வ வியாபகியாக விளங்கி உயிர்களின் உய்திக்காக ஆனந்த நடனம் புரிகிறார். ''இன்சுவை தரும் கன்னற் சோலைமிக்க தில்லைச் சிற்றம்பலத்தான் என்பதால் அவன் ஆடல் இன்பம் அளிப்பது என்பது புலனாகும். அப்பாடல் வருமாறு:

''அடியொன்று பாதலம் ஏழற்கும் அப்புறம்
பட்டதிப்பால்
முடியொன்றில் அண்டங்கள் எல்லாம்
கடந்தது, முற்றும் வெள்ளைப்
பொடியொன்று தோள் எட்டுத் திக்கின்
புறத்தன, பூங்கரும்பின்
செடியொன்று தில்லைச் சிற்றம்பலத்தான்
தன் திருநடமே'' (6)

இப்பாடல் இவருக்குச் சுமார் 400 ஆண்டுகளுக்கு முற்பட்ட காரைக்கால் அம்மையார் அருளிச்செய்த அற்புதத் திருவந்தாதியில் காணப்படும் ஒரு பாடலைத் தழுவியது எனலாம். அப்பாடல் இதுவே.

'அடிபேரிற் பாதாளம் பேரும் அடிகள்
முடிபேரின் மாமுகடு பேரும்—கடகம்
மறிந்தாடு கைபேரின் வான்திசைகள் பேரும்
அறிந்தாடும்! ஆற்ற தரங்கு! (77)

மேலும் திருவாசகத்தில்,

'பாதம் இரண்டும் வினவிற் பாதாளம்
ஏழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து
நின்ற தொன்மை'

எனவரும் குயிற் பத்துப் பாடற்பகுதியின் கருத்தினையும் ஈண்டு, பட்டினத்தார் இணைத்துப் பாடினாராதல் வேண்டும்.

இங்ஙனமே,

'எண்டோள் வீசிக் கண்டோர் உருகத்
தொல்லெயில் உடுத்த தில்லை மூதூர்
ஆடும் அம்பலக் கூத்தனே' (8)

எனவரும் கோயில் நான்மணிமாலைப் பாடற் பகுதி,

'எண்டோன் வீசிநின் ரூடும் பிரான்
தன்னைக்
கணகாள் காண்மின்களோ! (4.92.)

எனவரும் அப்பர் பெருமானின் அங்கமாலையின் அடிகளை நினைவூட்டுகிறது.

இதுகாறும் இலக்கிய சார்பான கருத்துக்கள் சிலவற்றைக் கோயில் நான்மணிமாலையிற் கண்டோம். இனி, சைவ சமயச் சார்பான மெய்ப்பொருள் கருத்துக்கள் சில அடிகளினூல் புகட்டப்பெற்றுள்ள பாங்கினை நோக்குவோம்.

சிவசாதனங்கள்:

சிவப்பேறு அடைதற்கு உரிய சாதனங்கள் அக்கமாலை, ஐந்தெழுத்து, திருநீறு என்ற மூன்றும் ஆகும். இவற்றை முறையே மணி, மந்திரம், மருந்து என்று கூறுவர். அனைத்தையும் அழிக்கவல்ல ஐந்தெழுத்தினைப் பயிலுதல் பற்றி,

''மொழிவது, உன்
ஐந்தெழுத் தவைஎம் சிந்தையிற் கிடத்தி
நனவே போல நாடொறும் பழகிக்
கனவிலும்

என்று ஓதுகிறார். உலகியற் பேறுகள் கருதுவோர் நமசிவாய என்றும், பேரின்பப் பேறு கருதுவோர் சிவாய நம என்றும் ஓதுவது மரபு. நனவிலும் கனவிலும் எப்பொழுதும் இம்மந்திர மொழியினை ஓதுவதில் உள்ள பெருவிருப்பம் இப்பாடலினூல் புலனாகிறது. மேலும்,

''வினைகெடக்
கேட்பது நின்பெருங் கீர்த்தி; மீட்பது
நின்னெறி அல்லாப் புன்னெறி படர்ந்த
மதியில் நெஞ்சத்தை வரைந்து; நிதியென
அருத்திசெய் திடுவது உருத்திர சாதனம்
காலையும் மாலையும் கால்பெயர்த் திடுவதுன்
ஆலயம் வலம்வரு வதற்கே; சால்பினில்

கைகொடு குயிற்றுவது ஐய! நின்னது
கோயில் பல்பணி குறித்தே'' (24.6–13)

என்று தொடர்ந்து கூறும் பகுதி சைவ சமயியின் தினசரியாகக் கொள்ளுதற்கு உரியது. திருநீற்றுச் சிறப்பினை,

'விரிசடையும் வெண்ணீறும் செல்வானம் என்ன
ஒளிவந்த பொன்னிறமும் தொல்நடமும் காட்டும், உடையான்' (3)

என்ற பகுதியில் சுட்டியுள்ளார். இத்தகைய சாதனங்களினால் சில புண்ணியமும் சிவப் பேரின்பமும் எய்தப்பெறுதல் இயலும். வைணவர்கள் நாள்தோறும் கடைபிடிக்க வேண்டிய ஒழுகாலாறுகளை வேதாந்த தேசிகர் 'வைணவ தினசரி' என்ற பெயரில் தொகுத்திருத்தல் இங்கு எண்ணற்கு உரியது.

பேய்த்தேர்

உலகின் இயல்புகளையும் உணர்ந்து கூறுகிறார். பட்டினத்தார். இறைவன் நிமித்த காரணமாகவும் திருவருட்சக்தி துணைக் காரணமாகவும் நின்று, முதற் காரணம் ஆகிய மாயையிலிருந்து உலகினையும் போகப் பொருட்களையும் உடல் உறுப்புக் கரணங்களையும், உயிர்களின் பொருட்டு இறைவன் தருவிக்கிறான். எனினும், காரிய மாகவுள்ள சுட்டிய றியப்படும் உலகப் பொருட்கள் யாவும் தோன்றி மறையும் தன்மையன. தொடரத் தொடரப் பிடிபடாது ஓடிக்கொண்டிருக்கும் கானல்நீரைப் போன்ற (–பேயத்தேர்) உலக கனவுக் காட்சிகளைப் போன்ற நனவு உலக நடைமுறைகளை மெய்யென்று மதிமயங்கிக் குறிக்கோளினை மறக்க கூடாது. என்று அறிவு கொளுத்துகிறார்.

''மாயப், பேய்த்தேர் போன்று நீப்பரும் உறக்கத்துக்
கனவே போன்றும் நனவுப் பெயர்பெற்ற
மாய வாழ்க்கையை மதித்துக் காயத்தைக்
கல்லினும் வலிதாக் கருதிப் பொல்லாத்
தன்மையர் இழிவு சார்ந்தனை''
(28.15–20)

என்று தன் மனத்தினை நோக்கிப் பேசுகிறார். திருமுறைகளின் தெளிவாக மெய் கண்டாரின் சித்தாந்த சாத்திரமாகிய சிவஞான போதம் திகழ்கிறது என்பர். இக்கருத்திற்கு அரண்தரும் வகையில், மேற் காட்டிய கோயில் நான்மணிமாலையின் கருத்து,.

''ஊனக்கண் பாசம் உணராப் பதியையை
ஞானக் கண்ணிற் சிந்தை நாடி
உராத்துனை தேர்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம்பதி; விதி என்னும்
அஞ்செழுத்தே.

எனவரும் ஒன்பதாம் சூத்திரக் கருத்தில் கலந்திருத்தல் எண்ணி இன்புறற்பாலது.

பட்டினத்தார் நிலையாமையினைப் பல பாடல்களில் பாங்குற எடுத்துக் காட்டுதல் எண்ணத்தக்கது. (13, 28, 32). ஒரு பாடலின் பகுதியை மட்டும் இவண் சுட்டுதல் தகும்:

''தோன்றுழித் தோன்றி நிலைதவக் கறங்கும்
புற்புதச் செவ்வியின் மக்கள் யாக்கைக்கும்
நிலைப்பினும் கடிதே இளமை நீக்கும்;
அதனினும் கடிதே மூப்பின் தொடர்ச்சி;
அதனினும் கடிதே கதுமென மரணம்;
வாணாள் பருகி உடம்பை வறிதாக்கி
நாணாள் பயின்ற நல்காக் கூற்றம்!
இனைய தன்மையது இதுவே இதனை
எனதெனக் கருதி இதற்கெனத் தொடங்கிச்
செய்தன சிலவே..... (32.3–12).

சில்வாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவுடையோர்க்கு நிலையாமை உணர்வு தோன்றின், நிலைபேறுனை ஒன்றினை எண்ணுதற்கு முயற்சி பிறக்கும் என்ற கருத்தில் அடிகள் இப்படி உலகியலை உணர்த்துகிறார்.

திருவருள் நாட்டம்

முதுபெருங் கடவுள் (12.4) மன்றில்

நடமாடும் நாயனூர் (13) எனப்போற்றும் அடிகள் அவனுடைய திருவருளைப் பெறுவதே ஈடேற வழி என்று எண்ணுகிறார். அதனால், 'அவன்தன், தொண்டர் தொண்டற்குத் தொழும்பாய்த் திரியத் தொடங்கினனே' (38) என்று அடியார் பணி மேற்கொண்ட திறனைச் சாற்றுகிறார். தில்லையம்பல வாணனை நோக்கி,

"நீயே அருளல் வேண்டும்; வேய்முதிர்
கயிலை புல்லென எறிசுரம்பு வறிதாக
இம்பர் உய்ய அம்பலம் பொலியத்
திருவளர் தில்லை மூதூர்
அருநடங் குயிற்றும் ஆதிவானவனே!
(32.42–45)

என்று வேண்டுகிறார். அவன் அடியார் பட்டியலில் தன்னையும் எழுதும்படி மற்றொரு பாடலில் விண்ணப்பம் செய்கிறார்.

'நின், தமர்பெயர் எழுதிய வரிநெடும்
புத்தகத்து
என்னையும் எழுதவேண்டுவன்'.
(4.21–23)

Leigh Hunt என்ற ஆங்கிலக் கவிஞன் இப்படி ஒரு வேண்டுகோளினைத் தாம் பாடிய *Abu Ben Adham* என்ற பாடலிற் குறித்திருத்தல் ஒப்பு நோக்கி மகிழத்தக்கது. அப்பாடலின் ஒரு பகுதி இதுவே;

"I pray thee then,
Write me as one that loves his fellow men'
The Angel wrote, and vanished. The next
night
It came again, with a great wakening light,
And showed the names whom love of god had
blessed;
And lo! Ben Adhem's name led all the rest".

ஆதலின், அடியவர்க்கு அன்பு செய்பவரே ஆண்டவனுக்கு உகந்த அன்பருள் முதல் நிலைபெறுபவர் என்பது தெளிவு.

வையம், முழுமையும் ஒருகுடைக்கீழ் ஆளும் நாற்படை கொண்ட மன்னராக வாழ்வதைவிட, அம்பலத்தானின் தொண்டர்க்கு ஏவல் செய்து ஐயம் ஏற்றுப் பெறும் இன்ப வாழ்வே மேம்பட்டது என்கிறார் (2,33). இங்ஙனம் அடியவர்களை உயர்த்திச் சொல்வதற்கு உரிய ஒரே காரணம் அவர்தம் உள்ளத்தினையும் தில்லைமன்றமாக எண்ணிக் கூத்தப்பிரான் நடம்புரிவதே ஆகும். (4.3–5).

இறைவனின் திருவருள் வாய்ப்பின் கட்புலன் ஆகாத அணுகூட வானளாவிய வடிவம் கொள்ளும் காணில் மொய்க்கும் கொசு கூட வானில் பறக்கும் கருடனுகும் என்று திருவருளினைப் பட்டினத்தார் வியந்து போற்றுகின்றார் (4.23–26). இறைவன் பெரியதிற் பெரியதாகவும் சிறியதிற் சிறியதாகவும் திகழ்கிறான் என்ற உபநிடதக் கருத்தினையும் குறித்தனர். (12.41–45) திருவருள் திறத்தினால் திருமால் சக்கரப்படையும் குபேரன் இருநிதியமும் அழகாபுரியும் மார்க்கண்டன் சிரஞ்சீவிப் பதமும் பெற்றனர். இங்ஙனம் எண்ணற்ற அருட்செயல்களைத் தொகுத்து இப்பிரபந்தத்தின் இறுதிப் பாடலில் சுருப்பட்டுப் பாடியுள்ளார். ஆதலின், திருவருள் நாட்டமே உறுதி பயக்கும் குறிக்கோள் என்பது அடிகள் உணர்த்தும் உண்மையாகும்.

இருவினை ஒப்பு:

செம்பிற் களிம்பு போல் ஆன்மாவில் அநாதி காலமாக ஒட்டியிருக்கும் ஆணவமலம் அகல வேண்டும் அம்மலம் அகன்ற பொழுது ஆன்மா சிவதரிசனம் பெற்றுப் பேரின்பத்தில் திளைத்திருக்கும். மலநீக்கத்திற்கு ஆன்மா பக்குவ நிலை பெறுதல் வேண்டும். அதற்கு அடிப்படை இருவினை ஒப்பு எனப்படும் கன்ம சாமியம் ஆகும். நன்மை தீமை இரண்டினையும் ஒப்ப நோக்கி உவர்த்து விடுதல் இதன் தன்மையாகும். விழைவு வெறுப்பு இரண்டும் அற்ற இவ்வுயரிய சமசித்தம் அடிகளுக்கு அமைதலை,

"ஆனைச்செல்வத்து வானோர் இன்பம்

அதுவே எய்தினும் எய்துக....
நிரயமும் சேரினும் சேர்க்க, உரையிடை
ஏனோர் என்னை ஆளது விரும்பி
நல்லன் என்னினும் என்க; அவரே
அல்லன் என்னினும் என்க; நில்லாத்
திருவொடு திளைத்துப் பெருவளம் சிதையாது
இன்பத்து அழுந்தினும் அழுந்துக; அல்லாத்
துன்பம் துதையினும் துதைக; முன்பில்
இளமையொடு பழகிக் கழிமூப்புக் குறுகாது
என்றும் இருக்கினும் இருக்க; அன்றி
இன்றே இறக்கினும் இறக்க; ஒன்றினும்
வேண்டலும் இலனே வெறுத்தலும் இலனே'
(36.16–36)

எனவரும் பகுதி தெளிவுறுத்துகிறது. இதனால் திருவருட்பேறு அடைந்தனர். இறைவனால் ஆட்கொள்ளப்பெற்றார்.

ஆண்டுகொண்ட திறம்:

சமய குரவர் நால்வரையும் இறைவன் வலிய வந்து ஆண்டு கொண்டது போலவே பட்டினத்தாரையும் ஆட்கொண்டமைக்கு அகச்சான்றுகள் நிரம்ப உள்ளன. கோயில் மணிமாலையில்...

"கண்டறிவார் இல்லா,
வெளிவந்து அடியேன் மனம்புகுந்து" *(3)*

"நானே பிறந்த பயன்அடைந்தேன்..." *(10)*

"பீடில் நெஞ்சத்து நுழைந்தனே" *(12)*

"நாயனைய என்னைப் பொருட்படுத்தி
நன்களித்துத்
தாயனைய ஞயருளும் தம்பிரான்" *(25)*

எனவரும் பகுதிகள் இவ்வுண்மையினை உறுதிப் படுத்துகின்றன. தன்னை ஆட்கொண்ட மன்றவாணனிடம் அடிகள் என்ன வேண்டினார் என்பதும் அறியத்தக்கது.

இறைவனிடம் இரத்தல்:

அன்பர்களுக்கு என்ன வேண்டும் என்பதை இறைவன் அறிந்து வழங்குவான். ஆதலின், அவனிடம் எதுவும் வேண்டுதல் கூடாது என்பர். அப்பர் பெருமான், 'வேண்டுவோர் வேண்டுவதே ஈவான் கண்டாய்' என்றும், மணிவாசகர், 'வேண்டத்தக்கது அறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ' என்றும் இசைத்தனர். எனினும், ஆர்வப்பெருக்கினால் அன்பர்கள் சிலவற்றை ஆண்டவனிடம் வேண்டுவர். கடுவனிள வெயினனார் என்னும் சங்ககாலத்துப் புலவர், முருகப் பெருமானிடத்தில் பொருளும் பொன்னும் போகமும் வேண்டாது அருளும் அன்பும் அறனும் ஆகிய மூன்றும் வேண்டினர்.

பட்டினத்துப் பிள்ளையார்,

"இனிநனி இரப்பதொன் றுடையம்,மனம்
மருண்டு
புன்மையின் நினைத்துப் புலன்வழி படரினும்
நின்வயின் நினைந்தே மாகுதல், நின்வயின்
நினைக்குமோ நினைக்கப் பெறுதல் அனைத்
தொன்றும்
நீயே அருளல் வேண்டும்" *(32)*

என்று நடராசப் பெருமானிடம் விண்ணப்பம் செய்கிறார். ஆன்மாவிற்கு ஞானம் பிரகாசித்தும் பழக்க வாசனையால் புலன் வழி உள்ளம் ஓடும். இதற்குச் சிவஞான போதத்ததில் 'வேம்புதின்ற புழுப்போல்' என்று உதாரணமும் காணப்படும். கரும்பினைச் சுவைத்து இன்புறும் புழு, முன்பு வேம்பு தின்ற நினைவு தலைப்பட, அதனை நாடிச் செல்லுதல் போல் ஆன்மாவும் திருவருள் பயக்கும் பேரின்பத்தில் திளைத்திருக்கும் பொழுது வாசனாமலத்தின் உந்துதலினால் புலனின்பத்தினைத் தேடும். அந்நிலையிலும் கூட, இறைவனை மறவாது இருத்தற்கு வரம் கேட்கிறார். அவன் நினைவு முறுகி முன்நிற்பின் புலன் வழி போகாது அருளின்பத்தில் நிலைபெறுதல் உறுதி. இதன் பொருட்டே 'ஏகனுகி தானும் அரனை எனத் தொழுமே' என்றும் ஞானநூல் விதித்தல் காணலாம்.

கோயில் மூத்த திருப்பதிகத்தில் ஒரு கணக்குக் குறிப்பு

டாக்டர் வை. இரத்தினசபாபதி

எம். ஏ. பி. எச். டி.,

சென்னை

முன்னுரை:

கோயில் என்ற சொல்லானது தில்லையில் கூத்தப் பெருமான் ஆடும். பொன்னம் பலத்தையே குறிக்கும்.

சித்தாந்த சைவத்தைச் சுத்தாத்வைதம் எனக்கூறி விளக்கவந்த சிவஞானமுனிவர் எடுத்துக் காட்டும் குறிப்பானது 'கோயில்' என்பதற்கும் பொருந்துவதே.

'அத்வைதம்' என்ற சொல்லானது 'கேவலம்' என்ற அடைமொழியுடனும் 'விசிட்டம்' என்ற அடைமொழியுடனும், 'துவைதம்' என்ற அடைமொழியுடனும் இணைந்து முறையே கேவலாத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதாத்வைதம் என்ற தத்துவக்கொள்கையைக் குறிக்கும். இவ்வாறு அடைமொழி எதுவும் இல்லாமல் சுத்தமாக நின்ற அத்வைதக் கொள்கையே சித்தாந்த சைவக்கொள்கை அதுபோலவே, 'கோயில்' என்ற சொல்லும் அடைமொழி எதுவும் இல்லாமல் சுத்தமாக நின்றால் அது தில்லைக் கூத்தன் ஆடும் பொன்னம்-பலத்தையே குறிக்கும். 'கோயில்' என்பதுடன் 'திரு' என்ற அடைமொழியைச் சேர்த்துவிட்டாலும் கூட, அது ஒரு பொதுச் சொல்லாக நின்று, இன்ன அம்மையார் உடனுறையும் இன்ன இறைவன் திருக் கோயில் என்றே சுட்டிக் கூறவேண்டிய நிலைமையைப் பெற்று விடுகிறது.

மணிவாசகப் பெருமான் கோயில்

திருப்பதிகம் என்ற அமைப்பில் இரு பதிகங்கள் அருளியுள்ளார். ''உடையாள் உன்றன் நடுவிருக்கும்'' எனத் தொடங்கும் பதிகம் **கோயில் மூத்த திருப் பதிகம்** என்றும், ''மாறி நின்றென்னே'' எனத் தொடங்கும் பதிகம் **கோயில் திருப் பதிகம்** என்றும் போற்றப்பெறுவன. இரண்டு பதிகங்களுள் முதலிற் பாடிய பதிகம் ஆதலின், ''உடையாள் உன்றன் நடுவிருக்கும்'' எனத்தொடங்கும் பதிகம் **மூத்த திருப்பதிகம்** என வழங்கப் பெற்றது என்பது அறிஞர் காட்டும் மரபுவழி விளக்கம். கோயில் மூத்த திருப்பதிகத்தின் முதற்பாடலில் மணிவாசகப் பெருந்தகையால் சுட்டிக் காட்டப் பெற்ற ஒரு குறிப்பினைத் தெரிவிப்பதே இக்கட்டுரையின் உட்கோளாக அமைகிறது.

அம்மையும் அடிகளும்:

சிவனெனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி எம்மாள் எனப்போற்றப் பெறும் திருக்கயிலைக்கிறைவனை மும்முறை 'அம்மையே' என அழைக்கப்பெற்ற காரைக்கால் அம்மையார் திருவாலங்காட்டுப் பதிகங்கள் இரண்டு அருளியுள்ளார்கள். இரண்டுமே **திருவாலங்காட்டு மூத்த திருப் பதிகம்** என்றே போற்றப் பெறுவன. பதிகம் என்னும் அமைப்பில் வரும் திருவருள் நெறிசார் திருமுறைகளுக்கெல்லாம் காலத்தால் முற்படப்பாடப்பெற்ற பதிகங்களாதலின் மூத்த திருப் பதிகங்கள் எனப் பெற்றன என்பதே மரபு வழியில் நின்று திருமுறைப்பேரறிஞர்கள் எடுத்துக்காட்டும் விளக்கம்.

காரைக்கால் அம்மையாருக்குக் காலத்தால் பிற்படநின்றவர் மணிவாசகப் பெருந்தகையார் என்ற ஆய்வியல் முடிவை ஒட்டிய கருத்தே முன் அமைக்கப் பெற்றது. அடிகள் அம்மையாருக்குக் காலத்தால் முற்பட்டவர் என்ற கருத்தின் வழியே நின்று சிந்தித்தால், 'மூத்த' என்ற சொல் அம்மையார் திருப்பதிகங்களில் அமைந்த தன் காரணத்தை வேறுவகையில் விளக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

காரைக்கால் அம்மையார் அருளிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்' இரண்டனுள், ''கொங்கைதிரங்கி'' என்ற தொடக்கமுடைய முதற்பதிகம் திருவாலங்காட்டைப்பற்றியது. இப்பதிகம் முழுவதும் **''ஆடும் எங்கள் அப்பன் இடம் திரு வாலங்காடே''** என்ற தொடராலேயே முடியும் திருவுடையதாகிறது. ''எட்டி இலவம் என்ற தொடக்கத்தையுடைய இரண்டாம் பதிகத்தில் மூன்றும், எட்டாம் திருப்பாடல்கள் தவிர, ஏனையவைகளில் முறையே குழகன் ஆகுமே, அழகன் ஆகுமே பெருமான் ஆகுமே, பரமன் ஆகுமே, குழகன் ஆகுமே, அழகன் ஆகுமே, பரமன் ஆகுமே, விமலன் ஆகுமே, என அமைகின்றன. மூன்றும் திருப்பாடல் ''நட்டம் பேணும் இறைவன் பெயரும் பெருங்காடே'' என்றும், எட்டாம் திருப்பாடல்'' பெருங்காட்டில் மாயன் ஆட மலையான் மகளும் மருண்டு நோக்குமே'' என்றும் நிறைவு பெறும் திருவுடையன. அழகன் ஆடும் ஆலங்காட்டை முதல் பதிகத்திலும், ஆலங்காட்டில் ஆடும் நிலையை இரண்டாம் பதிகத்திலும் அமைந்துள்ள குறிப்பை அம்மையாரிடம் தெளிவாகக் காண முடிகிறது.

ஆளுடைய அடிகள் என்று அடிமை பேணும் அருளாளர்களால் பெரிதும் போற்றப் பெறும் மணிவாசகப் பெருந்தகை அருளிய கோயில் திருப் பதிகம் இரண்டனுள் மூத்த திருப்பதிகம் முழுவதும் பொன்னம் பலமே பேசப் பெறுகிறது. கோயில் என்ற சொல்லே காணப்பெறவில்லை. இரண்டாம் பதிகமாகிய 'கொயில் திருப்பதிகத்தில்' பொன்னம்பலம் என்ற சொல்லுக்குப் பதிலாகத் திருப் பெருந்துறையே பதிகம் முழுவதிலும் சுட்டப்பெறுகிறது. ''உடையாள் உன்றன்'' எனத் தொடங்கும் கோயில் மூத்த திருப்பதிகத்தில் பெருமான் தம்மையே கோயிலாகக்

கொண்ட பெறலரும் பெருமை பேசப்பெறுகிறது. இரண்டு திருப்பதிகங்களும் அருளப் பெற்ற இடம் 'திருத்தில்லை' என்றே பேசப் பெற்றாலும் மூத்த திருப் பதிகத்தில், பொன்னம்பலம் என்பதால் 'திருத்தில்லை என்பதும், அதுவே 'கோயில்' என்பதும் உறுதி யாகின்றன. முதற்பதிகத்தைப் படித்த நிலையில் இரண்டாம் பதிகத்தைப் படிப்பதால் திருத்தில்லை, கோயில் என்பன ஒன்றே என்று கொள்ளும் அளவுக்கு, திருப் பெருந்துறையும் பொன்னம்பலமும் ஒன்றே என்றே திருப்பெருந்துறை, பொன்னம் பலம், திருத்தில்லை, கோயில் என்ற அனைத்தும் ஒன்றே என்றே கொள்ள இயலவில்லை. திருத்தில்லையில் அருளப்பெற்ற திருத் தசாங்கம், திருப்பள்ளி எழுச்சி என்பவைகளிலும் திருப்பெருந்துறையே குறிக்கப் பெறுகின்றன.

அடிகளும் பெருந்துறையும்:

பாண்டிய நாட்டுத் திருப்பெருந்துறையில், அடிகளை மிகவும் உருக்கிய அருளியல் நிகழ்வு ஒன்று உண்டு. அடியவர் திருக் கூட்டத்துடன் வந்து குருந்த மரத்தின் கீழ் இருந்து தம்மை ஆட்கொண்ட குருமுதல்வன் அடியவர் திருக்கூட்டத்தை அங்கே எழுந்த சோதியிற் கலக்க வைத்து தம்மையும் அடியாருடன் கூட்டாமையை அடிகள் மிகவும் மனம்நொந்து வேண்டுகிறார். அப்பொது, 'தில்லைக்கு வருக' என்ற ஆணை பிறந்தது. தில்லைக்கு வந்த அடிகள் தில்லையில் பொன்னம்பலத்தில் பாண்டி நாட்டுத் திருப் பெருந் துறையில் அடியாருடன் புகுத்தாமையை நினைந்து நினைந்து வேண்டுகின்றார். தில்லைக்கு வந்த பிறகும் அடிகள் ஒரு திருப்பெருந்துறையை அறிமுகப்படுத்துகிறார்.

''சிதம்பரத்தின் வடகீழ்த்திசையில் தில்லையம்மன் திருக்கோயிலின் தென் புறத்தே திருப்பாற்கடல் தீர்த்தம் உள்ளது. அதனை ஒட்டி அதன் வடக்கே அமைந்த கோயில் ஒன்று உண்டு. அதற்கு திருப் பெருந்துறை என்றே பெயர். பாண்டி நாட்டுத் திருப்பெருந்துறைக் கோயிலைப் போலவே தில்லைப் திருப் பெருந்துறையிலும் ஆன்மநாதப் பெருமான் சிவயோகாம்பிகை எனப்பெறும் இறைவன் இறைவித் திருவறைகளில் திருவடிகளே வைக்கப் பெற்றுள்ளன. (இவற்றின் விரிவை 6.2.72-ல் நடைபெற்ற தில்லைச் சிவகாமியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு விழா மலரின் 201-202 ஆகிய பக்கங்களிற் காண்க). தில்லைத் திருப்பெருந்துறைக் கோயிலில் அமைந்த ஒரு தனியிடத்தில் தான் அடிகள் தங்கித் தவமியற்றிய தாகக் கொள்ளும் கருத்து இன்றும் கேட்கப்பெறும் செவிவழிச் செய்தி. அடிகளைப் பொறுத்த வரையில் பாண்டிய நாட்டுத் திருப்பெருந்துறை மூத்த திருப்பெருந்துறை. அங்கே நடைபெறுத அடியாரிற் கலப்பு என்னும் அற்புதம் அப்படியே இங்கு வேண்டப் படுகிறது, என்றவகையில் தில்லை பொன்னம் பலம் மூத்த திருப் பெருந்துறையாகவே அமைய, யாண்டும் எந்தஒரு திருக்கோயில் நிகழ்வுகளும் இங்கே முற்றுவிக்கப்பெறும்/ என்ற நிலையில் ——எக்கோயிற் சிவகாலைகளும் இங்கே வந்து நிறைவுறுகின்றன என்ற நிலையில் 'கோயில்' என்ற சுத்தநிலை நிறைநிலை அமைகிறது எனக் கொள்ள இடம் தருகின்றது.

அடிகளின் வரலாற்று அடிப்படையில் பெருந்துறை புகுதல், பேரின்ப வெள்ளம் மூழ்குதல் என்ற இருபெருஞ்செய்திகளை எடுத்துக்காட்டி, முன்னதை கோயில் மூத்த பதிகத்திலும், பின்னதாக நின்ற பேரின்ப வெள்ளம் மூழ்குதலைக் கோயில் திருப்பதிகத்திலும் அருளியுள்ளார் என்ற குறிப்பைக் கற்பனைக் களஞ்சியம் சிவபிரகாச சுவாமிகள் திருவாக்கால் அறியலாம்.

பொன்னம்பலத்திற் கூத்தப் பெருமானுடன் கலந்ததும், அடிகள் அருளிய அனைத்துப்பதிகங்களும் 'வாசகம்' என்ற பெயரால் —ஒன்றிய ஒருமைத் திருவருளை

பவத்தலைப்பால் இணைப்புறுத்தப்பெற்று, **திருவாசகம்** எனப்பெற்றதும் ஆகிய அருளியல் நிகழ்வுகள் அமைகின்றன.

''பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்த வாசகமே
வாசகம் அதற்கு வாக்கியம்.
தூசகல் அல்குல்வேய்த் தோளிடத்
தவனே''

என்பது **நால்வர் நான்மணிமாலையில்** அமைந்த சிவப்பிரகாசரின் திருவருட் சொல் அமுதம். கோயில் திருப்பதிகம் என்ற இரண்டாம் திருப்பதிகத்தின் இறுதிப் பாட்டு.,

''தந்தது உன்தன்னைக் கொண்டது என் தன்னைச்
சங்கரா யார்கொலோ சதுரர்
அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்.
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந்துறை உறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங்கொண்டாய்
யானிதற்கு இலன் ஓர் கைம்மாறே''

என்பது பேரின்ப வெள்ளம் மூழ்கிய அனுபவம், புனிதர் என நின்ற அனுபவம் ஆகியவைகளை இதிற் காணலாம்.

கணக்குக் குறிப்பு:

கோயில் மூத்த திருப்பதிகத்தின் முதல் திருப்பாட்டு ஒருவகைக் குறிப்பினை உட்கொண்டது என்பது மரபுவழிச் சிந்தனை. இதனை அறிவதற்கு ஒருவகைக் கணக்குக் குறிப்பு ஒன்றை அருளாளர்கள் அருளியுள்ளார்கள்.

ஒலியாலும், தன்மையாலும் ஒரு பொருளைக் கேட்டும் துய்த்தும் அறிதல் போலவே ஒருபொருளை எண்ணலும் எழுத்தாலும் அறியும் முறை ஒன்று உண்டு, என்பதைத் திருநாவுக்கரசர் திருவாக்கால் அறியலாம். எண்ணும் எழுத்தும் வாழும் உயிர்க்கு இருகண் என்ப கண்கள் இரண்டும் இருவேறு பொருள்களைப் பார்த்தல் இல்லை. ஒன்றை இருவகைகளிற் பார்க்கின்றன.

''எண்ணவன் காண் எழுத்தவன் காண்''
திருவலிவலம்–திருத்தாண்டகம்–7
எண்ணுகி எண்ணுக்கோர் எழுத்தும் ஆகி''
நின்ற திருத்தாண்டகம்–2
''எண்ணதலின் எழுத்தை''
திருக்கற்குடித்திருத்தாண்டகம்–3
'எண்ணுகி எழுத்தாகி இயல்பும் ஆகி''
திருப்பாதூர்த் திருத்தாண்டகம்–1
'எண்ணும் எழுத்தும் சொல்லானாய்
போற்றி''
வேற்றுகி என்ற கயிலைப் பதிகம்–7

என்பவை நாவரசரின் அருள்வாக்குகள்.

''ஒன்று வெண்பிறை'' என்ற தொடக்கத்தையுடைய தனித்திருக்குறுந் தொகையின் ஒன்பதாம் பாட்டின் இறுதியாக, நாவரசர் அமைத்துப்பாடிய வரி.

''ஒன்பது ஒத்து நின்று என்னுள் ஒடுங்குமே''
என்பது,இதனை ஒட்டியே திருவருட்பிரகாச வள்ளற் பெருமான்..

''ஒன்பதாகிய உருவுடைப் பெருமான்
ஒற்றிப் பெருமான்''

என அருளியுள்ளதை நோக்குக. எழுத்தால் அறியும் பெருமானை எண்ணலும் அறிதல் வேண்டும் என்பதாகிய குறிப்பு உயிரோட்டமாக அமைவதைக் காணலாம்.

'சிவசிவ' என்பதை முன்மொழிந்து பயந்தரும் முறையைத் திருமந்திரம் எடுத்து இயம்புகிறது.

''சிவசி வ'' எனப்பிரித்தால் 'சி' என்பது

இறைவனுக அமைய 'வ' என்பது அருட்சக்தியாக அமைய, உடையாள் உன்றன் நடு இருக்கும் என கருத்துத் தெளிவு உண்டாகும். அடுத்து ''சிவ/சிவ'' என அமைந்தால்

உடையாள் நடுவு நீ இருத்தி'' என்பதும் புலனுகும். 'சிவசிவ' எனக்கூறின் இரண்டு உண்மைகள் புலப்படுகின்றன. எழுத்தால் உணர்ந்த குறிப்புப் பொருளே எண்ணலும் உணரும் முறை உண்டு.

'ஓம்' எனும் பிரணவத்தின் விரிவே 'சிவாய நம' எனப்பெறும் ''ஓம்'' என்பது அ, உ, ம, புள்ளி எனப்பெறும் விந்து, நாதம் என ஐந்தாய் நிற்கும். 'அ' என்பதே சிவபரம்பொருள். 'உ' என்பதே அருட்சத்தி 'ஓ' என்பது உயிரெழுத்து நெடுங்கணக்கில் பத்தாம் எழுத்து . 'ஐ' என்பது இடைப் பிறவவரல். அ, உ என்ற இரண்டன் கூட்டே 'ஓ' என்பது. இது எண் முறை. 'அ' என்பது தமிழ் நெடுங்கணக்கில் 'எட்டு' என்ற எண்ணைக் குறிக்கும் 'உ' என்பது இரண்டு என்ற எண்ணைக் குறிக்கும்.

எட்டு என்ற (8) எண்ணில் (2) இரண்டு என்ற எண் அடங்கி நிற்கும் 'அ' என்பது 'எட்டு என்ற எண்ணையும் சிவத்தையும் குறிக்கும். 'உ' என்பது இரண்டு எண்ணையும் அருட்சத்தினேயும் குறிக்கும்.

எட்டு என்ற எண்ணில் இரண்டு என்ற எண் அடங்கி நிற்கும் ஆகையால் உடையாள் உந்தன், நடுவிருக்கும் என்பதும் 'உ' என்ற எழுத்தில் 'அ' என்ற எழுத்து அடங்கி நிற்கும் ஆகையால் உடையாள் நடுவுள் நீ இருத்தி, என்பதும் நாம் எண்ணலும் எழுத்தாலும் உணரும் அமைப்பு முறைகளாம்.

இனி ''அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பது'' என்பதையும் இவ்வாறே காணலாம்.

''ஓம்'' என்ற பிரணவத்தையும் 'சிவயநம' என்பதையும் இணைத்தால் 'அ' என்பதன் விரிவே 'சி' என அமைகிறது. 'உ' என்பதே 'வ' என அமைகிறது. எண் அடிப்படையில் அ, உ என்பன (8+2=10) எட்டும் இரண்டும் என நின்று சி. வ என்ற எழுத்துக்களாய், கூட்டுநிலையில் பத்து என நின்றன. ந, ம என்பன மெய்யெழுத்து வரிசையில் எட்டாவதும், அதன்மேல் நின்ற இரண்டாவதும், கூட்டுநிலையில் பத்து என நின்றவைகள். பல எழுத்துக்களாகிய நம என்பனவும் எட்டும், இரண்டும் எனப்பிரிந்து நின்று, கூட்டமைப்பில் 'பத்து' என நின்றன.

சிவ/ய/நம

என்பதில் 'சிவ' என்பதும் பத்து; 'நம' என்பதும் பத்து. ஆயினும் எட்டு, இரண்டு எனநின்றே பத்து ஆயின. 'ய' என்ற எழுத்து உயிரைக் குறிக்கும். தமிழ் எண் கணக்கில் 'ய' என்பது பத்து என்பதைக் குறிக்கும். உயிர் எவ்வாறு 'பத்து' என நின்றது. உயிர் யாண்டும் தனித்து நிற்காது. 'நம' என்ற பத்தைச் சார்ந்து நிற்கும் அல்லது 'சிவ' என்ற பத்தைச் சார்ந்து நிற்கும். இந்தப் பத்திலாவது அந்தப் பத்திலாவது சேர்ந்துதான் நிற்க வேண்டும். ஆகையால் உயிர்க்கும் 'பத்து' என்ற எண் இருபாலாய் நின்று எண்ணின் அடிப்படையில் அமைந்த பெயராயிற்று. 'பத்து' என்பதில் உயிர் இருத்தல் என்பது பொதுநிலே. அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பது ஆணல் என்பது அனுபவநிலே. 'ஒன்பது' என நின்ற தொன்மைப்பொருள் 'ய' என்பதை இல்லமாக்கிக் கொளகிறது. 'ய' என்பதே உயிர்.

'ஒன்பது ஒத்து நின்று என்னுள் ஒடுங்கும்'' என்பது வாகீசர் வாக்கு. 'ய' கரத்தை இல்லமாகக் கொண்ட 'கோ' என்ற வகையில் ஆன்மாவானது இறைவனின் கோயிலாக அமைகிறது. ஒன்பது என்பதைத் தன்னுள் அடக்கிய அனுபவநிலேயில் அடியவர்கள் பத்து என நின்றார்கள். அதனுல் அவர்கள் 'பத்து' என்ற நிலேயில் பத்தர் எனப் பெற்றனர். உடையானேயும் உடையானேயும் தமக்கு உடைமை எனப் பெற்றமையால்..

'பத்துடையீர் ஈசன் பழ அடியீர்'' என்றார். ஒன்பது ஒத்துத் தம்முள் அடங்கியதைத் தம் அனுபவமூலமாக வெளிப் படுத்தும். 'கோயில்' என நின்றவர்கள் பத்து, பத்தர்

பத்தர் எனப் பெற்றனர். அவர்களே நட மாடும் ''கோயில் நம்பர்'' எனப்பெற்றனர். 'ஊனுடம்பு ஆலயம் எனப்பெற்றனர். அதனை ஒன்றில் இரண்டு வகையில்... கோயில் நம்பர்'' எனப் பெற்றனர். 'ஊனு டம்பு ஆலயம்' எனப்பெற்றனர். அதனை ஒன்றில் இரண்டு என்ற வகையில்..

''அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பது'' என்றார். அடியார் நடுவுள் இருந்தால் 'கோயில்' அனுபவம் வாய்க்கும் என்பதைக் குறிப்பில் உணர்த்தினர். பன்னிரண்டாந் திருமுறை அனுபவம் முழுவதும் 'கோயில்' என்பதற்கும் அவனேதானே ஆகிய அந்-நெறி'' என விளக்கி மெய்ப்பொருள் நிலையும் உய்ப்பெருநெறியும் இணைத்து வழங்கினர் மெய்கண்டார்.

திருநெறிய தமிழ் எனப்பெறும் திரு-முறையில் எண், எழுத்து அடிப்படைகளில் வருவனவற்றைத் தொகுத்து ஆய்தல் வேண்டும். அருளனுபவக் குறிப்புகளிற் பலவற்றை எண்ணலும் எழுத்தாலும் இணைத்தால்தான் உணர முடிகிறது. அவ்வாறு அருளப் பெற்ற திருமுறைப் பதிகங்கள் பல உள்ளன.

திருஞானசம்பந்தர் சீர்காழியின் பன்-னிரு நிலைகளைத் தாங்கிய பெயர்களில் தான் பத்தில் நின்றேன் என்று குறிப்பிட் டருளுகின்றார்.

முடிப்புரை:

எண்களின் அடிப்படையில் மெய்ப்-பொருளை உணர்தல் ஒருவகை அனுபவ நிலை. அருணலஞ்சான்ற திருமுறை யாசிரியர்களின் அருளிப் பாடுகளைப் பண்ணின் அடிப்படையில், பொருளின் அடிப்படையில், ஆய்ந்து தெளிதில் போலவே எண்ணின் அடிப்படையிலும் ஆய்ந்து தெளிதல் உண்டு. இம்முறை ஏனைய இரண்டுமுறைகளில் நின்று ஆய்ந்து தெளி தலை மறுக்கும் முறை ஒன்று. ஏனைய முறைகளைப் போலவே எண்ணலும் ஆய்ந்து தெளிதலை மறுக்கும் முறை ஒன்று. ஏனைய முறைகளைப் போலவே எண்ணலும் ஆய்ந்து தெளிந்து திருவருளின்பம் துய்க்க இயலும் எனக்கொள்ளலாம். எண்ணின் அடிப் படையில் பல அருளனுபவச் செய்திகளைத் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் முதன்மைப் படுத்தி அருள் வழியில் நின்று எடுத்துக் கொடுத்துள்ளார்கள். அவ்வகை-யில் நின்ற அருளனுபவ வழியே 'கோயில்' என மலர்ந்து, அது தில்லையாய்த் திருச்சிற் றம்பலமாய், பொன்னம்பலமாய் பன்னி ரண்டாந் திருமுறை அரங்கேற்றக் கோயி லாய் வெளிப்பட்டது என உணர்தல் எண் என நின்ற கோயில் அனுபவம்.

'பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டினோடு இரண்டும் அறியேனையே'

என்ற மணிவாசகர் வாக்கினையும் இணைத்-துத் தெரிதல் வேண்டும், இவைகளையெல்-லாம் தன்னுட் கொண்டுவந்து நிறுத்தும் மணிவாசகரின் கோயில் மூத்த திருப்பதிகப் பாடலை இங்கே கண்டு தெளியலாம்.

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானுன் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய்பொன்
னம் பலத்தெம்
முடியா முதலே என் கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே. □

''ஒன்று கண்டேன் இவ்வுலகுக்கு ஒரு கனி தன்று கண்டேன் அது நமச்சிவாயக் கனி மென்று கண்டால்–அது மெத்தென்றிருக்குமே தின்று கண்டால் அது தித்திக்குந் தானே''

–திருமூலர் திருமந்திரம்–

நம்பியாரூரர் கண்ட தில்லைத் தரிசனம்

வித்துவான் வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ

தருமபுரம்

தில்லைச் சிறப்பு:-

சமய உலகில் தில்லை எல்லையில்லாத பெருமை உடையது. பூலோக கயிலாயம் எனப் புகழப்படுவது. ஐம்பூதத்தலங்களில் ஆகாயத்தலமாய், ஐந்து மன்றங்களில் பொன்மன்றமாய் விளங்குவது. உலகபுருடனின் இதயத் தானமாகும் சிறப்பினது. ஏனைய தலங்கள் எல்லாவற்றிலுமுள்ள சிவ கலைகள் நாள் தோறும் அர்த்தயாம வழிபாட்டின்போது தில்லையில் ஒடுங்குகின்றன என்று கூறப்படுவதால் எல்லாத் தலங்களுக்கும் தலைமைத் தலமாய் தில்லை விளங்குகிறது என்ற உண்மையை நாம் உணரலாம்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றுலும் சிறந்த இத்திருத்தலத்தில் சிவபிரான் ஆனந்தக் கூத்தராக எழுந்தருளியிருந்து அன்பர்கட்கு அருள்புரிகின்றார். பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர்கள் பொருட்டு இத்தலத்தில் பெருமான் ஆனந்தநடனம் புரிந்தருளினர் எனக் கோயிற் புராணம் கூறுகிறது. முதலும் முடிவுமில்லாத அற்புதத் தனிக்கூத்து என சேக்கிழார் இத் திருநடனத்தைப் புகழ்ந்து ஏத்தியுள்ளார். சைவ சமய அருளாளர்கள் பலரும் இத்திரு நடனத்தைத் தரிசித்துப் போற்றியுள்ளனர். தரிசனம் என்ற சொல் தில்லையில்

நடராசப் பெருமான் அருட்காட்சி நல்குவதைக் குறிக்கும் சொல்லாக விளங்குகிறது.

முத்தித்தலம்:-

தில்லைக்குள்ள தனிப்பெருமைகளில் ஒன்று இத்தலம் தரிசிக்க முத்திதரும் என்பதாகும். திருவாரூர் பிறக்கவும், காசி இறக்கவும், திருவண்ணுமலை நினைக்கவும், முத்திதரும் தலங்களாக இதனோடு எண்ணப்படுவதை அன்பர்கள் அறிவர். தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீகுருஞான சம்பந்தர் முத்தித்தலங்களில் ஒன்றுகத் தில்லையைக் குறிப்பிட்டு ஓதுவதை அவர் அருளிய சிவபோகசாரப் பாடலால் அறியலாம்.

''தில்லைவனம், காசி, திருவாருர், மாயூரம், முல்லைவனம், கூடல், முதுகுன்றம் நெல்லை, களர், காஞ்சி, கழுக்குன்றம், மறைக்காடு, அருணை காளத்தி, வாஞ்சிய மென் முத்தி வரும்''.

சுந்தரர்:-

சமயாசாரியர்களில் ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் இத்தலத்திற்கு எழுந்தருளி வழிபட்டதைச் சேக்கிழார் பெருமான் சிறப்புற எடுத்து மொழிந்துள்ளதைப் பெரியபுராணத்தில் காணலாம்.

நம்பியாரூராகிய சுந்தரர் திருவெண்ணெய்நல்லூர்ப் பெருமானால் தடுத்தாட்கொள்ளப் பெற்று 'அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக!' என அவ்விறைவன் பணித்தவண்ணம் தலங்கள் தோறும் எழுந்தருளி வழிபடும் விருப்புடையவராய்த் திருத்துறையூர் சென்று அங்குள்ள பெருமானை வழிபட்டு ஐம்பொறிகளை வழியாக உடைய ஐந்து அவாவினையும் அடக்கி ஆளும் தவநெறி தந்தருளுமாறு வேண்டிப் பெற்றுத் திருவதிகையை அடைந்து அங்கே சிவ பெருமானால் திருவடி சூட்டப்பட்ட பின் திருமாணிகுழி திருத்தினைநகர் முதலிய தலங்களைத் தரிசித்துத் தில்லைப் பெருமானை வழிபடும் பெருவேட்கை உடையவராய்த் தில்லை எல்லையை அடைந்தார். சிவனடியார் பலரும் எதிர்கொண்டழைக்கத் திருவீதியை வலம் வந்து திருக் கோயிலை அடைந்தார். செம்பொன் மாளிகையின் நடுவே மேருமலைபோல் விளங்கும் பேரம் பலத்தை வலஞ்செய்து வணங்கினார். வேதத்தின் முதலிலும், முடிவிலும் மெய்யன்பர் களுடைய சிந்தையிலும் ஒளிமயமாக விளங்கும் ஞானமயமான திருச்சிற்றம் பலத்தை வலம் வந்து திருவனுக்கன் திருவாயிலை அடைந்தார். உலகெலாம் கண்டு இன்புறமன்றுள்ளே நின்று ஆடும் இறைவனது மலர்ச்சிலம்படிகளைப் போற்றினார்.

''வையகம் பொலிய மரைச் சிலம்பு ஆர்ப
மன்றுளே மாலயன் தேட
ஐயர்தாம் வெளியே ஆடுகின்றாரை
அஞ்சலி மலர்த்திமுன் குவித்த
கைகளோ திளைத்த கண்களோ அந்தக்
கரணமோ கலந்தஅன் புந்தச்
செய்தவப் பெரியோன் சென்று தாழ்ந்-
தெழுந்தான்

திருக்களிற் றுப்படி மருங்கு''

எனக் கூறுகிறார் சேக்கிழார். சுந்தரர் திருச்சிற்றம்பலத்தில் விளங்கும் திருவனுக்கன் திருவாயிலை அடைந்தவுடன் தன்வசமிழந்து பரவசமான நிலையைச் சேக்கிழார் இத்திருப் பாடலில் முதற்படி நிலையாகத் தெரிவித்தருள்கிறார்.

'அன்புதூண்ட மனம் முதலிய உட்கரணங்கள் தொழிற்படும் பின் அவைஏவக் கண்காணும் அதன் பின் கைகுவியும், ஆனதால் சுந்தரர்க்கோ தவயோகமுதிர்ச்சியினால் இவையனைத்தும் ஒருங்கே நிகழ்ந்தன' என சிவக்கவிமணி திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் இப்பாடலுக்குச் சிறப்பு விளக்கம் தருகின்றார்.

திருவனுக்கன் திருவாயிலை அடைந்து நடராசப் பெருமானது அற்புதத் திருக்கூத்தைக் கண்ட அளவில் சுந்தரர்க்கு ஏற்பட்ட தனி அனுபவத்தைச் சேக்கிழார் சிறப்பித்துக் கூறும் பாடல் இறைவனைச் சிவஞானிகள் எவ்வாறு தரிசித்து

இன்புறுவர் என்பதை நாமறிதற்கு உதவும் திருப்பாடலாக விளங்குகிறது.

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகழ்ச்சியில் மலர்ந்தார்

என்பதுதான் அத்திருப்பாடல். சுந்தரர் தில்லைப் பெருங்கூத்தப்பிரானைத் தரிசித்துப் பேரின்பம் பெற்று மகிழ்ந்ததை இத்திருப் பாடல் நன்கு சித்திரிக்கிறது.

ஐம்பொறிகள்:-

நமக்கு இறைவனாலே தரப்பட்ட பொறிகள் மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. அவற்றின் வாயிலாக நம் அறிவு புலன்களைச் சென்று பற்றும் இயல்பினது. அறிவு ஒன்றேயாயினும் பொறிகளின் வழியிற்சென்று அவை புலன்களை அறிதலின் அறிவும் ஐந்தாக வைத்து எண்ணப்பெறும். இவ்வைந்து வகை அறிவும் வெவ்வேறு பொறிகளின் வழியில் வெளிச்சென்று பொருட்களை அறிதலைக் காணலாம். கண்காணும் வாய் சுவையறியும் - செவிகேட்கும் - மூக்கு மணமறியும், மெய் உற்றுணர்வுணரும். சுந்தரர் நடராசப்பெருமானைத் தரிசிக்கும் போது ஐவகையான அறிவுகளையும் கண்களே கொள்ள ஏனைய பொறிகளின் அறிவுகள் தொழிற்படா தொழிந்தன எனக் கூறுகிறார் சேக்கிழார்.

உட்கரணங்கள்:-

ஆன்ம தத்துவங்களில் உட்கரணங்களாக விளங்குவன நான்கு. அவை மனம் புத்தி சித்தம் அகங்காரம் எனப்படும்.- மனம் பொருள்களைப்பற்றும். புத்தி அப்பொருள்களை இன்னதென ஆராயும். சித்தம் சிந்தித்துணரும், அகங்காரம் அப்பொருளை அடைய முயற்சிக்கும் நான்கு உட்கரணங்களில் சிந்தை சிறந்த உட்கரணம். சுந்தரர் நடராசப்பெருமானைத் தரிசிக்கும் போது சித்தம் தவிர ஏனைய கரணங்கள் தொழிற்படாதொழிந்தன- என்கிறார் சேக்கிழார்.

'சித்தம் ஒடுக்கிச் சிவாய நம என்-
றிருக்கினல்லால் அத்தன் அருள்பெறலா-
மோ என்கிறார் அப்பரும்.

முக்குணங்கள்:-

ஆன்ம குணங்கள் மூன்று. அவை- இராஜசம், தாமசம், சாத்துவிகம் எனப்படும். இம்முக்குணங்களும் மாறிமாறி- உயிரைப் பற்றி நிற்கும். இராஜசம் மனை எழுச்சியும், தாமசம் சோம்பலையும், சாத்துவிகம் அறிவுத் தெளிவையும்- உயிருக்கு விளைவிக்கும். உயிர் சாத்துவிக குணத்தைச் சார்ந்திருக்கும் போது தான் உண்மை உணர்வும், ஞானமும் நமக்கும் உண்டாகும். சுந்தரர் தில்லைக் கூத்தனைத் தரிசிக்கும் வேளையில் ஏனைய குணங்கள் தொழிற்படாதொழிய சாத்துவிகநிலையில் விளக்கினார் என்கிறார் சேக்கிழார்.

வாயொன்று சொல்ல மனமொன்று சிந்திக்கச் செய்யும் வழிபாடு பயன்தரா என்பதை இத்திருப்பாடலில் சேக்கிழார்- அழகுறத் தெரிவித்தருள்கிறார். கடவுள் வழிபாட்டில் ஈடுபடும்போது எத்தகைய அருளனுபவம் விளையும் என்பதைப்- பாடலின் பிற்பகுதி விளக்குகிறது.

இப்பாடலுக்குச் சொற்பொருள்- கூறுவது எளிது. நின்று காட்டுதல் அரிது.

அனுபவப்பொருட்கள்!-

ஸ்ரீ குமர குருபரமுனிவரைத் தருமை ஆதீன அடியவராக்கிய பெருமை இத் திருப்பாடலுக்கே உரியதாகும். குமரகுருபரரைச் செந்திலாண்டவன் ஆட்கொண்டருளிய போது முனிவர் 'தனக்கு ஒரு குருநாதரை அருள வேண்டுமென முருகப்

பெருமானே வேண்டினர். 'உன் வாக்குத் தடைப்படுமிடத்தில் தக்க குருநாதர் ஒருவரை நீ அடைவாய் என முருகன் அருளினர். குமரகுருபரர் முருகன் திருவருளால் பழுத்த தமிழ்ப் புலமை பாலிக்கப்பெற்று மதுரை முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு தருமபுரம் வந்தடைந்தார். ஊரை அடைந்த அளவில் சிவபோதம் நீங்கப்பெற்றுச் சிவபோத மெய்திய நிலையில் அப்பொழுது எழுந்தருளியிருந்த நான்காவது குருமூர்த்திகளான ஸ்ரீமாகிலா மணி தேசிகசுவாமிகளைத் தரிசித்தார். மகாசந்நிதானம் அவர்கள்குமரகுருபரரின் புலமை நலத்தை வியந்து அவரை ஆட்கொண்டருளத் திருவுளம் கொண்டு 'பெரிய புராணத்தில் ஐந்து பேரறிவும்' என்று தொடங்கும் பாடலுக்கு அனுபவப் பொருள் கூற இயலுமா எனக் கேட்டார்கள். குமரகுருபரர் நம்மால் இயலாத நிலையை அறிந்து தம் வாக்குத் தடைப்பட்டதை உணர்ந்து இவரே முருகப் பெருமான் நமக்குக் காட்டிய குருநாதர் என அவர்தம் திருவடிகளில் வீழ்ந்துவணங்கித் தன்னை அடியவராக ஏற்றருளுமாறுவேண்டினர். குருநாதர் குமரகுருபரரைச் சிதம்பர யாத்திரை சென்று வருமாறு செய்து அவரை ஆதீன அடியவராக்கி அருள் புரிந்தார்கள்.

திருவாசகம்:-

இத்தகைய அருளனுபவநிலையில் நின்று காணும் பொருட்சிறப்புடைய ஒரு திருவாசகப் பாடலையும் நாம் இதனோடு இணைத்துக் காணலாம்.

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை
யார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றி யென்னும் கைதான் நெகிழ
விடேன் உடையாய் என்னைக்
கண்டு கொள்ளே

என்கிற பாடலும் இவ்வாறு அனுபவப் பொருள் காணுமாறு அமைந்துள்ளது.

இனிய பிறவி:-

சுந்தரர் திலலைக் கூத்தன் திருமுன் நின்று தொழுது மாறிலா மகிழ்வு பெற்று பொதுவகையில் பிறவி துன்பமுடையதாயினும் இறைவனது திருநடனம் கண்டு தொழுத பெருமையால் தனக்கு இம்மானுடப்பிறப்பு, இன்பத் தருவதாயிற்று என்று ஆனந்தக்கண்ணீர் அருவி போலக் கண்களிலிருந்து பெருகிவரக் கைகளை உச்சிமேல் குவித்துத் திருப்பதிகம் பாடிப் போற்றிப் பரவினர்.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உந்தன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரிய
கைமலர் உச்சிமேல் குவித்துப்
பண்ணிஞல் நீடி அறிவரும் பதிகம்
பாடினர் பரவினர் பணிந்தார்.

பெரியபுராணத்துள் வரும் இம்மூன்று திருப்பாடல்களும் சுந்தரர் வழிபட்ட நெறியை நமக்குச் சொல்வதோடு நாம் எவ்வாறு அப்பெருமானே வழிபட வேண்டுமென்றும் நம்மை நெறிப்படுத்துவனவாய் அமைந்து விளங்குகின்றன. □

'காலமுண்டாகவே காதல்செய் துய்ம்மின் கருதரிய ஞாலமுண்டாஞெடு நான் முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண்டானெங்கள் பாண்டிப் பிரான்தன்னடியவர்க்கு மூலபண்டாரம்
வழங்குகின்றன வந்து முத்துமினே.
–திருவாசகம்.

அருச்சனை பாட்டேயாகும்

டாக்டர் த. கோ. பரமசிவம்

இணைப் பேராசிரியர், ஓலைச் சுவடித்துறை தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

அருச்சனை வழிபாடே சிறந்தது. ஓசை ஒலியெல்லாம் ஆகி நிற்பது அதுவே. பிரணவ ஒலியாக ஒங்கி யிருப்பதும் அதுவே. மற்ற மற்ற பொருள்களுக் கெல்லாம் அழிவு உண்டு. ஆகாயம் அழியாதது. அருச்சனை வகையில் மலரிடுவதும், மணப்பொருள் இடுவதும் (குங்குமம், விபூதி, சந்தனம் சவ்வாது போன்றன) தூப தீபங்கள் காட்டுவதும் அவ்வக் காலத்தே அழிந்து படும் இயல் புடையன. ஆயின்பாடல்களோ மலரவன் செய்யும் உடல்கள் போல்-பொருள்கள் போல் அழிந்துபடுவன அல்ல. என்றும் நிலைத்து நிற்பன. எனவேதான் உயர்ந்த அர்ச்சனை என்பது பாட்டே என்றார் சொற்றமிழ் காதலித்த சோதியார்.

மலர்வழிபாட்டையும் நீர் வழிபாட்டையும் கூட ஆரவாரத் தன்மையுடையனவாகக் கருதுபவர்கள் காசுகளைக் கொண்டு அர்ச்சிப்பவர்களை என்ன நினைப்பார்கள்? கனகார்ச்சனை என்ற பெயரில் தங்கக் காசுகளையும் வெள்ளிக் காசுகளையும் எறிந்து வழிபடும் சடங்கையும் உயரிய அர்ச்சனையாகக் காட்டுகிறது ஒரு கூட்டம். வட நாட்டில் சில இடங்களில் போகிற போக்கில் மூர்த்தியின் மீது 5 காசு 10 காசு, 25 காசுகளை எறிந்துவிட்டுப் போகிற நிலையைக் காணலாம். இவற்றையெல்லாம் கண்டு வெட்கப்படுவதைத் தவிர வேறென்ன செய்வது? இறைவன் நாம் போடும் 5, 10, காசுகளுக்கா ஏங்கி இருக்கிறான்! உயர்ந்த அன்பல்லவா -

அவன் விரும்புவது? ஆறறிவு கொண்ட மனிதன் கூட இதை உணராது செயற்படுகிறான் என்றால், மூர்த்தியின் மீது - உராய்ந்து தன் தினவைத் தேய்த்துக் - கொள்ளும் எருமைக்கும் நமக்கும் என்ன வேறுபாடு?

இவற்றையெல்லாம் நீடு நினைந்தவர் சேக்கிழார் பெருமான். அவர் சடங்குகளை நோக்கி நோக்கி உணர்ந்தவர். நாயன்மார்களின் பாடல்களில் தேனாகத்-

தோய்ந்தவர். பதிகங்கள் தோறும் பரமனைக் கண்டவர். ஆதலின் அவர்களின் உணர்வுகளை முழுவதுமாக உணரத் தலைப்பட்டார். உலகம் தோன்றிய நாள்-

முதலாக எத்தனைகோடி மக்கள் இறைவனை அர்ச்சித்து வழிபட்டுள்ளனர்? அவர்களை யெல்லாம் நாம் நினைவு கூர முடிகிறதா?

ஆயின் பாட்டால் அருச்சனை செய்து வணங்கிய இவர்களை நாம் 13 நூற்றாண்டுகள் கழித்தும் நினைத்துப் பார்க்கிறோம்! போற்றிப் பரவுகிறோம். காலங்கடந்தும் வாழ்வது அவ் அர்ச்சனை மலர்கள். அவை வாடுவதில்லை. சருகுகளாக மாறுவதில்லை. தண்ணீர் பட்டு அழிவதில்லை. நெருப்பால் வெந்து மடிவதில்லை. அம்மலர்கள் மண் பாதளம் புக்கு மால் கடல் மூடி மற்றேழ் உலகும் விண்பால் திசைகெட்டுத் திரியும் போதும் நறுமணம் வீசும் தன்மையன. எனவேதான் இறைவனை வழிபடும் அர்ச்சனை முறைகளில் தலையாயது அவனைப் புகழ்ந்து பாடுவதேயாகும் என்பதைச் சேக்கிழார் பெருமான் வற்புறுத்துகின்றார்.

இவ்வுண்மை நாயன்மார்தம் பாடல்களில் எந்த அளவுக்கு - விவரிக்கப் பெற்றுள்ளது - என்பதைத் தொடர்ந்து காண்போம்.

ஞானசம்பந்தர்:

ஞானசம்பந்தப்பெருமான் பிறந்து மொழி பயின்ற நாள் முதலாக இறைவனை நாளும் தமிழ்ப் பாமாலை களால் போற்றித் துதித் தவர். திரு நெறியத் தமிழாக அவர் காட்டுவது இறைவனை வாழ்த்தும் பாமாலைகளே. இறைவனைப் போற்றுவதும் துதிப்பதும் எதற்காக? இம்மைத் துன்பங்கள் கழியவும் மறுமை இன்பம் வாய்க்கவுமே இறைவனைப் பரவ வேண்டுவதன் நோக்கம் என்கிறார் அவர்.

'பரமனைப் பாடிடப் பாவமாயின தீரப் பனித்திடும்'.

என்றும்

'மறைவளரும் பொருளாயினானை - மனத்தால் நினைந்தேத்த
நிறைவளரும் புகழெய்தும் வாதைநினையா வினைபோமே'

(திருக்கலிக்காமூர். 6)

என்றும்

'மணஞ்சேரிப் பதியினைப் பாட- வல்லார் வினைபாறுமே'

என்றும்

'கண்கள் ஆர்தரக் கண்டுநங் - கடிக்குளத்
துறைதரு கற்பகத்தைப்
பண்கள் ஆர்தரப் பாடுவார் - கேடிலர்
பழியிலர் புகழாமே'

என்றும்

'பாடியாடும் மெய்ப்பத்தர்கட் - கருள்செயும்
முத்தினை பவளத்தை'

என்றும்

'பாட்டி னாற்பணிந் தேத்திட -
வல்லவர்
ஓட்டி னார்வினை ஒல்லையே

என்றும் ஆங்காங்கு அவர் -
சுட்டுதல் காணலாம்.

காதலாகிக் கசிந்து கண்ணீர்
மல்கி ஓதுவார் தமை நன்னெறிக்-
குய்க்கும் விந்தையை உலகுக்கு -
எடுத்துக் காட்டியவரல்லவா
அவர்? எனவே பாடித் தொழு-
தேத்தும் பான்மையால் பெற்ற -
இன்பம் அனைத்தும் உணர்ந்த -
நிலையில் பாடித் தொழுவதே தம் -
கடனைக் காட்டுகின்றார்.

'ஆடும்அவிர் சடையான் அவன்மேய
ஆரூரைச் சென்று
பாடுதல் கைதொழுதல் பணிதல் -
கருமமே'

என்றும், ''இறைவன் கழலேத்தும்
இன்பம் இன்பமே',
''செல்வன் கழலெத்தும்
செல்வம் செல்வமே' (இல்லை)

என்றும் உறுதியாகக் கூறுகின்றார்.
இறைவனை எவ்வாறு பாடவேண்டும்,
பரவ வேண்டும். அவன் குணங்களை,
தெரிந்துபாட வேண்டுமா? பொருள்
கூட்டிப் பாட வேண்டுமா? ஆழ்ந்த
பொருள் பொதிந்து பாடவேண்டுமா?
வேண்டாம். அன்பால் நினைந்து பாடினால்
போதும். பொருளறி வாரா சொற்களா
னாலும் அவன் ஏற்றுமகிழ்வான் என்பதைத்
திருவைகாவூர் பதிகத்தில் கூறுகின்றார்.

'கோழைமிட றாககவி கோளும்இல -
வாகஇசை கூடுவகையால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன
சொல்மகிழும் ஈசன்'

ஏழையடியவர்கள் சொல்லும் எல்லாவற்
றையும் மகிழ்ந்து ஏற்றுக் கொள்ளான்
இறைவன். குழந்தைகளின் பொருள்
அறிவாரா சொற்களை மழலைப் பெற்றோர்
மகிழ்ந்து சுவைப்பது போல கோளை
நிறைத்த தொண்டைக் கொண்டு பொரு
ளில்லாக் கவிதையை இசையல்லா
இசையில் பாடினாலும் அவை ஏற்று மகிழ்
வானும். இது அவர் காட்டும் அர்ச்சனை
யாகும்.

அப்பர் பெருமான்

இறைவனைச் சொல்லாகவும் சொல்
லின் பொருளாகவும் பொருளின் கருத்
தாகவும் கண்டு பரவியவர் அப்பர் பெரு
மான். அவனை மனத்தகத்தானாகவும், தலை
மேலானாகவும், கண்டு மகிழ்கின்றார்.
தொல்லை வினையறுத்துச் சோதிகண்டு
வீடுபெறும் அற்புதம் இறைவனைப் பாடு
வதாலேயே நிகழும் என்று காட்டுகின்
றார். இறைவனை வாழ்த்துவதற்கே நமக்கு
வாய் படைக்கப் பட்டது. அவனை நினைப்
பதற்காகவே நெஞ்சும் படைக்கபட்டது.
எனவே 'வாயே வாழ்த்து கண்டாய்' என்று
ஆணையிடுகின்றார். இறைவனைப் பாடி
வதால் இப்போதுள்ள வினைமட்டுமல்லா
மல் முன்செய்த வினைகள் கூட ஓடிப்போது
மாம்.

'ஆடிப் பாடிஅண் ணைலை கைத் தொழு
ஓடிப் போகும்நம் மேலை வினைகளே'

என்றும்,
'சொற்றுணை மாலைகொண்டு தொழுதெழு
வார்கட்கெல்லாம்
நற்றுணை யாவர் போலும் நாகசச் -
சரவனாரே'

என்றும் அவர் அழகாகப்பாடுகின்றார். -
அவனைப் போற்றிப் பரவும் போதும்,
'பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி''

என்றும்
'பாராகிப் பண்ணாகிப் பாடலாகிப் பரஞ்-
சுடராய்'

நிற்பவன் என்றும் பாடலாகவே அவனைக் கண்டு போற்றுகின்றார்.

ஆடிப்பாடும் அன்பர்தம் உள்ளமே - இறைவன் குடிகொள்ளும் கோயில். - அவரையே அவன் பற்றி நிற்பான். - பாடலால் பத்தி செய்பவர்க்கே அவன் நெருக்கமாவான். எனவே அவனைப் - பாடுவதே நம் வாழ்க்கையின் பொருள் என்கிறார் அவர்.

'வள்ள லார்கழல் வாழ்த்தல்வாழ் வாவதே'

என்றும்,

'பண்ணிற் பாடல்கள் பத்திசெய் வித்த-
கர்க்கு
அண்ணித் தாகும் அமுதினே' (திருவா-
மாத்தூர்)

என்றும்

'தொழுதுஎழுந்து ஆடிப் பாடித் தோத்திரம்
பலவுஞ்சொல்லி
அழுமவர்க்கு அன்பர் போலும் ஆவடு -
துறைய னாரே'

என்றும்,

'துன்பிலாத் தொண்டர் கூடித் தொழுதழுது
ஆடிப் பாடும்
அன்பலாற் பொருளும் இல்லை ஐயன்ஐ
யாற னுர்க்கே,'

என்றும், அவனைப் பேசாத நாள் எல்லாம் பிறவாத நாளே என்றும் வீணுக்கிக் கழிந்த நாளே என்றும் அவர் தெளிவுட்கின்றார்.

இறைவனைப் பாடுவதற்கே புகழந்து வாழ்த்துவதற்கே இப்பிறவி வாய்த்தது. இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திப் பிறவிக்கடலை நீந்த வேண்டிய நாம் தவறி விட்டால் வரும் இழப்பு மிகப் பெரிய தாகும். இறைவனைப் பாடித் தொழாத அன்பர்களுக்காக அவர் இரங்குகின்றார்.

அவர்கள் வாழும் ஊரையே விலங்குகள் வாழும் காடாகக் கண்டு வருந்துகிறார் அப்பரடிகள்.

'திருக்கோயில் இல்லாத திருவில்லூரும்
திருவெண்ணீறு
அணியாத திருவில் லூரும்
பருக்கோடிப் பத்திமையால் பாடா
ஊரும்
.....
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே'

என்று நொந்து கொள்கிறார் அவர்.

பிறவிக் கடலை கடக்க வேண்டும். வீடு பேறு காண வேண்டும். சிவகதியைப் பெற்று இறுமாந்திருக்க வேண்டும். இது உயிர்களின் அவா. அதற்கு மிக எளிய வழி யொன்றை அப்பர் பெருமான் காட்டு கின்றார். கல் தோன்றி மண்தோன்றுக் கால முதல் சித்தர்களும் முத்தர்களும் பத்தர் களும் எத்துனையோ வழியைக் காட்டிவிட்டனர். அவையெல்லாம் முட வனுக்குக் கொம்புத் தேன் காட்டிய வழி களாய் இருந்தன. ஆயின் அப்பர் பெரு மான் மக்கள் எல்லோராலும் எக்காலத்தும் எவ்விடத்தும், எந்நிலையிலும், எம்மொழி யிலும், எச்சூழலிலும் கடைப்பிடிக்க முடிந்த ஒரு வழியைக் காட்டுகின்றார். அது அவனைப் பாடிப் பரவுவதே ஆகும். அவனைப் பாடினால் அவன் கிடைப்பான். சிவகதி கிடைக்கும். பிறவித் துன்பம் நீங்கும்.

'கேடு மூடிக் கிடந்துண்ணும் நாடது
தேடி நீர்திரி யாதே சிவகதி
கூட லாந்திருக் கோவிலி ஈசனைப்
பாடு மின்இர வோடு பகலுமே'

அவனை இரவு பகலாகப் பாடித் துதிப்ப தொன்றுமே போதும். காடுசென்று தவம் செய்ய வேண்டா. மூர்த்தி, தீர்த்தம், தலம் என்று ஊர் சுற்றித் திரிய வேண்டா.

பிறவி நோய்க்கு இப்படி ஓர் எளிய மருந்து.

அவனே அடைவதற்கும் நம் வினை களைப் போகுவதற்கும் நாம் செய்யும் பிற செயல்கள் ஆரவாரத்தன்மை கொண் டனவே. அவனைப் பாடித் துதிக்காமல் செய்யும் பிற வழிபாடுகள் வீணே. அவ் வழிபாடுகளால் பயன் ஏதுமில்லை என்பதை இறுதியாகக் காட்டுகின்றார் அப்பரடிகள்.

'கூட வேடத் தராகிக் குழுவிலென்
வாடி யூனை வருத்தித் திரியிலென்
ஆடல் வேடத்தன் அம்பலக் கூத்தனைப்
பாட லாளர்க்கல் லாற்பயன் இல்லையே'
(பாவநாசத்திருக்குறுந் தொகை)

இந்த உறுதிவாக்கைக் கூறிய பின்னும் மேலும் ஒருபடி கடந்து சென்று ஒரு காட்சியைக் காட்டுகிறார் அவர். இறைவன் அவனை நினைந்து போற்றும் உள்ளத்தே நிற்பவன். அவன் விரும்பும் வழிபாடு நினைந்து போற்றி செய்வதேயாம் அதை விடுத்து பூவும் நீரும் கொண்டு வழி படும் ஆரவார வழிபாடுதான் சிறந்தது என்று நினைந்து செய்யும் பொய்யர்களைக் கண்டு அவன் வெட்கப்படுவான் என்று கூறு கின்றார் அவர்.

நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன் ஞர்சடைப்
புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே

அப்பர் அடிகளின் அர்ச்சனைபாட்டே என்ற கொள்கையை இவ்வொரு-பாட்டே போதுமன்றே.

சுந்தரர்:-

இறைவனே சொற்றமிழால் தம்மைப் பாடுக என்று விரும்பி வேண்ட, நாளும் இன்னிசையால் பதிக மாலைகள் சூட்டி வழிபட்ட சிறப்பினையுடையவர் சுந்தரர். சுந்தரரின் இனிய பாடல்களுக்காக மானி டப் பெண்ணொருத்தி பால் தூதும் சென் றவன் இறைவன். இவ்வொரு நிகழ்ச்சியே இறைவன் தமிழ்ப் பாமாலை மீதுகொண்ட ஆழ்ந்த விருப்பைக் காட்டுவதாகும்.

வாக்கென்னும் மாலைகொண்டு உன்னை
என்மனத்து
ஆர்க்கின்றேன் பரவையுண் மண்டளி
அம்மானே

என்று தம் வழிபாட்டை விளக்கிய அவர், பாட்டுப் பாடிப்பரவும் எளிய செய்கையால் மிகக் கடுமையான வினைகள் அற்றுப் போவாதாக அதன் பயன்பாட்டைக் கூறுகின்றார்.

'பாட்டும் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பார்'

நம்மைத் தொடர்ந்து பற்றிய வினைகளும் இனித்தொடர இருக்கின்ற வினைகளும் என இருவகை வினைகளும் அற்று விடும் என்றார் அவர்.

'நல்லிசை ஞானசம் பந்தரும் நாவினுக்கு
அரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி ஏத்துகப் பாவினை'

என்ற பாடலில் அவர்க்கு முன் வாழ்ந்து, இறைவனைப் பாடிப்பரவியே சிவகதி பெற்ற சிவச் செல்வர்களைக் குறிப்பிட்டு, அவர்தம் பாடலை இறைவன் ஏற்று - மதித்ததை நினைவு கூர்ந்து, அவர்தம் வழியிலேயே தாமும் பாடிப் பரவுவ-தாகக் கூறுகிறார். அவர், இந்த எளிய வழியின் சிறப்பை முழுதும் உணர்ந்து நின்றதால் "நற்றவா உன்னை நான் - மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே" என்று பாடுகின்றார்.

மாணிக்கவாசகர்:-

உருக்கமே வடிவான நூல் திரு-வாசகம் ஆகும். பாமாலைகளில் தேன் துளிகளால்நிறையப் பெற்ற அவ்வாச-

கத்தை அருளிய மாணிக்கவாசகப் பெருந்தகையார் உருகிய உள்ளன்பால் நாளும் இறைவனைப் போற்றி வழிபட்டவராவர். மூவர் முதலிகளைப் போலவே இவரும் தமிழகம் முழுவதும் சென்று இறைவனைப் பாமாலைகளால் அருச்சித்து அருள் பெற்றார். ஞானசம்பந்தப் பெருமான் கிளிகளை அழைத்து இறைவன் புகழைப் பாடுமாறு வேண்டுகிறார். கன்னிப் பெண்களைக் குளித்து மகிழும் போதும் இறைவனைப் பாடித் துதிக்க வேண்டுகிறார். தாம் பெற்ற இன்பத்தை இவ் வையகமும் பெற வேண்டும் என்று எண்ணியே எல்லோரையும் பாடித் துதிக்க அழைக்கின்றார்.

'மொய்யார் தடம்பொய்கை புக்கு முகே-
ரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்
பாடி'
'சீதப்புனலாடிச் சிற்றம் பலம்பாடி
'நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்

பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோர்
எம்பாவாய்'

இவ்வாறே பொற் சுண்ண இடிக்கும் போதும், தெள்ளேணம் கொட்டும் போதும் பொன்னூசல் ஆடும் போதும் அம் மானினை பாடும்போதும் அவனைப் பாடிக் கொண்டே இருக்க வேண்டும் என்கிறார். அவருடைய ஆழ்ந்த விருப்பம் இறைவனைப் பாடிப் பரவுவதே ஆகும்.

இதனை,

'பாட வேண்டும் நான் போற்றி
நின்னையே
பாடிநைந்துநைந்து உருகி நெக்கு-
நெக்கு
ஆடவேண்டும் நான் போற்றி'

என்னும் வரிகளால் தெளிவாக நாம் உணரலாம்.

மாணிக்க வாசகப் பெருந்தகையார் பாடிய திருவாசக அமைப்பே அருச்சனை வடிவானது தான். சிவபுராணம், - போற்றித் திருவகவல், கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, திருவெம்பாவை போன்ற எல்லர்ப் பகுதிகளும் அருச்சனை அமைப்பில் அமைந்தவையாகவே காட்சியளிக்கின்றன.

இறைவனை நெஞ்சார்ந்த அன்பால் உருகி அழைத்து அவனைப் போற்றும் அமைப்பில் இவை திகழ்வதை நாம் காணலாம்.

'அருச்சனை வயலுள் அன்புவித்து இட்டுத்
தொண்ட உழவர் ஆரத் தந்த
அண்டத்து அரும்பெறல் மேகன் வாழ்க
கரும்பனைக் கச்சைக் கடவுள் வாழ்க'

என்று அவர் அருச்சனைபுரியும் தன்மையை விளக்குவார்.

சிவபுராணத்தில் வரும் ஒவ்வொரு வரியும் அருச்சனையின் பண்புகளை - விளக்கு வதாகவே உள்ளமையை நாம் தெற்றென உணரலாம்.

''ஈசன் அடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே -
வடிபோற்றி''

என்று அவனைப்போற்றி அழைத்து,

''சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்-
யான்''

என்று சிவபுராண நோக்கத்தை விவரித்து,

''எண்ணிறந்த எல்லை இலாதானே நின்
பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்ற-
றியேன்''

என்று அவன் அளப்பருந் தன்மையை வியந்து,

ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளி-
யானே''

என்று பரவி நிற்கின்ற தன்மையை நாம் உணரலாம்.

சிவபுராணத்தின் முடிப்பும், அதன் பயனும் இறைவனைப் பாடிப்பரவுவதால் வரும் நன்மையை விவரிப்பதாகவே உள்ளது.

'சொல்லற்கு அரியானைச் சொல்லித்
திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து
சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார்-
சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து'

சிவகதியாம் சிவபுரத்தை அடைந்து மகிழ எவ்வளவு எளியவழியைக் காட்டு-கிறார் மாணிக்கவாசகர்!

இறைவனை வழிபடும் முறைகளில் சிறந்தது அவனை நாவாரப் பாடிப் - பரவுவதே என்பதை உணர்த்திய மாணிக்கவாசகர், எவ்வாறு உருகிப் - பாடவேண்டும். எவ்வாறு உருகிப் - போற்ற வேண்டும், எவ்வாறெல்லாம் அவனை ஒன்றி நினைக்க வேண்டும், - எவ்வாறெல்லாம் பரவ வேண்டும் - என்பதை விவரிக்கத் தவறினாரல்லர் நெருப்பைக் கண்ட மெழுகைப் போல உள்ளம் உருகவேண்டும். அப்போது - தான் அருச்சனை ஒருமுகமாக அமையும் என்கிறார் அவர்.

'மற்றோர்தெய்வம் கனவிலும்
நினையாது
அருபரத்து ஒருவன் அவனியில் வந்து
குருபரன் ஆசி அருளிய பெருமையைச்
சிறுமையென்று இகழாதே திருவடி
யிணையைப்
பிறிவினை அறியா நிழலது போல
முன்பின் ஆகி முனியாது அத்திசை
என்புநைந்து உருகி நெக்குநெக்கு ஏங்கி
அன்பெனும்ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாதனென்று அரற்றி
உரைதடு மாறி உரோமம் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித்து இருதயம் மலரக்
கண்களி கூர நுண்துளி அரும்பச்
சாயா அன்பினை நாள் தோறும்
தழைப்பவர்
தாயே ஆகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதியன் ஆகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆகட மதுரை அரசே போற்றி'

(போற்றித்திருவகவல் 74-90)

அருச்சனைப் பாட்டிற்கு அவர் தரும் இவ்விளக்கம் நீடு நினைந்து போற்று தற் குரியதாகும். ஒன்றி நினைந்து உருகிப் பாடும் பான்மையைச் சித்திரமாக்கி காட்டி யன்றே விளக்குகின்றார்.

சமய குரவர் களாகிய இவர்களுக்குப் பித்திய அருளாளர்களும் இறைவனை வழிபடுவதற்குரிய சிறந்தவழி பாடுவதே என்பதை நிலை நாட்டியவர் களாகவே திகழ்தலை நாம் காணலாம். சேக்கிழார், கம்பர், பரஞ்சோதியார், ஒட்டக்கூத்தர், வில்லிப்புத்தூரார், அருணகிரிநாதர், தாயுமானவர், பட்டினத்தார், இராமலிங் கர் தண்டபாணி சுவாமிகள் எனத் தொடரும் அருளாளர்களின் கூட்டமும் அவர் தம் பாடல்களும் இதனை வலி யுறுத்தல் காணலாம்.

இவ்வாறு சேக்கிழார் பெருமான் இத்தகு ஆழ்ந்த சிந்தனையுடன், 'அருச்சனை பாட்டே ஆகும்' என்னும் கருத்தை இறைவன் வாயி லாகவே வலியுறுத்தும் போக்கில் அமைத்திருக்கிறார் - மீண்டும் அந்த பக்தி இயக்கம்கண்ட 'பாமாலை வழி பாட்டை' வலியுறுத்தும் போக்கில் சுந்தரரை முன்னிருத்தி - இறைவன் வாயி-லாகவே உளம் உருகும் பாடலே சிறந்த வழிபாடு சிறந்த அருச்சனை என்பதை உணர்த்தியுள்ளார் எனலாம். வாழ்க அருச்சனைப்பாட்டு! □



திருச்சிற்றம்பலம்

இந்திரிய வயமயங்கி
சிறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்து போய்
அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தனைத் தெளிவித்துச்
சிவமாக்கி யெனையாண்ட
அந்தமிலா வானந்தம்
அணிகொள்தில்லை கண்டேனே.

— திருவாசகம்



தில்லைக் கலம்பகம்

உ. பழநி எம். ஏ. பி. ஓ. எல்

மொழிவல்லுனர், களஞ்சியமையம்–வாழ்வியல் தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தில்லைப் பெருங்கோயிலின் பெருமை குறித்து எழுந்த நூல்கள் பல. புராணங்கள் மூன்று உள்ளன. கலம் பகம், உலா, அந்தாதி, பிள்ளைத்தமிழ், மாலை முதலிய சிறு பிரபந்தங்களைப் புலவர்கள் பலர் நடராசப் பெருமான் மீதும் சிவகாமி அம்மைமீதும் பாடிப் பரவியுள்ளனர். அவற்றுள் ஒன்றே இரட்டையர் பாடிய தில்லைக் கலம்பகமாகும்.

"கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள்" என்று புலவர்களால் புகழப் பெற்ற இரட்டைப் புலவர்கள் கி. பி. 14ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்களாவர். இவர்கள் இருவரும் உறவினர். ஒருவர் குருடர்; மற்றொருவர் முடவர். முடவர் முதுசூரியர் என்றும் குருடர் இளஞ்சூரியர் என்றும் சொல்லப்பட்டனர். குருடர் முடவரைத் தோளில் சுமந்து செல்ல, இருவரும் சிவப்பதிகள்தோறும் சென்று இறைவனைச் செந்தமிழ்ப்பாவால் பரவி வழிபட்டனர். இவர்கள் இருவரும் பெரும் புலவர்களாக விளங்கியதுடன் தெய்விக ஆற்றல்களும் அமையப் பெற்றிருந்தமையால், தெய்வப் புலவர் என்றும் சிறப்பித்துச் சொல்லப் பட்டனர். இவர்கள் இத்தில்லைக்கலம்பகத்தைத் தவிரத் திருவாமாத்தூர் கலம்பகம், ஏகாம்பரநாதர் உலா நூல்களையும் பாடியுள்ளனர்.

தில்லைக்கலம்பகத்தில் சோழ நாட்டிலுள்ள பல ஊர்களைக் குறிப்பிடுவதால் இவர் சோழநாட்டினர் என்பது புலப்படுகிறது. வரலாற்றாசிரியர் இவர் சோழ நாட்டிலுள்ள இலந்துறை என்னும் ஊரைச் சார்ந்தவ ரென்றும், செங்குந்த மரபின ரென்றும் குறிப்பிடுவர். ஒரு செய்யுளின் முதற்பாதியை ஒருவர்பாட, மற்றொருவர் அக்கருத்தை நுனித்தறிந்து மறுபாதியைப் பாடி முடிப்பர். இவர் பாடல்களனைத்தும் ஒருவர் பாடினது போன்றே மிகச் சிறப்பாய் அமைந்துள்ளன.

கலம்பகம் என்பது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. பாட்டியல் நூல்கள் இப்பிரபந்தம் எப்படி அமைய வேண்டும் என்பதற்கு இலக்கணம் கூறுகின்றன. கலம்பகங்களுள் முந்தியது நந்திக் கலம்பகம் என்பது அறிஞர்கொள்கை. ஆனைடையபிள்ளையார் திருக்கலம்பகம், திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகம் என்பன அடுத்த நிலையில் பழமை வாய்ந்தன. அடுத்து வருவது தில்லைக்கலம்பகம். கலம்பகத்தில் பொதுவாக 18 உறுப்புகள் அமையவேண்டுமென்பர். இதில் 16 உறுப்புகளே உள்ளன. பல்வேறு யாப்பு வகை அமைந்தப்பாக்களும் இதன்கண்வந்துள்ளன. இவ்வாறுகதம்பமாகப் பல உறுப்புகளும் பாவகைகளும் கலக்கப்பெறுவதால்

இது கலம்பகம் எனப்பெயர் பெற்றது என ஆராய்ச்சியாளர் கூறுவர்.

இத்தில்லைக் கலம்பகத் திலுள்ள பாட்டுகள் அவ்வப் பாத்திரங்களுக்கேற்ப எளிமை, சிலேடை, மடக்கு முதலியன அமையப் பெற்று விளங்குகின்றன. இந் நூலில் 101 செய்யுட்கள் உள்ளன.

கி. பி. 14ம் நூற்றாண்டில் சோழராட்சி சீர்குலைந்தபோது பிறர் நம் நாட்டை அலைக்க முற்பட்டனர். அந்த நிலையைத் தில்லைக் கலம்பகத்தில் ஒரு பாடல் குறிப்பிடுகிறது. கார்காலம் என்னும் உறுப்பில் எழுந்த பாடலில், தலைவி தலைவன் வரவை எதிர் நோக்கியி ருக்கிறாள். கொன்றைபோலப் பசலை உடலிற் பரவியும் தலைவன் வரவில்லையே என வருந்துகிறாள். அவ்வமயம் தலைவன் வரும் வரைதான் ஆற்றியிருந்த துன்ப நிலையை ஓர் உவமை வாயிலாகப் புலப் படுத்துகின்றாள்.

'பூவணிக வேளாளர் புவியரசர் கொடுங்
கோன்மை பொறுத்தாற்போல
ஆவணியும் புரட்டாசி மாதமும் நான்
தனியிருந்திங்காற்றினேனே" (39)

என அழகாக ஆசிரியர் பாடியுள்ளார்.

"ஊசிக்கு நிகரான ஐங்கணைக்கும் தென்ற
லுக்கும் உறுவாடைக்கும்
மாசிக்கும் பங்குனிக்கும் முன்புவரும் பின்
பனிக்கும் வருந்திலேனே" (46)

என வரும் பாடலும் படித்தின்புறத்தக்கது.

சிதம்பரத்திலேயே ஐந்து சபைகளும் இருக்கின்றன. முதற் பாடலிலேயே ஆசிரியர் இவ்வைந்து சபைகளையும் குறிப்பிடுகிறார்.

"சீர்கொண்ட மன்றமென்றும் திருச்
சிற்றம்பல மென்றும்
ஏர்கொண்ட பொழிற்றில்லை எழிற்
பொன்னம்பலமென்றும்
வார்கொண்ட முலையுமையாள் வாழ்பேரம்
பலமென்றும்
பேர்கொண்ட கனகசபைப் பெரும்பற்றபுலி
யூரோய்"

இவற்றுள் மன்றம் என்பது ஆயிரக் கால் மண்டபம். சிற்றம்பல மென்பது சிதம்பரரகசியம். பொன்னம்பலமென்பது பொன் ஒடுவேய்ந்துள்ள பகுதி. பேரம் பலம் என்பது அணிகலன்கள் வைக்கும் இடம். கனகசபை என்பது நிருத்தசபை. எல்லாச் சபைகளையும் சேர்த்துக் கனகசபை என்று கூறும் வழக்கமுள்ளது. இதனைக் கோயிற் புராணமும் நன்கு விவரித் துள்ளது.

'புயவகுப்பு' என்னும் உறுப்பில் தில்லை யம்பலவாணர் கனகப்புயங்கள் மாணிக்கவாசகர் இயற்றிய திருக்கோவை யாரே எழுதிச் சிவத்தன என்றும், நம் தேவார ஆசிரியராய மூவர் முதலிகளின் செந்தமிழ் அருட்பாடல்களைச் சுமந்து கொண்டிருக் கின்றன என்றும் ஆசிரியர் கூறுவார். இதனால் சமயாச்சாரியர்களிடம் இரட்டையர் கொண்டுள்ள ஈடுபாடு புலனாகும்.

வடமொழிச் சொற்களைத் தமிழ் மரபிற் கேற்ப மாற்றி ஒலிக்க வேண்டும் என்ற இக்கால அறிஞர் கொள்கையை இரட்டையர் தம் நூலில் மேற் கொண் டுள்ளார்.

பிச்சியார் என்பவர் தூலமேந்தித் திருநீறு முதலிய சின்னங்களை அணிந்து கொண்டு வீடு தோறும் சென்று பிச்சை யேற்றுண்பவர். அவரைக் காமுகன் ஒருவன் கண்டு விரும்பிப் பாடியதாக ஒரு செய்யுள் காணப் படுகிறது. அதில் பிச் சியார் என்பதற்கேற்ப அச் செய் யுளிலுள்ள சொற்கள் பல வற்றையும் போலிகளாக எடுத்தாண்டுள்ள திறம் பாராட்டற்பாலதாக உள்ளது.

"சருவிச் சீராட்டும் பஞ்சவன்னக்கிளி
யேந்தித்தவத்தோர் காணத்
தெருவிச் சீராயணித்த கஞ்சுளியும் திரு-
நீறும் தெரிசித்தோரைப்
பொருவிச்சீர்; பேராகை பூண்பிச்சீர்;
சண்டையிடு பூசலெல்லாம்
வருவிச்சீர்; மடல் ஏறவைப்பிச்சீர் வெண்-
புலியூர்வரும் பிச்சீரே" (87)

இச்செய்யுளில் தெரிவித்தீர், பொருவித்தீர், வருவத்தீர், வைப்பித்தீர், பூண்பித்தீர் என்பன போலிகளாய் வந்துள்ளமை காண்க.

கலம்பக உறுப்புகளுள் ஒன்று இடைச்சியார் என்பதாகும். இந்நூலில் இடைச்சியார் என்பதனைக் கோனிச்சியார் எனப் புதுமையாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். கோனர்-ஆண்பால்; கோனிச்சியார் பெண்பால்.

"வானிச்சியார் வணங்கும் அம்பலவர்
தென்புலியூர் மணிவீதிக்கே
கோனிச்சியார் தயிர்பால் விலைகூறி
விற்றுவரும் குரலைக்கேட்டால்
தேனிச்சியார்சும்பு தூனே இச்சியார்
இவரைத் தெரிவித்தோர்கள்
ஏனிச்சியார் மதவேள் இரதியைக்
கண்டாலும் அவர் இச்சியாரே" (37)

என்னும் பாடலின் அருமையை உணர்ந்து இன்புறலாம்.

"அலங்கற் பொற் சடையாளர், விரிஞ்சற்கு துயில் கூர் முகுந்தற்குத் துரையாம்" (11) என்னும் சந்த விருத்தத்தில் தலைவர் எனப் பொருள்தரும் 'துரை' என்னும் பிற மொழிச் சொல்லையும் எடுத்தாண்டுள்ளார்.

தொல்லை என்னுஞ் சொல்லை பழமையானது என்னும் பொருளில் அடிதோறும் எடுத்தாண் டிருக்கிறார். ஆனால் மேற்போக்காகப் பார்த்தால் அது துன்பத்தருவது என்னும் பொருள்போற் காணப்படுமே. இச்செய்யுளில் சிதம்பரத் திருக்கோயிலில் வழிபாடு, மகுடாகமத்தை ஒட்டி நடைபெற்று வந்தது என்னும் உண்மை பெறப்படுகிறது.

"சல்லாபந் தரும் மகுடாகமும் தொல்லை;
தலபுராண
முந்தொல்லை; சபையுந் தொல்லை;
சொல்லாரும் நான்மறையும் தொல்லை;
தில்லைச்
சோதிடம் ஆடுவதும் தொல்லைதானே"
(69)

என வருதல் காணலாம்.

அம்மானை என்பது பெண்டிர் ஆடத் தக்க ஒருவகை விளையாட்டு. பெண்கள் தங்களை மூவகையினராகப் பிரித்துக் கொள்வர். முதல் வகையினர் தலைவனின் பெருமையை எடுத்தக் கூறுவர். இரண்டாம் வகையினர் அக்கூற்றில் ஒரு வினாவைத் தோற்றுவிப்பர். மூன்றும் வகையினர் இரு பொருள் பயக்கத்தக்க நிலையில் சாதுரியமாகத் தலைவனின் பெருமையைக் கூறி முடிப்பர். அம்மானை என ஒவ்வொரு கூற்றினரும் முடிவில் வரப்பாடுவர். பெண்கள் தம்முள் கைகோத்து ஆடிக் கொண்டு இப்பாட்டினைப்பாடி மகிழ்வர் அந்நிலையில் தில்லை நடராசப்பெருமானின் புகழைப் பாடிப்பரவ எழுந்ததே இச் செய்யுள்.

"தென்புலியூர் அம்பலவர் தில்லைச் சிற்றம்-
பலத்தே
வெம்புலியொன் றெந்நாளும் மேவுங்காண்
அம்மானை
வெம்புலியொன் றெந்நாளும் மேவுமேயா-
மாயில்
அம்பலத்தை விட்டே அகலாதோ
அம்மானை
ஆட்டைவிட்டு வேங்கை அகலுமோ
அம்மானை (60)

சிதம்பரத்தில் புலிக்காலே வேண்டிப் பெற்ற புலிக்கால் முனிவர் (வியாக்-கிரபாதர்) எப்பொழுதும் இறைவன் திரு நடனத்தைக் கண்டு களித்துக் கொண் டிருக்கிறார் என்பது முதல் வகையினரின் கூற்று. மற்றொரு வகையினர் புலி அம்பலத்தை விட்டு அகலாதோ என்று வினவுகின்றனர். அதற்கு மற்றொரு வகையினர் ஆட்டை விட்டு வேங்கை அகலுமோ என்று பதில் கூறுகின்றனர். ஆட்டைக் கண்டால் புலி அகலுமோ என்பது வெளிப் படையான பொருள். இறைவன் நடனத்தைக் காணுதலேவிட்டுப் புலிக்கால் முனிவர் அகலுவரோ என்பது மற்றொரு பொருள்.

சம்பிரதம் என்பதும் கலம்பக உறுப்பு களுள் ஒன்று. மாயவித்தை வல்லவர் ஒருவர், தம்வல்லமையின் சிறப்பை மற்-றொருவர்பால் தாமே புகழ்ந்து கூறுவதாகப் பாடப்படுவது சம்பிரதமாகும் ''மாணிக்க வாசகர் ஊமையைப் பேசவைத்தது போல நானும் பேசவைப்பேன்; நரியைப் பரி-யாக்கி, பின்னர் பரியை நரியாக்கியது போல் நானும் செய்வேன்; மதுரையில் ஆலவாய்ச் சொக்கர் பிட்டுக்கு மண்சுமந்து வைதையை அடைத்தது போன்று யான் கடலேயே அடைத்திடுவேன். இதை விடமேலான செயலேயும் செய்வேன் அது என்னவெனில் மிகச் சிறந்தவர்களெல் லாரும் தேடியுங்காணமுடியாத சிவ-பெருமானே நான்கண்டுகளித்து மகிழும்படி செய்வேன்'' என்று அவ்வல்லமையாளர் கூறுகிறார். இதில் மார்கழித் திருவாதிரை தரிசனச் சிறப்பைப் புகழ்ந்து போற்றுவது நினைத்து மகிழ்தற்குரியது.

குறம் என்பது தலேவி தலேமகனே அடைய இயலுமா என்று வருந்தும்போது ஒரு குறத்தி எதிர்ப்பட்டு குறி சொல்லித் தலேவனே அடையக் கூடும் என்பதனைக் கூறுவதாகும்.

''கடைதுடிக்கும் விழியிரண்டும் இடந் துடிக்கும்
துடிக்கும் இடக்கரமும் தோளுய்
துடிதுடிக்கும் இடப்புருவம் தனம் துடிக்கும்
துடிக்கும் இடத்தொடையுத்தானே''
(7 2)

இதில் பெண்களுக்கு இடக்கண்ணும் தோளும் துடித்தால் நினைத்தது கிட்டும் என்னும் உண்மையை ஆசிரியர் குறத்தி வாயிலாகப் புலப்படுத்துகிறார். இக்-குறத்தி தன்னை அறிமுகப்படுத்தும்பொழுது ''குறத்தியல்ல யானும் ஒரு குசத்தி கண்டாய்'' என்று கூறுகிறாள். இப்பகுதி யில் குசத்தி என்பதைச் சிலேடை நயம் அமையக்குயவர் குலப்பெண்-குசப்பெண் என்றும் சிறந்த தனமுடைய பெண் ணென்றும் அமைந்துள்ள சிறப்பு அறிந்து மகிழ்தற்குரியது.

மறம் என்பதும் கலம்பக உறுப்புகளுள் மிகவும் இன்றி யமையாத ஒன்று. ஓர் அரசனுல் ஏவப்பட்ட தூதன் மறவர் குலப் பெண்ணை மணம் பேச வரும்போது மறவர்கள் தங்கள் குலப் பெருமை பேசி அரசனை இகழ்ந்து மகட்கொடை மறுப்பது போலப் பாடும் பகுதி. வந்த தூதனேத் ''தார் வேந்தன் விடுதூதா'' என்று அழைக் கின்றனர் மறவர். பின்னர் உங்கள் அரசன் எங்களை,

அருகணைக்கும் அம்பலவர்க் காட்பட்ட
மறக்குறமென் றறியான் போலும்
பொருகணைக்கும் சிலைமாரன் பூங்கணைக்
கும் மறவர் குலப் பூவை வாட்கண்
இருகணைக்கும் இலக்காஞல் எங்கள் ஒரு
கணைக் கிவஞை எதிர்நிற்பானே'' (68)

என்று கூறித் தூதனேத் திருப்பியனுப்பும் திறம் மிகவும் நயம்பட அமைந்துள்ளது.

ஒரு கட்குடியன் கள்ளைச் சிறப்பித்துப்-பாடுவது போன்ற பகுதி களி எனப்படும். கட்குடியன் ''இரும் பெண்ணை விரும்பா-தார் எவர் உளர்'' என்று கேட்கிறான். இதில் 'பெண்ணை' என்பதற்கு மகளிரை என்றும் பனேயை என்றும் இருபொருள் அமைந்துள்ளமையைக் காணலாம். குடிப்

பவன் தன்னைப் போலவே பிறரையும் குடி காரர்களாக ஆக்க எண்ணுவது இயல்பு. பிரமன், திருமால், சிவன் ஆகியோரையும் கட்குடியராக ஆக்குந் திறத்தினைக் கீழ்க் காணும் முறையில் பாடி யுள்ள திறம் வியக்கத்தக்கது.'' கட்குடி மாறாதிருந்தான் வேதன்;

வரும்பெண்ணை அகன்றபின் எண்ணற வருந்தி
னான் முகுந்தன் மாலும் ஆனை;
சுரும்புண்ணும் மதுமுடியும் பசுந்தோடும்
பூமடலும்
சுமந்து தோன்றிக்
கரும்பெண்ணை நீங்காமல் உடனிருந்தான்
கனக சபைக் கடவுள்தானே'' (31)

ஒருநாள் தலைவனும் தலைவியும் நன்கு பேசிக் கொண்டிருந்தார்கள். தலைவன், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் சிவபெருமான் பொன் கொடுத்ததும், அதை மணி முத்தாற்றிலிட்டுத் திருவாரூர்க் குளத்தில் எடுத்ததும், புகலூரில் செங்கல்லைப் பொன்னைச் செய்ததும் மிகவும் விளக்கமாகத் தலைவிக்குச் சொல்லிக் கொண்டிருந்தான். தலைவியையும் வாயாரப் புகழ்ந்தான். இக்கதைகள் எதற்குச் சொல்லப் படுகின்றன என்று தலைவிக்குப் புரியவில்லை. தலைவன் பிரிந்த அளவில் தான் தலைவிக்கு அதன் உண்மை புலப் பட்டது. அதனை அவள், தலைவர் பொருள் வயிற்பிரியவேண்டும் என்ற அடிப்படை எண்ணத்திலைல்தான் அதனை நேற்றே அவர் புகழ்ந்ததெல்லாம் பொய் யென்பது மெய் யாகி விட்டது என்னுங்கருத் தமையவுள்ள அருமைப் பாடலைக் கீழே காண்பின்.

''ஆற்றில் இடும் பொருள் குளத்தில்
அழைப்பித்த திருக்கதையும் ஆரூரர்க்குச்
சேற்றுவயற் புகலூரில் செங்கலைப் பொன்
ஆக்கியதும் திருந்தச் சொன்னார்.
நேற்றிரவில் எனைப் புகழ்ந்தார்; இன்றறிந்தேன் பொருள்தேட நினைத்ததெல்லாம்
போற்றுதிரு அம்பலவர் பொருப்பர் எனைப்
புகழ்ந்ததெல்லாம் பொய்மெய்தானே.

இந்நூலின் இறுதிச் செய்யுளாக அமைவது உயிர் வருக்கமோனையோடு கூடிய ஆசிரியப்பா. அதில் 'அ' முதல் 'ஔ' முடியவுள்ள பன்னிரண்டு உயிரெழுத்து களும் மோனை யாயமையப் பாடியுள்ளதிறம் இரட்டையர்தம் புலமைத் திறத்தினைக் காட்டும்.

''அம்பலக் கூத்தன்; ஆரூர் மாணவன்;
இடைமருதீசன்; ஈங்கோய் மலையினன்;
உறையூர் எந்தை; ஊறன்மா நகரினன்;
எறும்பிமா மலையினன்; ஏடகத்து உறைவோன்;
ஐயா றமர்ந்த அமரர்கள் பெருமான்;
ஒற்றியூர் இறையோன்; ஓமாம் புலியூர்ச்
சிற்றம்பலவன் சீர்பர வுதுமே''

இரட்டைப்புலவர் தாங்கள் பாடிய ஏகாம்பரநாதர் உலாவில் மூவர் முதலிகள்-பாடிய திருப்பாடல்களுக்குத் தேவாரம் என்ற பெயரைச் சூட்டிய பெருமை படைத்தவர்களாவர்.

''மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும் தேவாரம் செய்த திருப்பாட்டும்'' என்பது ஏகாம்பரநாதர் உலாவாகும். ஆகவே இதற்குப் பின்னரேதான் தேவாரம் என்ற ஆட்சி ஏற்பட்டது. இதற்கு முன்னர்த் திருப்பதிகம் என்ற ஆட்சியே இருந்தது போலும். இரட்டையர்க்குப் பின் வந்த ஆசிரியர்கள் பலரும் தேவாரம் என்ற சொல்லாட்சியைத் தம் பாக்களில் ஆண்டுள்ளனர். ஆதலின் இரட்டையர் தேவாரம் என்ற சொல்லை ஆண்டதனால் தலையாய பெருமை படைத்தவராவர்.

இரட்டையர்தம் செந்தமிழ்ப் புலமையினையும் தில்லைக்கலம்பகத்தின் சிறப்பினையும் விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும். இரட்டையர்கள் தலந்தோறுஞ் சென்று பாடிய தனிப்பாடல்களும் சுவை மிக்குடையன; எண்ணி எண்ணி இன்புறத் தக்கன. அத்தகைய பெருமையுடைய இரட்டையர்கள் தம் தெய்வத் திருவாக்கால் பாடிய தில்லைக் கலம்பகத்தைப் போற்றிக் கற்று நடராசப் பெருமான் திருவருளைப் பெற்று உயர்பேரின்ப நிலையினை எய்துவோமாக. □

"மனித்தப்பிறவியும் வேண்டுவதே"

ஒரத்தூர் வித்துவான் சு. குஞ்சிதபாதம் பிள்ளை
சிதம்பரம்

கார் ரைக்கால் அம்மையார் போன்றவர்கள் பிறவாமை வேண்டும் என்கின்றார்கள். பிறவிதனை அறமாற்றி என்கின்றார் மணிவாசகர். சுந்தரரும் இப்பூவுலகில் பிறந்தால் உலக மாயையில் மயங்கிவிடுவேன் என்கின்றார். தடுத்தாட்கொள்ள வேண்டும் என்று சிவ பெருமானை வேண்டிக் கொள்கின்றார். ஆனால் அப்பர் அடிகள் "வாய்த்தது நம் தமக்கீதோர் பிறவிமதித்திடுமின்" மனிதப் பிறவி கிடைத்தற்கு அரியது கிடைத்த இந்த மனிதப் பிறவியிலேயே பல நல்ல காரியங்களைச் செய்து இறைவன் திரு வருளைப் பெறவேண்டும் என்கின்றார்.

மணிவாசகப் பெருமான் "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் வல் லசுரராகி முனிவராய்த் தேவராய்ச் செல்லா நின்ற" பிறப்பெல்லாம் பிறந்து இளைத்தேன் என்று கூறுகின்றார். ஒரறி வாகிய புல் பூண்டு முதல் விலங்கு வரையுள்ள ஐந்தறிவுவரை கூறினர். மக்கள் பிறப்பு, மனத்தால் நல்லது இன்னது, கெட்டது இன்னது என்றுணரும் பகுத்தறிவு பெற்றமையால் மனிதன் ஆறறிவுள்ளவனு கின்றான். பகுத்தறிவு இல்லாத மக்களை மாக்கள் என்ற கூறு கின்றார் தொல்காப்பியர்.

"மாவும் மாக்களும் ஐயறிவினவே
மக்கள்தாமே ஆறறிவுயிரே"
என்பது தொல்காப்பியம்.

வள்ளுவரும் "விலங்கொடு மக்கள னையர்" என்று கல்வி ஞானமில்லாதவரைக் கூறுகின்றார். தனக்கெனவாழாப் பிறர்க் குரியவராகப்புகழ் எனின் உயிரையும் கொடுக்குநராக வாழ்பவர்களே மக்கட் பண்புள்ளவர்கள். மக்கள் பண்பு மட்டும் இருந்தால் போதாது. இறை உணர்வும் வேண்டும்.

இந்திரன் முதலிய தேவர்களும் "புவனியிற்போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி சிவன் உய்யக்கொள்கின்றவாறு" சிவபெரு மான் அருள் கொடுக்குமிடம் பூவுலகம். அங்கே பிறந்து வழிபாடு செய்யாமல் வீணாக நாளைக் கழிக்கின்றோம் என்று வருந்துகிறார்கள். என்ற நிலையை மணி வாசகப் பெருமான் நமக்கு உணர்த்து கின்றார்.

இறைவன், கேவல நிலையிலிருந்த இந்த உயிருக்கு, முன் செய்த புண்

ணியவசத்தால் மாவிடப் பிறவியைக் கொடுத்தான். உலக மக்கட்கும் இறைவனுக்கும் தொண்டு செய்ய நல்ல நிலையை அடையவேண்டும் என்ற கருணையினால் நம்மைப் படைத்தான் என்றுணர்தல் வேண்டும். அப்பர் அடிகள் மானிடப் பிறவியும் வேண்டுவதே என்றார். இனித் தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால் மனிதப் பிறவிவேண்டும் என்கின்றார். காசியில் இறந்தால் முத்தி என்பர். அது நம் செயலல்ல. திருவாரூர் பிறக்க முத்தி என்பார்கள் அதுவும் நம் செயலல்ல. அருணையை நினைக்க முத்தி என்பார்கள். அலைகின்ற மனத்தை ஒரு வழிப் படுத்தி நினைப்பதும் சிறிது சுடினமானதுதான். ஆனால் தில்லை அம்பல வாணன் எடுத்த பொற்பாதம் வழிபடப் பெற்றால் பிறவியின் பயனை அடைவோம் என்று கூறுகின்றார். தில்லை அம்பலவாணன் ஆனந்தத்தாண்டவத்தை "ஐந்து பேரறிவும் கண்களேகொள்ள" கண்குளிரக்கண்டு இனித் தமுடைய எடுத்த பொற்பாதத்தை வணங்குதல் வேண்டும்.

உள்ளத்தாலும் காணுதல் வேண்டும் "தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம் ஆட எடுத்திட்ட பாதமன்றே நம்மை ஆட் கொண்டது" என்று அப்பர் அடிகள் கூறுகின்றார். பதஞ்சலி வியாக்கிரபாதர் செய்த தவத்துக்கு அருள்கூர்ந்து இறைவர் நட்டம் ஆடினார் என்பதை உணர்கின்றோம். மேலும் பிரமனும் திருமாலும் காணமுடியாத திருவடி இன்று நமக்கு எளிமையாகக் காட்சிதருகின்றது என்றால் அப்பேறு அம்பலவாணது எளிவந்த வான்கருணை அல்லவா. மார்க்கண்டன் என்ற அடியவருக்காக எமனை உதைத்த திருவடி என்பதையும் உணர்கிறோம். தவறுசெய்த சந்திரனைத் தண்டித்தார். ஆனால் அவன் வேண்டுகோளுக்கிணங்கித் தலையில் சூடிக் கொண்டார். இவ்வாறெல்லாம் அம்பல வாணன் அருள்திறத்தை நினைத்து வழிபட இந்த பிறவி வேண்டும் என்கிறார் அப்பர் அடிகள்.

திருஞானசம்பந்தர் "காடுடைய சுடலைப் பொடிபூசி என்னுள்ளங்கவர் கள்வன்" என்ற தொடரில் கூத்தப் பெருமான் வெண்ணீறு பூசி விளங்குகின்றான் என்று கூறுகின்றார். "பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்-காணப் பெற்றால்" என்கிறார் அப்பர். சிவந்த உடலில் சர்வசங்கார காலத்து-உலகங்களை எல்லாம் "சாற்றியிடும்-அங்கியிலே சங்காரம்" என்ற முறையில் நீறுகச்சுட்டு உடலில் பூசிக்கொள்கின்றார் சிவபெருமான். ஒடுங்கிவுலகம் மறுபடியும் இறைவனுகிய சிவபெருமானிடமே தோன்றுகின்றது. இவற்றையே சிவஞானபோதம் "ஒடுங்கி மலத்துஉளதாம்" என்று கூறுகின்றது. இதனால் முழுமுதற்கடவுள் சிவபெருமான் ஒருவனே தலைவன் என்பதை நமக்கு உணர்த்துகின்றார். "கொவ்வைச் செவ்வாயிற்குமிண் சிரிப்பும்" என்றார். இறைவன் புன்முறுவல்பூத்து முப்புரத்தை அழித்தார் என்பது வரலாறு. சிரித்துக் கெடுத்தான் என்பார்கள் உலக வழக்கில். முப்புரமாவது மும்மலகாரியம், நம்மைப் பற்றியிருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றுவித பிணிப்புக்களையும் நீக்கி நம்மை ஆட்கொள்பவன் இறைவன் என்பதை உணர்ந்து வழிபடவேண்டும். "என்று வந்தாய் என்னும் எம்பெருமான் தன் திருக்குறிப்பே" என்றார் அப்பரடிகள். தக்கன் வேள்வியில் தேவர் களுக்குத் தண்டனை வீரபத்திரரால் கொடுத்து-அவர்களைத் தூய்மை செய்தவன் சிவபெருமான். இவ்வாறெல்லாம் அம்பலவாணன் திருவிளையாட்டாகிய நடனக்கோலத்தை நமக்குச் சொல்லோவியமாகக் காட்டுகின்றார் அப்பர்.

"குனிந்த புருவமும் கொவ்வைச் செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியில் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும்
காணப்பெற்றால்

மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே''.

இந்தச் சொல்லோவியம் மூலமாகத் தில்லைக்கூத்தப் பெருமானே உள்ளத்தால் வழிபாடு செய்வதற்குப் பல நாட்கள் பயிற்சி வேண்டும். இறைவனே மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணங்களாலும் வழிபடல் வேண்டும். இவற்றை மானசம், வாசிகம், காயிகம் எனக் கூறுவர் வடநூலார். மானசமாவது – மனத்தால் செய்யப்படுவது. தருமம் செய்ய நினைத்தல், பிறர்செய்த துன்பம் பொறுத்தல், உண்மை பேசுதல், சிவபெருமானைச் சிந்தித்தல், ஐம்பொறி அடக்கல் ஆகியவை.

வாசிகமாவது – சொல்லால் செய்யப் படுவன. திரு ஐந்தைழுத்தோதுதல் ஈசான மூர்த்தியே நம, தத்புருஷபத்தராய நம, அகோர இருதயாய நம, வாமதேவா குகயாய நம, சத்தியோசாத மூர்த்தயே நம எனப் பஞ்சப் பரம்ம மந்திரங்களை ஓதல். சிவதருமங்களை எடுத்துச் சொல்லுதல், திரு முறைப் பாடல்களை ஓதுதல் ஆகியவை.

காயிகமாவது - உடலால் செய்யப் படுவன. சிவபெருமானே நன்னீர், நறுமலர் சந்தனம், அட்சதை, அறுகு, வில்வம், நைவேத்தியம், தூபம், தீபம், கூடம் இவை களைக்கொண்டு வழிபடல். திருக்கோயில் வலம் வருதல், இறைவன் திருமுன்பு எட்டுறுப்புகளும் பூமியில்பட வணங்குதல். தலயாத்திரை செய்தல், கோயில் திருப்பணி செய்தல், கங்கை முதலிய நதிகளிலும், கடலிலும் நீராடல் ஆகியவையாம். இவ் வாறு உள்ளத்தாலும், சொல்லாலும், உடலாலும் வழிபாடு செய்தல் சிறந்த தாகும். இவ்வாறு வழிபாடு செய்பவர் களுக்கு இந்த உலகத்தில் உணவும், உடையும்கொடுத்து வருகின்ற துன்பத் தையும் நீக்குவான் இறைவன். மேல் உலகத்திலேயும் சிவலோக பதவியும் கொடுப்பான் பரமன் என்று கூறுகின்றார் சுந்தரர். ''இம்மையேதரும் சோறும் கூறையும் ஏத்தலும் இடர்கெடலுமாம் அம்மையே சிவலோகமாள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே'' என்பது சுந்தரர் தேவாரம்.

''தீதும் நன்றும் பிறர்தர வாரா''

உயிர்கள் அனைத்தும் தாம்தாம் முற்-பிறவியில் செய்த வினைக்கேற்ப இன்பமும் துன்பமும் உயர்வும் தாழ்வும் செல்வமும் வறுமையும் அடையும் என்பதை உணர்த்து கின்றார், சங்ககாலத்துப்புலவர். திருஞான சம்பந்தரும் முற்பிறப்பில் சிவபெருமானே மலரால் அர்ச்சித்து வழிபாடு செய்த பயனால் இப்பிறவியில் மூன்றும் ஆண்டி-லேயே எனக்குக் காட்சிதந்து அருள் பாலிக் கின்றான் என்று கூறுகின்றார்.

''ஏடுடைய மலரான் முனைநாள் பணிந் தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேனிய பெம்மானி வனன்றே''

என்று முதல் பாட்டிலேயே கூறுகின்றார்.

சிவ பூசையில் உள்ளம், சொல், செயல் முக்கரணங்களாலும் சிவபெருமானே வழி படுகின்றோம். முதலில் உள்ளத்தால் அந்தர்யாகப் பூசை செய்கின்றோம்.

தேனுக்குள் இன்பம் தித்தித்திருந்தாற் போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே.

என்பர் திருமூலர்,

தேனில் இன்பம் கலந்திருப்பது போல் நமது உயிரில் இறைவன் கலந்திருக்கின்றார். அந்தர்யாக பூசையில் உயிரில் கலந்-திருக்கும் இறைவனே இதயதாமரையில் எழுந்தருளும்படி வேண்டிக்கொள்ளுதல், இதய தாமரையில் எழுந்தருளிய சிவ-பெருமானிடம் உடல், பொருள், உயிர் மூன்றையும் ஒப்புவித்தல், அன்பைச் சிவத்-திடம் வைத்தல், ஆன்ம அறிவைச் சிவ-ஞானமாக மாற்றுதல், மலம், மாயை

கன்மம் போகப்பற்று இவை நீங்கினதாக நினைத்தல், வினைப்பயன் கூடம் கரைந்து எரிந்ததுபோல் நீங்கினதாக நினைத்தல். பெருமானுக்குப் பசு, பாச ஞானமே திருவமுதாக நிவேதித்தல், ஆன்மபோதம் நீங்கித் திருவருளைப் பெற்றதாக நினைத்து வழிபடல். இவ்வாறு மனத்தால் பதினறுவகையாக எண்ணி வழிபடலாகும்.

புறப்பூசை செய்தல்:-

பஞ்சசுத்தி செய்து பரனை அர்ச்சித்தல் ஆன்மசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி மத்திரசுத்தி இலிங்கசுத்தி என்ற ஐவகைச் சுத்திகளையும் அதனதன் மந்திரங்களைச் சொல்லிச் சுத்தி செய்தல். இதய தாமரையில் இருக்கின்ற சிவபெருமானை வெளியில் வேதிகையில் உள்ள சிவலிங்கத்திருமேனியில் எழுந்தருளும்படி வேண்டிக்கொள்ளுதல்.

''பெருமான் சிவலிங்கத்திருமேனியில் எழுந்தருளியதாகப் பாவித்து, ''யான் செய்யும் பூசையில் உண்டாகும் குற்றங்களை நீக்கிக் குணங்களையேற்று அருள் புரிதல் வேண்டும்'' எனப் பெருமானை வேண்டிக் கொள்ளுதல், சத்தியாதி சத்தி மந்திரங்களைச் சொல்லல். பெருமானுக்கு நாமம் சொல்லி வழிபடல். பாத்தியம், ஆசமனியம், அர்க்கியம் கொடுத்தல். பஞ்ச கௌவியம், பால், தயிர், பஞ்சாமிர்தம், பழச்சாறு, தேன், பன்னீர், சந்தனம் முதலியவற்றால் அபிடேகம் செய்தல். ஆடைசாத்தல், முப்புரிநூல் அணிதல், சந்தனம் அணிதல், மலர் அணிதல், அரிசி அறுகு வில்வம் இவை அணிதல், நறும்புகை காட்டுதல், தீபங்காட்டுதல், கூடம் காட்டுதல், திரு அமுது படைத்தல், தேங்காய்பழம், வெற்றிலை பாக்கு கொடுத்தல், அர்ச்சனை திருமுறை ஓதல் ஆகியவையாம். இவையே (சோடச உபசாரம்) பதினறு வகையாகச் செய்யும் வழிபாடாகும். புஷ்பதானம் மலர்களைக் கையில் வைத்துமூடி நூற்றெட்டு அல்லது பத்துரு மூலமந்திரம் சொல்லி நீர் இறைவன் திருவடியில் விட்டுச் சாத்தல். பின்னர் சண்டீசுரர் பூசை செய்தல். இவ்வாறெல்லாம் வழிபாடு செய்தால் இறைவன் அருள் செய்வான் என்று அப்பர் சுவாமிகளும் கூறுகின்றார்.

''பெரும்புலர்காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
அரும்பொடுமலர்கள் கொண்டு ஆங்கு ஆர்வத்தையுள்ளேவைத்து
விரும்பிநல் விளக்குத்தூபம் விதியினுலிட வல்லார்க்குக்
கரும்பினில் கட்டிபோல்வார் கடவூர் வீரட்டனாரே''.

ஒவ்வொருநாளும் விடியற்காலை எழுந்து நீரில் மூழ்கி இறைவனிடம் அன்புமிகுந்தவராகிப் பூக்களைக் கையிலேற்று இறைவன் திருவடிகளில் இட்டுத் தூப தீபங்கொண்டு வழிபடுபவருக்குக் கரும்பிலிருந்து எடுக்கப்படும் கற்கண்டு போல் இனிமையான காரியங்களை அனுபவிக்கச் செய்து முத்திநலத்தையும் நல்கு வானென்றார். ''யானெதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கு என்கடவேன்'' என்று மணிவாசகப் பெருமான் கூறுகின்றார். ஒருவன் துன்பம் வந்தால் உயிர்போவது போல் இருக்கிறது துன்பம் என்று கூறுகின்றான். இதனால் எல்லாத் துன்பத்தையும்விட உயிர்போகும் துன்பம் தாங்கமுடியாதது என்றுணர்கின்றோம். மரணம் வரும்போது துன்பப்படாமல் போவதற்கு வழிவகுத்துத் தருகின்றார் நமது திருகின்றார் நமது திருநாவுக்கரசு சுவாமிகள். சிவபெருமான் மார்க்கண்டனுக்காகக் காலனைக் காலால் உதைத்தான். அதனால் காலகாலனாகிய பெருமானை வழிபடுவதற்கு வாய் இருக்கிறது. நாக்கு இருக்கிறது. இவைகளால் அவன் புகழைப்பாடி வழிபடலாம். அவன் திருவடியில் பூவினாலும், நீரினாலேயும் இட்டு வழிபடலாம். நம்மைத் தாங்குவதற்குச் சடைகளையுடை பெருமான் இருக்கின்றான். ஆதலால் எமபயம்

இல்லாமல் வாழலாம் என்பதைக் கீழ்வரும் திருப் பாடலால் உணர்த்து கின்றார் திருநாவுக்கரசர்.

"கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக்கொள்வன பூவுள நீருள
கற்றைச்செஞ்சடையானுளன் நாமுளோம்
எற்றுக்கோ நமனுல் முனிவுன்பதோ".

திருச்சிற்றம்பலம்

பாலை யுடைக்கமு கோங்கிப்பன்
மாடம் நெருங்கியெங்கும்
வாலை யுடைப்புனல் வந்தெறி
வாழ்வயல் தில்லைதன்னுள்
ஆல வுடைக்கழல் சிற்றம்
பலத்தரன் ஆடல்கண்டால்
பீலை யுடைக்கண்க ளாற்பின்னைப்
பேய்த்தொண்டர் காண்பதென்னே.

பெருவிடை யொன்றுடைப் புண்ணிய
மூர்த்தி புலியதளன்
உருவுடை யம்மலை மங்கை
மணாளன் உலகுக்கெல்லாம்
திருவுடை யந்தணர் வாழ்கின்ற
தில்லைச்சிற் றம்பலவன்
திருவடி யைக்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே.

தொடுத்த மலரொடு தூபமுஞ்
சாந்துங்கொண் டெப்பொழுதும்
அடுத்து வணங்கும் அயனெடும்
மாலுக்குங் காண்பரியான்
பொடிக்கொண் டணிந்துபொன் னுகிய
தில்லைச்சிற் றம்பலவன்
உடுத்த துகில்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே.

சேக்கிழாரும் திருத்தில்லையும்

பேராசிரியர். வே. சிவசுப்பிரமணியன்
மயிலம்

தோலம் உய்யத் தில்லைத் திருவம் பலத்தே ஆடுகின்ற பெருமான் திருவருளே இடையருது வழுத்தும் சீலம் நிறைந்த சைவவேளாண் குலத் திலகராய்த் தோன்றியவர் சேக்கிழார் பெருமான். சோழ வேந்தன் பேரவையில் மதியமைச்ச ராக விளங்கியவர். உள்ளும் புறம்மும் இடையருச் சிவபக்தியால் விளங்கப்பெற்றவர். அப்பக்தியென்னும் தேனைத் திருவாயாகிய மலர் சிறந்து பிலிற்றும் ஞானப் பாசுரங்களாகிய பாநலம் சிறக்கப் பெற்றவர். அவர்தம் வாழ்விலே திருத்தில்லையோடு கொண்ட தொடர் பினைச் சேக்கிழார் புராணம் எடுத்துக்காட்டும். அவர் தம் வாக்கிலே திருத்தில்லையோடு கொண்ட ஆராஇன்ப அமுதப் பிணைப்பினைப் பெரிய புராணம் எடுத்துக்காட்டும்.

சோழ வேந்தர்க்குத் திருதொண்டர்-சரிதையைத் திருத்தொண்டத் தொகைப்-பாசுரம் மூலமாகவும், திருத்தொண்டர்-திருவந்தாதி மூலமாகவும் முதற்கண்-எடுத்துரைத்தார் சேக்கிழார் பெருமான். அதுகேட்ட வேந்தரும் முறைப்படி-அந்நூலை ப் பெருக விரித்துரைக்கும்படி கேட்டுக் கொண்டார். நூலைச் செய்யத் தொடங்கிய பெருமான் அதற்கேற்ற நிலைக்களமும் தொடக்கமும் தில்லையாகத்தான் அமையும் என்று கண்டு அங்கே வந்தடைந்தார் என்கிறது சேக்கிழார் புராணம்.

தமது அன்பிற்குரிய இனியதலமாக அமைச்சுப் பதவியேற்ற நாள் முதல்-திருநாகேச்சுரத்தைக் கொண்டவர் அருண்மொழித்தேவராய சேக்கிழார். கும்ப கோணத்தை அடுத்த திருநாகேச்சுரத்தே கொண்ட ஆழ அன்பினுல் அது போலவே தம் ஊராகிய தொண்டை நாட்டுக் குன்றத்தூரிலும் திருக்கோயிலாக்கி அதற்கும் திருநாகேச்சுரம் என்றே பெயரிட்டு-வழிபட்டு மகிழ்ந்தார் அவர்.

அன்பிற்குரிய அபிமானத்தலமாகிய-திருநாகேச்சுரத்தினும் மேம்பட்டு அவர்-இதயம் கொண்டதலம் திருத்தில்லையே. அதனுலேயே அவர் திருநாகேச்சுரம்-

என்கிற திருப்பதியிலேயே நடராசப்-பெருமான் திருக்கோயிலையும் அம்-பலத்தையும் ஆக்கி மகிழ்ந்தார் என்று-வரலாற்றுக்குறிப்புகள் நமக்குச் சான்று பகர்கின்றன.

தில்லைப் பெருமான்பால் குறையிரந்து வேண்ட அப்பெருமான் 'உலகெலாம்' என்று அடிஎடுத்துக் கொடுத்து அதனை முதற்கண் வைத்துத் தொடங்கியவர் அந்தத் திருப்பாசுரத்தையே தில்லைப் பெருமான் திருப்பாடலாகச் செய்தமைத்தார் என்பது அவர் ஈடுபாட்டை நமக்குப் புலனுக்கும் அம்மட்டோ!

அப்பெருமான் முதற்கண் வைக்குமாறு எடுத்துக் கொடுத்த 'உலகெலாம்' எனும் அருள்மொழியைத் தழம்பாடிய காவியத்-தின் இடையிலும் (''அஞ்செழுத்தோதி ஏறனூர் உய்ய உலகெலாம்'' (திரு ஞான சம்பந்தர் புராணம் 216) ஈற்றிலும (''நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்'') வைத்துத் தில்லைப் பெருமான் திருவாக்காகிய கவசத்துக்குள் நூலை அமையுமாறு செய்த ஆழ அன்பினை நினையும் தோறும் சேக்கிழார்பெருமான் நெஞ்சத்தடத்து நிலைத்தது தில்லையே என்பது போதரும்.

தில்லைத் திருமன்றின் முகப்பிலேயே சேக்கிழார் பெருமான் திருத் தொண்டர் புராணத்தைப் பொருள் விரித்துரைத்து அரங்கேற்றினர் என்பதும், சோழ-அரசரும் திருமுறைகளோடு ஒப்பப் பன்னி-ரண்டாம் திருமுறையாக வைத்து, நான்-கொடு ஐந்தாவது வேதமாகத் திருமறை-யவர்கள் பராட்டச் சிறப்புச் செய்து-வழிபட்டு மகிழ்ந்தார் என்பதும் சேக்கிழார் புராணத்தில் உமாபதி சிவாசாரியார்-வாக்கினுல் நாம் உனர்ந்து இன்புறு கிறோம்.

பெரியபுராணம் அறுபத்து மூவராகிய தனியடியார் சரிதையையும், ஒன்பது திருக் கூட்டத்தடியார் சரிதையையும் கூறுவதா யினும் அவை தனித்தனி கதைகளாகக் கூறப்பெற்ற ஒரு தொகை நூல் அல்ல என்பதை ஆராய்ச்சியாளர் நன்கறிவர். மிகச்சிறந்த காப்பியமாக, நம் ஆருரரையே காப்பியத் தலைவராகக் கொண்டு செய்யப் பெற்ற பெருங்காப்பியம் அது என்று ஆய்வறிஞர்கள் கூறுவர்.

நம்பியாரூரர் காப்பியத்தலைவரா யினும் அவர்தம் அவதாரத் தலமாகிய திருநாவலூர், அடுத்துஅவர்ஆட்கொள்ளப் பெற்ற தலமாகிய திருவெண்ணைநல்லூர், அவர்தம் சீரிய வாழ்வின் நிலைக்களமாகிய திருவாரூர் ஆகிய இவற்றிலும் மேற்பட்டுச் சிறந்தொளிரும் திருத்தில்லையை முதற்-கண் அமைத்துக் கொள்வர் சேக்கிழார்.

திருமலைச் சிறப்பு என்னும் பகுதியில் தேசம் உய்யச்சிறந்து விளங்கும் தென்திசை யின் பேச அரிய பெருமைக்குக் காரணம் திருத்தில்லை என்று உபமன்னியு முனிவர் கூறியதாகக் கூறுவர். திருவாரூர், காஞ்சி-புரம், திருவையாறு, சீர்ழ்காழி என்னும் தலங்களையெல்லாம் குறிப்பிடுகிற சேக்-கிழார் இங்கே நாட்டு வரிசையையும்-சுட்டாது. திருத்தல வரிசையையும்-சுட்டாது அவற்றின் முதற்கண் வைத்துத் திருத்தில்லையை எடுத்துக் காட்டுவார்.

''பொருவரும் தவத்தான் புலிக்காலனும்
அருமுனி எந்தை அர்ச்சித்தும் உள்ளது
பெருமைசேர் பெரும்பற்றப் புலியூர் என்று
ஒருமையாளர் வைப்பாம் பதி ஓங்குமால்''

''அத்திருப்பதியில்....தவக்கொடி-காண..... அத்தன் அம்பலத்தாடும் மற்று, இத்திறம் பெறலாம் எத்திசை'' (திருமலைச் சிறப்பு 31, 32) என்று உபமன்னியு-முனிவர் கூறியதாகச் சேக்கிழார் பெருமான் திருத்தில்லையே தென்திசைச் சிறப்பிற்கு மூலகாரணம் என்று காட்டுவார்.

தில்லைவாழ் அந்தணர் புராணம் தொடங்கிய சேக்கிழார் அவர்தம் பெருமையைச் சுட்ட வந்த போது தில் லையின் பெருமை தன்னுல் கூறப் பெற்ற தன்று, ஆண்டவனுலேயே அருளப்

பெற்றது என்பதைச் சொல்லாமல்-சொல்லி மகிழ்வர்.

வன்றொண்டர்க்குத் திருத்தொண்டத் தொகைபாட முன்னுல் அடி எடுத்துக்-கொடுத்தவர் தில்லை மன்றுள் ஆடிய பெருமான் அல்லவே. திருவாரூர் வள்-ளலாகிய தியாகேசப் பெருமான் அல்லவா! திருவாரூர் தேவாசிரிய மண்டபத்திலே அடியார் திருக் கூட்டத்தைக் சுட்டிக் காட்டி இவர்தமைப்பாடுக என்று சொல்-கின்ற ஆரூ வள்ளல் "திருவாருர்ப் பிறந்-தார்கள் எல்லார்க்கும் அடியேன்" என்று அத்தலத்துத் தொகையடியாரைச் சொல்-லாமல் அவரே "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று தில்லைத் தொகையடியாரை முதற்கண் அமைத்துப் பாடும்படி முதல் கொடுத்த பாங்கினை-உளங்கொண்டதனுலேயே சுந்தரரும் கூட அடுத்துத் திருவாரூர் அடியாரகிய தண்டி-யடிகள் நாயனுரையோ மற்றவர்களையோ அமைக்காமல் தில்லைப்பதியில் அடியார்க்-காம் திருவோடு தந்து சிவப்பேறு பெற்ற-சிவனடியாராகிய "திருநீலகண்டத்துக்-குயவனுர்க் கடியேன்" என்று சொல்லித்-தில்லைப்பதியையே முதற்கண் கூறுவது.-இறைவன் திருவருட் சம்மதம் என்பதை உறுதிப் படுத்தினர் என்று நினைக்கத்-தோன்றுகிறது.

இவ்வளவு எண்ண வெளிப்பாட்-டையும் தில்லைவாழ் அந்தணர் புரா-ணத்தே,

"இன்றிவர் பெருமை எம்மால் இயம்
பலாம் எல்லைத்தாமேர்
தென்றமிழ்ப் பயனுய் உள்ள திருத்தொண்-
டத் தொகைமுன்பாட
அன்று வன்றொண்டர் தம்மை அருளிய
ஆரூர் வள்ளல்
முன்திரு வாக்கால் கோத்த முதற்பொரு
ளானுர் என்றுல்"

என்ற திருப்பாசுரம் நமக்கு உண்டாக்கு-கிறது.

திருக்கூட்டச் சிறப்பைச் சொல்லும்-போது அத்தனையடியாரையும் "தாண்டவப் பெருமான் தனித் தொண்டர்கள்" என்றே காட்டுவர்.

"அற்புதத் தனிக்கூத்தாடும், நாதனுர் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கார்" என்று திருநீலகண்டரைச் சொல்-வார். தில்லைப் பதியினராகிய திருநீல-கண்டரை இவ்வாறு சொல்லியது பொ-ருந்தும். ஆனுல் பிற திருப்பதியினராகிய அடியார்களைச் சொல்லும் பொழுதும்-தில்லைப்பதியைச் சார்த்தி அவர்களைச் சொல்ல மறந்தாரில்லை சேக்கிழார்.

இயற்பகை நாயனுர் புராணத்தே, "தில்லையம்பலத்துள் ஆடும் சேவடி போற்றி" என்பார். இளையான்குடி மாற நாயனுர் புராணத்தே "அம்பொன் நீடிய அம்பலத்தினில் ஆடுவார் அடி கூடுவார்" என்பார். மெய்ப்பொருள் நாயனுர்புரா-ணத்தே, "தில்லை மன்றுள் ஆடிய-பெருமான் அன்பர்க்கு" தேடிய மாடு நீடு செல்வமும் கொடுத்து உகந்தவர் அவர் என்று குறிப்பிடுவர். அப்பூதியடிகள்-நாயனுர் புராணத்தே "தாண்டவம் புரி-யவல்ல தம்பிரானுருக்கன்பர்" என்று-அவரைக் கூறுகிறார்.

சண்டேசுர நாயனுர் புராணத்தே,

"அலகில்கலையின் பொருட்கெல்லை-
ஆடும் கழலே எனக்கொண்ட
செலவு மிகுந்த சிந்தையினில் தெளிந்தார்
சிறிய பெருந்தகையார்"

என்று சேக்கிழார் குறிப்பிடுகிற அழகை ஆய்ந்து அனுபவிக்க வேண்டும். "கணக்-கற்ற கூலை ஞானங்களின் பொருள் முடிவு தில்லைப் பெருமான் திருவடிகளே எனத் தெளிந்த பொழுது அத்தெளிந்த ஞானத்-தாலே அவர் பெருந்தகையரானுர் என்று சொல்வரைப் போலவே, அந்த இடத்தில் "சிறிய பெருந்தகையார்"-என்னும் திருப்பெயரை, ஞானசம்பந்தப் பெருமானுக்குத் தாம் வழங்கிய அத்திரு-

நாமத்தைச் சண்டேசுரப் பெருமானுக்குச்-சூட்டி மகிழும் இடம் எத்தனை முறை-படித்தாலும் இன்பம் தருவது ஒன்றன்றோ!

சண்டேசுர நாயனார் ஆனிரை மேய்ப்பதாகிய தொழில் புனிதமானது, மேலான வற்றுள்ளும் மேலானது என்று கொள்வாராய், ''இதுவே, மன்றுள் ஆடும் சேவடிகள் வழுத்தும் நெறி ஆவதும்'' என்கிறார் என்று சேக்கிழார் கூறுகிறார்.

பிற இடங்களில் நாயன்மார்கள்-சென்று வழிபாடு செய்யும் போதும் தில்லைப் பெருமான் திருக்காட்சியையே அங்கும் காண்பதாகக் காட்டும் அழகு அறிந்து அனுபவிக்கத் தக்கது.

ஞானசம்பந்தப் பெருமான் திருவை-யாற்றுப் பெருமானை வழிபடுகிறார். சம்-பந்தப் பெருமான் திருவுள்ளத்தே தில்லை-யம்பதியில் திருநடம் புரியும் எம்பிரான் முழுவதும் இடம் கொண்டிருக்கிறாராம். அதனால் அந்த அகக் காட்சியே திருவை-யாற்றில் அவர்கண்ட புறக்காட்சியாகத் தோன்றியது. அதனாலேயே திருவை-யாற்றுத் தேவாரத்தில் ஞானசம்பந்தர்,

''ஆடுமாறது வல்லான் ஐயாற்றெம் ஐயனே'' என்று பாடினார் என்பதாகக் கூறுவார் சேக்கிழார்.

நீடுபெருந் திருக்கூத்து நிறைந்த திரு-வுள்ளத்து நிலைமை தோன்றப் பாடினார் சம்பந்தர் என்று கூறுவதைப் படிக்கும்போது ''நிறைந்திருந்ததோர் கொள்கலம் பிறி-தொன்றற்கு இடம் தராதது போல'' என்ற இறையனார் களவியல் உரைகாரர் கருத்-தையும் வைத்துக் காணல் வேண்டும். சம்பந்தர் திருவுள்ளத்தே பிறவற்றிற்கு இடம் கொடாமல் ''நீடு பெருந் திருக்கூத்து நிறைந்து விட்டது'' என்று சேக்கிழார்-அருஞ் சொற்களைப்பெய்து பெரும்பொருள் விளக்கிறார்.

நம்பியாரூரர் திருப்பேரூர் சென்று வழிபட்ட போது பேரூர்ப் பட்டியப்பராகிய பெருமான் அவருக்குத் தில்லைக் காட்-சியையே காண்பித்தார் என்கிறார்-சேக்கிழார்.

''நித்தனார் தில்லை மன்றுள் நின்றருடிய
கோலம் நேர்காட்டக்
கைத்தலம் குவித்து கண்கள் ஆனந்தக்
கலுழிநீர் பொழிதரக்கண்டார்''

என்கிறார். இந்த அற்புதக் காட்சியினைக் கண்டு மெய் சிலிர்த்துப் பரவசம் அடைந்த சுந்தரரை அடுத்த பாட்டிலேயே,

''காண்டலும்தொழுது வீழ்ந்துடன் எழுந்து
தரையில் அன்பு என்பினை உருக்கப்
பூண்ட ஐம்புலனிற் புலப்படா இன்பம்
புணர்ந்து மெய்யுணர்வினில் பொங்கத்
தாண்டவம் புரியும் தம்பிரானைத் தலைப்-படக் கிடைத்தபின் சைவ
ஆண்டகையாருக் கடுத்த அந் நிலைமை
விளைவையார் அவையறிந்துரைப்பார்''

என்று கூறித் தாமும் பரவசம் அடைகிறார் சேக்கிழார் பெருமான்.

பேரம்பலம் பொன் வேய்ந்த வரலாற்று நிகழ்ச்சியும் சேக்கிழார் பெருமானால் குறிக்கப்படுகிறது. தில்லைத் திருப்-பதியில் அம்பலம் பொன் வேய்ந்த நிகழ்ச்சி பல்வேறு காலங்களில் பல்வேறு அரசர்-களால் நடை பெற்றுள்ளது. மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் நிலவியவர் சேக்கிழார் என்பது வரலாற்றாராய்ச்சி-யாளர் திரு சதாசிவ பண்டாரத்தையா அவர்கள் கருத்தாகும். அதை ஓரளவுக்கு ஏற்றுக் கொண்டவர் சைவசமய வரலாற்-றாய்வாளராகிய ''பன்னிரு திருமுறை வரலாறு'' ஆசிரியர் திரு. க. வெள்ளை வாரணனார் அவர்கள். கி. பி. 1163க்குச் சற்று முன்னும் கி. பி. 1185க்குச் சற்றுப் பின்னும் என்பது ஏறக்குறைய இவ்விரு பெருமக்களும் ஏற்றுக் கொண்ட காலம் எனலாம்.

இக்காலத்தே பேரம்பலம் பொன்-வேய்ந்த சோழன் என்பான் மூன்றும்

குலோத்துங்கன் ஆவான். இவன் பேர வையிலேயே அமைச்சராக இருந்தவர் சேக்கிழார். சேக்கிழாரைக் கொண்டு பெரிய புராணம் பாடு வித்தவனும் அம்மன்னனே யாவன். இவன் பொன்-வேய்ந்த நிகழ்ச்சியைச் சண்டேசுர நாயனார் புராணத்தே,

"சென்னி அபயன் குலோத்துங்க சோழன்
தில்லைத் திருவெல்லைப்
பொன்னின் மயமாக்கிய வளவர் போரே
என்றும் புலிகாக்கும்
மன்னர் பெருமான்"

என்று கூறுகிறார், சேக்கிழார். ஆகவே சேக்கிழார் காலத்தே ஒருமுறை அம்பலம் பொன்வேயப் பெற்றது என்பது தெளிவு.

பேரம்பலம், சிற்றம்பலம் என்று-இரண்டையும் எடுத்துக் காட்டுகிறார் சேக்கிழார். எம்பிரான் வீற்றிருந்து நடனம் ஆடுகின்ற மூலத் தானமாகிய இடத்தைச் சிற்றம்பலம் என்றும். அதன் முகப்பே-யுள்ள முன்றிலாகிய அம்பலத்தைப் பேரம்-பலம் என்றும் எடுத்துக் காட்டுவது அறிந்து மகிழத்தக்கது.

"உலகு விளக்கும் திருப் பேரம்பலம்" என்பது சுழறிற்றறிவார் நாயனார் புரா-ணத்தே (54) சேக்கிழார்வாக்கு. அடுத்து "மன்னு சிற்றம்பலத்தே, ஆதியும் நடுவும் இல்லா அற்புதத் தனிக்கூத்தாடும், நாதனார்" என்று திருநீலகண்ட நாயனார் புராணத்தே கூறுவதைக் காணும் போதும். பிறவிடங்களில் பொதுவாக அம்பலம் என்று சொன்னாலும், "சிற்றம்பலம்"-என்றும், "திருச்சிற்றம்பலம்" என்றும் சிறப்பாக எடுத்துக் கூறுவதைக் காணும் போதும் "பேரம்பலம், சிற்றம்பலம்"-இரண்டும் வேறுபாடறியச் சேக்கிழார் பெருமானால் குறிப்பிடப் பெற்றுள்ளன-என்று கொள்ளலாம்.

இத்திரு மன்றுள் நுழைவாயிலைத் "திரு அணுக்கன் திருவாயில்" என்று பெயரிட்டழைப்பர் சேக்கிழார். தடுத்தாட்-கொண்ட புராணத்தே நம்பியாரூரர் தில்லை எம் பெருமானை வழிபடச் சென்றபோது இத்திருவாயிலை அடைந்ததாக எடுத்துக் காட்டுகிறார்.

"திருச் சிற்றம்பலம் முன் திரு-அணுக்கள் திருவாயில்" என்று கூறுவதி-லிருந்தும், இதனை அடுத்துச் "செய்தவப் பெரியோன் சென்று தாழ்ந்தெழுந்தான் "திருக்களிற்றுப்படி மருங்கு" என்று கூறு வது கொண்டும் பேரம்பலத்தின் முகப்பே திருஅணுக்கன் திருவாயில் என்றும், அதனை அடுத்துச் சிற்றம்பலத்தின் முகப்பே "திருக்-களிற்றுப்படி" என்றும் சேக்கிழார் அழகுற சொல்லியமை அறிந்து இன்புறத்தக்கது. இத்திருக்களிற்றுப் படியைப் 'பஞ்சாக்-கரப்படி' என்றும் அழைப்பர்.

திரு நீலகண்டர் திருவோடு தொ-லைந்த வழக்கினை விசாரிக்கத் "தில்லைவாழ் அந்தணர்கள் வந்திருந்த பேரவையில்" அவரை இறைவன் அழைத்துச் சென்றதாகக் குறிப்பிடுவதிலிருந்து சேக்கிழார் காலத்தே கூடத் தில்லைவாழ் அந்தணர்கள் பேரவை இருந்தது என்பதும், அது இத்தகைய-வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கியது என்பதும் அது எல்லோர்க்கும் ஒப்ப-உடன்பாடு ஆகியது என்பதும் அறிகிறோம்.

இனி, தில்லையைத் "திரைசெய்-நெடுங்கடல் உடுத்த திருத்தில்லை" என்று திருஞானசம்பந்தர் புராணத்தே குறிப்-பிடுவதிலிருந்து தில்லைக்கண்மையில் கடல் சேய்த்திசையில் நெருக்கமாக இருத்தல் வேண்டும் என்றோ, கடல்வரை தில்லை நகர் பரவியிருந்திருத்தல் வேண்டும் என்றோ கொள்ள வாய்ப்புண்டு.

திருநாவுக்கரசர் தில்லையை வழிபடச் சென்றபோது மேற்குத்திசை வாயில்-வழியாகச் சென்று வழிபட்டார் என்று சேக்கிழார் கூறுவர்.

"தில்லைத் திருநகர் எல்லைப்பால், மஞ்சிற்
பொலிநெடு

மதில்சூழ குடதிசை மணிவாயிற்புறம்
வந்துற்றார்''
(திருநாவுக்கரசு நாயனார் புராணம் 161)

ஆளுடைய நம்பிகளாகிய சுந்தரர் திருத்தில்லையின் வடதிசை வாயில் வழியாகச்சென்று வழிபட்டார் என்பதைச் சேக்கிழார் நன்கு விளக்கமாகவே கூறியுள்ளார்.

''அயன் பொன் சதுர் முகங்கள் என ஆயின தில்லை,
ஊர்விளங்கு திருவாயில்கள் நான்கின்-
உத்தரத்திசை வாயில்முன்எய்தி''

(தடுத்தாட்கொண்ட புராணம் 97)

திருஞான சம்பந்தர் தில்லைக்குள்-சென்று வழிபட்ட செய்தியை இருமுறை தெளிவாக் குறிப்பிடுவர் சேக்கிழார்.-திருத்தில்லை வழிச் செல்வாராகிய ஞானசம்பந்தப் பெருமான் கொள்ளிடம் கடந்தேறி, தில்லை சூழ் திருஎல்லை பணிந்தனர். ''தில்லைசூழ் நெடுமதில் தென்திருவாயில் நேர் அணித்தாக'' (திருஞான சம்பந்தர் 153) அங்குள்-ளவர்கள் வரவேற்ற, ''தில்லை மூதூரினில் தென்திசைத் திருவாயில் எல்லை நீங்கிச் சென்றார் என்று அழகுற அமைக்கின்றார்.

இரண்டாவது முறை திருஞானசம்-பந்தர் தொண்டை நாட்டுத் தலயாத்திரை செய்து திரும்புகாலில் திருத்தில்லை நகர் அணைந்தார். அனைவரும் எதிர் கொள்ள அஞ்சலித்தகைய ராய்த் திருவெல்லை யினைப் பணிந்து ''வடதிசை வாயிலை வணங்கி'' பெருந்திருவீதியை அணைந்தார் என்பர் சேக்கிழார்.

பிற சமயங்களில் தில்லை வந்து வழிபட்ட போது எத்திருவாயில் வழியாக வந்தார்கள் என்பதைச் சம்பந்தர்க்கும், சுந்தரர்க்கும் குறிப்பிடவில்லை.

சமயாசாரியப் பெருமக்கள் மூவரும் தில்லைத் திருக்கோயிலை மேற்கு, தெற்கு, வடக்கு, ஆகிய வாயில்கள் மூலமாகவே சென்று வழிபட்டார்கள் என்பதும், கீழ்த்-திசை வாயிலாக இவர்களில் யாரும் செல்லவில்லை என்பதும் தெளிவாகும். அலைகடல் அரசன் திரைக்கையால் நுரை-மலரும், நீரும் தூவி வழிபாடு தகை-மைத்து கீழ்த்திசை வாயில் என்பதும், தில்லைக் கீழ்த்திசை வாயில் இப்பெரு-மக்கள் அடியார்திரளுடன் புகுந்து வழிபடத் தகுந்ததாகக் கொள்ள வில்லையோ-என்பதும் சேக்கிழார் பாடல் கொண்டு நாம் கருதவேண்டியுள்ளது.

நெய்தல் வளமும், மருத வளமும் நிரம்பிய அற்புதத் தலமாக, கீதவொ-லியும், வேதவொலியும் இடையறாத-தலமாகத் திருத்தில்லை சேக்கிழார்-வாக்கில் பரிமளிக்கிறது.

தில்லையைச் சுற்றியிள்ள போகபூமியினும் மிக்கு விளங்கும் புறம் பணையைப் பாருங்கள்.

''நாக சூத வகுளம் சரளம் சூழ் நாளிகேரம்
இலவங்கம் நரந்தம்
பூகம் ஞாழல் குளிர் வாழை மதூகம்
பொதுனுர் வஞ்சிபல எங்கும் நெருங்கி
மேக காலம் மலர் சோலைகளாகி மீது
கோகிலம் மிடைந்து மிழற்ற''

(தடுத்தாட்கொண்ட புராணம் 93)

உள்ள பெருமரச் சோலையைக் கடந்து சென்றால்

''வன்னி கொன்ற வழை சண்பகம் ஆரம்
மலர்ப்பலாகொடு செருந்த் மந்தாரம்
கன்னிகாரம் குரவம் கமழ் புன்னை கற்பு
பாடலம் கூவிளம் ஓங்கித்
துன்னு தாதி மரு மாலதி மௌல்
துதைந்த நந்தி கரலீரம்மிடைந்த
பன்மலர்ப் புனித நந்த வனங்கள்''

(தடுத்தாட் கொண்ட புராணம் 94)

தோன்றும் என்கிறார் சேக்கிழார்.

அடுத்து வண்டுகள் தாழம் பூவில் துதைந்து அந்த மகரந்தத்தை மேலே பூவில் கொண்டு வெள்ளையாகி ''நீறுபுனை-தொண்டர்கள் போலத்'' தில்லையைச் சுற்றிச் சென்று சென்று முரல்கின்றன என்று நெய்தல் வளம் காட்டுவார்.

திருநாளைப்போவார் நாயனார் புராணத்தில் கூறியவாறே தில்லை மூவாயிரவரும் நாள்தொறும் வழிபாடு ஆற்றும் மூவாயிரம் வேதிகைகளிலிருந்து எழும் ஒப்புகையும், தூபப்புகையும் மாமறை முழக்கும் மேல் செறிந்து சென்று நிற்றலால் வானத்து மேகம் மழை பெய்யச் சூழ்ந்தது போன்ற காட்சியை எப்போதும் தில்லையிலே காணலாம் என்கிறார் சேக்கிழார்.

தில்லைத்திருவீதியைச் ''சிவமே நிலவிய திருவீதி என்று ஆரா இன்ப அன்பினால் அழைப்பர். ''செல்வம் பிரிவறியாத்-தில்லை'' என்பார் சம்பந்தர் புராணத்தில் (சம்பந்தர் 171) ''செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே'' என்ப ஆதலின் அச்செல்வம் இடையறாது நிலை பெற்றிருக்கின்ற திருத் தில்லையைச் சேக்கிழார் பெருமான் ''செல்வம் பிரிவறியாத் திருத்தில்லை'' என்று சொல்வது முற்றிலும் பொருந்துமன்றே! இனிப்புகழாலும் பொலிந்து விளங்கும் தில்லை என்பார் ''ஆனந்த சீர்த்தில்லை அம்பலம் என்று அழைப்பர் நாவுக்கரசர் புராணத்தில்.

செல்வத்தால் சிறந்து விளங்கும் திருத்-தில்லையை '' அறிவின் எல்லையாய திருத்-தில்லை'' என்று கழற்றறிவார் புராணத்தே (61) காட்டுவார் - 'சிதம்பரம்'' என்ற இன்றைய திருநாமத்தே ''அறிவு-வெளி'' என்றும் பொருளன்றே உறைந்து நிற்கிறது. இதனை 'அறிவின் எல்லையாய'' என்று சொல்லாமல் எப்படிச் சொல்வது,

திருத்தில்லையே அறிவின் எல்லையாய் விட்டபொழுது சிற்றம் பலத்தையும்,-சிற்றம்பலத்தே நடிக்கும் சிவபெருமானது திருநடனத்தையும் எந்தச் சொற்களாற்-குறிப்பிட இயலும். ''அம்பலத்தே ஆடு-கின்ற குணங்கடந்த தனிக்கூத்தை'' வார்த்-தைகளாற் சொல்ல இயலாது என்பார் சேக்கிழார்.

''அருமறைச் சிரத்தின் மேலாம்,

சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம்-பலம்'' என்றும், அதனுள் ''ஆதியும்-நடுவும் இல்லா அற்புதத் தனிக்கூத்து ஆடும் நாதனார்'' என்றும் கூறி அப்பெருமானது திருக் கூத்தைச் சுந்தரர் கண்டபான்மையை விவரிக்கிறார்

''ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும்கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றும்-
திருந்துசாத் துவிகமே ஆக
இந்த வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெரும்கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்''

(தடுத்தாட் கொண்ட புராணம் 106)

என்று சுந்தரரிடத்து அற்புதமான ஒரு பரிமாற்றம் ஏற்பட்டது. அதைத்தாமும் அருகிருந்து அனுபவித்துக் கூறினர் - சேக்கிழார்.

திருநாவுக்கரசர் திருக்கூத்துக் காட்சியைக் கண்டபோது,

''கரணங்களும் உடன் உருகும் பரிவின
பேறெய்தும்
ஐயன்திருநடம் எதிர் கும்பிடும் அவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்றால்''

(திருநாவுக்கரசர் 167)

என்று கரணங்களே உருகிக் கரைந்து-போனதாகக் கூறுகிறார் சேக்கிழார். நடராசப் பெருமான் நாவுக்கரசரைப்-பார்த்து '' என்று வந்தாய்'' என்று-

விஞவியது போல உள்ளது. திருக்கூத்தின் குறிப்பு என்றும் நயம்படக் கூறினர்.

ஞான போனகம் உண்டவராய சம்பந்தப்பெருமான் தில்லைத் திருநடனம் தரிசித்த பாங்கு எப்படி? அறிவின் எல்லையாய திருத் தில்லையிலே, சிவமே நிலவிய திருவீதியில் திருச்சிற்றம்பலத்தையும், ஞானத் தனிக்கூத்தையும் ஞானசம்பந்தப் பெருமான் காட்சியிலே சேக்கிழார் காட்டக் காணலாம்.

"அண்ணலார் தமக்கு அளித்த மெய்ஞ்ஞானமே ஆன அம்பலம்" ஆகக் கண்டார் சம்பந்தர். தில்லை அறிவின் எல்லை; அம்பலம் மெய்ஞ்ஞானம் என்கிறபோது இந்த வேறுபாடு விளங்குகிறது. இதற்கு மேலாக அவ்வம்பலத்தே ஆடுகின்ற ஒருபெருங்கூத்து "உள் நிறைந்த ஞானத்தெழும் ஆனந்த ஒருபெரும் தனிக்கூத்தாகக் காட்சி யளிக்கிறதாம். ஞானம் உண்டவராகிய ஞானசம்பந்தப் பெருமான் அக்காட்சியைக் கண்டு சொல்கிறார்.

"உணர்வின் நேர் பெற வரும் சிவபோகத்தை
ஒழிவின்றி உருவின்கண்
அணையும் ஐம்பொறி அளவிலும் எளிவர
அருளினை"

(திருஞானசம்பந்தர் 161)

என அறிவோரமுதாக மெய்ஞ்ஞானிகளாகிய பரம சிவன்முத்தர்களது பாவகமாகிய அனுபவ ஆனந்தக்கூத்தை சாமானியர்களும் தமது ஐம்பொறி அளவிலும் போற்றுவதாக இந்த இடத்தில் சேக்கிழார் அமைக்கிறார்.

இவ்வுடம்பு பெற்றதனால் ஆய பயன் திருக்கூத்துக் காண்டல் என்பதை அவர் இவ்விடத்தில் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம் அன்றே! சென்றடையும் சிவபோகப் பயனை இன்று இவ்வுடம்பாலே அடையச் செய்வது தில்லைத் திருமன்று என்று ஞானசம்பந்தர் அறிவிக்க இவ்வுடம்பாலே அத்திருக்கூத்து இவ்வாறு செய்கிறது என்று திருநாவுகரசர் கரணங்கள் உருகிக்கரைய, அதனால் ஏற்படும் வேதியியல் மாற்றத்தை புலன், பொறி, கரணம், குணம் என்ற உயிரின் புற உடலின் ஒவ்வொருகட்டத்திலும் எடுத்துக் காட்டி மாறிலா மகிழ்ச்சியின் மலர்தலாகும் என்பதைச் சுந்தரர் விளக்க இங்ஙனம் சமயச்சாரியார் மூவர் காட்சிமூலம் சேக்கிழார் பெருமான் ஆனந்த அற்புதத் தனிக்கூத்தை "ஊனாலும் உயிராலும் உள்ளபயன் கொள நிலைந்து" காட்டுகின்ற அழகும் அருமையும் சொற்களில் அடங்கும் தரத்தது அன்று.

அத்தகைய ஆடலழகை – தனிப்பெரும் கூத்தை நாளும் அனுபவித்து அகப்பூசையாற்றும் தில்லைவாழ் அந்தணர் தம்பெருமை எம்மாற் சொல்லலாம்படித்தன்று என்பது சொல்லாமலே விளங்கும்.

அத்தில்லைவாழ் அந்தணர் பெருமையைத் தனிப்புராணமாகப் பாடியசேக்கிழார். திருஞானசம்பந்தர் திருவரலாற்றிலே அவர்தம் காட்சியிலே வைத்து,

"அண்டத் திறைவர் அருளால் அணிதில்லை
முண்டத் திருநீற்று மூவா யிரவர்களும்
தொண்டத் தகைமைக் கணநாத ராய்த் தோன்றக்
கண்டு அப்பரிசு பெரும் பாணர்க்கும் காட்டினார்"

(திருஞானசம்பந்தர் 170)

என்று தாமும் கண்டு யாழ்ப்பாணர்க்கும் காட்டியதாகக் கூறினர் சேக்கிழார்.

தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவரும் மண்ணுலகில் வாழும் மறையவர்கள் அல்ல, அவர்கள் சிவகண நாதர்கள் ஆகும் எனும் பேருண்மையைச் சேக்கிழார் நமக்கு அளித்தருளிய பாங்கு சிந்தித்து இன்புறத்தக்கது.

தில்லையின் பெருமையும், வரலாற்றுச் சிறப்பும், தில்லையின் இயற்கை வளமும் தத்துவப் பொலிவும் பின்னிப் பிணைந்து நடமிடுகின்றன சேக்கிழார் வாக்கிலே. அவர்தம் பெரிய புராணம் தில்லையின் எல்லையிலாப் பெரு நலங்களை நமக்கு அள்ளித் தந்து பேரா இன்பப் பெரு வாழ்வை அளிக்க வல்ல முத்தி சாதன மாகிய சுருவூலம் என்பது உணர்ந்து பயன பெறுவோமாக.



பத்திமையும் பரிசுமிலாப்
பசுபாசம் அறுத்தருளிப்
பித்தனிவ னெனவென்னை
யாக்குவித்துப் பேராமே
சித்தமெனுந் திண்கயிற்றுல்
திருப்பாதங் கட்டுவித்த
வித்தகனூர் விளையாடல்
விளங்குதில்லை கண்டேனே.

அளவிலாப் பாவகத்தால்
அமுக்குண்டிங் கறிவின்றி
விளைவொன்றும் அறியாதே
வெறுவியனுய்க் கிடப்பேனுக்
களவிலா ஆனந்தம்
அளித்தென்னை யாண்டானைக்
களவிலா வானவருந்
தொழுந்தில்லை கண்டேனே.





பாங்கினெடு பரிசொன்றும்
அறியாத நாயேனை
ஓங்கிய ளத் தொளிவளர
வுலப்பிலா அன்பருளி
வாங்கிவினை மலமறுத்து
வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை
யம்பலத்தே கண்டேனே.

எடுத்த பொற்பாதம்

சிவத்திரு. **அ. சொ. சுப்பையா,** எம். ஏ.

எடுத்த பொற்பாதம், நடராசப் பெருமானது இடது திருவடி; அது ஆன்மாவுக்குமுத்தி இன்பம் நல்குவது. உமையொரு பாகங்கொண்டவன், சிவபிரான். அவனது இடப்பாகம் சத்தி. எனவே உயர்த்தி நின்றுடி உயிரினத்தை உய்விக்கும் இடது திருவடியும் அதற்கேற்ப அழகுற வீசியாடும் இடது திருக்கரமும் அன்னை சிவகாமிக்கு உரியன. எனினும், அம்மையும் அப்பனும் வெவ்வேறல்லர்.

பரமசிவம்:-

'சிதம்பர இரகசிய' த்துத் தனிப் பரம்பொருள், சச்சிதானந்த[1] வடிவனன். அருவமான அவன், நிலை பேரின்பமான சிவ ஞானத்தினை உயிர்களுக்கு அருளுபவன். எத்தொழிலும் இயற்றுது, 'சிவமே' என வாளா இருப்பவன் அவன்.

சித்சத்தி:-

அப் பெருமானது திருவுளமாகிய இச்சையே அவனது சங்கற்பம். அதுவே, அவனது, ஆணை. அதனை ஏற்றுச் செயற்படுத்துபவள், அவனது சித்சத்தி. எனவே அவளுக்கு ஆணை என்றே ஓர் பரியாயப் பெயரும் உண்டு.

சிவத்தொடு சத்தி நீக்கமற நிற்றல்:-

காற்றினில் கலந்து இன்பம் தரும் மல்லிகை நறுமணம், மல்லிகை மலரை விட்டுப் பிரிந்து வருதல் இல்லை. கதிரவனிலிருந்து வெளிப்பட்டுப் பரந்து விரிகின்ற கதிர் ஒளி, அக் கதிரவனைப் பிரிந்து விலகுவதில்லை. மின்சாரம் ஒன்றேயாயினும், தொழிற் பாட்டில் நேர் மின்னேற்றல், எதிர் மின்னேற்றல் என இரு கூறுகிப் பயன் தருகிறது.

1. சத் என்பது நிலைபேறு: சித் என்பது பேரறிவு; ஆனந்தம் என்பது பேரின்பம். மூன்றும் இணைந்த சத்சிதானந்த (சச்சினாந்த)த் திருவுடையவன் சிவபெருமான் ஒருவனே.

உருவத்தால் ஒன்றேயாவது, மனித இருதயம்; தொழிற்படு நோக்கில், அது, வலம், இடம் என இரு கூறுகிறது. நரம்பு மண்டலத்தின் தலைமைத் தானத்தில் உள்ளது மூளை; அது உருவத்தால் ஒன்றுயினும் அமைப்பால் **வலது இடது** என்றும் தொழிற்பாட்டால் பெருமூளை, சிறுமூளை என்றும் அறியுமாறுள்ளது.

இவையே போன்று, சிவனது ஆணை ஏற்றுத் தொழிற்படும் சிவசத்தியும், அவனை எப்பொழுதுமே பிரிவதில்லை.[1]

பரமன் கருணை:-

'சிதம்பர இரகசிய' மாய், வாக்கு மனங்களைக் கடந்து, பொறிபுலன்களுக்கு எட்டாமல், எங்கும் நீக்கமற நிறைந்து நின்று, அனைத்தையும் தன்னுள் அடக்கிய உயர்தனி மெய்ப்பொருளாம் சிவபிரான், தன்னைப் போன்றே நிலைத்து நிற்கும் பிற அநாதிப் பொருட்களைத்[2] திருவுளங் கொள்ளுகிறான்.

ஆன்மாவும், ஆணவமும் அவனது சித்தையில் நிற்கின்றன. மூலமலமாகிய ஆணவமும், அதன் பிறவித்தோழனாகிய மூல கன்மமும் அறிவற்ற சடமாயிருந்தும் **ஆன்மாவினுடைய சிற்றறிவினைத் தெளிய** வொட்டாது மறைத்து, மயக்கி அவல்த்துள் அழுத்தி நிற்கும் நிலையினை, பெருமான் உன்னுகிறான். ஆன்மாவை அதருமக் கட்டிலிருந்து விடுவித்து, நிலையான பேரின்பத்தை அதற்கு அருளுதற்கு அவன் திருவுளங்கொள்ளுகிறான். இது பரசிவத்தினது அருவ நிலை.

இனி உயிர்களை இயக்குவதற்காக, அவன் எடுத்தருளும் பல வடிவ வேறுபாடுகளையும் சிந்திப்போம்.

அணுவுக்குள் அணுவாய பரம்பொருள்:-

அணுவிலுள்ள கருப் பொருளில் பரோடானைப் (PROTON) போன்றவன் பரசிவம்.

பரசிவத்தினது ஞான ஆற்றலுக்குச் சித்சத்தி என்றும், சிவசத்தி என்றும், பராசக்தி[3] என்றும் பெயர். இவள் அணுவின் எலெக்ட்ரானை (ELECTRON) ஒத்தவள்.

சிவனது வைப்பு ஆற்றலுக்கு மாயா சத்தி[4] என்றும், பரிக்கிரக சத்தி என்றும் பெயர். இவள் அணுவில் உள்ள நியூட்ரானைப் (NEUTRON) போன்றவள்.

சிவத்தினது எளியதன்மை:-

பரா சத்தியினின்று, அவளின் ஆயிரத்தில் ஒரு கூறாக ஆதிசத்தியைத் தோற்றுவிக்கிறான், இறைவன். திரோதன சத்தியாகிய அவளைத் திரோபவஞ்ச மருவி நின்று, மாயை எனும் வைப்பு ஆற்றலில் கூடுகிறான். அதன் விளைவாக அனைத்து உயிர்களும் வாழ்வதற்கான அண்ட சராசரங்களும், உயிர்களுக்கேற்ற உடலங்களும், உட்கருவிகளும், போகங்களும் அணுக்களின் திரட்சியாகத் தோன்றுகின்றன.

---

1. 'ஒடுங்கி.... ஆணையின் நீக்கமின்றி நிற்கும் அன்றே' – சிவஞானபோதம்
2. அநாதிப் பொருள்கள்: ''பதியைப் போன்று, பசு, பாசம், அநாதி'' – திருமூலர்
3. பராசக்தி: உயிர்களுக்கு அருள்புரிதல மாதிரமே குறித்துப் பொதுவகையான் அறிந்தும், அறிவித்தும் நிற்பதாகிய ஞானம் ஒன்றே பராசத்தியினது சொரூபம்.
4. மாயாசத்தி: ஓர் அறிவற்ற சடம்; இறையாற்றலால்இயக்கப்பெறுவது; சிவபெருமானது பரிக்கிரக சத்தியாய் எப்பொழுதும் நிலைத்து நிற்கும் பொருட்களுடன் ஒன்றும் நிலவுவது.

ஆதிசத்தி யிலிருந்து ஆயிரத்தில் ஒரு கூருக இச்சா சத்தியும், அவளிலிருந்து ஆயிரத்தில் ஒரு கூருக ஞான சத்தியும், அவளின் ஒரு கூருக்க் கிரியா சத்தியும் என ஒன்றின் ஒன்று குறைந்தாகப் பல சத்திகளேயும், ஆன்மாக்களது விருப்பம், அறிவு, செயல் திறன்களே விளக்குவதற் காகச் சிவபெருமான் தோற்றுவிக்கிருன். தானும் இச்சிதா, நாதா, கர்த்தா என்ற பெயரோடு, முறையே அச்சத்திகளேக் கூடி நிற்கிருன். இது சத்தி பேதத்தின் பொது நிலே, தொடர்ந்து, சிவபேதம் பற்றிச் சிந்திப்போம்.

அரு உருவத்திருமேனி [1]:-

பரசிவமாகிய சிவஞரியனது கதிர் கள், மாயை (குழலே) யில் வந்து பொருந்து கின்றன. இரண்டு மேகங்கள் மோதும் போது, இடியும், மின்னலும் தோன்றுவது போல், சிவ ஞரிய கதிர்களும் மாயையும் பொருந்தியவுடன், மாயையி லிருந்து முதலில் நாததத்துவமும் [2] அதனின்றும் விந்து தத்துமும் தோன்றுகின்றன.

அதுகாறும், நிஷ்கள[3]ஞக இருந்த பரசிவம், ஆன்மாக்களே உய்விக்க வேண்டுமென்ற திருக்குறிப்புடன் ஓம்[4] என்னும் பிரணவத்தைத் திரு நோக்கம் செய் கிருன். உயிரினத்துக்கு வேண்டிய உயிர்ப்பு ஆற்றலான ஓம் [5] என்னும் பிரவணம், சமஷ்டி பிரணவம், வியஷ்டி பிரணவம் எனப் பிரிகிறது. சிவபெரு மானது திருஉளக் குறிப்பையே ஆணேயாகக் கொண்டு அவனுள்ளிருந்து வெளிப்போந்த சித்சத்தி, வியஷ்டி [6] பிரணவமாக விரிந்து நிற்க, அவன் சமஷ்டி [7] பிரணவமாகக் குவிந்து நின்று, அவளேக் கூடுகிருன்.

விந்துவிலிருந்து சாதாக்கிய தத்துவம் தோன்றுகிறது. இதுவே சிவபெருமானது அருவுருவத் திருமேனி. சிவலிங்க வடி வினதான இது, ஆவுடையாரும் சிவ லிங்கமும் இணேந்த நிலே. அறிவும் செயலும் சம அளவினதாய இத்திரு மேனியே, சிவபெருமானது சதாசிவ மூர்த்தமாம்.

திருமூலநாதர்:-

இவ் அருவுருவத் திருமேனி ஏற்று, தில்லேயம்பதியில் திருமூலநாதர் திரு வருள் புரிகிறார். இத்திருமேனியே, யோகி களுக்கும் ஞானிகளுக்கும் தியானம் பண்ண உரியது. இனி இறைவனது உருவத்திரு மேனி பற்றிச் சிந்திப்போம்.

சிவபிரானது உருவத்திருமேனி:-

ஆன்மா, ஆணவாதிபந்த பாசங் களால் கட்டுண்ட நிலே, பல தரத்தது. எனவே ஒவ்வொரு ஆன்மாவின் தகுதிக் கேற்பத் தானும் எளியவனுய் வந்து தோன்றி அருள் பாலிக்க விரும்புகிறன், பெருமான். அதன் பயனுகவே அவனது பல்வேறு உருவத் திருமேனிகளேத் தரி

---

1. அருஉருவம்: கண்ணுக்குத் தெரியாத அருவமாகவும் இல்லாமல் சிரகதையால் முதலிய அவயவப் பகுப்புள்ள உருவமாகவும் இலலாமல் இடைநின்ற நிலே.

2. நாததத்துவம்: தத்துவங்களே அனேதது சடம் எனறும், நிலேயற்றன என்றும், மாயையின் கூறு எனறும் பரசிவஞலேயே இயக்கப்படுகின்றன என்றும், தோன்றிய வழியே ஒடுங்கற்பாலன என்றும் உணர்தல வேண்டும்.

3. நிஷ்களன்: (அனேத்துக்கும் ஆதாரமான அவன். தனக்கென ஓர ஆதாரம் இல்லாதவன் (தயகுமிடம்) சிவன் ஒருவனே அத்தன்மையன்

4. ஓம் அ, உ, ம் நாதம், விந்து என பரந்துவிரிகிறது.

5. ஓம்: அ, உ, ம் நாதம், விந்து என பரந்து விரிகிறது.

6. வியஷ்டி: விரிந்து நிற்றல்

7. சமஷ்டி: குவிந்து நிற்றல

சிக்கும் நற்பேறு நம் போன்றோர்க்கு எளிதாயிற்று.

தில்லைக்கூத்தன்:-

சிவபெருமானது உருவத்திருமேனி களுள், தில்லை அம்பலத்து ஆனந்தக் களிநடன உருவமும் ஒன்றாகும். திரு மேனியின் ஒவ்வொரு அங்கமும், அசைவும் ஒவ்வொரு உயரிய தத்து வத்தைச் சாற்றிநிற்கும்.

"தோற்றம் துடியதனில் தோயும் திதி
அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோத (ம்)
முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு."

— உண்மை விளக்கம் — 38

உடுக்கை ஒலி:-

ஆணவ அர வணைப்பில் உறங்கும் ஆன்மாவினை, உசுப்பி எழுப்புதற்காக, அவன் தனது வலது திருக்கரத்திலுள்ள உடுக்கையின் நாதத்தை எழுப்புகிறான்.

முதற்படைப்புக் காலத்தில் அவன் குடிலை என்னும் மாயையில் எழுப்பும் நாதமே, தத்துவங்களுக்குத் தோற்று வாயாகும்.

அவனது இடையீடில்லாத் திரு நடனத்தின் போது எழுகின்ற திருக்கரத்து உடுக்கை ஒலி, புதிய புதிய தோற்றங் களுக்கு வித்திடுகிறது.

அமைந்த திருக்கரம்:-

ஆணவ மாயையுள் கவரப்பட்டுக் கருத்தழிந்து இருளில் கிடக்கும் ஆன் மாவுக்கு அறிவுத் தெளிவூட்டு வதற்காகச் சிவபெருமான் தனது மாயை ஆற்றலையே சிறு விளக் கொளியாய்த் தந்தருளுகிறான். தனது பரிசுத்த சக்தியாகிய அம் மாயை யிலிருந்தே ஆன்மா உய்வுக்கென வண்ண வண்ண அண்ட பேரண்டங்களை உருவாக்குகிறான். வளமான உடம்பினைத் தருகிறான்; அவற்றை நுகர்தலாகிய போகத்தையும்; அப் போகத்திற்குத் துணை நிற்கும் உட்கருவிகளையும் படைத்தருளு கிறான். பேரொளியாகிய இம்மாயை, தன் ஒளிமங்கி இறுதியில் ஆன்மாவினின்று நீங்குவதும், அவனருளால்தான்.

அறப்போர்:-

ஆணவம் என்பது அகவிருள். சிவன் பேரொளி பிழம்பு. ஆணவமாகிய இருளைக்கழலும் செய்தற்குத் தனது சட ஆற்றலாகிய மாயையே ஏவுகிறான், அவன். ஆன்ம ஆணவப் பெரும்போரில் ஆன்மா வுக்குச் சிறு விளக்கொளியாய்த் துணை நிற்பன, மாயையாலான உடல், உலகம் முதலியன.

ஊன்றிய திருவடி:-

(உலக) பூத இருள் தன்னுள் அடங்கிய பொருட்களைக் காட்டாது; ஆயினும் தான் இருளாக இருப்பதையாவது தெளிவாகப் பிறர் அறிய நிற்கும். ஆனால் ஆணவ மலமாகிய இருளோ தன்னுள் அடங்கிய பொருளையும் காட்டாது, தன்னுடைய இருப்பினையும் காட்டாது; மறைந்து நின்று ஆன்மாவைத் தீநெறிப்படுத்தித் தருக்குறச் செய்யவல்லது. எனவே, சிவனும், மறைப்பு ஆற்றலாகிய திரோதான சத்தியைத் தொழிற்படுத்தி ஆணவத்தின் மறைப்பினை மடங்கச் செய் கிறான். உயிருக்கு முத்திப் பேரும் பேரின்பம் நல்கும் பொருட்டு, நீர்கலந்த பாலிலிருந்து நீரையும் பாலையும் பிரிக்கும் அன்னம் போல், ஆன்மாவை அழுத்திக் கொண் டிருந்த வலிய, தீய ஆணவத்தை முயலகனைப் பிரித்து, வீரக்கழல் அணிந்த தனது வலது திருவடிக்கீழ், நடராசப் பெருமான் அழுத்தி, நிற்கிறான்.

எடுத்த பொற்பாதம்:-

ஆன்மா, தனக்கு இயல்பாக அமைந்த சிறுஅளவினதான அறிவு, இச்சை, செயல்களால் தருக்குருது, அனைத்தும் சிவனது இச்சை, சிவனது அறிவு, சிவனது செயல் எனச் சிவ மயமாகக் கருதி இறைபணி நிற்றல் வேண்டும். அத்தகைய ஆன்மாவே அவனது 'குஞ்சித பாதத்தில், தஞ்சம்' பெறுகிறது.

இடது திருவடியைச் சார்ந்த ஆன் மாவைச் சிற்றம்பலத்தான் தன் கால் பெருவிரலால் மேனேக்கி உந்தி, தனது சிரமேல் தாங்கிக் கொள்கிருன். தூக்கிய திருவடியில் தூக்கிய பெரு விரல் இதனை உணர்த்தும். சரண் எனத் திருவடியில் வீழ்ந்த சந்திரனைத் தன் சிரந்தனில் அணிகலனுகச் சூடியது, அவனது இவ் அருள் வெளிப்பாடேயாகும்.

அங்கியிலே சங்காரம்:-

சிவபெருமான் எரியாடி, எரி என்பது எரிகின்ற நெருப்பு.

சிவபெருமானது நெற்றிக்கண் நெருப்பு, காமவேளை எரித்தது; கந்தவேளைத் தோற்று வித்தது. அவனது திருமுறுவலாகிய உதட்டு நெருப்பு, முப்புரத்தை எரித்தது. மூவசுரரையும் தேவரையும் காத்தது.

அவனது இடக்கரம் ஏந்திய நெருப்பு, அண்டத் தொகுப்பையே அழிக்க வல்ல ஊழித்தீயைத் தோற்றுவிப்பது.

அவனது திருமேனியாகிய நெருப்பு தருக் குற்ற மாலும் அயனும் தன் பால் நெருங்கலொண்ணு அனற்பிழம்பாகி, அவர்தம் ஆணவத்தை ஒடுக்கும் தன்மையது.

அவன் நள்ளிருளில் நட்டமிடும் சுடலை நெருப்போ உயிரது மன நோயை எரித்துப் பிறந்த பிறப்பறுத்து ஆன்மாவை ஈடேற்றுவது.

திருச்சிற்றம்பல ஆடுகளம்:-

ஒவ்வொரு ஆன்மாவினது துவாத சாந்தத்திலும் (தலைக்கு மேல் 12 அங்குல உயரத்தில்) சிவபெருமான் இடையருது திருநடனமிடுகிருன்.

அவனது அண்டவெளித் திருநடனம், பதஞ்சலி, வியாக்கிரபாதர் முதலிய மெய் யடியார் பொருட்டுத் தில்லைச் சிற்றம் பலத்தில் காட்டப்பெற்றது.

அண்டத்து ஆடலையும், அம்பலத்து ஆடலையும் பிண்டத்துள்ளும் கண்டு உணர்ந்தவர்களே பேரருளாளராவர். அவர்களைப்போன்று, மூவிடத்திலும் ஒரு சேரச் சிவ நடனத்தைக் காணுதலும், அவனது திருக்கூத் தொலியைக்கேட்ட லுமே சிவமாந்தன்மை சிவப்பேறு என் றெல்லாம் சிறப்புற அழைக்கப் பெறும் பேரின்பமாகும்.

எனவே, இப் பேற்றினை எவ்வாறு பெறுவது? அண்டநடனமும், அம்பல நடனமும் பற்றிச் சிந்தித்தோம். இனி மூன்ருவதாகியபிண்ட நடனத்தைக் காண முற்படுவது பெரும் பயன் நல்கும்.

ஆன்மா அணுட்டிக்க வேண்டிய நெறி:-

சுடைத் தேற விரும்பும்ஆன்மா, மேற்கொள்ள வேண்டிய நால்வகைச் சிவ நெறிகளும் [1], சைவசாத்திரங் களுள் மிகத் தெளிவாகத் அறிவுறுத்தப்பெறுகின்றன. அவற்றை இற்றைநாள் அறிவியல் நோக்கில் சிந்திப்பது நலன் பயக்கும்.

1. நால்வகைச்சிவநெறி: சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன

மனித உடலில் கூத்தப் பெருமான்:-

சங்குகளில் வலம்புரி, இடம்புரி என இரண்டு உண்டு. அவற்றுள் வலம்புரிச் சங்கு மிகஅரிதில் கிடைப்பது. இரட்டை வாழைப்பழம், வெற்றிலை முதலிய இரட்டைகளைப் போன்றே வலம்புரி, இடம்புரி ஆகிய இரண்டு சங்குகளது இணைப்பாக அமைந் திருப்பது, மனித உடம்பு.

மனிதனது உச்சித்தலைவாயில் சிவ நாதத்தைக் கேட்கும் நுண்காது ஆகும். மனிதனது இருபக்கமார்புக் கூடு, முது கெலும்பின்நீண்ட பகுதி ஆகிய வற்றின் அமைப்பு. இரட்டைச் சங்கின்அமைப்பைப் போன்றது. இதுசங்கநிதியாகும்.

இரப்பைக்கு மேலேயுள்ள உதர விதான (Diaphram)த்தைப் பதினெறு இதழ்த் தாமரையாக, அனுகத ஆதார மாகச் சாத்திரங்கள் சிறப்பிக்கும். இது பதும நிதியாகும். (பதுமம்தாமரை)

இவ்வாறு சிவபெருமான், சங்கநிதி, பதுமநிதி என்ற பெருநிதிகள்புடைசூழ, மனித இதயமாகிய நெஞ்சுத்தானத்தில் ஆனந்த க் களிநடனம் புரிகிறுன். குகை வடிவமானஇப்பகுதியில் அவனைக் குஹ் யாதிகுஹ்யாய நம: என்ற பத மந்திரத் தால் அபிடேகிப்பர், அடியவர்.

மனிதனது தலைப் பகுதியாகிய ஆகாயவெளியில் சிவபெருமான் புரிகிற ஞான நடனம் யோகிகளும், ஞானி-களுமே காணுவதற்கு எளிது.

பிண்டமாகிய மனித இதயத்தில் நிகழும் நடனம், நால்வகை நெறியாளரும் கண்டு இன்புறக் கூடியதாகும்.

ஆன்மார்த்த பூசை நிகழுமாறு:-

புறத்தே, குரு, இலிங்க அடியார்வழி பாடுகளில், தாழ்த்தி வணங்குவதற்குத் தலை யினையும், வாழ்த்தி வழிபடுவதற்கு வாயினையும் கூப்பித்தொழுதற்குக் கை களையும் வலம் வருவதற்குக் கால்களையும் பெருமான் அடியவர்க்கு அருளி யிருக் கிறுன். அவையேபோன்று, அகப் பூசைக்கென அவன்அமைத்தருளியுள்ள கருவிகரணங்களும் மிகச் சிறப் பானவை. அவற்றை மாறு அன்பொடு அவனுக் காகவே இயக்கிவரின், அவ் வனுபவ முதர்ச்சியால் விளையும் பயன்கள் அளப்பரியன, வியக்கத்தக்கன.

மெய் யடியாரது நெஞ்சப் பகுதியைச் சிவ பெருமானுக்குப் பூசைத் தான மாகவும், தலையைத் தியானத் தான மாகவும், அடிவயிற்றை ஓமத் தான மாகவும், சித்தாந்த சாத்திரங்கள் இடஞ்-சுட்டி அறிவுறுத்தும். பூசைத்தானத்தில் சிவ பெருமானுக்கு ஷோடசோபசாரம் நிகழுகிறது.

பூசை ஏற்கும் சிவபெருமான், அபிடேகப்பிரியன். அவன்மீது அடியவரது அன்பு ஊற்றுன குருதி(Blood) இதய கமலத்தில் இடையீடின்றி அபிடேகமாகிக் கொண்டேயிருக்கிறது.

சிவகணங்களே, மெய்யடியாரது குருதியிலுள்ள சிவப்பு அணுக்களாம் (Red Blood Corpuscles)[1] அவையே ஒருங்கு குவிந்து, அலங்காரத்தீபமாக ஒளிவிடு கின்றன. அங்குச் சாமரைகளாகப் பயனுறுபவை, நுரையீரல் (Lungs) என்னும் காற்றறைகளாகும். பெரு மானுக்குக் காட்டப்பெறுகிற ஆலவட்டமே, மனித ஈரல் (Liver) ஆகும். மற்றும்கண்ணாடி யாக மண்ணீரலும், பனைஓலை விசிறி களாகச் சிறுநீரகங்களும், சதுர விசிறி யாகச் (Bladder) சிறுநீர்ப்பையும், குடையாக (Brain)மூளையும் கொடியாக உச்சித்தலையிலுள்ள நுண்செவியும் (PinealBody) பயனுறுகின்றன.

உடலைச் சிவத்திற் காகவே அர்ப் பணிக்கும் இச்சீர்மிகு ஆன்மார்த்த பூசை,

முதலில்வெறும் சற்பனை [1] போன்றே தோன்றிடினும் ஆழ்ந்த அனுபவத்தின் பயனுக உள்ளத்துக்கு ஏற்படுகிற உறுதி யையும், உடலுக்கு உண்டாகிற நோய்த் தடுப்பாற்றலையும் (ஆன்மா பெறுகிற வேறுபல இம்மை, மறுமை நலன்களையும்) ஐய மின்றி மிகத் தெளிவாக உணரலாம்.

இது தொடர்பான சைவ சித் தாந்தக் கோட்பாடுகளை இவண் சிந்திப்பது கடமையாகும்.

மூவகை ஆற்றல்:-

இறைவனுடைய இச்சா சத்தி, ஞான சத்தி, கிரியா சத்தியைப் போன்று உயி ருக்கும் இச்சை, அறிவு, செயல் என்ற மூவியல்புகள் உண்டு. இறைவனது ஆற்றல் அளப்பரிது. ஆன்மாக் களுடைய வோ, மிகமிகச் சிறு அளவினது. அவற்றையும் விளங்க வொட்டாது தடுப்பது, ஆணவம் என்னும் கொடிய மலம். அவ்வாணவக் காரிருளில் அலமந்துவாடும் ஆன் மாவுக் குச் சிறுவிளக்காக, மாயை என்னும் தனது வைப்புச் சத்தி யினின்று, உடல் முதலி யவற்றை அருளியவன் சிவபெருமான்.

அவற்றுள் உயிரது அறிவுக் கும், செயல்களுக்கும் எனத் தனித்தனிப் பொறி புலன்களைச் சிவபெருமான் படைத் துத் தரு கிறான். ஆனால், இச்சை என்னும் உயரியல்புக்கு எனத் தனியாக ஒருபொறிபுலனும் இல்லை. மனம் என்னும் உட்கருவியே உயிர்த் தோழியா யிருந்து உயிரது இச்சையை இயக்குகிறது.

அறிவுப் பொறிகளும், செயற்பொறி களும்:-

பெருமூளையும், சிறுமூளையும் அவற் றைச் சார்ந்துள்ள அறிவுக்கருவிகளும், செயல் கருவி களும் இவ்வாறு உயிரது அறிவு, செயலுக்குஅமைந்த பொறி புலன் களாம். அனைத்து நிகழ்வு அலை களையும் தன்பால் ஏற்று நிற்கும் பெருமூளை, அவற்றின் தொடர்பான ஆணைகளைச் சிறு மூளைக்கு அனுப்பு கிறது.

ஆணவக்கட்டுள் உயிரது அறிவு மந்த நிலை:-

ஆணவ பந்தத்திலுள்ள உயிரது பெரு மூளை, நான் எனது எனச் செருக்குற்று நிற்கிறது. நூலறி வும், தற்கிழமையும் மேலோங்கிய இந்நிலையைப் பாசஞானம், பசு ஞானம் என அருளாளர்கள் மதிப் பிடுவர். தருக்குற்ற பெருமூளை, தன் முனைப்பாகவே சிறுமூளைக்கு ஆணை களைப் பிறப்பிக்கிறது. அவ்ஆணைப் படி சிறுமூளை உலகியலின் பல்வேறுசெயல் களையும் செய்து, உயிருக்கும்புதிய வினை களை ஈட்டு கிறது. அவ்வினை களினின்று, புண்ணிய பாவங்களும், இன்ப துன்பங் களும் மாறி மாறித் தோன்றி, பல்சக்கரம் போன்று, உயிரினைப் பிறப்பு இறப்புச் சுழற்சியில் அழுத்துகின்றன.

கட்டுநீங்கிய ஆன்மாவின் பக்குவ நிலை:-

பக்குவமுற்ற நிலையில், சிவ மூல மந்திரத்தை ஆன்மா நாளும் தவறாது

---

1. சற்பனை:- பெரியதொரு அணைக்கட்டினை உருவாக்கும் விஞ்ஞானி, முதலில் ஒரு 'சற்பனை – அணையை' மனங்கொள்கிறார். தொடர்ந்து தாளில் வடிவமாகவும், களிமண்ணில் படிமமாகவும் உருவமைக்கிறார். அதன் பின்னரே உண்மையான அணைக்கட்டு வேலையைத் தொடங்குகிறார். உலகியலில் எத்துறையாயினும், அது பகுத்து உணரும் அறிவாயினும், பாரினையே ஆளும் தொழிலாயினும் அதற்குக் சற்பனையே அடித்தளம். கண்டதை எல்லாம் சற்பனை செய்து உழலும் மனிதன், நிலையான பேரின்பம் நல்கும் கடவுளைக் சற்பனைக்கண்ணால் கண்டு இன்புறுவதில் இழுக்கு என்னை? முறுகிய அனுபவத்தால், கடவுள் ஒருவனே சற்பனை கடந்த உண்மை எனவும், மற்ற அனைத்தும் நிலை, ற்ற சற்பனை எனவும் அன்றே ஆன்மா உய்த்துணருகிறது!

தியானம் செய்வதன் மூலம், பெருமூளைப் பந்தப் படுத்தியிருந்த அறியாமை எனும் ஆணவ இருள் விலகிச் சிவஞானத் தெளிவு பிறக்கிறது.

நல்வினை தீவினைக்கு இதுவரை நிமித் தமாயிருந்த சிறுமூளை, சித் சத்தியினது அருளால், இருவினை கலையும் ஒப்ப ஒறுத்துச் சிவ புண்ணியத்திலே தலைப்படு கிறது.

இடைப்பட்ட மயக்கத்தால் இதுகாறும் இடர்ப்பட்ட நடுமூளை, இன்ப வாரிதியில் திளைக்கிறது.

இவ்வாறு ஆணவ, கன்ம, மாயா மலங்களின் கோட்டைகளாக [1] இருந்த இந்தப் பெருமூளை, சிறுமூளை, நடுமூளை மூன்றும் சத், சித், ஆனந்தத்தின் நிலைக் களனாக, சோமாஸ் கந்தமூர்த்தி யின்இருப் பிடமாகி, உலகியலிலேயே போரின்பம் துய்க்கும் சீவன் முத்த நிலையை (PARADISE ON EARTH) ஆன்மாவுக்குக் கொண்டு வரு கின்றன.

அறிவு, செயல் இவற்றின் பரிணும வளர்ச்சி இவ்வாறிருக்க, இச்சையினை இயக்கும் மனமோ, ஆன்மாவின் ஊழ் வினைக்கு [2] ஏற்ப, ஆண்டவனது ஆணை [2] வழி நடக்கும் சிற்சத்தியால் – அவனது மறைப்பு ஆற்றலால் இயக்கப் பெறுகிறது. மனத்தை இவ்வாறு இறைவன் தொழிற் படுத்துவதன் மூலமாக, தோழியிற் கூட்டம் நிகழுகிறது. ஆன்மத் தலைவி, சிவ பெருமானாகிய தலைவனைக் கூடி இன்புறு கிறாள்.

இனி, ஆன்மா ஆணவ இருள் நீக்கிச் சிவஞானம் பெறுவது எங்ஙனம் எனச் சிந்திப்போம்.

தலைவாயில்:

வேதாராணியேசுவரைப் பூசித்தும், வேதங்கள் தலைவாயிலைத் திருக்காப் பிட்டன பன்னெடுங் காலம் திறக்கப் படாது இருந்த ஆலயத் திருவாயில், தமிழ் மறையாகிய தேவாரம் ஓதத்திறந்து மூடு கின்ற இயக்கத்தைப் பெற்றது. இதனைப் போன்றே மனிதத் தலையிலும், ஒரு நுண்ணிய வாயில் உண்டு.

குழந்தை கருவுற்றதும் வலிய எலும்புச் சுவர்களாலான மண்டை ஓட்டில், தலைவாயிற் கதவம் உறுதி யானதசை நார்களால் (ஜவ்வு) பிர மாவினால் அடைக்கப்படுகிறது. FONTA NELLA என இதனை மருத்துவ நூல்களும் கூறும். ஒருசதுர அங்குலப் பரப்புள்ள இவ்உச்சித்தலைப் பகுதியே, தலைவாயி லாகும். இதனைக் கருவினில் அடைத்தவன், வேதங்களின் தலைவனாகிய, பிரமன். குழந்தை பிறந்த பதினெட்டு மாதங் களுக்குப் பிறகுஇக்கதவு சிறிது சிறிதாக வலிமை பெறுகிறது.

ஏழு முதல் பதினான்கு ஆண்டு களில்சிவகுரு [3] வினால் சிவமூல மந்திர உபதேசம் அருளப்பெறும் போது இத் தலைவாயிலின் நுண்கதவு திறக்கின்றது.

இதுகாறும் உடல் வளர்ச்சிக்கே பெரிதும் துணை நின்றது, மூளைப் பகுதி யில்கூம்பித் தொங்கிய ஒரு தாமரை மொட்டு. Pitutary Gland என்பது இதன் மருத்துவப்பெயர். இதனுடைய நலனையும் வளனையும்பொறுத்தே உடல் வளர்ச்சியும், உள்ளத்துஎழுச்சியும் அமைகின்றன.

வண்டினது இனிய ஒலி போன்ற குருவினது மந்திரோபதே சத்தால் ஆயிரம்

---

1. மும்மலக்கோட்டைகள்: "முப்புரமாவது மும்மல காரியம்" – திருமூலர்.

2. ஊழ்வினை, ஆணை: பாலது ஆணை என்ற தொல்காப்பிய சொல்லாட்சி இக்கருத்துப் பற்றியதே.

3. சிவகுரு: சிதகுருவே நிறைமொழி மாந்தர். சிவனது ஆணையேற்றுச் செயலபடும் சிற்சத்தியே ஆணை. சிவனால் முதற்படைப்பு காலத்தில் ஆக்கப் பெற்றவையே, மறைகள. உயிரினது பக்குவத்திற்கு ஏற்ப சிவதத்வினது அருளால் நிறைமொழி மாந்தர ஆன்மாவுக்கு உபதேசித்த வேத சிவாகம மொழிகளே மந்திரங்களாம்.

"நிறைமொழி மாந்தர்ஆணையிற் கிளந்த
மறைமொழிதானே மந்திரம் என்ப" – தொல 480

இதழ்த்தாமரையாக இது மலர்ந்து சிவ பெருமானுக்கு இருப்பிடமாகிறது. இதுவே உள்ளத்து எழுச்சிக்கும் மனத் தின் வளர்ச்சிக்கும் இறைமையின் ஊற்றத் திற்கும் உறுதுணையாகிறது.

இவ்வாறு உபதேசவழி அறிவு விளக்கம் பெற்ற ஆன்மா, விதிப்படி நாள்தோறும் சிவ மூல மந்திரத்தால் சிவனது திருவடியையே சிந்தித்து நிற்கிறது. சிவ பெருமானது நுண்ணிய திரு நடனத்தைப் புருவ நடுவில் உள்ள தன் நெற்றிக்கண்ணால் ஆன்மா கண்டு இன்புகிறது.

இது காறும் கூம்பி மறைந்து கிடந்த PINEAL BODY என்ற நுண்செவி, முத்தி தீக்கைருப் பிறகு சிறிது சிறிதாக வலுப் பெற்றுச் சிவபெருமானது மிக நுண்ணிய திருக்கூத் தொலியைக் கேட்கும் ஆற்றலைப் பெறுகிறது. சேரமான் பெருமான்நாயனார் போன்ற பேரருளாளர் இத்தகைய பேறு பெற்றேர் ஆவர். இவ்வாறு திரு அருளைப் பெற்ற ஆன்மா, உச்சித்தலைவழியாகத் தான். இறுதியில்உடலைப் பிரிந்து சிவனடி சேருகிறது. ஆகவே தலைவாயிலே கடை வாயிலாகவும் (கடைவழி) ஆகிறது.

சிவநாதத்தைக் கேட்கும் ஆற்றலுள்ள நுண்ணிய காதினை உடைய ஆன்மாவே, தலை உச்சியிலுள்ள, கடைவழியைக் கடக்கமுடியும்.

எனவே நாளும் உயர்வினையே நாடித் திரியும் நாம் ஒவ்வொருவரும், சிவகுரு மூலமாகச் சிவமூல மந் திரத்தை உப தேசிக்கப் பெற்று, நித்திய அநுட்டானத் தின் மூலம் படிப் படியாக வளர்ந்து சிற்றம் பலக்கூத்தனது திருநடன நுண்மைக்காணுதலும் நுண் ஒலியைக் கேட்டு இன்புறுதலும் முத்திப் பேற்றுக் கான உயர் நெறியைப் பேணுதலும் தலையாய கடமைஆகும். □



பூதங்க ளைந்தாகிப்
புலனைகிப் பொருளாகிப்
பேதங்க ளனைத்துமாய்ப்
பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட
கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும்
விளங்குதில்லை கண்டேனே.

•திருச்சிற்றம்பலம்

அப்பய்ய தீட்சதர்—சிதம்பரம்—சைவம்

டாக்டர். கோ. சுந்தரமூர்த்தி எம்.ஏ. பி.எச்.டி.
வடமொழி துறைத்தலைவர், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்.

அப்பய்ய தீட்சதர் தென்னகத்தில் பிறந்து பாரத நாட்டிற்கும், இந்து கலாச்சாரத்திற்கும் அழியாத பெருமை தேடித்தந்த பெருமான்களில் ஒருவர். தென்னகத்தில் சைவம் வளர்ந்தோங்க முழுமுதற் காரணங்களாகவிருந்த தலங்களிலே சிதம்பரம் தலையாயது. தமிழ்ச் சைவ உலகில் சிதம்பரத்திற்கு அளிக்கப்படும் சிறப்பு மகத்தானது. ஆகவேதான் தேவாரப் பதிகங்களை முறைப்படி ஓதத் துவங்குவதற்குமுன் 'திருச்சிற்றம்பலம்' எனச் சொல்லித் தொடங்க வேண்டும் என்பது சைவமரபு, சிதம்பரமும் தில்லை, வாழந்தணரும் நடராசப் பெருமானின் திருக்கோயிலும் நடராசர் அருளும் தமிழ்ச் சைவ உலகிற்குச் சீவநாடி போன்றவை.

ஆகவே சைவ சமயப்பற்று கொண்டு சைவ சமயத்திற்கும் தத்துவத்திற்கும் பெருந் தொண்டாற்றிய அப்பய்ய தீட்சதர் அவர்கள் சிதம்பரத்துடன் எத்தகைய தொடர்பு கொண்டவர் என எண்ணிப் பார்ப்பதே சிவபுண்ணியமாகும்.

ரங்கராஜ தீட்சதர் என்னும் பெரியார் மிகத் தூய்மையான சிந்தனையும் வாழ்வு நெறியும் கொண்டவர், அவர் பெரிய சைவ பாரம்பரியத்தில் வந்தவர். அவருக்கு நாற்பது வயது வரை குழந்தைப்பேறு கிட்டவில்லை, ஏதாவது தோஷம்இருந்து அதனால் குழந்தைப்பேறு கிட்டாமல் போயிருக்கும் என நினைத்து அன்பர் ரங்கராஜதீட்சதரைச் சிதம்பரம் சென்று தங்கி வழிபட்டு நடராஜப் பெருமானின் அருளுக்குப் பாத்திரம் ஆகுமாறு அறிவுறுத்தினர். அன்பர் ஆலோசனைப்படி ரங்கராஜதீட்சதர் மிகப் புனிதத்தலமாகிய சிதம்பரம் சென்று தங்கினர். தீட்சதரின் குலதெய்வமான மார்க்க சகாயப் பெருமானே ரங்கராஜ

தீட்சரைத் தில்லைத் தலத்திற்குச் செல்லு மாறு கட்டளையிட்டதாக ஒரு செய்தி உண்டு. சிதம்பரத்தில் ரங்கராஜதீட்சதர் ஆறு ஆண்டுகள் தங்கி நடராஜப் பெருமானை வழிபட்டார். அன்றுடம் சிவ கங்கை என்னும் புனிதநீராடி, நடராஜப்பெருமான் திருக்கோயிலைச் சுற்றி வழிபட்டு, சைவ முறைப்படி சிவபூஜையும் நித்திய கருமானுட்டமும் செய்து சிவ தியானம் செய்தபடி வாழ்ந்து வந்தார். ரங்கராஜ தீட்சதர் ஏழை எளியவர்களுக்குத் தம்மால் இயன்ற தான தர்மங்களும் செய்தார்.

ஆறு ஆண்டுகளுக்குப் பின் ஒரு நாள் நடராஜப் பெருமானின் திருச் சந்நிதியில் ஓர் அசிரீரி வாக்கு கேட்டது. நடராஜப் பெருமான் ரங்கராஜ தீட்சதரின் தூய்மை வாழ்க்கையையும் சிவ தியானத்தையும் கண்டு திருப்திப் பட்டதாகவும் இதன் காரணமாக ரங்கராஜ தீட்சதருக்கு இரு ஆண்மக்களும் ஒரு பெண்ணும் பிறக்கும் எனவும் அசரீரி வாக்கு எழுந்தது. அதைக் கேட்டுப் பெரும் மகிழ்ச்சி கொண்டு நடராஜரை வணங்கித்தம் இல்லம் சென்ற ரங்கராஜ தீட்சதர்வீட்டில் தில்லைவாழ் அந்தணர் ஒருவர் தங்கக் கிண்ணத்தில் பழச் சாறுடன் நின்று கொண்டு இருந்தார். இப்பழச்சாற்றை உண்டால் ரங்கராஜ தீட்சதரின் மனைவிக்குத் தில்லை நடராஜரின் அருளால் மகப்பேறு சித்திக்கும் எனத் தில்லை வாழ் அந்தணர் ஆசி கூறினர். ரங்கராஜ தீட்சதருக்கு விரையில் ஓர் ஆண் மகவு பிறந்தது. சிதம்பரத்திலேயே இந்த ஆண்மகவு பிறந்ததாக ஒரு செய்தி உண்டு.

நடராஜரின் அருள் பெற்றுப்பிறந்த இந்த ஆண் மகனின் வரலாற்றை சிவ ரகசியம் போன்ற புராண நூல்களும், வேறு சில பெரியவர்களும் நமக்காக எழுதி வைத்து உள்ளனர். இத்தகைய பெருமை பெற்ற குழந்தைக்கு அப்பய்ய தீட்சதர் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர் ரங்கராஜதீட்சதரின் குடும்பத்தினர். இவர் பிறந்த காலத்தைக் குறிப்பிட்டு கூறுவதில் சில குழப்பங்கள் உள்ளன. என்றாலும் இவர் கி.பி. 1520 ல் பிறந்தார் எனக் கூறுவதில் தவறு இருக்க வாய்ப்பு இல்லை.

தம் தந்தையான ரங்கராஜ தீட்சதரிடம் முதற் கல்வி பெற்ற அப்பய்ய தீட்சதர் வெகு விரைவில் எல்லாச் சாத்திரங்களிலும் தேர்ச்சி பெற்றார். தமது வாழ்க்கை வரலாற்றின் சில முக்கிய நிழ்ச்சிகளைத் தாம் எழுதிய நூல்களில் ஆங்காங்கே அப்பய்ய தீட்சதர் கூறியுள்ளார். பிற நூல்களும் இவற்றைக்கூறுவதால் இச்சம்பவங்கள் உண்மையானவையே என்பதில் ஐயமில்லை. இவற்றை விரிவாக நோக்கினால் அப்பய்ய தீட்சதர் எவ்வளவு பெரிய மகான் என்ற உண்மை நமக்குப் புலனாகும்.

வேத நெறி தழைத்து ஓங்கவும் மிகு சைவத் துறை விளங்கவுமே நடராஜப் பெருமான் உலகுக்கு அனுப்பிய அப்பய்ய தீட்சதர் இயற்றிய நூல்கள் நூற்று நான்கு எனமரபு கணித்துக் கூறுகின்றது. இவற்றை வேதாந்தம் பற்றியநூல்கள், சிவாத்துவிதம் பற்றிய நூல்கள், சைவம் பற்றிய நூல்கள், மீமாம்சை பற்றிய நூல்கள், இலக்கண நூல்கள், காவியத்திற்கு உரையாக எழுதிய நூல்கள், அணி நூல்கள், பக்திப் பாட்டுக்கள் மற்றும் பல்துறைப் பற்றிய நூல்கள் எனப் பல தலைப்பில் அடக்கலாம். இவை யாவற்றையும் பற்றி இங்குக் குறிப்பிடுவது இயலாது என்பதால், இவர் சைவ மரபாகச் செய்த நூல்களைப் பற்றி மட்டும் ஓரளவு நாம் காண விழையலாம்.

சைவசமயம் சார்ந்தும், சைவ தத்துவம் சார்ந்தும் அப்பய்யர் தீட்சிதர் இயற்றிய நூல்கள் சுமார் 25 இருக்கும் எனலாம். அப்பய்ய தீட்சதர் வாழ்ந்த காலத்தில் வைணவ சமயத்தைத் தழுவிய மன்னர் சிலர் பேரரசர்களாகவும், குறு நில மன்னர்களாகவும் இருந்தனர். இதைப் பயன்படுத்திக்கொண்ட தீவிர வைணவர் சிலர் சைவ சமயத்தை முற்றுக அழிந்துவிட

முயன்ற காரணத்தால்சைவ சமயக்தைக் காக்கபோரிட வேண்டிய நிலை ஏற்பட்டது. அறிவு நிலையிலிருந்து உண்மையை எடுத்துக் கூறிச் சைவத்தின் பெருமையை நிலைநாட்ட அப்பய்ய தீட்சதர் போன்ற பேரறிவாளர்கள் சைவ சமயத்திற்கு அப்பொழுது தேவைப்பட்டனர். இதற் காகவே பலஇடங்கள் திக்விஜயம் செய்தும் பல நூல்கள் எழுதியும் சைவச்சிறப்பை வெளிபடுத்தி நிலை நாட்டினர்.

சிகரிணீ மாலை என்னும் நூலும் சிவ தத்துவ விவேகமும் அப்பய்ய தீட்சதர் எழுதிய வகைகளில் முதலில் எண்ணத் தகுந்தன. சிகரிணீமாலை என்னும் நூல் அறுபது பாட்டுக்கள் கொண்டது. சிவ பக்தியை சிறப்பித்துச் சிவ பரத்துவத்தை நிலை நாட்டும் நூல் இது.

சிவ தத்துவ விவேகத்தில் அப்பய்ய தீட்சதர் கூறுகிறார். இந்நூலில் நான் பசுபதி யின்பெருமையைப்பேசுகிறேன். பசுபதியே, இப்பிரபஞ்சத்தின் ஆன்மா, காத்திர மரபு வழி சிவத்தின் பெருமையை நான் நிலை நாட்டிச் சைவத்தைத் தூற்றித்திரியும் மக் களுக்கு உண்மை புரிய இது வழி வகுக்கும். இதன் உள்அர்த்தத்தைப் புரிந்து கொண்டு இதனைக்கற்க வேண்டும். சைவ உலகில் இடுக்கண் வரும்பொழுது சிவதத்துவ விவேகம் ஆற்றியதொண்டு போலும் வேறு எந்த நூலும் ஆற்றவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

சிவம் என்று கூறும் போது மும்மூர்த்திகளில் ஒருவராகச் சிவனை நினைத்து சிவப் பெருமை கூறவில்லை. பரசிவம் என்னும் தத்துவம் கடந்த சிவமே அப்பய்ய தீட்சதர் போற்றும் பெரும் தெய்வம்.

பிரும்மதர்க்கஸ்தவம்–அதன் உரை ஆகிய இரண்டும் அப்பய்ய தீட்சதர் இயற்றிய சிவபரமான நூல்கள். சிவ வழிபாட்டை நிந்தை செய்தவர்கள் வாதங்களுக்குச் சரியான விடைகளை மிகத் தெளிவான சான்றுடன் இவ்விரு நூல் களில் எழுதி இயம்புகின்றார், அப்பய்ய தீட்சதர் சிவமே பரபிம்ம் என்பதைத்தெளி வுற எடுத்துக் காட்டியிருக்கிறார் இங்கு.

சிவத்தியான பத்ததி என்னும் நூல் மானசீகமாகச்சிவபூஜை எப்படி செய்ய வேண்டும் என்பதை விரிவாக விளக்க வந்த நூல். சிவ பூஜாவிதி என்னும் நூலும் சிவ பூஜையை மரபு வழி செய்ய வழி காட்டும் நூலாகும்.

சின்ன பொம்மன் என்னும் வேந்தன் குறுநில மன்னனாக இருந்து தன்னுட்சி பெற்ற வேலூர் மன்னன். இவன் முதலில் வைணவனாக இருந்தான். அப்பய்ய தீட்சதரின் தொடர்பு கிடைத்தவுடன் சைவத்தின் பெருமைகளைப் புரிந்து கொண்டு இம் மன்னனுக்குச் சைவ சிறப்பையும், சிவ பூஜை செய்யும் நுணுக்கங்களையும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்ட எழுதப் பெற்ற நூல் சிவார்ச்சனா சந்திரிகா என்னும் நூல்.

சைவ நாயன்மார்கள் தங்களது மேலான பக்தி இலக்கியம் வாயிலாகச் சிவபரத்தை நிலை நாட்டினார்கள். பக்தி வழி நின்ற நாயன்மார்கள் காட்டிய வழியில் சைவச்சிறப்பை வளர்க்க கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு அளவில் சதுர் வேததாத்பரிய

சங்கிரகம் சுருதி சூக்தி மாலை என்று அழைக்கப்படும் நூல் ஒன்றை எழுதினர். ஹரதத்த சிவச்சாரியார் என்னும் மாபெரும் சைவ அருளாளர். ஆழ்ந்த வேத, புராண உண்மைகளை மிக வன்மையான தர்க்க சாஸ்திர மரபுப்படி ஹரதத்தர் கூறியவற்றை, உரை ஒன்று எழுதி மேலும் நிலை நாட்டினர் மன்னர் வழி வந்த சிவலிங்க பூபதி என்னும் பெரியவர். சைவ சமய வளர்ச்சிக்கு இவர்கள் நூல்கள் ஆற்றிய தொண்டு மகத்தானது.

ஹரதத்தர் காட்டிய வழி சைவப் பெருமையை மீண்டும் நிலைநாட்ட வேண்டிய நிலை இருந்ததால் அப்பய்ய தீட்சதர் சிவ கருணாமிருதம் என்னும் சிறிய நூல் ஒன்று எழுதினார். சிவபக்தி என்னும் முளை முளைக்கும் போது சைவப் பெருமையைக் குலைக்கும் வேனிற் காலம் போன்ற எதிரிகளின் சூடுபட்ட முளைக்கு அமுதம் பாய்ச்ச கருணை மிருதம் என்னும் நூல் எழுதுகிறேன் எனக் கூறுகிறார் அப்பய்ய தீட்சதர், இந்நூலில்.

இச்சிறு நூல் இரு பகுதிகள் கொண்டது. பூர்வ பட்சம் எனப்படும் எதிரிகளின் கருத்துக்களைச் சுருக்கித் தரும் பகுதி முதற் பகுதி. இதற்குச் சரியான விடை அருளும் பகுதி இரண்டாம் பகுதி. இந் நூல் சிறிய தாயினும் மிக நேர்த்தியுடன் எழுதப் பெற்ற இந்நூல் சைவர்களுக்குக் கிடைத்த மாபெரும் பொக்கிஷமாகும்.

சிவார்க்க மணி தீபிகை என்னும் நூல் ஸ்ரீ கண்டாச்சாரியார் பிரம்ம சூத்திரத்திற் குப்பாடியமாக எழுதிய நூலுக்கு உரையாக அமைந்த நூல். விஜய நகர பேரரசில் ராமராயர் என்பவர் அரசப் பிரதிநியாக வன்மையுடன் ஆண்ட காலத்தில் இவனுக்கு ராஜகுருவாக அமைந்த தாத்தாச்சாரியார் என்பவர் அரசன் அளித்த ஆதரவில் சைவத்தை முற்றுக ஒழித்துவிட நினைத்து, பல சைவர்களை வைணவர்களாக மாற்றிக் கொண்டு இருந்தார். இதனால் வேலூர் மன்னன சின்ன பொம்மனின் துணை கொண்டு சைவத்தைக்காத்து வளர்க்க வேண்டிய பொறுப்பு தமக்குள்ளது என்பதை அறிந்தார அப்பய்ய தீட்சதர். ஸ்ரீ கண்ட சிவச்சாரியார் எழுதிய நூலுக்கு உரையாக எழுதிய சிவார்க்க மணி தீபிகை சைவத்தின் மேன்மையை நிலைநாட்டவே எழுதப் பெற்ற நூலாகும்.

இந்நூலின் பெருமையை உணர்ந்த சின்ன பொம்மன் அப்பய்ய தீட்சதருக்கு நிறையப் பொற்காசுகள் அளித்தான். அப்பய்ய தீட்சதரை கௌரவிக்க இவன் பெரும் புலவர் அரங்கை கட்டினான். இதில் அப்பய்ய தீட்சதருக்குக் கனகாபிஷேகம் செய்து பாராட்டினான். அத்துடன் இவ்வாறு சிவார்க்கமணி தீபிகையைக் கற்கச் சுமார் ஐந்நூறு பண்டிதர்களுக்கு ஊக்கமளித்து அவர்கள் அப்பய்ய தீட்சதரிடம் இருந்தே இந்நூலைப்பாடம் கேட்க வழி அமைத்தான். சைவத் தொண்டாற்றுவதில் பேரார்வம் கொண்ட அப்பய்ய தீட்சதர் இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தன் உடல் நலத்தைக் கூடப் பெரிது படுத்தாமல் இவர்களைத்தயார் செய்து சைவச் சிறப்பை திக்கெட்டும் பரப்ப உதவினார். 1520–ல் காலகண்டேச்சுவரர் கோவிலில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு இச் செய்திகள் யாவற்றையும் நமக்குத் தெரிவிக்கின்றது. 1911–ம் ஆண்டு 395–ம் எண்ணுள்ள கல்வெட்டாக இது பதிவு பெற்று உள்ளது

இந்நூல் உரைநூல் என்றாலும் பல இடங்களில் இது மூல நூல் போன்றே காட்சி அளிக்கின்றது. சைவ உலகிற்கு இந்நூல் மதிப்பிட முடியாத பொக்கிஷம்.

சைவம் என்றால் சைவர்கள் சின்னமாகப் போற்றும், திருநீறு என்னும் வீபூதி ஆகும்.. திருநீறு இல்லாத சைவம் இல்லை சைவத்தின் பெருமையை நிலைநாட்டின் மூத்த நாயன்மாரான ஞானசம்பந்தப் பெருமான் இத் திருநீறு கொண்டே சைவத்தை மறுமலாசசி பெறச் செய்து வளர்த்தார். இவர் அருளிய திருநீற்றுப் பதிகம் நம் நினைவில் என்றும் நிற்கும்.

இதை மனதில் கொண்ட அப்பய்ய தீட்சதர் பஸ்ம வாதாவளி என்னும் நூல் ஒன்று எழுதியுள்ளார். திருநீற்றுப் பெருமையைச் சிறப்பித்துக் கூறும் நூல் இது.

சைவத்தை வளர்த்து நம் மரபைக்காக்க அப்பய்ய தீட்சதர் ஆற்றிய பணி மகத்தானது. ஈடு இணையற்றது.

இங்கு நாம் ஓர் உண்மையை நினைவில் கொள்ள வேண்டும். அப்பய்ய தீட்சதர் சைவவெறி கொண்டவர் அல்லர். சைவப் பற்றினால், அக்காலத்திற்கு ஏற்பச் செய வாற்ற வேண்டிய சூழ்நிலை அவருக்கு இருந்தது. ஆனால் அப்பய்யதீட்சதருக்கு யஷ்ட் எச்சமயத்திலும் காழ்ப்பு! உணர்ச்சியோ வெறுப்புணர்ச்சியோ கிடையாது. சைவத்தை உயர்ந்ததாக மதித்தாரே ஒழிய அவர் வைணவத்தைத்தாழ்ந்ததாக நினைக்க வில்லை.

மிகுந்த சமய உணர்ச்சியுடன் வைணத்தை வளர்த்த பெரியவர் வேதாந்த தேசிகர் என்னும் மகான். இவர் எழுதிய மகா காவியம் யாதவாப்யுதயம் என்பது இது யாதவப் பெருமானான கண்ணனின் எழுச் சியைப் பற்றிக் கூறும் நூல். இதற்கு மிக அருமையான உரை எழுதி இருக்கிறார் அப்பய்ய தீட்சதர். நூல்கண்ணனைப் போற் றியது என்பதால், நூல் எழுதிய பெரியவர் வைணவப் பற்று மிகுந்த வேதாந்த தேசிகர் என்பதால் இவர் இந்நூலை வெறுத்து விடவில்லை. அப்பய்ய தீட்சதரின் உண்மை மனம் அறிய இது ஒன்றே போதும்.

அப்பய்யதீட்சதர் சிதம்பரத்தின் மீது மிகுந்த பாசம் கொண்டவர். நடராஜப் பெருமான் அருளினால் இவர் பிறந்தார் என்பது இதற்குத் தலையாய காரணமாக இருக்கலாம்.

அப்பய்ய தீட்சதர் யாத்திரை மேற் கொண்ட போது ஒரு முறை சிதம்பரத்திற்கு வந்துள்ளார். சித் சபா நாயகரான நடராஜப் பெருமான் தரிசனம் அப்பய்ய தீட்சதருக்கு எந்த அளவிற்கு நிறைவு தந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. சிதம்பரத் தலம் ஒன்றில் தான் ஒரே இடத் தில் நின்று திருமாலையும், சிவபிரானை யும் தரிசிக்க முடியும். அப்படிப் பட்ட இடத்தில் நின்று கொண்டு அப்பய்ய தீட்சதர் ஹரிஹர அபேத ஸ்துதி'' என்னும் சிறு பக்திப்பாடல் ஒன்று பாடி யுள்ளார். மிக எளிய யாப்பில் எட்டுப் பாட்டுக்கள் கொண்ட இந்நூல் சிவனுக்கும், திருமாலுக்கும் இடையே பேதம் இல்லை என்பதை வற்புறுத்துகின்றது.

மாரமணம் உமா ரமணம்
பணதர தல்பம் பணுதர கல்பம்
மூரமதனம் புரமதனம் வந்தே
பானரிம் அசம பாணரிம்

என்பது இப்பாட்டின் முதல் அடி. மாரமணம் என்றால் லஷ்மிபதி, உமா ரமணம் என்றால் உமைநாதன். இது போன்று ஒரே நேரத்தில் ஹரியையும் உரரனையும் இவ் வெட்டு அடிகளும் போற்றுகின்றன.

இவ்வாறு இணையற்ற முறையில் சைவத் தொண்டாற்றிய அப்பய்ய தீட்சதர் சிதம்பரத்தின் மீது கொண்ட காதலால் தம் இறுதி நாட்களைச் சிதம்பரத் தில் கழிக்க விரும்பினர். தம் சொந்த ஊரைவிட்டுக் கிளம்பி அண்ணாமலை ஈசனைத் தரிசனம் செய்து விருத்தாசலத்துப்பெருமானையும் தொழுது இன்னமும் பல தலங்களுக்குச் சென்று சிதம்பரத்தை அடைந்தார். சிதம் பரத்தை அடுத்த கிராமம் ஒன்றில் தங்கி நடராஜப் பெருமானை அன்றாடம் தரிசித்து வந்தார். நடராஜர் அருளால் தம் மூலாதார சக்தியைச்சுழுமுனை மூலம் மேலெழுப்பி சகஸ்ராரம் வரை கொண்டு சென்றார். தினமும் சிவ பூஜையைத் தள்ளாத வயதில் செய்து கொண்டிருந்த அப்பய்ய தீட்சிதருக்கு 73 வயது நிரம்பியது. அன்றொருநாள் தர்ப்பைப்படுக்கையில் படுத்தபடி தன் முடி வை எதிர் நோக்கிக் கொண்டிருந்தார், அப்பொழுது அவருடைய சகோதரரின் மகனும் பெரும் கவிஞனுமான நீலகண்ட தீட்சதர் அவர் அருகில் வந்தார். அப் பொழுது அப்பய்ய தீட்சதர் கீழ்க்கண்ட பொருள்படும்படி ஒரு பாட்டுக் கூறினர்.

''சிதம்பரம் மிகப் புனிதத் தலம் என்வம்சத்தவர்கள் ஆகிய நீங்கள் நற்குணம் பெற்றவர்கள். நான் நல்ல பல நூல்களை

எழுதிவிட்டேன். எனக்கு வயது எழுபது மேல் ஆகிவிட்டது. எனக்கு இப்பொழுது ஒருவகை ஆசையும் இல்லை. எனக்கு எதுவும் வேண்டாம். நடராஜரின் திருப்பாத தரிசனம் அன்றுடம் செய்வது ஒன்றுதான் இப்பொழுது என்னுடையஅவா'' என்பது அப்பாட்டு.

அது சமயம் திடீரென்று ஒரு பேரொளி தோன்றி நடராஜர் திருப்பாத தரிசனம் காட்டியது. அப்பய்ய தீட்சதர் உணர்ச்சி வசப்பட்டு இவ்வாறு கதறினர்.

''கதிரவன் உதித்தது போன்று கனக சபாபதியின் திருப்பாத தரிசனம் எனக்குக்கிட்டிவிட்டது'' என அப்பய்ய தீட்சதர் கூறிக் கொண்டிருக்கும் போதே அப்பய்ய தீட்சதர் நடராஜப்பெருமானின் கோயிலில் நுழைவதைப் பொது தீட்சதர்கள் உணர்ந்தனர். அப்பய தீட்சதர் நடராஜப் பெருமான் முன்னுள்ள பஞ்சாக்கரப்படி ஏறுவது தெரிந்தது. மிக விரைவில் நடராஜரின் திரு உருவத்துடன் அப்பய்ய தீட்சதர் இரண்டறக் கலப்பதை அவர்கள் கண்டனர். இவ்வதிசயம் ஊர்மக்களுக்குத் தெரிந்து. அனைவரும் வியப்புற்றனர்.

சைவ சமயம் நலிவுற்றுத் தவிக்கும் போதெல் லாம் இவ்வாறு யாரோ ஒரு மகானைப் பிறப்பித்துச் சைவசமயத்தைக் காக்கின்ற செய்தி அவ்வப்போது நிகழ் கின்றது. நடராஜப் பெருமானைத் தலை வணங்கக் கொண்டு இயங்கும் சைவம்நலி வுறும்போது அதனைக் காக்க வேண்டிய பொறுப்பு நடராஜப் பெருமானுக்கே உரியது. அந்தப் பொறுப்பை நிறைவேற்ற நடராஜப் பெருமான் என்றுமே தயங்குவ தில்லை.

அப்பய்ய தீட்சதருக்குச் சிதம்பரத்தின் மீது இருந்து பாசம் இணையற்றது. அப்பய்ய தீட்சதர் தான் வாழ்ந்த 73 ஆண்டுகளில் சைவத்துக்கு ஆற்றிய பணியும் இணையற்றது. அப்பய்ய தீட்சதர் எழுதிய நூல் களை அப்படியே சமஸ்கிருத மொழியில் வெளியிட்டு பலர்க்கும் பயன்பட வேண்டி அவற்றைத்தமிழ் முதலான மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்து பயன் பெறச்செய்ய வேண்டியது சைவர்களாகிய நம் கடன். சைவசமயத்தைக்காக்கப் புகுந்த அப்பய்ய தீட்சதருக்கு விளைவிக்கப்பட்ட தொல்லைகள் பல. அவற்றைக் கண்டு கலங்காமல் இறைவன் மீது முழுப்பாரத்தையும் சுமத்திச் சைவப் பணி செய்த அப்பய்ய தீட்சிதரை அருள் மிகு சபா நாயகர் கோவில் கும்பாபிஷேகத் தொடர்பாக நினைத்துப் பார்ப்பதே பெரும் சிவ புண்ணியம். □



வைச்ச பொருள்நமக் காகுமென்
றெண்ணி நமச்சிவாய
அச்ச மொழிந்தேன் அணிவதில்லை
யம்பலத் தாடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர்ந்தி
யுந்தியின் மேலசைத்த
கச்சின் அழகுகண் டாற்பின்னைக்
கண்கொண்டு காண்பதென்னே.

சூத்தர் நூல் காட்டும் தில்லைத் திருப்பணிகள்

டாக்டர். அ. மா. பரிமணம்

எம். ஏ., எம். லிட்., பி. எச். டி.,

பதிப்பாசிரியர்–மொழி, மொழியியல் களஞ்சிய மையம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

அடைமொழி எதுவும் சேர்க் காமல், கோயில் என்று குறிப்பிட்டால் சைவ உலகில் அது சூத்தப்பெருமான் கோயில் கொண்டுள்ள தில்லைப் பதியினையே குறிக்கும். கோயிற் புராணம், கோயில் நான்மணிமாலை போன்ற பெயர்களில் கோயில் என்பது தில்லையம்பதியினையே குறிப்பதாகவே உள்ளது. அது பஞ்ச பூதங்களுள் ஒன்றுன ஆகாயத்தினைக் (வெளி) குறிக்கும் தலமாகும். பிற பூதங்கள் அனைத்தும் ஆகாயத்துள் அடங்குமாப் போலப் பிற தலங்களெல்லாம் தன்னுள் அடங்கத்தக்க மாட்சிஉள்ளதாக அத்தலம் விளங்குகிறது. தலமரமாக விளங்கிய தில்லையின் பெயர் கொண்டு விளங்கும் அப்பதி, தொன்மை சிறப்பு மிக்கதாகவும் அமைந்துள்ளது. 'கடம்பமர் காளை', 'ஆல்கெழு கடவுள்' என்று பழந் தமிழ்ச் சான்றோர் தாம் வழிபடும் பரம் பொருளை மரத்திலும், மரத்தடி மன்றிலும் விளங்கும் மாதேவர்களாகக் கொண்டு போற்றி வந்துள்ளனர். 'காடும் காவும்' கவின் பெறு துருத்தியும், ஆறும் குளனும் வேறு பல்வைப்பும்' ஆகிய இடங்களி லெல்லாம் தங்கள் இறையுறையும் தலங்களாகப் பழந்தமிழர் கருதியுள்ளமைச் சங்க நூல்கள் காட்டுகின்றன. தில்லைத் திருக்கோயில் பற்றிய குறிப்பு, சங்க நூல்களில் இல்லையென்றாலும், தில்லை என்னும் மர அடிப்படையில் அமைந்த தலப்பெயர், சங்க காலத்திலும் அவ்விடத்தில் வழி பாட்டிற்குரியதோர் அமைப்பு இருந்திருக்க வேண்டும் என்பதனை உணர்த்து கின்றது.

தமிழகத்தில் சைவ அருளாளர்கள் தோன்றி ஆற்றிய சைவத்தொண்டின் பயனுகச் சைவ சமய வாழ்க்கை நெறியிலும் வழிபாட்டு மரபிலும் வளர்ச்சியும் புதுமையும் தோன்றலாயின. அவற்றின் செல்வாக்கு, திருக்கோயில்கோட்பாடிலும் நடைமுறையிலும் இடம்பெற்றது. அதன் பயனுக தில்லைக் கோயில், தில்லைத் திருமன்றமாக–திருப்பொதுவாக– சிற்சபையாக–

சிற்றம்பலமாக பேணிக்கொள்ளப்பட்டது; தில்லைத்தலம் சிதம்பரம் என்று வழங்கலாயிற்று. சாத்திரச் சிறப்பும், தோத்திரப் பெருமையும் சிறக்க விளங்கும் தில்லைப் பெருமானின் திருமேனியும் திருமன்றும் பொன்னாலும் மணியாலும் புனைந்து போற்றும் சிறப்பு மிக்கன. ஆனந்த நடமாடும் அப்பெருமானைத் தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்' என்று மணிவாசகர் குறிப்பிடுகிறார். ஆடுங் கோலத்தில் அருள் சுரக்கும் பெருமான், 'குனிந்த புருவமும், கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும் பனித்த சடையும் பவளம் போல் மேனியிற்பால் வெண்ணீறும் இனித்தமுடைய எடுத்த பொற் பாதமும்' கொண்டு விளங்கு கின்றார் என்று அப்பர் பெருமான் சித்திரித் துள்ளார்.

ஆடும் பெருமானுகத் திருமேனி தாங்கி இறைவன் விளங்குவதனைக் காட்டும் ஆணிப் பொன்னம்பலத்தில் அவன் பரவெளியாய் – ஞானவெளியாய்த்– திகழும் உண்மையினை அங்கு, சிதம்பர இரகசியம்'' என்னும் பெயரில் திரையிட்டு ஒளிகாட்டும் அமைப்பின் வாயிலாக உணர்த்துகிறார்கள். மரத்திலும், மரத்தடி மன்றிலும் இறைவன் உறைகி எனக் கொண்டு பழந்தமிழர் போற்றிய அருவ வழிபாடு, பல்வேறு மக்களின் மனநிலைக் கேற்ப, உருவவழி பாடாகவும், அருவுருவ வழி பாடாகவும் மலர்ந்து, மீண்டும் அருவ வழிபாட்டின் சிறப்புணர்த்தும் சைவ சமய வழிபாட்டு நுட்பத்தினை உணர்த்துவதாக இன்றைய ''சிதம்பர தரிசனம்'' திகழ்கிறது.

எண்ணற்ற மக்களுக்குக் குல தெய்வமாக விளங்கியது போலவே, தில்லையம்பலக் கூத்தப்பெருமான், தஞ்சை, பழையாறை, கங்கை கொண்ட சோழபுரம் முதலிய இடங்களிலிருந்து ஆட்சிபுரிந்த பிற்காலச் சோழ மன்னர்பலர்க்கும் குல தெய்வமாக விளங்கியுள்ளார். அவர்கள் எந்த நகரத்திலிருந்து ஆண்டாலும் தில்லையை மறவாது போற்றிவந்துள்ளனர். இறைவன் திருமேனியையும், திருக்கோவிலையும், திருத்தலத்தினையும் தங்கள் கொடையாலும் தொண்டாலும் பொலிவூட்டிப் புகழ் பெருக்கி யுள்ளனர். தாம் எடுத்த தஞ்சைப் பெருங் கோயிலுக்கு மாமன்னன் இராசராசனும் அவன் குடும்பத்தினரும் மற்றவர்களும் அளித்த கொடை–நிவந்தங்களைக் குறிப்பிடும்போது 'நாம் கொடுத்தனவும், நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும், மற்றும் கொடுத்தார் கொடுத்தனவும்' என்று சுட்டியதனைக் கல்வெட்டுக்கள் காட்டு கின்றன. அரச குடும்பத்தினரும் அவரைச் சார்ந்தோரும் திருக்கோயில் தொண்டில் கொண்டிருந்த ஈடுபாட்டினை இது உணர்த்துகிறது. அவ்வாறே இராசராசனுக்குப் பின்னர்வந்த சோழமன்னர்களுள் பலர் தில்லைத் திருக் கோவிலுக்குப் பொன்னும் மணியும் வரையாது வழங்கியும், குளம் தொடுதல், கோபுரம் அமைத்தல் போன்ற தொண்டுகள் புரிந்தும் பெருமை பெற்றுள்ளனர்

சோழ மன்னர்கள் தில்லைப்பெருமானுக்குச் செய்துள்ள திருப்பணிகளை அவர்கள் காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. இலக்கியங்கள் காட்டும் வரலாற்றுச் செய்திகளை, இக்கால வரலாற்றாசிரியர்கள் நம்புவதில் தயக்கம் காட்டுவர். ஒரு செய்தியின் உண்மையை ஏற்றுக் கொள்ளுவதற்கு, அகழ்வாய்வுகள், கல்வெட்டுக்கள், பழங்காசுகள், பிறநாட்டார் குறிப்புகள் ஆகியவற்றை முதன்மைச் சான்றுகளாகக் கொள்வர். இலக்கியச் சான்றுகளாகக் கொள்வர். இலக்கியச் சான்றுகளை இரண்டாம் தரத்தினவாகவே கருதி வந்தனர். ஆனால், அண்மையில் பூம்புகார் போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பெற்ற அகழ்வாய்வு முடிவுகள், பட்டினப்பாலை போன்ற பழைய இலக்கியங்கள் கூறும் வரலாற்றுச் செய்திகளை உறுதிப்படுத்தும் சான்றுகளாக அமைந்தமை கொண்டு, இக்காலத்தில் தமிழ் இலக்கியங் கூறும் உண்மைகளைத் தயங்காமல் ஏற்க வரலாற்றாசிரியர்கள் முன்வந்துள்ளனர்.

தில்லைத் திருக்கோயில் திருப்பணிகள்-பற்றி, அப்பணிகள் செய்யப்பெற்ற காலத்தில் எழுந்த இலக்கியங்கள் கூறும் உண்மைகளை உறுதிபடுத்தும் சான்றுகளாக அக்காலத்தில் தில்லைக்கோயில் சுவர்-களில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்-டுக்கள் பல திகழ்கின்றன. சிதைந்தன-போக எஞ்சியுள்ள கல்வெட்டுக்கள் பல சோழர் திருப்பணிகளை நன்கு விளக்கு-வனவாக உள்ளன. கல்வெட்டுக்கள் அளிக்கும் ஒளியில், இலக்கியங்கள் காட்டும் தில்லைத் திருப்பணி உண்-மைகளைத் தொகுத்துக் காண்பது சிறப்-புடையதாகும்.

பிற்காலச் சோழமன்னர்களுள், விக்ரம சோழன் (கி.பி. 1118–1136), இரண்டாம் குலோத்துங்கள் (கி.பி. 1133–1150), இரண்டாம்இராசராசன் (கி.பி. 1146–1163) ஆகிய மூவரும் ஒருவருக்குப்பின் ஒருவராக, மக்கள் தாய முறையில் ஆட்-சிபுரிந்தவராவர். இம்மூவர் காலத்திலும், ஒட்டக்கூத்தர் கவிச்சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தார். அவர், விக்கிரமசோழன் அவைப்-புலவராகவும் இரண்டாம்குலோத்துங்கனுக்கு-ஆசிரியராகவும், இரண்டாம் இரா-சராசனுக்கு அவன் நன்மதிப்பினைப் பெற்ற புலவர் பெருமகனாகவும் இருந்துள்ளார். அந்த மூன்று அரசர்கள்மீதும் தனித்-தனியாக, உலாப்பாடிச் சிறப்பித்-துள்ளார். விக்கிரமசோழன் உலா, குலோத்-துங்க சோழன் உலா, இராசராசசோழன் உலா எனப்படும் அம்மூன்று உலாக்களும் 'மூவருலா' என்று சிறப்பிக்கப்பட்டுள்ளன.

ஒட்டக் கூத்தர் குலோத்துங்கன் மீது ஒரு பிள்ளைத் தமிழும் பாடியுள்ளார். மேலும் தாம் பாடிய தக்கயாகப்பரணியில் இச் சோழர்கள் பற்றியும், இவர்க்கு முன்னி-ருந்த சோழர்கள் பற்றியுமான வரலாற்றுக் குறிப்புகளைத் தந்துள்ளார். ஒட்டக்கூத்தர் தம் இலக்கியங்களில் குறிப்பிட்டுள்ள சோழர்கள் பற்றிய செய்திகளைத் தில்லை யிலும் பிற சில இடங்களிலும் அமைத் துள்ள கோயில் கல்வெட்டுக்கள்நன்கு காட்டுகின்றன.

ஒரு செய்தி, வரலாறாகும்போதும் இலக்கியமாகும்போதும், அடிப்படைக் கருத்து ஒன்றாயினும் அமைக்கப்படும் வடிவத்தில் வேறுபாடு உண்டாவது இயல்பே. இரண்டாம் குலோத்துங்கன், தில்லைப் பெருமானுக்குப் பல திருப்பணி செய்யுங்கால், அதற்கு வைணவர்கள் தடைசெய்த நிலையில் தில்லை முன்றிலில் பல்லவர் காலத்தே நிறுவப் பெற்றிருந்த திருமால் மூர்த்தத்தினைப்பெயர்த்து அலை கடலில் கிடத்துமாறு செய்தான் என்பது ஒரு வரலாற்றுச் செய்தி. அது, இலக்கிய-மாகுங்கால், "முன்றிற் கிடந்த கருங்கடல் போய், முன்னைக் கடல் புக" (தக்கயாகப் பரணி – தாழிசை. 777) என அமைகிறது. தில்லையில் எழுநிலைக்கோபுரம் அமைத்-தான் என்னும் செய்தி, 'நிலையேழு கோபுரங்கள் நேரே நெறுங்க, மலை ஏழு-மென்ன வகுத்து' என இலக்கியமாக்கப்-பட்டுள்ளது (குலோ/சோழனுலா, 49) முதற்குலோத்துங்க சோழன், பாண்டிய-ரையும் சேரரையும் வென்று, முதல் இராசராசனைப்போலக் காந்தளூர்ச்சாலை என்னுமிடத்தில் கலம் அறுத்தருளினான் என்பது வரலாறு. அது இலக்கியமாக்கப்-படும்போது, "சேலைத்துரந்து, சிலையைத் தடிந்திருகால், சாலைக் கலமறுத்த தண்டினன்" (விக்ரமசோழன் உலா–24) என அமைகிறது. இலக்கியத்துள் வரலாற்றினை, மாதுளையுள் மணியெனச் செறித்துக் கூறுவது, தமிழ்ப்புலவர் மரபும், அம்மரபுணர்ந்து அவ்வரலாற்றுச் செய்தி-யினைத் தேர்ந்துகொள்வது கற்போர் கடனும் ஆகும்.

தில்லைத் திருத்தலம் ஒருகாலத்தில் தில்லைவனமாக இருந்திருத்தல்கூடும் என்-பதும், தில்லைமன்ற வழிபாடு வளர்ந்த நிலையில் அது சிற்றூராய்ப் பின்னர்ப்

பேரூராய், திருக்கோயில் அமைந்த இடமாய், திருவீதிகள் சூழ்ந்த தலமாய் வளர்ந்தது என்பதும், இலக்கியக் குறிப்புக்களால் புலனுகின்றன. இரண்டாம் இராசராசனே உள்ளிட்ட சோழமன்னர்கள் தில்லைக் கோயிலில் பொன்னுல் கற்பக மரங்கள் செய்துவைத்த குறிப்பினை ஒட்டக்-கூத்தர், ''தில்லை வனங்கடவுள் செறி கற்பக வல்ல வளம் பெற வந்தவன்'' (தக்கயாகப்பரணி. 804) எனக் கூறுவது கொண்டு தில்லைப் பதி தொடக்கநிலையில் தில்லைவனமாக இருந்த உண்மையினை உணரலாம்.

பிற்காலச் சோழர்களுக்குத் தில்லைப் பெருமான் குலதெய்வமாக அமைந்தமை யால், அச்சோழ வேந்தர்களிற் பலர் தில்லைப் பெருமானுக்கும், தில்லை தலத்-திற்கும் பல்வேறு கொடைகளும் திருப்பணி-களும் செய்து சிறப்பித்துள்ளனர். முதல் ஆதித்த சோழன், கொங்கு மண்டலத்தை வென்று, அங்கிருந்து பொன்னைக் கொண்டுவந்து, தில்லைச்சிற்றம்பலத்தின் முகட்டினை வேய்ந்த செய்தி, ''சிற்றம்பல முகடு, கொங்கிற் கனகம் அணிந்த ஆதித்தன்'' என்னும் திருத்தொண்டர் திருவந்தாதி (65)யிற் கூறப்பட்டுள்ளது. முதலாம் பராந்தக சோழனும் தில்லைத் திருமன்றிற்குப் பொன் வேய்ந்த செய்தி-யினைக் 'கோதிலாத் தேறல் குனிக்கும் திருமன்றம், காதலாற் பொன் வேய்ந்த காவலன்' (விக்கிரம சோழன் உலா. 16) என்று ஒட்டக்கூத்தர் குறிப்பிட்டுள்ளார். இரண்டாம் குலோத்துங்கனும் இவ்வாறே பொன் வேய்ந்தான் என்று கூறப்படும் செய்தி யினையும் ஒருங்கு வைத்து நோக்குங்-கால் தில்லையம் பலத்தினைப் பொன்னம் பலமாகப் புதுக்கி நிறைவு செய்த பணியில் இச்சோழ மன்னர்கள் பலரும் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர், என்பது புலனுகிறது. முகடு பொன் வேய்ந்தது; மன்றம் பொன் வேய்ந்தது என்று அமைந்த தொடர்களே, பொன் வேயும் பணி தொடர்ந்து நடை-பெற்று நிறைவுற்றமையை உணர்த்து-கின்றன.

மூவருலா முதலிய ஒட்டக்கூத்தரின் நூல்கள் அவற்றுல் சிறப்பிக்கப்பெறும் அரசர்களின் செயல்கள் அனைத்தையும் சுட்டிக் கூறுவதற்காக அமைந்தன ஆகாமையால், அவ்வரசர்கள் செய்த செயல்கள் முழுவதும் அவற்றுள் இடம் பெறவி ல்லை. கூறப்பெற்றுள்ள செயல்கள் தாமும் இலக்கிய முறைமையிலேயே அமைந்துள்ளன. விக்கிரம சோழன் தில்லைச்சிற்றம்பலத்தைச் சூழ்ந்த திருச் சுற்று மாளிகை கோபுரவாயில், கூடசாலை, பலிபீடம் ஆகியவற்றிற்குப் பொன்வேய்ந்த செயல்கள் இவன்மீது பாடபெற்ற உலா குறிப்பிடப்படவில்லை. ஆனுல் இவன் தில்லையில் திருவீதி அமைத்த சிறப்பினை,

> ''பாவகம் நிரம்புதிரு மாலும்மல ரோனும்
> பரந்தபதி வெண்கணனும் வந்து பரவத்தம்
> சேவக நிரம்புதிரு வீதிபுலியூரில்
> செய்தபெருமான்'

– என்று குலோத்துங்கசோழன் பிள்ளைத் தமிழ் (92) குறிப்பிடுகிறது. 'விக்கிரம சோழன் திருவீதி' என்று இவன் தில்லையில் அமைத்த வீதியினை இவனது மெய்க்கீர்த்தி கூறுகிறது. தில்லைப்பெருமான், மாசி மக நாளில் கடலாடி வீற்றிருக்கத் தன் படைத்தலைவன் அரும்பாக்கிழான் மணவிற் கூத்தன் காவிங்கராயனால் ஒரு மண்டபம் அமைக்கச் செய்த செய்தியையும் கவ்வெட்டுக் கூறுகிறது.

விக்கிரமசோழன் மகனும், இரண்டாம் இராசராசன் தந்தையுமான இரண்டாம் குலோத்துங்க சோழமன்னன் தில்லைக்குச் செய்த திருப்பணிகள் பலவற்றையும், அவனுக்கு ஆசானுக விளங்கிய, ஒட்டக் கூத்தர் அவன்மீது பாடிய குலோத்துங்க சோழன் உலாவிலும் (கண்ணிகள். 38–56), அவன் மகன்மீது பாடிய இராசராச

சோழன் உலாவிலும் (கண்ணிகள். 30–33), தக்கயாகப்பரணியிலும் (தாழிசை. 802, 806–810) பிற நூலிலும் மிகவும் விளக்கமாகப் பாடிச் சிறப்பித் துள்ளார்

தில்லைக்கூத்தனின் திருவடித் தாமரை மலரில் அருள்தேனை ஆரும் வண்டு போன்றவன் என்று கல்வெட்டுப் போற் றும் இரண்டாம் குலோத்துங்கன், நடராசப் பெருமானின் பரமானந்தத் திருக்கூத் தினைக்களிகூரும் பிட்டு வணங்குகிறான். திருத்தில்லைமன்றின் முன்றிலில் இருந்த திருமாலைக் கடலிற் புகுத்தித் தன் தில்லைப் பணியை விரிவாக மேற்கொண்டான். திருஅம்பலத்தில் பசும்பொன்னால் நிலம் அமைத்து, பொற் பூரண கும்பம் நிறுவி நிறைவித்தான். அந்நிலத்தே, வச்சிரப் பலகை பதித்து, முத்து மாலைகளைத் தொங்கவிட்டான். ஆதிசேடன் வடிவில் அமைந்த திருத்தலம் ஏற்றினான். வயிர ஒளி குளமாக, சூழ்ந்து கிடந்த மரகதம் பசிய இலையாக, முத்துக்கள் அந்த இலை நடுவில் அமையும் துளிகளாக, பதுமராக மணிகள செந்தாமரையாக, நீலமணிக் கூட்டம் வண்டினங்களாகத் தோன்றுமாறு பதுமபீடம் அமைத்தான். சிற்றம்பலத்தைப் பொன்னாலும் மணிகளாலும் அணி செய்து, உட்கோபுரம், திருச்சுற்று மாளிகை ஆகியன மேருவைப் போல எழுப்பினான். எழுநிலை மாடம் இயற் றினான். உமாதேவியார் தாம் பிறந்த இமய மலையினை மறக்குமாறு சிவகாம கோட் டத்தினை அழகுற அமைத்தான். அக் கோட்டத்தின் முற்றம் செம்பொன் படர் பாறை போல விளங்கச் செய்தான். பொற் கூடாரத்தில் நிரப்பப்பெற்ற பனிநீர் மேரு மலையிலுள்ள பொற்றடாக நீர்போலத் ததும்பியது. சிவகாமி அம்மை திருநாள் உலா வருவதற்குப் பொன்மணியால் அழகுறுத்தப்பட்ட தேரினைச் செய்தான். பொன்னாலாகிய கற்பகத்தருக்களை அமைத் தான். நாற்புறம் கூடங்களோடு விளங்கும் திருக்குளம் அமைத்தான். வீதிகள்தோறும் நிலைத்தேர் வகுத்தமைத்தான். தேவலோ கத்து அமராவதி மூதூரின் பெருவீதிகள் நாணமடையுமாறு நாற்பெருஞ் சுற்று வீதிகள் அமைத்தான். இம்மன்னன் இயற் தில்லைத் திருப்பணிகளை இலக்கிய நயம் பொலியக் குலோத்துங்க சோழன் உலா விளக்கமாகப் பேசுகிறது. இவற்றைச் சுருக்கித் தொகுத்து இராசராசசோழன் உலா,

"சிற்றம்பலமும் திருப்பெரும்பேரம் பலமும்
மற்றும் பலபல மண்டபமும் – சுற்றிய
மாளிகையும் பீடிகையும் மாடமும் கோபுரமும்
குளிகையு மெத்தெருவும் தோரணமும்
–ஆளுடையான்
கோயில் திருக்காமக்கோட்டமும் அக்கோயில்
வாயில் திருச்சுற்று மாளிகையும் –தூய செம்
பொன்னிற்குயிற்றிப் புறம்பிற்
சூறும்பெறிந்து
முன்னிற் கடலகழின் மூழ்கு வித்த –சென்னி
(30–33)

என்று கூறுகிறது. இரண்டாம் இராச-ராசனும் தன்னளவிற்குக் குறையாமல் தில்லைத்திருப்பணிகளைப் புரிந்துள்ளான். தம் தந்தையார் அப்புறப்படுத் திய திருமால் மூர்த்தத்தினை மீளக் கொணர்ந்து, தில்லை முன்றிலில் இருத்தினான். குலோத்துங்கன் திருமால் சூறும்பெறிந்த செய்தி பற்றிய கருத்துக்கள் எவ்வாறாயினும், அது தம் மாணவராய மன்னர் பெருமான் புகழுக்குக் குறைவுண்டாக்கக்கூடும் என்று கருதி மறைக்காமல், அதனை இலக்கிய நயப்படுத் தித் தம் நூல்களில் குறிப்பிட்டுள்ள ஒட்டக்-கூத்தரின் மதிநுட்பம், வரலாற்றை இலக்கியப்படுத்தும் புலவர் பெருமக்களுக்-கோர் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது.

காலந்தோறும் தோன்றிப் பரவிப்

போற்றிய மக்களின் தொண்டினால் சிறந்து விளங்கும் தில்லைத் திருக்கோயிலும், திருப்பதியும் சோழ மன்னர்களின் அயராத அன்பினாலும் ஆராப் பெருங் கொடையாலும் செழித்து வந்துள்ளன என்பது மறைக்க முடியாத உண்மையாகும். தில்லைத் திருக்கோயில் தமிழ் மன்னர்களாலும் மக்களாலும் போற்றிக் காக்கப்பெற்ற, அருள்ஞானக் கருவூலம் ஆகும் என்பது குறிப்படத்தக்கது. □



செஞ்ஞின்ற நீல மலர்கின்ற
தில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள்
கண்டு மகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த
நீல மணிமிடற்றன்
கைஞ்ஞின்ற ஆடல்கண் டாற்பின்னைக்
கண்கொண்டு காண்பதென்னே.

ஊனத்தை நீக்கி யுலகறிய
வென்னை யாட்கொண்டவன்
தேனெய்த் தெனக்கினி யான்தில்லைச்
சிற்றம் பலவனெங்கோன்
வானத் தவருய்ய வன்னஞ்சை
யுண்டகண் டத்திலங்கும்
ஏனத் தெயிறுகண் டாற்பின்னைக்
கண்கொண்டு காண்பதென்னே.



தெரித்த கணையால் திரிபுர
முன்றுஞ்செந் தீயின்மூழ்க
எரித்த விறைவன் இமையவர்
கோமான் இணையடிகள்
தரித்த மனத்தவர் வாழ்கின்ற
தில்லைச்சிற றம்பலவன்
சிரித்த முகங்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே.

சிற்சபை நாதரும் சிவாகமங்களும்

டாக்டர். சபாரத்தினம்

இணைப்பேராசிரியர், சைவசித்தாந்தத்துறை, சென்னைப்பல்கலைக்கழகம்.

சிவபெருமான் சதாசிவ வடிவம் தாங்கிப் பிரதிசம்மிதை எனப் படும் முறையிலும் மகிளகம் எனப்படும் முறையிலும் வெளிப்படுத்தி அருளிய காமிகம் முதலான ஆகமங்கள் சிற்சபையில் தங்கமயமான தூண்களின் வடிவில் விளங்கிக் கூத்தப் பெருமானைத் துதித்த வண்ணம் இருக்கின்றன எனக் குஞ்சிதாங்கிரிஸ்தவம் எனும் தோத்திர நூலில் கூறப் பெற்றுள்ளது[1]. இதே கருத்து நடேசுவர தண்டகம் என்னும் தோத்திர நூலிலும் இடம் பெற்றுள்ளது[2]. கூத்தப் பெருமானுக்குரிய ஆயிரம் திருப்பெயர்களுள் ஒன்று சிவாகம: என்பது. இதற்குச் சிவாகமங்களை வெளிப் படுத்தி அருளினவன் என்றும் இமவான் மடந்தையான பார்வதியால் அடைப்பட்டவன் என்றும் அம்பிகை அமர்ந்துள்ள சிகரத்தை அணுகியவன் என்றும் அடியார்களுக்கு வீடுபேறு அருள்பவன் என்றும் பலவிதமாகப் பொருள் கூறுவர். நரிகளைக் குதிரை வடிவத்தில் வருவித்தவன் என்றும் பொருள் கொள்ளுவர். இவ்வாறு பல்வேறுபடப் பொருள் கொண்டாலும் முக்கியமான கருத்து, சிவாகம வடிவத்தில் விளங்கு பவன் அல்லது சிவாக மங்களை வெளிப் படுத்தியவன் என்பதே. எனவே சிற்சபைக்கும் சிவாகமங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சிவா கமங்களில் கூத்தப் பெருமானைக் குறித்துக் கூறப் பட்டுள்ள கருத்துக்களுள் சிலவற்றை இங்கே காண்போம்.

கூத்தப்பெருமானின் வடிவத்தைச் சிவ பெருமானுக்கு உரிய மகேசுவர வடிவங்கள் இருபத்தைந்தனுள் ஒன்றுக் கருதுவது ஒரு வகை[3], அவ்வடிவத்தைத் தத்துவங்களுக் கெல்லாம் அப்பாற்பட்ட தனி முதற் பொருளாகக் கருதுவது மற்றொரு வகை.

நடேசுவர வடிவம் மகேஸ்வர வடிவங்

களுக்குள் ஒன்று என்ற நிலையில் அவ் வடிவத்தை அமைப்பதற்குரிய வழிமுறை களையும் வழிபாட்டு முறைகளையும் காமிகம், காரணம், அஜிதம், ரௌரவம் முதலான சிவாகமங்கள் விரிவாகக் கூறுகின்றன. மகேஸ்வர வடிவங்களுள் ஒன்றைக் கொண்டால் கூத்தப்பெருமானின் வடிவம் திருச்சுற்று மாளிகையில் அமைக்கப் பட வேண்டும். அல்லது விழா நாயகராக (உற்சவ மூர்த்தியாக) அமைக்கப் பட வேண்டும்; சலபேரம் (இடம் பெயர் வடிவம்) என ஆகமங்கள் இவ்வடிவத்தைக் கூறும். வியக்த லிங்கம் என்பதும் சலபேரம் அல்லது மகேசுவர வடிவமே. சந்திரசேகரர் சோமாஸ்கந்தர், கங்காதரர், கல்யாண சுந்தரர், என எண்ணப்படும் மகேசுவர வடிவ வரிசையில் நிருத்த மூர்த்தியையும் அடக்கி மேற்கூறப்பட்ட சிவாகமங்கள் நடேசுவர வழிபாட்டைக் குறித்துக் கூறு கின்றன.

நடேசுவர வடிவத்தை எவ்வாறு தியானிக்க வேண்டும் எனக் காரணகமம் கூறுகிறது. ஆனந்த வடிவமே நிருத்த வடிவம் எனக்கூறும் காரணகமம்[4], "நான்கு திருக்கரங்களும் முக்கண்களும் உடையவராகவும், இளம்பிறை, பாம்பு ஜடாமகுடம், நறுமண மலர்கள்—இவற்றால் அலங்கரிக்கப் பட்ட சடைமகுடம் உடையவராகவும், அனேத்து விதமான அழகிய இலக்கணங்கள் பொருந்தியவராகவும், செந்நிற ஆடை அணிந்துள்ள வராகவும் வெண்ணிறம் வாய்ந்தவராகவும் குமிண் சிரிப்பு உடையவராகவும் கூத்தப் பெருமானைத் தியானிக்க வேண்டும்." எனக் கூறுகிறது.[5]. பிறிதோர் இடத்திலும் நிருத்த வடிவம் விளக்கப் பட்டுள்ளது. "முக்கண், நான்கு திருக்கரம்; சாந்தமான தோற்றம்; வலச் செவியில் மகர குண்டலம்; இடச்செவியில் கர்ண பத்திரம்; ஊமத்தை, எருக்கு, கொக்கு மந்தாரை, கொன்றை, கங்கை, பாம்பு, இளம்பிறை இவற்றை உடைய விரிசடைக் கோலம்; புன்முறுவல்; வலது மேற்கையில் துடி; இடது மேற்கையில் அங்கி; வலது கீழ்க்கை அபய முத்திரை; இடது கிழ்க்கை வீசிய நிலை; எடுத்த திருவடி; அபஸ்மாரத்தின் மேல் ஊன்றிய வலது திருவடி; சிங்கத்தோல் ஆடை, புலித்தோல் மேலாடை (உத்தரீயம்); கிங்கிணி மாலை; நாகப் பூணூல்; கடகம், கேயூரம், நூபுரம் முதலான திருவாபரணங்கள்; ஓங்கார வாசி (பிரபா மண்டலம்); வெண்மை நிறம்; முப்பத்திரண்டு இலக்கணங்கள்—இவற்றை உடையவராகக் கூத்தப்பெருமானைத் தியானிக்க வேண்டும்.[6]

ஆனந்த தாண்டவம்; சந்தியா தாண்டவம், கௌரீ தாண்டவம், திரிபுர தாண்டவம், காளி தாண்டவம், முனி தாண்டவம், சம்மாரத் தாண்டவம் எனப்படும். ஏழ்வகைத் தாண்டவங்களைப் பற்றிக் குறிப்பிடும் காரணகமம்[7] கலியாண சுந்தர வடிவத்திற்கும் நிருத்த வடிவத்திற்கும் இடையே பேதம் அறியப்படுவதில்லை எனக் கூறுகிறது[8].

பல்வேறு தாண்டவ வகைகளுக்குள் புஜங்கத்ராஸ தாண்டவம் குறித்துக் காமிகம், காரணம், அஜிதம், ரௌரவம், முதலான ஆகமங்கள் கூறுகின்றன[9].

சந்தியா நிருத்த வடிவத்தைக் குறித்துக் காரணகமும் அஜிதாகமும், கூறுகின்றன.[10] தண்டபாதம் அல்லது உத்தண்ட தாண்டவம் குறித்து அஜிதாகமும் ரௌரவ ஆகமமும் அம்சுமத் காசியபமும் கூறுகின்றன[11] அத்யுண்ட தாண்டவம் என்னும் நிருத்த வடிவத்தைப் பற்றி ரௌரவ ஆகமமும் அம்சுமத் காசியபமும் கூறுகின்றன[12].

சிவபெருமானின் தாண்டவ வடிவங்கள் நூற்றெட்டு வகை எனக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்பது வகைப்பட்ட தாண்டவ வடிவங்களுக்கு உரிய இலக்கணங்களைச் சிற்பரத்நாகரம் கூறுகின்றது[13].

இதுவரை கூறப்பட்ட நடேசுவர வடிவங்கள் அனைத்தும் மகேசுவர மூர்த்தங் களேச்சார்ந்தவை. மகுடாகமம் கூறுகின்ற திருத்த வடிவமே தத்துவங்களுக்கு அப்பாற் பட்ட வடிவமாகும். சிவபெருமானுக்குரிய சிவாகமத் திருமேனியில் மகுடாகமம் மணி மகுடமாகத் ஒளிர்கின்றது என எல்லா ஆகமங் களிலும் கூறப்பட்டுள்ளது. மகுடமாக விளங்கும் மகுடாகமம் கூறும் நடராச வடிவம் ஏனைய ஆகமங்களில் கூறப்பெறும் நடராச வடிவத்தைக் காட்டிலும் தத்துவ நிலையில் மேம்பட்டது எனக் கூறலாம். தத்துவ–அதீதமான ஆனந்த தாண்டவ வடிவமே மகுடாகமத்தில் கூறப்படுவது.

சிவ வழிபாட்டின் போது சிவலிங்கத் தின் மேற்பாகத்தில் (தண்டாகாரமான வடி வத்தில்) கூத்தப்பெருமானைத் தியானிக்க வேண்டிய முறையைப் பற்றி மகுடாகமம் கூறுகிறது:

"காமிகம் முதல் வாதுளம் ஈறாக உள்ள **இருபத்தெட்டுச் சிவாகமங்களிலே தமது** அழகிய திருமேனியாகக் கொண்டுள்ளவரா கவும், தெற்கு நோக்கியவராகவும், ஆனந்த வடிவினராகவும், களங்கமற்றவராகவும் **நிட்களராகவும் நடேசப் பெருமானை முதலில் தியானிக்க வேண்டும்**"[14].

"தக்ஷிணேசுவரரான நடராசப் பெருமானை எட்டுவிதமான அங்கங்களால் நாள்தோறும் சிவலிங்க வடிவத்தில் வழிபட வேண்டும். [15]

"சதாசிவ வடிவமான சிவலிங்கத்தின் மேற் பாகத்தில் (அதாவது நாதம் அல்லது சோதி மயமான தண்ட ரூபத்தில்) படைப்பு முதலான ஐந்து தொழில்களுக்கும் மூல காரணமும் சோதிமயமானவரும் முப்பத் தெட்டுக் கலைகளால் ஆன திருமேனி உடை யவரும் நடனத்திருக் கோலம்தாங்கிய வருமான சதாசிவப் பெருமானை நான்கு திருக்கரங்கள் உடையவராகத் தியானிக்க வேண்டும்."[16]

"தக்ஷிணேசுவரரான நடராசப் பெரு மானுக்கு உரிய மந்திரத்தை உச்சரித்துக் கருவறையில் உள்ள சிவலிங்கத்தின் மத் தியில் நடராச வடிவத்தைத் தியானித்து முறைப்படி வழிபடுக"[17]

"எப்பொழுதும் சிற்சபையில் திகழ்பவரும், சோதி வடிவானவரும், எப்பொழுதும் திருக் கூத்து இயற்றுபவரும், பரமகுருவும், ஐந் தொழில்களுக்கும் ஆதாரமானவரும் ஆன தாண்டவேசுவரனை பிந்துமயமான பீடத் தின் மத்தியில் உள்ள நாதமயமான மேற் பாகத்தில் தியானித்து வழிபட வேண்டும்"[18].

இவ்வாறு சிவலிங்க வழிபாட்டையும் நடேசு வர வழிபாட்டையும் ஒன்றுக இணைத்துக் காட்டி நடராசப் பெருமானின் தத்துவாதீத நிலையை உணர்த்தும் மகுடாகமம் இப்பெரு மானுக்குரிய பல பெயர்களைக் கூறி அவற்றின் பொருளையும் விளக்கிக் கூறு கிறது:

நடராசப் பெருமான்,

எப்பொழுதும் தூய்மையாகத் திகழ்வதால் சிவம் என்றும், மேலான பொருள்களுக் கெல்லாம் மேம்பட்டுத் திகழ்வதால் பராத்பரம் என்றும் மேன்மையும் பெருத் திருக்கும் தன்மையும் உள்ளதால் பிரம்மம் என்றும், அளவை இலக்கணங்களுக்கெல் லாம் அப்பாற்பட்டு விளங்குவதால் அப் பிரமேயம் என்றும்,
இயல்பாகவே ஆணவமலத்தினின்று நீங்கி இருப்பதால் அநிந்திதம் என்றும், ஒப்பு வமை இல்லாக் காரணத்தால் அனௌபம் மியம் என்றும்,
பூதாகாசம், பரகாசம், மகாகாசம், சூரியா காசம் என்பவைகளுக்கும் அப்பாற்பட்ட பரகாச மாகவும் ஞானாகாசமாகவும் திகழ் வதால் வியோமாதீதம்என்றும்,
தனக்கொரு காரணம் இன்றித் திகழ்வதால் நித்தியம் என்றும்,
எல்லாவற்றிற்கும் நாயகரானதால் பிரபு என்றும், கூறப்படுகிறார்[19].

நடராசப்பெருமான் சோதித்தம்ப வடிவத் தில் (ஸ்தாணு, தூண்) விளங்குவதாகவும் மகுடாகமம் கூறுகின்றது. [20]. சதாசிவ வடிவே நடேசுவர வடிவம் என நிறுவும் இவ்வாகமம், பெருவிழாக் காலத்தில் அவ்வழி பாட்டின் போதும் நடேசுவர

வடிவே தியானிக்கப்பட வேண்டும் எனக் கூறுகிறது. [21].

காமிகம் முதலான சிவாகமங்கள்கூறும் நடேசுவர வழிபாடு பரிவார ஆலய வழிபாட்டைச் சார்ந்தது என்றும் மகுடாகமம் கூறும் நடேசுவர வழிபாடு மூலத்தான வழிபாட்டைச் சார்ந்தது என்றும் மேற்கூறப்பட்ட கருத்துக்களால் தெரிந்து கொள்ளலாம்.

குறிப்புகள்

1. குஞ்சிதாங்கிரிஸ்தவம் எனும் நூல் உமாபதி சிவா சாரியாரால் வடமொழியில் அருளப் பட்டதாகக் கருதப்படுகிறது. சைவ சித்தாந்த முரணை சிலகருத்துகள் சில பாடல்களில் காணப்படுவதால் (எ. கா: பாடல் 146, 248, 295) உமாபதி சிவம், இந்நூலைச் செய்திருப்பாரா என்று ஆய்தற்குரியது.

2. உமாபதி சிவாசாரியாரால் வடமொழியில் அருளப்பட்ட தோத்திர நூல் நடேசுவர தாண்டகம்.

3. மகேசுவர வடிவம் இருபத்தைந்து எனச் சில ஆகமங்களும் அறுபத்து நான்கு எனக்கொண்டே பாம்பன் சுவாமிகள் அட்டாட்ட விக்கிர லீலை என்னும் பெரிய திருவிருத்தம் அருளியுள்ளார்.

4. பூர்வகாரணம் – படலம் 86 : 3

5. பூர்வகாரணம் – படலம் 72 : 84, 85

6. உத்ர காரணம் – படலம் 55 : 2–9
இங்கே குறிப்பிடப் பெற்றிருக்கும் முப்பத்திரண்டு.

இலக்கணங்கள்: நீண்டிருப்பவை ஐந்து–கைகள், கண்கள், மூக்கு, தனமத்தயம் முழங்கால், குறுகி இருப்பவை நான்கு–கழுத்து, கணுக்கால், முதுகு, குறி; உயர்ந்து இருப்பவை ஆறு–வயிறு, பிடரி, தோள், மூக்கு, மார்பு, நெற்றி, மிருதுவாக இருப்பவை ஐந்து–நகம், தோல், கூந்தல், பல், விரற்கணு; சிவந்து இருப்பவை ஏழு–கண், உதடு, மோவாய், உள்ளங்கால், உள்ளங்கை நகம் பீஜம்: வலிமையாக இருப்பவை மூன்று–முட்டி, மணிக்கட்டு, மார்பு அகன்று இருப்பவை–இரண்டு –நெற்றி, மார்பு ஆகமுப்பத்திரண்டு

7. பூர்வகாரணம் : படலம் 86 : 4–6

8. பூர்வகாரணம் : படலம் 86 : 8

9. காமிகம் : II : 45: 1–13
பூர்வ காரணம் : படலம் 11 : 325––331, 348–350
அஜிதம் : படலம் 36 : 228–233
ரௌரவம் : கிரியாபாதம் : படலம் 25 : 221–230

10. பூர்வ காரணம் : படலம் 86 : 4
அஜிதம் : படலம் 36 : 234–235

11. அஜிதம் : படலம் 36 : 236–237
ரௌரவம் : கிரியாபாதம் : படலம் 25 : 249–255
அம்சுவத் காசியபம் 68 : 78–81

12. ரௌரவம் : கிரியாபாதம் : படலம் : 25 : 256–262
அம்சுமத் காசிபம் : 68 : 83–87

13. சிற்பரத்தினுகரம் : உத்தர பாகம் : 22:33–65

14. மகுடாகமம் : படலம் 2 : 54, 55

15. மகுடாகமம் : படலம் 2 : 132

இங்கே குறிப்பிடப் பெற்றிருக்கும் எட்டு அங்கங்கள் : ஆசனம், பழம், அருக்கியம் சந்தனம், மலர், தூபம், தீபம் நிவேதனம்

16. மகுடாகமம் : படலம் 2 : 289–292

17. மகுடாகமம் : படலம் 2 : 473, 474

18. மகுடாகமம் : படலம் 2 : 520, 521

19. மகுடாகமம் : படலம் 2 : 599–603

20. மகுடாகமம் : படலம் 2 : 605 சோதித்தூண் வடிவு பற்றிய குறிப்பினை இருக்கு வேதத்திலும் (4: 13:5) அதர்வணவேதத்திலும் (10: 7) காணலாம்.

21. மகுடாகமம் : படலம் 4 138–142. □



சாதிகுலம் பிறப்பென்னுஞ்
சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை
அல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம்
யானெனதென் னுரைமாய்த்துக்
கோதிலமு தானேனைக்
குலாவுதில்லை கண்டேனே.

சுற்று மமரர் சுரபதி
நின்றிருப் பாதமல்லால்
பற்றொன் றிலோமென் றழைப்பப்
பரவையுள் நஞ்சையுண்டான்
செற்றங் கருங்கனைத் தீவிழித்
தான்தில்லை யம்பலவன்
நெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே.





சித்தத் தெழுந்த செங்கம
லத்தன்ன சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்கின்ற
தில்லைச்சிற் றம்பலன்
முத்தும் வைரமு மாணிக்கத்
தன்னுள் விளங்கியதூ
மத்த மலர்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே.

பெருநெறி

வடலூர் பழ. சண்முகம்

சன்மார்க்கச் செல்வர், வடலூர்.



தம்பரவொளியைச் சிதம்பர
வெளியைச்
சிதம்பர நடம்புரி சிவத்தைப்
பதந்தரு பதத்தைப் பரம்பரபதத்தைப்
பதிசிவ பததைத்தற்பரத்தைப்
இதந் தருமுன்மைப் பெருந்தனிநிலையை
யாவுமாய்அல்லவாம் பொருளைச்
சதந்தருந் சச்சிதானந்த நிறைவைச்
சாமியைக் கண்டு கொண்டேனே

(திருவருட்பா – 3969)

அருட்பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள் சிதம்பரத்தை அடுத்த மருதூர் என்னும் சிற்றூரில் பிறந்தருளி, இளம்வயதிலேயே தம் தாய் பிறந்தஊரானபொன்னேரியையடுத்தசின்னக்காவணமென்ற ஊரிலும் அவ்வூரையடுத்த பெருநகரான சென்னையிலும் அப்பால் வடலூர், கருங்குழி என்ற கிராமத்திலும் வசித்து பின்னர் இவ்வூர்களை அடுத்துள்ள மேட்டுக்குப்பம் என்ற சிறிய திருவூரில் ஒரு சிறு குடிசையில் ஒளி, ஒலி, வான்வடிவ என்ற (சுத்த, பிரணவ, ஞானதேக) மூவுடலச் சித்திப் பெற்றார் அக் காரணத்தால் அக்குடிசை 'சித்திவளாகமெனப் பெயர் பெற்று விளங்குகிறது. உலகத்தை தம் பால் ஈர்த்துப் பெரும் புகழொடு சிறப்புற்ற இராமலிங்க அடிகள் தாம் கைமெழுத்திடும் போதெல்லாம் தந்தையின் பெயரையோ, அல்லது வசித்த ஊர்களின் பேரில் தம் பெயருக்கு முன் மரபுவழி குறிக்காமல் சிதம்பரம் இராமலிங்கம் என்ற கைச்சாத்திட்டு வந்திருக்கும் ஒப்பற்ற நுண்மையான அருமைச் செய்தியை அம்பலவாணராம் கூத்தப் பெருமானின் அருள் நீர் குடமுழுக்கு விழா மலரில் மணம் பெறச்செய்யாமல் வேறு எந்த மறையில் (வேதத்தில்) எழுதுவது என்பதைச் சிந்திக்கும்போது மெய் சிலிர்க்கிறது.

அடிகள் தம் சிறுகாலைப்போதில் பாடியருளிய சென்னைக் கந்தகோட்டத்துத் "தெய்வமணிமாலையில் ஐந்தாவது பாடல் "ஒருமையு டன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்" எனத்தொடங்குகிறது. இதில் பதிஞெரு வேண்டுதல்கள் செய்தருள்வர் (இவ் வேண்டுதல்களின் முறையே ஒரு தனிச் சிறப்புடையது "வேண்டாமையை" வேண்டாம் என்று விண்ணப்பிக்காமல், 'வேண்டாமை வேண்டும்' என்று எதிர்மறையை உடன்பாட்டு முறையாக மாற்றி வேண்டுகிறார். ஆன்மநேய ஒருமைப்பாட்டுநிலையைபேசி அனைத்தையும் தன்பால் ஈர்க்க வேண்டும் என்ற சமரசம் அடிகளின் பிற்கால வாழ்க்கை, அச்சுறுத்துவதால் ஒன்றையும் ஒதுக்கிவிடாத அருமை இளமையிலே முளைவிடுவதாகத் தோன்றுகிறது) இவ்வேண்டுதல் களில் ஐந்தாவதாக அமைந்தது "பெருநெறி பிடித்தொழுகவேண்டும்" என்பதாகும். நெறி-

களனைத்தையும் தன்பால் அடக்கிய சரியை நெறி, (தொண்டு நெறி) கிரியை நெறி (மகன்மை நெறி) யோக நெறி (தோழமை நெறி) ஞான நெறி (அசத்தினை நெறி) ஆகிய நால்வகை நெறிகளிலும் அருட் பெருஞ்சோதி ஆண்டவரே தம்மைநெறிப் படுத்தி ஆள்வதாகப் பல பாடல்களை அடிகள் அருள்வர். அவ்வாறி நிருந்தும் ''பெருநெறி'' என்ற ஒரு நெறியை அறிமுகப்படுத்தியுள்ளார்களே. இந்த நெறி என்பது யாது? என்பதைச் சிந்திப்பதே இக்கட்டுரையின் கருத்தாகும்.

அடிகள் தாம் கல்வி கற்ற நிலை பற்றிப் பேசும் போது:—

''ஒதுமறை முதற் கலைகள் ஓதாமல் உணர
உணர்விலிருந்துணர்த்தி
அருள் உண்மை நிலை காட்டித்
தீதுநெறி சமயநெறி செல்லுதலைத்தவித்துத்
திருஅருள் மெய்ப்பொதுநெறியில்-
செலுத்தி (திருஅருட்பா 3053)

எனவரும் பாடலைப் பார்க்கும்போது இறைவனிடத்தில் கல்வி கற்றதாகவும் அவ்வாறு கற்பித்தும் உணர்விலிருந்து உணர்த்தி ''அருள் உண்மை நிலையைக் காட்டிய தாகவும் சொல்லி, (சமயநெறி செல்லு தலைத்தடுத்துத்) திருவருளேயான உண்மை யான பொதுநெறியில் செலுத்தினதாகவும் சொல்லி அருள்கிறார். இப்பாடலில் வரும் 'அருள் உண்மை காட்டி' என்பதனையும், அடுத்து வரும் ''திருஅருள்மெய்ப் பொது நெறியில் செலுத்தி'' என்பதையும் ஆழ மாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில் அடிகள் வகுத்தருளிய நெறிக்கு ''சுத்த சன்மார்க்கம்'' எனப் பெயர்தந்துள்ளார்கள். இம்மார்க்கத்தை ''துங்க முற்றழியா இயற்கைத் தொன்மையாம் சுத்த சன்மார்க்கம்'' என்று (திருவருட்பா) சொல்லுகிறார்கள். 'இயற்கைத் தொன்மை' என்று இருப்பதால் இம்மார்க்கம் காலம்சுட்டாத அவ்வளவு பழமைவாய்ந்தது என்றுதெரிகிறது. இவ்வளவு பழமையான மார்க்கமென்றால் அடிகளுக்கு முன்னைய அருளாளர்களின் நூல் துணைபுரிகிறதா? ''வாழையடி வாழையாய் வந்த மரபினை என்று அடிகள் தம்மைச் சொல்லிக் வழிகாட்டுவதாக அமைந்துள்ளது:—

திருநெறி மெய்த் தமிழ்மறையாம் திருக்
கடைக்காப்பதனால்
திருவுளங்காட்டிய நாளில் தெரிந்
திலன் இச்சிறியேன்
பெருநெறி என் உளத்திருந்து காட்டிய நாள்
அறிந்தேன்
பிழை படாத்தெய்வமறை ஈதெனப்
பின்புணர்ந்தேன்
ஒருநெறியின் எனதுகரத் துவந்தளித்த
நாளில்
உணராத உளவை எல்லாம் ஒருங்
குணர்ந்து தெளிந்தேன்
தெருள்நெறி தந்தருளும் மறைச் சிலம்
பணிந்த பதத்தாள்
சிவகா மவல்லி மகிழ் திருநடத்தென
முதே
(திருவருட்பா 2802)

அடிகள் தமக்கு இளம்போதில் முதன் முதலாகக் கொண்டிருந்த ஞானசிரியப் பெருந்தகை திருஞானசம்பந்தரா வார். அவர்கள் திருவாய் மலர்ந்தமுதல் மூன்று திருமுறைகளும் தேவாரத்தில் திருக் கடைக்காப்பு எனப்பெயர் பெறும். அடிகள் இத்திருக்கடைக் காப்பை மேலோட்டமாகப் பார்த்தபோது முதலில் திருவுளக் குறிப்பை விட்டுவிட்டார்கள் போலும். அப்படியானால் அது எப்படி திருவுளக் குறிப்பாகும்? அனைத்துச்செயலுமே திருவுளக்குறிப்புத்தான் அடி களுக்கு என்றாலும் பாடல் முழுவதிலும் கருத்துச் செல்லும் போது குறிப்பிட்ட சொல்லில் ஆழ்ந்து நிற்கும்நிலை உளத்திருந்து சுட்டிக் காட்டுவதாகும் என்றாற் போல் அமையும் போலும். ''பெருநெறி'' காட்டியது உளத் திருந்து காட்டியது. நூலில் உள்ள அச் சொல்லுக்கு உரிய விளக்கப் பொருளை உணர்த்தி ஒப்புக் கொள்ளச் செய்வதே 'காட்டி' என்ற சொல்லுக்குப் பொருள். ''கைமெய்யாக''த்தருவதைத்தான் ''ஒரு நெறியில் எனது கரத்து வந்தளித்த'' என்று சொற்றொடர் பொருள் தருகிறது. இனி உரைவேண்டி யதில்லை. சில நேரம்

கொள்கிறார்கள். அடிகளே நமக்கு தெளிவிக்காமல் மயங்குவதும் உண்டு போலும். "நான் மருளும்போது மயங்கேல் மகனே என்று மயக்கமெல்லாம் போக்கி எனக்குள்ளிருந்த புனித மெய்ப்பொருளே" (திருவ ருட்பா 3053)எனவரும்பாடலால் தெரியவாய்ப்பாகிறது. உணராத உளவை எல்லாம் ஒருங்குணர்ந்து தெரிந்தேன், ஐயம் திரிபு இன்றி ஒரே வழியாக முடித்துக்கொண்டேன் என்ற அசையாத தீர்க்கமொழி இது என்பதாகும் எது அசையாத ஒருநெறி மொழி, அது "பெருநெறி" என்ப தாகிறது. இதைத்திருக்கடைக்காப்பில் இறையருளால் பெற்றஅடிகள்

திரு ஞானசம்பந்தப் பிள்ளையாம் பெருமானுல் பொய்கைக் கரையில் திரு ஞானப்பால் உண்டவுடன் திருவாய் மலர்ந்த முதற் பதிகம் "தோடுடைய செவியன்" எனத் தொடங்குகிறது. இதன் கடைசிப் பாடலாயமைந்துள்ளது,

அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கை அவர்மேய
பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மானிவன் தன்னை
ஒரு நெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தனுரைசெய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல் வினை தீர்தல் எளிதாமே
(சம்பந்தர் 1–1–11)

எனவரும் திருக்கடைக்காப்பு 'பெருநெறிய பிரமாபுரமேவிய பெம்மான்' என்பது "பெரு நெறியை" உணர்த்துபவராயும், பெருநெறியில் செலுத்துபவராயும், பெரு நெறியாகவே உள்ளவராயும் உள்ளவர் தோணியப்பராம் இறைவர் எனஉணர்த்து கின்றது. இந்தப் பெருநெறிதான் ஆண் டவன் வள்ளலாருக்குத் திருக்கடைகாப்பில் உணர்த்திய உளவு சொல்லி ஐயம் தீர்த்து தாம் வந்த காரியத்தில் ஊக்கிய அருள் மறைமொழி. எனவேதான் "பிழைபடாத் தெய்வமறை" என இதைப் போற்றுகிறார்.

இறைவனுல் கல்வி கற்பிக்கப்பெற்று உளத்திருந்து உணர்த்த, உணர்த்த அடி களல்லா நூல் கேளாத கேள்வி இல்லை என்றே சொல்லலாம். இவ்வளவு பரந்த தமிழ் நூல்கள், வடமொழி நூல்கள் ஆகிய ஆன்மீக நூலுலகில் அடிகள் நமக்கு குறிப்பிட்டுக் கருத்துச் செலுத்திப் பார்க்கு மாறு கூறியருளிய நூல்கள் இரண்டே தான்.

1. திருமூலரான சிவராசயோகியார் அருளிய திருமந்திரம்

2. திருவாதவூரடிகள் அருளிய மணி மொழியான – திருவாசகம்

முன்னையது சாத்திர மிகுந்த தோத் திரநூல். பின்னையது தோத்திரமிகுந்த சாத்திரநூல். எனவே திருக்கடைக்காப்புச் சொல்லியவாறு இந்த நூல்களையும் பார்க்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

திருநெறியாவது சித்தசித்தன்றிப்
பெரூநெறியாய பிரானை நினைந்து
குருநெறியாம்சிவமாநெறி கூடும்
ஒருநெறி ஒன்றுகவேதாந்தம் ஒதுமே.

(திருமந்திரம் 54)

என்ற திருமந்திரப்பாடல் முன்னைய திருக்கடைக்காப்புப் பாடலை அரண் செய் வதாக உள்ளது. அதில் பெரு நெறிய பெம்மான் என அமைந்துள்ளது. அதற்கு விளக்கம் தருவதாக 'பெருநெறியாய பிரான் என இதில் அமைந்துள்ள பெற்றி பேணி இன்புறுவதற் குரியது; உயிர் (ஆன்மா) எப்போதும் ஞானத்தில் கூடாது எப்போதும் அஞ்ஞானத்திலும் கூடாது. முன்னதில் அனுவளவாயும் பின்னையதில் மலையளவாயும் கலந்து வாழும். முன்னதில் கூடும் தருணம் சித்தாக மிளிரும். பின் னதில் சேரும்போது அசித்தாகக் காட்டும். எனவே இரண்டிலும் கலந்து இயங்கும். சார்ந்ததன் வண்ணமாதல் அதன் இயல்பு. இது பசுவின் நிலை. பதி நிலை இவ் விரண்டும் இயல்பிலே இல்லாதசுத்தசித் துப் பொருள். அருளொளிப் பிழம்பு.

எனவே பெருநெறிதந்து, இயக்கிக் கூடச் செய்யும் பெருநெறித் தலைவனே பிரான். இது உணர்த்த குருவாக வருவான் எனவே குருநெறியாயிற்று. இது கூடும் நிலையைத் தான் சிவமாநெறி (சிவநெறியாகிய பெருநெறி – மா – பெரிய; சிவமாகிய பெருநெறி) எனச் சொல்லியது. இவ்வாறுனதுதான் திருநெறி. சித்த சித்தன்றி உள்ள பெருநெறியாய பிரானைக் குறிப்பதே–அவனை நினைந்து கூடுவதே திருநெறி. இதுதான் ஒன்றுன பெருநெறி. வேதங்களின் (அந்தம்) முடிவு இதுவே ஆகும் (வேதாந்தமான வேதமுடிவுக்கு மொரு முடிவு சொல்ல வந்த அருட்பிரகாசர் வேதாந்தம் என (1960வது பாடல் வரி 7) மூன்றுந் திருமுறை திருவடிப் புகழ்ச்சித் தலைப் பில் பாடியருள்வர்)

இப் பெருநெறிக்கு விளக்கமாக மேலும் ஒரு மந்திரம்:–

பெற்றூர் உலகிற் பிரியாப் பெருநெறி
பெற்றூர் உலகிற் பிறவாப் பெரும் பயன்
பெற்றூர் அம்மன்றிற் பிரிவாப் பெரும்பேறு
பெற்றூர் உலகுடன் பேசாப் பெருமையே.

(திருமந்திரம் 132)

இவ்வாறு நாம் காண்கின்றோம். பெருநெறி என்பது உலகிலிருந்து பிரியாமை (இறவாமை) இறப்பு – பிரிவு – கூற்றுவன் பணி இது. கூறுபோட்டு உயிரையும் உடலையும் பிரித்ததென்பதே சாதல். பிரியாமை – சாகாமையாகும். இதுதான் பிறவாப் பெரும்பயன் என்கின்றார் திரு மூலத் தேவர். மண்ணுலும் மன்னவராயும் விண்ணுலும் தேவர்க்கு மேலாய வேதியனுயவுமிருப்பவன்தான் மன்றுள்வளர் பெருமான். பிறப்பு இறப்பு இயல் பாகவே இல்லாத, தான்தோன்றியாயுள்ளவன் தான் மன்றில் வளர்பவன். "இயற்கை உண்மை நிறை வாகியுள்ள ஒரு சுத்த சிவானுபவ வெளியில் இயற்கை விளக்க நிறைவாகி விளங்கிய அருட்பெருஞ்சோதி சொரூபராய் இயற்கை இன்ப நிறைவாகி ஓங்கிய சிவானந்த ஒருமைத் திருநடம்". (சமரச சுத்த சன்மார்க்க சத்தியப்பெரு விண்ணப்பம்–2 திருவருட்பா உரை நடை நூல்) என்று இறைவன் நடம்பற்றி வள்ளலார் பேசுவர். இந்தச் சிவானுபவ பெருவெளிதான் திருமூலர் குறிப்பிடும் "அம்மன்றிற் பிரியாப் பெரும்பேறு" என்பதில் உள்ள மன்று. இம்மன்றுகிய வெளியில், சபையில் பிரியாமலிருப் பதென்றூல் உலகிலிருந்து பிரியாமை யாகிய பெருநெறி பற்றும் சாகாநிலையே என்பது பெறப்படும். இவர்கள் நிலையை உலகத்தவர்களுடன் ஒப் பிட்டுப் பேசுவதற்கில்லை. உலகவர் சாகின்றவர்கள். பிரியாப் பெருநெறி யாளர்கள் சாகாதவர்கள். இவர்களை எப்படி ஒப்புதல் காட்டிடப்பேச முடியும். எனவே இவர்கள் பேசாப் பெருநிலை பெற்றவர்கள். இப்பாடல் உபதேசத் தலைப்பில் உள்ளது.

மேலும் தம் வரலாறு கூறும் தலைப்பில் திருமூலர்:–

இருந்தேன் இக்காயத்தே எண்ணில் கோடி
இருந்தேன் இராப்பகலற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என் நந்தி இணையடிக் கீழே (80)

இவ்வாறு ஒரு மந்திரம் அருள்வர். இராப் பகலற்ற இடம்: மறப்பு – நினைப்பு இரண்டுமற்ற நிலை. சமாதியில் ஒரே நினைவான நினைப்பின் முற்றிய நிலை யுண்டு. சமாதிப் பழக்கம் மூடப் பழக்க மென அருட்பிரகாசர் மொழிந்தருள்வர். சமாதியில் ஒன்றினைப்பற்றி மூழ்கும் நிலை பெறப்படும். சாவாநிலை, இதற்கு முற்றிலும் மாறுனது. சுதிரவனுற் பெறப் படுவன பூமி சுழல்வதால், இரவு, பகல்

என்பன. சுதிரவன் ஒளியும் பூமியின் பரப்பும் கடந்த நிலை 'வான்வடிவு' பெற்ற நிலை, வள்ளல் நிலை. எண்ணிலிகோடி இருந்தேன் என்பது அழியும் இக்காயத்தில் அல்ல. அழியும் இக்காயத்தையே அழியாக்காயமாக இறையருளால் மாற்றுவது. ''அழிதரும்யாக்கை ஒழியச் செய்த ஒண் பொருள். (திருவாசகம், திருவண்டப் பகுதி வரி 118) அள்ளூருக்கை அமைத்தனன் (திருவா–ஷை – வரி 177) என்னையும் இருப்பதாக்கினன் (ஷை வரி 179). இக்காயமேதான் கீழே விழாமல் சமாதிக்கும் ஏகாமல் ஆகாயமாக (வான் வடிவாக) மாறுவது. விரிவஞ்சி நிறுத்தப் பெறுகிறது. இந்நிலையில்தான் திருமூலர் இருந்தேன் இக் காயத்தே எண்ணிலி கோடி' என்று சொல்கிறார். 'எண்ணிலி கோடி' சமாதியில் இருக்க எதுவில்லை. எவ்வளவு உயரிய சாவாயினும் அந்தந்த ஜீவனின் கற்ப காலம் முடிந்ததும் அச் ஜீவன் பிறவிக்கு வந்துவிடும் என வள்ளலார் கூறுவர். 'இருந்தேன், இருந் தேன், என்ற இறந்தகால நிலையை இருந்து கொண்டு சொல்கிற நிகழ் காலத்தை உள்ளி அதன் சிறப்பை ஓர்ந்து ஓரிரண்டு மணித்துளிகளாவது அழியும் இக்காயத்திலிருந்தே உலகுடன் பேசாப் பெருமை நிலையைச் சுட்டும் மாமோன நிலையில் ஆழ்வோமாக!

இனி வள்ளலார் செப்பி யருளிய இரண்டாவது திருநூலான மணிமொழி பற்றுவோம்:–

மாயனே மறிகடல் விடம் உண்ட வானவா!
மணிகண்டத் தெம்மமுதே!
நாயினேனுனை நினையவுமாட்டேன்
நமச்சிவாயவென் றுன்னடி
பணியாப்
பேயனுகிலும் 'பெருநெறி' காட்டாய்
பிறைகுலாஞ் சடைப்பிஞ்
ஞகனேயோ!
சேயனுகிநின்றலறுவ தழகோ!
திருப்பெருந்துறைமேவிய சிவனே
(திருவாசகம் 402)

இத்திருவாசகத்தில் ''பெருநெறி'' க்கு அடிகள் அலறி அருளுவதைக் கேட்கக் கொடுத்து வைக்காவிடினும் பாடலைப் பாடியாவது உள்ளநிலையை, உண்மை நிலையைத் தெரிந்துகொள்ளவாவது ஏதோ துரும்பு அளவு தவம் செய்திருப்போம் போலும்! மறிகடல் விடம் உண்டால் மரித்துவிடுவது இயல்பு. சாவாமருந்தாகிய அமுதே! என விளித்தருள்வர்: விட முண்டும் வாழ்வதால் அவ்வாறு சாகாநிலை உணர்த்தும் விளியாக வருகிறது திருவாக்கு. பெருந்துறை வளரும் பெருமான் தானே பெருநெறி கொடுத்தருளமுடியும். எனை மருவா நெறியான பெருநெறியாய திருப்பெருந் துறைக் கோமான் தான் பொன்னம் பலத்தில் பெருநெறியை அடிகளுக்குத் தருகிறார். அருட்பிரகாசரின் கந்தகோட்டத்துப் 'பெருநெறி' வேண்டுதல் சித்தவிளாகத்தில்செயற்பட்டநிலையைப் பெருந் துறையும், தில்லைமூதூர்ச் சிதம்பரமும் நினைவுபடுத்துகிறது.

வடலூர் என்பது ஊரின் பெயர் உத்தரஞான சிதம்பரமென்பது சத்திய ஞானசபை எழுந்தருளியிருக்கும் இடப் பகுதியாகும். தில்லையும் சிதம்பரமும் போல; செங்காட்டங்குடியும், கணபதீச் சுரமும் போலவாம், உத்திரஞான சிதம் பரமான்யமியம் பதிகத்தின் வரும் ஏழாம் பாடல்:–

குருநெறிக்கே என்னைக் கூட்டிக்
கொடுத்தது கூதறிதாம்
பெருநெறிக்கே சென்ற பேர்க்குக்கி
டைப்பது பேயுலகக்
கருநெறிக் கேற்றவர் காணற்கரியது
காட்டுகின்ற
திருநெறிக் கேற்கின்றது உத்தரஞான
சிதம்பரமே (4052)

என அமைந்துள்ளது. சிவமே குருவாக வந்ததால் குருநெறி, கருநெறியாகிய பிறப்புக்குச் செல்லுவதும் (சாதல்) பேயுலகர் காணமுடியாதது, உத்தரஞான

சிதம்பரம்வளர் அருட் பெருஞ்சோதி ஆண்டவர் காட்டியருள்வதே திருநெறி. இதுவே பெருநெறியாகிறது. முன்னே பார்த்த திருமூலரின் திருநெறி, பெரு நெறி, குருநெறி, ஒரு நெறியும் மணி வாசகரின் 'பெருநெறி யும்' அருட்பிரகாசர் கூறும் குருநெறி, திரு நெறி பெருநெறி எல்லாம் ஒரு 'பெரு நெறி'தான் எனக் தெளி கிறோம்.

இனி, வள்ளலார் பெருமான் நிறுவிய சுத்த சன்மார்க்க நெறிக்கும், பெரு நெறிக்கும், என்ன சம்பந்தமெனில் இவை இரண்டையும் இணைத்தே ஒருங்க மைந்த திருவருட்பா வருமாறு:—

திருநெறி ஒன்றேயதுதான் சமரச
சன்மார்க்க
சிவநெறியென்றுணர்ந்துலகீர் சேர்ந்
திடுமினின்று
வருநெறியி லெனையாட் கொண்டருள
முதளித்துப்
வல்லப சத்திகளெலாம் வழங்கிய ஓர்
வள்ளல்
பெரு நெறியில் சித்தாடத் திருவுருளங்
கொண்டருளிப்
பெருங்கருணை வடிவினெடு வரு
தருணமிதுவே
கண்மையினுற் கருத்தொருமித் துண்மை
யுரைத்தேனே.

(திருவருட்பா 5587)

"அருளமுதமளித்துப் பெறற்கரும் சத்திகள் எல்லாம் தந்தருளிய பெருமான் வரப் போகின்றார். அவர் உங்களுக்கும் அளிப் பாராகையால் இந்தப் பெருநெறி யில் கலந்து கொள்ளுங்கள் இதுதான் சமரச சுத்த சன்மார்க்கச் சிவநெறி. இது ஒன்றே தான் திருநெறி. இவ்வாறு நான் சொல் வதில் அதுவோ இதுவோ என்று ஐயுற்று நீங்கள் முன் சென்ற நெறியில் பிறப்பு நெறியில் புகாதீர்கள். நயத்தக்க நாகரீகம் என்ற கண்ணோட்டத்தால் (பேரி ரக்கத் தால்) மிக ரகசியமான உண்மையை வெளிப் படுத்துகிறேன் கருத்தொருமித்து உரைக்கின்றபடி நீங்களும் கருத்தொரு மித்து (கலக்கமடையாது) வந்து சேர்ந் திடுங்கள் உலகியலீர்! என்று நம்மை யெல்லாம் அழைக்கின்றார் வள்ளலார்

சுத்த சன்மார்க்கப் பெருநெறி, இலை மறை காயாக இருந்து "ஏனே தானே" என்று அறிந்தும் அறியாமலுமிருந்து மாண் டுபோன நெறியிது. இந்தப் பழமையைப் புதுப்பிக் கின்றேன். உங்களுக்குப்புது நெறியே யாகும். எனவே புதுப்பெயர் தருகி றேன். நானே தோற்றுவிக்கிறேன் என்றால் நீங்கள் நம்பாது விட்டுவிடுவீர் கள். எனவே முன் தொடர்புகள் காட் டினேன் அந்த நெறி யிலும் மறைந்து கிடக் கும் புதை பொருள் களை மேலும் வளர்த்து விரிக்கின்றேன். நீங்கள் சென்று கொண் டிருக்கும் உடல்விடும் நெறி. உடல் விட்டா லும்பிறவாமை உண்டென்பதை நான் ஒப்ப வில்லை. ஏனெனில் அது உண்மை இல்லை. நீங்கள் சொல்லும் நெறியில் (உடல்விடு நெறி) பெரும் புண்ணியவசத்தால் பதவி கள் பல கிடைக்கும். ஆனால் என்றோ ஒருநாள் அப்பதவி அழிவுறும். மீண்டும் பிறப்பு வரும். உடல்விடா நெறி ஒன்று தான் பிறவாத, இன்புருவம் தரும். வாழை யடி வாழையாய் வந்த திருக்கூட்டம் மரபில் வந்தவன் நான். அவர்களில் ஒருவனு யிருந்து அவ்வழி சென்று அப்பால் இவ்வாறு அதிர்ச்சிதரும் புதுமையைத் தருவதால் நான் அவர்களில் தனித்தே நின்ற ஒருவனுகவும் ஆனேன். ஏன் எனின் இவ்வாறு தனித்த ஒப்பற்ற நிலையைச் சொல்லித் தருவார் இல்லை. இதுநான் சொல் லவில்லை. நானுரைக்கும் வார்த்தை யெலாம் நாயகன் வார்த்தை (திரு வருட்பா) "மரணமிலாப் பெருவாழ்வு" என்பது முன்னைய அருளாளர்களால் பேசப் பெற்றது. முன்னைய நூல்களில் ஆங் காங்கே உள்ளது. ஆய்ந்து பாருங்கள். ஏமாந்துவிட்டீர்கள் நீங்கள் இப்போது வாழ்வது இரண்டாவது சிருஷ்டியாகும்.

முதல் படைப்பான சிருஷ்டியில் அவ்வாறு சென்றோர் உளர் இரண்டாவது சிருஷ்டியில்தான் வினையின் தொடர்பு. ஆன்மாக்களில் பக்கு வான்மா, அபக்குவ ஆன்மா, பக்குவாபக்குவ ஆன்மா என மூவகையுண்டு. பக்குவான்மாக்கள் முதற் படைப்பிலேயே இந்நெறி பற்றிவிட்டார்கள். மற்றைய இரண்டு வகை ஆன்மாக்களைத் தான் இரண்டாவது சிருஷ்டி என்று நான் குறிப்பிடுகின்றேன். இவர்கள் உடல் விடும் நிலையில் உள் ளவர்கள். இவ்வுடல் அநித்தியம். அநித்தியமென்றே உதறித் தள்ளினர். தவ வல் லமையால் பெரும் பதவிகள் பெற்றிருக் கிறார்கள் எனினும் பிறப்புக்குரியவர்களே எனப் பலப்பல பாடல்கள் பலப்பல உரைநடைகள் பேசி வற்புறுத்துவர். (இதுபற்றித் தனித்தலைப்பில் பேசியாதல் வேண்டும்).

இதையடுத்துப் பெருநெறிபற்றிய மற்றொரு திருவருட்பா:—

சேர்ந்திடவே ஒருப்படுமின் சமரச சன்மார்க்கத்
திருநெறியே பெரு நெறியாம் சித்தியெலாம் பெறலாம்
ஓர்த்திடுமின் உண்ணுதற்கும் உறங்குதற்கும்
உணர்ந்தீர்
உலகமெலாம் கண்டுமோர் உளவை அறிந்திலிரே வார்த்த கடல் உலகறிய மரண முண்டே அந்தோ!
மரணமென்றுற் சடமெனுமோர் நிரணமும் சம்மதியா
சார்ந்திருமம் மரணமதைத் தடுத்தி லாம் கண்டீர்
தனித்த சிற்சபை நடத்தைத் தரிசனஞ் செய்வீரே. (5596)

என அமைந்துள்ளது.

பெருநெறியாகிய சுத்தசன்மார்க்க (சமரச சன்மார்க்கம்) தான் மரணம் தவிர்க்கும் நெறியாகும். மரணமிலாப் பெருவாழ்வு பற்றிய பாடல்கள் பலப்பல. இந்நெறிக் கென்றே வந்தவர் வள்ளலார்.

கொல்லாமை மேற்கொண்டடொழுகு
வான் வாழ்நாள்மேல்
செல்லா துயிருண்ணும் கூற்று.

எனத் திருக்குறள் சாற்றுகிறது.

நெற்றிக்குநேரே நிறைந்த ஒளிகாணில்
முற்றுமழியாதுடம்பு

என்று அவ்வைப்பிராட்டி கூறுகின்றார். பட்டினத்தடிகள், அருணகிரியார், தாயுமானவர், சீர்காழி முத்துத் தாண்டவர் போன்றோர் இதனை வலியுறுத்துகின்றனர்.

தேசிய கவி சுப்பிரமனிய பராதியார் வள்ளலாரிடம் கொண்டிருந்த பற்று அளவு கடந்தது. சாகாநிலை பற்றி வீர முழக்கம் செய்கின்றார்

ஒளிவடிவம் ஆவதே சுத்தசன்மார்க்கப் பெருநெறி. அனைத்துப் பொருளும் ஒளிசம்பந்தப்பட்டதே. உயிர்ப்பொருளில் அவ்வொளி நிரம் பவுள்ளது. விஞ்ஞானம் ஒப்புக்கொண்டு முடிந்தது. ஒளிப்பொருள் படம் பிடிக்கும் கருவியால் படமெடுத்து (போட்டோ) வந்துவிட்டன. ஒளியின் தன்மை (மங்கிய ஒளி, துலங்கயவொளி என அதன் பிரகாசம்தான் வித்தியாசப் படுகிறதே தவிர அனைத்துப் பொருள்களிலும் ஒளித் தன்மை உள்ளே ஊடுருவியிருப்பதைப் படங்களில் காணலாம்) தான் ஏற்ற இறக் கமாகவுள்ளது. சுத்தசன்மார்க்கச் சேந் நெறி ஒளி நெறியாகும். இந்நெறியை சேந்நெறி ஒளி நெறியாகும். இந்நெறியை 'ஒளிநெறி' யென்றும் அடிகள் பல இடங்களில் குறிப்பிடுவர்.

1982 ஏப்ரல் முதல்நாள் வெளியான ஆங்கிலத் தினசரி இந்துச் செய்தி இதழ் (ஹிந்து) கீழ்க்கண்டவாறு பேசுகிறது:—

A Team of Australian British Scientists say they have discovered the most distant known object in the universe, one enormously powerful celestial bundle of light. The four member team said on Tuesday the Quassar is estimated to be 18 Billion light years from the earth and existed long before the solar system was formed. To reach it, a person should have to travel at the speed of light 299000 K.M. per second for 18 Billion years.

(அண்டத்து விண்ணகத்தில் எல்லையறற பேராற்றல் மிக்க ஒளிக்கற்றை ஒன்று வெகுதூரத்தில் கண்டுபிடிக்கப் பெற்றி ருப்பதாக ஆஸ்திரேலியா பிரிட்டிஷ் விஞ் ஞானிகள் குழுவொன்று கூறுகிறது. நால் வரைக்கொண்ட குழு, பூமியிலிருந்து 'சுவாசாராகிய' இது, ஞாயற்றின் குடும்ப அமைப்புக்கு முன்னரே அமையப்பெற்று 18 கோடி ஆண்டு தூரத்தில் இருந்து வருகிறது. இதை அடைவதற்கு வினாடிக்கு 299000 கிலோமீட்டர் ஒளிவேகத்தில் 18 கோடி ஆண்டு பயணம் செய்ய வேண்டும்) 18 கோடி ஆண்டு கணக் கிட்டால், ஒரு மில்லியன் என்பது 10 10 மில்லியன். அதாவது 100 லட்சமாகிய ஒரு கோடி. ஒரு வினாடி (செண்டு)க்கு 299000 கிலோமீட்டர் ஒளிவேகமாக ஒரு மணித்துளிகு (ஒரு நிமிஷத்துக்கு) 60 × 299000= 17940000 × 60 = 942926400000 இது ஒரு 25833600000 இத ஒரு நாள் × 365 = 942926400000 இது ஒரு ஆண்டு. இவ்வாறு 18 ஆண்டுக்கு 16979267592000000 × கோடி = 169726752000000000000 கிலோ மீட்டர் தூரம் கணக்காகிறது.

ஒளிபற்றி வள்ளற் பெருமான் திரு வாய் மலர்ந்து:—

ஒளி ஒன்றே அண்ட பகிரெண்ட மெலாம் விளங்கி
ஓங்குகின்ற தன்றி அண்ட பகி ரெண்டங்களிலும்
வெளிநின்ற சராசரத்தும் அகத்தி னெடு புறத்தும்
விளம்பு மகப்புறத்தினெடு புறப் புறத்தும்நிறைந்தே
உளிநின்ற இருள்நீக்கி யிலங்குகின்ற தன்மை
உலகறியும் நீயறியா தன்று கண்டாய் தோழி
தனிகின்ற ஒளிமயமே வேறினை எல்லாமும் தானென வேதாகமங்கள் சாற்றுதல் சத்தியமே (5697)

எனவரும் திருவருட்பாவால் மேலே சொன்ன விஞ்ஞான வெளியீட்டை ஒப்பு நோக்கி இன்னும் காலம் வளர வளர எவ்வளவு விஞ்ஞானம் வந்தாலும் வந்த பிறகும் கூட நம் பெருமானை நம்புவோமோ அல்லது கலியுரைத்த கற்பனையிலே திளைப் போமோ தெரியவில்லை! குடமுழக்காடும் கூத்தப்பெருமானே! ஏழை யோங்களுக்கு வழி காட்டுவாயாக!

முன்னே சொல்லப் பெற்ற "திரு நெறியொன்றே யுதுதான்" (5587) என்ற திருவருட்பாவும் "சேர்ந்திடவே ஒருப்படு மின் (5596) என்ற திருவருட்பாவும் வள்ளலார் திருகாப்பிட்டுக் கொண்ட தருணம் பாடிய "மரணமிலாப் பெரு வாழ்வு" என்ற தலைப்பில் உள்ள அந்நாதித்தொடையாக அமைந்த இருபத் தெட்டுப் பாடல்களைக் கொண்ட "வாய் பறையார்த்தலில்" காணப்பெறும் பாடல் களாகும். இதன் பின்னர் வள்ளற் பெரு மானுர் பாடவில்லை. தோன்றும் துணை மாறித் தோன்றுத் துணையாயிய் இருந்து வரத் தொடங்கிய வேலை அது! எனவே தான் பின்னர்ப் பாடம் கேட்கும் பெற்றி நமக்கு இல்லை கேட்ட பாடல்களின் பொருளு ணர்வில் தலைப்படுவோமாக!

"முத்தி என்பது நிலை முன்னுறு சாதனம்" (4615ல் வரி 250)

சித்தி என்பது நிலைசேர்ந்த அனுபவம் (ஷை வரி 252)

எனவும் திருஅகவலில் முத்தியைச்சாதன மாகவும் மூவுடல் சித்தியாகிய சித்தியை (சாத்திய) அனுபவமாகவும் அருளி யிருப்பது முற்றிலும் புதுமையே. காய்தல் உவத்திலின்றிச்சிப்போமாக. இவ்வாறு கூறிய சாதன முத்தி பற்றியும் சாத்திய சித்திபற்றியும்:—

இடம்பெறும் இந்திரிய இன்பம் கரணஇன்பம் உலக
இன்பம் உயிர் இன்பம் முதல் எய்தும் இன்பம் ஆகித்
தடம் பெறும் ஓர் ஆன்ம இன்பம் தனித்த அறிவின்பம்

சத்தியப் பேரின்பம் முத்தி இன்ப
முமாய் அதன்மேல்
நடம்பெறு மெய்ப்பொருள் இன்பம்
நிரதிசய இன்பம்
ஞானசித்திப் பெரும்போக நாட்ட
ரசின் பமுமாய்த்

திடம்பெற ஓங்கிய இயற்கைத் இன்
பமயமாம்

திருச்சிற்றமபலந் தனிலே தெய்வம்
ஒன்றே கண்டீர் (3273)
எனவரும் திருவருட்பா முத்தி இன்ப
அளவும் அதன்மேல் உள்ள சித்தி இன்பப்
பேறும் விளக்கி நிற்கிறது.

கட்டுரைச் சொற்பொருளில் காணுமறியா
மையினை
எட்டியெனத் தள்விட்டோம் மானே கட்
டியணைத்
தேழை எளியோமை என்றும் பெரு
நெறியாம்
கோழைபடா வாழ்வினிலே கூட்டு.

வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்
வாவதே. □



வினைப்பிறவி என்கின்ற
வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே
தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டென்
பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகுந் தொழுந்தில்லை
அம்பலத்தே கண்டேனே.



உருத்தெரியாக் காலத்தே
உள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக்
கருணையினு லாண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத்
தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினுல் நாயடியேன்
அணிகொள்தில்லை கண்டேனே.

திருவாசகம் காட்டும் பண்டித மணியார்

முதுபெரும் புலவர் அறிஞர் செம்மல்

வ. சுப. மாணிக்கம்.

பிஎச்.டி., டி.லிட்டு

முன்னுள் துணைவேந்தர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

இருபதாம் நூற்றாண்டில் எழுந்த உரை வரலாற்றில் என்-ஆசிரியர் மகா மகோ பாத்தியாய பண்டிதமணி கதிரேசனார் எழுதிய திருவாசகக் கதிர்மணி விளக்கம் என்ற பேருரை செந்தமிழுக்கு உறுதியான செல்வமாகும். நுண்மையால் ஞண்மையால் நடைநயத்தால் நடைத்தூய்மையால் உரைநடையாளர் கெல்லாம் இவ்வுரை வழிகாட்டி. மாதவச்-சிவஞான முனிவர்க்குப் பின்னர், சைவ மெய்யியலே நன்னடையில்புலப்படுத்தும் சொல்வளம் மிக்க பேருரை இது. நூலின் நோக்கம், இறையெளிமை, அடியவர் பணி, பன்னூற் கலேகள். பல்துறைச் சான்றுகள், இலக்கண அமைதிகள், ஒப்பாய்வு, வாழ்வறங்கள் என்ற கூறனேத்-தும் தழுவிய பேருரை இது.

வையகம் போற்றுதிரு வாசகத்தின்
உட்பொருளைக்
கையிற் கனியாகக் காட்டினனுல்—
செய்யதமிழ்ப்
பேராசிரியர் பெருமான் கதிரேசன்
ஆராய்ந்து முற்றும் அறிந்து

என்பது கவிமணியின் பாராட்டு.

பொதுமரபு:

திருவாசகத்தின் உட்பொருளைப் பலரும்எளிதிற் புரிந்து கொள்ளும் வண்ணம் பண்டிதமணியார் கையாண்ட ஒருமுறை உலகியல் விளக்கமாகும், திரு-வாசகம் இறைநூலாதலின் தோத்திரங்கள் சாத்திரங்கள் காட்டி விளக்குவதே சிறப்பு மரபு. எனினும் திருவாசகவமைப்புக்கள் திருப்பொற் சுண்ணம், திருவெம்பாவை, திருவுந்தியார், திருவம்மானே, திருப்-பள்ளி யெழுச்சி, திருச்சாழல், திருப்-பொன்னூசல், திருக்கோத்தும்பி என்ற உலகியல் வடிவுடையனவாதலின், மக்களின் பழக்க வழக்கங்களோடு ஒட்டியும் உராய்ந்-தும் தெளிவாக விளக்கும் பொதுமரபையும் பண்டிதமணி யார் தழுவிக்கொண்டனர். வேயத்தியல் பொதுவியல், என இருபாகு பாடு இருப்பது போல மெய்யியலும் உலகி யலும் இணைந்த ஏற்றம் இப்பேருரைக்கு உண்டு.

"அடிகள் அரசியல் வினைத்திறமை படைத்தவராதலின், உலகத்தலேவர் பணி-யாளர் வாணிகத் தொழிலாளர் முதலி-யோரின் குணஞ்செயல்களேயும் மற்றை

உலகியல்களையும் உரிய இடங்களில் தழுவியும், ஒருசில இடங்களில் அவற்றுக்கு மாறுகக் கொண்டு இறையருட் செயல்களைப் புலப்படுத்தியும் இருத்தல் அறிந்து இன்புறத்தக்கது'' என்று தன் உரைநெறியைப் பண்டிதமணியே சுட்டிக் காட்டுவதை எண்ணுக.

உரைநிறை:

பண்டிதமணியின் உரை திருச்சதகம் நீத்தல்விண்ணப்பம், திருவெம் பாவை என்ற மூன்று பகுதிகளுக்கும் முழுமையாகவுண்டு. இவை அவர்தம் காலத்திலே அச்சாகி வெளிவந்துள. திருவம்மானை இரண்டு பாடல்கட்கு மட்டும் எழுதியவுரை கைப்படியாக வுளது. சிறுபருவந் தொட்டே அருமருந்தன்ன திருவாசகத்தைச் சிறப்பு முறையிற் பயின்று அவைக்களங்களில் பல்லாண்டு பன்னூறு சொற் பொழிவுகள் நயம்படப் பொழிந்திருந்தாலும், பண்டிதமணியார் கதிருரை எழுதத் தொடங்கியகாலம் அவர்தம் 65 ஆம் முதுமை ஆண்டிலாகும். அவர் 73 ஆம் அகவையில் இறையடி நிழல் எய்தினர். எனவே மேற்சுட்டிய மூன்று பகுதிகளும் ஏழாண்டளவில் இடைவிடா முயற்சியால் வலிநோய்க்கிடையே வரையப்பட்டவை.

முழுமை நோக்கில் இம்மூன்றிற்கே உரை இருப்பினும், திருவாசகத்தின் உண்மைகளையும் மணிவாசகரின் அன்புப் பணிநிலைகளையும் பழுதற நாம் உணர்ந்து கொள்வதற்கு இவ்வுரை விளக்கங்களில் நூல் முழுமை சான்ற குறிப்புச் செல்வங்கள் பரவிக்கிடக்கின்றன. ஒருவாசகத்திற்கு உரை காணும் போது அடிகளாரின் பலவாசகங்கள் மேற்கோட்படுகின்றன. 'நின்வாசகத்தில் ஒருமொழியே என்னையும் என்னுடையனையும் ஒன்றுவித்துத் தருமொழியாம் என்ற வள்ளலார் வாக்கில் இச்செறிவு காண்க. பெரும்புலவனின் ஒரு பாடலுக்கு நல்லுரை காண்பதற்குக்கூட அவன்தன் முழுநூற் பயிற்சியும் நினைவுத் தொடர்ச்சியும் கைவரப்பெறுதல் வேண்டும். அறுபதாண்டு பழுத்த பயிலறிவு கதிர்மணி விளக்கத்தில் 170 பாடல்களில் தேக்கமாகி நிற்கின்றன. இவற்றோடு பண்டிதமணியார் எழுதிய உரைநடைக் கட்டுரைகளிலும் திருவாசகப் படிவங்கள் பொன்படு வைரம் போல இலங்கக் காண்கின்றோம். உரை யெழுதாத சில பகுதிகளின் விளக்கங்கள் இக்கட்டுரைகளிற் கிடைக்கின்றன. எனவே திருவாசக முழுமைக்கும் பண்டிதமணியின் உரைநிறை இல்லை என்பது நம் தவக்குறையாயினும், திருவாசகவுண்மைகளைக் கசடற அறிதற்கு உள்ளவுரை நிறையாகும் ஐயமில்லை. அதனாலன்றோ,

தெய்வ மறையாம் திருவா
சகப்பொருளை
ஐயமறக் காட்டும் அணிவிளக்கம்

என்று திருச்சதகவுரையை விற்கே இவ்வளவு பாராட்டினார் கவிமணி தேசிக விநாயகர்.

உலகியல்:

பண்டித மணியார் திருவாசக உரையின் ஒருதனி வீறு உலகியல்பற்றிய விளக்கம் ஆகும் என்று காட்டுவது இக்கட்டுரையின் நோக்கம். தலைமை பணிமை, உயர்வு பணிவு, அருமை எளிமை, செல்வம் நல்குரவு, பிறப்பு இறப்பு, பிரிவு துன்பம், ஏக்கம் அழுகை, பொறுமை சிறுமை, காம விழைவு, எண்ணப்புரட்சி, செயல்மாற்றங்கள் எல்லாம் மக்கள் வாழ்விற் காணப்படும் உலகியங்கள் அல்லவா? மக்களோடு தொடர்புடைய இறையுலகவளர்ச்சியிலும் இவையே நிழற் படுகின்றன. உணர்ச்சி தளங்கள் மாறுவதில்லை; நோக்கங்களே மாறுகின்றன. இதுவே உலகியலுக்கும் இறையியலுக்கும் உரிய வேறுபாடு. இதனை வேறுபாடு என்று சொல் வதைவிட குழவி இளமை முதுமைபோன்ற ஓர் உயர்வளர்ச்சியாக இறைமையைக் கருதுவதே படிமுறையாகும்.

''பொருள் புலப்பாட்டிற்காகவும் தெளிவுக்-
காகவும் அன்றுட
உலகியலில் காணப்படும் வழக்குகளைப்
பயன்படுத்திக்
கொள்ளும் போக்கு பண்டிதமணியிடம்
சிறப்பாகக்
காணப்படுகின்றது: இப்போக்கு அவரது
சமயக்
கட்டுரைகளிலும் திருவாசக உரை
விளக்கங்களிலும்
மிகுதியாகக் காணப்படுவது குறிப்பிடத்
தக்கதாகும்''

என்று சிறப்புரிலை சுட்டுவர் 'பண்டிதமணி நடைநயம்' என்ற நூலாசிரியர் அறிஞர் இரா. மோகன். 'பழுத்த இலக்கியச் சுவையும் பரந்த உலகியலறிவும்' எனப்-பாடினர் முத்தமிழ்மணி அருணாசலம் பிள்ளை. அத்தகைய உலகியல் ஒழுக்கங்கள் சிலவற்றை சோற்றுப்பதம் உப்புப்பதம் போலக் காண்போம்.

திருச்சதகத்தில்:

கிற்ற வாமன மேகெடு வாயுடை
யானடி நாயேனை
விற்றெ லாமிக ஆள்வதற் குரியவன்
விரைமலர்த் திருப்பாத
முற்றி லாவிளந் தளிர்பிரிந் திருந்துநீ
உண்டன எல்லாமுன்
அற்ற வாறுநின் அறிவுநின் பெருமையும்
அளவறுக் கில்லேனே

என்ற திருச்சதகம் (34) இறைவன் உரிமை-யையும் நெஞ்சின் சிறுமையையும் சுட்டு-கின்றது. நான்கு உலகியல்களைக் காட்டி இச்சதகக் கருத்தை விளக்குவர் பண்டித மணியார்.

(அ) குற்றப்பட்ட ஒருவனைக் கண்டவாறு அவன் குற்றமெல்லாம் சொல்லிக் காட்டிக் கூப்பிடுவது அழகன்று. திருத்துவதற்குமுன் அன்பு தோன்ற அவனை அழைக்கவேண்டும். அப்போது தான் அவன் நம்மிடம் நெருங்கி வருவான். இஃது உலகியல். கில் தவாமனமே-என்ன வெல்லாம் கெடுதல் செய்துவிட்டாய் நெஞ்சமே என்று சுருக்க-மாகச்சொல்லும் நடையில் இவ்வுலகியல் அமைந்துள்ளது.

(ஆ) ஒருபொருளை விலைகொடுத்து வாங்குதல் பயன்படுத்தலாம். பிறருக்கு விற்ற பின் அப்பொருளை ஆளுதல் முடியாது. இஃது உலகிடைக்கண்டது. ஆனால் இறைவனை அவ்விதிகட்டுப் படுத்-துமா, கட்டுப் படுத்தமுடியுமா? உலகி-யலுக்கு அவன் செயல்முரண். விற்றெலாம் மிக ஆள்வதற்கு உரியவன் விற்றபின்னும் அதனை ஆளும் உரிமைப்பாடு இறைவனுக்கு உண்டு. மேலும் ஈண்டு விற்றல், ஆளுதல் என்பதனை உலகவியல்பில் வைத்துப் பொருள் செய்யக்கூடாது. அவன் யாருக்கு விற்பான்? அவனிடம் உயிரை வாங்க வல்லார் யார்? ஆதலின் இவ்விளைச் சொற்கட்கு மெய்ப்பொருள் உண்டு என்று கருதிய பண்டிதமணியார் உயிரை விளைக்-கீடாக மறுபிறப்புச்செய்வதே விற்றல் எனவும் விளை யொழிவில் திருவடிக்கண் சேர்த்துக்கொள்வதே ஆளுதல் எனவும் சைவமெய்ம்மையைத் தெளிவிப்பர். இத் தெளிவானன்றே இவ்வுரைக்குத் தனிப் பெருமையுண்டு.

(இ) ஒரு சில பரம்பரையினர் தம்முன்னோர் சொத்தின் வருவாயை மட்டும் நுகரப் பாத்திமை யுடையரேயன்றி அடகுவைத்தல் முதலியன செய்யவியலா. இது பதிவியல். இறைவனுக்கும் அன்ன கட்டுப்பாடு உண்டோ? விற்று ஆள்வதற்குரி யவன் என்று சுருக்கமாகப் பாடாமல், 'விற்று எலாம் மிக ஆள்வதற்குரியவன் என்று விரித்துப் பாடினமையால் உயிரை எவ்விதமும் செய்தற்குப் பாத்தியன் என்பது பெறப்படும். இவ்விளக்கத்திற்குத் திருவாசகத்திலே சான்றிடன் உண்டு. 'இருந்தென்னை ஆண்டு கொள் விற்றுக்கொள் ஒற்றிவை என்னினல்லாம் விருந்தினனேனை' என்ற செய்யுள்

உடைமையின் எல்லா நிலைமையும் குறிக்கக் காண்கின்றேம்.

(ஈ) அறிவுப் பெருமையும் ஆண்மையும் வாய்ந்த ஒருபேரரசன் யார்க்கும் கீழ்ப்படாமல், தலைநிமிர்ந்து இருப்பது விரும்பத்தகும். இது அரசுலகிற் காணப்படும் இறைமாட்சி. என்நெஞ்சே, நீ உன்னை அரசனுக்குக் கருதிக்கொண்டு இறுமாந்து நடக்கலாமா? இறைவனது அடியை நீ வணங்காதிருப்பது எவ்வளவு கேடு தெரியுமா? நின் அறிவும் நின் பெருமையும் அளவறுக்கிலேனே = உன் அறிவின் சிறப்பும் உன் பெருமையின் சிறப்பும் சிவபெருமானையும் பணியாத அவ்வளவுக்கு உயர்ந்துவிட்டன, இல்லையா என்று மணிவாசகர் புகழ்வது போல் இழித்துரைக்கின்றார்.

எனவே 'கிற்றவா' என்ற ஒரு திருவாசகத்தில், நான்கு உலகியல்கள் விளக்கமாக வருவதைக் கண்டு இன்புறுகின்றேம். இவ்விளக்க நெறியைப் பண்டிதமணியம் என்று குறியிடலாம்.

நீத்தல் விண்ணப்பத்தில் :-

செழிகின்ற தீப்புகு விட்டிலிற்
சின்மொழி யாரிற்பன்னுள்
விழுகின்ற என்னை விடுதிகண் டாய்
வெறி வாயறுகால்
உழுகின்ற பூமுடி யுத்தர கோசமங்
கைக் கரசே
வழிநின்று நின்னரு ளாரமு தூட்ட
மறுத்தனனே

என்ற திருவாசகத்தில் (5) தான் எவ்வளவு புரியாமல் நடந்து கொண்டாலும், ஒதுங்கினாலும், தன்னைவிட்டுவிடக் கூடாது என்று இறைவனே வேண்டுவர் நம் அடிகளார்.

ஒருவனை ஒருவன் வழிமறிக்கின்றான் எனறால் அது துன்புறுத்திப் பொருள் கவர்ந்து வழிப்பறி செய்வதற்கல்லவா?' பொருள்கொண்டு புண்செயின் அல்லதை யார்க்கும் அருளில் ஈயனர்' எனச்சிலம்பும், 'கொள்ளும் பொருளிலராயினும், வம்பலர் துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்து உயிர் வவ்வலின்' எனப்பாலைக்கலியும் வழிப்பறியின் கொடுமையைச் சுட்டும். இஃது உலக நிகழ்ச்சி. இறைவன் செயலோ இதற்கு மாறுனது. மணிவாசகர் சென்றபோது இறைவன் வழியிடை நின்றது உண்மை. நின்றது பறிப்புக்கன்று. வழிநின்ற இறைவன் என்ன செய்தான்? வேறு யாரிடமும் பெறவியலாத அருள் நிறைந்த அமுதை வலிந்து வழங்கினான். உலகவழிப் பறியில் பறிஞன் பயணியைத் தொல்லைப்படுத்திப் பொருள் வாங்குவான். இறைவனது வழி மறியலிலோ அவன் நயந்து அருட்பெரும் பொருளை இனிமையாக வாய்மடுக்கின்றான். பிறவிப் பயணியாகி மணிவாசகர் அதனைப்பெற மறுத்து இறைவனைத் தொல்லை செய்கின்றார்.

'வழிநின்று நின் அருளாரமுது ஊட்ட மறுத்தனன்' என்ற திருவாசகத்துக்கு வழிப்பறியுலகியலை உட்கொண்டு எழுதிய கதிர்மணி விளக்கம் சுவையுடையது மட்டுமன்று, அடியார்களை ஆட்கொள்ளும் இறைவனது வன்மைநிலையையும் புலப்படுத்துகின்றது.

திருவெம்பாவையில்:

செங்கண்வன் பால் திசை முகன்பால்
தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம் நம்பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக்
கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி

என்ற திருவெம்பாவை (17) சிவபெருமானின் அருமைமையும் எளிமையையும் புலப்படுத்தும். இதனை ஒர் உலகியற்காட்சியில் வைத்துக் கதிர்மணியுரை நம்மைக் கவரும்.

பேரரசன் ஒருவன் தனக்குரிய தலை நகரைவிட்டுப் பிறிதோரிடம் சென்றாலும், சென்று தங்கியிருக்குங் காலம் சிறிதாக இருந்தாலும், தலைநகர் போன்ற வசதிகளையும் சுற்றுவனப்புக்களையும் அமைத்தாக

வேண்டும். இடம் மாறியதற்காக இந்நிலை மாறக்கூடாது. பதவியின் மதிப்பு அத்தகையது. அதுவும் அவன்தன் அரசியொடு இடம்பெயர்ந்தானுயின், மேலும் மனைச் சூழ்நிலை அவ்விடத்தும் போற்றப் படவேண்டும். இஃது ஆட்சியுலகில் காணப்படும் முறை.

சிவனே திருமால் நான்முகன் தேவர்கட்கெல்லாம் அரியன். அவன் தனக்குரிய இடத்திலிருந்து அன்பர்களின் இல்லந் தோறும் செல்லும் போது, அவன் பெருமைக்குத்தக ஏழையடியவர்கள் தம் குடில்களை அழகுபடுத்த இயலுமா? 'சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்தும் என் சிந்தையுள்ளும் உறைவான்' என்ற கோலைப்படி, இறைவன் தான் அன்பர்கள் புறத்தருகிக்கு இறங்கிவந்து உடனுறைந்து அருள் செய்ய வேண்டும். 'இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி' என்ற தொடர் சிவன் ஆட்சியுலகியலைப் பின்பற்றவில்லை என்ற பேருண்மைமைப் புலப்படுத்துகின்றது. 'நம் இல்லங்களுக்கு எழுந்தருளிய அளவிலன்றி அப்பெருமான் தன் பொன்–போன்ற திருவடிகளையும் தந்தருளினன்'' என்ற கருணை மிகுதியைப் பாராட்டுகின்றது இப்பாவைச் செய்யுள் என்பர் சுதிர்மணி விளக்கத்தார்.

பண்டிதமணியின் உலகியல் விளக்கக்துக்கு மேலே காட்டப்பட்டவை மிகச் சிலவே. சிறியவும் பெரியவுமான உலகநெறிகள் இவ்வுரையில் நிரம்பவுள. பண்டித மணியின் சொற்பொழிவுகளும் சமுதாயப் பழக்க வழக்கங்களைத் தழுவியன என்பதனையும் அதனுல் அரியனவும் எளியனவாய்ப் புரிந்தன என்பதனையும் அப்பொழிவினைக் கேட்டார் உணர்வர் 'அருமையில் எளிய அழகே போற்றி' என்ற வனப்புநிலை பண்டித மணியின் திருவாசகவுரைக்கும் பொருந்தும்.

சைவத்தின் ஒழுக்கங் காட்டிச் சமயங்கள்
கடந்து நிற்கும்
தெய்வத்தின் விழுப்பங் காட்டித்
தெளியார்தும் ஒப்ப வேண்டி
வையத்தின் வழக்கங் காட்டி வகுத்தநல்
லுரையைக் கண்டேம்
கையொத்துத் தொழுது சொல்வேம்
கதிர்மணி விளக்கம் வாழ்க

என்பது ஆசானுரைக்கு இம் மாணவன் எழுதிய பாயிரம். □

பிறவிதனை யறமாற்றிப்
பிணிமூப்பின்றி வையிரண்டும்
உறவினெடு மொழியச்சென்
றுலகுடைய ஒருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த்
திருச்சிற்றம் பலமன்னி
மறையவரும் வானவரும்
வணங்கிட நான்கண்டேனே.



சிதம்பர புராணம்

தவத்திரு சுந்தரமூர்த்தி சுவாமிகள்

மௌனதேசிகர் ஆதீனம், சிதம்பரம்

திருவில்லைச் சிற்றம்பலம் என்னும் கோயிலைப் பற்றிய கோயிற் புராணங்களுள் உமாபதி சிவாசாரியார் இயற்றிய கோயிற் புராணத்தினை யடுத்து எண்ணத்தக்கது சிதம்பர புராணம் என்பதாகும். இந்நூல் மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம் சிதம்பர சுவாமிகள் அவர்களால் பரிசோதிக்கப் பெற்று இராட்சத வருஷம் ஆவணி மாதம் அச்சிடப் பெற்றுள்ளது. இப்பதிப் பினைச் சிறப்பித்துச் சிதம்பரம் இராமலிங்கசுவாமிகள் எனப் போற்றப் பெறும் வடலூர் அருட்பிரகாச வள்ளலார் அவர்கள் "சிதம்பர புராணம் இதம் பெறத் திருத்திய, சிதம்பர முனிவன் பதம் பரவியது" என்ற தலைப்பில் ஆசிரியப் பாவொன்றும், ஆசிரியவிருத்தம் ஐந்தும் இயற்றி யுள்ளார்கள். இப்பதிப்பில் சிதம்பர புராண ஆசிரியர் பெயர் குறிக்கப் பெறவில்லை. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் மாணக்கருள் ஒருவர் செய்த உரையுடன் இப்புராணம் அச்சிடப் பெற்றுள்ளது. அப்பதிப்பிலும் இதன் ஆசிரியர் பெயர் குறிக்கப்பட்டிலது.

சிதம்பரப் பாட்டியலைப் பதிப்பித்த அறிஞர். மு. இராகவையங்காரவர்கள் அதன் பாயிரமாக அமைந்த பாடலைக் கொண்டு சிதம்பரப்பாட்டியல் நூலாசிரிய ராகிய பரஞ்சோதி முனிவரே இச் சிதம்பர புராணத்தையும் இயற்றியவர் எனக் குறித் துள்ளார்கள். இம்முடிவுக்கு ஆதரவாக

பூமன்னு பொழில் வெண்ணெ மெய்கண் டான்கச்சிப்
புகழ் புனை தத்துவ ஞானப் பிரகாச மாய் வந்து
பாமன்ன வுரை யென்ன அவனருளால வன்றன்
பதம் பரவிச் சிதம்பரப் பாட்டிய லெனப்பேர்வகுத்தான்

மாமன்னு சிதம்பர புராண முதனூலும்
மதுரை யுலாவும் பகர்ந்தோன் மருவு குலமைந்தன்
தேமன்னு புராணகலை பலதெரி புராணத்
திருமலை நாயகனருளின் தேசு பூண் டோனே.

சிதம்பரப் பாட்டியலைச் செய்தான் தமி ழாற்
சிதம்பர புராணமுதற் செய்து—விதம் பெறுசீர்
சேர்ந்த புராணத்திருமலைநாதன் தவத்தாற்
சார்ந்தபரஞ் சோதியென்பான் ஒன்.

எனச் சிதம்பரப் பாட்டியலிற் காணப் பெறும் பாயிரப் பாடல்களைக் காட்டுவர்.

மேற்காட்டிய செய்யுட்களில் முதல் செய்யுளில் "மாமன்னு சிதம்பர புராண முதனூலும் மதுரையுலாவும் பகர்ந்தோன் மருவுகுலமைந்தன் எனச் சிதம்பரப் பாட் டியல் நூலாசிரியர் சிறப்பிக்கப் பெற் றிருத்தலால், சிதம்பர புராணம் பாடியவர் பரஞ்சோதி முனிவர் அல்லர் எனவும் அவரது தந்தையார் புராணத் திருமலை

நாதரே எனவும் கூறுவர் பேராசிரியர் க. வெள்ளை வாரணனார். அன்றியும் வெண் பாவில் சிதம்பரப் பாட்டியலைச் செய்தவர் பரஞ்சோதி முனிவர் என்பதும் அவர் தந்தையார் புராணத் திருமலைநாதர் என்பதும் ''பரஞ்சோதி யென்பான்'' எனவும் ''சிதம்பர புராண முதற்செய்து--விதம் பெறுசீர் சேர்ந்த புராணத் திருமலைநாதன்'' எனவும் குறிக்கப் பெற்றிருத்தலால் தில் லைப் பெருங்கோவிலின் தொன்மையை விளக்கும் சிதம்பர புராணத்தை இயற் றிவர் சிதம்பரப் பாட்டியல் ஆசிரியர் பரஞ்சோதி முனிவருடைய தந்தையார் புராணத் திருமலை நாதரே என்பது நன்கு புலனாகிறது.

''திருமலை நாதர்''--இவர் சிதம்பரப் பாட்டியல் இயற்றிய பரஞ்சோதி யாரின் தந்தையார். ''சிதம்பர புராணம், மதுரை யுலா இயற்றியவர்'' என இந்நூலாசிரி யரைப் பற்றி அபிதான சிந்தாமணியிற் குறிக்கப்பட்டிருத்தல் இவ்வுண்மையை வலி யுறுத்தும். கி.பி. 1509 இல் தொடங்கி விஜயநகர அரசைக் கிருட்டிண தேவராயர் 22 ஆண்டுகள் அரசாண்டார். குமார சரஸ்வதி என்பார் இவரது அவைக் களப் புலவர். இவர் காலத்தில் அரிதாசர் ''இருசமய விளக்கம்'' இயற்றினார். காஞ்சி புரம் ஞானப் பிரகாச தேசிக சுவாமிகள் ஆதீனத்தில் குருமூர்த்தியாயெழுந்தருளியி ருந்த தத்துவப் பிரகாச ஞானப் பிரகாசர் என்பார் ''மஞ்சரிப்பா'' என்னும் பனுவ லால் இவ்வரசரைப் பாராட்டியுள்ளார்''. சூடாமணி நிகண்டு இயற்றிய மண்டல புரு டரும் இவ்வரசர் காலத்தவரே என்பர்.

15ம் நூற்றாண்டின் தொடக்கமாகிய இக்காலத்திலே வாழ்ந்தவர் புராணத் திரு மலைநாதர். இவர் வேளாள மரபினர் என்றும் தில்லையிற் பிறந்தவர் என்றும் கூறுவர். (1. பதினொரும் நூற்றாண்டு தமிழ்ப்புலவர் வரலாறு பக்கம். 1) இவர் காஞ்சி ஞானப் பிரகாசர் ஆதீனத் தலை வராகிய குருமூர்த்தி களிடம் ஞானோப தேசம் பெற்றவர். இவர் தில்லைவாழந் தணர் வேண்டுகோட் கிணங்கி வடமொழி யிலுள்ள சிதம்பர புராணத்தைத் தமிழில் மொழி பெயர்த்தார் என்பதும் இப் புராணம் ஒன்பது சருக்கங்கள் அடங்கிய தென்பதும் பாயிரம் 15, 16 ஆம் பாடல் களால் நன்கு விளங்கும்

இந்நூல் சிதம்பரத்தைப் பற்றிய வட மொழிப் புராணம் ஒன்றினை அடியொற்றி இயற்றப் பெற்றதாகும். சிதம்பர புராணத் திற்கு மூலமாகிய இவ்வடமொழிப் புராணம் சேரநாடாகிய மலைநாட்டிற் கிடைத்த சுவடி என்பதும், அது குறைப் பிரதியை என்பதும், அதன் எஞ்சிய பகுதி இந்நூலா சிரியருக்குக் கிடைக்கவில்லை என்பதும் அதுவும் கிடைத்தால் அதனையும் மொழிபெயர்த்து முடிக்க இவ்வாசிரியர் எண்ணியிருந்தார் என்பதும்

இந்த வெல்லை மலை நாட்டிடத்திலும்
அந்த தெய்வ வடமொழியின் படிச்
செந்தமிழ்த் தொடை நூற்பாற்றெரித்தனம்
முந்து மற்றதும் வந்தால் மொழிதுமால்.

எனவரும் இப்புராணத்திறுதிச் செய்யுளால் இனிது புலனும்.

வடமொழியிலுள்ள சிதம்பரப் புரா ணத்தின் பிற்பகுதியே இவ்வாசிரியர்க்குக் கிடைத்தமையால் அதனை மட்டும் மொழி பெயர்த்து முற்பகுதி கிடைக்காமையால் அவ்வளவில் இப்புராணத்தை முடித்து விட்டார் என்பது தெரிகிறது. இச்செய்தி ''முந்து மற்றதும் வந்தால் மொழிதுமால்'' என மேற்காட்டிய செய்யுளின் இறுதி யடியால் அறியப்படும். அன்றியும் இப் புராணத்தில் புலிமுனியும், பதஞ்சலியும் தில்லையை அடைந்து வழிபட்ட முன்னய வரலாற்றை விரித் துரைக்கும் சருக்கம் இடம் பெறவில்லை. இதனைக் கூர்ந்து நோக்குங்கால் இவ்வாசிரியர் மொழி பெயர்த்த பகுதி சிதம்பர புராணத்தின் பிற்பகுதியே என்பது நன்கு தெளியப் படும்.

இந்நாட்டில் அயலவர் படையெடுப் புக்களால் தில்லை வாழந்தணர்கள் தில்லையை விட்டு அஞ்சிச் செல்ல நேர்ந்த சமயங்களில் சேர நாட்டை யடைந்தார்கள்

எனத் தெரிகிறது. எனவே அவர்கள் மலை நாட்டில் தங்கிய காலத்தில் அங்கிருந்து எடுத்து வந்த குறைப்பகுதியே சிதம்பர புராணத்திற்கு மூலமாகிய இவ்வட மொழிப் புராண மாதல் வேண்டும்.

தில்லையின் தல வரலாறு கூறும் நூல்களுள் சிதம்பர புராணத் திற்கு முற்பட்டது, உமாபதி சிவசாரியார் அருளிய கோயிற் புராணமாகும். சிறப் புடைய அப்புராணம் இருக்கவும் தாம் ஒரு புராணம் இயற்றுதற்குரிய தொடர்பினை இந்நூலாசிரியராகிய புராணத் திருமலை நாதர் பின் வருமாறு வெளியிடுகிறார்.

முற்றுணர் மெய்கண்ட சந்ததிக்கோர்
தீபமென முதன்மை கொண்ட
கொற்றவன்றன் குடி மருவு
குலவுமுமாபதி சிவன் பொற் கோயி
லுண்மை
சொற்ற புராணமு மிருக்கப்
பின்னமொரு வகையானுஞ்சொல்லவான்
புக்கேன்
மற்றவன்றன் திருவடியின் வழிவந்தோர்க்
கடியனெனும் வழக்கான் மன்னே (13)

திருமலை நாதர் சிதம்பர புராணத்தை இயற்றிய காலம் சகம் 1430. கி.பி. 1508 என்பது.

சூழுமா கடற் புடவியான் சுடர்முடிச்
சகற்கி
ரேழு நூறுடன் முப்பஃதியைந்த வாண்
டெல்லை
தாழு மாமதிச் சடைமுடித்தனி முத
லென்னும்
வாழு மம்பலப் பெருமையை வழுத்தலுற்
றனன்யான் (18)

என வரும் பாயிரச் செய்யுளால் அறியப்படும்.

இதனுற் கோவிற் புராணத்திற் சொல்லப் பெற்ற சிதம்பரச் சிறப்பினை யே அதனையடி யொற்றி மற்றொரு வட மொழிப் புராணத்தையும் துணையாகக் கொண்டு விரித்துரைக்கும் முறையில் இந் நூலைத் தாம் இயற்றப் புக்கதாக வும் இம் முயற்சிக்கு உமாபதி சிவாசாரியார் திருவடி மரபில் வந்த பெரியோ ரொருவர்க்குத் தாம் மாணவராகிய தொடர்பும் துணைசெய்யும் என்னும் இந் நூலாசிரியர் குறித்துள்ளமை காணலாம். இதில்குறித்தவாறு மெய்கண்ட சந்ததியில் வந்த உமாபதி சிவாசாரியார் திரு வடிமரபில் திருமலை நாதர் குடும்பத்திற்கு ஞான குருவாக விளங்கியவர் கச்சி ஞானப் பிரகாசர் ஆவர். இச்செய்தி புராணத் திருமலை நாதர் மகனார் பரஞ்சோதியா ரால் இயற்றப்பெற்ற சிதம்பரம் பாட்டியல் என்ற நூலின் சிறப்புப் பாயிரச் செய்யுளாக மேலெழுத்துக் காட்டின.

''பூ மன்னுபொழில் வெண்ணை மெய்
கண்டான் கச்சிப்
புகழ் புனைதத்துவ ஞானப் பிரகாசமாய்
வந்து
பா மன்னவுரை யென்ன அவனருளால்
வன்றன்
பதம்பரவிச் சிதம்பரப் பாட்டிய லெனப்
பேர் வகுத்தான்''

என வரும் தொடரால் உணரப்படும். திருமலை நாதர் சிதம்பர புராணத்தையும் மதுரை யுலாவையும் இயற்றினர் என்பதும் இவருடைய மைந்தரே சிதம்பரப் பாட்டில் செய்த பரஞ்சோதியார் என்பதும்

''மாமன்னு சிதம்பர புராண முதனூலும்
மதுரையிலாவும் பகர்ந்தோன் மருவு
குலமைந்தன்
தே மன்னு புராணகலை பலதெரிபுராணத்
திருமலை நாகனருளின் தேசு பூண்டோன்''.

எனவும்,

''சிதம்பர புராண முதற்செய்து—விதம்
பெறுசீர்,
சேர்ந்த புராணத் திருமலை நாதன்
தவத்தாற்
சார்ந்த பரஞ்சோதி என்பான்''

எனவும் வரும் தொடர்களால் புலனும்.

இந் நூலாசிரியர் சிவபுராணங்களை ஓதியுணர்ந்து அவையோர்க்கும் பாட்டாலும், உரையாலும் எடுத்துரைக்கும் இயல்பினராதலால் புராணத் திருமலை நாதர் எனச்சிறப்பிக்கப் பெற்றுரைக்க கருதுதல் பொருந்தும், இவர் பாடிய மற்றொரு நூல் மதுரையுலா, இது மதுரைச் சொக்க நாதருலா எனவும் வழங்கும். கி. பி. 1473 முதல் 1506 வரை திருநெல்வேலிச் சீமையை ஆட்சி புரிந்த சடில வர்மன் திரிபுவன சக்கர வர்த்திகள் பராக்கிரம பாண்டியன், அவையிலே இவ்வுலா அரங்கேற்றப் பெற்றதென்பர். இச் செய்தி

> ''வேதநூற்றென் முழைசை வீரமாறன்
> கடல்சூழ்
> பூதலங்களன் பாய்புரக்கு நாள்
> —ஆதிநெறித்
> தெய்வ மதுரைத் திவாலவாயுறையும்
> ஐயருளாக் கொண்டருளினர்.

என அவ்வுலாப் பிரதியிற் காணப்படும் வெண்பாவாற் புலனும்.

மதுரைச் சொக்க நாதருலாவின் ஆசிரியர் புராணத் திருமலை நாதரே என்பது.

> ''சீரார் புராணத் திருமலை நாதன்
> தருவேப்
> பாராளன் மெய்ஞ் ஞானம் பால்
> விளங்க—ஆராய்ந்து
> வேதக் குலாவால் விரித்தாலவாய்ச்
> சொக்க
> நாதர்க்குலாப் பாடினன்.

என இவ்வுலாவின் முதற்கண் காணப் பெறும் வெண்பாவினால் விளங்கும் இவ் வாசிரியர் தம்மை ஆதரித்த பாண்டியனை.

> 'மன்னன் குடைவீர மாறன் குல
> திலகன்
> தென்னன் செழியன் செகதீரன்'

என இவ்வுலாவிற் புகழ்ந்து பாராட்டுகின்றார். இவ்வுலா 516 கண்ணிகளால் இயன்றது. இதனை மகா மகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயரவர்கள் ஆராய்ந்து அரும்பொருட் குறிப்புக்களுடன் வளப்புற வெளியிட்டுள்ளார்கள். இந் நூலாசிரியரைப்பற்றி அவர்கள் பின்வருமாறு குறித்துள்ளார்கள்.

'இவர் சைவ சமயத்திலும் சிவஸ்தலங்களிலும் மிக்க பற்றுடையவரென்றும், பல ஸ்தலங்களுடைய சரித்திரங்களை அறிந்து அவற்றைப் பற்றிய செய்திகளை அழகுபெற அமைக்குந் தன்மை வாய்ந்தவரென்றும் சிவஞானத்தைப் பெறவேண்டுமென்றும் சொக்க முடையவரென்றும், யாவர்க்கும் புலப்படும்படி எளிய சொற்களையும் சொற்றொடர்களையும் அமைத்துச் சந்தக்கவி செய்தலில் ஆற்றலுடையவரென்றும் தமிழ் மொழியிடத்து மிக்க அன்புடையவராக இருந்தாரென்றும் தெரிகிறது'

ஐயரவர்கள் கூறிய அவையனைத்தும் சிதம்பர புராணத்தால் நன்கு விளங்குதல் காணலாம். இப்புராணச் செய்யுட்கள் வரலாறுகளைக் கூறுவதுடன் இடையிடையே சைவத் திருமறைப் பனுவல்களையும், சைவ சித்தாந்த நூல்களையும் கருத்திற் கொண்டு அவற்றின் பொருள் நலங்களைத் தெளிவு படுத்தும் முறையில் அமைந்துள்ளன.

> 'தாவிலா மறைச் சைவந்த தழைத்திடக்
> காவல் வேந்துடன் காசினி வாழ்ந்திடத்
> தேவர் தேவன் திருவுமுவாகிய
> மூவர் பாடலும் மூவுல கோங்கவே!

எனவும் இப்பாடல் சிதம்பர புராண ஆசிரியர் மூவர் தேவாரம் முதலிய திருமுறைகளிற் கொண்டுள்ள பற்றினைப் புலப்படுத்துதல் காணலாம். நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னே அச்சிடப் பெற்ற சிதம்பர புராணம் என்னும் இந்நூல் இப் பொழுது கிடைப்பதரிது. உமாபதி சிவாச்சாரியார் அருளிய கோயிற் புராணத்தையடுத்துச் சிதம்பரத்தின் பெருமைகளை விரித்துரைக்கும் தமிழ்நூலாகிய இப்புராணத்தினைத் தேடி மீண்டும் அச்சிற் பதிப்பித்து வழங்குதல் செந்தமிழ்ச் சைவத் திருப் பணியாகும். சிவநேசச் செல்வர்கள் இத்திருப்பணியினை நிறைவேற்றி யுதவத் தில்லையம்பல வாணர் திருவடிகளைப் பரவிப் போற்றுகின்றோம். □

சேரமான்பெருமானும், தில்லைச் சிற்றம்பலமும்

டாக்டர். இரா. செல்வகணபதி எம். ஏ., சமஸ்கிருதம் Ph.D.

தருமை ஆதீனப்பல்கலைக்கழகம்
தருமபுரம்

கழறிற்றறிவார்:

திருத்தொண்டர் புராணத் தனி அடியார் அறுபத்து மூவருள் ஒருவர் சேரமான் பெருமாள் நாயனர். சுந்தர மூர்த்தி சுவாமிகள் தாம் அருளிச் செய்த திருத்தொண்டத் தொகையுள் 'கார் கொண்டக் கழறிற் றறிவார்க்கும் அடியேன்' என இவர் திருநாமத்தைக் 'கழறிற்றறிவார்' எனக் குறித்துள்ளார். நம்பியாண்டார் நம்பிகளால் சுருக்கமாகக் கூறப்பெற்ற கழறிற்றறிவார் வரலாற்றைச் சேக்கிழார், வார்கொண்ட வனமுலையாள் சருக்கத்தில் நூற்று எழுபத்தைந்து திரு விருத்தங்களால் விரித்துரைத்துள்ளார். வெள்ளானைச் சருக்கத்திலும் இவர் வரலாறு, சுந்தர மூர்த்தி சுவாமிகள் வரலாற்றுடன் இணைத்துப் பேசப்பெற்று நிறைகிறது. சேரமான் பெருமாள் நாயனர் தில்லைச் சிற்றம்பலவன் திரு வடிகளில் கொண்டிருந்த அளப்பரிய ஈடுபாட்டைத் திருத்தொண்டர் புராணம், இவர் அருளிய பொன்வண்ணத் திரு வந்தாதி மற்றும் பிற வகைச் சான்றுகளின் துணைக் கொண்டு ஆராயும் நோக்கில் இக்கட்டுரை எழுதப் பெற்றுள்ளது.

வரலாற்றுச் செய்திகள்:

சேரமான் பெருமாள் நாயனர் அறுபான்மும்மை நாயனருள் குரு வருளால் முத்திபெற்றவர்களுள் ஒருவர். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் உயிர்த் தோழர். சுந்தர மூர்த்தி சுவாமிகளோடு திருக்கயிலை சென்றடைந்தவர். பாண பத்திரர்க்காக மதுரைச் சொக்கேசன் பாடி அருளிய திருமுகப் பாசுரத்தைப் பெற்றுக் கொண்டு, பாணபத்திரருக்குப் பெரும் பொருள் வழங்கியவர். சேரர் குடியில் கொடுங்கோளூரில் அவதரித்தவர். பெரு மாக்கோதையார் என்ற இயற்பெயரினர் திருவஞ்சைக்களத்து இறைவன்பால் பேரீடுபாடு கொண்டவர். இறையருளால் சிற்றுயிர்கள் பேசுவனவற்றையும் அறியும் உணர்வு பெற்றவர். இது காரணமாகக் கழறிற்றறிவார் என அழைக்கப்பெற்றவர். அரச நாட்டமின்றி வாழ்ந்த இவர், இறைவன் திருவுள்ளக் குறிப்பின்வழி அரசபாரம் ஏற்றவர். அக்காலத்துச் சோழ, பாண்டிய மன்னர்களோடு அன்பும், நட்பும் கொண்டு வாழ்ந்தவர். சுந்தர மூர்த்தி சுவாமிகளைத் தமது நாட்டுக்கு அழைத்துப் பெரு வழிபாடு நிகழ்த்தி உடன் உறையும் பேறு பெற்றவர்.

சேரமான் அருளிய நூல்கள்:

சேரமான் பெருமாள் நாயனரால்

அருளிச் செய்யப்பெற்ற அருள் நூல்கள் மூன்று. ஒன்று இவர் தில்லையில் அருளிச் செய்த பொன் வண்ணத்தந்தாதி. நூறு கட்டளைக் கலித்துறைகளால் பாடப் பெற்ற அரிய சிற்றிலக்கியம். பக்திச் சுவையும் இலக்கியச்சுவையும் மிக்க இந் நூலின் பாதிப்பாடல்கள் அகத்துறைச் சாயல் கொண்டன. இரண்டாவது நூல் திருவாரூர் மும்மணிக்கோவை. முறையே ஆசிரியம், வெண்பா, கட்டளைக் கலித் துறைப்பாக்கள் முப்பது கொண்டு அந்தாதித் தொடையால் இந்நூல் அமைந் துள்ளது. பொன்வண்ணத் தந்தாதி தேவாரச் சாயல் கொண்டிருக்க, இந்நூல் சங்கப் பாடல்களின் சாயல் கொண்டு அமைந்துள்ளது. தமிழில் எழுந்த முதல் மும்மணிக்கோவை இதுவே. இவர் அருளிய மூன்றாவது நூல் திருக்கயிலாய ஞான உலா. சேக்கிழார் இதனை 'உலாப் புறம்' என்பர். தமிழில் எழுந்த முதல் உலா நூல் இதுவே. இதுபற்றி இதனை ஆதியுலா என்பர். சிலம்புக்குப் பின்னர் கலிவெண்பா யாப்பில் அமைந்த நூல் இதுவே. நூல் இறுதியில் பிற்காலத்தார் பாடிய 'பெண்ணீர்மை' என்று தொடங்கும் வெண்பா ஒன்றும் இடம் பெற்றுள்ளது. கயிலாயத்தில் அரங் கேற்றப் பெற்ற இவ்வுலா நூலை மாசாத்தனார் கேட்டுப் பிடவூரில் வெளிப் படுத்தினார் எனச் சேக்கிழார் குறித்துள்ளார்.

அரசபாரம் தாங்க இசைதல்:

கழறிற்றறிவார் நாயனார் புராணத் தில் சேக்கிழார், சேரமான் பெருமாள் நாயனார், தில்லைச் சிற்றம்பலவன் திருவடி களில் கொண்டிருந்த அளப்பரிய ஈடுபாட்டினைக் கற்பார் நெஞ்சம் நிறைய ஒரு அருளற்புத நிகழ்ச்சி வாயிலாக விரித்துரைத்துள்ளார். அஞ்சைக்களத்து ஐயனை வழிபடும் நியமம் உடையவர் சேரமான் பெருமாள் நாயனார். சேர நாடாண்ட செங்கோற்பொறையன் துறவு மேற்கொண்ட பிறகு, முறையால் அமைந்த அரசேற்க இவரை அமைச்சர்கள் அழைத் தனர். அரசபாரம் 'இன்பம் பெருகும் திருத்தொண்டுக்கு, இடையூறுகுமோ' என முதற்கண் அஞ்சிய சேரமான் பெருமாள் நாயனார், இறைவனின் திருவுள்ளக் குறிப்பின்வழி ஒழுகுவேன் எனக் கருதி, அஞ்சைக்களத்து ஐயனிடம் தொழுது விண்ணப்பம் செய்தார். இறைவன் திரு வுள்ளக் குறிப்பின்வழி,

'மேவும் உரிமை அரசளித்தே
விரும்பும் காதல் வழிபாடும்
யாவும் யாரும் கழறினவும்
அறிவும் உணர்வும் சிறில்லாத்
தாவில் விறலும் தண்டாத
கொடையும் படைவா கனமுதலாம்
காவல் மன்னர்க் குரியனவும்
எல்லாம் கைவத் துறப்பெற்றார்

திருநீற்று நெறி போற்றி, எதிர்வந்த வண்ணர் ஒருவரைப் பணிந்து, அவர் மேனி உவர்மண்கண்டு 'திருநீற்றின் வார வேடம் நினைப்பித்தி' எனப் போற்றி வாழ்ந்திருந்தார் சேரமான் பெருமாள் நாயனார்.

சிந்தைத்தெளிவு:

சேரநாட்டுக் கொடுங்கோளூரில் வாழ்ந்திருந்த சேரமான் பெருமாள் நாயனாருக்குத் தில்லைச் சிற்றம்பலவன் திருவடிகளில் அளப்பரிய ஈடுபாடு. மேற்கொண்ட அரசாட்சியின் பயனும், நிறைவான தவமும், ஈட்டத்தக்க பொருளும், பெருந்துணையும், தில்லைச் சிற்றம்பலத்தே ஆடும் பெருமானின் திருவடிகளே என்று கருதும் நெஞ்சம் சேரனாரிடம் நிலைபெற்றிருந்தது.

' நீடும் உரிமைப் பேரரசால்
நிகழும் பயனும் நிறைதவமும்
தேடும் பொருளும் பெருந்துணையும்
தில்லைத் திருச்சிற் றம்பலத்துள்
ஆடுங் கழலே எனத் தெளிந்த
அறிவா லெடுத்த திருப்பாதம்

கூடும் அன்பில் அர்ச்சனைமேற்
கொண்டார் சேரர் குலப்பெருமான்.

எனக் குறிப்பார் சேக்கிழார்.

சிலம்போசை கேட்டல்:

திருவஞ்சைக்களத்தில் புலர்வதன் முன் அலகிட்டு, மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி ஒருமை நெறியின் உணர்வு வர ஒதி, இளமையிற் பயின்ற சேரனூர், தில்லை நடராசப் பெருமானைப் பூஜா மூர்த்தியாகக் கொண்டு நாடோறும் நெறிமுறை வழாது பூசிக்கும் நியமமுடையவராய் வாழ்ந்திருந்தார். நடராசப் பெருமானை அவர் பூசித்த திறத்தைச் சேக்கிழார்,

'வாசத் திருமஞ் சனம்பள்ளித்
தாமஞ் சாந்தம் மணித்தூபம்
தேசிற் பெருகுஞ் செழுத்தீபம்
முதலா யினவுந் திருவமுதும்
ஈசற் கேற்ற பரிசினுல்
அருச்சித் தருள எந்நாளும்
பூசைக் கமர்ந்த பெருங்கூத்தர்
பொற்பார் சிலம்பின் ஒலிஅளித்தார்

என்பர். சேரமான் பெருமாளின் பூசைக்கு மகிழ்ந்து பூசை நிறைவில் நடராசப் பெருமான் தம் திருவடிச்சிலம்போசையினை நாள்தோறும் கேட்பித்து வரலானூர்.

சிலம்போசை தாழ்த்தல்:

பாணபத்திரர்க்கு ஆலாவாய் இறைவன் அனுப்பிய திருமுகம் கொண்டு பரிசளித்துச் சோழ, பாண்டியர்களுடன் இணங்கிச் சேரமான் வாழ்ந்து வரும் நாட்களில் ஒருநாள், ஒரு வியப்பூட்டும் சம்பவம் நிகழ்ந்தது. சேரமான் முறையாகப் பூசைகளை முடித்த ஒருநாளில்

'தேனைக் கலர்ந்த கொன்றை யினூர்
ஆடற் சிலம்பின் ஒலிமுன்போல்
மானப் பூசை முடிவின்கண்
கேளா தொழிய மதிமயங்கி,

'அடியனே என்னோ பிழைத்தது' எனப் பொருமி, உடலோடு இனி உயிர் நாடி நிற்றலால் பெறவாகும் பயன் ஏதுமில்லை எனத் துணிந்து, உடைவாளை உருவித் தம் மார்பில் நாட்டத் துணிந்தார். அது பொருத இறைவன் விரைந்து, திருச் சிலம்பின் ஓசையை பண்டையினும் அதிகமாக இசைப்பித்தருளினூன். கேட்டு மகிழ்ந்து கைகளைத் தலைமேல் கூப்பி, விழுந்து, தொழுதெழுந்த சேரமான் உரிய நேரத்தில் திருச்சிலம்போசையைக் கேட்பியாமை ஏன் என இறைவனை வினவி நின்றூர்.

சுந்தரரை நினைப்பித்தல்:

காரணம் வினவிய சேரனூர்க்குத் தில்லை அம்பலவன்,

'மன்றி னிடைநங் கூத்தாடல்
வந்து வணங்கி வன்தொண்டன்
ஒன்று முணர்வால் நமைப்போற்றி
உரைசேர் பதிகம் பாடுதலால்
நின்று கேட்டு வரத்தாழ்த்தோம்'

என அருளிச் செய்ததோடு, சுந்தரமூர்த்தி சுவாமிகளைச் சேரனூரோடு நட்பாக்கும் நோக்கில், அவரை நினைப்பித்தார். அருளாளராதலின், அரசர் நெஞ்சில் எழுத்தக்க பொருமை சிறிதும் இலராகிய சேரனூர், திருச்சிற்றம்பலவன் அடியவர்க் கருளும் கருணை நினைந்துவியந்தார். இந் நிகழ்ச்சி, தில்லைச்சிற்றம்பலவனை நேரே சென்று கண்டு வணங்கும் விருப்பினோடு, வன்தொண்டராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளையும் காண வேண்டுமென்ற விழைவினைப் பெரிதும் தோற்றியது. உரியவாறு அமைச்சர்களுக்குக் கட்டளை யிட, அவர்கள் செய்த பயண ஏற்பாட்டின் வழி பல தலங்களையும் வணங்கிக் கொண்டு சேரமான் தில்லைநகர் வந்தணைந்தார்.

தில்லைத் தரிசனம்:

நீங்காத அன்புடன் தில்லையின் எல்லை

சார்ந்த சேரனுரைத் தில்லைவாழ் அந்தணர்களும், சைவத் தொண்டர் குழுவும் எதிர் சென்று வரவேற்றனர். சேரனுர் கைகூப்பி அன்னுரை வணங்கி, திருவீதி இறைஞ்சி, தலைமேல் கூப்பிய கைகளோடு எழுநிலைக் கோபுரத்தின்முன் அணைந்தார். சேரனுர் கோபுரத்தின் முன் நிலமிசை வீழ்ந்து வணங்கி, கண்களில் நீர்மல்கத் திருக்கோயில் உட்புகுந்தார். மணிமாளிகை வலங்கொண்டு 'உலகு விளங்கும் திருப்பேரம்பலத்தை' வணங்கி உட்புகுந்த சேரனுர் 'அலகில் அண்டம் அளித்த' சிற்றம்பலத்தின் முன்சென்று ஆடும் இறைவனைப் பணிந்தார்.

'அளவில் இன்பப் பெருங்கூத்தர்
ஆட எத்த கழல்காட்ட –
உளமும் புலமும் ஒருவழிச்சென்
றுருகப் போற்றி புய்ன்றுர்
களனில் விடம்வைத் தளித்த
அமுதன்றி மன்றில் கழல்வைத்து
வளருந் திருக்கூடத் தமுதுலகுக்
களித்த கருணை வழுத்தினுர்'

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வழிபட்டவாறே 'உளமும் புலமும் ஒருவழிச் சென்று உருக' வழிபட்ட திறத்தைச் சேக்கிழார் அழகுற வடித்துக் காட்டுகின்றுர்.

பலகாலும் பணிதல்:

நிறையாத பேராசையுடன், ஆனந்தக் கடலுள் திளைத்த சேரனுர், நடராசப் பெருமானின் திருவருளால், திருப்படிக்கீழ் நின்று சீரார் வண்ணப் பொன் வண்ணத் திருவந்தாதி பாடிப் பரவினர். சேரமானின் தமிழ்ச் சொன்மாலை கேட்டு மகிழ்ந்த சிற்றம்பலவன் அதற்குப் பரிசிலாக,

'செம்பொன் மணிமன்றினி லெடுத்த
செய்ய பாதத் திருச்சிலம்பின்
இம்பர் நீட எழுந்தருளி
தாமும் எதிரே கேட்பித்தார்'

கேட்டு, அளவில் இன்ப ஆனந்தம் கொண்ட சேரனுர் தில்லையிலேயே பலநாள் தங்கி வழிபாடாற்றி மகிழ்ந்திருந்தார். இதனைச் சேக்கிழார்,

'பரவுந் தில்லை வட்டத்துப்
பயில்வார் பைம்பொன் அம்பலத்துள்
அரவும் புனலும் சடையாட
ஆடு வார்கூத் தாராமை
விரவும் காதல் மிக்கோங்க
வேதம் படியும் திருப்படிக்கீழ்
இரவும் பகலும் பணிந்தேத்தி
இன்பம் சிறக்கும் அந்நாளில்'

என எடுத்துரைத்து வரலாற்றைத் தொடர்கிறுர். சேரமான் தில்லையை விட்டுப் புறப்பட்டுத் திருவாரூர் சேரும் நிலைவில் எழுந்தமையைக் குறிக்க வரும் சேக்கிழார் 'அறிவின் எல்லையாய திருத்தில்லை' எனக் கூறிச் சிறப்பிக் கின்றுர். சேக்கிழார் வாக்கில் சேரமானுக்கும் தில்லைக்குமிடையே நிலவிய தொடர்பினைக் கண்ட பிறகு, சேரமான் வாக்கில் தில்லை பெறும் சிறப்புக்களைக் காணல் தகும். அதனை இனிக்காண்போம்.

பொன்வண்ணத்தந்தாதி:

காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதிக்குப் பின்னர்த் தோன்றிய அரிய அந்தாதிகளுள் ஒன்று பொன் வண்ணத்தந்தாதி. சேரமான் பெருமான் நாயனுர் அருளிய இந்நூலும், ஏனைய திருவாரூர் மும்மணிக்கோவை, திருக் கயிலாயஞானவுலா ஆகிய மூன்று நூல் களும் பதினேராம் திருமுறையுள் தொகுக்கப் பெற்றுள்ளன. பொன் வண்ணத் திருவந்தாதியின் முதற்பாடலின் முதற்சீர் 'பொன்வண்ணம்' என்று தொடங்குகின்றது. நூறாவது பாடல் 'கனக மலையருகே போயின காக்கையு மன்றே படைத்தது பொன் வண்ணமே' என மண்டலித்து நிறைகிறது. முதற்பாடலில் அமைந்த முதற்சீரால் இந்நூல் பொன் வண்ணத்தந்தாதி என வழங்கப்பெற்றது. இவ்வாறான வழக்கு வைணவப் பிரபந்தங்

களுள்ளும், பிற்கால நூல்கள் சில வற்றிலும் காணப்படுகின்றது. இந்நூற் பாடல்கள் பலவும், எதுகை, மோனை முதலிய தொடை நயங்களும், நிரல்நிறை முதலிய பொருள் கோள்களும், யமகம் திரிபு முதலிய சொல்லணிகளும் கொண்டனவாக அமைத்துள்ளன.

பெயர்க்காரணம்:

சிவபரம் பொருளைச் 'செம்மேனி எம்மான்' எனச் சான்றோர் குறிப்பர். இறைவன் திருமேனி அழகைப் 'பொன்னுர் மேனி' எனக் குறித்தலும் தேவாரத்துள் காணப்படுவது. பொன்மேனி கொண்டு, தில்லைச் சிற்றம்பலத்தில் ஆனந்த நடன மாடும் அழகைக் கண்டு காமுற்றாள் ஒரு நங்கை. அவள் காமம் ஒருதலைக் காமமாகி நிறைவேறுது போயிற்று. அவளை அடையப் பெருமையால் வாட்டமுற்ற அப்பெண்ணின் மேனியில் பசலை பாய்ந்தது. தம் பண்டை நிறம்மாறிப் பொன்மேனி கொண்டாள். தானும், தன்னுல் காதலிக்கப்பெற்ற தலைவனுகிய சிவபெருமானும் பொன்வண்ணமாகிய ஒரே நிறத்தினைப் பெற்று விளங்கும் உரு வொப்புமையை எண்ணி உளங் குளிர்ந்தாள். அங்ஙனம் உளம் குளிர்ந்த காதல் மகள் ஒருத்தியின் கூற்றாக இவ்வந் தாதியின் முதற் பாடல் அமைகிறது. தேவார ஆசியர்கள் நெறி நின்று இறைவனைத் தலைவனுகவும் அவன் திருவருள் நயந்த உயிரைத் தலை மகளாகவும் கொண்டு பாடிய பாடல்கள் நாற்பதற்கும் மேல் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. தொல்காப்பிய உரைகாரர் இளம்பூரணர் நோக்கில் இத்தகு பாடல்கள் 'கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்' என்ற வகையுள் புறத்துறைப் பாடாண் பாட்டுக்களாகக் கருதத் தக்கன.

நூற்செய்திகள்:

பொன்வண்ணத்தந்தாதியில் தில்லை மட்டுமன்றி வேறு பல தலங்களும் குறிக்கப் பெற்றுள்ளன. திருக்கோவையார் போலப் பாடல் தோறும் தில்லை பற்றிய குறிப்பு இந்நூற்பாடல்களில் இல்லை. அட்டாங்கம் பணிதல், காமரம் பாடுதல் முதலிய பல அரிய செய்திகள் இந்நூலுள் குறிக்கப் பெற்றுள்ளன. பொன் வண்ணத்தந்தா திக்கு அமைந்த சிறப்புப்பாயிரம் ஒன்று இந்நூல் தில்லையில் அருளிச் செய்யப் பெற்றமையை உறுதி செய்கிறது. சேரமான் பெருமாள் நாயனரின் பக்திக் கனியை,

"சிந்தனை செய்ய மனமமைத்தேன் செப்ப
நாவமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத்தேன்
கைதொழ வமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத்தேன்
மெய்யரும்ப வைத்தேன்
வெந்தவெண் ணீறணி யீசற் கிவையான்
விதித்தனவே"

என்ற அழகிய பாடல் எடுத்துக் காட்டு கின்றது.

அரிய குறிப்புக்கள்:

பொன்வண்ணத்தந்தாதியில் சிவ பரம்பொருளைப் போற்றுத உடல் உறுப்புக்கள் பயனிலை என்பதும் (42) சிவபெருமானிடம் அன்புடையார் பெறும் இன்பம், அன்பிலார் எய்தும் துன்பம் (12), பிறர் மனைக் கடை சென்று கையேந்தாமைக்குரிய வழி (13) சஞ்சலம் நீங்க வாயில் (10) உலகினர்க்குக் கூறும் அறிவுரை (70) இறைவனது திருவருட் சக்தியே திருமால் என்பது (6) மாதொரு பாகனைத் திகழும் திருக்கோல அழகு (65) சிவபரம் பொருள் முத்தொழிலும் இயற்றும் திறம் (95) முதலிய பல அரிய குறிப்புக்களைக் காணமுடிகிறது. இவை யின்றிச் சேரமான் அருளிய ஏனைய இரு நூல்களிலும் தில்லைச் சிற்றம்பலம் பற்றியும் நடராசப் பெருமானின் திருநடம்பற்றியும் சிறு சிறு குறிப்புக்கள் சில உண்டு.

நிறைவுரை:

இங்ஙனம், சேரமான் பெருமாள் நாயனார் தில்லைச் சிற்றம்பலவன் திருவடிகளில் கொண்டிருந்த அளப்பரிய ஈடுபாட்டையும், பக்தியையும் விரிவாகத் திருத்தொண்டர் புராணமும், குறிப்பாகச் சேரமான் அருளிய நூல்களும் எடுத்துரைக்கின்றன. தில்லைச் சிற்றம்பலத்தில் ஆடவல்ல பெருமான் பல நூறு கல் தொலைவில் வாழ்ந்திருந்த சேரமானுக்குச் சிலம்போசை காட்டி ஆட்கொண்டதும், ஓர் அற்புதத்தால், மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திட, தீதிலாத் திருத் தொண்டத்தொகை அருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு இவரை நட்பாக்கி, அவர் திருவருளால் கயிலாயம் சேரச் செய்ததும் நினைந்து நினைந்து இன்புறத்தக்க அருளிப் பாடுகளாக நெஞ்சில் நிறைகின்றன. □

WITH BEST COMPLIMENTS FROM

SAYAJI IRON & ENGINEERING CO. PVT. LTD.,

24 A, MOWBRAYS 1 CROSS STREET. TELEX: 040-7177

SRI RAM NAGAR, ALWARPET PHONE 452159

MADRAS—18. CABLE: SAYAJIMS

எடுத்துச்சுமப்பான்

வித்துவான் அம்பை. இரா. சங்கரன்,
பேரகராதித்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 005.

மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய திருவாசகப் பாடல்கள் அனைத்தும் கருங்கல் மனத்தையும் கசிந்துருகச் செய்பவை. அவற்றுள்ளும் 'குழைத்த பத்து' பெயருக்கு ஏற்பவே அமைந்து மிகவும் தலையிடத்தைப் பெறும் தன்மையானது. சுவாமிகள் சரியை, கிரியை, யோக நெறிகளைக் கடந்து இறுதியில் இறைவனிடம் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டார்கள் குருந்தமரத்து அடியில் மானிடச்சட்டைதாங்கி எழுந்தருளிவந்து சுவாமிகளை இறைவன் ஆட் கொண்ட திறத்தினை,

"அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் எனை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ
இன்றேர் இடையூறு எனக்குண்டோ? எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானே இதற்கு நாயகமே" (33-7)

என்று கூறியதற் கேற்பத் தனக்கென ஒரு செயலுமின்றி எல்லாவற்றையும் அவனிடமே ஒப்புவித்து விட்டார்கள். இந் நிலையில் தான் அவர்கள்,

"'வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே" (33-6)
"– – – என்னதோ இங்கு அதிகாரம் காயத்திடுவாய் உன்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே" (33-8)

எனப்பலவகையாகப் பெருமானைப் பாடிப் போற்றிச் சரணடைந்தார்கள்.

ஓர்அடியார் எப்பொழுது தமக் கென்று ஒருவித செயலும் இன்றி எல்லாம் இறைவனிடம் ஒப்படைத்துவிட்டாரோ அவ்வமயமே அவரைக் காக்கும் பொறுப்பு இறைவனைச்சாரும். அவன் அக்கணத்திலிருந்து அவ்வடியாரைப்பற்றிய முழுப் பொறுப்பையும் தானே எடுத்துக் கொள்வான். அவ்வாறு எல்லாச் செயல்களையும் துறந்து ஈசன்பால் அடைக்கலம் புகுந்த பெருமக்களே கண்ணப்ப நாயனார், சிறுத்தொண்டநாயனார் முதலிய ஞானிகளாவர். இவர்கள் மேற் கொண்டசெயல்கள் யாவும் இறைவன் சிந்தையாகவே கொண்டு விளங்கின. உலகியலுக்குத் தீமை போலச் சில தோன்றினும் இறைவன் பார்வையிலோ ஞானிகளின் நோக்கிலோ அவை தீமையாகக் கருதப்படமாட்டா. அதனாற்றான் கண்ணப்பர், பெருமானுக்கு ஊனமுதை நிவேதனமாகக் கொடுத்தல், எச்சில் நீரை அபிடேகித்தல், செருப்புக்காலால் தீண்டல் போன்ற செயல்களை ஆற்றிய போதும் குற்றமெனக்கருதாது ஏற்றுக் கொண்டதோடு பெருமான் அருளும் செய்தார்.

இதனைச் சிவகோசாரியார்க்குக் கண்ணப்பரின் அன்பின் திறத்தை அறிவிக்குமுகத்தான் பெருமான் அருளிச்

செய்ததாகக் கூறும் பெரிய புராணப் பாடல் தெற்றென விளக்கும்.

அவனுடைய வடிவு எல்லாம் நம்பக்கல்
அன்பு என்றும்
அவனுடைய அறிவு எல்லாம் நமை
அறியும் அறிவு என்றும்
அவனுடைய செயல் எல்லாம் நமக்கு
இனியவாம் என்றும்
அவனுடைய நிலை இவ்வாறு அறி நீ என்று
அருள் செய்வார் (10-157)

என்னும் இதலிருந்து இறைவன் கண்ணப்பரை ஆட்கொண்டதிறம்பற்றித் தெரியலாம். அதனுல் தன்னைப் பற்றிய எண்ணம் சிறிதும் அற்று இறைவன் எண்ணத்திலேயே கண்ணப்பர் சிந்தை அழுந்தியிருந்ததால் அவரைப்பற்றிய எல்லாப் பொறுப்பையும் எடுத்துச் சுமக்கும் பணி இறைவனுக்குச் சேர்ந்து விட்டது.

கண்ணப்பரை போன்றே கண்டே சுரரும் தன்னைப்பற்றிய நினைவு இன்றி, சித்தத்தைச் சிவன்பாலே வைத்து வழி பாடாற்றினர். அவ்வமயம் அவர்தந்தை பாலை வீணுக்குவதாக நினைத்து,

"– – – விரைந்து இழிந்து கடிது சென்று
கைத்தண்டு
கொண்டு மகனர் திருமுதுகிற் புடைத்துக்
கொடிதாம் மொழிகூறத்
தொண்டுபுரியும் சிறிய பெருந்
தோன்றலார் தம்பெருமான் மேல்
மண்டு காதலர்ச்சனையின் வைத்தார்
மற்றொன் றறிந்திலரால் (20-49)

ஒரு செயலுக்கும் மகன் சலியாதிருப் பதனைக் கண்டு திருமஞ்சனப்பாற் குடத்தைக் காலால் தந்தை இடறவே அருகிலிருந்த ஒரு கோலெடுத்து வீச, அதுவே வாளாகத் தந்தையின் காலைத் துணித்தது. இதிலிருந்து தன் அடியவரின் திருப்பணிக்கு ஊறு செய்தவனைத் தண்டிக்கும் பொறுப்பு இறைவனுடைய தாய் ஆயிற்றுதலின் கோலையும் மழுவாகச் செய்தான். சண்டேசுரருக்கு நேர்ந்த இடையூற்றினைத்தனக்கு நேர்ந்ததாகக் கருதித்தந்தையின் கால் அற்றுவிழச் செய்தான். சண்டேசுரர் தம் திருகரணங் களையும் அவனிடத்து ஒப்புவித்துவிட்டா ராதலின் அவரை எடுத்துச் சுமக்கும் ஆட்கொள்ளும் பொறுப்பு பெருமானுக்கு ஆகிவிட்டது.

திருநாவுக்கரசு சுவாமிகள் கயிலையைக் காணுதற்காக வட நாடு நோக்கிச் சென்றார். அவர் சென்ற நிலையைப் பெரிய புராணம் மிக விரிவாய்க் கூறுகின்றது. சாகமூல பலங்கள் துய்ப்பனவும் தவிர்ந்தார். தேவரும் செல்ல முடியாப்பாலை வனத்தையும் கடந்து சென்றார். தாள் பரட்டளவும் பசைத்தசை தேய்ந்தும் சிறிதும் சுவலை கொள்ளாது நடந்து சென்றார். தம் கரங்களிரண்டும் கொண்டு தாவியே சென்றார். பின்னர் மார்பினுல் உந்திச் சென்றராம். இறுதியாகப் புரண்டு புரண்டு சென்றுளார் என்று சேக்கிழார் பெருமான் கூறுகிறார். ஒன்றும் முடியாத நிலையில்,

"முயற்சியும் தப்புறச் செயலின்றி
அந்நெறி தங்கினார் தமிழாளியார்" (21-360)

அவ்வமயம் இறைவன் ஒரு முனிவர் உருக்கொண்டு திருநாவுக்கரசர் எதிரே தோன்றினர் இந்தக் கொடிய காட்டு வழியில் வரக் காரணம் யாது என்று கேட்டார். அப்பரடிகள் "கயிலையைக் கண்டு கும்பிடவரும் பெருங் காதலின் அடைந்தேன்" என்று விடை கூறினர். "கயிலைமால் வரையைப் பார்ப்பது மானுடற்கு எளிதோ? திரும்பிச் செல் வதே நன்று" என அம்முனிவர் அறிவு றுத்தார். அச் சமயம் நாவுக்கரசர் பெருமான் கொண்டிருந்த உறைப்பான எண்ணம் மனங்கொளத்தக்கது.

"ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை
கண்டல்லால்

மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்''
என மறுத்தார் (21-366)

எப்பொழுது உடற்பாசம் அற்று விட்டதோ, அவனையே பற்றுக் கோடாக ஏற்கும் சிந்தை வந்ததோ அந்தநிலையினைத் தான் இறைவன் எதிர்பார்க்கிறான். அந்நிலையை அப்பரடிகள் அடைந்ததும் இறைவன் உடனே அருள் செய்தார்.

''ஓங்கு நாவுக்கரசனே எழுந்திரு'' என்று அருளியதோடு **உண்மையுருக் காட்டி''** அருகிலுள்ள பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் எழுந்து கயிலைக் காட்சியைக் காண்பாயாக '' என்றருளிச் செய்தான். அதன்படியே **கண்டு அப்பர் இன்புற்றார் என்பதைத் திருநாவுக்கரசர் வரலாற்றிலிருந்து** அறியலாம். ஆகவே தன் செயலற்று எல்லாம் அவன் நினைவாக மாறியபோது எடுத்துச் சுமப்பான் பெருமானை இருப்பதை நன்கு தெளியலாம்.

சிறுத் தொண்ட நாயனாரும் அவர் மனைவியாரும் அடியார் அமுதூட்டலையே சிறந்த அறம் எனக் கருதிவந்தனர். அதற் காகப் பிள்ளைப் பாசத்தைத் துறந்தனர். **இறை எண்ணமே முனைந்திருந்தது. அவ்வெண்ணத்திற்கு முன்னர்** நம் குழந்தையாயிற்றே, நாமே அறுக்கப் போகிறோமே என்ற எண்ணங்கள் எவையும் குறுக்கிடவில்லை. எல்லாம் சிவன் செயல் எனவே மனத்தில் யாதொரு சலனமும் இன்றி ஆற்றவேண்டிய செயல் களைப் புரிந்தனர். இப்பகுதியிலுள்ள **பெரியபுராணப் பாடல்களைப் படித்துப்** பார்க்கின் நம் நெஞ்சம் நெக்குருகும் இருப்பினும் அடியார் அமுதுண்ண வேண்டும் என்ற கொள்கை முனைந்திருந் தாதலின் மற்ற எண்ணங்கள் சிறிதும் அவர்களுக்கு மோதவில்லை. சிறுத் தொண்டர், அவர்மனைவியார், அவர்வீட்டி லுள்ள பணிப்பெண் ஆகிய மூவரும் ஒத்தநிலையினராய் இருத்தல் அருமை யினும் அருமை. எப்பொழுதெல்லாம் **அவன் செயல் என்று அவன் திருவடித் துணைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்களோ** அப்பொழுதே யாவரே யாயினும் அவர்களை ஆட்கொள்ளும் பாரத்தைப் பெருமான் தானே ஏற்றுக் கொள்கிறான். இந்நிலையில் இறந்த குழந்தையை எழுப்பல், சிறுத்தொண்டர், அவர்மனைவி, பணிப்பெண், சீராளன் ஆகிய நால்வருக்கும் அருள் பாலித்தல் முதலிய செயல்களை இறைவன் புரிகின்றான்.

மேற்கூறிய இந்நால்வர் வரலாற்றுச் சான்றுகளிலிருந்தும் தெரிய வேண்டுவது யாது எனில் நாம் அன்றாடம் செய்யும் செயல்கள் யாவும் எல்லாம் அவன் திருவருள்வழி நடக்கின்றன என்று உறுதியாய்க் கொள்ள வேண்டும். நாம் தான் செய்தோம், நம்மால்தான் இச் செயல்கள் நிகழ்ந்தன என்ற ஆணவ முனைப்பு அறவே இருக்கக்கூடாது. அப்படி நம் பொறுப்பை எல்லாம் அவனிடம் ஒப்ப டைத்து விட்டு அவனால் ஆட்டப் படும் ஒரு கருவியாக நம்மை நினைத்துக் கொண்டு செயற் படுவோமேயானால் இறைவன் அத்தகைய அன்பர்களைக் கூட்டாயம் ஆட்கொள்வான்.' அவர்களுக்கு ஏற்படும் நன்மை தீமைகளை யெல்லாம் தானே ஏற்றுக் கொண்டு சுமப்பான். **இதனையே** நம் மெய்கண்டசாத்திரம் பதினான்களுள் ஒன்றான திருவருட்பயனில் ''உயிர் விளக்கம்'' என்னும் பகுதியில் ஐந்தாம் குறள், ''கிடைக்கத் தகுமே நற் **கேண்மை யார்க் கல்லால் எடுத்துச் சுமப்** பானை இன்று'' எனக் கூறுகிறது.

உயிர்கள் வினைகளைச் செய்கின்றன. அவற்றுள் சிலவற்றை இப்பிறவிலேயே நுகர்கின்றன. அதற்குப் பிராரத்தம் என்பர். மறுபிறவிக்கு அனுபவிப்பதற் காகச் சேர்த்து வைக்கும் வினைக்குச் சஞ்சிதம் என்பது பெயர். இப்பிறவி லேயே மேலும் ஈட்டும் வினைக்கு ஆகாமியம் என்று கூறுவர். வினை

இருப்பது வரை பிறவி ஓயாது. வினை யற்ருல் பிறவி ஓயும். அப்போதுதான் அவன் திருவடிக்காளாகும் நிலைகிட்டும். அவ்வாறு ஆளாகும் நிலையை அடைவது எப்படி? அதற்குத்தான் எல்லாம் அவன் செயலாலே நடக்கிறது என்ற எண்ணம் கொண்டு தன் முனைப்பற்று எச்செயலிலும் ஈடுபடவேண்டும். நான் செய்கிறேன் என்ற முனைப்பின்றி அவன் செயலே உள்ளிருந்தூக்க ஒரு கருவியாக இருந்து உயிர் தொழிற்படுன்றது என்ற அழுந்திய எண்ணமிருக்கன் ஆகாமிய வினை ஏருது. அவ்வாறு தான் கண்ணப்பர், சண்டேசுரர் முதலியோர் பத்தி நெறியில் திளைத்தனர். இதனையே,

''இவன் உலகில் இதம் அகிதம் செய்த
எல்லாம்
இதம் அகிதம் இவனுக்குச் செய்தார்
பால் இசையும்
அவன் இவனுய் நின்றமுறை ஏகனுகி
அரன்பணியில் நின்றிடவும் அகலும்
குற்றம்
சிவனும் இவன் செய்தி எல்லாம்
என் செய்தி என்றும்
செய்தது எனக்கு இவனுக்குச்
செய்தது என்றும்
பவம் அகல உடனுகி நின்று கொள்வன்
பரிவால்
பாதகத்தைச் செய்திடினும் பணி
ஆக்கி விடுமே''
(சித்தியார் 304)

என்னும் சிவஞான சித்தியார் செய்யுள் விளக்கிக்கூறுகிறது. மேலும் இந்நூலே,
''யான்செய்தேன் பிறர் செய்தார் என்னது
யான் என்னும்
இக்கோணை, ஞான எரியால்
வெதுப்பி நிமிர்த்துத்
தான் செவ்வே நின்றிட அத்தத்துவன்
தான் நேரே
தனை அளித்து முன்னிற்கும் வினை
ஒளித்திட்டு ஓடும்''.
(சித்தியார் 305)

என்றும் வினை ஒளித்திட்டு ஓடும் வித்தினையும் கூறுகிறது. பிராரத்துவ வினையும் ஆகாமியவினையும் இல்லையாகி விடும் என்பதை இவ்வருட்பாடல் தெரி விக்கின்றது. சஞ்சிதவினை குருவருளால் **தீயினில் தூசாகும் என்று அறிஞர்** கூறுவர். உயிர்களுக்குப் பாரமாய இவ் வினைகளை இல்லாமல் செய்து அவ்வடி யார்களை எடுத்து ச் சுமக்கும் செயலை இறைவன் ஏற்றுக் கொள்வான்.

ஒருவன் ஒரு கடும்பாரத்தைச் சுமந்து சென்ருல் மற்றவர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்களேதவிர துணைக்கு வர மாட்டார்கள். நண்பர்களோவெனில் துணையாகச் சிறிதுதூரம் எடுத்துச் சென்றபின் அவனிடம் திருப்பிக் கொடுத்துவிட்டுத் தம் வழியே செல்வர். நல்ல நண்பர்களோவெனில் இவ்வாறு இடைவெளியில் விட்டு விடாது அச் சுமையைத் தாம் தாங்கிச் சென்று அவன் துன்பம் அகற்றி அவன் செல்லும் இடம் வரை சென்று கொண்டுபோய்க் கொடுத்து மீள்வர். அதனுல் தான் ''நற்கேண்மை யருக்கல்லால்'' என்று திருவருட்பயன் ஆசிரியர் கூறுகிறார். இது இகலோக உலகியல் வாழ்க்கைக்காகும். ஆனுல் திருவருட்பயனில் எடுத்துச் சுமப்பான் என்று ஆசிரியர் கூறுவது, உலகியல் நண்பர்போன்றவரைக் குறிக்காது அல்லும் பகலும் அனவரதமும் உயிரைத் துன்பப்பிடிப்பிலிருந்து நீக்கி இன்பத்தி விழுந்தியிருக்கச் செய்யவல்லவன் அவன். அவனே நிரந்தரத்துணையாவான். அவன் துணையாதற்கு அவன் திருவருள் நம்மை நடாத்திச் செல்லும் அத்திருவருளையே இங்கு ''நற்கேண்மையர்'' என்று ஆசிரியர் கூறுகிறார். துன்பம் மாத்திரம் அல்லாது இன்பதுன்பங்களை அவன் தனதாக்கிக் கொள்கின்றன். உயிர் இன்பதுன்பங் களிரண்டிலும் அவைபற்றி மகிழ்ச்சியோ வருந்தமோ கொள்ளாது, அவனருளே கண்ணுகக் கொண்டிருக்கும். இந்நிலை சாதாரண மக்களுக்கு வாய்க்காது.

சரியை, கிரியை, யோகநெறிகடந்து ஞானப்படியில் அடியெடுத்து வைப்ப வர்க்கே இந்நிலை பொருந்தும் எனச் சாத்திரங்கள் கூறுகின்றன.

சரியை, கிரியை, யோகநிலைகளில் நாம் எப்போது முதிர்வது? ஞான நெறியில் நிற்போர்க்கன்றே அவனருள் கிட்டும் ஆகவே இவ்வுபதேசம் கவைக்கு தவாது என்று யாரும் கருதவேண்டா. உண்மை உணர்ந்து உயிர் உய்திபெற முன்னேக்கிச் சென்று கொண்டேயிருக்க வேண்டும். முயற்சிக்குத் தக்கவாறு அவனருள் அவ்வப்போது கைகொடுத்துதவும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

உலகத்து மக்கள் தற்போது படும் துன்பங்களுள் மிக அடிப்படையானது மனக்கவலையேயாகும். அதற்கு என்னென்னவோ மேலை நாட்டு மருத்துவம் முதலியன செய்தும் பயனற்றுத் துன்புறுகின்றனர். நம் ஆன்றோர் அத்தகைய கவலை நெருங்காத நிலையில் இப் பத்தி நெறியை வளர்த்து வந்தனர். அதை நாம் படிப்படியாய் மறந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அந்நிலையிலிருந்து மீண்டும் நம் அருளாளர்கள் அறிவுறுத்திய அமுத மொழிகளை மனத்துட்கொண்டு பத்தி வலையிலீடுபட வேண்டும். "இருசுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே" என்ற வீரம் இருக்க வேண்டும். அவ்வுறுதி பெறத்தக்க வாய்ப்பு இருந்தால், தானே அவ்வீரம் நம்மிடம் வந்து சேரும். அவ்வாய்ப்பால் அவன் திருவருளையே அடைக்கலமாகக் கொள்ளும் நிலை வந்து சேரும். எவ்வளவு சுற்றிச் சுற்றி வந்தாலும் அவன் திருவடியைத்தவிர உயிர் உய்திபெற வேறு வழியில்லை.

திருநாவுக்கரசு சுவாமிகள் தில்லைக்கு வந்தார்கள். நடராசப் பெருமானைத் தரிசித்தார்கள். இசையமுதைவாரி வழங்கினார்கள்.

"ஒன்றியிருந்து நினைமின்கள் உத்தமக்கு
ஊனமில்லை" (தேவா 4-81-2)

என உயிரின் நலம் கருதி அருள் கூர்ந்து அறவுரை பகர்ந்தார்கள்.

"----தொழுது வணங்கித்
தூநீறணிந்துன் அடைக்கலம் கண்டாய்
அணிதில்லைச்சிற்றம் பலத்து அரனே"
(தேவா 4-81-8)

என்று திருகரணசுத்தியுடன் அவன் திருவடியிலேயே அடைக்கலம் புகுந்தார்கள். நாமும் அடைக்கலம் புகுவோம். பெருமான் நம்மை எடுத்துச் சுமக்க ஆயத்த மாயிருக்கிறான். நாம் தான் நெருங்காமலிருக்கிறோம்.

சாட எடுத்தது தக்கன்தன் வேள்வியில்
சந்திரனீ
வீட எடுத்தது காலனை நாரணன் நான்
முகனும்
தேட எடுத்தது தில்லையுட் சிற்றம் பலத்து
நட்டம்
ஆட எடுத்திட்ட பாதம் அன்றே நம்மை
ஆட்கொண்டதே (தேவா 4-81-10)

என்பது அப்பர் பெருமான் அருள்வாக்கு. அதை மனத்திருத்தி அவன் குஞ்சித சரணத்தில் அடைக்கலம் புகுவோமாக. அவன் கல்லாத புல்லறிவில் கடைப்பட்ட நம்மையும் எடுத்துச் சுமப்பான் என்பதில் ஐயமில்லை. இவ்வுண்மையை மனத்துட் கொண்டு அவனை வழிபட்டு நற்பேறடைவோமாக. அதற்கு அவன் திருவருளும் உறுதுணை செய்வதாக.

வாழ்க உலகெலாம். □

ஆதி பரன்ஆட அங்கைக் கவலாட ஏதஞ் சடையாட உன்மத்த மூர்குடப் பாதி மதியாடப் பாரண்ட மீதாட நாதமோ டாடினான் நாதாந்த நட்டமே திருமந்திரம்	கூத்தன் கலத்திலும் கோல்வளை யாளொடும் கூத்தன் கலத்திலும் கோதிலா ஆனந்தம் கூத்தன் கலத்திலும் கோதிலா ஞானத்துக் கூத்தனும் கூத்தியும் கூத்தின் மேலே. திருமந்திரம்

சிதம்பரமும் குமர குருபரரும்

மு. சிதம்பரராசன் எம். ஏ.,
தமிழ்ப் பேராசிரியர், அரசு கலைக்கல்லூரி,
சிதம்பரம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய தில்லைக்கூத்தன். 'திருவருளால் கருவிலே அருள் உடையவராகக் குமரகுருபரர் கி. பி. 17 ஆம் நூற்றாண்டில் அவதரித்தார். பிறப்பிலே ஊமையாகிய இவர் ஐந்தாவது ஆண்டிலேயே செந்திலாண்டவன் திருவருளால் ஊமை நீங்கிக் கந்தர்கலி வெண்பாப்பாடித் திருவருட் புலமைச் செல்வராயினர். திருவருள் துணையால் தமிழ் இலக்கண இலக்கியங்களையும், ஞான சாத்திரங்களையும் கற்றுத் தேர்ந்தார் பத்தி, ஞான, உறைப்பினால் பல தலங்களுக்குஞ் சென்று, சிவ தரிசனம் செய்தார். திருக்சயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தில் குருமூர்த்தியாக விளங்கிய அருள் திரு. மாசிலாமணி தேசிகரிடம் துறவு நிலை அருள வேண்டி நிற்க, அவர் காசியாத்திரை முடித்து வருமாறு ஆணையிட்டார். குமரகுருபரரோ, காசியாத்திரை சென்று வருவதில் நெடுங்காலம் செல்லுமே என்று வருந்திக் கூறக் கேட்ட மாசிலாமணி தேசிகர் சில காலம் சிதம்பரத்தில் தங்கி வழிபாடு செய்து வருக எனப் பணித்தார். ஞானசிரியரின் கட்டளைப்படி சிதம்பரத்தில் சில காலம் தங்கி, சபாநாயகர் வழிபாடு ஆற்றி, சிதம்பரம் மும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை என்ற இரு நூல்களையும் பாடியருளினர். தில்லைச் சிவகாமியம்மை இரட்டை மணிமாலை என்ற நூல் இவரால் பாடப் பட்டது என்பர். இதற்கு ஆதாரம் கிடைக்க வில்லை. குமரகுருபரர் தம் ஞானசிரியர் அருளால் துறவு பெற்று, "பிரபந்த வேந்தர்" எனச் சிறப்பித்துக் கூறும் அளவிற்குப் பத்திற்குமேல் சிறந்த பல பனுவல்களைப் பாடியருளியுள்ளார்.

சிதம்பரம் மும்மணிக்கோவை

இந்நூல் மூன்று வேறு மணிகளாலாய மாலையைப் போல ஆசிரியப்பா, வெண்பா, கலித்துறை, என்பன அந்தாதியாக அமைய முப்பது செய்யுட்களால், பாடப் பெற்றுளது. இந்நூலின்கண், தில்லைக்கூத்தனின் ஆடல்திறம், அன்னையின் அருள்திறம், செல்வம், வறுமை, போன்ற சொற்களின் விளக்கம், தரிசனப் பயன், சித்தாந்தக் கருத்துக்கு வேண்டுகோள் முதலியன விரிவாகவும், நயமாகவும் பேசப் பெறுகின்றன.

அத்தனின் ஆடல் திறன்:—

ஓங்கார வடிவாய் ஆடும் பெருமானின் உடுக்கை தாங்கிய திருக்கரம் படைத்தலையும் மார்புடன் அமைந்த அபயக்கரம் காத்தலையும், அழல் ஏந்திய கரம் அழித்தலையும், ஊன்றிய திருவடி மறைத்தலையும் தூக்கிய திருவடி அருளலையும் விளக்கு முகத்தான் அமைந்துள்ளன.

"பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாமநீர் வரைப்பி னுலில வளாகமும்

ஏனைப் புவனமு மெண்ணீங் குயிரும்
தானே வகுத்ததுன் தமருகக் கரமே
தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
அனைத்தையுங் காப்பதுன் னமைத்த
பொற்கரமே
தோற்றுபு நின்றவத் தொல்லுல கடங்கலும்
மாற்றுவ தாரழல் வைத்ததோர் கரமே
ஈட்டிய வினைப்பய னெவற்றையு மறைத்து
நின்
றூட்டுவ தாகுநின் னூன்றிய பதமே
அடுத்தவின் னுயிர்கட் களவல்பே ரின்பம்
கொடுப்பது முதல்வதின் குஞ்சித பதமே"
(2-1-12)

இவ்வரிகள் திருவதிகை மனவாசகஞ் கடந்தாரின் கீழ்வரும் உண்மை விளக்கப் பாடலுக்கு விளக்கமாய் அமைந்துள்ளன எனலாம்.

"தோற்றந் துடியதனில் தோயுந் திதி
யமைப்பில்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம் –
ஊன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமூத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு".

அன்னையின் அருள்திறம்:–

குழந்தையின் குடர், மருந்தைச் சிரணிக்கும் ஆற்றல் அற்றது எனத் தாய் தான் உண்டு, அதன் பயனைப் பாலின் வழியே அக்குழந்தை பெறுமாறு செய்வது போல, தில்லைக் கூத்தன் திருநடனத்தை அம்மை தான் தரிசித்து, அதன் பயனை உயிர்கள் எல்லாம் நுகர வைக்கின்றாளாம். என்னே! பெருமாட்டியின் கருணை!

புதுப்பொருள் காணும் திறம்:–

செல்வம், நல்குரவு ஆகிய இரு சொற்கட்கும் புதுப் பொருள் காணும் பாங்கு நயம் மிக்கதாய் அமைந்துள்ளது. அரசன் ஒருவன் தன்னின் மிக்க செல்வ முடைய பேரரசனைக் கண்டு பொறுமை கொண்டு, பெரு மூச்சுற்று, கவன்று அழிகிறான். அன்றுடம் விறகுவெட்டி விற்று வாழும் தொழிலாளி ஒருவன், கிடைத்த பொருளைக் கொண்டு, மனைவி மக்களுடன் மகிழ்வுடன் வாழ்கிறான். இந்நிலைமைகளைக் கருத்திற் கொண்டு தனக்கு கிடத்ததை வைத்துக் கொண்டு மனநிறைவுடன் வாழ்பவனே செல்வன் எனவும் எத்துணைச் செல்வம் இருப் பினும், மேலும் மேலும் வேண்டும் என்று பொறுமையும், ஆசையும் கொண்டு வாழ்பவனே வறியவன் எனவும் புதுப் பொருள் காணும் திறம் போற்றற் குரியதாகும்.

"செல்வம் என்பது சிந்தையி னிறைவே
அல்கா நல்குர வவா வெனப் படுமே"
(26-20-21)

தரிசனப்பயன் கூறும் திறம்:–

சிதம்பரம் தரிசிக்க முத்தி தரும் தலம் என்பதனைத் தம் பாடல்களில் பல இடங்களில் குறிப்பிடுகிறார் குமரகுரு பரர். ஒருமுறை தரிசித்தாலே பரகதி கிட்டுமாம்.

"சிற்றுயிர்க் கிரங்கும் பெரும்பற்றப் புலியூர்
உற்றநின் திருக்கூத் தொருகா லுரைக்கிப்
பரகதி பெறுவான் றிருமுன் பெய்த"
(2-69-71)

"கூடுங் கதியொருகாற் கும்பிட்டாற்
போதுமென
(30-1)

தவத்தவர் பலவாறு முயன்று வீடு பெற்றனர். ஆனால் யாரே சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய எந்நெறிக்கண்ணும் செல்லாது தரிசிப் பால் மட்டுமே இறவா இன்பம் பெற்றேன் எனப் பணிவுடன் பாடுகிறார்.

"– – – – – – – யானே
சரியையிற் சரியாது கிரியையிற் றளரா
தியோகத் துணங்கர தொண்பொருள்
தூக்காது
வறிதே நின்றிரு மன்ற நோக்கிப்
பிறவா நன்னெறி பெற்றன னன்றே"
(5-6-10)

தத்துவக் கருத்து அமையப்பாடும் திறம்:–

சிற்றம்பலவன் அடியார்க்கு எளியனுய் இருப்பது மட்டுமல்லாது அவனே ஆன்மாக்கட்கு எதனேயும் உணர்த்துபவன். அவன் உணர்த்தவில்லே யாயின் ஆன்மா எதனேயும் உணர்தல் அரிது. இதனைச் ''சிவஞானபோதம்'', ''உணர்த்த உணர் தலின் மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா'' எனப் பேசுகிறது. இதனைக் குமரகுருபரர்,

''திங்களங் கண்ணித் தில்லேவாண
அன்பருக் கெளியை யாதலனேய
நின்பெருந் தன்மை நீயே இரங்கி
உண்ணின் றுணர்த்த வுணரி னல்லதை''
(17-11-14)

என்ற வரிகளில் எளிமையாகப் பாடி யுள்ளதை அறியலாம். இது போன்று பல பாடல்கள் சைவசித்தாந்த நுண்பொருள் கூளை எளிமையான முறையில் விளக்க மாகப் பாடியுள்ளமையை அனேவரும் கற் றுணர்வது இன்றியமையாததாகும்.

வேண்டும் திறம்:–

முத்தியை அளிப்பது மெருமானுடைய திருவடிகளே ஆதலின், அத்திருவடிகளை வேண்டி பல இடங்களில் பாடுகிறார்.

''உடனிங் களவு முதவிக் கடவுணின்
பெரும்பத மன்றியான் பிறிதொன்
நிரந்தனன் வேண்டினுமீந்திடா ததுவே''
(8-35-37)

நாமும் திருவடி போற்றி, திருவருள் பெறுவது கடமை யல்லவோ.

சிதம்பரச் செய்யுட் கோவை

இந்நூல் யாப்பிலணக்கத்தில் கூறப் பெறும் பாக்கள் பாவினங்கள் அனேத் திற்கும் இலக்கியமாய் அமைந்துள்ளது. யாப்பிலக்கண நூல்களில் காட்டப்பெறும் எடுத்துக்காட்டுக்களில் யாப்பிலக்கண அமைதி காண முடியுமே தவிர, இந்நூல் போல சொற்சுவை, பொருட்சுவை காணுதல் என்பது அரிது. இந்நூற்கண், தலம், மூர்த்தி, தீர்த்தம், ஆகியவற்றின் சிறப்புக்களேயும், தரிசனப்பயனேயும், கற்பனே மேலோங்கிய நயமான பாடல் களேயும் காணலாம். யாப்பிலக்கணத் திற்கு இலக்கியமாக அமைந்ததோடு மட்டு மன்றி, பிறவாநெறி பயக்கும் நூலாகவும் நிகழ்கின்றமை குறிப்பிடத்தக்கதாம்.

ஒரே பாடலில் தீர்த்தம், தலம், மூர்த்தி மூன்றின் சிறப்பையும் செறி வாகவும் நுட்பமாகவும் பாடியுள்ளார்.

''தீர்த்த மென்பது சிவகங்கையே
ஏத்த ருந்தல மெழிற் புலியூரே
மூர்த்தியம் பலக் கூத்தனதருவே''
(45)

சிதம்பர தரிசனம் செய்வார்க்கு இயமனுல் இடையூறு ஒருகாலும் வாராது என்றும் அவன் உயிர் கொள்ள வரும் போது தில்லேக்கூத்தன் 'அஞ்சேல்' என அருள் வார்த்தை கூறி அருள்பாலிப்பான் என்றும் கூறுகிறார். மற்றேறு பாடலில் தில்லேயின் எல்லேயை அடைந்தாலே இயமனுல் ஏற்படும் பயம் இல்லே என்பதனே,

''கூகா வென்று குரைப்பதல் லாற்சமன்
வாவா வென்னின் வரேமென வல்லீரே
செல்வீ ரேலது செய்யவும் வல்லீரே''
(75)

என்ற பாடல் மூலம் மிகச் சாதுரியமாகப் பாடியுள்ளார்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினுல்
ஒன்று காதலித் துள்ளமும் ஒங்கிட
மன்று ளார்அடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம். —பெரியபுராணம்

உமையொருபாகனுக இருக்கும் பெருமானே, 'ஒருவன்' என்பேனு? 'ஒருத்தி' என்பேனே? எப்படிப் பாடுவேன்? என்ற வினுக்களே எழுப்பி சமத் காரமாக விடையளிக்கும் புலமை தான் என்னே. 'ஒருவர் என்ற இருபாற்கும் பொதுச்சொல் இல்லாமலிருப்பின் என் சொல்லிப் பாடுவேன் என வருந்திப் பாடுகிறூர்.

"ஒருவனுக்கு மொருத்திக்கு முருவொன் றுலவ்
வுருவையிஃதொருத்த னென்கோ
வொருத்தி யென்கோ
இருவருக்கு முரித்தாக வொருவ ரென்
றேர்
இயற்சொலில தெனின் யான்மற்
றென்சொல் கேனே"
(54-3-4)

ஓம் எனும் வடிவாய் நடம் புரியும் கூத்தன் திருச்சடை மேல் மாமதி உள்ளது. அதனேத் தனது கொம்பு என எண்ணி விநாயகப் பெருமானின் தும்பிக்கை எடுக்க முயல, அம்மதி அத்தும்பிக் கையைத் தனது பகையான பாம்பு என எண்ணி, கங்கை நதியிடத்துச் செல்ல அப்பிறையை விநாயகர் ஒரு தோணி என எண்ணி அதனேப் பற்றுவதிலிருந்து நீங்கினர் என்று கற்பனே அமையப் பாடிய பாடல் (பாடல்-53) வியந்து வியந்து போற்றுதற் குரியதாய் அமைந்துள்ளது.

மன்றுடையான் கழல் கண்டு தரிசிப்பது உய்தி பெறுவதற்கு வழியாகும் எனவும், உய்தி பெற வழி பிறிது இல்லே எனவும் ஆணேயிட்டுப் பாடி, அறநெறி நின்று மன்றுளாடும் பெருமானே இறைஞ்சி உய்தி பெற நம்மையெல்லாம் குமரகுருபரர் தில்லேக்கு அழைக்கின்றூர். அவர் கூறும் நெறியைப் பின்பற்றி நாம் உய்தி பெறுதல் நமது கடனல்லவோ,

"வாழ்த்துமின் றில்லே நினேமின் மணிமன்றம்
தாழ்த்துமின் சென்னி தலேவற்கு - வீழ்த்த
புறநெறி யாற்ரு தறநெறி போற்றி
நெறிநின் றொழுகுதிர் மன்ற
துறையறி மாந்தர்க்கு ச் சூழ்கடனிதுவே"
(84)



உருத்தெரியாக் காலத்தே
உள்புகுந்தென் னுளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக்
கருணேயினுல் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானேத்
தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினுல் நாயடியேன்
அணிகொள்தில்லே கண்டேனே.



திருவாசகம்

தில்லையுட் கூத்தனும் வான் புகழடியவரும்

கே. எம். வேங்கடராமையா
தமிழ்ப் பல்கலைக்கழகம், சுவடிப்புலம்
தஞ்சாவூர்

தில்லையாகிய பெரும்பற்றப் புலியூரைப் பாடியவர் பலர்; சென்று தரிசித்த அடியவர் பலர். "சென்று தொழுமின்கள் தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்" என்று பணித்தார் திருநாவுக்கரசரும்.

தில்லையைப் பற்றிப் பாடியநூல்களுள் ஒன்று "கோயில் திருப்பண்ணியர் விருத்தம்" என்ற நூல்: இது திருமுறைகளைத் தொகுத்தருளிய நம்பியாண்டார் நம்பிகளால் அருளப்பெற்றது. அவர் பாடியருளிய ஈரைந்து நூல்களில் இரண்டாவதாகப் பதினொராம் திருமுறையில் காணப்படுகிறது; இந்நூல் 70 திருவிருத்தங்களையுடையது; "நெஞ்சம்" என்று தொடங்கி "நெஞ்சமே" என்று முடிந்து அந்தாதித் தொடையான் அமைந்தது.

"கோயில்" என்பது தில்லைத் திருச்சிற்றம்பலம் ஆகிய பெரும்பற்றப்புலியூரைக் குறிக்கும். சிதம்பரம் என்பது இதுவே.

திருப்பண்ணியர் விருத்தம் என்பதில் "பண்ணியர்" என்பது "பண்ணியல்" என்பதன் போலி. பந்தல் – பந்தர் என்றாற்போல. கோயிலில் அதாவது திருச்சிற்றம்பலத்தில் வீற்றிருந்து தன்னை வணங்கும் அடியார்களுக்குச் "சென்ற டையாத திரு"வை அருளும் பெருமானைப் பற்றிய கட்டளைக் கலித்துறையிலமைந்த நூல் என்றும் பொருள்படும். விருத்தம் என்பது கட்டளைக்கலித்துறை என்னும் பாவினத்தைக் குறிக்கும். திருநாவுக்கரசர் அருளிய பதிகங்களில் கட்டளைக்கலித் துறையான் அமைந்தவை "விருத்தம்" என்ற பெயரால் குறிக்கப்பட்டுள்ளமை ஈண்டுக் கருதல் தகும்.

இச்சிறிய பிரபந்தத்தில் சில சிறந்த அடியார்களைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவ்வாடியார்களைப்பற்றிச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. வேடுவனைத் தேவு செய்தான்:–

திருக்காளத்தியில் திண்ணனார் என்ற வேடுவர் குடுமித் தேவரைக் கண்டு கும்பிடச் சென்றார்; அவர்க்கு நாடோறும் நிவேதனம் படைத்தார்; ஒருநாள் இறைவன் திருக்கண்ணில் இரத்தம் சோரக்கண்டு தன் கண்களையே இடந்து அப்பிக் கண்ணப்பன் ஆன கதை உலகறியும். கண்ணப்பரது திருத்தொண்டினை இந்நூலும் நம்பிகள்,

'காவுசெய் காளத்திக் கண்ணுதல்
வேண்டும் வரங்கொடுத்துத்
தேவுசெய் வான்வாய்ப் புனலாட்
டியதிறல் வேடுவனே" (செ. 20)

என்று பாடுவர். கண்ணப்பர் இறைவனை நீராட்டுவதற்குத் தன் வாயில் நீரை நிரப்பிவந்தார். அஃது எங்ஙனம் இருந்தது என்பதைத் "திருக்கண்ணப்ப தேவர் திருமறம்" என்ற நூலில் நக்கீரதேவர்,

"எழிலவன் வாயது தூயபொற்குடமே
அதனிற் றங்குநீர் கங்கையின் புனலே"
(வரிகள் 103-4)

என்று குறிப்பிடுவர். "தேவு செய்வான்" என்ற தொடர் நாவுக்கரசர் (4 ஆம் திருமுறை) திருச்சாய்க்காட்டில் பாடிய பின்வரும் திருநேரிசையில் கண்ட "தவப்பெருந்த தேவு செய்தார்" என்ற தொடரை நினைப்பிக்கும்!–

குலப்பெருந் தடக்கை வேடன்
கொடுஞ்சிலை இறைச்சிப் பாரம்
துவர்ப்பெருஞ் செருப்பால் நீக்கித்
தூயவாய்க் கவசம் ஆட்ட
உவப்பெருங் குருதி சோர
ஒருகணையிடத்தங் கப்பத்
தவப்பெருந்தேவு செய்தார்
சாய்க்காடு மேவி னாரே.

2. சேந்தனளித்த திருவமுது:–

சேந்தனூர்திருவிசைப்பாப் பாடியவர் களுள் ஒருவர்; இவர் பாடியதே "திருப்பல்லாண்டு" என்ற பதிகம். இவர் தன் மனைவி மக்களுடன் தில்லையில் விறகு விற்பதால் வரும் ஊதியத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்தி வந்தார்; அவ் வூதியத்தைக் கொண்டே சிவனடியார் ஒருவருக்கு உணவளிக்கும் நியமும் பூண்டு ஒழுகலானார். ஒரு நாள் விடாது மழை பெய்தது. அன்று பெற்ற ஊதியமோ மிகச் சிறியது. அதனால் பெற்ற மாவைக் கொண்டு களியாக்கிச் சிவனடியாரை எதிர்நோக்கியிருந்தார். சிவபெருமானே முதிய அடியவராகச் சென்றார். சேந்தனாரும் களியுணவை அளித்தார். அடியவரும் சிறிது உண்டு எஞ்சியதைத் தன் கந்தையில் முடிந்து கொண்டு சென்றார்.

நாடோறும் சிவபூசையில் கூத்தப் பெருமானின் திருச்சிலம்பொலியைக் கேட்கும் பரம பக்தனாகிய சோழ னொருவன், அந்த நாளில் மட்டும் சிலம்பொலி கேட்காதவன் ஆனான்; வருந்தினான்.அவனுக்கு இறைவன் கனவில் தோன்றிச் சேந்தனளித்த களியமுதுபற்றிக் கூறினார். அரசன் சேந்தனைக்காண விருப்பங்கொண்டான். மறுநாட்காலை தில்லைக்கூத்தப் பெருமானை வணங்கு வதற்கு வந்தான்; பொன்னம்பலத்திற் களியமுது சிந்தியிருத்தலைக் கண்டான்; தான் கணவிற்கண்டதைத் தெரிவித்தான்; சேந்தனைக் காண வேண்டுமென்று துடித்தான். தெய்வச் செயலாக மார்கழித் திருவாதிரை நாளில் ஒரு அற்புதம் நிகழ்ந்தது. தேர் நகரவில்லை. அப்பொழுது "சேந்தனே; பல்லாண்டு பாடுக; தேர் ஓடும்" என்று வானொலி கேட்டது. தேர்த் திருவிழாவுக்கு வந்திருந்த பெருங் கூட்டத்திலிருந்து சேந்தனார் "மன்னுக தில்லை! வளர்க நம் பத்தர்கள்" என்று தொடங்கும் திருப்பல்லாண்டு எனும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். வடம்பிடிக்காமலே தேர் உலாவந்து நிலையடைந்தது.

இச்சேந்தனார் செய்யுறை என்னும் ஊரவர் என்று திருப்பல்லாண்டில் தெரியவரும். இவர் "பறையர் குலத்தவர்" என்பதும் இறைவனுக்கு களியமுது படைத்த பேருடையார் என்பதும் "கோயில் திருப்பண்ணியர் விருத்தம்" 26 ஆம் பாடலில் பின் இரண்டடிகளால் தெரியவரும். அவ்வரிகள் பின்வருவன:–

"ஆந்தண் பழைய அவிழை அன்
பாகிய பண்டைப் பறைச்

சேந்தன் கொடுக்க அதுவும்
திருவமிர் தாகியதே"

(செ. 26)

இதனுள் சேந்தனூர் களி (சோறு) அளித்தமையும், இறைவனேற்றமையும், சேந்தனூர் பறையர் மரபினர் என்பதும் போதரும். சேந்தனூர் களியமுதருந்திய செய்தியை உய்யவந்த தேவர் தாம் அருளிய திருக்களிற்றுப்படியார் எனும் சரித்திர நூலில்,

"அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை
அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க –
அவிழ்ந்த சடை
வேந்தனுர்க் கின்னமுத மாயிற்றே
மெய்யன்பிற்
சேந்தனூர் செய்த செயல்"

(53)

என்க் குறித்துள்ளார். இதனுலும் சேந்தனூரின் அன்பின் திறம் சாத்திரநூலிலும் போற்றப்பெற்றமை போதகும்.

3. கரிபரிகளிற் கயிலே சென்றமை:–

சிவபெருமான் அனுப்பியருளிய வெள்ளே யானை மீது சுந்தரர் கயிலேக்குச் சென்றூர். சேரமான் பெருமாள் தன்னுடைய குதிரைக்குத் திருவைந்தெழுத்தை ஓதி, வானவெளியில் செலுத்தி, அதன் மேல் ஏறி வெள்ளேயானேக்கு முன்னுகச் சென்றூர். இச்செய்திகளே நம்பியாண்டார் நம்பிகள், திருத்தொண்டர் திருவந்தாதியில்,

"சேரற்குத் தென்னு வலர்பெரு
மாற்குச் சிவனளித்த
வீரக் கடகரி முன்புதன்
பந்தி இவுளிவைத்த
வீரற்கு வென்றிக் கருப்புவில்
வீரனே வெற்றிகொண்ட
சூரற்கு எனதுள்ளம் தன்று செய்
தாய் இன்று தொண்டுபட்டே"

(45)

என்ற பாடலில் குறித்துள்ளார். (சேரன் – சேரமான்பெருமாள்; நாவலர் பெருமான் சுந்தரர்; கரி – யானை; இவுளி – குதிரை)

இங்ஙனம் சுந்தரரும் சேரமான்பெருமாளுக்கும் கயிலே சென்ற திறத்தை நம்பிகள் கோயில் திருப்பண்ணியர் விருத்தத்தில்,

"இறையுந் தெளிகிலர் கண்டும்
எழில்திலேல அம்பலத்துள்
அறையும் புனல்சென்னி யோனரு
ளாலன் றடுகரிமேல்
நிறையும் புகழ்த்திரு ஆரு
ரனும்நிறை தார்ப்பரிமேல்
நறையும் கமிழ்தொங்கல் வில்லவ
னும்புக்க நல்வழியே"

(செ. 31)

என்றருளியுள்ளார். (திருவர்ரூரன் – சுந்தரர்; வில்லவன் – சேரமான் பெருமாள்)

4. சாக்கிய நாயனூர் தொண்டு:–

சாக்கியர் வேளாண் குடியினர்; காஞ்சிக்குச் சென்று பௌத்தம் சார்ந்தார். இறைவன் திருவருளால், புத்தசமய வேடத்துடனேயே சிவபெருமானே வழிபடலானூர்; சிவலிங்க வழிபாடு செய்தே பின்னர் உண்ணும் கடப்பாடு பூண்டொழுகலானூர். ஒருநாள் சிவலிங்கத்தை வழிபடுவதற்குரிய பொருள்கள் இல்லாத விடத்தில் ஆங்குக் கிடந்த கல்லேயே மலராகக்கொண்டு தூவி வழிபட்டார். இதனேத் திருநாவுக்கரசர்,

"கல்லினுல் எறிந்து கஞ்சி தாமுணும்
சாக்கி யஞர்
நெல்லினூர் சோறுணுமே நீள்விசும் பாள
வைத்தார்"

என்றும் (4 – 49 – 6)

"புத்தன் மறவாதோடி
எறிசல்லி புதுமலர்கள் ஆக்கி ஞன்காண்"

என்றும் (6 – 52 – 8) பாடியுள்ளார். சுந்தரமூர்த்தி சுவாமிகளும், திருத்தொண்டத்தொகையில்

"வார் கொண்ட வனமுலேயாள் உமை
பங்கன் கழலே

மறவாது கல்லெறித்த சாக்கியர்க்கும்
அடியேன்"

என்றருளினார். நம்பியாண்டார்நம்பியும், கோயில் திருப்பண்ணியர் விருத்தத்தில், 32ஆம் பாடலில்,

"வில்வழி தானவர் ஊரெரித்
தோன்வியன் சாக்கியனூர்
கல்வழி நேர்நின் றளித்தனன்
காண்க சிவ கதியே"

எனறு பாடினார்.

5. அதிபத்தர் அன்பு:—

தான் வலீவீசிப் பிடிக்கும் மீன்களுள் முதல் மீனை இறைவற்கு என்று கடலிலேயே விடும் ஒழுகலாறுடையவராகத் திகழ்ந்தவர் அதிபத்தர். கண்ணப்பர் சிவபெருமானுக்கு இறைச்சி படைத்தது போலவே, அதிபத்தரும் மீனை இறைவற்காக விடுக்கலானார். இது அன்பின் திறத்தால் செய்த செயல்; இதனை இழிதக்க செயல் எனக்கருதாது இறைவன் ஏற்றுக்கொண்டார். இதனைக் கோயில் திருப்பண்ணியர் விருத்தத்தில்,

"மொழித்தக்க சீர்அதி பத்தன்
படுத்திட்ட மீன் முழுதும்
இழித்தக்க என்னது அமிர்துசெய்
தான்என் றியம்புவரே"

(செ. 40)

என்று பாடியுள்ளார்.

6. கலிக்காமருக்கு அருளியவை:—

ஏயர்கோன் கலிக்காமர் சிறந்த சிவபத்தர்; சுந்தரர் சிவபெருமானைப் பரவையாரிடத்து தூது போக்கியமையை வெறுத்தார்; ஏயர்கோன் நோயுற்றார்; அதனைத் தீர்க்கச் சுந்தரர் ஏயர்கோனைப் பார்த்தற்கு வருகிறார் என்றதைக் கேள்விப் பட்டதும், ஏயர்கோன் உடைவாளான் தன்னை மாய்த்துக்கொண்டார். பின்னர்ச் சுந்தரர் தாமும் உயிர்துறக்க முயன்ற பொழுது இறைவன் திருவருளால் கலிக்காமர் உயிர் பெற்றெழுந்தார். இங்ஙனம் கலிக்காமர் பிணியுற்றுத் தீர்ந்தமையைக் குறிப்பாகத் திருப்புன்கூர்ப் பதிகத்தில்,

"ஏத நன்னிலம் ஈரறு வேலி
ஏயர்கோ னுற்ற இரும்பிணிதவிர்த்து"

என்று சுந்தரர் பாடியருளினார். இதன்கண் "நன்னிலம் ஈரறுவேலி ஏயர்கோன்" என்றது ஏயர்கோன் பன்னிருவேலி நிலம் அளித்த செய்தியைக் குறிப்பால் உணர்த்தியதாகக் கொள்ளலாம்.

அந்நாட்களில் ஒரு சமயம் மழை பெய்யவில்லை. இறைவனை நோக்கி "நிலம் தருகிறேம், மழை பெய்வித் தருள்க" என்று வேண்டினர். மழை பெய்தது. ஆறுவேலி நிலம் இறைவனுக்குச் சாசனம் செய்யப்பெற்றது. மழை அதிகமாகப் பெய்யத் தொடங்கியது; மழையை நிறுத்துக" என்று வேண்டினர். மழை நின்றது. மீண்டும் ஆறுவேலி இறைவனுக்குச் சாசனம் செய்யப் பெற்றது. இங்ஙனம் பன்னிருவேலி கொடுத்தவர் ஏயர்கோன் என்பது,

"ஏத நன்னிலம் ஈரறு வேலி
ஏயர்கோன்"

என்றமையான் அறியப்படும். பெய லின்மையும் மிகு பெயலும் பற்றிய சுந்தரர் தேவாரம் பின்வருமாறு:—

"வையக முற்றும் மாமழை மறந்து
வயலில் நீரிலை மாநிலம் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன
ஒளிகொள் வெண்முகி வாய்ப்பரந் தெங்கும்
பெய்பு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும்
செய்கை கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே"

(7 — 55 — 2)

இங்ஙனம் பன்னிருவேலி தந்த வற்றைக் கோயில் திருப்பண்ணியர்

விருத்தம் 54ல் பின்வருமாறு நம்பியாண்டார் நம்பிகள் எழுதுவராயினர்:–

"பொன்னம் பலத்துறை புண்ணியன்
என்பர் புயல் மறந்த
கன்னன்மை தீரப் புனிற்றுக்
கலிக்காமற் கன்றுபுன்கூர்
மன்னு மழைபொழிந் தீர்அறு
வேலிகொண்டு ஆங்கவற்றே
மின்னும் பிழைதவிர்ந் தீர் அறு
வேலிகொள் பிஞ்ஞகனே"

(செ. 54)

(கன்னன்மை – பஞ்சம்)

7. திருக்கோவையார்:–

மாணிக்கவாசகர் பாடியருளியது திருக்கோவையார்; திருவாதவூரர் என்பது அவரது இயற்பெயர்; திருவாதவூரில் பறிந்துயர்ந்தவர்; ஆதலின் திருவாதவூரர் எனப்பெற்றார். நம்பியாண்டார் நம்பிகள் திருவாதவூர் அடிகளாகிய மாணிக்க வாசகரைத் திருவாதவூர்ச் சிவபாத்தியன் என்று திருப்பண்ணியர் திருவிருத்தத்தில் குறிப்பிட்டுள்ளார். மாணிக்கவாசகர் பாடிய திருக்கோவைத் "திருச்சிற்றம்பலப் பொருளார்தரு திருக்கோவை" என்றும் கூறுகிறார். மேலும் " இவர் பாடியதே கோவைநூல் எனல் தகும்; மற்றையோர் பாடிய கோவை நூல்கள் கோவை நூலெனப்படா. அங்ஙனம் பிறர் பிறர் பாடுவதாயின் அவை எள்ளி நகைத்தற் குரியன" என்று பின்வருமாறு நம்பியாண்டார் நம்பிகள் பாராட்டுப்பனுவல் கூறியது அறிதற்பாலது:–

"வருவா சகத்தினில் முற்றுணர்ந்
தோனை வண் தில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன்
செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண்
டேயுமற் றப்பொருளைத்
தெருளாத உள்ளத் தவர்கவி
பாடிச் சிரிப்பிப்பரே"

(செ. 58)

8. வரகுணபாண்டியரின் தெய்வத் தன்மை:–

"வரகுணனும் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான்" என்றும் (திருக்கோவையார் 306), "சிற்றம்பலம்புகழும் மயலோங் கிருங்களியானை வரகுணன்" (திருக்கோவையார் 327) என்றும் மாணிக்கவாசகர் புகழ்ந்து கூறும் பெற்றியுடையவராகத் திகழ்ந்தவர், வரகுண பாண்டியன் என்னும் பாண்டிய அரசர். இப்பாண்டிய அரசரின் சிவத்தொண்டு சூளைத் திருவிடைமருதூர் மும்மணிக் கோவை, 28ம் செய்யுளில்,

"வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையில் கட்டவிழ்ப் பித்தும்,
ஒடும் பல்நரி ஊளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல அளித்தும்,
குவளைப் புனலில் தவளை அரற்ற
ஈசன் தன்னை ஏத்தின வென்று
காசும் பொன்னும் கலந்து தூவியும்,
வழிபடும் ஒருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலும் அவனிப் பிறப்புக்கு என்ன
இடித்துக் கொண்டு அவன் எச்சிலை
நுகர்ந்தும்
மருத வட்டத்து ஒருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல எம்மித் தலையும்
கிடக்க வேண்டும் என்று அடுத்தடுத்து
இரந்தும்,
கோயில் முற்றத்து மீயிசைக் கிடப்ப
வாய்த்த தென்று நாய்க்கட்டம் எடுத்தும்,
காம்பவிழ்ந் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதான மமைத்தும்,
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவர்"

என்று பட்டினத்தடிகள் புகழ்ந்து பாடியுள்ளார். இவ்வரசன் வெள்ளைநீறு மெய்யிற் கண்ட மாத்திரத்தில் கள்ளனையும் விடுதலை செய்தார் ஆதலின், இவருடைய திருவெண்ணிற்றிடத்தன்பு

தெற்றென விளங்கும். ஒரு சமயம் பாண்டிய அரசன் வெண்ணீறு சண்ணித்த மேனியராய்ப் போர்க்களம் புகுந்தார். இவர்மேல் பகைவர் அம்பு எய்தனர். அவ் அம்புகள் இவரது வெண்ணீறு பூசிய மேனியிற் படவில்லை. இவரது திரு வடிகளில் வந்து சரண் புகுந்தாற்போல் விழுந்தன. இதனைக்கண்டு இந்த அம்புகள் "திருநீறுபூசாத என் அடிகளில் வந்து பொருந்துதற்குத்தான் உரியன" என்று கூறித் "திருநீறு பூசாதவர் அடிபடுவர்" என்று பொருள்படுமாறு "கோவில் கருவியில்லா அடியேபட அமையும்" என்று கூறியதாகப் பின்வரும் பாடலில் நம்பியாண்டார் நம்பிகள் கூறியுள்ளார்:—

"பொடியேர் தருமே னியனுைப்
பூசல் புக அடிக்கே
கடிசேர் கணைகுளிப் பக்கண்டு
கோயிற் கருவியில்லா
அடியே படஅமை யுங்கணை
என்ற வரகுணன்தன்
முடியே தருகழல் அம்பலத்
தாடிதன் மொய்கழலே"

(செ. 62)

(கோயிற் கருவி என்றது கோயிலுக்குச் செல்பவர் இன்றியமையாது பூசிக்கொள்ள வேண்டியதாகிய திருநீறு; நீறில்லா நெற்றிபாழ் என்பதையும் இங்கு ஓர்க)

குற்றஞ் செய்யினும் குணமெனக் கொள்பவர்:—

மேலேகண்ட சில தொண்டர்களில் கண்ணப்பர், சாக்கியர், அதிபத்தர் ஆகியோர் சிவபக்தி மிக்கூர்தலினால் சில அநுசிதமான காரியங்கள் செய்தனராகச் சில் வாழ்நாள் பல்பிணிச் சிற்றரிவின ராகிய எம்மனோரில் சிலர் கருதக்கூடும். கண்ணப்பர் வாய்கலசமாக நீராட்டினர்; இறைச்சியையும் படைத்தார்; அதிபத்தர் மீனையே இறைவனுக்கு அர்ப்பணித்தார்; சாக்கியர் மலரெனவே கல்லெறிந்தார். இச் செயல்கள் குற்றமெனவே கருதப் படும். இதனைக் கருத்தில் கொண்டே சுந்தரரும் திருப்புன்கூர்த் திருப் பதிகத் தில்,

"நற்றமிழ் வல்ல ஞானசம் பத்தன்
நாவினுக் கரையன் நாளைப்போ
வானும்
கற்ற தூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம்புல்லனென்
றிவர்கள்
குற்றங் செய்யினும் குணமெனக் கருதும்
கொள்கை கண்டு நின் குரைகழல்
அடைந்தேன்
பொற்றிர நண்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூ ருளானே"

(7 — 55 — 4)

என்று பாடியருளினார். இறைவன் பத்தி வலியிற்படுவன். ஆதலின் அவர்தம் தொண்டைத் தவறெனக் கொள்வான் அலன்; "கலைமலித்த சீர்நம்பி கண்ணப்பன்" என்று சுந்தரர் கூறியது போல அறிவின் செயலாகவே கொண்டு அன்றே "நல்லறிவாளர்" ஆகவே கொள்வர். இக் கருத்தையுட்கொண்டே நம்பியாண்டார் நம்பிகள், திருப் பண்ணியர் திருவிருத்தம் 68 ஆம் பாடலில்,

"கல்லெறிந் தானும்தன் வாய் நீர்
கதிர்முடி மேல் உகுத்த
நல்லறி வாளனும் மீளா
வழிசென்று நண்ணினரே"

என்றார். இறைவன் தூயபத்திசெய் பத்தரை ஆட்கொண்டருள்வான் ஆகலின், "பதியாய்ப் பணிசெய் மடநெஞ்சமே" என்று அப்பர் அருளியவாறு பத்தி செய்வோமாக!

"பெண்ணினோர் பாகத்தன் சிற்றம்
பலத்துப் பெருநடனைக்
கண்ணிணை ஆர்தரக் கண்டுகை
யாரத் தொழுமின்களே!"

(செய். 69)

□

நடராச சதகம்—ஓர் அறிமுகம்

பேராசிரியர் டாக்டர் மு. சிவசந்திரன் எம். ஏ., பி. எச். டி., பி. எட்.,
தருமபுரம்.

பேரிலக்கியங்கள் சிற்றிலக் கியங்கள் என்று இலக்கியங்களை இரு வகையாகப் பிரிப்பர். சிற்றிலக்கியங்கள் 'சிறு பிரபந்தங்கள்' என்று வழங்கப்பெறும். தமிழ் மொழியில்தொண்ணூற்றுறு வகை சிறு பிரபந்தங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று 'சதகம்' என்பதாகும். ('சதம் என்றல் நூறு என்பது பொருள். சதகம் என்பதும் நூறு பாடல்களைக் கொண்டது) இதன் இலக்கணத்தை விளக்கப் பாட்டியல்.

"விழையும் ஒருபொருள் மேல் ஒரு நூறு
தழைய உரைத்தல் சதகம் என்ப"

என்று கூறுகிறது. சதக நூல்கள் பல உள்ளன. அவற்றுள் 'நடராச சதகம்' என்பது தில்லை ஸ்ரீ நடராசப் பெருமான் மீது பாடப்பெற்ற 103 பாடல்களைக் கொண்டது. இந்த நூலின் அறிமுகமாக இக்கட்டுரை ஈண்டுவரையப்பெறுகிறது.

ஆசிரியர்

இந்நூலைப் பாடியருளியவர் தருமை யாதீனத் திருக்கூட்டத்து அடியவராக விளங்கிய ஸ்ரீ சிதம்பரநாத முனிவரா வார். இவர், தருமபுர ஆதீனம் பத்தாவது குரு மூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளிடத் தில் உபதேசம் பெற்றவர். இதற்குரிய சான்றினை இவரே தம் நூலுள் குறிப்பிடு கின்றார்.

"தருமையா தீனமிகப் பருதி மதியளவும்
வாழி" — என்றும்
"சீர்காழி அடியர்குலம் வாழி நாடொறும்
மிக்க
சிவஞானர் அருளும் வாழி"

என்றும் இந்நூலுள் இவர் போற்றுவது கொண்டுணர்ந்து கொள்ளலாம்.

இவர் ஆகம அறிவும் வடமொழிப் புலமையும் சிறந்த கவித்துவமும் உடைய வர் என்பதற்கு இந்நூலே சான்றாகும் இவர் இயற்றிய பிறிதொரு நூல், 'நித்திய கன்ம நெறிக்குறள்" என்பதாகும். இவ் விருநூலையும் பார்க்கும்பொழுது சைவர் கள் ஒவ்வொருவரும் தெரிந் திருக்க வேண்டிய சமயக்கருத்துகளையும் கடைப் பிடிக்க வேண்டிய நெறிமுறைகளையும் இவர் உணர்ந்திருந்ததோடன்றி, பிறரும் உணர்ந்துகொள்ளத் துணை செய்யும் வகை யில் உதவும் பெருங் கருணைத் திருவுள்ளம் கொண்டவராக விளங்கியவர் என்பது தெளிவாகப் புலனாகின்றது. இவர் காலம் கி. பி. 1746 என்பர்.

நூலமைப்பு:—

தில்லையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆனந்தக் கூத்தரைப் பாட்டுடைத் தலை வராகக் கொண்ட இப்பிரபந்தம் 103 பாட்டுகளைக் கொண்டது. ஆசிரிய

விருத்தத்தால் அமைந்தது. சதக நூல்கள் பலவாகத் தோன்றியிருப்பினும் அவை பெரும் பாலும் நாட்டு வரலாறு உணர்த்தும் நூல் களாகவும், நீதிக் கருத்துக்களை விளக்கும் நூல்களினமே உள்ளன. தொண்டை மண்டல சதகம், சோழமண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், என்பனவும் தண்டலை யார் சதகம், குமரேச சதகம், அறப்பளீச் சர சதகம் என்பவும் அவற்றிற்குச் சான்று களாம். அவை கடவுள் உணர்ச்சியைப் பொதுவாக ஊட்டுவனவேயன்றிச் சிறப் பாக உணர்த்துவன அல்ல. ஆனல் இந்நூல், முழுமையும் சமயக் கருத் துக்களையே உணர்த்துவதாக அமைந் துள்ளமை குறிப்பிடத் தக்கது. இந்நூல்கள் ஒவ்வொரு பாடலும், ''சிவசிதம்பரவாச சிவகாமி உமைநேச செகதீச நடராசனே'' என்னும் தொடரை நிறைவாகக் கொண்டு விளங்குகிறது.

நூற்பொருள் வகை:–

இந்நூல் ஆசிரியர் முதற்கண் சிதம்பர மான்மியத்தையும், தில்லை மூவாயிரவர் பெருமையையும் கூறுகின்றார். பின்னர் பதி யியல்பை விளக்குகின்றார். தொடர்ந்து இருபத்தைந்து தத்துவமூர்த் தியின் விளக் கத்தையும் இறைவன் திருக் கோயில் கொண்டமையையும், சிவலிங்க பூசை செய்தவர்கள் இன்னின்னார் என்ப தனையும் சிவ சின்னமில்லாதவரின் இழி நிலையையும் கூறுகின்றார். சைவர்கள் தொகுதியாக நினைவு கொள்ளவேண் டுவன பல உள. அவற்றையும் அடுத்துத் தொகுத்தும் வகுத் தும் இவ்வாசிரியர் கூறுகின்றார். தலங் களின் பிரிவுகளாக மூவர் பாடல் பெற்ற தலங்கள், பஞ்ச பூதத்தலங்கள், அட்ட மூர்த்தத் தலங்கள், ஆறுகாசித் தலங்கள், சப்தவிடத் தலங்கள், ஆறு ஆதாரத்தலங் கள், அட்ட வீரட்டத் தலங்கள் ஆகிய வற்றை விளக்குகின்றார். அடுத்து லிங்க விளக்கங்களைக் கூறு கின்றார். எழுவகை இலிங்கம், உலோகலிங்கம், பார்த்திவ லிங்கங்கள் 16 என்பவை, அவற்றின் பயன்கள், இரத்தினலிங்க வகைகள் பயன், எழுவகை லிங்க பூசைக்குரிய ஆகம விளக்கங்கள், காரணிகலிங்க பூசைக்குரிய வருணமுறை, இரதலிங்க பூஜா சிறப்பு ஆகிய விளக் கங்களைக் கூறுகின்றார். ஆக மங்களின் சுலோகங்கள், அவற்றின் எண் ணிக்கை விளக்கம், புராணங்களின் பிரி வுகள், முதலியவற்றை அடுத்துக் கூறு கின்றார். திருக்கோயில் உறுப்புகளையும் சிவாலயப்பிரதிட்டைக்குரிய திரவிய பங்குகளையும் அட்ட பந்தன மருந்து தயாரிக்கும் முறையினையும் சிவலிங்க பிரதிட்டைக் குரிய பதினெட்டுக் கிரியைகளையும் பிரதிட்டை செய்த திருவுருவைக் காண்பவர்களும் அவர்களின் வரிசை முறையையும் அடுத்து விளக் குகின்றார். பூசைக்காலங்களில் வழி படுவதால் விளையும் பயன்கள், பூசைக் குரிய கால அளவு, காலங்களின் தீர்த்தம், ஆடை, மந்திரங்கள், காலங் களுக்குரிய புட்பங்கள், வாரம், மாதம் இவற்றிற்குரிய புஷ்பங்கள், பத்திரங்கள், நடராசருக்குரிய புஷ்பம், அட்டபுட்பம் இவை என அடுத்து விளக்குகின்றார். அடுத்து மாத அபிடேகங் களும் அவற்றின் பயன்களும் இவை எனக் கூறுகின்றார். பின்னர் பதினுறுவகை உப சாரங்களையும் (சோடசோபசாரம்), அவற் றிற்குரிய கால அளவுகளையும், அபிடேக விதியினையும், அபிடேக அளவினையும், அபிடேக கால நிவேதனத்தினையும் கூறு கின்றார். அடுத்து வில்வார்ச்சனையின் பய னையும் வில்வமும் துளபமும் எடுக்கலாகாத நாட்களையும், இன்ன தெய்வத்திற்கு இன்ன புட்பம் ஆகாது என்பதனையும் நிவேதன முறையினையும் தீபாரதனை முறையினையும் தீபத் தைப் பூசிக்க வேண்டிய விதி முறைகளையும் கூறுகின்றார். அடுத்துத் தூப தீபங்களின் அதிதேவர்களையும், மந்திர வில் வார்ச்சனையின் பயனையும், இன்ன வகைப் பத்திரபுட்பம் பூசைக்காகாது என் பதனையும், பூசையின்கண் செய்யும் உப சாரங்களினுல் ஏற்படும் பயன்களையும்,

வாத்தியத்தின் பலனையும், உபசாரக் குறைவால் ஏற்படும் தீங்குகளையும் கூறுகின்றார்.

பின் சாங்க – உபாங்க – பிரத்யங்க பூஜையையும், பஞ்சகிருத்திய பூசையையும் விளக்குகின்றார். அடுத்து இன்னின்ன காலத்தில் வழிபடலாகாது என்பதனையும், நமஸ்கார விதி முறைகளையும், வலம்வரும் முறையினையும், விபூதிதரிக்கும் காலத்தினையும், வீபூதி அமைத்தற்குரிய பசுவின் இலக்கணத்தினையும், உருத்திராட்ச வடிவத்தினையும், மணிகளின் தொகை விளக்கங்களையும், செபம் செய்தற்குரிய ஆசனம், அதன்பயன்கள், செய்யும் இடம், திக்குச்சிறப்பு, செபமாலையின் சிறப்பு முதலியவற்றையும் கூறுகின்றார். மந்திரம் உபதேசம் பெறுவதற்குரிய மாதங்களையும், அவற்றின் பயன்களையும், பசுவின் பெருமைகளையும், சிவ விரதங்களையும், விரத பலன்களையும் கூறுகின்றார். பரமபாசுபதர்கள், பரமபாகவதர்கள் இவர் இவர் என்பதனையும் அவர்களது விதி யினையும், நடராச அபிடேக தினங்களையும், கிரியை முதலான நூல் நெறிகளையும் சிவஅபராதச் செயல்கள் இவை இவை என்பதனையும் ஆசாரிய இலக்கணத்தையும், சண்டேசுர வழிபாட்டினையும் கூறி, குற்றங்களுக்குரிய நிவர்த்திகளையும் கூறுகின்றார். அடுத்து இவை இவை மேன்மையாம் என்றும், தல மகிமை இன்னது என்றும் கூறுகின்றார். பின்ஆசிரியரின் வேண்டுகோளும் வாழ்த்தும் கொண்டு இந்நூல் நிறைவுறுகின்றது. இவ்விதமான பல இன்றியமையாச் செய்திகளைத் தன்னகத்துள் கொண்டு விளங்கும் ஓர் உயரிய சமய நூல் இது.

இந்நூலில் கூறப்பெறும் அனைத்துச் செய்திகளையும் விளக்கிக்கூற இங்கு இடம் போதாது என்பதால் சில செய்திகளை மட்டும் ஈண்டு நினைவு கூர்வோம். நினைவு கூரும் செய்திகளைக் கீழ்வருமாறு பகுத்துக் கொள்ளலாம்.

1. பதியியல்பு, 2. வில்வார்ச்சனையின் பயன், 3. உபசார பலன்கள், 4. நமஸ்கார விதிகள், 5. வலம்வரும் முறை, 6. நடராசர் அபிடேக தினங்கள், 7. அபராத நிவர்த்தி.

பதியியல்பு:–

சிவம் என்பது மேலானவற்றுக் கெல்லாம் மேலானதாகவும் சூக்குமமானதாகவும் தியானிக்கப்படுவதாகவும் அறியப்படுவதாயும், அறிவுருவானதாகவும், மல மற்றதாகவும் ஒரு பற்றுக்கோடில்லாததாகவும், குறிப்பிட்ட ஒரு குணம் இல்லாததாகவும், பிரிக்க ஒண்ணுததாகவும், எங்குமானதாகவும், அடங்கிய மனத்தின் பாவனைக்கும் எட் டாததாகவும், பாவமே இல்லாததாகவும், சுத்தமானதாகவும், ஒப்பற்ற தாகவும், நிர்மலமான தாகவும், அளக்கொணுததாகவும், நித்தியமானதாகவும், உருவமற் றதாகவும், எல்லையற்ற இன்பப் பொரு ளானதாகவும், அநாதியே பிறப்பற்றதாகவும், ஆறு ஆதாரங்களையும் கடந்த நாத தத்துவத்தின் முதலில் விளங்கும் மேலான பொருளானதாகவும் இருப்பது என்று ஆசிரியர் இறை இயல்பைக் கூறுகின்றார்(1)

வில்வார்ச்சனையின் பயன்:–

"'மூன்று பிறவிகளில் செய்த பாவம் போகும். கடந்த இருபத்தொரு தலைமுறையில் நம் முன்னோராக வாழ்ந்தவர்களைச் சிவலோகத்திற் செலுத்தும், ஐயாயிரம் யானைகளோடும், கோடி கபிலைப் பசுக்களோடும், அழகான கோடியாலான கன்னிகைகளோடு இன்னும் வேண்டிய பயனையும் அளிக்கும். ஆயிரம் காலக் கிரா

---

1. நடராச சதகம் பாடல் எண் – 4

மங்களைத் தானம் செய்தல், பத்துக்கோடி தடாகம் தோண்டுதல், பலகோடி இரண்ய கருப்ப யாகம் செய்தல், முதலானவற்றால் எய்தும் பயன்கள் அனைத்தையும் பெற விரும்பினாலும் மோட்சமே பெற விரும் பினாலும் என்னை உள்ளன் போடு நெக் குருகிக் கசிந்து ஒரு வில்வம் சாத்தி வழி படுவாராயின் எய்தலாம் என்று ஆகமங் களில் அருளினை" என்று ஆசிரியர் வில் வார்ச்சனையின் பயனை விளக்குகின்றார்(2)

உபசார பலன்கள்:—

தூபம்போடப் பாவம் போம், தீப மிட்டால் யமபயம் நீங்கும், நாகதீபம் பாம் பினால் அச்சத்தை அகற்றும், ரிஷப தீபம் அஸ்வமேதயாகப் பயனை அளிக்கும், புருஷ தீபம் ஆண்மகனை அளிக்கும், கடதீபம் சாந்தியருளும், கற்பூர நீராஞ்சனம் செய் வதன்பயன் மிகப் பெரியதாகும். நட்சத்திர தீபம் மகிழ்ச்சியுடன் சருவ சித்திகளையும் தரும், ரததீபம் வசியமருளும், விபூதி ரட்சை மூவுலகத்தையும் கட்டுக்கு ஆகும். கண்ணாடி உலகனைத்திலும் உலாவருதலை யருளும், குடை அரசாட்சியை அளிக்கும், வெண் சாமரை சகலமாக்கியங்களையும் தரும், தாலவட்டம் சுகம் அருளும், விசிறி எல்லா மங்கலத்தையும் தரும், வேதாகம பாராயணத்தின் பயன் மலமற்ற பரமுத்தி யாகும், உருத்திர ஜபம் சிவத்தையே கொடுக்கும், இரண்டற்ற நிலையில் உதவப் **பெறுகிற பாத்ய உபசாரம் பாவத்தை** அகற்றும், ஆசமனம் ஒருவன் உயர்ந்த கீர்த்தியைத் தழைக்கச்செய்யும், அர்க்கியம் கொடுத்தல் தன்மங்களைப் பயனுள்ளதாகச் செய்யும் என்று ஆசிரியர் விளக்கிக் கூறுகின்றார் (3).

நமஸ்கார விதிகள்:—

தலைமட்டும் குனிந்து வணங்குதல் ஏகாங்க நமஸ்காரம் ஆகும், தலையின் மேல்வலக்கையை மட்டும் உயர்த்தி வணங்குதல் துலியாங்க நமஸ்காரம் ஆகும், தலையின்மேல் இருகரங்களையும் கூப்பி வணங்குதல் திரியங்க நமஸ்காரம் ஆகும், கைகள் இரண்டும் முழந்தாள்கள் இரண்டும் சிரமும்ஆக ஐந்தும் நிலத்திற் பொருந்த வணங்குதல் பஞ்சாங்க நமஸ் காரம் ஆகும், தலை, கையிரண்டு இரு செவிகள், இரண்டுமுழந்தாள்கள், மார்பு ஆகிய இவை பூமியிற் பொருந்த வணங் குதல் அட்டாங்க நமஸ்காரம் ஆகும்.

சிவபெருமான் திருமுன்பு ஐந்து முறையும், குருவின் முன்னர் மூன்று முறை யும், பரிவாரங்கட்கு ஒருமுறையேனும்மன ஒருமைப் பாட்டுடன் வணங்க வேண்டும் (4).

வலம் வரும்முறை:—

வலம் வரும்பொழுது இரண்டு கை களையும் தொங்க விட்டுக்கொண்டு வந்தால் அவர்கள் மறுபிறவியில் பிசாசு ஆவார்கள். கைகளைக் கட்டிக்கொண்டு வந்தால் இராக்கதராவார். இடுப்பில் கையை வைத்துக்கொண்டு வரின் அசுர ராவார். ஆகையால் இரு கைகளையும் சிரத்தின்மேற் கூப்பிக் கொண்டு பத்து மாதம் நிறைந்த நிறை சூலுற்ற பெண் ததும்புகின்ற நீர்க்குடத்தை இடுப்பில் சுமந்து செல்லுதல் போல வருதல் வேண்டும்.

கணபதிக்கு ஒன்றும், சூரியனுக்கு

---

2. நடராச சதகம் பாடல் எண் — 54
3. ,, ,, ,, ,, — 63, 64
4. ,, ,, ,, ,, — 70

இரண்டும், சிவனுக்கு மூன்றும், உமை யாட்கு நான்கும், திருமாலுக்கு நான்கும், அரசுக்கு ஏழும் ஆக இவற்றில் குறை யாமல் வலம் வருதல், வேண்டும் (5).

நடராசர் அபிடேக தினங்கள்:–

தேவர்களுக்கு ஒரு வருஷம் ஒருநாள் ஆதலின் ஓர் ஆண்டில் ஆறுகால பூசையாக அமைத்துள்ளனர். மார்கழித் திருவாதிரை விடியற்கால பூசை, மாசி மாதத்துப் பூர்வ பக்கத்துச் சதுர்த் தசியினில் காலசந்தி பூசை, சித்திரை மாதத்துத் திருவோண நாளில் உச்சிக்கால பூசை, ஆனி மாதத்து உத்திரநாளில் சாயரட்சை பூசை, ஆவணி மாதத்து சுக்கிலபட்சத்து சதுர்த்தசியில் இரண்டாங்கால பூசை, புரட்டாசி மாதத் துச் சுக்கில பட்சத்துச் சதுர்த்தசியில் அர்த்தயாம பூசை – இவை ஸ்ரீ நடராசர் திருமஞ்சனம் கொண்டருளும் நாட்களாம் (6).

அபராத நிவர்த்தி:–

குற்றங்கள் தீர்வதற்குச் செய்யக்கூடிய அபிடேகங்களில் சிலவற்றைக் கூறுகின் றார் ஆசிரியர். மாலைக் காலத்தில் தண்ணீர் அபிஷேகம் செய்தால் பத்துக் குற்றங்கள் தீரும், பாலாயின் நூறும், தயிராயின், ஆயிரமும், நெய் ஆனல் பதி னாயிரமும், கரும்பாயின் லட்சமும், தேன்எனில் பத்துலட்சமும், இளநீராயின் கோடியும், சந்தனக் குழம் பாயின் அனைத்துக் குற்றங்களும் தீர்ந்துவிடும் என் கின்றார் (7).

நிறைவுரை:–

இத்தகைய அருங்கருத்துக்கள் அனைத் தையும் தாங்கியுள்ள இந்நூலைச் சைவர்கள் அனைவரும் கற்றுத் தேர்தல் வேண்டும். இறைநம்பிக்கை வருதலும் அதன் பின்னர் அபி டேகம், அர்ச்சனை, திருக்கோயில் வலம் வருதல், ஜபம், தியானம் போன்ற செயல்களை மேற்கொள்வதும் மட்டுமின்றி அவற்றை எவ்வெவ்வாறு, எவ்வெப் பொழுது எங்ஙன மிருந்து செய்தல்வேண் டும் என்பதனையும் அறிந்துணர்ந்து செய் தல் முழுப்பயனை அளிக்கும். அதற்கு இந் நூல் பெரிதும் துணை செய்யும் என் பதுண்மை. எனவே இந்நூலை அனைவரும் கண்ணெனப் போற்றிக் கற்றுத்தெளிந்து அதன்வழி வழிபட்டு உய்வார்களாக!

"சிவசிதம்பர சதகம் ஓதினோர்
கேட்டுளோர்
தேவரினும் மிக வாழியே". □

---

5. நடராச சதகம் பாடல் எண் – 71
6. ,, ,, ,, ,, – 89
7. ,, ,, ,, ,, – 99



புல்லம் ஊர்தியூர் பூவானூர் பூம்புனல்
நல்லம் ஊர்திநல் லூர்நனி பள்ளியூர்
தில்லை யூர்திரு வாரூர்சீர் காழிநல்
வல்லம் ஊர்என வல்வினை மாயுமே.

–தனித் தேவாரப் பாடல்



அருணகிரிநாதர் காட்டும் ஆடல்வல்லான்

பேராசிரியர். டாக்டர். சேக்கிழார் தாசன் எம். ஏ., எம். ஈ. டி., பி. எச். டி.,
அரசு கல்வியியல் கல்லூரி, ஓரத்தநாடு.

ஆயும் வேத கீதம் ஏழிசைபாட அஞ்செ
ழுத்த ழுங்க முட்டதின்று துன்று சோதி
ஆதிநாதர் ஆடுநாடக சாலை அம்ப
லச்சிதம்ப ரத்தமர்ந்த தம்பிரானே

(காயமாய.....சிதம்பரம் திருப்புகழ்)

கி. பி. 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் புறச் சமயத்தாக்குதல்களால் இந்துசமயம் நலிவுற்ற காலத்தில் அவதரித்த அருண கிரிநாதசுவாமிகள் சந்தக்கவிமிகு செந் தமிழ்ப் பாக்களால் கந்தவேளைப்போற்றி, காணபத்தியம், கௌமாரம், சைவம், வைணவம், சாக்தம், சௌரம் என்னும் அறுவகைச் சமயத்திற்கும் ஆக்கம் தேடிச் சமய மலர்ச்சியைத் தோற்றுவித்தார். அவரது பக்தித்திறம் தனித்தன்மை வாய்ந் ததாகும். விநாயகப்பெருமானைப் பலவாறு துதித்து, அப்பெருமானது தம்பியே என்று கந்தனைப் பரவினர். சிவபெருமானைப் போற்றி அப்பரம்பொருளின் செல்வனே! அவருக்குக்குருநாதனே! என்று குகனைப் பரவினர். திருமாலின் பராக்ரமங்களைப் பாடி அப்பெருமானின் மருகனே என்று முருகனைப் பணிந்தார். அம்பிகையைப் பலவாறு போற்றி அவள்தன் செல்வனே என்று செவ்வேளைப் பரவினர். சூரியன் முதலான சுடர்களை நினைவுறுத்தி அவற் றுள் ஒளிர்பவனே என்று வேலனைப் போற்றினர்.

அறுவகைச் சமயத்தவரும் அருணகிரி நாதரைத்தத்தம் சமயத்தவர் என்று உரிமை கொண்டாடுவர். ஆயினும் வேதசிவாக மங்களில் முடிபாக விளங்கும் சித்தாந்த சைவமே அருணகிரிநாதர்சமயம் ஆகும். "சிவஞானசித்திதனை அருள்வாயே" என்று முருகனிடம் வேண்டுகிறார் அருணகிரி நாதர்.

சைவர்களின் கோயிலாகத்திகழ்வது நம் தில்லைச் சிற்றம்பலம். திருமுறைகளை உலகுக்கு மீண்டும் வழங்கியது இத்திருக் கோயிலே என்பதை அனைவரும் அறிவர். அருணகிரிநாதரின் திருப்புகழ்ப்பாக் களையும் நாம் பெறுவதற்கு இத்திருக் கோயில் நிகழ்ச்சியே காரணம் என்று அற்புத வரலாறு பலருக்கும் வியப்பினை தரக்கூடும்.

தணிகைமணி டாக்டர் வ. த. செங் கல்வராயபிள்ளை அவர்களின் தந்தையார் வ. த. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் சிதம்பரத்தில் நீதித்துறையில் பணியாற் றிய நாளில் ஒரு விவாத்தில், சிதம்பரம் தீட்சிதர்கள் தங்கள் பெருமையைக்காட்ட "தாதுமாமலர் முடியாலே" எனத்தெடங்

கும் திருப்புகழில் வரும்

"வேதநூ ன்முறை வழுவாமே தினம்
வேள்வியால் எழில்பூனை மூவாயிர
மேன்மை வேதியர் மிகவே பூசனை
புரிகோவே"

என்னும் வரிகளைச் சான்றாக எடுத்துக் கூறினர். அப்பாடலின் தேனினுமினும் இனிமை, பிள்ளையவர்களின் மனதைமிகக் கவர்ந்தது. திருப்புகழில் அவரது ஆர்வம் மிகுந்தது. இத்தகைய அற்புதப்பாடல்கள் பதினாயிரம் அருணகிரிநாதர் பாடியிருக்க, ஓராயிர மேனும் கிடைத்து அச்சிட்டால்தான் எடுத்த ஜன்மம் பலன் தரும் எனக் கருதி 1871ல் திருப்புகழைத் தொகுத்து அச்சிடும் பணியை மேற் கொண்டார் என்பதை அவரது வரலாற்றில் காண்கிறோம்.* வ. த. சுப்பிரமணியபிள்ளையவர்களும் அவர்தம் அருமைத்திருமகனார் திருப்புகழ் மணி அவர்களும் மேற்கொண்ட பணிகளின் விளைவாலேயே இன்று 1330 திருப்புகழ்ப்பாடல்கள் நமக்கு கிடைக்கும்பேறு கிட்டியுள்ளது. தணிகைமணியவர்கள் திருப்புகழ்ப் பாடல்கள் அனைத்திற்கும் உரையும் எழுதியுள்ளார்கள். நமக்கு திருமுருக. கிருபானந்த வாரியார்சுவாமிகள் திருப்புகழ் இன்னமுதை இவ்வுலகமெங்கும் பரப்பி வருகிறார்கள்.

அருணகிரிநாதர் அருளிய சிதம்பரம் திருப்புகழ்ப் பாடல்கள் அறுபத்தைந்து நமக்கு கிடைத்துள்ளன. சிதம்பரம் மாண்பு, தில்லைவாழ் அந்தணர் சிறப்பு, ஆடல் வல்லான், சிவகாமியம்மை, சிவகங்கைச் சிறப்புகள், பஞ்சாக்கரப் பொருள், பஞ்ச பூதத் தொடர்பு பதஞ்சலி வியாக்கிரபாதர் காண நடராஜர் ஆடியது மணிவாசகர் அருள்பெற்றது. பஞ்சாக்கரமே வேலாகச் சூரபதுமனை அட்டது, திருஞானசம்பந்தர் ஞானவாளால் சமணரை வென்றது என்பன போன்று பல செய்திகள் சிதம்பரத் திருப்புகழ்ப் பாக்களில் பேசப்படு கின்றன.

சிதம்பரத் திருப்புகழ்ப் பாக்களில மட்டுமின்றி, வேறுபல திருப்புகழ்பாக்களிலும் இறைவனின் திருக்கூத்தினைப்போற்றுகின்றார் அருணகிரிநாதர்! ஆம் இறைவனின் தாண்டவ பேதம் எவ்வளவு உள்ளன? அற்புதத் தாண்டம், அநவரத தாண்டவம், ஆனந்ததாண்டவம், பிரளய தாண்டவம், சங்காரதாண்டவம் என ஐந்துவிதம் என்பர். சப்தவிடங்கத்தாண்டவம் தனிச்சிறப்புடைதல்லவா?

திருவாரூர்–வீதிவிடங்கர்–அசபாநடனம்
திருதாகைக் காரோணம்–சுந்தரவிடங்கர்–வீசிநடனம்
திருமுறைக்காடு – புவனிவிடங்கர் – ஹம்ச பாதநடனம்
திருவாய்மூர்–நீலவிடங்கர்–கமலநடனம்
திருநள்ளாறு–நகரவிடங்கர்–உன்மத்த நடனம்
திருக்காறுயில்–ஆதிவிடங்கர்–குக்குட நடனம்
திருக்கோளிலி–அவனிவிடங்கர்–பிருங்க நடனம்

ஏழுவகைத் தாண்டவமாக இறைவன் ஆடலைக் காட்டும் மற்றொரு தொகுதி இதோ!

ஸ – படைத்தல்	– திருநெல்வேலி	– தாமிரசபை	– காளிகாதாண்டவம்/முனிதாண்டவம்
ரி – காத்தல்	– திருப்புத்தூர்	– சிற்சபை	– கௌரி தாண்டவம்

வ. த. * சுப்பிரமணியபின்னை சரித்திரம் பக். 22.

க	– காத்தல்	– மதுரை	– இரசதசபை	– சந்தியா தாண்டவம்
ம	– அழித்தல்	– நள்ளிறவு		– சங்கார தாண்டவம்
ப	– மறைத்தல்	– திருக்குற்றாலம்	– இரத்தின சபை	– திரிபுர தாண்டவம்
த	– அருளல்	– திருவாலங்காடு	– இரத்தினசபை	– ஊர்த்துவ தாண்டவம்
நி	– ஐந்தொழில்	– தில்லை	– கனகசபை	– ஆனந்தத் தாண்டவம்.

அருணகிரிநாதர் காட்டும் ஆடல் வல்லானின் அற்புதத்தாண்டவத்தை இப் பொழுது காண்போம். சிவபெருமானின் ஆடற்சிறப்பினைச் சந்தத்தமிழில் தாளக்கிர மத்துடன் தெய்வீகச் சூழலில் அவர்காட்டும் முறை அற்புதத் தனிச் சிறப்புடையது. கங்கை வெள்ளம் நெருங்கும் சடையாட வும், பொருந்தியிருக்கும் மான்மழு ஏந்திய திருக்கரங்கள் ஆடவும், அழகிய காலின் கழலொலி செய்யவும் நடனம் புரிகின்றார்.

ஓத மொய்ச்சடை யாட வுற்றமர்
மான்மழுக் கரமாட பொற்கழல்
ஓசை பெற்றிட வேநடித்தவர்

(ஏதுபுத்தி)

அவர் ஆலவிடம் மேவும் நீலகண்டத் தோடு கோலமுடன் நீடுமன்றுள் ஆடல் புரிகின்றார்.[1] பிரகாசமான வெட்டவெளி யிலே திருவருளுடன் வீற்றிருந்து எங்கும் விளக்கமுற நடனம் செய்கின்றார்.[2] கலை கொண்ட பிறையை அலங்கரித்த செந்நிறச் சடையுடன் மலைமகள் இடப்பாகத்தில் அமர்ந்து விளங்க, கணகண, கட்கட் கணின்கண் என்று ஒலிசெய்து நடனம் ஆடுகிறார் எம் கருணைப் பிரான்.[3]

தொகுத் தொகுத் தொகு தோதோ
தொகுதொகு
தொகுத் தொகுத் தொகு தோதோ
தொகுதொகு தொந்ததீதோ
துடுட்டு டுட்டுடு டூடு டுடுடுடு
திகுத்தி குத்திகு தீதோ எனவொரு
துவக்க நிர்த்தனம் ஆடா
வுறைபவர்...

(முகத்துலக்குகள்... திருவண்ணுமலை)

என நம்முன் நடராஜர் ஆட்டத்தை ஒலிக்கச் செய்கிறார் அருணகிரிநாதர். தொந்தத் தொகுகுட என்னும் கழலொழி மிக்கெழ, சிலம்பணிந்த செவ்விய அழகிய பாத்தை அழகாகச் சுற்றி நடனம் செய் கின்றார் நிருத்தமூர்த்தி.[4] திமித்தத் தித்தி மித்தத்தோ என ஆடிய சமர்த்தர் தேவர் கள் நாயகராகிய திருச்சிற்றம்பலத்தான்.[5] புலியின் தோலை உடுத்து, அரவாபரணம் பூண்டு விளக்கமுற நடனம் ஆடுகின்றார் சிவபெருமான்.[6]

---

1. சிலமுடன் .... (திருப்புகழ்)
2. திருவினை... திருவண்ணுமலை
3. சிலம்புதல்.....
4. வித்துப்புளதை. .. திருவண்ணுமலை
5. அடப்பக்... சிதம்பரம்
6. பரவுஉனது... விரிஞ்சிபுரம்.

திரிரிரி தித்திதி தீதீ தீதிதி
தொகுதொகு தொத்தொகு தோதோ
தோதிகு தொகுதீதோ
திமிதிமி தித்திமி ஜேஜே தீதிமி
தெனவரி மத்தள மீதார் தேமுழ
திடுவென மிக்கியல் வேதாவேதொழு
திருநடமிட்டவர்.....
(வருமயி.....திருமயிலை)

என்ற அருணகிரிநாதர் பாடல்களில் திருமால் மத்தளம் வாசிக்கவும் பிரமன் தாளம் போட்டுத் தொழவும் சிவ பெருமான் நடனம் நிகழ்வதைக்காண் கின்றோம். நாரதரும் தும்புருவும் இசைபாட நடனம் ஆடுகின்றார் சிவ பெருமான். ''செக செச் சேசெச்செக'' என முரசொலி முழங்கித் தம்மைச் சூழ்திருநடம் புரிகின்றார்.[8] பூதகணங்கள் பல நடனம் செய்ய, வேகத்துடனே பறை வாத்தியங்கள் முழங்கக் கழுகுக் கூட்டங்கள் ஆட, வீசி எறியப்பட்ட பம்பரம் போல மகிழ்ச்சி பொங்க நடனம் செய்கிறார் விடைக்கொடி யுடைய சிவபெருமான்[9]. அவர் ''நடவிநோத தாடாளராகத் திகழ் கிறார். பெருமை பொருந்திய துர்க் கையின் படைக்கணங்கள் தர்க்கித்து செருக்குற்று ஒன்று சேர்ந்து கூடிப் பொருந்தி இருபக்கங்களிலும் உடுக் கையின் ஒலியை நடனக்கதிவகைக்கு ஏற்றபடி அளவுடன் ஒலிக்க, அணிந் துள்ள பாம்பு தொங்கி நகர்ந்து செல்ல, அக்கூத்தின் போக்கினைக் கவனித்துத் திருமால் கரத்தால் மத்தளம் அடிக்கக் கிட்டிப்புள் பாய்வது போலப் பாய்ந்து கூத்தின் இலக்கணத்தை ஆய்ந்து பெரிய காட்டிடையே நடனமாடுகிறார் சிவ பெருமான் என்று அருணகிரிநாதர் பாடும்போது நாமும் அந்த ஆட்டத்தில் இலயித்து விடுகிறோம்.[10] உடலம் பதைத்துக் கோபத்துடன் வந்த முயலகன் என்னும் பூதத்தின் முதுகு நெறுநெறு என்று முறிய, இருள்பரந்த நாகலோகம் முழுதும் ஒப்பற்ற அடி ஓடிச் செல்லவும் பழைய ஆகாயத்தின் உச்சி இடியவும், சந்திரனுடைய முடி பெயரவும் அவர் உயரும் போது சகல உலகங்களும் அதிர்ச்சி உறவும் வீசி சுங்கணம் அணிந்த திருக்கை விளங்க நடனமிடும் கூத்தப் பிரான் என்று அருணகிரிநாதர் அற்புதமாகக் காட்டு கிறார்''[11]. சிவகாம சுந்தரி மகிழவும் ''முது பேய்கள் திக்குச் செகெண தித்தரி திகுதிகு செச்செச் செணக்குத டொட்டரி செணக்குத டெட்டெட் டுடுடுடு தத்தரி தரியென நடமாடும் கொற்றப் புலியதள் சுற்றிய அரன்'' என்று பாடுவார். ''திக்குக்குத் திக்குத் திகுதிகு டுட்டுட் டுட்டுட்டுட் டுடுடுடு தித்தித்தித்தித்தித் திதி யென நடமாடும் சித்தர்'' என்று போற்றுவார்.

சிதம்பரத்தில் இறைவன் ஆடும் ஆனந்த தாண்டவத்தை அருணகிரிநாதர் அழகுப்பட போற்றுகின்றார். உலகின் இயக்கமே சிதம்பரம் ஆடல் வல்லானின் ஆனந்தத் தாண்டவத்தில் அமைந்துள்ள தல்லவா! சிதம்பரம் என்றவுடன் ஆடல் வல்லானின் அற்புத்திருவுருவம் நம்மைச் சிந்திக்கச் செய்கின்றது. உலக உயிர்கள் இன்புற வேண்டி ஞானமே வடிவாகிய சிவபெருமான் தில்லைச் சிற்றம்பலத்தில் ஆனந்த அருட் கூத்தாடுகிறார். சராசரங்கள் அனைத்தும் இன்பமுற அத்தாண்டவம் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றது. உலகமே புருடவடிவ மெனக் கொண்டால் அப்புருடனின் இதயமாகச் சிதம்பரம்

---

7. வாருமிங்கே... கடம்பூர்
8 முகிலெக.. திருநெய்த்தானம்
9 காரணி. . திருத்தவத்துறை
10 கடரொளி... திருப்புகழ்
11. விடமளவி .. திருப்புகழ்

திகழ்கின்றது. ஒருவனது துடிப்பும் நடிப்பும் ஒளியும் ஒலியும், அவனுடைய இதயத்தின் தடை படாத இயக்கத்திலேயே உள்ளது. அது போலவே உலக புருடனுடைய இயக்கமும் இதயத் தாமரையாகிய சிதம்பரத்தில் விளங்கும் நடராஜப் பெருமானுடைய ஆனந்தத் தாண்டவத்திலே அமைந்துள்ளது. அணுவுக்கு அணுவாயும் மகத்துக்கு மகத்தாயும் விளங்கும் பரம்பொருள், சித் அம்பரம்-அறிவுப்பரவெளியில், இன்பமாக ஆடும் தத்துவமே இங்கே காட்டப் பெறுகிறது. அணுக்கள் எல்லாம் ஏகதாளத்தில் ஆடிக்கொண்டிருக்கின்றன என்பது அறிவியலார் கண்ட பேருண்மை! பேரறிஞர் ஐன்ஸ்டீன் தாம்கண்ட அணு தத்துவத்தை நடராஜர் திருவுருவில் முன்னமே அமைந்திருப்பது கண்டு பரவசமுற்று இன்புற்றார். ஆண்டவன் ஆட அணுக்கள் இயங்குகின்றன. அணுக்கள் இயங்க அண்டங்கள் இயங்குகின்றன.

ஆடல்வல்லானின் ஆனந்தத் திருக் கூத்து மற்றொரு உண்மையையும் விளக்கி நிற்கிறது. ஆனந்தம் உள்ள ஒருவர் தானே யாருக்கும் ஆனந்தம் தரமுடியும்! ஆகவே ஆனந்தம் வேண்டுவோர் ஒப்பற்ற ஆனந்த மூர்த்தியான தில்லையம்பலவனை நாடி ஓடிவந்து பாடிப்பரவிப் போற்றுகின்றதில் வியப்பேது! அடியார்களின் ஆனந்த வேட்கை கண்டு, எல்லையிலா ஆனந்தத் துடன் தில்லையில் ஆடுகின்றார் இறைவன். அவனது ஆட்டத்தில் ஐந் தொழில்களும் நிகழ்கின்றன.

தத்துவப் பெட்டகமாகத் திகழும் தில்லைத்திருக்கோயிலில் பொன்னம்பலக் கூத்தன் பொலிவுடன் ஆடுகின்றார். நமசிவாய என்னும் ஐந்தெழுத்தும் இங்கே ஐந்து படிகள்; 28 ஆகமங்கள் 28 தம்பங்களுடன்கூடிய **பிரமபீடமாகவும்**, 96 தத்துவங்கள் சுவாட்சி பந்தியாய் **விஷ்ணு பீடமாகவும்** உள்ளன. 6 சாத்திரங்களும் 6 தம்பங்களாய் ஈசுவரபீடமாயுள்ளது. 4 வேதங்களும் 4 தம்பங்களாகச் **சதாசிவ பீடமாகத்** திகழ்கின்றது. மகாமாயை திரையினால் மறைக்கப்பட்டு இரகசியத்தானமாக உள்ளது. உபய பாரிசத்திலேயும் தரிசனவேதி, பரிசவேதி மந்திரத் தானமாக அமைந்துள்ளது. மகா பிரணவ ரூபமாகிய இரகசியம் பிரதட்சிணமா யுள்ளது. 64 கலை ஞானங்களும் 64 கைமரங்களாகவும், 24 புவனங்களும் 24 பலகைகளாகவும் அமைந்துள்ளது. 21600 உட்சுவாசம் நிச்சுவாசமும் 21600 தங்கூடுகள் 72000 நரம்புகளும் 72000 ஆணிகள். 18 புராணங்களும் 18 தம்பங்கள் இவ்வாறு மானுடராக்கை வடிவு சிதம்பரமாகவும் மானுடராக்கை வடிவு திருக்கூத்தாகவும் அமைந்துள்ளதை எண்ணித் திருமூலர் போற்று கின்றார். இவ்வளவு சிறப்பும் உள்ளடக்கியது திருச்சிற்றம்பலம். இதை அருணகிரிநாதர் பலவாறு போற்றுகிறார் இங்கே விளங்கும் பேரம்பலத்தைக் காட்டுகிறார்[12].

''சிற்பரன் தற்பரன் சீர்திகழ்த்தென்புலியூர்
நற்திரன் பத்திரஞ் சூலகர்த் தன்சபையில்
சித்தியென் றொத்திநின்றாடும் சிற்றம்
பலவர்... (தத்தையென்)

எனவரும் சிதம்பரத் திருப்புகழ்ப்பகுதி பயின்று இன்புறவேண்டியதொன்றாம்.

பதஞ்சலி வியாக்ரபாதருக்காக எம் பெருமான் ஆடியமாண்பினை அழகாகப் பேசுகிறார் அருணகிரிநாதர் ''மணிமுடிகள் அழகாக உடைய (ஆயிரம் பாரமுடிகளை யுடைய) பாதாள லோகனுகிய ஆதி சேடனும், பச்சை நிறம் உடல் முழுமையும் உள்ள சர்ப்ப ராஜனுகிய பதஞ்சலியும்,

---

12. சங்-சங்குபோல்...திருப்புகழ்

மதுநெறி தவருமல ஆட்சி செய்யும் சோழ மன்னனும், தேவர்களோடு சேர்ந்து வரும் இந்திரனும், புகழும் சிதம்பர சபாநாய கரும் அவரருகே விளங்கும் மடமயில் போன்ற சிவகாம சுந்தரியும்[12] என்று வரும் திருப்புகழ் பகுதியும் ஈண்டு சிந்திக் கத்தக்கது. "ஆதிசேடனுகிய பாம்பின் மேலே இன்பமாக விளங்கிக் கண்துயிலும் நீண்ட வடிவிரான திருமாலுடன், பிரமன் காணமுடியாது நின்று பாம்புருவமுள்ள முனிவராகிய பதஞ்சலியும், தாவிச் செல்லும் புலிப்பாதங்களைக் கொண்ட வியாக்ரபாத முனிவரும்

பொருந்திநின்று எதிரே தெரிசிக்கும்படி நடன மாடும் கூத்தப்பெருமான் நடராஜர்" என்று வருணித்து, "அப்பெருமானுடைய கனகாபுரியில் பொன்வண்ணப் புரிசடை யில் விரும்பி விளையாடும் குழந்தையே[13] என்று முருகனே வருணிக்கும் அருணகிரி நாதருடைய திருப்புகழ் வரிகள் நம்மை மெய்ம்மறக்கச் செய்கின்றன!

"அரியயன் அறிந்திடாத அடியினை
சிவந்தபாதம்
அடியென விளங்கியாடு நடராஜன்"....
(இருவினை...)

எனவரும் பகுதியில் பஞ்ச கிருத்தியங் களுக்கு எல்லாம் ஆதிகாரணமாக விளங்கியாடும் நடராஜரைப்போற்றுகிறார் அருணகிரிநாதர்.

"ஆகாயத்தில் ஒலிக்கும் பேரிகை வாத்தியத்துடன் கணநாதர்கள் புகழ், வேதவிற்பன்னர்கள், இந்திரர், சந்திரர் சூரியன், கவிவாணர்கள், தவசி ரேட்டர்கள், வியாக்கிரபாதர், பதஞ்சலி, பிரமன், அழகிய திருமால், அவருடன் இலட்சுமி, சரஸ்வதி, அவளுடன் அரிய தவமுனிவர்களின் பத்தினிமார்கள், விண் ணில் உள்ள அரம்பையாதி

தேவ மாதர்களுடன் விளங்கும் சிறப்புடைய நாகலோக மாதர்களும், அழகிய மண் ணுலக மாதர்களும், அருந்ததி ஆகிய மாதர் களும் புகழ, நடனம் புரிந்த தாமரை யொத்த செவ்விய திருவடிகளை யுடைய வருடைய பக்கத்திலும் உள்ளத்திலும் உள்ள சிவகாமசுந்தரியாம் பார்வதி பெற்றருளிய கற்பகவேளே' என்று சிதம்பரத்தில் முருகனை அழைக்கிறார். அருணகிரிசுவாமிகள்[14] பார்வதியை மணந்தவுடனேயே அவள் வசீகரிப்புடன் அமர்ந்து மகிழுமாறு தில்லை யில் பெரிய நடனத்தை ஆடுகிறராம் சிவபெருமான்[15] உறுதி பயக்கும் கனகசபை யில் பொன்னம்பலத்தில் பதஞ்சலி வியாக்கிர பாதர் மீது வைத்த அன்பினாலே நடனம் புரிகின்றார் சிவபெருமான்[16].

சிவபெருமானின் நடனமே பஞ்-சாக்கர வடிவம் என்பதை அழகாகக்-காட்டுகிறார் அருணகிரிநாதர். ஆம்! அது பஞ்சாக்கரநடனம்!

நகர மிருபாதமாகி மகர வயிறுகி மார்பு
நடுசிகர மாகிவாய் வகரமாகி
நதிமுய சாரமாகி உதயதிரு மேனியாகி

---

12 சாநதுடனே... சிதம்பரம் திருப்புகழ்
13. கடலொத்த ... சிதம்பரம் திருப்புகழ்
14. மந்த்ரமென. . சிதம்பரம் திருப்புகழ்
15. சாந்துடனே... சிதம்பரம் திருப்புகழ்
16. கடலொத்த.. சிதமபரம் திருப்புகழ்

நமசிவய மாமையாகி எழுதான....
(நகரமிரு....)

நமசிவய என்னும் ஐந்தெழுத்தில்
நா–நடராஜமூர்த்தியின் இருபாதங்கள்
மா–திருவயிறு
சி– அவரது மார்பு நடுசிகரமாகி நடுவில்-
உள்ள "சி" என்னும்
எழுத்தாகும்.
வ – அவரது திருவாய்
ய–கங்கைநதியை அணிந்த திருமுடி
'ய' என்னும் எழுதழ்தின் சாரமாகஉள்ளது.

என்பது அருணகிரிநாதர் தரும் அற்புத விளக்கமாகும்; இங்கே கீழ்வரும் மூன்று உண்மை விளக்கப் பாடல்களை நாம் சிந்தித்து இன்புறவேண்டும்

சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் – பார்க்கில்
இறைக் (கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனூர்
தங்கும் மகரமது தான்.
ஓங்கார மேநல் திருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம்–ஆங்காரம்
அற்றூர் அறிவர்அணி அம்பலத்தான் ஆடல்இது
பெற்றூர் பிறப்பற்றூர் பின்.

தோற்றம் துடியதனில் தோயும் திதி மைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் –ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம் –முத்தி
நான்ற மலர்ப்பத்தே நாடு.

அருணகிரிநாதர், சிவபெருமானின் பல்வேறு தாண்டவ பேதங்களையும் அருமையாகக் காட்டுகின்றார். பரதகுரு என்று சிவபெருமானைப்போற்றுகிறார்.

குழுதபதி வகிரமுது சிந்தச்சிந்தச்
சரணபரி புரசுருதி கொஞ்சக் கொஞ்சக்
குடிலசடை பவுரிகொடு தொங்கப்பங்கிற்
கொடியாடக்
குலதடினி அசைய இசை பொங்கப்
பொங்கக்
கழலதிர டெகுடெகுட டெங்கட் டெங்கத்
தொகு குகுகு தொகு குகுகு தொங்கத்
தொங்கத் தொகுதீதோ
திமிதிமென முழவொலி முழங்கச்
செங்கத்
தமருக மததிர் சதியொடன்பர்க்கு இன்பத்
திறமுதவும் பரதகுரு... (அழுதுததி....
திருச்செந்தூர்)

'பரதத்தை அடக்கிநடிப்பவர்' என்று மற்றொரு திருப்புகழ் (புருவத்தை.....) பேசுகிறார்.

ஊர்த்துவ தாண்டவச் சிறப்பினை ஐந்து திருப்புகழ்ப் பகுதிகளில் அழகாகக் காட்டுகிறார். அருணகிரிநாதர்[17] ஊர்த்துவ தாண்டவத்தின் நயத்தினை "ஏழை அறவனே குழைநக்கும் பிஞ்ஞகன்தன் கூத்து" என்று திருவள்ளுவர் கூறியதும் ஈண்டு சிந்தித்தற்குரியது.

சொக்கநடனம் பற்றி அருணகிரிநாதர் பேசுகிறார். இது சுத்தநிர்த்தம் எனப்படும். 108 கரணமுடைய இக்கூத்தின் விரிவை சிலப்பதிகாரம் (3-12 உரை பக் 80ல்) இனிது பேசுகிறது.

துர்க்கை பக்க சூலகாளி செக்கைபுக்க
தாளஓசை
தொக்க திக்க தோத தீத வென ஓதச்
சுற்றிவெற்றி யோடுதாள்கள் சுத்தநிர்த்
தமாடும் ஆதி....
(மைக் கணிக்கன்....)

எனவரும் திருப்புகழ்வரிகளில் துர்க்கையும் காளியும் சூழச்சொக்க நடனம் ஆடும் இறைவனைக்கண்டு மகிழ்கிறோம். தமிழகத்தில் 108 கரணங்களையும் விளக்கும் சிற்பங்கள் உள்ளன. சிதம்பரம் திருக்கோவிலின் நான்கு ராஜகோபுரங்கள் ஒவ்வொன்றிலும் 108 கரணங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு, மேற்குக் கோபுரங்களில் உள்ள கரணச் சிற்பங்களில் பரத முனிவரின் விளக்க வடமொழிச் சுலோகங் களும் செதுக்கப்பட்டுள்ளன [18]. தஞ்சைப்பெரிய கோவில் விமான முதல்நிலை உட்புறத்திருச் சுற்றில் 81 கரணங்கள் உள்ளன. மீதி 27 கரணங்களுக்கும் இடம் விடப்பட்டுள்ளன. இங்கே சிவபெருமான் நான்கு கரங்களுடன் ஆடுகிறார். கும்பகோணம் ஸ்ரீசாரங்க பாணி சுவாமி கோயிலில் 103 கரணங்கள் உள்ளன. இங்கே சிவபெரு மான் இருகரங்களுடன் ஆடுகிறார். திருவண்ணாமலை திருக்கோயில் இராஜ கோபுரத்திலும், விருத்தாசலம் திருக் கோயில் இராஜ கோபுரத்திலும் உமா தேவியார் ஆடும் கரணங்கள் உள்ளன.

அருணகிரிநாதர் அட்ட வீரட்ட தாண்டவத்தையும் அழகாகக் காட்டுகின் றார். அட்டவீரட்டத் தலங்களை நினைவிற் கொண்டு திருப்புகழ் பாக்களைக் காண் போம்

17. தலைவலிமருத்....வேதவெற்பி....,
கனவாலங் ...,பொன்றுமன்...,வடிவது நீலங்...
18. காஞ்சி ஜகத்குருவின் ஆணைப்படி சதாராவில் புதிதாக அமைக்கப்பட்டு, 9.6.85ல் கும்பாபிஷேகம் நடைபெற்ற சதாரா உத்தரசிதம்பரம் கோவிலில் 108 கரணங்கள் பதிக்கப்படஉள்ளன.

கண்டியூர் – பிரமன்சிரம் கொய்தது
திருக்கோவிலூர் – அந்தகாசுரவதம்–அந்த காசுரவததாண்டவம்
திருவதிகை – திரிபுரதகனம் – திரிபுர சங்காரதாண்டம்
திருப்பறியலூர் – தக்கன்வேள்வி தகர்த் தது
திருவிற்குடி – சலந்தராசுரவதம் – சலந் தராசுரவததாண்டவம்
வழுவூர் – கஜசங்காரம் – கஜசங்கார தாண்டவம்
திருக்குறுக்கை – காமதகனம் – காமதகன தாண்டவம்
திருக்கடவூர் – காலசங்காரம் – காலசங காரதாண்டவம்

"திரிபுர மெரிய, வேழசிலை மதன்
எரியமூரல்
திருவிழி யருள் மெய்ஞ்ஞான
குருநாதன்
திருசரஸ்வதி மயேஸ்வரி இவர்
தலைவரோத
திருநடம் அருளும் நாதன் ...
(ஒருவரை யொருவர்...)
"நெற்றிவிழி பட்டெரிய நட்டமிடும்
உத்தமர்"
(வெற்றிசெய....)

"கற்புரத்தை வீட்டி நட்ட மீட்டநீற்றர்
கத்தர் பித்தர் கூத்தர் குருநாதா
(முத்துரத்ன... காஞ்சி)
களிற்றுரித்து வென்று திருநட்டமிட்ட
கம்பனும்..... (கிஞ்சுக.....)

எனவரும் பகுதிகளில் அருணகிரிநாதர் திரிபுரசங்கார தாண்டவம், காமதகன தாண்டவம் கஜசங் காரத்தாண்டவம் ஆகியவற்றைக் காட்டுகிறார்.

திரிபுரத்தை அழித்தபோது இறைவர் ஆடியநடனம் கொடுகொட்டி, பாண்டரங்கம், ஆகும்.

"திரிபுரம் எரியத்தேவர் கொண்ட
...ஆடிய
கொடுகொட்டி ஆடலும்
தேர்முன் நின்ற திசைமுகன் காண
ஆடியவியன்
பாண்டரங்கமும்"

என்று சிலப்பதிகாரம் பேசும் (6.40–45)

கலித்தொகை கடவுள்வாழ்த்திலும்
"நீறணிந்து பாண்டரங்கம் ஆடுங்கால்"
என்று பேசப்படுகிறது.
நமதுதிருஞானசம்பந்தரும்

சிட்டமார்ந்த மும்மதிலும்.. சுட்டு மாட்டி

நட்டமாடும் நம்பெருமான்..(1-49-8)

என்று இதனைப் போற்றுவார்.

அருணகிரிநாதர் இறைவன் மதுரையில் கால்மாறி ஆடியதையும் காட்டுகிறார்.

ஏராரு மாடகூட மதுரையில்
மீதேறி மாறி ஆடும் இறையவர்
(சீரானகோல...)

"சேவிலேறுநிருத்தர்" என்று அருணகிரிநாதர் இடபவாகனத்தில் ஏறும் நடன மூர்த்தியைக் காட்டுகிறார். (கோவை... வயலூர் திருப்புகழ்) ஊழித்தாண்டவத்தையும், நீலகண்ட நடனத்தையும் காட்டுகிறார் அருணகிரிநாதர். உலகம் முழுமையும் வியாபித்து நின்று அருள்புரியும் திருமால், அவர்பெற்ற பிரமன், நான்கு வேதங்கள், தேவர்கள் இவர்கள் யாவரும் வாழக் கடலினின்றும் எழுந்த விடத்தை உண்டு பெரிய நடனமாடினார் பரமன் என்று போற்றுகிறார்.[19]

இறைவன் ஆடல் வகை எண்ணற்றது. அவன் பல இடங்களிலும் ஆடுகிறான். இறைவன் "பரதமாடி" "கானுடி" "தீயாடி" என்றெல்லாம் போற்றுகிறார். சிவபெருமான் ஊழி இறுதியில் வடவா முகாக்கினியே மஞ்சனமாக ஆடுகிறார் அல்லவா! (தக்கயாகபரணி: 650 உரை காண்க). அவரது ஆட்டம் உலகையே ஆட்டி வைக்கிறது என்கிறார் அருணகிரிநாதர்[20] இறைவனது ஆடலால்தாளத்தின் இலக்கணவிளக்கம் சிதம்பரம் திருப்புகழ்ப் பாடல்களில் 63 பாடல்கள் கிடைக்கிறது[21] தனித்தனிச் சந்தபேதங்களுடன் திகழ் வதையும் ஈண்டு கருதி இன்புறுவோம். திருப்புகழ்ச் சந்தங்கள் சிலம்பொலிக்கு ஒத்தனவாய் தாளபேதங்கள் சிறக்க மெல்லோசையுடன் அமைந்துள்ளன.

இறைவன் பலவிதமான (சாரி) வட்டமாய் ஓடுதல் முதலான கூத்துக் கலையும்

(சதி) தாள ஒத்துக்கலையும் கொண்டு ஆடுகிறார் என்று கூறுகிறார் அருணகிரிநாதர்[22]

பேரூர்த்திருப்புகழில், அங்கே பரமன் ஆடியதாண்டவச் சிறப்பைப் பேசுகின்றார் அருணகிரிநாதர்.

பட்டியாள்பவர் கொட்டியாடினர்
பாரூராதூழ் பேரூர் ஆள்பவர் பெருமாளே!
(மைச்சரோருக.....)

அம்பிகைபாட இறைவன் ஆடுகிறார் எனவரும் இருதிருப் புகழ்ப்பகுதிகள் நினைத்து இன்பு றுவதற்குரியன.

அகர மாதியாம் அட்சரங்கள்
அவனிகால் விணரப் பொடங்கி
அடைய ஏக ரூபத்திலொன்றி முதலாகி
அமரர் காணவே யத்தமன்றில்
அரிவைபாட ஆடிக்கலந்த
அமலநாதனர்....
(முகமெலா... மதுரை)

அகரம் முதலான 51 அட்சரங்கள், பூமி, காற்று, விண், நீர், தீ இவையனைத்தும் கூடிட, ஏகவடிவில் ஒருருவமாய் – கூத்தனாய் – நடராஜப்பெருமானாய் – முதற் பொருளாய் விளங்கி, தேவர்கள் தரிசிக்க பொன்னம்பலத்தில் – தில்லைச்சிற்றம் பலத்தில் தேவிபாட ஆடும் மலமற்றநாதரான சிவபெருமான்.

சாங்கரி பாடியிட ஓங்கிய ஞானசுக
தாண்டவம் ஆடியவர் (சாங்கரி...)

பார்வதி தேவிபாட/தாளம் போட மேம் பட்டு விளங்கும் ஞான ஆனந்தத்தாண்டம் ஆடும் சிவபெருமான் என்று அருணகிரி

---

19 வடிவேவேல் ... திருப்புகழ்
20. பாட்டிலுருகி... திருப்புகழ்
21. ஆனைவரிக் .. திருப்புகழ்
22. வெருசாரி... சதிதாண்டவத்தர்.

நாதர் பாடும் போது, கும்பகோணம் ஸ்ரீநாகேஸ்வரசுவாமி திருக்கோயிலில் (குடந்தைக் கீழ்க் கோட்டம்) விளங்கும் ஸ்ரீநடராஜர் – சிவகாமசுந்தரி திருவுருவங்கள் நம் மனக்கண்முன்வரும். இங்கே சிவகாமசுந்தரி கையில் தாளத்துடன் விளங்குவது ஓர் அற்புதமான காட்சியாகும். திருமால் இங்கே புல்லாங்குழலூதி ஆடல்வல்லானுடைய நடனத்தைச் சிறப்பிப்பதும் மற்றொரு சிறப்பாகும்.

இறுதியாக அருணகிரிநாதர் காட்டும் அற்புதமான தாண்டவம் ஒன்று உள்ளது. அதுவேறு எந்த நூலிலும் நாம் காணமுடியாததொன்று. சிதம்பரத்தில் சிவபெருமான் ஆடலேத்தான் நாம்காண்கிறோம். ஆஞல் அருணகிரிநாதருக்கு முருகனே தாண்டவதரிசனம் அருளிய அற்புதத்தை என்னென்பது! அவருடன் சேர்ந்து நாமும் அதனைக்கண்டு மகிழ்வோம்.

தரிகிட தரிகிட தாகு டாத்தரி
கிடதரி கிடதரி தாவெனச்சில
சபதமொ டெழுவன தாளவாச்சிய
முடனே நீள்
அகுகுகு குகுவென ஆளிவாய்ப்பல
அலகைக ளடைவுடன் ஆடும்
ஆட்டமும்
அரனவ னுடனெழு காளிகூட்டமும்
அகலாதே
அரிதுயில் சயனவியாள மூர்த்தனும்
அணிதிகழ் மிகுபுலி யூர்வியாக்ரனும்
அரிதென முறைமுறை ஆடல்காட்டிய
பெருமாளே!
(மகரமொடு... சிதம்பரம்)

"தரிகிட தரிகிட தாகுடாத்தரி கிடதரி கிடதரி தா என்னும் ஒலிகளுடன் எழுகின்ற தாள வாத்தியங்களுடனே நெடுநேரம் அகுகுகுகு என்னும் ஒலியுடன் யாளியின் வாய் போன்ற வாயையுடைய பலபேய்கள் முறையுடனே ஆடுகின்ற கூத்தும், சிவபெருமான் ஆடலின்போது உடன் எழுந்து ஆடுகின்ற காளிகளின் கூட்டமும் நீங்காது உன்னைச் சூழ திருமால் உறங்கும் படுக்கையான ஆதிசேட மூர்த்தியாம் பதஞ் சலிமுனிவரும், அழகு பொலியும் பேர் பெற்ற புலியூரில் நடேசப் பெருமானுடைய நடனதரிசனம் கண்டுகளிக்கும் வியாக்கிரபாதரும் ஆகிய இவ் விருவரும் கூட முருகா! உனதுநடனம் (சிவபெருமானது திருக்கூத்தைவிட) அருமை வாய்ந்தது என்று வியந்து கூறும்படி வித விதமான கூத்துக்களை ஆடிக்காட்டிய பெருமானே! என்று அருணகிரிநாதர் தாம் கண்ட முருகனது நடனக்காட்சியை, தில்லைச் சிற்றம்பலவன் திருநடனக் காட்சியுடன் நாமும் கண்டு இன்ப அன்பில் திளைக்கத் திருவருள் துணை புரியட்டும். □

வென்றி மாமல ரோனும் விரிகடல் துயின்றவன் தானும்
என்றும் ஏத்துகை உடையார் இமையவர் துதிசெய விரும்பி
முன்றி மாமலர் வாச முதுமதி தவழ்பொழில் தில்லை
மன்றில் ஆடல துடையார் வாழ்கொளி புத்தூருளாரே.
—தனித் தேவாரப் பாடல்

WITH BEST COMPLIMENTS FROM

STERLING HOLIDAY RESORTS (INDIA) PRIVATE LIMITED

GLENEDEN PLACE
813, POONAMALLEE HIGH ROAD
KILPAUK □ MADRAS—600 010.

PHONE: 666520
POST BOX: 1048
TELEX: 041—6105

வரலாறு



தில்லைகோபுரப்பகுதி

சிம்மவர்மனின் தில்லைத் திருப்பணி

பேராசிரியர் டாக்டர் க. த. திருநாவுக்கரசு,
உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

சங்க கால முடியுடை மூவேந்தர்களின் ஆட்சி, கி. பி. மூன்றாம் நூற்றாண்டு அளவில் மறையலாயிற்று. தொண்டை மண்டலம் அயலவரான பல்லவரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது.

பல்லவரின் ஆட்சி:–

தமிழக மண்ணில் கி. பி. ஆறாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பல்லவப் பேரரசு வேரூன்றத் தொடங்கியது. அப்பேரரசிற்குத் தமிழகத்தில் கால்கோள் விழா நடத்தியவனே சிம்மவர்மனுவான். இவனே இரண்டாவது சிம்மவர்மன் என வரலாற்று ஆசிரியர்கள் சுட்டுவர்.

மாண்புமிகு பல்லவர்:–

காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு, கி. பி. ஏழாம் நூற்றாண்டு முதல் ஆட்சி செய்த பல்லவ மன்னர்கள் 'மாண்புமிகு பல்லவர்கள்' எனப் போற்றப்படுகின்றனர்.

மாண்புமிகு பல்லவர்களுள், முதலாம் மகேந்திரவர்மன் (கி. பி. 600 –625) முதற்பெரும் பேரரசன் ஆவான். அவனுடைய தந்தைவழிப் பாட்டனே இரண்டாம் சிம்மவர்மனுவான். மகேந்திரனுடைய தந்தையின் பெயர் சிம்ம விஷ்ணு என்பதாகும். சிம்மவிஷ்ணு (கி. பி. 575 – 600) அரசனுவதற்கு முற்பட்ட காலத்தில், இளவரசனுகப் பல்லாண்டுகள் பணிபுரிந்தான்.

எனவே, சிம்மவர்மன் ஆட்சிக் காலத்தில் (கி. பி. 550 – 575), அவன் பெற்ற வெற்றிகளுக்கு எல்லாம், சிம்ம விஷ்ணவும் காரணமாவான்.

சிம்மவர்மனின் எழுச்சி:–

சிம்மவர்மனின் ஆட்சியில் முதன் முதலாகத் தொண்டை மண்டலத்தில் தென் பகுதியான தென்னற்காடு மாவட்டத்தில், முழுமையாகப் பல்லவர் ஆதிக்கம் பரவியது; பிறகு காவிரிவரை விரிந்தது.

தென்னற்காடு மாவட்டத்தில் பன்னெடுங்காலமாகச் சிறப்புற்று விளங்குவது 'தில்லை' எனப்படும் சிதம்பரமாகும். சிதம்பரத்தில் உள்ள நடராசர் கோயில் எக்காலத்தில், எவ்வாறு தோன்றியது என்பதை அறுதியிட்டுக் கூற இயலவில்லை.

திருவாலங்காடு:–

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் காரைக்கால் அம்மையார். அவருடைய காலத்தில், காரைக்காலுக்கு அருகில் உள்ள சிதம்பரத்தில் தில்லை நடராசப் பெருமானின் திருக்கோயில்

இருந்ததைப் பற்றிய ஒரு குறிப்பும், அம்மையாரின் அருட்பாடல்களில் காணப் பெறவில்லை. ஆனால், செங்கற்பட்டு மாவட்டத்தின் வடகோடியில் இன்றைய 'அரக்கோணம்' எனும் ஊருக்கு அருகி லுள்ள திருவாலங்காட்டில் எழுந்தருளி யுள்ள அம்பலவாணரையே, அம்மையார் பலவாருகப் போற்றிப் பாடியுள்ளார். ஆலங்காடே அம்மையின் முத்தித் தலமாகவும் கருதப்படுகிறது.

இதிலிருந்து ஓர் உண்மை புலனு கிறது. காரைக்கால் அம்மையாரின் காலத்தில் (கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில்) தில்லைத் திருக்கோயில், தோற்றுவிக்கப் பட்டதாகத் தெரியவில்லை.

சிம்மவர்மனின் சிறப்பு:–

தொடக்க காலத்தில் சிம்மவர்மன், தஞ்சை மாவட்டத்தில் உள்ள பள்ளன் கோயில் என்னும் ஊருக்குச் சற்றுக் கிழக்கே இருந்த ஒரு சமண சமயப் பள்ளிக்குச், சில ஊர்களைத் தானமாக அளித்துள்ளான். இதனை, அவனுடைய 'பள்ளன்கோயில் செப்பேடு' தெரி விக்கிறது. ஒருகால், தொடக்க காலத்தில் சிம்மவர்மன் சமணச் சமயச் சார்புடைய வனாக இருந்திருப்பானோ எனும் ஐயம் வரலாற்று ஆசிரியர்கள் இடையே உண்டு.

தெள்ளாற்றுப் போரில் பெருவெற்றி பெற்றவனும், 'நந்தி கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்' எனும் பழமொழிக்கு நாயகனுமான மூன்றாம் நந்திவர்மன் (கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு) வழங்கிய செப்பேடு 'வேலூர்ப் பாளையம் செப்பேடு' என்பதாகும். அதில், சிம்மவர்மனைப் பற்றிய பாராட்டுரை பின்வருமாறு அமைந்துள்ளது.

"புகழ்மிக்க வீரத்தைக் கொண்டவன்
சிம்மவர்மன், பகைவருடைய
மதத்தை அடக்கியவன் சிம்மவர்மன்,
போரிலே பகைவரை அழிப்பதில்
யமனைப் போன்ற பேராற்றல்
வாய்க்கப் பெற்றவன் சிம்மவர்மன்"
(பல்லவர் செப்பேடுகள் முப்பது பக். 259)

எனச் சிம்மவர்மன் பாராட்டப் பெற் றுள்ளான். அவனுடைய ஆட்சியின் பிற்பகுதியில் காவிரிக்குத் தெற்கே இருந்த களப்பிரர்களும், முத்தரையர்களும் பல்லவரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டு, சிற்றரசர்களாகத் திறை செலுத்தினர்.

சிம்மவர்மனின் தில்லைத் திருப் பணியைத் தெரிவிக்கும் கல்வெட்டோ, செப்பேடோ இன்றுவரை கிடைக்க வில்லை. ஆனால், சைவர்களால் 'கோயில்' எனப் போற்றப்படும் தில்லை நடராசப் பெருமானின் திருக்கோயிலின் வரலாற்றைக் கூறும் நூல், 'கோயில் புராணம்' என்பதாகும். இதனைப் பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் இயற்றியுள்ளார்.

அந்நூலின் நான்காவது சருக்கமாக விளங்குவது 'இரணியவர்மன்' சருக்க மாகும். அச்சருக்கமே சிம்மவர்மனின் தில்லைத் திருப்பணியைப் பற்றிப் பேசுகிறது.

தில்லைத் திருப்பணி:

சிம்மவர்மனின் தென்னாட்டுப் படையெடுப்பின் போது, தில்லைக் காட்டிற்கு, (அக்காலத்தில் சிதம்பரம் எனும் பெயர் வழங்கப் படவில்லை) வந்தான்; அவ்வூரில் வியாக்கிரபாதர், பதஞ்சலி எனும் இருபெரும் துறவிகளைச் சந்தித்தான். தன்னுடைய உடலில் படர்ந்துள்ள 'சரும நோயை'ப் போக்கு வதற்கு அவர்களிடம் மருத்துவ சிகிச்சை பெறவிரும்பினான். அப்பொழுது, ஊரின் நடுவிலுள்ள சிறுகுளம் ஒன்றில் குளித்து விட்டு, அக்குளக்கரைக்கு அருகே எழுந்த தருளியிள்ள இறைவனை – நடராசப்

பெருமானே – வழிபாடு செய்துவிட்டு வருமாறு அவர்கள் சொன்னார்கள்.

மிகுந்த பக்தி சிரத்தையோடு, அச்சிறு குளத்தில் மூழ்கி அவன் நீராடினான். குளத்திலிருந்து வெளியேறும் போது, கருகிப் போயிருந்த அவனுடைய மேனி பொன்னிறம் பெற்றதோடு, அவனுடைய உடலை நெடு நாட்களாக வருத்திக் கொண்டிருந்த சரும நோயும் மறைந்து போய்விட்டது. இது முதல், சிம்மவர்மன் பொன்னிற (இரணிய) மேனியுடையவன் (வர்மன்) எனும் பெயரினைப் பெற்றான் என்பது 'கோயில் புராணம்' கூறும் வரலாறாகும்.

பிறகு, சிம்மவர்மன் அம்பலவாணனை நைந்துருகும் அடியவனாகியப் போற்றி வணங்கி, அந்த முனிவர்களுடைய வாழ்த்துதலையும் பெற்றான்.

அதுமுதல், அவன் நடராசப் பெருமானிடத்து, தீராத பெருங்காதல் கொண்டான். தில்லைத் திருக்கோயிலுக்குத் தன்னால் இயன்ற திருப்பணிகளை எல்லாம் செய்யத் தொடங்கினான்.

முதலில் அங்கிருந்த சிறு குளத்தைப் பெரிதாக்கியும், கல்லாலான படிக்கட்டுகளை அமைத்தும் அதனைச் சிறப்புமிகு குளமாக – சிவகங்கையாக – விளங்குமாறு செய்தான்.

அதன் பிறகு, தில்லை மரங்கள் அடர்ந்து இருந்த அக்காட்டை அழித்து, தில்லை நகரைச் சிம்மவர்மன் உருவாக்கினான். இதைத் தொடர்ந்து தில்லை வளர்ந்து இடையே இருந்த நடராசரின் சிறு கோயிலை, விரிவுபடுத்தி, 'சிற்றம்பலம்' எனப் போற்றப்படும் மன்றத்தை அவன் அமைத்தான். பிற்காலத்தில் திருமூலட்டானம் எனப் போற்றப்படும் அந்த மூலத்தானத்தைச் சிம்மவர்மன் நிர்மாணித்தான்.

இந்தக் கோயில் அமைப்பு மிகப் பழங்காலத்திய வடிவ அமைப்பை உடையதாகும். மரத்தினால் அமைக்கப் பட்ட கோயிலின் விமான வடிவத்தையே, இக்கோயிலின் கருவறைமீது அமைத்து இருப்பதைக் காண்க. இந்த விமானம், பிற்காலச் சிவன் கோயில்களின் விமான அமைப்பிலும் அழகிலும் வேறுபட்ட தோற்றம் உடையதைக் காண்க.

இன்றும் கேரளத்தில் 'அம்பலம்' எனும் பெயரோடு வழங்கும் திருக்கோயில்களின் கூரைகள் எல்லாம், தில்லைத் திருக்கோயில் விமானத்தைப் போன்று இருப்பதைக் காணலாம். இதைப்பற்றி நுட்பமாக ஆராய்ந்த கலை வல்லார், டி. ஏ. கோபிநாதராவ், "சங்க காலத்தில் மரத்தினால் அமைக்கப்பட்ட கோயில்கள், இத்தகைய வடிவமைப்பு உடையனவாக இருந்திருக்கவேண்டும். இன்று மலையாள தேசத்தில் காணப்படும் கோயில்களின் வடிவமைப்பு, சங்க காலத் தமிழகக் கோயில்களின் எச்சமிச்சமாகவே, தோன்றுகின்றன. சிதம்பரம், நடராசர் கோயிலும் சிம்மவர்மன் காலம் வரையில் மரத்தினால் அமைக்கப்பட்டதாகவே இருந்திருக்கவேண்டும். அந்த அமைப்பை மாற்ற விரும்பாமல், அப்படியே கருங்கல்லினால் மரக்கூரை அமைப்பிலேயே அத்த விமானத்தை அவன் அமைத்து இருக்கவேண்டும்[1] என்று தெரிவித்தார்.

முதலாம் ஆதித்த சோழன் காலத்தில் இந்த விமானம், பொன் தகடுகள் வேயப்பட்டு, 'பொன்னம்பலம்' எனும் பெயரைப் பெற்றதாகவும் சோழர்களின் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

சிதம்பரம் திருக்கோயிலை முதன் முதல், கலையியல் நோக்கில் நுட்பமாக ஆராய்ந்தவர் பெர்கூசன் (Fergusson) என்பவராவர்.

1. T.A. Gopinatha Rao, Elements of Hindu Iconography, p.42

"பிற்காலத்தில் சோழ அரசர்கள் இக்கோயிலைப் புதுப்பித்துள்ளனர். அப்பொழுது, அங்கிருந்த பல்லவர் களுடைய கல்வெட்டுகள் பொறிக்கப்பட்ட கற்சுவர் அகற்றிவிட்டு இருக்கலாம். ஆனால் அந்தப் பழைய வடிவமைப்பை மாற்றுமல், அப்படியே அதனைப் போற்றிக் காத்து இருக்கலாம்" [2] என்று பெர்சூசன் கருதுகிறார்.

காடவர் கோன்:–

சிறந்த சிவபக்தரான சிம்ம வர்மனையே, பிற்காலத்தில் 'ஐயடிகள் காடவர் (பல்லவர்) கோன்' எனும் பெயரால் சைவப் பெரியார்கள் குறிப் பிட்டு இருக்கலாம். இவனுக்குப் பிறகு, முறுகிய சிவபக்தி உடைய பல்லவ வேந்தன் இராஜ சிம்மன் எனும் இரண்டாம் நரசிம்மவர்மனுவான். அவனைக் 'கழற்சிங்கன்' எனும் பெயரால் சுந்தரமூர்த்தி நாயனார் குறிப்பிட் டுள்ளார். எனவே, காலத்தால் மிகவும் முற்பட்டவராகியக் கருதப்படும் ஐயடிகள் காடவர் கோன், தில்லைத் திருப்பணியைச் செய்த சிம்மவர்மனுகவே இருத்தல் கூடும் எனக் கருதுவது பொருத்தமாகும்.

2. History of Indian and Eastern Architecture, p. 356



இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன்

(கி. பி. 1243–79)

டாக்டர் எம் எஸ். கோவிந்தசாமி, எம். ஏ., எம். லிட், பி. எச். டி.,
வரலாற்றுத் துறைத்தலைவர்
அண்ணமலைப் பல்கலைக்கழகம்.

பிற்காலச் சோழர் ஆட்சிகாலத்தில் திருக்கோவிலூர் தாலுக்காவிலுள்ள சேந்தமங்கலத்தைத் தலைநகராகக் கொண்டு காடவராயர் என்னும் குறுநில மன்னர் ஆட்சிபுரிந்து வந்தனர். அவர்களில் மிகவும் சிறப்புற்றிருந்தோர் சாடும் பெருமாளுன முதலாவது கோப்பெருஞ் சிங்கனும் அவன் மகன் வாள்வல்ல பெருமாளான இரண்டாவது கோப் பெருஞ்சிங்கனும் ஆவர். இருவரும் சகல புவனச் சக்கரவர்த்தி, அவனியாளப் பிறந்தான் என்ற பட்டங்களைப் பெற் றிருந்தனர். முதலாவது கோப்பெருஞ் சிங்கன் மூன்றும் குலோத்துங்கன் புதல்வியை திருமணம் புரிந்தவன். இ. பி. பதின்மூன்றும் நூற்றாண்டில் சோழப் பேரரசு பெரிதும் மெலிவுற்றபொழுது காடவராயர் செல்வாக்கு மிகவும் ஓங்கியது. தில்லையும் அதன் சுற்றுப்புற ஊர்களும் முதலாம் கோப்பெருஞ் சிங்கனின் ஆட்சிக்குப்பட்டிருந்தன. தில்லைக்கூத்தனிடம் பேரன்புகொண்ட அக் காடவன் தில்லைக்கோயிலில் பல திருப்பணிகளையும் அறப்பணிகளையும் புரிந்தான். அவனுடைய புதல்வனுன இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனும்[1] அவ்வாறே செய்தனன். அவனுடைய வரலாற்றைக் கல்வெட்டுகளின் சான்று களைக் கொண்டு ஈண்டுக் காண்போம்.

திருவண்ணமலைக் கல்வெட்டில்[2] குறிப்பிடப்பட்டுள்ள காடவகுமாரன், அத்தி, மோரிஜோனைக் கல்வெட்டுகளில்[3] குறிப்பிடப்பட்டுள்ள பல்லவாண்டார் இரண்டாம் கோப்பெருஞ் சிங்கனே. கல்வெட்டுகளிலிருந்து அறியப்படும் இவனுடைய விருதுப் பெயர்களாவன: வாள்வல்ல பெருமாள், வீரராயன், விருதரில் வீரன், ஆட்கொண்ட தேவன், வேணுவுடையான், அவனியாளப்பிறந் தான், பரதம்வல்ல பெருமாள், நிச்சங்க மல்லன், காங்கேயன், தமிழ்நாடு காத்த பெருமான்[4] கனகசபாபதி சபா சர்வ கார்ய சர்வகால நிர்வாகன், சகலபுவன சக்கரவர்த்தி, பரதமல்லன், சாஹித் யரத்னகரன் பல்லவகுல பாரிஜாதம்

1. தந்தையும் புதல்வனும் ஒரே அபிடேகப் பெயரை கொண்டிருக்கும் மரபு இருந்துள்ளது. சான்றுகப் பிற்காலச் சோழர்களில் முதலாவது இராஜேந்திரனும் இரண்டாவது இராஜேந்திரனும் தந்தையும் புதல்வனுமாவார்.

2. S. I. I. Vol. VIII No. 69
3. S. I. I. Vol. XII Nos. 125 and 127
4. S. I. I. Vol. VIII No. 69

காடவகுல சூடாமணி, பாலாறு நாயகன், காவேரி காமுகன், பெண்ணேற்றுநாதன், மல்லாபுரி வல்லபன், காஞ்சிபுரிகாந்தன், ஜகதேகவீரன்[5], வீரர்வீரன், பல்ல வாண்டார் [6], ஏழிசைமோகன்[7], அழகிய பல்லவனை கச்சியராயன், அழகிய சியனை தமிழ்நாடு காத்தான்[8], வீரபிர தாபன், புவனேகவீரன்[9], காடவகுல திலகம், சோழகுல கமலாகரதிவாகரன், சர்வக்ஞன், பாண்டியராய ஸ்தாபன சூத்ரதாரன், மகாராஜசிம்மன்[10], கோநந்தி பன்மன்[11], காஞ்சிநாயகன்[12], ஆனைக்கு அரசு வழங்கும் பெருமாள்[13] இவற்றுள் சிலவற்றை இவனுடைய தந்தையும் பெற் றிருந்தது குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன்(கி. பி. *1243 – 1279*) பட்டத்திற்கு வரும் முன்னரே போரிலும் ஆட்சிமுறையிலும் தக்க அனுபவம் பெற்றிருந்தான். முடிசூட்டிக் கொண்ட பிறகு மூன்றாண்டு வரை இவன் தன் தந்தையுடன் சேர்ந்து ஆட்சிபுரிந்த தைச் சில சான்றுகளிலிருந்து அறிகிறோம். அத்தி, மோரிஜோனைக் கல்வெட்டுகளில் இம்மன்னன் சேவூரில் தன் எதிரிகளை வென்று தொண்டை மண்டலத்தைக் கொண்டதாகவும்[14] திரு வண்ணாமலைக் கல்வெட்டில் இவன் நன்னன் மலையில் அவ்வெற்றியையும் அதுமக் கொடியையும் பொறித்து வைத்ததாகவும் கூறப்பட்டுள்ளது.[15] இங்குக் குறிப்பிடப் பட்டுள்ள சேவூர் திண்டிவனம் தாலுக்காவில் உள்ள மேல்சேவூராக இருத்தல் கூடும். சேவூரில் கோப்பெருஞ் சிங்கன் வென்ற பகைவர் யாவரென்று தெரியவில்லை. அவர்கள் திருக்கோவிலூர் பகுதியை ஆண்ட சேதிராயர்களாக இருத்தல் வேண்டும். கோப்பெருஞ்சிங்கன் சேதிராயனை வென்றதாக ஆத்தூர்க் கல்வெட்டு ஒன்று பொதுவாகக் குறிப் பிடுவது ஈண்டு கவனிக்கத்தக்கது. நிற்க, கோப்பெருஞ்சிங்கன் இவ்வெற்றியால் தொண்டைமண்டலம் முழுவதையும் கைப் பற்றினான் என்று கூறமுடியாது. ஏனெனில் தொண்டை மண்டலத்தில் சேதிராயர்களும் சம்புவராயர்களும் தொ டர்ந்து ஆட்சிபுரிந்து வந்தனர். அவர்கள் கோப்பெருஞ்சிங்கனுக்குக் கட்டுப்பட்டி ருத்ததாகவும் கூறிவியலாது. எனவே காடவராயர் கல்வெட்டுகளில் இப் போரைப்பற்றியுள்ள செய்தி மிகைப் படுத்தப்பட்டதே. இப்போர் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் பட்டத்திற்கு வரும் முன்னரே நிகழ்ந்திருத்தல் வேண்டும்.

அடுத்து, இக்காடவன் கருநாடக மன்னனின் செருக்கை அழித்ததாகவும், சோழர் குலமான தாமரைத் தடாகத்திற்கு ஆதவனாக விளங்கியதாகவும், சோழர் குலத்தை நிலைபெறச் செய்தான் என்றும் ஆத்தூர், திரிபுராந்தகக் கல்வெட்டுக்கள் கூறுவது ஆராயத்தக்கது.[16] இச்செய்திகள் உண்மையே என்பது அக்காலக்கல்வெட்டு களிலிருந்து அறியப்படுகின்றது. மூன்றும் இராசேந்திர சோழன் 7-ம் ஆண்டு கல்வெட்டொன்று அவன் போசள வேந்தனை வீரசோமேஸ்வரனை வென்ற தாகக் கூறுகின்றது[17], அப்போரில் கோப்

5. S. I. I. Vol. XII No. 120
6. ibid No. 127
7. ibid No. 130
8. ibid No. 174 & S. I. I. Vol. VIII No. 69
9. S. I. I. Vol. XII No. 230
10. ibid No. 247
11. ibid No. 261
12. T. T. D. Inss. Vol. I, No. 203
13. S. I. I. Vol. XII No. 206
14. ibid Nos. 125 & 127
15. S. I. I. Vol. VIII No. 69
16. S. I. I. Vol. XI Nos. 120 & 247
17. 420 of 1911

பெருஞ்சிங்கன் சோழனுக்கு உதவியாயிருத்தல் வேண்டும். கோப்பெருஞ்சிங்கனின் ஆக்கூர் கல்வெட்டு அவன் போசளவேந்தனை வென்று சிறைபிடித்ததாகவும், பாண்டியனிடமிருந்து திறை கொண்டதாகவும், தன்னூட்டிற்குத் திரும்பி வரும்போது சோழமண்டலத்தில் காவிரியின் தென்கரைத் தலங்களைத் தரிசித்ததாகவும் கூறுகின்றது.[18] கன்னடியர்க்கெதிராகக் காவிரியின் வடகரையில் கோப்பெருஞ்சிங்கன் அமைத்த பாதுகாப் பரண்களைப் பாண்டியர் கல்வெட்டொன்று குறிப்பிடுவதும் இங்குக் கவனிக்கத்தக்கது[19] அதே காலத்தில் போசளவேந்தன் தன்னைப் பாண்டியகுல சம்பரக்ஷகனைக் கூறிக் கொண்டிருப்பதும் நோக்கத்தக்கது[20], எனவே போசளனுக்கும் சோழனுக்குமிடையே நிகழ்ந்த போரில் பாண்டியன் போசளனுக்கும் கோப்பெருஞ்சிங்கன் சோழனுக்கும் உதவியிருத்தல் வேண்டும். போசளனின் தோல்வியைச் சோழர், காடவர் கல்வெட்டுக்கள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. நிற்க, இப்போர் கி. பி. 1242-43ல் நடைபெற்றிருத்தல் வேண்டும் என்பது சில சான்றுகளிலிருந்து உய்த்துணரப்படுகின்றது. இல்வெற்றியின் காரணமாகவே கோப்பெருஞ்சிங்கன் தன்னைத் தமிழ்நாடு காத்தான் என்று அழைத்துக்கொண்டிருத்தல் வேண்டும்.

அடுத்து இக்காடவனின் 5–ம் ஆண்டு ஆத்தூர்க் கல்வெட்டு இவன் தெலுங்கு சோழனை கண்டகோபாலனைப் போரில் வென்று அவனுடைய பண்டாரத்தையும் காஞ்சிநகரையும் கைப்பற்றியதாகக் கூறுகின்றது[21]. இவ்வெற்றியினால கோப்பெருஞ்சிங்கன் தன்னைக் காஞ்சிநாயகன் என்றும் காஞ்சிபுரிகாந்தன் என்றும் கூறிக்கொண்டான். நிற்க, இப்போருக்கும் பின்னர் முதலாவது சடையவர்மன் சுந்தர பாண்டியன் தெலுங்குச் சோழருடன் நிகழ்த்திய போருக்கும் தொடர்பில்லை. கோப்பெருஞ்சிங்கனின் இவ்வெற்றி நீடித்திருக்கவுல்லை. விரைவில் மீண்டும் காஞ்சியில் தெலுங்குசோழரின் ஆதிக்கம் நிலவியது கல்வெட்டுக்களிலிருந்து அறியப்படுகின்றது.[22]

கி. பி. 13-ம் நூற்றாண்டின் இடையில் முதலாவது சடையவர்மன் சுந்தரபாண்டியன் பட்டத்திற்கு வந்தபின் தென்னாட்டில் பாண்டியரின் ஆதிக்கம் மிகவிரைவில் வளர்ச்சியுற்றது. அதனால் மீண்டும் சோழருக்கும் போசளருக்கு மிடையே நட்பு ஏற்பட்டது. எனினும் சுந்தர பாண்டியன் அவ்விருவரையும் வென்றதுடன் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனையும் கி. பி. 1258க்குள் வென்றடக்கினான்[23]. அதன்பின் இக்காடவன் பாண்டியனுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசனாக விளங்கினான். சுந்தர பாண்டியன் தெலுங்குச் சோழருடனும் காகதீய மன்னன் கணபதியுடனும் நிகழ்த்திய போர்களில் அவனுக்குக் கோப்பெருஞ்சிங்கன் உதவியாக இருந்தனன். ஆனால் கி. பி. 1261-ல் இக்காடவன் தன்னைக் காகதீய மன்னன் கணபதியின் ஆணையை நிறைவேற்று பவனாகக் கூறிக்கொள்வதால்[24] அதற்கு முன்னர் நடைபெற்ற போர் ஒன்றில் கோப்பெருஞ்சிங்கன் தோல்வியுற்றுக் காகதீய மன்னனுக்குப் பணிந்திருத்தல்

18. S. I. I. Vol. XII No. 230
19. 514 of 1918
20. E. C. Vol. V P XXV
21. S. I. I. Vol. XII No.120
22. 26 & 27 of 1890
23. S. I. I. Vol. V. No. 459
24. S. I. I. Vol. IV. Nos. 1341, 1342 & 1342 b

வேண்டும். காகதீய தளபதி அம்ப தேவன் தான் காடவனைத் தோற்கடித்த தாகக் கூறுவது[25] இக்கருத்தை வலியுறுத்து கின்றது. கி. பி. 1267-ம் ஆண்டு பாண்டியர் கல்வெட்டு ஒன்று கோப் பெருஞ்சிங்கன் பாண்டியர்களுக்குக் கட்டுப்பட்டிருந்ததைப் புலப்படுத்து கின்றது[26]. காகதீய மன்னன் கணபதி இறந்ததும் கோப்பெருஞ்சிங்கன் பாண்டியர் ஆதிக்கத்திற்குட்பட்டிருத்தல் இயல்பானதே. இறுதிவரை அவன் பாண்டியருடன் அத்தகைய உறவைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. நிற்க 1279-ல் கடப்பை மாவட்டத்து நந்தலூரில் காகதீய தளபதி அம்ப தேவனுடன் நிகழ்ந்த போரில் கோப் பெருஞ்சிங்கன் பாண்டியருக்காகப் போரிட்டு உயிர்நீத்ததாகக் கூறப் படுகின்றது.[27] அதைப்பற்றித் தெளிவான செய்தி வேறு எதுவுமில்லை. ஆயினும் அந்த ஆண்டிற்குப்பிறகு இரண்டாம் கோபெருஞ்சிங்கன் கல்வெட்டு எதுவு மில்லை என்பது நோக்கத்தக்கது.

இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் திவ்லீயும் அதனைச் சுழ்ந்த ஊர்களும் அரசனின் நேரடி கட்டுப் பாட்டிற்குட்பட்ட ஒரு தனியூராகவே இருந்தன. பிற இடங்களில் இருந்தது போல் அங்கு ஊர்ச்சபை இருக்கவில்லை. அரசப் பிரதிநிதிகளும், கோயிலதிகாரி களும், ஊர்க்கணக்கரும் நிருவாக அலுவல்களைக் கவனித்து வந்தனர். அக்காலக் கல்வெட்டுகளில் அதனை யுணர்த்தும் பின்வரும் தொடர்மொழி கவனிக்கத்தக்கது. ''தென்னவன் பிரம்ம ராயரும், ஜயதுங்க பல்லவரையரும் திவ்லீயம்பலப் பல்லவரையரும் உடை யார் திருச்சிற்றம்பலமுடையார் கோயில் ஸ்ரீ மகேஸ்வரக் கண்காணி செய்வார் களும், ஸ்ரீ காரியஞ் செய்வார்களும், சாமுதாயஞ் செய்வார்களும், கோயில் நாயகம் செய்வார்களும், திருமாளிகைக் கூறு செய்வார்களும், கணக்கரும் கண்டு விடுதந்ததாவது''.[28] என்பது அக்கல் வெட்டின் பகுதியாகும். இக்கல்வெட்டில் மேற்கூறியவர்களில் முதல் மூவரும் கோப்பெருஞ்சிங்கனின் பிரதிநிதியாக விளங்கியவர்கள். அவர்களுக்கிருந்த தனித்தனிப் பணிகள் யாவை என்பது தெரியவில்லை. கோப்பெருஞ்சிங்கன் நேரிடையாகவோ அல்லது தன் அமைச்சன் மூலமாகவோ அவர்களுக்குத் தன்னுடைய ஆணைகளை அறிவித்து வந்தான் என்பதைப் பல கல்வெட்டுக் களிலிருந்து அறிகிறோம்.

இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் திவ்லீயம்பலவாணரிடம் அளவிலாப் பற்றுடையவன். அவனுடைய ஆற்றூர்க் கல்வெட்டு அவனைக் 'கனகசபாபதி சபா சர்வகார்ய சர்வகால நிர்வாககன்'[29] என்றும் திரிபுராந்தகக் கல்வெட்டு 'கனக சபாபதி நாத சரணரவிந்த மதுகர மானவன்' என்றும்[30], அழைக்கின்றன. அவனுடைய மூன்றாவது ஆட்சியாண்டில் திவ்லீயின் மேல்பிடாகையான விக்கிரம சிங்கபுரத்து மேற்குப் பகுதியில் திவ்லீக் கோயிலின் தேவைக்கான பழங்கள் காய் கள் முதலி யவைகளைப் பெற 'ஆளியார் திருத் தோப்பு' என்னும் திருத்தோப்பு அமைக்கப்பட்டது[31] அதேயாண்டில் அவன் திவ்லீக்கோயிலுக்கு நானூற்றுப்பத்துப் பசுக்களைத் தானமாக விட்டான்.[32] கி. பி.

---

25. 173 & 268 of 1905
26. 192 of 1914 & S. I. I. Vol. XII No. 247
27. The Early History of Deccan Vol. I p. 631. Fn.
28. S. I. I. Vol. XII No. 151
29. ibid No.120
30. ibid No. 247
31. S. I. I. Vol. VII No. 53
32. ibid No. 54

1251ல் அவன் கடவாச்சேரி என்று தற்பொழுது அழைக்கப்படும் தில்லை நாயகநல்லூரில் சாலியர் (நெசவாளர்) சிலரைக் குடியமர்த்தி அவர்கள் திருக் காமக்கோட்டமுடைய நாச்சியார்க்குச் சாத்தும் பரிசட்டத்தை அளிக்க ஏற்பாடு செய்ததுடன் தில்லைநாயகநல்லூருக்குத் திருவம்பலப் பெருமாள்புரம் என்ற புதிய பெயரையும் சூட்டினான்.[33] அடுத்த ஆண்டின் அவன் தில்லைக்கோயிலுக்குரிய மூன்று திருநந்தவனங்களின் பராமரிப் பிற்காகச் சில நிலங்களை நிவந்தமாக அளித்துள்ளான்.[34]

மேலும் இரண்டாம் கோப்பெருஞ் சிங்கன் காலத்தில்தான் தில்லைக்காளி கோயில் கற்றளியாக எடுக்கப்பட்டது. அவனுடைய 8-ம் ஆண்டுக் கல்வெட்டு அக்கோயில் திருப்பணி நடைபெற்றுவந் ததைத் தெளிவாகக் குறிப்படுகின்றது.[35] அவனுடைய பத்தாவது ஆட்சியாண்டில் அத்திருப்பணி முடிவுற்றிருத்தல் வேண்டும்[36]. அதற்கு முன்னர்த் தில்லைக் காளி தில்லைவனமுடைய பரமேஸ்வரி எனவும் பின்னர் பிடாரியார் திருச் சிற்றம்பல மாகாளி எனவும் அழைக்கப் பட்டதைக் கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம். தவிர, தில்லைக் கோயிலின் கிழக்குக் கோபுரத்தைக் கட்டியதும் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனே. அவனுடைய திரிபுராந்தகக் கல்வெட்டு அவன் நான்கு திக்கிலுமிருந்த வேந்தர்களை வென்று அவர்களின் செல்வத்தைக் கைக்கொண்டு, துலாபாரம் நடத்தி, அப்பொன்னால் மேருமலையைப் போன்ற கிழக்குக் கோபுரத்தைத் தன்பெயரால் எடுப்பித்தான் என்றும் அக்கோபுரத்தின் நான்கு பக்கங்களையும் அவன் ஒளிமயமாக நிர்மாணித்து குடமுழுக்குச் செய்தான் என்றும் கூறுகின்றது.[37] அத்திருப்பணி கி. பி. 1262-ம் ஆண்டிற்குள் நடை பெற்றிருத்தல் வேண்டும்.

நிற்க, இரண்டாம் கோப்பெருஞ் சிங்கன் திருவண்ணுமலை, காஞ்சி, வீரட் டானம், திருவானைக்கா, மதுரை, திராட் சாராமம் முதலிய ஊர்களிலுள்ள சிவன் கோயில்களுக்குச் செய்த திருப்பணி பற்றியும் அறங்கள்பற்றியும் பல கல்வெட்டுக் களிலிருந்து அறிகிறோம். தஞ்சை மாவட்டத்துத் திருமங்கலக்குடியில் 'ஆளப்பிறந்தீஸ்வரம்' என்ற சிவன் கோயில் அவன் பெயரால் கி. பி. 1268ல் கட்டப்பட்டது.[38] இரண்டாண்டிற்குப் பிறகு அவன் தென்னார்க்காடு மாவட்டத்து பிரம்மதேசம் என்ற ஊரிலிருந்த கோயிலில் தான் பிறந்த திருவோண நட்சத்திரத்தில் திருவிழா நடத்தவும், 'அழகிய பல்லவன் சந்தி' யெனத் தன் பெயரால் பூசை நடத்தவும், கோயில் திருப்பணி நிகழவும் கட்டளையமைத் தான்[39], சைவ சமயத்தில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்த கோப்பெருஞ்சிங்கன், வைணவ சமயத்தையும் போற்றியுள்ளான் என்பது சில கல்வெட்டுகளிலிருந்து அறியப்படுகின்றது.[40]

33. S. I. I. Vol. XII No. 154
34. ibid No. 157
35. S. I. I. Vol. VIII No. 717
36. S. I. I. Vol. XII No. 159
37. ibid No. 247
38. 226 of 1927
39. S. I. I. Vol. XII No. 230
40. ibid Nos. 170 & 213; S. I. I. Vol. VII No. 770

போரிலும் ஆட்சித்துறையிலும் பெரும்புகழ்கொண்ட இரண்டாம் கோப் பெருஞ்சிங்கன் ஓர் சிறந்த கவிஞனு மாவான். அவன் பல தமிழ்ப் புலவர் களையும் வடமொழி அறிஞர்களையும் போற்றியதற்கான சான்றுகள் உள்ளன. கலைகளில் அவனுக்கிருந்த ஈடுபாட்டினை 'சாகித்யரத்னகரன்' என்ற அவனுடைய பட்டத்திலிருந்து அறியலாம். அவன் பரதநாட்டியத்தில் மிக்க ஈடுபாடும் புலமையும் பெற்றிருந்ததால் தன்னைப் 'பரதம் வல்லபெருமாள்' என்றும் 'பரதம்வல்லான்' என்றும் அழைத்துக் கொண்டான். அதற்கேற்ப அவன் கட்டிய தில்லைக் கிழக்குக் கோபுரத்திருவாயில் உட்புறச்சுவர்களில் பரத நாட்டியக் கரணங்களைச் செதுக்கியிருத்தல் காணத் தக்கது. □

WITH BEST COMPLIMENTS FROM

ATLAS COPCO (INDIA) LTD.

Manufacturers and Suppliers of Quality

Air Compressors, Rock Drills, Wagon Drills,
Aqua Drills, Drill Steels, DTH Bits,
Extension Equipment, etc.

Compressed air Centres at:

BOMBAY □ DELHI □ CALCUTTA □ MADRAS □ HYDERABAD

பாண்டிய மன்னர்களும், தில்லை திருக்கோயில்களும்

த. திருஞானசம்பத்தன் எம். ஏ.,
வரலாற்றுத்துறைத் துணைப்பேராசிரியர்,
அண்ணாமலைநகர்

உலகில் மிகப் பழங்காலத்திலேயே சைவ சமயத்தொண்டும், தமிழ்த் தொண்டும் செய்து சிறப்புற்றது பாண்டியர் மரபு என்பதை எல்லோரும் அறிவார்கள். சைவ நன்மக்களால் கோயில் என்று போற்றப்படும் பெரும் பற்றப்புலியூரில் அவர்கள் ஆற்றிய தொண்டு சிறப்பானதாகும். இதை அறிய நமக்கு உதவுவன பல்வேறு காலங்களில் எழுந்த இலக்கியங்களும், பாண்டிய மன்னர்கள் வெளியிட்ட கல்வெட்டுகளும் ஆகும். இவற்றின் துணைக் கொண்டு பாண்டிய வேந்தர்கள் தில்லைப் பெருங் கோயிலில்புரிந்த பணிகளை ஒருவாறு அறிந்து கொள்ளலாம். அவர்கள் தொண்டின் சிறப்பினை விளக்கும் கல் வெட்டுகள் முழுமையும் கிடைக்கவில்லை என்று தோன்றுகிறது. அவ்வப்போது நடைப் பெற்ற திருப்பணிகளின் போது சில கல்வெட்டுகள் அழிக்கப்பட்டு இருக் கலாம்.

முதலாம் வரகுண பாண்டியன் (கி. பி. 792 – 835):–

இவன் காலத்தில் தென்னாட்டில் பாண்டியர் பேரரசு மிக உயர்ந்த நிலையில் இருந்தது. சோழ மண்டலம், நடுநாடு, தொண்டை மண்டலத்தின் தென்பகுதி ஆகியவை இவன் ஆளுகையின் கீழ் இருந்தன. இவன் ஆட்சிக்காலத்தை பிற்காலப் பாண்டியர் பேரரசின் பொற் காலம் என்றே கூறலாம். இவன் காலத்தில் வெளியிடப்பட்ட கல்வெட்டுகள் பல சோழநாட்டிலிருந்து கிடைக்கின்றன. குறிப்பாக திருச்சிராப்பள்ளி, குடமூக்கு, திருக்கோடிகா போன்ற ஊர்களில் இருந்து கிடைக்கும் கல்வெட்டுகளிலிருந்து இவனுடைய சைவ சமயத் தொண்டைப் பற்றி நாம் அறிந்துகொள்ளலாம். திருந்திய அன்பின் பெருந்துறைப்பிள்ளை ஆகிய வாதவூரடிகள் இவன் காலத்தில் வாழ்ந்தவர்.[1] இப்பேரரசனுலும் இவனுடைய சமய குரவராகக் கொள்ளக் கூடிய ஆளுடைய அடிகளாலும் சைவ சமயம் மிகவும் சிறப்புற்றது. தில்லை, திருச்சி உள்பட்ட பல இடங்களில் உள்ள திருக்கோயில்கள் வளம் பெற்றன. மணிவாசகப் பெருந்தகையார். தாம் இயற்றியருளிய திருக்கோவையாரில் இரண்டு இடங்களில் இவனைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்;[2] திருவாசகத்தில் பல இடங்களில் இவனைப்பற்றிய பல குறிப்புகள் கிடைக்கின்றன.

1 பண்டாரததார், இலக்கியமும் கல்வெட்டுகளும் பக்கம் 54
2. 'வரகுணஞற்தென்வை னேத்து சிற்றம்பலத்தான்' திருக்கோவையார் பாடல் 306
புயலோங்கலர் சடையேறறவன் சிற்றம்பலம் புகழும்
மயலோங்கிருங் களியாளை வரகுணன் வெற்பின வைத்த திருக்கோவையார் பாடல 327

9 ஆம் நூற்றாண்டின் கடைப் பகுதியில் வாழ்ந்த பட்டினத்தடிகள் இவனுடைய சிவபக்தி மாண்பை விளக்கும் வகையில் பல அரிய நிகழ்ச்சிகளைக் கூறி இறுதியில் 'பெரிய அன்பின் வரகுண தேவர்' என்று அந்தப்பகுதியை முடிக்கிறார். மணிவாசகப்பெருமான் திருவாக்கினால் வரகுணபாண்டியன் தில்லைச் சிற்றம்பலத்தில் கொண்டிருந்த ஈடுபாடு தெளிவாகப் புலனாகிறது. மேலும் தில்லையில் பௌத்தர்களுக்கு எதிராக நடை பெற்ற சமயவாதத்தில் மணிவாசகப் பெருமான் சைவத்தின் சிறப்பை நிலை நிறுத்தி இலங்கை அரசின் ஊமைப் பெண்ணைப் பேசச் செய்த நிகழ்ச்சியில்[1] கலந்துகொண்ட சோழநாட்டு மன்னன் முதல் வரகுணனே ஆதல் வேண்டும். கி.பி 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இரட்டைப் புலவர்கள் பாடிய ஏகாம்பர நாதர் உலாவில் திருநீற்றுச்சோழன், வரகுண பாண்டியன், சைவ சமய குரவர்கள் முதலியவர்களின் படிமங்கள் குறிக்கப்படுகின்றன[2]. தில்லையிலும் இவனுடைய செப்புத்திருமேனி ஒன்று வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் தற்போது அது கிடைக்கவில்லை. திருப்பாற்கடல் மடத்தின் ஒருபுறத்தில் அமைந்துள்ள ஆளுடையார் கோயில் இவன் காலத்தில் அமைக்கப்பட்டிருத்தல் கூடும்.

சடையவர்மன் பராந்தக பாண்டியன்:–

இவன் முதற் குலோத்துங்கச் சோழன் ஆட்சியின் பிற்பகுதியிலும், அவன் மகன் விக்கிரம சோழன் ஆளுகையின் முற் பகுதியிலும் இருந்த பாண்டிய வேந்தன் ஆவான்.[3] விக்கிரம சோழன் தென் கலிங்கத்தை வென்றபோது இவனும் அந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டான் என்று தெரிகிறது. இவன் ஆளுகையின் பிற்பகுதியில் சோழர்களோடு நெருங்கிய உறவு கொண்டு தனது மகளை விக்கிரம சோழனுக்கு மணம் செய்து கொடுத்தான் என்பதும், துறவு பூண்டு வாரணாசிக்குச் சென்று அங்கே சில காலம் தங்கிப் பின்னர் தில்லைக்குத் திரும்பித் தனது வாழ்நாள் முழுவதையும் தில்லையிலேயே கழித்தான் என்பதும் குலோத்துங்க சோழன் உலா அடிகளாலும் அவற்றிற்குக் கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தாலும் புலனாகின்றன.[4] மேலும் இவன் இறந்த பின்னர் சிதம்பரத்தில் வட எல்லையில் பள்ளிப்படை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது[5] இவற்றைப் பார்க்குமிடத்து சிவபக்தி மிக்கோங்கிய இந்தப் பாண்டிய மன்னன் விக்கிரம சோழன் காலத்திலும் இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்திலும் நடைபெற்ற தில்லைத்திருப் பணியில் பெரும் பங்கு கொண்டிருக்க வேண்டும் என்று கருதலாம். மேற்கண்ட பள்ளிப்படைக் கோயில் பிற்காலத்தில் அழிந்துவிட்டது. அதுபற்றிய விளக்கங்கள் பல அளிக்கக்கூடிய கல்வெட்டுகளும் நமக்குக் கிடைக்கவில்லை.

முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன்:–

கி.பி. 10 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வீழ்ச்சி எய்திய பாண்டியர் மரபு 13ம் நூற்றாண்டில் வீறுபெற்று எழுந்தது. கி.பி. 1216ல்முடிசூடிய முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் பாண்டிய நாடு சோழர்கள் பிடியினின்று விடுதலை பெற்றது. முதல் சுந்தர பாண்டியன் 1219 ஆம் ஆண்டின்

---

1. டாக்டர் கே. கே. பிள்ளை – தென்னிந்தியாவும் இலங்கையும் – பக். 57
2. பண்டாரத்தார் – தமிழ் இலக்கிய வரலாறு, 13, 14, 15 ஆம் நூற்றாண்டுகள் பக்கம் 71
3. பாண்டியர் வரலாறு – பண்டாரத்தார் பக்கம் – 71
4. "பைத்தலிர்க்கை மாதர் மடப்பிடி பெற்ற வாரண மல்வாரணத்தின் – காதற் பெயரன் களகனபன் – குலோத்துங்க சோழன் உலா – 30-32 வரிகள்
   மாதர் மடப்பிடி – பெண் சக்கரவர்த்தி, வாரணம்-பெண் சக்கரவர்த்தியின் பிதாவான பாண்டியன். அவர் போசேரான காவேயிற் பெற்ற பெயர் வாரணவாசிதேவர்
   "பெரும்புறபுலியூர் வடபிடாகை மதுராந்தகப் போரின்மை நாட்டுப்பள்ளிப்படையான விக்கரம சோழ நல்லூரில் விக்கிரம சோழன் தெங்குதெரு வீதியில் தென்பக்கத்து எழுந்தருளியிலிருந்து பூசை கொண்டருளுகிற நாயனார் வாரணவாசி மாதேவர் கோயில் தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி – 8. கல்வெட்டு எண் – 717

தொடக்கத்தில் சோழ நாட்டின் மீது படையெடுத்து அப்போது சோழப் பேரரசனுக விளங்கிய மூன்றும் இராசராசனைப் போரில் புறங்கண்டு சோழநாட்டைக் கைப்பற்றினான். வெற்றி வீரனுக விளங்கிய நிலையில் தில்லையம் பதிக்குச் சென்று திருச்சிற்றம்பல முடையாரை வணங்கி வழிபட்டான். இதை அவனது கல்வெட்டுக்கள் தெளிவாக உணர்த்துகின்றன. [1] இக்காலம் தொடங்கிப் பல ஆண்டுகள் பாண்டிய மன்னர்கள் தில்லைத் திருக்கோயிலில் சிறப்பான பல பணிகள் புரிந்திருக் கின்றார்கள் என்பதை வரலாறு காட்டு கிறது. இவர்களில் முதலாம் சடைய வர்மன் சுந்தர பாண்டியன், சடையவர்மன் வீர பாண்டியன், சடையவர்மன் விக்கிரம பாண்டியன் ஆகியோர் தமது அரிய பெரிய தொண்டுகளால் தில்லைப் பெருங்கோயிலை எழில்மிகும் கலைக்கூட மாக மாற்றினார்கள். [2]

முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன்:–

கி.பி. 1251 – 1270 இவன் காலத்தில்தான் இரண்டாம் பாண்டியர் பேரரசு மிக உயர்ந்த நிலைமையைப் பெற்றது. தென்னாடுகண்ட மாவீரனுகத் திகழ்ந்த இம்மன்னன் ஆட்சிக்காலம் தமிழகத்தின் சமய வளர்ச்சிக்கும், கலை வளர்ச்சிக்கும் பெயர் பெற்றதாகும். தில்லைப் பெருங்கோயிலில் காணப்படும் இவன் கல்வெட்டுகள் வரலாற்று உண்மைகள் பலவற்றைத் தம்மகத்தே கொண்டவை, இவன் தில்லைத்திருப் பணியை விளக்கிக் கூறுபவை. இந்தப் பேரரசன் காலத்தில் தில்லைப் பெருங் கோயிலில் நிகழ்ந்த திருப்பணிகளை இப்போது கவனிப்போம். காடவ மன்னன் முதற்கோப்பெருஞ்சிங்கனால் எடுக்கப் பெற்ற தெற்குக் கோபுரத்தில் மேல் விதானத்தில் பாண்டியர்களின் இலச் சினையாகிய இரட்டைக் கயல்களும். அங்குசமும் இவன் உத்திரவின்பேரில் அமைக்கப்பட்டன. கீழைக்கோபுரமும், தெற்குக் கோபுரமும் இவனால் திருப்பணி செய்யப்பட்டன என்று ஒரு கல்வெட்டு நமக்குத் தெரிவிக்கிறது. [3] தற்போது மேலைக் கோபுரம் என்று அழைக்கப்படும் எழுநிலைக் கோபுரமும் இவனால் அமைக்கப்பட்டதாகும். அது கல்வெட்டு களில் 'சுந்தர பாண்டியன்' திருக்கோபுரம்' என்று அழைக்கப்படுகிறது. [4] இந்த வாயிலின் உட்பகுதியில் இரண்டு பக்கங் களிலும் நாட்டிய சிற்பங்கள் அமைக்கப் பட்டுள்ளன. ஒவ்வொன்றின் அடியிலும் விளக்கக் குறியீட்டுப் பெயர்கள் வட மொழியில் செதுக்கப்பட்டுள்ளன. வடக்கு நோக்கிய சுவரின் நடுவில் ஒரு மாடத்தில் சுந்தர பாண்டியனின் உருவம் நின்ற கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளதை இன்றும் காணலாம். எதிரில் இறைவன் இறைவி படிமங்கள் காட்சியளிக்கின்றன. மற்றொரு பக்கத்தில் துர்க்கையின்படிமம் காட்சியளிக்கிறது. கோபுரத்திற்கு வெளிப்புறத்தில் மேலைச்சுவரில் விநாயகர் உருவம் மேற்கு நோக்கிய நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த விநாயகர் கற்பக விநாயகர் எனப் போற்றப்படுகிறார். கோபுரத்தின் பல பகுதிகளில் சிவ பிரானின் பல்வேறு தோற்றங்கள், துர்க்கை, முருகன், அகத்திய முனிவர், ரதி, பிரியை என்ற இரு தேவியருடன்

---

1. தூயப்படாத அருமறைதோத்தனர்வாழ்
தெய்வப் புலியூர்த்திருவெல்லையுட்புக்குப்
பொன்னம்பலம் பொலிய வாடுவார் பூவையுடன்
மன்னுந்திருமேனி கண்டு மனந்களித்துக் – சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி
2. Temple Gateways in South India (James C. Harle)
என்ற ஆங்கில நூலில் இதை விளக்கும் படங்கள் பலவற்றைக் காணலாம்.
3. செந்தமிழ் தொகுதி நான்கு சிதம்பரம – பாண்டியர் கல்வெட்டுகள் – டி. ஏ. கோபிநாதராவ்
4. தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி நான்கு – கல்வெட்டு எண். 624

காமவேள் முதலியோரின் சிற்பங்கள் வனப்புடன் காட்சியளிக்கின்றன. இவற்றுள் அழகு மிளிரும் நிலையில் அமைக்கப்பட்ட ஆலிங்கன சந்திரசேகரர், கேவல சந்திரசேகரர், கல்யாணசுந்தரர், கஜாசுர மூர்த்தி, கிராதார்ஜுனர், நந்திசர், ஊர்த்துவ தாண்டவர், சுயம்வரமூர்த்தி, ரிஷபாந்திப மூர்த்தி, கண்டரர் – சத்தி ஆகியோரின் உருவங்கள் முக்கிய மானவை. இவை தவிர ஆதி –சண்டீசர், பத்ரகாளி. தன்வந்திரி, சனி, வாயு, கருட வாகனத் திருமால், திரிபுர சுந்தரி தேவி, துவாரபாலர், சக்தி, நாட்டியமாடும் பெண் போன்ற உருவங் களீயும் இக் கோபுரத்தின் பல்வேறு இடங்களில் காணலாம்[1]. இவற்றுக் கெல்லாம் மேலாக சடையவர்மன் சுந்தர பாண்டியன் தில்லை அம்பலத்தைப் பொன் வேய்ந்ததும்[2], துலாபார தானங்கள்[3] பல செய்து பொன்னும், மணியும், முத்தும் கோயி லுக்கு வழங்கியதும் இவனுடைய சிவபக்தி மாண்பினைத் தெளிவாகக் காட்டு கின்றன. இம்மன்னன் 'கோயில் பொன் வேய்ந்த பெருமான்' என்னும் சிறப்புப் பெயரை எய்தினன். இவனுடைய ஆரூம் ஆட்சியாண்டில் 26வது நாளில் பொறிக் கப்பட்டுள்ள கல்வெட்டு ஒன்று நில அளவை முறையைக் குறிக்கிறது. மற்றொரு கல்வெட்டில் வில்லவ தரையன் என்பான் இசைவின் பேரில் கோயில் நிலங்கள் ஒழுங்கு செய்யப்பட்டமை குறிக்கப்பட் டுள்ளது. பல கல்வெட்டுகள் கோயிலுக்கு அளிக்கப் பட்ட நிவந்தங்களீப் பற்றியும், நந்த வனங்களீப்பற்றியும் பொதுவான விளக்கக் குறிப்புகளீ அளிக்கின்றன.

இவன் காலத்து அதிகாரிகள் தென்னவன் பிரம்மராயன், விக்கிரம சோழ பிரம்ம ராயன் ஜயதுங்க பல்லவ ராயன், வில்லவ ராயன், குருகுலத்தரையர் ஆகியோர் கோயிலுக்குத் திருநந்தவனம் ஒன்றை அமைத்தனர். அது சுந்தர பாண்டியர் தெற்குத் திருவீதியில் அமைக்கப்பட் டிருந்தது. 'சுந்தர பாண்டியன் திருத் தோப்பு' என்று அது வழங்கப்பட்டது[4] நூற்றுக்கால் மண்டபத்திற்கு அருகில் உள்ள மீனாட்சி – சுந்தரரேசர் கோயில் இம்மன்னனால் அமைக்கப்பட்டிருந்தல் கூடும்.

சடையவர்மன் வீரபாண்டியன் – (1253 – 1268):–

இவன் மேலேகண்ட முதல் சடைய வர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் தொண்டைநாடு, நடுநாடு, சோழநாடு ஆகியவற்றை அரசப் பிரதிநிதியாக இருந்து ஆண்டவன். 'கொங் கீழங் கொண்டு கொடுவடுகு கோடழித்து' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியை உடையவன். கொங்கு நாட்டு மன்னர்கள், காகுதியர், ஈழமன்னன், பல்லவன் கோப்பெருஞ்சிங்கன் ஆகியவரைப் புறங் கண்ட பெருவீரன். இவன் கல்வெட்டுகள் தில்லைக்கோயிலில் கிடைக்கின்றன. இப் பெருவீரன். தன்னுடைய வெற்றிச் சிறப்பை உணர்த்தும் வகையில் தில்லையில்

---

1. James C. Harle. Temple Gateways in South India (1963) Plates 105 - 176
2. தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி நான்கு எண்கள் 628, 629, 630
3. 'திவவரிக் கிம்புரி வெண்பிறைக் கோட்டிகல்
வெங்கடுங்கடகினமத வெங்கரிச் சுந்தரத்
தெனவன தில்லை மனறில் வனசத்திருவுடன் செரு
சொற்றிருவை மணந்த தொகருங் கனகத்
துலையுடன் முதத்த துலேயிற கலந்ததுவே'
– தென்னிந்தியக் கலவெட்டுகள் தொகுதி நான்கு எண 620
இவை தவிர வடமொழி கல்வெட்டுகள் லெ மேற்கண்ட நிகழ்ச்சிகளீக குறிப்பிடுகின்றன (செந்தமிழ் – தொகுதி நானகு)
சிதம்பரம் பாண்டியர் கலவெடுகள் – டி. ஏ. கோபிநாத ராவ் சுந்தரபாண்டியன் துலாபாரச் சிற்பம் ஒன்று தில்லைகோயிலின் தெற்குச் சுவரில் இருப்பதாக டி. ஏ. கோபிநாத ராவ் அவர்கள செநதமிழ், தொகுதி நான்கில் குறிப்பிடடுள்ளார்கள. அது இப்போதைக்கு காணப்படவில்லை என்று தெரிகிறது.

4. Ins. Nos. 171 and 172 of 1892; 546 of 1918.

வீராபிஷேகமும், விசயாபிடேகமும் செய்து கொண்டான்[1] . இவ்வரிய நிகழ்ச்சி தில்லைப் பெருங்கோயிலில் சிவகங்கைக் குளத்திற்கு மேற்கே உள்ள நூற்றுக்கால் மண்டபத்தில் கி. பி. 1267 ஆம் ஆண்டு நடைபெற்றது. அது முதல் விக்கிரம சோழன் அமைத்ததும் அவன் பெயரால் வழங்கப்பட்டதுமாகிய இம்மண்டபம் 'வீரபாண்டிய மண்டபம்' எனப் பெயர் எய்திற்று. இவனும் சடையவர்மன் சுந்தர பாண்டியனைப் போன்றே தில்லைத் திருப்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு சிறப்பு எய்தியமை கல்வெட்டு களால் புலனுகின்றது.

சடையவர்மன் விக்கிரம பாண்டியன் (கி. பி. 1249 – 1258):–

இவன் மேலே கண்ட சுந்தர பாண்டியன் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த போர்களில் படைத் தலைமை வகித்து வெற்றிகள் பல பெற்றவன். குறிப்பாக காகதியரோடு நிகழ்ந்த போர்களில் இவன் சிறப்பாக வெற்றி பெற்ருன். என்று தெரிகிறது.[2] கல்வெட்டுகள் துணைக் கொண்டு பார்க்கும்போது இம்மன்னன் வெள்ளாற்றங்கரையில் நடந்த போரில் பகைவரைமுறியடித்து பின்னர் தில்லைக்கு வந்து கூத்தப்பிரானை வழிபட்டான் என்று தெரிகிறது.[3] காகதியர், பிற்காலப் பல்லவர் ஆகியோரை இவன் வென்றி ருக்கவேண்டும் என்பது சில ஏதுக்களால் புலனுகின்றது. இவனும் அக்காலப் பகுதியில் நடைப்பெற்ற திருப்பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு இருக்க வேண்டும். தற்போது புவனகிரி என்று வழங்கப்படும் ஊர் இவன் பெயரால் அமைக்கப்பட்டதேயாகும். புவனேகவீரன் பட்டினம் என்ற பெயர் புவனகிரி என்று மருவியது.

முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி. பி. 1268 – 1310):–

இம்மன்னன் கல்வெட்டுகளினின்றும் தில்லையம்பதியில் இவன் ஆற்றிய பணிகளைத் தெரிந்து கொள்ளலாம். பெரும்பற்றப் புலியூர் வீதி ஒன்றில் அமைந்திருந்த கோயில் ஒன்றில் நாள் வழிபாடு ஆற்றுவதற்காக இம்மன்னன் அளித்த கொடையை ஒரு கல்வெட்டு

---

1. Ins. 61 of 1929 - 30
நூற்றுக்கால் மண்டபத்திற்கு செல்லும் படிக்கட்டிற்கு அருகாமையில் துறவி ஒருவரின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. அது யாரைக் குறிப்பது என்று தெளிவாகக் குறிப்பிட முடியவில்லை.

2. 'புயலுந்தருவும் பொருகைப் புவனேக வீரபுனல்
வயலுந்தரளந் தருகொற்கை காவல வாரணப்போர்
முயலுங் கணபதி மொய்த்த செஞ்சோதி முகத்திரண்டு
கயலுண்டெனு மதுவோ முனிவாரிய காரணமே'

–தெம்பரச் சாசனங்கள் – செந்தமிழ் தொகுதி நான்கு பக். 493 – 94

3. 'சீர்கொண்ட வெள்ளாறு குருதிப் பெருக்கெற்
செவ்வாறு படுமோட வவ்வாறு சென்றப்
போர்வென்றுணப்பேய் நடங்கண்ட தற்பின்
புலியூர் நடங்கண்ட புவனேக வீரா
பார் பணடளதுண்டொராலிற் கிடக்கும்
பசைப்பகை கொண்டலே பற்பநாபா
கார்கொண்ட நின்கையில் வேலுக்கு வற்றும்
கடலல்ல வென்பேதை கணடதத கடவே'

–தெனவிந்திய கல்வெட்டுகள் – தொகுதி நான்கு எண். 228

கூறுகிறது. 1 பிறிதொரு கல்வெட்டு நந்தவனம் ஒன்றைப் பராமரிப்பதற்கும், தன் தந்தை சடையவர்மன் சுந்தர பாண்டியன் பேரில் அமைந்த 'எல்லாந்தலையான பெருமாள் சந்தி' என்ற வழிபாட்டை எழுநிலைக் கோபுரத்திற்கு அருகில் உள்ள குலோத்துங்க சோழ விநாயகப் பிள்ளையார் கோயிலில் நடத்துவதற்கும் நிலக்கொடை இம்மன்னனால் வழங்கப்பட்டதை அறிவிக்கின்றது. 2

மாறவர்மன் வீர பாண்டியன்:–

இவன் முதலாம் மாறவர்மன் குல சேகரப் பாண்டியன் காலத்தில் வாழ்ந்த ஒரு மன்னனாவான். இவன் கல்வெட்டுகள் திருநெல்வேலியில் கிடைக்கின்றன. 3 இவற்றின் துணைக்கொண்டு பல செய்திகளை நாம் அறியமுடியும். மேலே கண்டவற்றால் பாண்டிய மன்னர்களின் திருநெல்வேலித் திருப்பணி ஓரளவு தெளிவாகின்றது. □

1. Ins. No. 286 of 1913
2. Ins. No. 366 of 1913
3. தென்னந்திய கல்வெட்டுகள் – தொகுதி ஏழு – கல்வெட்டு எண். 269

WITH BEST COMPLIMENTS FROM

SRI AMMAN TRANSPORTS

NO. 9, BASIN WATER WORKS STREET, MADRAS 600 079.

பச்சையப்ப முதலியாரின் வாழ்க்கையும் அவரது அறக்கட்டளைகளும்

எஸ். வி. வைத்தியநாத தீட்சதர்
சிதம்பரம்

முற்பிறவியில் செய்த நற்கருமங் களாலேயே அதனதன் தகுதிக்கேற்ப அருளாளர்களாகவும் அறிவாளர் களாகவும் கொடை வள்ள லாகவும் ஒவ் வொரு மனிதரும் விளங்கு கின்றார்கள். அந்த வகையில் பிறந்து புகழுடன் பிரகாசிப்பவர், வள்ளல் பச்சையப்ப முதலியார் ஆவார். அவர் உத்தியோகம் பார்த்த முதல் மாத வருமானத்தில் பாதியை மாணவர்கள் கல்விக்காகவும் கோயிலுக்காகவும் செலவு செய்தார்.

பதினெட்டாம் நூற்றாண்டில் (1754 –ஆம் ஆண்டில்) காஞ்சீபுரத்தில், விஸ்வநாத முதலியாருக்கும், பூச்சியம் மாளுக்கும் பிறந்த இவர், தொடக்கத்தில் பெரியபாளையம் ரெட்டியாரால் ஆதரிக் கப்பட்டும், பின்னர் பௌனி நாராயண பிள்ளை அவர்களால் பெரிதும் பாதுகாக்கப் பட்டும், கும்பினியார் உத்தியோகத்தில் சேர்ந்து 'துவிபாஷி' யாக விளங்கி பெரும் செல்வம் உடையவராய்த் திகழ்ந்தார். பிற் காலத்தில், தஞ்சை மன்னருக்கே இரண்டு லட்சம் வராகன் கடன் கொடுக்கும் அளவிற்குப் பெரும் செல்வராய் விளங் கினர். செல்வத்தோடு கொடைப் பண்பும் சேர்ந்து இருந்ததே இவருடைய வாழ்க்கையின் தனிச் சிறப்பு ஆகும்.

இன்று தஞ்சை மேல வீதியில் பங்காரு காமாக்ஷி அம்மன் கோயில் உள்ளது. இது காஞ்சீபுரத்தில் இருந்த தாகவும், மத சம்பந்தக் கொடுமையால் கலகம் ஏற்பட்ட பொழுது தஞ்சைக்கு வந்தாகவும் குறிப்புள்ளது. மேலும் அக் கோயிலில் சிறு கோபுர வாசல்படிக்கு உள் சென்றதும், ஓர் கல்வெட்டு பலகை வைக்கப்பட்டிள்ளது. அதில், அவரால் நிறுவப்பட்ட தர்மங்களைச் சரிவர செய்யா விட்டால், அவர்கள், சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயில் சன்னதியில், நெய் தீபத்தை அணைத்த பாபத்தை அடை வார்கள் என்று எழுதி இருக்கிறது. இதனால், தஞ்சைக்கும் அரசருக்கும் உள்ள இவருடைய விசேட தொடர்பை உணரக் கூடும். மேலும், தாம் பிறந்த காஞ்சீ புரத்தில் திருக்கோயில் கொண்டு எழுந் தருளியுள்ள ஏகாம்பரநாதர் ஆலயத்தில் இரண்டு தெய்வச் சிலைகளை வார்ப்பித்து, அவைகளுக்குக் கும்பாபிஷேகம் செய்து மகிழ்ந்தார். பின்னளில், தஞ்சைக்குக் குடியேறிய பின்னர் சிதம்பரம் திருக்கோ யிலுக்கும் சில திருப்பணிகளை ஆற்ற வேண்டுமென்றே விரும்பினர்.

அவருடைய தமக்கையார் இருவர். மூத்தவர் சுப்பம்மாள். இளையவர்

அச்சம்மாள். மூத்தவர் சுப்பம்மாள் பச்சையப்பரிடம் மிகவும் அன்பு கொண்டவர். இவர் புங்கனூர் தெய்வநாயக முதலியாரை மணந்து கொண்டார். அதன் பயனுய்ப் பிறந்த மகளின் பெயர், அய்யாளம்மாள் என்பதாகும்.

சுப்பம்மாள் கணவர் திடீர் என்று இறந்துபோகவே சுப்பம்மாள் தன் மகளை அழைத்துக் கொண்டு தன் தாய் வீடு வந்து சேர்ந்தார். கணவனுடைய சொத்தும் கூடவே வந்தது. இந்த அம்மையார், பச்சையப்ப முதலியாரின் அற உணர்வுகளுக்கும், தர்ம சிந்தனைக்கும், கோயில் திருப்பணிகளுக்கும் தூண்டுகோலாய் விளங்கினர். சிதம்பரத் தலத்தில் சில திருப்பணிகள் நிகழ்த்த வேண்டுமென்று பச்சையப்ப முதலியாருக்கு யோஜனை சொன்னவரே இந்த சுப்பம்மாள்தான். தில்லைத் திருக்கோபுரப்பணியை இவர், கருத்தாக இருந்து நடத்தி வைத்தார்.

தஞ்சையில் இருந்து முதலியார் சென்னைக்கு மீண்டும் வந்து துபிபாஷியாய்த் தொழிலை நடத்தி வந்த பொது, தில்லையில் தம் காரியங்களை நடத்த வேண்டுமென்று கருதி அவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்து வந்தார். சென்னை வாஸம் அவருக்குச் சரிப்பட்டு வரவில்லை. கும்பினி அதிகாரிகள் அவருடைய மன அமைதிக்குப் பங்கம் விளைவித்தார்கள். அவருக்குப் பாரிச வாயு உண்டாயிற்று. பின்னர், நீரிழிவு நோயும் வயிற்று வலியும் மூலரோகமும் தொடர்ந்து அவரைப் பெரிதும் துன்புறுத்தின. கும்பகோணம் சென்றார். அங்கும் அவர் உடல் நலம் பெறவில்லை. எனவே 1794—ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 22ம் தேதி தம்முடைய மரண சாசனப் பத்திரத்தை (உயிலை) எழுதி முடித்தார். திருவையாறு தலத்தில் உயிர்விட எண்ணி அங்கு சென்றார். 1794ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதி இறைவன் திருவடி நிழலை அடைந்தார்.

தம்முடைய உயிலில் அவர் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டு இருந்தார்:

சொத்தில் ஒரு லட்சம் வராகனைப் பணத்திற்கு நட்டம் இல்லாத இடத்தில் வட்டிக்கு விட்டு அந்தவட்டியைக் கொண்டு காசி முதல் ராமேஸ்வரம் வரையில் உள்ள திருத்தலங்களில் தாம் செய்துவந்த அறக்கட்டளைகளைத் தொடர்ந்து செய்து வர வேண்டும் என்றும், கட்டி முடிக்கப் படாமல் இருக்கும் சிதம்பரம் கீழக் கோபுரம் கட்டி முடிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முதலில் கிழக்கிந்திய கம்பெனியின் துபாஷியாகவும், பின்னர்த் தஞ்சாவூர் மகாராஜாவிற்கு துபாஷியாகவும் விளங்கிய இவர் அறிவையும் ஆற்றலையும் வியந்து போற்றி, கர்நாடக நவாப்பும் தனக்கு உதவக் கோரினர். தம் இருபதாவது வயதிலேயே பச்சையப்பர் செங்கற்பட்டு மாவட்டத்தில் திரு. நிகோலஸ் துரையிடம் தண்டல் நாயகமாக வருவாய்த் துறை அதிகாரியாய் (Dubash) பணியாற்றித் தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் வணிக முறைகள் சட்டம் முதலிய துறைகளில் தேர்ச்சி பெற்று விளங்கினர். பல சமயங்களில் கிழக்கிந்தியக் கம்பெனியாரும் கர்நாடக நவாப்பும் தஞ்சை மன்னனும் இவர் உதவியை நாடி நின்றனர். இருவரும் கம்பெனியருக்குக் கப்பம் கட்ட முடியாத நிலை இருந்தபோது, இரு தரத்தாருக்கும் இடையிலிருந்து, ஏற்பட்ட இன்னல்களைச் சுமுகமாய்த் தீர்த்துவைத்தார்.

சல்லியன் துரை இவரைத் தஞ்சை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களுக்கு அனுப்பிக் கிழக்கிந்தியக் கம்பெனி வளம் பெறப் பயன்படுத்திக் கொண்டார். பின்னாளில், சென்னை ராஜதானியின் ஆளுநராக சர். ஆர்ச்சி பால்டு காம்பெல் துரை வந்தபோது, அவர் பச்சையப்ப முதலியாரைத் தஞ்சை வருவாய்த் துறைகளைச் சேகரிக்க மாவட்ட அதிகாரி

வில்லியம் பெட்ரி என்பவருக்கு உதவி யாக அனுப்பி வைத்தார்.

வள்ளல் பச்சையப்ப முதலியார் ஏழை எளியோரிடம் இரக்கம் பூண்டிருந் தார். நாள்தோறும் கண்ணும் கருத்தாய் இருந்து கொண்டு கருமத்திற்காகவே உழைத்து வந்தாலும், மாலையில் தமிழ்ப் புலவர்களைத் தம் வீட்டிற்கு அழைத்து அவர்களோடு சிறிது நேரம் அள வளாவியும், ஓதுவார் மூர்த்திகளைக் கொண்டு தேவார, திருவாசகங்கள் ஓதக் கேட்டும் வாழ்ந்து வந்தார். இவர் திருக் கோயில்கள், திருமடங்கள் முதலிய வற்றிற்குத் திருப்பணிகளை ஆற்ற உறுதுணையாக நின்றவர் இவரது மூத்த தமக்கையும், மாமியாருமான சுப்பம்மாள் என்பவராவார். பச்சையப்பரின் தாயார், பூச்சியம்மாளும் தமக்கையார் சுப்பம் மாளுமே அவர்தம் ஆன்மீக வாழ்வுக்கும், அறப்பணிகளுக்கும் பெருமளவில் உறு துணையாக நின்றவர்கள்.

தஞ்சையில் வாழ்ந்த காலத்திலேயே சைவர்கள் கோயில் என வழங்கும் சிதம்பரம் திருத்தலத்தின் பேரில் அளவிலாத சுடுபாடு அவருக்கு உண்டா யிற்று. மேலும், திருவிடைமருதூர், திருவையாறு, திருக்குடந்தை முதலிய தலங்களிலும் பற்று மிகுந்தது. 1791-ம் ஆண்டில் அவர் நமது திவ்லீலக் கோயிலின் திருப்பணியைத் தொடர்ந்தார். சோழ மன்னர்கள் காலம் தொடங்கி அரசர்கள் சிலராலும் வள்ளல்கள் சிலராலும் ஆற்றுவிக்கப் பட்டு வந்திருக்கிறது இத்திருப்பணி.

இனி, இவர் திவ்லீலச் சபாநாயகருக்கு (நடராஜப் பெருமானுக்கு) ஆற்றிய பணிகளைப் பார்ப்போம்:

முதலாவதாக, கிழக்குக் கோபுரத் திருப்பணிக்குக் கடைக்கால் இட்டார். ஆயினும் இவர் திட்டமிட்ட இப்பணி, பின்னுளில் இவர் தமக்கை சுப்பம் மாளால் நிறைவு செய்யப்பெற்றது.

1803- ஆம் ஆண்டு இக் கோயிலுக்கு வந்திருந்த வாலெண்டியா என்னும் உயர் அதிகாரி ஆங்கிலப் பிரபு ஒருவர் பின் வருமாறு எழுதியுள்ளார்:

"நாம் கோயிலுக்குள் நுழையும் கிழக்குக் கோபுரவாயில், கடவுள் பற்று மிகுந்த ஒரு விதவையால் அண்மையில் சீர் செய்யப் பட்டுள்ளது. நாற்பதாயிரம் பகோடா பொன் பெரும் செலவு செய்து இத் திருப்பணி, அத்த அம்மையாரால் முடிக்கப் பெற்றுள்ளது. தஞ்சை, ராமேசுரம் திருக்கோயில்களில் காணப் படும் கட்டடக் கலையின் சிறப்பினைக் காட்டிலும் இச் சிதம்பரக் கிழக்குக் கோயில் கட்டிடக் கலையில் நேர்த்தி அழகுமாட்சி பொருந்தியதாய் உள்ளது. முன் முகப்பு வாயில் நூற்றுக் கால் மண்டபம் எழுப்பப் பட்டுள்ளது. இன்னும் கூரை வேயப்பட வில்லை. உள்ளே காணப் படும் கட்டடமும் பழமையிலும் அழகும் வாய்ந்தது.

நிருத்த சபையின் கீர்த்தியும் சொல்லும் தரமன்று. கட்டடக் கலையின் மாட்சியெல்லாம் ஒருங்கே புலப்படத் துலங்குவது. (இவர் சொல்லும் மண்டபம் தற்போது வலிவலம் தேகிகரால் ஆர். சி. மண்டபமாய் போடப்பட்ட 1,000 கால் மண்டப முகப்பு மண்டபமே. அப்போது மேற்கூரை வேயாத தூண்கள் மட்டும் நின்ற நிலை).

ஆனி மார்கழி பிர்மோத்ஸவத்தில் பந்தல்கால் முகூர்த்தம், நாலாவது, ஐந்தாவது, ஆறாவது திருநாள், தேர் உற்சவத்தில் தேர் புறப்பட்டு, நான்கு வீதிகள் சுற்றி வரும்வரை உள்ள செலவுகள் பச்சையப்ப முதலி யாருடையது. மேலும், தங்கம் வைரம் முதலிய நவரத்தின இழைப்பு பதக்கங்கள் முதலான ஆபரணங்கள் சுமார் 40 வரையிலும், சாயரக்ஷை காலத்தில் சந்திர மௌளீசுவரர் அபிஷேக திரவியங்கள், தீபாரதனை, ஷோடாசோபசார வெள்ளி

யிலான சாமான்களும், அதற்கு திருத் தாமரைப் பணிக்கு நிதியும் தீபாரதனை காலத்தில் தேவாரம் பாடுவதற்கு ஓதுவார் மூர்த்திக்கு நிதியும் வைத்துள்ளார். சிதம்பரம், தில்லை வாழந்தணர்களுக்கு 16 பேர்களுக்கு வீடுகட்டிக் கொடுத்து உதவியதாகவும் தெரிகிறது. மேலும், ஸ்ரீ கோவிந்தராஜர் கோயிலுக்கு நித்திய நிவேதனக் கட்டளையும் யாத்திரவாஸி களுக்குப் பிரசாத வினியோகமும் நடந்து வருகிறது. வட இந்திய சாதுக்களுக்கு உணவாக, உலுப்பை அதாவது, ஆட்டா மாவு, நெய், அரிசி, விறகு முதலியவை களை அவர்களாகவே உணவு தயார் செய்து உண்ணுவதற்குக் கொடுப்பது. (இது தற்போது பொருளாதாரக் குறை வால் நடைபெறவில்லை.) மேலும் சாயரக்ஷை காலத்தில் நடந்து வந்த பக்ஷணங்கள், அதாவது, தேங்குழல் வடை, புட்டு, பாயஸம் இது ஐந்து சன்னதிக்கு நடந்து வந்தது. (இதுவும் தற்போது நின்றுபோயிருக்கிறது.)

ஸ்ரீ பச்சையப்ப முதலியார் சிதம் பரத்தில் உயர்நிலைப் பள்ளி ஒன்றும் நிறுவி, அதில் வடமொழி பயிற்சி இரண்டு வகுப்புகள் நடத்த அதற்கான நிதியும் வைத்துள்ளார். ஷை சிதம்பரம் சம்பந்தப்பட்ட தர்மங்களை நடத்த விசேஷ நிதியாக சீர்காழிக்குப் பக்கத்தில் தென்னங்குடி என்ற கிராமம் மான்யமாய் விடப்பட்டு இன்றுவரை சிறப்பாக இயங்கிறது. அதன் வருவாய் தற்போது நில வருமானத்தில் உள்ள பலவிதமான தொல்லைகள் போல் இல்லாமல் ஓர் அளவு மனசாட்சியும் கடமையும் உள்ள குத்தகைக் காரர்களால் பராமரித்தும் வருவதால் இதற்குக் கூடுமானவரை அந்த சொத்தின் வருவாய் வருவதாகத் தெரிகிறது.

மேலும் டிரஸ்டுபோர்டில் சில ஆண்டுகளுக்கு முன் கோயில் உற்சவ பாக்கி தேர் செலவு முதலான பாக்கிகளைக் கேட்க சென்றிருந்த பொழுது, அப்போது சேர்மனாக டாக்டர் சடகோப முதலியார் இருந்தார். அந்த டிரஸ்டு போர்டு மீட்டிங்கில் 8 நபர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவர், நாங்கள் அந்த மீட்டிங்கில் பாக்கி விபரங்களைக் குறித்துப் பேசியது பற்றி மனக்குறையாகப் பேசினார். அப்போது தில்லை தீக்ஷிதர்கள் சார்பாக டாக்டர், ஸ்ரீ பச்சையப்ப முதலியார் உயில் எழுதிச் சில வருட காலம் எந்த அறக்கட்டளைகளும் நடக்க வில்லை. அப்போது தில்லைத் தீட்சதர்கள் தான் மேற்படி உயில் உள்ளதாக ஐக்கோர்ட்டில் உயிலின் நகல் பெற்று உயிலை அமுல் படுத்துவதற்கு (Probate of will) வர்ங்கியவர்கள் என்ற விபரங்களை அவர்களுக்குச் சொன்னார்.

மேற்படி டிரஸ்டு போர்டில் அந்தந்த ஊர்களில் தர்மங்களை மேற்பார்வை செய்ய ஜில்லா ரிஜிஸ்டார் அவர்கள் பொறுப்பில் நடத்தவும் ஒருவேளை, அந்த க்ஷேத்திரங்களில் அன்னிய மதஸ்தர்களாக இருந்தால், பச்சையப்பர் உயர்நிலைப் பள்ளி முதலிய அவர் கல்லூரியில் படித்தவர்களை அங்கு ஏற்படுத்த வேண்டு மென்று எழுதியுள்ளார். சென்னை டிரஸ்ட் போர்டின் நிர்வாகம் சம்பந்தமாகப் பல அபிப்பிராய பேதங்களும் குறைபாடுகளும் ஏற்பட்டதால், அரசாங்கத்தால் சுமார் நான்கு ஐந்து வருடங்களுக்கு முன் ஓர் கமிட்டி போட்டனர். சேர்மேன் முதலான ஏழு, எட்டு பேர்கள் நிர்வாகத்தில் தற்போது கல்விப் பணிகள் அவருடைய சொத்துக்கள் நிர்வாகம், கோயில் கட்டளைகள் ஆகியன சிறப்பாக நடை பெறுகிறது. ரிடையர்டு ஜட்ஜ் சதாசிவம் அவர்கள் முயற்சியால் தேர்சீலைகள் புதிதாகச் செய்து வழங்கினர்கள்.

தற்போதைய சேர்மேன் ஸ்ரீ காசி ராஜன், கருப்பண்ணன் முதலானவர்கள் ஸ்ரீ நடராஜர் தேர் சக்கரம் நான்கும் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் தேர் சக்கரம்

நான்கும், 1964, 1966ல் சுமார் இரண்டு லட்சம் ரூபாய் அளவில் செய்து வைத்தது போல அதற்கு அனுகுணமாகப் பொது தீக்ஷிதர்கள் முயற்சியால் சென்ற ஆண்டு சிதம்பரம் பிராமண சங்க நிர்வாகிகள்உதவியுடன் சிதம்பரம் தெற்கு வீதி ஆடிட்டர், ரவிச்சந்திரன் சுமார் 50,000 ரூபாய் அளவில் தேர் வடங்களும் செய்து வைத்துள்ளார். இவ்வாண்டு பொது தீக்ஷிதர்கள் முயற்சியால் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் தேருக்கு இரும்பினால் ஆன முழு அச்சாக, 25 அடி நீளம் உள்ள சுமார் ஒரு லட்சம் ரூபாய் ஆகக்கூடிய அச்சினை நெய்வேலி கார்பரேஷன் சேர்மேன் முதலான நிர்வாகிகள் தயார் செய்தும் அதைப் பொருத்தியும் மிகுமிகச் சிறப்பாகச் செய்து உள்ளார்கள். மேலும், பச்சையப்பன் டிரஸ்டின் தற்போதைய நிர்வாகிகள் பழமையாய் நடந்து வந்து தற்போது நின்று போயிருக்கும் நிவேதனங்கள் மற்றும் தேர் முதலியவற்றையும் சிறப்பாகச் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

வள்ளல் பச்சையப்ப முதலியார் ஆற்றிய அறப்பணிகள் எண்ணிலடங்காதனவாகும். அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம் புறத்த புகழுமில, என்றும், ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லீல உயிர்க்கு, என்றும், ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு என்றும் வள்ளுவர் வகுத்த வாழ்வை அவர் கடைப் படித்து வாழ்ந்ததால் வாழும் காலத்தில் பிறருக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தும் இறந்த பின்பும் புகழுடன் தற்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். தூய சிந்தையுடன் நிறுவும் அறக்கட்டளைகள் காலத்தால் நலிந்திடாமல் தம் ஆற்றலை நிலை நிறுத்தும் என்பதற்கு இவருடைய அறக்கட்டளைகள் எடுத்துக்காட்டாம். இது போன்ற தூய சிந்தனையாளர்கள் புகழ் ஒரு நாளும் குறைவதில்லை. □

ஓம்

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூயநற் சோதியுட் சோதி
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனெடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நீன் ரூயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

—திருவிசைப்பா



கலை



தில்லைகற்சிற்பம்

தில்லைத் தலத்து நடன சிற்பங்கள்

டாக்டர் பத்மா சுப்ரமணியம்
இயக்குநர், நிருத்யோதயா, சென்னை.

'பூலோகக் கைலாசம்' என்று போற்றப்படும் 'சிதம்பரம்', சச்சிதானந்த மூர்த்தியின் தலையாய ஸ்தலமாக விளங்கி வருகிறது. தூக்கிய திருவடியின் மூலம் முக்தி தரும் சக்திநாதன், மூலத்தானேஸ்வரர் ஆகவும் ஆடவல்லப் பெருமானாகவும் இங்கு எழுந்தருளி இருக்கிறார். அருவத்தையும் உருவத்தையும் இணைக்கின்ற பாலமான சுயம்பு லிங்கமாகவும், அருவத்தையே விளக்கும் ஆகாயமாகவும், அவ்வருவ சக்தியின் உருவமான–தோன்றியும் தோன்றுமலும் இயங்கி வரும் அண்ட சராசரத்து ஆட்டத்தின் சின்னமாக–நடராசராகவும் இந்த ஒரே தலத்தில் நாம் அவரைப் பணிகிறோம். சமயக் குரவர்கள் பலரும் இத்தலத்தில் அகமகிழ்ந்து பாடிப் பரவசமடைந்துள்ளனர். தெய்வீக உந்துதலால் உருவான அவ்விலக்கியப் படைப்புக்கள் இன்று வரை இந்த தெய்வத்தின் நாதாந்த நடனத்திற்கு நிரந்தரப் பாடல்களாக விளங்குவது போல நிலைத்துள்ளன. அண்ட சராசரத்தில் மூழ்கிப்போன, ஆனால் சாதாரண செவிகளுக்குக் கேட்காத அந்த நாத ஒலிகள் நன்றாகக் கேட்பது போல இவ்வாலயத்தில் உள்ள ஆயிரக்கணக்கான நடன சிற்பங்கள் ஆனந்தமாக ஆடி வருகின்றன. நிரந்தரமான நிசப்தத்தில் நடந்து வரும் இந்த நடனக் குழுவில் தெய்வீக அழகையும், கலைச் செறிவையும் சரித்திர முக்கியத்துவத்தையும் ஆராய்ந்து அனுபவிக்க ஒரு ஆயுள் போதாது.

தில்லைப் பெருமானின் இத் தேவாலயம் ஒரு நடனக் கலைக் 'களஞ்சியம்' என்றே கூறலாம். ஆகவே, இவ்வாலயத்தை ஆஸ்திகர் மட்டுமின்றி கலையுணர்வு கொண்ட நாஸ்திகர்களும் போற்றிப் புகழ்கின்றனர். சுமார் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து இன்று வரை இவ்வாலயத்தின் கட்டிட நிர்மாணப் பணி தொடர்ந்து நடந்து கொண்டே வந்துள்ளது. சுமார் 42 ஏக்கர் நிலப் பரப்புள்ள இவ்வாலயத்தில் பல நூற்றாண்டு காலங்களில் பல்வேறு அரசர்கள் மண்டபங்களும், திருமாளிகைகளும், திருச்சுற்றுகளும், கோபுரங்களும் எழுப்பி வந்த வண்ணம் இருந்துள்ளனர். இவ்வாலயத்தின் பல பகுதிகளில் நோக்கும் திசைகளிலெல்லாம் நடன சிற்பங்கள் சிற்பக் கலை வளர்ச்சியில் உச்ச கட்டத்தைப் பறை சாற்றி வருகின்றன. அநேகமாக இன்று நிலைத் துள்ள நடன சிற்பங்கள் யாவுமே ஏறத்தாழ 11 ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியிலிருந்து 13 ஆம் நூற்றாண்டு வரை அமைக்கப்பட்டன வென்றே சொல்ல

லாம். இச்சிற்பங்கள் பிற்கால சோழர் காலத்தில் நடனச் செய்முறையைச் சித் தரிப்பதாக விளங்குகின்றன.

இவ்வாலயத்தில் நடன சிற்பங்கள் நிறைந்து காணப்படும் பகுதிகளாவன:– தேர்வடிவில் அமைந்துள்ள நிருத்த சபை, நடராசப் பெருமானின் மூன்றாவது திருச் சுற்றான ராஜாக்கள் தம்பிரான் திரு மாளிகை, ஞானாம்பிகையான சிவகாமி சந்நிதியின் திருச்சுற்று, பாண்டிய நாயகம் என்று வழங்கப்படும் முருகப் பெருமானின் ஆலயத் திருச்சுற்று, இராஜ சபை என்ற பெயருடன் கம்பீரமாக நிலைத்து வந்துள்ள ஆயிரங்கால் மண்டபத்தின் வெளிப்புற சிற்ப வரிசை, மற்றும் நான்கு திசைகளி லும் வானளாவி, ஆகாயத்தோடு உற வாடும் கோபுர வாயில்களில் உட்சுவர் களில் விளக்கும் கரண சிற்பங்கள் ஆகிய வைகளாகும். இவை தவிர நான்கு கோபுரங்களையும் இணைக்கும் மதில் சுவரின் உட்பகுதியில் மூன்றாவது பிரா காரத்திருச்சுற்றாக விளங்கும் பகுதி முழு வதும் "ராஜாக்கள் தம்பிரான் திரு மாளிகை" என்ற பெயரில் திருச்சுற்று மாளிகையாக இருந்திருக்கிறது. இதன் அடிப்புறத்தில் பல்லாயிரக்கணக்கான நடன சிற்பங்கள் தாராசுர ஆலயத்தில் காணப்படும் திருச்சுற்றைப் போல, சுமார் முக்கால் அடி உயரத்தில், இரண்டு, மூன்று அல்லது நான்கு பெண்கள் இணைந் தாடும் காட்சிகளாக விளங்குகின்றன. ஆடல் பெண்களோடு, தட்டுமுட்டு ஆட்டு என்ற சொற்றொடர்க் இணங்க தாளம் தட்டும் நட்டுவனையும், கலைஞர்களையும் பல ஆடல் நிலைகளிலேயே காணலாம். மறைந்து கொண்டிருக்கும் இச்சிற்ப வரிசையின் எஞ்சிய பகுதிகளை ஆங் காங்கே மாளிகையிலோ வெளியிலோ இன்றும் காணலாம்.

கோபுரங்களில் காணப்படும் கரண சிற்பங்கள் தவிர மற்ற எல்லா நடனச் சிற்பங்களும் மனிதப்பெண் உருவங்களே யாகும். இவ்வாயிரக்கணக்கான சிற்பங் களுள் பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரத் தைப் பின் பற்றும் "மார்கி" எனப்படும் சாஸ்திரிய நடன உத்திகளையும், பரத முனி வருக்குப் பிற்காலத்தில் எழுந்த 'தேசி' எனப்படும் நடன உத்திகளையும் காணலாம். இவற்றுள் பதினோராம் (11) நூற்றாண்டிலிருந்து (13) பதிமூன்றாம் நூற் றாண்டுக்குள் விளங்கிய நாட்டிய, நடன வழக்குகளில் பிரதிபலிப்பைக் காண் கிறோம். அந்நூற்றாண்டுகளில் பரத முனி வரின் நாட்டிய சாஸ்திரம் பின்பற்றப் பட்டதின் செயல்முறை விளக்கத்தை இச் சிற்பங்கள் சித்தரிக்கின்றன. மேலும் அக் காலத்தில் பரவலாக ஆடப்பட்டு வந்த ப்ரேங்கணி, பேரணி, திருவாலத்தி, திருச் சூவம் போன்ற தேசி நடனங்களையும் காணலாம். அக்கால நடன இலக்கி யங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில் இச் சிற்பங்கள் நடனக் கலையின் செய்முறை சரித்திரத்திற்குள் கலங்கரை விளக்கமாக விளங்குவதை உணரலாம்.

ஆடவல்லானின் கண்ணெதிரே இருக்கும் தேர்வடிவான நிருத்த சபை பல மாறுதல்களை அடைந்துள்ளது. தேர் சக் கரங்கள் சுண்ணச் சுதைக்குள் மறைந்திருக் கிறது. அதன் அடிப்பாகத்தில் நடன சிற் பங்களில் எஞ்சியவற்றைக் காணலாம். இவை தாராசுர ஆலயத்தை நினைவு படுத்து வதாக விளங்குகின்றன. சுமார் ½அடி அளவில் விளங்கும் இச்சிற்ப வரிசை உன் னதமான கலை எழில் கொண்டவையாகும். சிவகாமி அம்மனைச் சுற்றி விளங்கும் திருச் சுற்று மாளிகையில் சுமார் ஒரு அடி அளவில் உயிரோட்டமுள்ள நடன சிற்பங் களைக் காணலாம். சுவரிலிருந்து வெளியே வந்து ஆடும் நூற்றுக்கணக்கான இப்பெண் களில் அழகைக் கண்ட அதி அற்புதத்தில் நாம் சிலையாகி விடுகிறோம். இச்சிற் பங்கள் யாவும் நடன அசைவுகளின் ஒவ்வொரு பகுதிகளைக் குறிக்கின்றன. இச் சிற்பங்களின் அழகில் மட்டும் மயங்கி

இருந்த என்னை அவை உணர்த்தும் செய் முறையைக் கண்டு கொள்ள என் மனக் கண்களைத் திறந்தர் நடமாடும் கடவுளான பூஜ்ய ஸ்ரீ காஞ்சி காமகோடி பரமாசாரி யார் அவர்களே.

இச்சிற்பங்களைப் பற்றி வேறு ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையே எழுத முற்பட்டுள் ளேன். தலை அலங்காரம் மூலம் இவ்வுரு வங்கள் யாவும் மானிட உருவங்கள் என்று கண்டு கொள்ளலாம். அநேகமாக எல்லா உருவத்திலும் பக்கவாட்டில் கொருகுக் கொண்டையே காண்கிறோம். மேலும் உப கலைஞர்களும் ஆடல் கலைஞர்களோடு ஒரே அளவில் இருப்பதால் இவையாவும் மானிட உருவங்கள் என்று உணரலாம். அம்மன் திருச்சுற்றில் காணப்படுவதை விட ஆயிரக்கால் மண்டபத்தின் அடியில் காணப்படும் சிற்பங்கள் இன்னும் சற்றுப் பெரியவை. இச்சிற்பங்களும் மானுட உருவங்களையே சித்தரிக்கின்றன. இங்கும் மார்பியும் தேசியும் கலந்து சித்தரிக்கப் பட்டுள்ளன.

மேற்கூறிய சிற்பங்களை விட சற்றுப் பிற்காலத்த தாயினும் மார்பி நடன முறையின் காட்சிக் கோட்பாடாகவும், கட்டிடச் சிற்பக் கலையின் ஒப்பிலா அணி கலனுகவும் விளங்குபவை கோபுர வாயில் களில் விளங்கும் கரண சிற்பங்களாகும். இந்த நான்கு நிலைக் கோபுரங்களைப் பற்றி, அங்குள்ள நடன சிற்பங்களைக் கொண்டு புதியதொரு கண்ணோட்டத்தோடு ஆராய்ந் ததில், நான்குமே ஏறத்தாழ சமகாலத் தவை என்றும், சோழர் பாணியைச் சேர்ந்தவை என்றும் முடிவுக்கு வந்தேன். இந்நான்கு கோபுரங்களில் நிர்மாண வரிசைக் கிரமத்தைப் பற்றியும் நடன சிற் பங்களின் மூலமாக ஆராய முடிந்தது. பொதுவாக இந்த நான்கு கோபுரங்களிலும் 108 கரணங்களும் பரத முனிவர் கூறிய அதே வரிசையில் செதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோபுர வாயிலிலும் இருபக்கச் சுவர்களிலும் ஏழு தூண்களில் அர்த்த சிற்பங்களாக இவை காணப்படுகின்றன. இவை யாவுமே அன்னை சிவகாமியின் சிற் பங்களாகும். மற்ற மண்டபங்களில் காணப்படும் சிற்பங்களைப் போலல்லாமல் தேவிக்குரிய கரண்டமகுடத்தை சிகையலங் காரமாக இச்சிற்பங்கள் கொண்டுள்ளன.

ஆலயத்திலிருந்து வெளிவரும்போது இடப்பக்கத்தில் உள்ள முதல் தூணில் கீழிருந்து மேலாகக் கரண சிற்ப வரிசை துவங்குகிறது. ஏழாவது தூணில் மேல் பகுதியிலிருந்து எதிர் பக்க சுவரின் முதல் தூணின் அடியிலிருந்து மீண்டும் மேல் நோக்கி இவ்வரிசை தொடர்கிறது. ஆலயத்தினுள் புகும்போது நமக்கு இடப் பக்கத் தூண்களில் ஏறத்தாழ 54 கரணங் களுக்கு மேற்பட்ட கரணங்களையும் 108 முடியக் காணலாம். வடக்குக் கோபுரத்தை தவிர மற்ற கோபுரங்களில் வரிசைக் கிரமம் எந்தவித சீர்குலைவும் இல்லாமல் இந்த வரிசைக் கிரமத்திலேயே விளங்கு கிறது. ஆனால் இதுவரை வெளியான பல புத்தகங்களில் இந்த வரிசைக் கிரமம் சரியில்லை. இந்நான்கு கோபுரக்கரண சிற்பங்களிலும் தேவிக்கு இரு பக்கங்க ளிலும் மிகச் சிறிய பக்க மேளக்கலைஞர் களைக் காணலாம். ஆடும் வடிவத்தில் சுமார் தெய்வ உருவத்திற்கு முக்கியத்துவங் கொடுக்கிறது. மற்ற மனித ஆடலுருவங் களைக் காணும்போது, உப கலைஞர்கள் அதே அளவில் அமைக்கப்பட்டுள்ளதற்கு இது மாறுபட்டதாக உள்ளது. தஞ்சைப் பெருவுடையான் ஆலயத்திலும், குடந்தை ஆராவமுதன் ஆலயத்திலும் கரண சிற் பங்கள் ஆடலரசனே ஆடுவதாக அமைந்து இருப்பதைக்காண்கிறோம். ஆனால் ஆடவல் லானின் திருத்தலத்தில் உமையம்மையின் நடனத் திருக்கோலங்கள்தான் ஒவ்வொரு கோபுர வாயிலிலும் 108 கரணங்களாக விளங்குவது குறிப்பிடத்தக்கது. இது சிவ சக்தி ஐக்கியத்தை உணர்த்துவதோடன்றி, பரதர் விவரித்த கரணங்கள் இரு பாலருக்கும் பொதுவானது என்பதையும்,

நடன செய்முறை சரித்திரத்தையும் உணர்த்துவதாயும் உள்ளது. இதன் தனிச் சிறப்பைப் பின்பு பார்ப்போம். கிழக்கு, மேற்கு ஆகிய கோபுரங்களில் பரதரின் நாட்டிய சாஸ்திரத்தில் எழுதப்பட்ட கரணக் கோட்பாடுகளான வடமொழி சுலோகங்கள் அந்த கரண சிற்பத்திற்கு மேல் சோழர் காலத் தமிழ் கிரந்த எழுத்தில் வெட்டப்பட்டிருக்கின்றன. இவை நாட்டிய சாத்திரத்தில்'தாண்டவலக்ஷணம்' என்ற தலைப்பில் உள்ள நான்காவது அத்யாயத்தின் முறையான பகுதிகளாகும். வெறும் கட்டிடக்கலையின் மெருகுக்காக மட்டுமின்றி ஆடற்கலை காட்சிக் கோட்பாடாக, பல தலைமுறைகளுக்கு நிலைத் திருக்க பிரத்யேகமாக, இந்த ஆலயத்தில் இத்திட்டம் வகுத்து நிறைவேற்றிய அரசரும், சிற்பிகளும் நடனக் கலை உலகத்தின் நன்றிக்கும் வணக்கத்திற்கும் உரியவர்களாவர்.

இக்கோபுரங்களை நிர்மாணித்த அரசர்களின் பெயர்கள் சர்ச்சைக்கு உரியதாக இருந்து வருகிறது. கிழக்கு, தெற்கு ஆகிய கோபுரங்கள் பல்லவராயன் கோப்பெருஞ் சிங்கன் கட்டியது என்ற விவரம் கல்வெட்டு மூலம் கிடைத்துள்ளது. இவன் பதின் மூன்றும் நூற்றாண்டைச் சேர்ந்தவன். மேற்குக் கோபுரம் சுந்தரபாண்டியன் கோபுரம் என்றும், வடக்கு கோபுரம் கிருஷ்ண தேவராயர் பதினான்காம் நூற்றாண்டில் கட்டினர் என்றும் சிலர் கருதுவர். இவை யாவுமே ஒரே நூற்றாண்டில் சோழர் பாணியில் கட்டப்பட்ட தாகும். வடக்குக் கோபுரத்தின் கதை வேலையை ராயர் பூர்த்தி செய்திருக்க வேண்டும். விஜய நகர மன்னர் காலத்தில் சிதம்பர ஆலயத்தின் கிழக்குக் கோபுரக் கரண சிற்பங்களைப் போலவே திருவண்ணாமலை கிழக்குக் கோபுரத்தில் செதுக்கியிருக்கிறார்கள். தில்லைக் கோபுரங்கள் யாவும் கோப் பெருஞ்சிங்கனாலேயே எழுப்பப்பட்டிருக்க கூடும் என்பதற்கு என் ஆராய்ச்சியில் சில சூசனைகள் கிடைத்துள்ளன.

108 கரணங்களும், நான்கு முழு வரிசைகளாக தில்லையில் செதுக்கப்பட்ட திலிருந்து அதன் முக்கியத்துவத்தை நாம் உணரலாம். நாட்டிய சாஸ்திரப்படி பார்த்தால் ''கரணம்'' என்பது வடமொழி வேர்ச் சொல்லான ''க்ருண்'' என்பதிலிருந்து உருவானதென உணரலாம். ஒவ்வொரு கரணமும் ஒரு நடன செய்கையாகும். 'க்ருண', 'கரணம்' இரண்டுமே செய்கையைக் குறிக்கும் சொற்களாகும். ஆடல் நிலை, காலுக்கான அசைவு கைகளுக்கான அசைவு ஆகிய மூன்று ஆதார அம்சங்களின் சேர்க்கையே ஒரு கரணமாயிற்று. இது போன்ற 108 ப்ரத்யேக சேர்க்கைகள் தான் 108 கரணங்கள். இவற்றின் ஏதோ ஒவ்வொரு பகுதியைத்தான் சிற்பங்கள் சித்தரிக்கின்றன. இவற்றிலிருந்துதான் ஆகம சாஸ்திரங்கள் சில தாண்டவங்கள் உருவகப்படத்தின. ஸப்த தாண்டவம், நவ தாண்டவம் யாவும் இந்த 108-ல் அடக்கம். பாரதத்தின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படும் நடன சிற்பங்களை 108 கரணங்களுக்குள் அடக்கி விளக்கி விடலாம். மார்கி நடன செய்முறை பாரதம் முழுவதும் ஒரே விதமாக இருந்தால் கரணங்கள் இந்நாட்டின் பொதுச் சொத்தாகும். வட நாட்டில் இஸ்லாமிய ஆட்சியால் சிதைந்த கலைகள் தென்னாட்டில் சிற்ப வடிவமாகவேனும் காப்பாற்றப்பட்டுள்ளன. தென்னாட்டிலும் சோழர் காலம் முடிந்து இஸ்லாமிய ஆட்சி அரைநூற்றாண்டு இருந்தபோது நம் கலாச்சாரத்தில் சிதைவு ஏற்பட்டு சுவாமி வித்யாரண்யரால் தான் மீண்டும் ஸனாதன தருமமும் அதை ஒட்டிய கலைகளும் புதுப்பிக்கப் பட்டன. அவர் விஜய நகர ஸாம்ராஜ்யத்தை ஸ்தாபித்ததன் மூலம் இதைச் சாதித்தார். முற்றுப் பெறாத கோபுரங்கள் முற்றுப் பெறச்செய்தனர் இவ்வழி அரசர்கள். தில்லை வடக்குக் கோபுரமும் அதில்

ஒன்றாகும். மறந்துபோன கலையை மீண்டும் நினைவுப்படுத்த எழுந்தவைதான் மேற் சொன்ன திருவண்ணாமலையிலும், விருத்தாசலத்திலும் காணும் நான்கு கோபுரங்களின் கரண சிற்பங்களும். கரண செய்முறை மறக்கப்பட்டு புதிய செய்முறை நடனத்தில் புகுத்தப்பட்டது. இந்த மாற்றங்கள் அந்தந்த காலத்தில் எழுந்த நூல்களிலிருந்து தெரிகிறது.

தற்போது விளங்கும் "பரத நாட்டியம்" என்ற சதிராடலின் செய்முறை, அடவுகள் ஆதார அசைவுகளாக கொண்டுள்ளது. பழைய கரணங்கள் துடையிலிருந்து உள்ளங்கால் வரை கால்களின் பூரண அசைவிற்கும் முக்யத்வம் கொடுத்த செய்முறையாகும். அதாவது காலை நீட்டுதல், தாவுதல், உயர்த்தல், குதித்தல், வீசுதல் போன்ற அசைவுகள் தட்டுதலோடு சமமாக இடம் பெற்றன. ஆனால் அடவு செய்முறை பரதத்தால் தட்டுவதற்கு மட்டுமே அதிக முக்யத்வம் கொடுத்தன. இந்த மாறுதல் ஏற்பட்ட காலத்தில்தான் தில்லைக் காளிக்கும் நடராசருக்கும் போட்டி நடனம் நடந்து அதில் காளி காலைத் தூக்க முடியாமலோ, பெண்மைப் பண்பிற்காக நாணிக் காலைத் தூக்காமலோ தோல்வி அடைந்தாள் என்ற கதை உருவாகியிருக்க வேண்டும். இந்தக் கதைக்கும், நடன செய்முறை சரித்திரத்திற்கும் நிறையத் தொடர்பு உண்டு. ஊர்த்துவ தாண்டவத்தைச் சிவ பெருமான் ஆடிய தற்கு இந்தக் கதையைக் காரணமாகக் காட்டும் வழக்கமும் 14வது நூற்றாண்டுக் குப் பிறகுதான் உருவாகி இருக்க வேண்டும். 13ம் நூற்றாண்டில் அதே தில்லையில் எழுப்பப்பட்ட கோபுரங்களில் சிவகாமி அம்மையே காலை உயர்த்தி ஊர்த்துவ தாண்டவம் போன்ற கரணங்களை ஆடும் காட்சிகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக 'விஷ்ணு கிரந்தம்' என்ற 100வது கரணத்தைக் கூறலாம் அப்போது கரண செய்முறை வழக்கிலிருந்ததாலும், பெண்களும் காலை உயர்த்தி ஆடும் வழக்கமும் இருந்ததாலும், இச் சிற்பங்கள் செதுக்கப்பட்டன. இவ் வழக்கு மறைந்ததால் பெண்கள் காலை உயர்த்தி ஆடத் தடையொன்றைக் கற்பித்து, காளி தோல்வியடைந்த கதை உருவாக்கியிருக்க வேண்டும். தில்லைக் காளி எல்லைக்கப்பால் எழுந்தருளியுள்ள கோலத்தில் நடன அமைப்பே யில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. மற்ற காளி சிலைகளைப் போன்றதுதான் தில்லைக் காளி ஆலயச் சிலையும் அமைந்துள்ளது.

புதியதாக வடசிதம்பர ஆலயம் மஹாராஷ்டிராவிலுள்ள ஸாதாராவில், காஞ்சி பரமாசாரியார் காமகோடி பீடத்தின் பூஜ்ய ஸ்ரீ சந்திரசேகர ஸரஸ்வதி அவர்களின் அருளாலும், மேற்பார்வையிலும் எழுப்பப்பட்டுக் காஞ்சி காமகோடி பீடத்தின் தற்போதய பீடாதிபதியும் சங்கராசாரியுமான ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளால் அண்மையில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. தில்லை வாழ் அந்தணர்கள் அதனை அமோகமாக நடத்திவைத்துப் பெருமை சேர்த்தனர். அங்கு 108 கரணங்களை அமைக்கத் திட்டங்களை வகுக்கும் பொறுப்பைக் காஞ்சிப் பெரியவர், அடியேனுக்கு அருளியுள்ளார். இப்புண்ணிய காரியத்திற்கு அவரது திரு உள்ளத்தின் கருவியாக நான் விளங்க எப்பேறு பெற்றேனே? கரண சிற்பங்கள் தஞ்சையிலும், குடந்தையிலும், சிவ பெருமானின் தோற்றங்களாகவும், தில்லையில் சிவகாமியின் தோற்றங்களாகவும் காணப்படுகின்றன. வடதில்லையில் இருவரும் சேர்ந்தாடும் காட்சிகளாக 108 கரணங்களும் அமைய வேண்டும் என்பது இப் பேசும் தெய்வத்தின் கட்டளை. இத் திட்டத்தை நிறைவேற்றும் போது சிவகாமி உருவம் காலை உயர்த்தி ஆடவேண்டிய கரணங்களைச் செதுக்கலாமா என்று ஐயம் எழுந்தது. காளியின் தோல்வி கதையையும் தில்லைக் கோபுரத்திலுள்ள சிவகாமி சிலைகளையும் பற்றிப் பெரியவரிடம் கேட்டேன். அம்மனும் காலை

உயர்த்தி ஆடுவதையே சித்தரிக்கச் செய்து விடு என்று பரத சாஸ்திரத்தின் ஆதாரம் கொண்டு, பெரியவர் கட்டளை யிட்டார். உத்தர சிதம்பர ஆலயத்தில் ஒவ்வொரு கரணத்தின் தொடக்கத்தை சிவகாமியும், முடிவைச் சிவபெருமானும் சித்தரிப்பதாக உருவாகி வருகின்றன. திரு முத்தையா ஸ்தபதி இதனைச் செவ்வனே செய்து வருகிறார்.

இடையே மறந்து போன நடனச் செய் முறை பரதநாட்டிய சாஸ்திர அடிப்படை யில் மீண்டும் புத்துணர்வு பெற இந்நூற் முண்டிலும் காட்சி உரையாக விளங்குவது தில்லை நடராசப் பெருமானின் ஆலயமே யாகும். இங்குக் காணப்படும், தற்போது எஞ்சியுள்ள ஆயிரக்கணக்கான நடன சிற் பங்கள், தக்ஷணமூர்த்தியைப் போலவே மௌனத்திலேயே போதிக்கின்றன. ஆடி அசைந்து காட்டுகின்றன. ஞானக்கண்களுக் கப்பாலுள்ள கலையுணர்வு என்ற கண் கொண்டும், தெய்வ நம்பிக்கை என்ற ஒளி யில் துணைகொண்டும் கண்டால்தான் அவற்றின் சுவை புரியும். □

மன்னுக தில்லை வளர்நகம் பத்தர்கள்
வஞ்சகர்போ யகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப்பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

திருப்பல்லாண்டு

சிதம்பரம் கோயில் ஓவியங்கள்

செ. வைத்தியலிங்கன் எம். ஏ., எம். லிட்.,
தமிழ்ப்பேருரையாளர், அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

அழகுக்கலைகளுள் ஓவியக்கலை தொன்மையானதும், ஏனைய கலைகளுக்குத் தாய்த்தன்மையானதுமான கலையாகும். தமிழ்நாட்டில் கலைகளை வளர்க்கும் பண்ணைகளாக விளங்கும் திருக்கோயில்களில் ஓவியக்கலைக்கெனச் சிறப்பிடம் இருந்து வருகின்றது.

சிதம்பரம் கோயிலின் அமைப்பு காலந்தோறும் மக்களின் சமயவுணர்விற்கும் சமுதாயத் தேவைக்குமேற்ப மாறுதல் களைப் பெற்று வந்துள்ளது. தில்லைத் திருக்கோயிலிலே பல திருக்குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன. அவ்வக் காலங்களில் திருப்பணி புரிந்தவர்கள் ஓவியக்கலையை ஓரளவேனும் போற்றித் தான் வந்திருப்பர் என்பது வரலாற்றுக் கணிப்பாகும். ஆனால், பழங்காலச் சித்திரங்கள் என்று கூறுவதற்குப் பல்லவர் பாண்டியர் சோழர்கால ஓவியங்கள் எவையுங் கிடைக்கவில்லை. இக்காலத்தில் சிதம்பரம் திருக்கோயிலில் காணக்கிடைப்பவை நாயக்கர் கால ஓவியங்களுமே யாகும். எல்லா ஓவியங்களும் வரலாற்று நோக்கிலும், கலைநோக்கியடிப்படையிலும், புராண நோக்கிலும் சிந்திக்கத் தக்கவையெனலாம்.

நாயக்கர்காலச் சித்திரங்கள்:

தில்லைச் சிவகங்கைத் தீர்த்தத்தின் மேல்கரையில் அமைத்துள்ளது சிவகாமி அம்மையின் திருக்கோயில்; அக்கோயிலின் உள்ளே நடுவமைந்துள்ள பெரிய மண்டபவிதானத்திலே நாயக்கர் காலச் சித்திரங்களைக் கண்டுகளிக்கலாம். நாயக்கர்களுக்கு முன்னரே சோழர்கள் சித்திரங்களைத் தீட்டியிருந்தனரா, அவற்றையே பிற்காலத்தில் நாயக்கர்கள் புதுப்பித்தனரா என்பது பற்றியும் புரிந்துகொள்ள இயலவில்லை. எவ்வாறேு 17-ஆம் நூற்றாண்டில் தஞ்சையிலிருந்து ஆண்ட அச்சுதப்ப நாயக்கர் காலச் சித்திரங்கள் அங்கு உள்ளன என்பது மகிழ்ச்சிக் குரிய செய்தியாகும்.

மண்டபவிதானத்தில் சிவகாமி யம்மனுக்கு நேராக அமைந்துள்ளதை நடுப்பகுதியாகக் கொள்ளலாம்; அதன் வட புறத்தில் இரு அங்கணங்களும் தென்புறத்தில் இரு அங்கணங்களும் உள்ளன. நடுப் பகுதியில் தீட்டப் பெற்ற ஓவியங்கள் சிதைந்து போனதால் இக்கால ஓவியங்கள் அங்குத் தீட்டப்பெற்றுள்ளன; அவை பற்றிப் பின்னர்க் காண்போம்.

வடபாலுள்ள அங்கணங்களில் சிறப்பான சில புராண நிகழ்ச்சிகள் வண்ணச் சித்திரங்களாக அமைந்துள்ளன. சிவனது பிட்சாடனர்திருக்கோலமும் திருமாலின் மோகினியவதாரமும் பல்வேறு காட்சி

களாக அமைந்துள்ளன. சிவனும் திருமாலும் திட்டமிட்டுக் கொண்டு, தாருகாவனம் நோக்கிச் செல்லுங்காட்சியும், தாருகாவன ரிஷிபத்தினியரைக்கவரும் வகையில் சிவன் திருவாணக் கோலத்தில் பிட்சாடனராகத் தோன்றுங்காட்சியும், ரிஷிகளின் நெஞ்சங்களே மாயையால் மயக்கும் வண்ணம் திருமால் கவர்ச்சிமிகு மோகினியாகச் செல்லுங் காட்சியும், பிறகு அவமானமுற்ற ரிஷிகள் அபிசாரிகவேள்வி நிகழ்த்துவதும் அவ்வேள்வியில் சிவனே யழிக்க மான் நாகம் புலி முயலகன் முதலியவற்றை வரவழைப்பதுமாகிய காட்சியும் வியத்தகு வண்ணம் ஓவியங்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. வடக்கே யுள்ள முதலங்கணத்தில் புராணத் தொடர்புடனமைந்த நாகநீப்பள்ளிகொண்ட திருமால் (தேவியருடன்) தீட்டப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. உபமன்யு முனிவர் பாலுக்கு அழுத காட்சியும், அது காரணமாக சிவன் பாற்கடலீந்த காட்சியும் தில்லைத் தலத்தின் தனிச்சிறப்புடன் கூடிய புராணச் செய்தியாகும்; அவை சித்திரவடிவம் பெற்றுத் திகழ்கின்றன. வடக்கு உள் (இரண்டாம்) அங்கணத்தில் பொன்னம்பலத் தோற்றமும் அங்கு அம்பிகையுடன் கூடிய நடராசர் திருக்கோலமும் காணத்தக்கவை. நாயக்கர் காலச் சித்திரங்களாக அமைந்த இச்சித்திர வரிசையில் பல இடங்களில் புராணத் தொடர்புடன் சிவகாமியம்மையுடன் கூடிய ஆடல்வல்லான் திருவுருவங்களைக் காணலாம்.

தென்பாலுள்ள அங்கணங்களில் தில்லைப்பெருமானின் தலப்பெருமைகளை மக்கள் உணரும் வகையில் புராணக் காட்சிகள் சித்திரவடிவங்கொண்டுள்ளன. திருத்தொண்டர்புராண நிகழ்ச்சிகள் சிலவும் இடம்பெற்றுள்ளன; அவற்றுள், சேரமான் பெருமாள் நாயனார் தில்லைத்தலத்திற்கு எழுந்தருளிப் பொன்னம்பலனை வழிபட்டு நிற்குங் காட்சி மிக நேர்த்தியாக அமைந்துள்ளது.

பெரும்பற்றப் புலியூராகிய தில்லையில் பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர்களின் பெருமை மிகச் சிறந்ததாகும். அத்தொடர்பிலும் சில சித்திரங்கள் பரவலாக உள்ளன. மண்டப நடுப்பகுதியின் கீழ்ப்பால் அம்மன் சந்நிதியை நோக்கிய நிலையில் (மேற்கு நோக்கி) அமைந்துள்ள முகப்போவியம் சிறப்பாகக் காணத்தக்கது; அதனில், சிவகாமியம்மையுடன் கூடிய ஆடல்வல்லானின் திருக்கோலத்தினை இருமருங்கிலும் பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர்கள் நின்று கொண்டு வழிபடுங் காட்சியமைந்துள்ளது.

இக்கால ஓவியங்கள்:

சித்திரங்களின் வடிவமைப்பிலும் வண்ணச்சேர்க்கையிலும் அமைந்துள்ள பல்வேறு ஓவிய மரபுகளின் தாக்கத்தினை இக்காலச் சித்திரங்களில் கண்டு கூறுவார்கள் அறிஞர்கள். அத்தகைய ஆய்வு காரணமாகப் பல ஐயப்பாடுகள் நீங்க வழியுண்டு; கலையுலகிலும் தெளிவு ஏற்படும்.

தில்லை சிவகாமியம்மன் திருக்கோயிலின் உள்ளேயுள்ள முன்மண்டப விதானத்தில் நடுப்பகுதி இக்காலச் சித்திரங்களால் அணிபெற்றுத் திகழ்கின்றது. சிவகாமியம்மையின் பெருஞ்சிறப்பினை மக்கள் தெரிந்துகொண்டு வழிபாடியற்ற வேண்டுமென்ற நல்லநோக்கத்திலே ''தேவி மகாத்மியம்'' ''லலிதா சகஸ்ரநாமம்'' ஆகியவற்றின் தொடர்புள்ள பல காட்சிகள் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. அவற்றுள் சில காட்சிகளை ஊன்றிக் காண்கையில் ஓவியக்கலைஞரின் படைப்புக் சுற்பனை (Creative imagination) எவ்வாறு சிறந்தோங்கிச் செயற்பட்டுள்ளது என்பதை யுணரலாம். அவ்வாற்றுள் 13-ஆம் எண்ணுள்ள ஓவியக்காட்சியில், ''அசுரர்களை அழிக்கத் தேவி தன் கைவிரல்களிலிருந்து திருமாலின் பத்து அவதாரங்களைத் தோற்றுவித்தல் எனுஞ் செய்தியும், 14-ஆம் எண்ணுள்ள ஓவியக்காட்சியில் ''முரணிய அசுரர்களைத் தசவாதார மூர்த்திகள் அழித்

தல்'' எனுஞ் செய்தியும் மிக வியந்து கலை நோக்கில் போற்றத்தக்கவையாகும். வெவ் வேறு காலங்களில் வெவ்வேறு சூழல்களில் திருமாலின் சிறப்புமிகு பத்து அவதாரங் கள் நடைபெற்றிருந்தும், அவற்றையெல் லாம் ஒருங்கே காணும்வண்ணம் ஒன்று திரட்டி ஒரே காட்சியமைப்பில் ஓவிய மாகத் தீட்டியுள்ளமை பெரிதும் வியந்து போற்றத் தக்கதாகும்.

மிகப்போற்றத்தக்க சித்திரங்களாகச் சில அமைந்துள்ளன. 1. பர்வதராஜனுக் குச் சிவகாமிசுந்தரி விசுவரூபக்காட்சிய ளித்தல், 2. கௌடபாதர், கோவிந்த பாதர், சங்கரர் சிரேதர், உமாபதிசிவம், மந்திர மூர்த்தி தீட்சதர் முதலியோர் ஸ்ரீ சக்கரத்தை வழிபட்டுப் பேறு பெறல், 3. ஆதி சங்கரர் இந்த அம்மையின் சந்நிதியில் கோஷ்டபநிடதத்தில் ''உமாம் ஹைம வதீம்'' என்ற பதத்திற்கான பொருளிலே ஜயமேற்பட்டபோது அம்மை அவர்முன் தோன்றி ''நானே'' என்று அருள் புரிந்தமை யாகிய காட்சிகள் மிகவும் மக்களால் உணர்ந்து போற்றத்தக்கவை. இவற்றி டையே மஹாகணபதியந்திரமும் சிவகாமி சுந்தரியந்திரமும் மிகப் போற்றும் வகையில் சித்திரங்களாக எழுதப்பட்டுள் ளன.

இக்கால ஓவியக்கலையிலும் படிநிலை வளர்ச்சிகள் உண்டு; ஆராய்ந்தால் ஓவியக் கலைஞர்களின் சிந்தனையுஞ் செய்வினைத் திறமையும் ஒரு பக்கம் உயர்ந்து கொண்டே செல்லுதலைக் காணலாம். அவ்வாற்றுள், தில்லை பாண்டியநாயகம் முருகன் கோவில் அமைந்துள்ள வண்ணச் சித்திரங்கள் மிகவும் பாராட்டத்தக்கவையாக உள்ளன எனலாம்.

பாண்டியநாயக ஆலயத்திருவோலக்க மண்டப விதானத்திலும், முன்பக்க மண்டப விதானத்திலும், பக்கத்துத் தாழ் வார விதானத்திலும் கருவறையைச் சுற்றி யுள்ள விதானத்திலுமாக எங்குமே சித்திரக் கலையின் எழிற்கோலக் காட்சியினைக் கண்டு களிக்கலாம். இவ்வாற்றுள் கலைச் செல்வங்களை வெளிக்கொணரப்பாடு பட்டவர் – வழிகோலியவர் – சிதம்பரம் தரும பூஷணம் செ. இரத்தினசாமிச் செட் டியார் ஆவார்; அவர்சென்ற சமய நெறி யில் – தெய்வநலக்கலைத்தொண்டில் – பெரிதும் ஈடுபாடு கொண்டவர்கள் அவர் தம் குமாரர்கள். எனவே அவர்களும் இந்த ஆலயத்திற்குத் திருக்குடமுழுக்கு நடத்துவ தன் வாயிலாகப் புராணச் சித்திரங்களை நேர்த்தியாகப் புதுப்பித்துத் தந்துள்ளனர். அந்தச் சித்திரங்கள் பற்றிச் சிறிது காண் போம்.

ஆறுபடை வீடுகளுள் ஒன்றுகிய திருப் பரங்குன்றத்தில் சங்க காலத்திலேயே புராண ஓவியங்கள் எழுதப்பெற்ற ''எழு தெழிலம்பலம்'' (Gallery of Paintings) இருந்ததென்பது பரிபாடலால் அறிய லாம். அதனையுணர்ந்து, பிற்காலத்தே ஆறுபடைவீடுகளிலெல்லாம் புராணச் சித் திரங்கள் தீட்டப்பட்டுள்ளன. அந்த வரிசை யில், அருணகிரிநாதரின் பாடல்பெற்ற தலமாகிய பாண்டியநாயகம் திருக்கோயி லிலும் எழுதெழிலம்பலம் அல்லது எழுத்து நிலைமண்டபம் அமைந்துள்ளமை போற்றிப் பயன்கொள்ளத்தக்கது.

தேர் அமைப்பில் அமைந்துள்ள பாண்டியநாயகம் முன்முகப்பு மண்டபத் தில் ''நக்கீரர் சிவ வழிபாட்டில் ஈடுபட் டிருக்கையில் மனம் சிறிது வேறுகி நிற்கவே, பூதத்தால் சிறைப்பட்டு, முருகனின் ஞானவேலால் மீண்டு திரு வருள் பெறுங்காட்சி சித்திரமாகத் தீட்டப் பெற்றுள்ளது; அடுத்து, உட்பகுதியில், ''திருத்தணிகை முருகன் சிற்றாரில் வள்ளி யம்மையைத் திருமணங் கொண்டருளுங் காட்சி'' ஓவியமாக வரையப்பெற்றுள்ளது; அதனையடுத்து, ''முருகன் திருவண்ணமலை யில் அருணகிரிநாதருக்கு அருள்புரியுங் காட்சி'' இனிது சித்திரமாகத் தீட்டப் பட்டுள்ளது.

திருவோலக்க மண்டப விதானத்தில்,

நடுவே தில்லைப்பொன்னம்பலமும், ஆறு படை வீடுகளும் அமைந்துள்ளன. அதனை யடுத்து வலப்பக்கத்திலும், இடப்பக்கத் திலும் இரட்டை வரிசைகளில் சந்த புராண நிகழ்ச்சிகள் மிக நேர்த்தியாக சித்திர வடிவங்கொண்டுள்ளதைக் காணலாம். தருமபூஷணம் செட்டியாரவர்கள் சைவத் திருமுறைகளிலும் சாத்திரங்களிலும் பெரு மதிப்புடையவர்கள்; ஆதலின், கோயில் தாழ்வாரத்து விதானங்களிலும் கருவறை யைச் சுற்றிய விதானத்திலும் சைவ சித் தாந்த நூலாசிரியர்களையும் சந்தானா சாரியர்களையும் அடியவர்கள் கண்டுகளிக் குமாறு சித்திரவுருவிலே தர ஏற்பாடு செய் துள்ளார்; மேலும், அங்கே புராணச் சார் பில் பதஞ்சலி, வியாக்கிரபாதர், உபமன்யு முனிவர், வியாசர், பாணினி, இரணிய வர்ம சக்கரவர்த்தி, அநபாய சோழர், கச்சியப்ப சிவாசாரியார் திருவுருவங்களை யும், ''சித்திரக்கவி'' வடிவம் ஒன்றையும் சித்திரங்களாக அமைத்துத்தர ஏற்பாடு செய்துள்ளார்.

இக்கோயிலில் சித்திரக்காரரின் கற்பனைத் திறம் நன்கு செயற்பட்டுள்ளது; இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக ''நவநாரிக் குஞ்சரம்'' என்பதனைக் கூறலாம். நவநாரி குஞ்சரம் என்பது பெண்கள் ஒன்பதின் மரைப் பல்வேறு அமைப்புக்களில் பொருத்தி யானையுருவம் உண்டாகுமாறு கலைவண்ணத்தில் உருவாக்குவதாகும்.

இவை ஒருபுறமிருக்க, திருமூலட்டான ஈசுவரர் கோயில்மதில் வடக்கு-மேற்கு-தெற்குச் சுவர்களில் காணலாகும் இருபத்துநான்கு சிவமூர்த்தி சித்திரங்கள், ஆயிரங்கால் மண்டபத்தில் அமைந்துள்ள நவதாண்டவச் சித்திரங்கள் சிறப்புடன் காணத்தக்கவை. கனகசபையின் சுற்று அங் கணங்களில் காணலாகுஞ் சித்திரங்கள் தொன்மையானவை; பொன்னம்பலத்தின் பெருமையையும் சிவசக்தியின் பெருமை யையும் உணர்த்த வல்ல இச்சித்திரங்கள் எக்காலத்தில் யாரால் தீட்டப்பட்டவை என்பது புரிந்து கொள்ள இயலவில்லை. தில்லைத் திருச்சித்திரக் கூடம் தாயார் சந்நிதி முதலிய இடங்களிலுள்ள படச் சித் திரங்கள் பற்றியெல்லாம் அடியவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுவது நல்லது.

சித்திரங்களைக் காண்கையில் அவற்றுல் உணரலாகும் சமயநோக்கத் தைப் புரிந்துகொள்ள நம்மவர்கள் முனை தல்வேண்டும். எடுத்துக்காட்டாக ஒரு சித் திரத்தின் உட்கிடையைச் சிறிது காண் போம்.

புராணங்கள் கலைவண்ணமாதலின் உட்கிடை:

சமய மெய்ப்பொருளியலை—தத்துவ உண்மையை—நேரிடையாக மக்களுக்குக் கூறுவதை விடப் புராணங்கள் வாயிலாக உணர்த்துவதால் பயன் மிக விளையும். அதிலும், புராணங்களைச் சித்திரம் சிற்பம் நடனம் நாடகம் முதலிய கலைகளில் வாயி லாக உணர்த்துவதால் பயன் பன்மடங்கு உண்டு. இதனையுணர்ந்தே திருக் கோயில் களில் புராணச் சித்திரங்களைச் சமய அன்பர்கள் தீட்டச் செய்துள்ளனர் எனலாம்.

தாருகாவனமுனிவர்கள் தொடர்பாக உணரலாகும் புராண உட்கிடையினை எடுத் துக்காட்டாகக் காண்போம்.

தாருகாமுனிவர்கள் முழுமுதற்பொரு ளான இறைவனை நன்கு புரிந்து கொள் ளாமல் தவத்திலும் வேள்வியிலுமே நம் பிக்கைக் கொண்டவர்களாய் வாழ்ந்தனர். அவர்கள் தம் மனைவியர்களின் கற்பே சிறந்தது என்றும், தம் தவநெறி மட்டுமே சிறந்தது என்றுங்கொண்டு தருக்குடையவர் களாய்ச் சிவபெருமானை மதிக்கத் தேவை யில்லையென்ற மயக்க வாழ்வில் அழுந்தி யிருந்தனர். அவர்களுடைய அகந்தையை அழிக்கக்கருதிய சிவபெருமான் தாம் ஐய மேற்பவராகப் – பிட்சாடனராகத் – திரு வுருவங்கொண்டார். அவருக்குத்துணை நிற்கும் வகையில் திருமால் மோகினி

யவதாரம் கொண்டார். இருவரும் முறையே முனிவர்களின் மனைவியரிடமும், முனிவர்களிடமும் சென்றனர். பேரழகு நிறைந்த பிட்சாடனர் திருக்கோலத்தில் மனமிழந்த முனிவர்களின் மனைவியர்க்குக் கற்புநிலை சிதைந்தது; முனிவர்களும் சுவர்ச்சியான மோகினியின் மயக்கில் சிக்கித் தவிக்கலாயினர். இறைவனது திட்டத்தினை யுணர்ந்த முனிவர்கள் தம்மையே வேள்வி செய்யாமல் தடுத்த இறைவனை அழிக்க வேண்டி ஒரு வேள்வி செய்ய முனைந்தனர்; வேள்வியிலிருந்து மான் நாகம் சிங்கம் புலி முதலியவற்றை உண்டாக்கினராம். தம் முயற்சி பலிக்காமற் போகவே, கடைசியில் முயலகன் என்னும் அசுரனையனுப்பினர். அதிலும் தோல்வியுற்ற அவர்கள் இறைவனது பெருமையையுணர்ந்து வணங்கி உய்ந்தனர். இந்தப் புராணக் குறிப்பினை சுந்தர மூர்த்தி நாயனரும் தம் பதிகத்தில்,

"தங்கிய மாதவத்தின் சுழல்வேள்வி
யினின்று எழுந்த
சிங்கமும் நீள்புலியுஞ் செழுமால் கரியோடு
அலறப்
பொங்கிய போர்புரிந்து பிளந்து சுருரி
போர்த்தது"

எனப்பாடிச் செல்வதாலும் உணரலாம்.

கல்வி கேள்வியுடைய ஞானியரானாலும், முற்றத்துறந்த முனிவர்களானாலும், இறைவனைப் புரிந்து கொள்ளாமல் "யான் எனது" என்ற செருக்குடனிருந்தால் வாழ்வின் குறிக்கோளை எய்தமாட்டார்கள் என்பது இப்புராணத்தின் உட்கிடையெனலாம். ஈண்டு, வள்ளுவர் வாய் மொழியாகிய,

"யான்எனது என்னுஞ் செருக்கறுப்பான்
வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்" (குறள். 1119)

என்பது இயைபுடன் சிந்திக்கத்தகும்.

தில்லையில் சைவமும் வைணமும் கைகோத்துநின்று அடியவர்களுக்கு வழி காட்ட வேண்டுமென்ற நோக்கத்தில், தில்லை ஆடல்வல்லான் சந்நிதியும் தில்லைத் திருச்சித்திரக் கூடத்துக் கோவிந்தராசப் பெருமாள் சந்நிதியும் ஒருங்கமையும் பாங்கினில் உள்ளன. ஆனால், வரலாற்றுச் சுவடுகளைப் பார்த்தால் சைவத்திற்கும் வைணவத்திற்கும் இடையே சமயக் காழ்ப்பும் பூசலும் தோன்றிய நிலைகள் தென்படும். அத்தகைய சூழ்நிலை மாறி இக்காலத்தில் ஒற்றுமை நிலவுகிறது தமிழ் மக்களின் தவப்பயனேயாகும்.

சித்திரக்கலை வாயிலாகவும் சைவ வைணவ ஒத்துழைப்பையும் பெருமையையும் மக்களிடையே உணர்த்தமுடியும் என்பதற்காகத் தாருகாவன நிகழ்ச்சி சித்திரமாகத் தீட்டப்பட்டிருக்கலாமோ என்று நினைக்கத்தோன்றும். காலங்கடந்தேனும் நம்மவர்கள் சமய நோக்கத்தையும் புராணக் குறிக்கோளையும் புரிந்து கொண்டால் சரி!

இவ்வாறே புராணச் சித்திரங்கள் பலவற்றிற்கும் உட்கிடை உணர்ந்து, சமய நன்னெறியில் மக்கள் வாழத்தலைப்படின் உலகமே வாழும்.

பொதுவாகக் கோயிற்சித்திரங்கள் சுவர்களிலும் தூண்களிலும் மண்டப விதானத்திலும் தீட்டப்படுகின்றன; எனினும், சுவர்களிலும் தூண்களிலுமுள்ள சித்திரங்கள் மக்கள் பார்வையில் நன்குபடினும் அவர்களின் கைப்பட்டு விரைவில் சிதைந்துவிடக்கூடும். ஆனால், விதானங்களில் தீட்டப்பெறும் சித்திரங்களோ ஏனைய சித்திரங்களைவிடப் பல்லாண்டுகள் சிதையாமலிருக்க வாய்ப்பு உண்டு. ஆனால் எந்திரகதியில் கோயிலுக்குச் சென்று வருபவர்கள் தெய்வங்களுக்கு வழிபாடு செய்து திரும்பினால் போதுமென்று நினைக்கின்றனர். அவர்களும் வழிபாடு செய்த பிறகு, மண்டபங்களில் அமர்ந்து நிதானமாகப் புராணச்சித்திரங்களை விதானம் முதலியவற்றைக் கண்டால் நல்லது; குழந்தைகளுக்கு விளக்கிக் கூறினால் மிக நல்லது; அதனால் சமயவுணர்வு நெஞ்சங்களில் நன்றாகப் பதிவுகொண்டு தழைக்கும். வாழிய உலகெலாம்! □

கோயில் முழுவதும் காணமுயற்சி

ஸ்ரீ வித்யா உபாஸக, நி. தண்டபாணி ஸ்வாமி தீட்சதர்,
ஸ்ரீ சபாநாயக நடராஜர் கோயில் டிரஸ்டி &பூஜை,
9, வடக்கு சன்னதி,
சிதம்பரம்

ஓம் உலகை விராட்புருஷ வடிவமாகவும், விராட்புருஷ ஹிருதய ஸ்தானமாக (தில்லை) சிதம்பர ஸ்தலத்தையும், பஞ்ச பூத ஸ்தலங்களில் ஆகாச க்ஷேத்திரமாகவும், கூறுவர். கோயில் என்றாலே தில்லை ஸ்ரீ நடராஜர் கோயில்தான் என்று பன்னிரு திருமுறைகளாலும், புகழப் பெற்று, மனிதனின் உடல் உறுப்புக்களில் அமைப்பு தத்துவப்படி உருவம், அருவம், உருவாருவம், ஆகிய மூன்றும் முறையே ஸ்ரீ நடராஜர், ஸ்ரீ சிதம்பர ரஹஸ்ய ஸ்தானம், ஸ்ரீ ரத்ன ஸபாபதி என்றும், ஸ்ரீ நடராஜ ராஜரைச் சுற்றிலும், நான்கு வேதங்களும், ஆறு சாஸ்திரங்களும் பத்து ஸ்வர்ண ஸ்தம்பங்களாக நின்று துதி, செய்வதாகவும், பதினெட்டு புராணங்கள் வெள்ளி தூண்களாகவும், தொண்ணூற்றாறு தத்துவங்களும் சுவாஷம் என்னும் வெள்ளி ஜன்னல் துவாரங்களாகவும், பஞ்ச இந்திரியங்களும் வெள்ளி பஞ்சாஷரப் படிகளாகவும், அமைக்கப்பட்டுள்ளது.

மனிதன் ஒரு நாளில் இழுத்து விடும் மூச்சுகள் (21600) இருபத்து ஓராயிரத்து அறுநூறும் சித்ஸபையில் மேல் விமானமாகிய பொன்னம்பலத்தின் தங்க ஓடுகளாகவும்; 72000 (எழுபத்துரெண்டாயிரம்) நாடி நரம்புகளும் பொன் ஓடுகளை பிணைக்கும் பொன் ஆணிகளாகவும்,

நவதுவாரங்களும் ஒன்பது தங்ககலசங்களாகவும், இரத்தத்துளி ஒவ்வொன்றும் உடலில் சுற்றும் (ஏழு முறை சுற்றும்) ஏழு சுற்றுக்களும் ஏழு பிரகாரங்களாகவும்,

சரித்திர நிபுணர்களின் கண்டு பிடிப்புப்படி உலகின் ஆதி கோயில்களின் கர்ப்பகிரஹம் மரத்தினுல் அமைந்து இருக்கும் என்பதற்கு இணங்க, (1. மரக்கோயில்கள், 2. பிற்கால மி–செங்கல் சுண்ணும்பு ஆகியன கலந்த சுதைக் கோயில்கள், 3. அதற்கும் பிற்காலம் கருங்கல் கோயில்கள்) சித்ஸபை தேக்கு, சந்தன வைர மரங்களாலும் அமைத்த,

ஸ்ரீ சித்ஸபைக்கும், ஸ்ரீகனக ஸபைக்கும் (ஆக) இரண்டு யாகசாலைகளில் இரண்டு ("நவகுண்ட பக்ஷ" விதியின் படி ஒன்பது & ஒன்பது) யாக குண்ட பூஜைகள் செய்யப்படும்.

மற்றக் கோயில்கள் போல் வீதியிலிருந்து கர்ப்பகிரஹம் உயர்ந்து கொண்டு போகாமல்–வீதியிலிருந்து படிப்படியாக தாழ்ந்து வந்து உள்ளே கர்பகிரஹம் (பொன்னம்பலம் உள்ள சித்ஸபை) மட்டும் வீதி மட்டத்திற்கு உயர்ந்து வைதீக கட்டிடக் கலைச் சிறப்பைக் கூறுவதும் இக்கோயில்.

மூவாயிரம் ஆண்டுகள் உயிர் வாழ்ந்து வருடத்துக்கு ஒன்றாக 3000 திரு மந்திரப்

பாடல்கள் பாடி அருளி, சித்தர்களில் "ஆதியில் தில்லையில் திருமூலர்" என்று புகழப்பெற்ற திருமூலரும், மாணிக்க வாசகர், நந்தனார் ஆகிய பல ஆன்மீக ஞானிகள் இறைவனுடன் இரண்டறக் கலந்த இடமாகவும் விளங்குவது;

உலகின் உயிர் ஸ்தானமாகவும், கங்கை கொண்ட சோழனால் மூன்று உலகங்களின் மிக முக்கிய சக்திவாய்ந்த இடமாகக் கருதப்பட்டு "திரைலோக்கிய சாரம்" என்ற முடியணியைக்காணிக்கையாக சூடிக் கொண்ட பெருமை உடையது;

இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர் என்ற வேறுபாடு இல்லாமல் அவரவர் மததெய்வங்களாக அவரவர்க்கு காட்சி தந்து, திப்பு சுல்தானின் தங்க சரப்பளிமாலையையும், உருது அரச முத்திரை பதிக்கப்பட்ட காசு மாலைகளையும், ஈஸ்ட் இந்தியா கம்பெனி ராஜ முத்திரை பதித்த ஹாரங்களையும் காணிக்கையாகப் பெற்றது;

தினந்தோறும் இரவு சுமார் 7.30 மணி முதல் 8 மணி வரை–மிகவும் ஆசாரமாக–அனேத்துக்கதவுகளும் மூடப்பட்டு அன்றைய பூஜை தீட்சதர் மட்டும் தனித்திருந்து – சிதம்பர – பஞ்சாக்ஷரம், ஸ்ரீவித்யா, திரஸ்கரணி, சிந்தாமணி, த்வனி சிவசக்தி மனோன்மணி ஆகிய அரிய மந்திரங்களைக் கொண்ட–சிதம்பர ரஹஸ்ய பூஜை செய்யப்படுவது;

தினமும் அர்த்த ஜாமத்தின் போது உலகில் உள்ள அனேத்து ஆலய தெய்வங்களும் (தெய்வ சக்திகளும்) வந்து ஐக்கியமாகி விடியும் வேளையில் (மீண்டும்) அந்தந்த ஆலயங்களுக்குச் செல்லும் பெருமை உடையது;

தங்க வில்வ மாலைகளை ஆபரணங்களாக அணியப் பெற்றதும்

சித்ஸபையில் நீண்ட நெடுங்காலமாக சுமார் 51 தீபங்கள் (வேறு எந்த எண்ணெயும் கலக்காமல்) பசு நெய் மட்டுமே இட்டு (ஒரு நாளைக்கு சுமார் 4 கிலோ நெய்) எரிக்கப்படும் வெள்ளி விளக்குகளை உடையது;

வள்ளலாராகிய ஸ்ரீராமலிங்க ஸ்வாமிகள் தண்ணீரில் விளக்கு எரியச் செய்து பூஜித்ததன் ஞாபகார்த்தமாக இப்போதும் கூட நீரும் எண்ணெயும் கலந்து எரிக்கப்படும் தீபங்களை உடைய கண்ணுடிக் கூண்டு விளக்குகளை விதானத்தில் உடைய பிரகாரத்தைக் கொண்டது; மற்றும பல பெருமைகளைப் பெற்றது இத் தகைய சிதம்பர ரஹஸ்ய ஸ்தானத்துக்கு நவ குண்ட பக்ஷியாக சாலையும் (ஆக மூன்று யாகசாலைகள்) நிர்மாணிக்கப்பட்டும்,

ஈசானமாகிய பொன்னம்பலம் தவிர, தத்புருஷ (கிழக்கு), அகோர (தெற்கு); வாமதேவ (வடக்கு), ஸத்யோஜாத (மேற்கு)

(1. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், பின்பு கோப்பெருஞ்சிங்கன், காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியார் ஆகியவர்களாலும், 2. பல்லவ கோப்பெருஞ்சிங்களாலும், 3. கிருஷ்ண தேவராய மன்னராலும், 4. சுந்தரபாண்டியனாலும் கட்டப்பட்டவையாகும்)

வருட நாட்களைக் குறிக்க, ஏழு வாரங்களை ஏழு நிலைகளாகவும் 52 வாரங்களைக் கொண்ட ஒரு வருடக் கணக்கை குறிக்க (4×13) ஐம்பத்திரண்டு பெரும் செம்பு கலசங்களைக் கொண்டவைகளும், (ஸ்வஸ்திக சின்னத்தின் 4 முனைகளில் இருப்பதாக அமைக்கப்பட்ட 4 கோபுரங்களுக்கும்)

ஒவ்வொன்றும் சுமார் நூற்றைம்பது அடி உயரமுள்ளவைகளும் (அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம் என்பதைக் குறிக்க காவி-அன்னக்கொடிகள் பறக்கும் தெற்குக் கோபுரமும்-மறைஞானசம்பந்தர் சிவயோகத்தமர்ந்ததும், (தேவாரம்) திருமுறைகளை பாதுகாக்க வைத்திருந்ததும் ஆகிய குகையையுடைய மேற்கு கோபுர

மும், பரதநாட்டிய நூற்றெட்டு கரணங்கள் எனப்படும் முத்திரைகளை ஆடுவதாகக் குறிக்கப்பட்ட நடன முத்திரைகள் உடைய கிழக்கு, வடக்கு கோபுரங்களுக்கும்)

ஆகிய நான்கு ராஜகோபுரங்களுக்கும், (இவை நான்கின் வழியே சமயகுரவர் நால் வரும் தனித்தனியே நுழைந்து தரிசித்துப் பெருமை அடைந்தனர்)

ஒரே சமயத்தில் மிகமிகச் சிறப்பான முறையில் ''ஸ்ரீசித்ஸபா ஸம்ப்ரோக்ஷண சித்விலாஸ மஹா கும்பாபிஷேகம்'' நடை பெற்றது. பூஜைக்குரிய இரண்டு முக்கியப் பிரிவுகளாகிய வைதீகம், ஆகமம், ஆகிய இரண்டு பூஜா விதிகளின் முதன்மையாகிய தும்,

ஒவ்வொரு கிரியைக்கும் வேத மந்தி ரங்களைச் சொல்லி செய்யப்படுவதும்,

இப்படி வேதம் ஒன்றையே ஏகமாகக் கொண்டு செய்யப்படுவதால் ''வைதீகம்'' என்ற பெயர் பெற்றதும்,

நித்திய ஆறு கால பூஜைகளுக்கும் ஆதியான முதல் கால பூஜையின் (கால சந்தியின்) ஆரம்பத்தில் ஸ்தபன (கலச) பூஜையும், யாகமும், செய்தே தொடக்கப் படுவதும்,

வருஷத்தில் அயணத்திற்கு ஒன்றுக ஸ்வர்ண துவஜ ஸ்தம்பத்தில் துவஜா ரோஹணம் செய்து நவதின பரிமித உத்ஸ வங்கள் நடத்தப்படுவதும்,

ராஜகோபுரமே (ஈசனின்) ஸ்தூல வடிவாகக் கருதப்பட்டு உத்ஸவ மூர்த்தி வாசல் வழியாக சென்று வரவேண்டு மென்ற விதியை உடையதும்,

மந்திரம் ஜபிக்கப்பட்ட கட (கலச) தீர்த்தத்தை (ஆகம விதிப்படி அபிஷேகங் களின் கடைசியில் செய்யாமல்) முதலில் அபிஷேகம் செய்வதும்,

ஸஹஸ்ர வியாகரண பண்டிதரும், ஆதி ஷேசனின் அவதாரமும் ஆகிய பதஞ்சலி முனி அருளிய சூத்திரத்தை ஆதாரமாக வும் போதாயன (ரிஷியின்) விதியை அனு சரித்தலும் சிதம்பரம் திருக்கோயில் ஆகும்.

இந்த நூற்றாண்டில் வாழ்ந்த ''மஹா மஹோபாத்தியாய'' ப்ரும்ம ஸ்ரீ சிவ தண்டபாணிஸ்வாமி தீட்சதர், மற்றும் நமது காலத்தில் வாழ்ந்து சமீபத்தில் இறைவனடி அடைந்த ''ச்ரௌத சாஸ்திரங் களின் பரிபாலகராக'' வாழ்ந்தவரும் தற் போது உள்ள மந்திர சாஸ்திர விற்பன்னர் களாகிய தீட்சதர்கள் பலரின் (எமது) ஞான குருவாக விளங்கியவரும் ஆகிய ப்ரும்மஸ்ரீ க.மீ. ராஜ கணேச தீட்சதர் அவர்கள் ஆகியோரால் கட்டிக்காக்கப் பட்டு வருவதும்,

திரு ஸஹஸ்ர (3000) முனீஸ்வரர் களை கைலாஸத்திலிருந்து ''தீட்சதர்கள்'' என்று பெயரிட்டு தன்னை பூஜிப்பதற் கென்றே ஸ்ரீநடராஜ ராஜரால் ''பூலோக கைலாஸம்'' ஆகிய (தில்லை) சிதம்பரத் திற்கு அழைத்து வரப்பெற்ற பெருமை யுடைய, பன்னிரு திருமுறைகளால் ''தில்லை வாழ் அத்தணர்கள்'' என்று புகழப் பெற்ற'' தீட்சத ஸமுதாயத் தினரால்'' அனுஷ்டித்து பூஜித்து வரப்படு வதும் ஆகிய வைதீக பூஜை விதியின்படி,

சிதம்பரம் ஸ்ரீ ஸபாநாயகர் கோயி லுக்கு இதுவரை சரித்திரத்தில் நடத்தப் படவில்லை என்ற பெருமை பெறும் வகை யில் சென்ற ஆவணி மாத்திற்குள் சுமார் ஒரு வருடத்துக்குள் (பரிவார) இனி பின் வரும்விபரங்களின்படி, உள்ள, சுற்றுக்கோயில் களுக்கு முழுவதும் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடந்தது.

சுமார் 44 (நாற்பத்தி நான்கு) ஏகாரா விஸ்தீரணம் உடைய ஸ்ரீ சிதம்பரம் ஸ்ரீஸபாநாயகராகிய ஸ்ரீ நடராஜ ராஜர் கோயிலில் ராஜகோபுரமாகிய தெற்கு கோபுரத்தின் உள்ளே நுழைந்ததும் வலம் வர ஆரம் பிக்கும்போது முதலில்

''திரு சிவைக்ய கணபதி'' என்று வைதீகவிதிப்படியும், முகக்கட்டணத்து விஞயகர்'' என்று குலோத்துங்க சோழனு லும் பெயர்பெற்று முக்குறுணி விநாயகர் கோயிலுக்கும் சென்று வழிபடுதல் வேண்டும்.

அடுத்து மேலக் கோபுரத்தின் வெளியே இடப்புறம், இன்றும் பிரபலமாக விளங்கும் ஆதீனங்களின் குருவாகப் போற் றப்படுபவரும், தீட்சதர்களில் ஒருவரும், ஸ்ரீநடராஜரை ''குஞ்சிதாங்கிரி ஸ்தவம்'' என்ற பெரும் வடமொழி நூல் இயற்றிப் புகழ்ந்ததுடன்,

தமிழில்–கொடிக்கவி, பௌஷ்கர வியாக்கியானம், கோயிற்புராணம், திருத் தொண்டர் புராணசாரம், திருமுறை கண்ட புராணம், சேக்கிழார் நாயனர் புராணம், திருப்பதிக்கோவை, சிவப்பிரகாசம், திரு வருட்பயன், விஞவெண்பா, போற்றிப் பஃறொடை, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம், சிவபுண்ணியத்தெளிவு, ஆகிய பல (தமிழ்) நூல்கள் இயற்றித் தமிழுக்கு பெரும் தொண்டு ஆற்றியவரும் ஆகிய– உமாபதி சிவத்தால் ''ஸ்தல விஞயகர்'' என்று பாடப்பெற்றவரும், துர்வாஸ மஹ ரிஷிக்கு உணவு; வரும்வரை ஆடல்வல்லா ஞகிய நடராஜராக நடனக்காட்சி அளித்த வரும் ஆகிய ஸ்ரீகற்பக விஞயகர் கோயிலை வழிபடுதல் வேண்டும்.

மேலக் கோபுரத்தின் உட்புறம் (இடப் பாகத்தில்) அருணகிரியாராலும், வள்ள வாராலும் பாடப்பெற்று, சூரஸம்ஹார உத்ஸவம் கொண்டருளும் குமரர் கோயிலும்,

மீனாக்ஷிசுந்தரர் கோயிலும்,

ஒரே தூண் உடைய ''ஒற்றைக்கால்'' மண்டபத்தில் உள்ள ''திருமூலகணபதி'' கோயிலுக்கும் சென்று வழிபடலாம்.

ஸ்ரீ சிவகாமஸுந்தரி அம்பிகையின் வஸந்த உத்ஸவம் நடைபெற்று வந்ததும், 100 தூண்கள் உள்ள (நூற்றுக்கால் மண்டபம்) மண்டபமாகவும், 1267-ல் வீரபாண்டியன்'' விஜயவீர அபிஷேகம்'' செய்து கொண்ட பெருமை உடையதும் ஆகிய மண்டபத்துக்கும்,

கங்கை கொண்ட சோழனுல் பிரதான கோயிலின் அருகே அதே அம்பிகைக்கும் தனிப்பெருங்கோயில் கட்டும் முறையில் கட்டப் பட்டதும்,

ஆதி சுங்கரரின் சந்தேகத்தைத் தீர்த் தருளிய ஸ்ரீ சிவகாமி அம்மை எழுந்து அருளியதும்,

ஸ்வர்ண துவஜ ஸ்தம்பம் ஸ்தாபிக்கப் பட்டு வருடந்தோறும் ஐப்பசிப் பூர திருக் கல்யாண உத்ஸவமும் நடத்தப்படுவதும்,

ஆதிசங்கரர், கௌடபாதர், சிரேதர், உமாபதிசிவம், அப்பய்ய தீட்சதர் மற்றும்–

ஒரு சமயம் இந்த சிவகாமி அம்பிகை ஆலய கும்பாபிஷேகம் சமயம் கடம் நிளம்ப விடாமல் மந்திரத்தால் கட்டுப்படுத்திய கேரள மந்திரவாதி நம்பூதிரியை அடக்கி அவருடைய கர்வத்தை அவருடைய பற்கள் யாவையும் மந்திரத்தாலேயே விழச்செய்து அருளி கும்பாபிஷேகத்தை இனிது நிறை வேறச்செய்த–மந்திர மூர்த்தி தீட்சதர் ஆகி யோரும் பூஜித்த ஸ்ரீசக்கரத்தைப் பிரகாரத் தில் உடையதும்,

''திருக்காமக் கோட்டம்'' என்ற சரித் திரப்பெயர்பெற்ற, ஸ்ரீசிவகாம சுந்தரி ஆலயத்துட்சென்று அம்பிகையை வழி படுதல் வேண்டும். அடுத்து,

ஸ்ரீ துர்க்கை கோயிலுக்கும்,

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி யாகிய (புவனேஸ்வரி) கோயிலுக்கும்,

மாறவர்மன் சுந்தர பாண்டியனுல் கட்டப்பட்டு ''பாண்டிய நாயகம்'' என்ற பெயர்பெற்று ஆலயங்களில் எங்குமே காணப்படாத அளவு பெரிய (மூலவர்) முருகனின் சிலை வடவை (ஒரே கல்லில்) உருவாக உடையதும், விதானத்தில் கந்த புராணம் முழுவதையும் வண்ண ஓவியமாக

தீட்டப்பட்டுள்ளதும் ஆகிய ஸ்ரீ பாண்டிய நாயகர் கோயிலுக்கும் சென்று வழி படலாம். பின்பு,

ஸ்ரீ ஜடா (ஸப்த) முனி கோயிலுக்கும்,

நவக்கரஹங்கள் தங்கள் தோஷங்கள் நீங்க வேண்டி ஒன்பது லிங்கங்களை பூஜித் ததாக புராணமும்,

தொகையடியார் ஒன்பது பேர்களும் ஒன்பது லிங்கங்களாக உருவடைந்ததால் ''திருத்தொண்டத் தொகையீச்சரம்'' என்ற திருமுறை விதிப்படியும், பெயர் பெற்ற ஸ்ரீநவலிங்கம் கோயிலுக்கும் சென்று வணங்கிப் பயன் பெறலாம்.

வெண்குஷ்டம் பிடித்ததால் ''ஸ்வேத வர்மன்'' என்ற காரணப் பெயர் பெற்று பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர்களால் ஸங்கல்பம் செய்து வைக்கப்பட்டு நீரில் மூழ்கி எழுந்த உடனேயே பொன் மய மாகிய உடலைப்பெற்று ''ஹிரண்ய வர்மன்'' என்று பெயர் பெற்ற பெருமையும்

தில்லைச் செடிகளால் வனமாக இருந்த தில்லையில் ஆதியில் (ஸ்வயம்புவாக) இருந்த ஸ்ரீமூலநாதரைக் கரையில் லிங்க மாக உடையதும் ''சிவகங்கை'' எனும் பெயர் பெற்று

''தீர்த்த மென்பது சிவகங்கையே,
ஏத்த அரும் தலம் எழிற்புலியூரே,
மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே''

என்ற மூல வாக்கியத்தில் படியும்,

''பொங்கு புனல் சிவகங்கை அதன் பெருமை யாவரே அறியற்பாலார்–திங்கள் வளர்பக்கத்தில் சனிவாரம் சேர்கின் மூழ்கில்–தங்கள் மனநினைத்ததெல்லாம் கடி அரும்பெரும் வினையும் தணிந்து நீங்கும்''

(அதாவது வளர்பிறை சதுர்த்தசி சனிக்கிழமையில் சேரும் நேரத்தில் சிவ கங்கையில் ஸ்நானம் செய்தால் மனதில் நினைத்த நல்லவையாவும் எளிதில் நிறை வேறும், பாபம் போகும் என்று பொருள்)

என்ற சிவகங்காமான்மியப் பாட லின் படியும் புகழப்பெறுவதும், ஸ்ரீ நடராஜரின் (வருட) ஆறு அபிஷேகம் நிறைவடைந்த தும் உடனுக்குடன் (நீரினுள் உள்ள) லிங்கத்துக்கு அபிஷேகம் செய்யப் படுவதும் ஆகிய திருக்குளத்தில் தீர்த்தம் ஆடி உய்தி பெறலாம். பின்னர்,

சித்ஸபை, கனகஸபை, நிருத்தஸபை, உத்ஸவ மூர்த்திகள் இருந்தருளும் தேவ ஸபை, ராஜஸபை ஆகியவைகளில் ஐந்தா வதாகச் சொல்லப்பட்டதும்,

இப்பெருங்கோயிலின் ஈசானபாகத் தில் ஸ்ரீநடராஜர் ஆனித்திருமஞ்சன, மார்கழி ஆருத்ரா தரிசன உத்ஸவ காலங் களில் ஆனந்த நடனக் காட்சி அளித்து அருளும் பெருமை பெற்றதும்,

தமிழில் சேக்கிழார் பெருமான் பெரியபுராணம் (அரங்கேற்றம்) இயற்றும் போது ''உலகெலாம்'' என்று இறைவனுல் அடியெடுத்து கொடுக்கப்பட்டு எதிரொலி செய்ததும்,

கம்பராமாயணம் அரங்கேற்றம் நடை பெற்ற இடமாகவும்,

மாணிக்கவாசகர் ஊமைப்பெண் ணைப் பேச வைத்து, புத்தரை வாதில் வென்றதும், ஆகிய ஆயிரங்கால் மண்ட பத்தைக் கண்டு மகிழலாம்.

தரிசிக்க வரும் பக்தர்களின் ஜாதக நவக்ரஹ தோஷங்களை நுழைந்தவுடன் நீங்க வேண்டி (பன்னிரண்டு ராசிகளையும்-ஒன்பது கிரகங்களையும் சேர்த்து) இருபத் தொன்று படிகளாக அமைத்துள்ளனர்.

ப்ரம்மயாகத்தில் பாபங்களைக் கிரஹித்து புண்ணியத்தை அருளப் பூஜிக் கப்பட்டு யாகம் முடிந்தவுடன் அதே விதிப் படி சிதம்பர ஆலயத்திலும் கிழக்கு நுழை வாசலின் இருபுறமும் இருந்து அருளக் கட்டளை இடப்பட்ட ''புருஷாமிருகங்கள்'' இரண்டையும் வாசலின் இருபக்கமும் அமைத்துள்ளனர்.

ஸ்ரீகாலஸம்ஹாரமூர்த்தி நிருத்தஸபை யின் கிழக்கே தூணில் அமைக்கப் பெற்றுள் ளமை காணலாம்.

தில்லைவனமுடைய பரமேஸ்வரி ஆகிய தில்லைக் காளியுடன் நடனம் ஆடி காளியை வென்று வடஎல்லையில் இருந்து தருளச் செய்த ஊர்த்துவ தாண்டவமூர்த்தியும்,

இரண்யாசுரனைக்கொன்ற நரசிம்ம மூர்த்தியின் கர்வத்தை அடக்கிய ஸ்ரீசர பேஸ்வரரும், இருந்தருளும் நடனஸபை கொடிக்கம்பத்தின் தெற்கே காட்சியளிக் கின்றது. அடுத்து,

ஒரு கல்தூணில் வரைபடமாக இருந்த சிலையாக உருவ வளர்ச்சி அடைந்து வரும் ஸ்ரீ தண்டாயுதபாணியைக் கண்டு தரிசிக் கலாம்.

அருண்மொழி என்ற "இளவரசு"ப் (தமிழ்ப்) பெயருடன் இருந்தவனை "ராஜ ராஜன்" என்ற பெயர் சூட்டியதன் மூலம் அவனுடைய தனிப்பெரும் அரசுக்கு வித் திட்ட தீட்சதர்களால் பாதுகாக்கப் பட்டு வந்து, பின்பு ராஜராஜ சோழனின் வேண்டுகோளின்படியும் வெளியிடப்பட்ட திருமுறைகளைக் காட்டி அருளிய ஸ்ரீ "திருமுறை காட்டிய வினயகரையும் மற்றும் ஸ்ரீ தாயுமானரையும், சமயக் குரவர் நால்வர், ஸந்தனாச்சாரியார் நால்வர், அறுபத்து மூவர், சேக்கிழார் மற்றும் பதஞ்சலி வியாக்கிரபாத, ஜயமுனி களால் பூஜிக்கப்பட்டு ஸ்ரீநடராஜப் பெருமான் கைலாஸத்திலிருந்து பூலோகம் வரக்காரணமாகிய ஸ்வயம்புலிங்கமாகிய ஸ்ரீ மூலவநாதர் ஸ்ரீ உமயபார்வதி ஆகிய தெய்வ சந்நிதிகளைக் கண்டு வழிபடுதல் வேண்டும்.

ஸ்ரீ அருணஜலேஸ்வரர், ஸ்ரீ தக்ஷிணு மூர்த்தி, ஸ்ரீ வல்லப கணபதி, ஸ்ரீ ஐயப்பன், ஸ்ரீ நவக்ரஹ சந்நிதிகளையும் கண்டு தரிசிக்கலாம்.

ஸ்ரீ கோவிந்தராஜர் எனும் மஹா விஷ்ணுவினுல் (தெற்குப்பக்கம் தலை வைத்து–பள்ளி கொண்டபடியே) அல்லும் பகலும் அனுவரதமும்–கண்டு களித்து வரும் பெருமையுடைய ஆனந்த நடராஜர் எழுந்தருளியுள்ளதும்,

மிக அழகும், அபூர்வமும் உடைய தாகக் கருதப்படும் ஸ்வர்ணகால பைரவரும்,

தீட்சதர்களின் நித்திய ஆறுகால பூஜைக்காக ஸ்ரீ நடராஜர் தனது முடியில் உள்ள சந்திரனின் கிரணங்களைத் திரட்டி உருவாக்கப்பட்டு அளிக்கப்பட்ட ஸ்ரீ ஸ்படிக சந்திர மௌலீஸ்வரலிங்கமும்,

உலகில் இதுவரை இன்னும் மற்று மொரு ரத்தினம் கிடைக்கவில்லை என்ற பெருமை உடையதும், பிரம்மயாகத்தின் பயனுக யாக குண்டத்தின் நடுவில் இருந்து தோன்றியவரும்,

முன்புறம் தீப ஆராதனை காட்டும் போது பின்புறம் ஜோதியாகவும், பின் புறம் தீபம் காட்டும்போது முன்புறம் ஜோதியாகவும் காட்சியளித்தருளும் ஸ்ரீரத் தின ஸபாபதி ஆகிய ஆனந்த தாண்டவே சரும்,

அனைத்திற்கும் மேலாக படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய பஞ்ச கிருத்தியங்களையும் தனது பர மானந்த தாண்டவத்தினுல் செய்து அருள் பவரும்,

மனிதனின் இயல்பில் உள்ள தீய சக்தி களான காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாத்சர்யம் ஆகிய ஆறு தீய குணங்களையும் (தரிசிப்பவர்க்கு) கழுவிக்களைந்து அருள வருடத்துக்கு ஆறு அபிஷேகங்களைக் கொண்டு அருள் பவரும் ஆகிய ஸ்ரீ நடராஜர் சந்நிதி கோயிலின் நடுவே ஞானமயமாகக் காட்சி அளித்தல் காணலாம்.

சமீபத்தில் அணுவைப் பிளந்து சாதனை நிகழ்த்திய விஞ்ஞானிகளால் அதனுள்ளும் தனது ஆனந்த நடன உருவைக் காட்டுகிறார் என்று கண்டுபிடிக் கப்பட்ட பெருமையுடைய ஸ்ரீ ஆனந்த நடராஜரும்,

வாழ்வில் ஒரே ஒருமுறை தரிசித்

தாலே இஷ்டங்கள் யாவையும் அளித்து அருள்வதால் "தரிசினுத் அப்ரஸதவி" என்ற சிறப்புப் பெயர் உடையவரும்,

1. கைலாஸத்தில் ஸகல ஜீவ–தேவர் களுக்கும், 2. ஸ்ரீ சனிபகவானுக்குத் தன்னந்தனியாகவும், 3. காளிதேவியை வென்று நாதாந்த நடன நிறைவிலும், 4. தாருகாவன ரிஷிகளின் கர்வ பங்கத்தின் பிறகும், 5. பதஞ்சலி வியாக்ரிபாத முனிவர்களின் நீண்ட நெடுத்தவப்பயனுக வும், ஆக ஐந்து முறை ஆனந்த நடனக் காட்சி அளித்து அருளியவரும்,

பக்தர்கள் ஒவ்வொரு வேளையும் தரிசிக்கும் போது அவரவர் மனப்பாங்கின் படி பல பாவங்களாகக் காட்சி தருபவரும் ஆகிய,

ஸ்ரீ சிவகாமஸுந்தரீஸமேத ஸ்ரீமத் ஆனந்த நடராஜப்பெருமான் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ சித்ஸபையினையும், எதிரேயுள்ள ஸ்ரீ கனகஸபையினையும் கண்டு தரிசித்துப் பிறவிப்பயனைப் பெறலாம்.

பொன்னம்பலத்தைச் சூழவுள்ள பிரகாரத்தில் திருவிளையாடல் புராண சிற்பங்களை உடையதும்,

ஸ்ரீ கங்கை நதி ஐப்பசி மாத மஹா நவமி அன்று வந்து கலக்கும் பெருமையும் ஸ்ரீ நடராஜராஜரின் அபிஷேக பூஜை உப யோகங்களுக்கு மட்டுமே உபயோகிக்கப் பட்டு வருவதும் ஆகிய "பரமானந்த கூபம்" எனும் பெயருடைய கிணறும், ஸ்ரீ பிரும்ம சண்டிகேஸ்வரர் கோயிலும் அமைந்துள்ளமை காணலாம்.

(மேற்கூறிய இவைகள் யாவும் உள்ள டங்கிய) பெருங்கோயிலுக்கு இதுவரை சரித்திரத்தில் நிகழ்ந்த தில்லை என்ற அளவு பெருமை அடையும் விதத்தில் "முழுவதும் திருப்பணி செய்து" நமது தலைமுறையில் நடை பெறும் இந்தக் கும்பாபிஷேகத்தைக் காண்பதும், இது பற்றிக் கேட்பதுமே நாம் பாரம்பரியமாகச் செய்த புண்ணியங்களில் மொத்த பயனுகும்.

உலக முழுவதிலுமிருந்து வந்த பல நூறுயிரம் மக்கள் தங்கள் தங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களுடன் கும்பாபிஷேக நிறைவுவரை முன்னதாக வந்திருந்து கும்பாபிஷேகத்தை தரிசித்துப் பயன் பெற்றனர்.

இவர்கள் எல்லோரும் சிதம்பர "சிவ கங்கா மான்மிய"த்தில் சொல்லியுள்ளபடி புகழ், வலிமை, வெற்றி, நன்மக்கள், பொன், தானியம், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, தீர்காயுஷ்யம், ஆகிய பதினெறு பேறுகளும் பெற்றுப் பெரு வாழ்வு பெற்று வாழ வேண்டுமாய் எல்லாம் வல்ல தில்லைக் கூத்தனையே இடை விடாது பிரார்த்திக்கிறேன். □

விரவும் ஆயிரம் திருமுகப் பகிரதி விரிக்கும்
உரவு வெண்டிரை ஒரு மருங் கலைப்பஎண் சடைமேல்
அரவ கன்பண மொடுக்குற அருநடம் புரியும்
பரம னங்கதப் பரிபுரப் பதம்பணி குதுமே.

— உபதேச காண்டம்

நடராஜ தத்துவமும் ஆனந்தகுமார சுவாமியும்

ப. நடராஜன்
ஓய்வு பெற்ற இரயில்வே மானேஜர்,
48, வடக்கு வீதி,
சிதம்பரம்.

பல பல்நெடுங்காலமாகப் பெரிய மேதைகள் நடராஜ தத்துவம் என்ற பொருளுக்குப் போதிய விளக்கங்களைத் தம் நூல்களின் மூலமாகவும் மற்ற வகைகளிலும் நமக்கு வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில், நம் நாட்டினரும் சரி, வெளி நாட்டினரும் சரி, பாராட்டும் முறையில், ஆய்வறிவு சார்ந்த முறையில், துல்லியமாக நடராஜ தத்துவத்திற்கு விளக்கம் எடுத்துக் கூறிய பெருமையும் புகழும் காலஞ்சென்ற மேதை டாக்டர் ஆனந்த குமாரசுவாமி அவர்களுக்குத் தான் சேரும். ஆழ்ந்த கற்றறிவாளரும் ஆராய்ச்சியில் நிபுணருமான டாக்டர் ஆனந்த குமாரசுவாமி நடராஜ தத்துவத்தின் உட்பொருளை வெகு நேர்த்தியாக "The Dance of Shiva" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் வெளிப்படுத்தியிருக்கிறார். 1917-ம் ஆண்டிலிருந்து 1947 வரை அவர்கள் பல அரிய கட்டுரைகளைப் பிரசுரம் செய்து இருக்கிறார்கள்.

நடராஜமூர்த்தியின் வடிவ அமைப்பு என்ன? அதன் முக்கிய அம்சங்கள் என்ன? அவை எதைக் குறிக்கின்றன? அந்த வடிவ அமைப்பின் ஸூக்ஷ்ம கருத்துக்கள் என்ன? இந்தக் கேள்விகளுக்குத்தான் டாக்டர் குமாரசுவாமி அவர்கள் வெகு சிறப்பான விளக்கத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

பிரபஞ்சத்தில் ஆக்கல், காத்தல், அழித்தல் இந்தச் செயல்களை ஆற்றுவதற்கு அடிப்படையான அண்டத்திற்குரிய வீரியம், (Cosmic Energy) ஆற்றலின் சின்னம் நடராஜரின் ஆனந்தத் தாண்டவம்.

நடராஜர் என்ற கருத்துவத்தின் (Conception) பேரழகு (Grandeur) என்னவென்றால், டாக்டர் ஆனந்தகுமாரசுவாமி சொல்லியிருக்கிறார்கள்-விஞ்ஞானம், சமயம். கலை, இம்மூன்றின் கூட்டணைப்பு என்பதுதான் (Synthesis of Science, religion and art) வெளித் தோற்றம் கடந்த உள்ளார்ந்த தன்மைக்கு (realty) உருவம் கொடுக்கிறது. வாழ்க்கையின் உள்ளார்ந்த நிலையைப் புரிந்து கொள்ள ஒரு வழிதுணையாயிருக்கிறது. ஒரு இனத்தாருக்கோ, தந்நலக் குழுவுக்கோ, ஒரு சார்பு சமயத்தாருக்கோ அல்லது ஏதோ ஒரு காலத்தில் வாழும் சிந்தனையாளருக்கோ மட்டும் இல்லாமல் உலக முழுதளாவிய, இன முழுதளாவிய எல்லாக்காலத்திற்கும் உரிய எல்லாச் சமயங்களுக்கும் உரிய சிறந்த தத்துவத்தைப் பரப்புகிறது என்ற அபிப்பிராயத்தை

டாக்டர் ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் திறம்பட எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். காலக்கணக்கையும் (Time) நிலை பேறுடைமை (Eternity) யையும் இணைப்பது நடராஜதத்துவம். ஜெட்லண்ட் துரை அவர்கள் கூறியது போல், அண்டத்தில் வாழ்வுக்கு உயிர் கொடுத்து, அதைப் பரிபாலிக்கும் சக்தியின் சின்னம் ஸ்ரீ நடராஜர் ஆனந்த தாண்டவம். அண்டம் இடைவிடாது செயற்பாங்கில் ஈடுபடுவதைக் குறிப்பது நடராஜரின் ஆனந்தத் தாண்டவம். அண்டத்தில் இயங்காற்றல் (Kinetic Energy) அண்டத்தின் ஒத்திசைவு (Cosmic Harmony) இவைகளின் இருப்பிடம் நடராஜர்.

தாண்டவத்தின் பலவகைகளைப் பற்றிக்கூறித் தில்லை கனகஸபையில் நாம் கண்டு களிக்கும் கூத்து "நாதாந்த" அமைப்பு என்று திருமூலர் திருமந்திரத்தில் வர்ணித்தது போல, டாக்டர் ஆனந்த குமாரசுவாமி விளக்கியிருக்கிறார்கள். கூத்தப்பிரான் ஆடவல்லான், நடராஜர் என்ற விலாசம் கொண்ட நடன அமைப்புத் தான் தென்னகத்தில் எல்லாக் கோயில் களிலும் வழிபாட்டில் இருந்து வருகிறது. நடராஜர் விக்ர உறத்தில் நான்கு கைகள் உண்டு, உடம்பு முழுவதும் விபூதி (சாம்பல்) பூசியிருக்கும், தலை கேசத்தில் கீழ்ப்பாகம் நடனத்தில் சுழன்று கொண்டு இருக்கிறது, வலது பக்கத்துப் பின்கையில் உடுக்கை (டமருகம்) இருக்கும். மற்றொன்று வலது பக்கத்து முன் கை சற்று மேலே தூக்கி யிருக்கும். அபய ஹஸ்தம்-"பயப்படாதே" என்று பொருள். அந்த மணிக்கட்டில் பாம்பு. இடது பக்கம் ஒரு கையில் நெருப்பு (அக்னி). இன்னொரு கை கீழ் நோக்கி முயலகன் என்ற அரக்கனைச் சுட்டிக் காட்டு வது போலவும், நடன நிலையில் தூக்கிய திருவடியை நோக்குகிறது. நடராஜர் முயலகன் சரீரத்தின் மேல் வலது காலை ஊன்றி வேகமாகச் சுழன்று நடனம் செய் வதாக ஐதீகம்.

நடராஜர் மேல் அமைக்கப்பட்டுள்ள பிரபை (Aureola) சூரிய மண்டலத்தின் சின்னம். பிரபையிலிருந்து வெளிவரும் ரேகைகள் சூரிய ரேகைகள். நடராஜர் சிரலில் சந்திரனும் கங்கையும் இடம்பெறு கிறார்கள். "உண்மை விளக்கம்" என்ற நூலில் நடராஜர் மேல் தோன்றும் திரு வாசி "ஓங்காரம்" என்று சொல்லப்பட் டிருக்கிறது. பஞ்சாக்ஷரமும் நடனமும் "ஓம்" என்பதை உணர்த்துகிறது.

நடராஜரின் ஆனந்தத் தாண்டவம் "பஞ்சகிருத்யங்களை"ச் சுட்டிக்காட்டு கிறது. சிருஷ்டி (ஆக்கல்), ஸ்திதி (காத் தல்), ஸம்ஹாரம் (அழித்தல்), திரோ பவம் (மறைத்தல்), அனுக்ரஹம் (அருள்)– இந்த ஐந்து கடமைகளும் பிரம்மா, விஷ்ணு ருத்திரன், மஹேச்வரர், சதாசிவம் அவர் களுடைய பணி ஈடுபாடாகும்.

உடுக்கையிலிருந்து வரும் ஒலியால் அண்ட, பிண்ட, சராசரங்கள் எல்லாம், இறைவனிடமிருந்து தோன்றுகின்றன என்பதைக்குறிக்கும். ஆகவே, உடுக்கை "சிருஷ்டி" அல்லது "ஆக்கத்தை" உணர்த் துகின்றது.

"அபயஹஸ்தம்" அமைதிக் குறியைக் காட்டுகிறது. கருணைமூர்த்தியான இறைவன் திருவடியே தஞ்சம் என வந்த டைந்தவர்களைக் காப்பாற்றுவேன்– அஞ்சாதே நெஞ்சமே" எனக்கூறுவது போல் அமைந்திருக்கிறது. ஆகவே "அபயஹஸ்தம்" "ஸ்திதி" அல்லது "காத்தலை"க் குறிக்கின்றது.

இடது கையில் இருக்கும் தீ (அக்னி) ஸம்ஹாரம் – "அழித்தலை" உணர்த்து கின்றது.

ஊன்றிய வலக்கால் "திரோபவம்" அல்லது "மறைத்தலை" உணர்த்துகிறது.

தூக்கியிருக்கும் இடது கால் கருணை யைக் (அனுக்ரஹம்) குறிக்கிறது. இடது கை குஞ்சிதபாதத்தைச் சுட்டிக் காட்டி "ஆண்டவனின் திருவடியில்தான் உங்

களுக்கு கதி" என்று உபதேசிப்பது போல் அமைந்து இருக்கிறது.

மேலும் டாக்டர் ஆனந்த குமாரசுவாமி திருமூலர் திருமந்திரத்தின் ஒன்பதாம் தந்திரத்தில் திருக்கூத்து தரிசனம் என்ற எட்டாவது அதிகாரத்தின் சில பகுதிகளைக் குறிப்பிடுகிறார்.

"எங்குந் திருமேனி எங்குஞ் சிவசக்தி
எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநாட்டம்
எங்குஞ் சிவமாயிருத்தலால் எங்கெங்குந்
தங்குஞ் சிவனருட்டன் விளையாட்டதே"

(சிவபெருமான் ஆற்றியருளும் திருத் தொழில்கள் ஐந்து. திருவட்டிருக்கூத்தும் ஐந்தாகும்:— சிவானந்தக்கூத்து, சுந்தரக் கூத்து, பொற்பதிக்கூத்து, பொற்றில்லைக் கூத்து, அற்புதக்கூத்து)

"அங்கி தமருகம் அக்கு மாலை பாசம்
அங்குசஞ் சூலங் கபால முடன் ஞானந்
தங்கு பயத்தரு நீலமும் முடன்
மங்கையோர் பாகமாய் மாநடமாடுமே"
"சிவமாட சத்தியும் ஆடச் சகத்தில்
அவமாட ஆடாத அம்பரம் ஆட
நவமான தத்துவ நாதாந்த மாடச்
சிலமாடும் வேதாந்த சித்தாந்தத்துள்ளே"

சிதம்பர க்ஷேத்திரம் 'ஆகாசத்தை'க் குறிக்கிறது. நடராஜரின் திருநடனம், அண்டத்தின் அசைவின் சின்னம். அண்டத்தைத் திருவாசியில் காண்கிறோம். மக்களை மாயையின் லீலைகளிலிருந்து விடுவித்து மோக்ஷம் கொடுப்பதுதான் இந்த நடனத்தின் நோக்கம்.

டாக்டர் ஆனந்த குமாரசுவாமி அவர்கள் எழுதிய கட்டுரையின் முடிவில் அவர்கள் செய்த குறிப்பு கவனிக்கத் தகுந்தது:—

"மூட நம்பிக்கை என்று கேலி செய்வாரும் உண்டு. ஆனால் நடராஜ தத்துவத்தைப் பற்றிய மட்டில் பல தலை முறைகளாக நடராஜரின் ஸ்வரூபம் கோடிக்கணக்கான மக்களை கவர்ச்சி செய்திருக்கிறது. பெரிய விஷயங்களிலும் சரி, சிறிய விஷயங்களிலும் சரி, முழு மூச்சுடனும், ஆர்வத்துடனும் ஆராய்ச்சி செய்தோமானால், நடராஜரின் பக்தர்கள் என்று நாம் எல்லோரும் பெருமைப்படுவோம் என்பதில் ஐயமில்லை." □

பூமேவு கதிர்விரிக்கும் பொன்பூத்த
புண்டரிகப் புலியூர் மன்றுள்
தேமேவு புயலளகச் சிவகாம
சுந்தரிகட் டெளிவண் டேயப்
பாமேவு பெருஞ்சுருதி தழங்குமுழங்
கிசைமுழவம் பல நின் றுர்ப்பத்
தூமேவு மானந்த நிருத்தமிடும்
பொருளிணைத்தாள் தொழுதல் செய்வாம்.

இலிங்க புராணம்



திலலைக் கூத்தனும் செந்தமிழிசையும்

சுலைமாமணி வரகூர் முத்துக்குமாரசாமி

இசையின் சிறப்பு:–

சரி, க, ம, ப, த, நி என்னும் ஏழு சுரங்களிலிருந்து ஏழு வகை நடனங்கள் தோன்றின என்பதனை

"ஒன்றன்பின் ஒன்றாய் ஒலித்தெழுத் தனவால்
ஒதும் அவ்வேழ் சுரங்களினால்
நன்று நம்மிடை எழுவித நடனம்
நலம் பெறத் தோன்றின"

என இறைவன் சத்திக்கு உரைப்பதாகத் திருப்புத்தூர்ப் புராணம் கூறுகின்றது. ஏழு நடனங்களையும் முறையே 1. ஆனந்தத் தாண்டவம், 2. சந்தியா தாண்டவம், 3. கௌரி தாண்டவம், 4. திரிபுர தாண்டவம் 5. காளி தாண்டவம், 6. முனி தாண்டவம், 7. சங்காரத் தாண்டவம் எனக்கூறுவர்.

திருமுறை இசைப் பாடல்கள்:

சைவத் திருமுறை ஓதும் அன்பர்கள் ஓதத் தொடங்கும் போதும் முடிக்கும் போதும் "திருச்சிற்றம்பலம்" எனத் தில்லைத்தலத்தின் திருநாமத்தையே உச்சரிக்கின்றார்கள் திரு சிறு அம்பலம் திருச் சிற்றம்பலம்.

தெய்வீக இசைக்கலையின் துணையாய் சைவத் திருமுறைப் பாடல்களை இயற்றித் தந்து செந்தமிழையும் சைவ சமயத்தையும் வளர்த்த நாயன்மார்கள் மூவர். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், ஆகிய இம்மூவரும் செந்தமிழ் ஆராய்ச்சிக்கு உரியதான பண்முறைப் பாடல்களைப் பாடி அற்புதம் விளைவித்தார்கள். தேவாரம் என்னும் இப்பண்முறைச் செந்தமிழ்ப்பாடல்கள் சிதம்பரத் தலத்திலிருந்தே நமக்குக் கிடைத்தன. ஆகையால் தில்லைத் தலம் செந்தமிழிசை வளர்த்த பெருமையுடையது என நாம் அறிகின்றோம்.

தேவார ஆசிரியர்கள் காலத்திற்கும் முற்பட்ட காலத்தில் தோன்றி இசைத் தமிழ் வளர்த்த பெருமை காரைக்கால் அம்மையாருக்கு உண்டு. அதனாலேயே இவர் பாடிய பதிகங்கள் "மூத்ததிருப்பதிகம்" எனப் பெயர்பெற்றன. இறைவனின் திருநடனங்கண்டு தரிசித்த அம்மையார் "ஆடும் இறைவன் திருவடியில் கீழமர்ந்து பாடிக்கொண்டே யிருக்கவேண்டும்" என்பதை வரமாகக் கேட்டுப் பெற்றவர்.

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
"பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும்
வேண்டுநான் மகிழ்ந்து பாடி
யறவா நீ ஆடும் போதுன்
அடியின்கீ ழிருக்க"
என்றார்.

இசையில் மிக்க விருப்புடையவனுன இறைவன் அம்மையின் இசைப்பாடல் கனேக் கேட்டுக் கொண்டேயிருக்க விரும்பி

"ஆடுமா நடமும் நீ கண்டு
ஆனந்தம் சேர்ந்தெப் போதும்
பாடுவாய் நம்மை"

என்ருன்.

இதனுல் இறைவன் திருநடனச் சிறப்பையும் அவன் திருவடியிற் பொருந்தும் உளத்தினுற் பாடும் பயனேயும் அதன் ஆனந்தப் பேற்றையும் உணரலாம்.

கீர்த்தனைப் பாடல்கள்:

இசைக்கலே வழக்கில் பண்முறைப் பாடல்களுக்குப் பின்னர் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் முப்பிரிவின் சிறப்புப் பொருந்திய கீர்த்தனைப் பாடல்கள் விளக்கம் பெற்றன. அமிழ்தினு மினிய தமிழ் மொழியில் தில்லேக் கூத்தன் மீது கீர்த்தனைப் பாடல்கள் பாடித் திகழ்ந்தவர்களில் சிறந்தவர்கள். 1. முத்துத் தாண்டவர், 2. மாரிமுத்தாப்பிள்ளே, 3. கோபால கிருஷ்ண பாரதியார் ஆகிய மூவரும் ஆவர்.

முத்துதாண்டவர் சீர்காழியில் அவதரித்தார்; உமையம்மை தந்த திருவமுதுண்டு அவள் உத்தரவுப்படி தில்லேக்கு வந்தார்; தில்லே கூத்தன் மீது கீர்த்தனைப் பாடி பல அற்புதச் செயல்களுடன் வாழ்ந்தார்; மாணிக்கவாசகர் போன்ற . பேறுபெற விரும்பி அவன் சந்நிதியில் நின்று "மாணிக்கவாசகர் பேறெனக்குத்தர வல்லாயோ" என்னும் பாடலேப்பாடி ஆவணிப்பூச நன்னுளில் அங்குத் தோன்றிய பேரொளியிற் கலந்து சிவபத மடைந்தார்.

மாரிமுத்தாப்பிள்ளே, சிதம்பரத்தைச் சார்ந்த தில்லேவிடங்களில் அவதரித்து இளம் வயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்ருர்; தம் அருட்கவியாற்றலால் கண் கொடுத்த மாரிமுத்தாப்பிள்ளே எனப் புகழ்ப் பெயரெய்திப் பல அற்புதங்கள் செய்து மக்களுக்கு உதவினர்; இசைப்பெரியார் அருணுசலக் கவிராயர் நட்பு பூண்டு பல கீர்த்தனேகளேப் பாடினர். சித்திரை அட்டமி நன்னுளில் சிதம்பரநாதன் திருவடி நிழலிற் கலந்து போரின்பமடைந்தார்.

கோபாலகிருஷ்ண பாரதியார் நாகப்பட்டினத்தைச் சார்ந்த நரிமணம் என்னும் சிற்றூரில் அவதரித்தார். வடமொழியும் வேதாந்த நூல்களும் யோக நூல்களும் பயின்று நண்பர்களின் கூட்டுறவால் இசைஞான வளம்பெற்ருர். சிவனேயும் சிவனடியார்களேயும் கீர்த்தனேகளாற் பாடித் தில்லேக் கூத்தன் புகழ் வளரச்செய்து அடியார்க்கு உதவும் அறக்கட்டளே நிறுவினர்; பிரமசரிய நிலேயில் நின்று வாழ்ந்து மாசிச் சிவனிரவு நன்னுளில் தில்லேக் கூத்தன் திருவடி நிழலிற் கலந்தார்.

காலத்தில் முந்திய இம்மூவருக்குப் பின்னர் இவர்களுடைய வழியைப் பின்பற்றிப் பல இசைக்கவி வல்லுனர்கள் தோன்றிக் கூத்தப் பெருமான் மீது பலவித செந்தமிழ் பாடல்களேப் பாடியுள்ளார்கள்; பாடி வருகின்ருர்கள். விரிவஞ்சி அவர்களேக் குறிக்கவில்லே.

இவ்வாறு அருளிசைக் கவிஞர் பலராலும் பல்வித நல்லிசைப் பாடல்கள் பெற்ற தில்லேக் கூத்தன் புகழ் நாடெங்கும் கொண்டாடிப் போற்றப்படுகிறது. செந்தமிழ் மொழியின் இசைப் பாடல்கள் மிகுந்து காண்பதற்கு இத்தில்லேக் கூத்தனின் திருவருளே காரணமாகின்றது. இதனுல் தில்லேக் கூத்தனுக்கும் செந்தமிழ்ப் பாடல்களுக்கும் மிகுந்த தொடர்பு உண்டென்பதை யாவரும் உணரலாம். □

கலைக்கோயில்

க. சுவாமிநாதன், பி. எஸ்ஸி., பி. டி.
சிதம்பரம்

திருக்கோயில்கள் மொழியையும் கலைகளையும் வளர்க்கும் சமயநிலையங்களாகத் திகழ்கின்றன. அவை வளர்க்காத கலைகளே இல்லை.

கோயில்கள் முதல்முதலில் மரங்களாலும், பின்னர்ச் சுண்ணும்பாலும், செங்கற்களாலும், அதன் பின்னர்க் கருங்கற்களாலும் கட்டப்பட்டன. தில்லைச் சிற்றம்பலவன் எழுந்தருளியுள்ள அம்பலம் சந்தன மரத்திஞல் கட்டப்பட்டிருப்பதைக் காணும்போது, அதன் தொன்மை நன்கு விளங்கும். சிற்சபையின் கூரை பொன்ஞல் வேயப்பட்டிருந்ததை 'தூய செம்பொன்னிஞல் எழுதி மேய்ந்த சிற்றம்பலம்' என்ற அப்பர் தேவாரத்தால் உணரலாம். அதே போல் கனகசபை தாமிரக் கூரை வேயப் பட்டிருப்பதும் கலைஞர்களின் நுண்ணறிவிற்கு எடுத்துக்காட்டாகும். பராந்தக சோழனுக்கு முன் இத்திருப்பணியைச் செய்தவன் ஆதித்த சோழன். 'சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம்பல முகடு, கொங்கிற் கனக மணிந்த ஆதித்தன்' என்று நம்பியாண்டார் நம்பிகள், திருத்தொண்டர் திருவந்தாதியில் குறிப்பிட்டுள்ளார். இரண்டாம் குலோத்துங்கன் சிவகாமக் கோட்டம் எடுப்பித்தது சிறந்த கட்டிடப் பணியாகும். மாணிக்கவாசகர் திருநட்ட மாடியை வழிபட வந்த கிழக்குக் கோபுரம் இரண்டாம் குலோத்துங்க சோழனுலும், சம்பந்தர் வந்த தெற்குக் கோபுரம் கோப் பெருஞ்சிங்கப் பல்லவனுலும், அப்பர் வந்த மேற்குக் கோபுரம் ஜடவர்மசுந்தர பாண்டியனுலும், சுந்தரர் வந்த வடக்குக் கோபுரம் கிருஷ்ணதேவராயராலும் கட்டப் பட்டன. கருங்கற்கள் கிடைக்காத இடத்தில் மிகப்பெரிய எழில்மிகு கோபுரங்களை அமைத்துள்ளது வியத்தற்குரியது. சிவகங்கையில் நீராடி நோய் நீங்கப் பெற்ற இரண்யவர்மன் இவ்வாலயத்தை அமைத்தான் என்பது புராணச் செய்தி.

தில்லையில் அரசர்கள் கோபுரங்களைக் கட்டி, மக்கள் இறைவனை வழிபடச் செய்துள்ளனர். 'ஊரும் இன்தமிழால் உயர்ந்தார் உறைதில்லை' என்று திருஞான சம்பந்தர் அருளிய வண்ணம் செந்தமிழையும், சிவநெறியையும் வளர்த்தது தில்லையே. திருவாசகத்தினை மாணிக்கவாசகர் சொல்ல அழகிய சிற்றம்பல முடையான் எழுதியதும், பெற்ருன் சாம்பான் பொருட்டுக் கைச்சீட்டு அளித்ததும், திருத்தொண்டர் புராணம் பாட 'உலகெலாம்' என்று முதலடி எடுத்து மொழிந்ததும் திருவருட் குறிப்புகளே. சமய குரவர் முதல் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் ஈறுக வந்த அருளாளர் பலரும் தில்லையம் பலவனை வழிபட்டுப் பல பக்திப் பனுவல்களை இயற்றியுள்ளனர். இவ்விலக்கியங்களுக்கெல்லாம் தில்லை நிலைக்களனுக அமைந்துள்ளது.

தில்லையில் இசை மாட்சிமை பெற்றிருந்தது. திருமுறை கண்டபின் தேவாரப் பதிகங்களுக்கு இசையமைக்கப் பெற்ற இடமும் தில்லைத்திருக்கோயிலே யாகும்.

திருக்கோயில்களில் தேவாரத்தைப் பண்ணோடு பாடுவோர்க்கும், முரசு முழக்குவோர்க்கும் நிவந்தங்கள் விடப் பட்ட செய்திகளைக் கல்வெட்டுக்கள் தெரி விக்கின்றன. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் 'சங்கீத ரத்னாகரம்' என்ற வடமொழி இசைநூலை இயற்றிய சாரங்க தேவர் தேவாரப் பண்களைத் தேர்ந்தெடுத்துத் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இதனால் தேவாரத் தமிழிசைக்கு இந்திய நாட்டி லிருந்த சிறப்பும் செல்வாக்கும் நன்கு புலனாகும் இறைவனே இசைக் கலைஞன் என்பதை, 'வேயுறு தோளி பங்கன், விட முண்ட கண்டன், மிக நல்ல வீணை தடவி' என்றும், 'குழலின் ஓசை வீணை மொந்தை கொட்ட முழவு அதிரக் கழலின் ஓசை ஆர்க்க ஆடுங்கடவுள்' என்றும் தேவாரத் தால் அறிகிறோம். இசைக் கலைக்கும், ஆடற்கலைக்கும் பலவித கருவிகள் பயன் பட்டதைத் திருவாலங்காட்டு மூத்த திருப் பதிகத்தில், 'துத்தம் கைக்கிளை விளிதாரம்' என்று தொடங்கும் பாடல் மூலம் அறிய லாம். தில்லைக் கோயிலில் 'சுத்த மத்தளம்' என்ற இசைக்கருவி நடராசப் பெருமானின் பூசாகாலங்களில் ஒலிப்பதை இன்றும் கேட்கலாம். இக்கோயிலில் கொடியேற்ற நாளன்று இரவு சுத்த மத்தளம், பிரம தாளம் ஆகிய இசைக் கருவிகளுக்குப் பூசை செய்து, அவற்றை உற்சவ பூசைக்குரிய ஆசாரியரே தட்டித் தொடங்கி வைப்பது இன்றும் வழக்கில் உள்ளது. இதனைப் 'பேரீதாடனம்' என்று சொல்வார்.

இறைவன் இசைக் கலைஞன் மட்டுமா? அவன் கூத்தனும் கூட. பாட்டென்றால் கூத்தும் இணையாமலிருக்குமா? 'வலம் வந்த மடவார்கள் நடமாட முழவதிர' என்பது திருஞானசம்பந்தர் வாக்கு. இறை வனே வழிபடும் வகைகளில் ஒன்று நடனம். பழங்காலத்தில் நடனக்கலையில் சிறந்த மகளிர் கோயில்களில் அமர்த்தப்பட்டு இறைவழிபாட்டின் போதும், விழா நாட் களிலும் நடனத்தாலும், பாட்டாலும் மக்க களின் கலை வளர்ச்சிக்கு உதவினர். இறை வழிபாட்டில் இந்தக் கலைகளில் ஆர்வம் செலுத்த தெய்வத் திருவுருவங்கள் அமைக் கப்படுகின்றன.

கடவுள் தத்துவத்தையும், தமிழர் கலாச்சாரத்தையும், அறிவியலையும் நோக்கமாகக் கொண்டு தில்லைச் சிற்றம் பலத்தே பண்ணுண்ட பாடலோடும் ஆடும் கண்ணுதற் பெருமானின் திருவுருவத்தை ஐம்பொன்னிலும், செம்பிலும், கல்லிலும் வடித்து அவனது அழகுத் திருக்கோலத்தில் ஈடுபட்டவர்களால் நடனக் கலையும், சிற்பக்கலையும் வளர்ந்து துள்ளன. சலனக் கலையாகிய ஆடற் கலையையும், நிலைக் கலையாகிய சிற்பக்கலையையும் ஒன்று படுத்தி, ஆடற்கலையின் பெருமைகளை விளக்கும் நடன அசைவுகளை அழகிய சிற் பங்களில் கலைஞர்கள் அமைத்துள்ள திறத்தைத் தில்லையிலே காணலாம். நான்கு கோபுர வாயில்களிலும், ஆயிரக் கால் மண்டபத்திலும், பாண்டிய நாயகத் திலும், சிவகாமி அம்மன் திருக்கோயிலி லும், நிருத்த சபையிலும் அமைந்துள்ள நடனச் சிற்பங்களும், பிற சிற்பங்களும் நெஞ்சையள்ளும் தன்மை படைத்தவை யாகத் திகழ்கின்றன. கோயில் மதில்களில் சிற்பங்கள் அமைக்கப்பெற்ற செய்தியை, 'சிற்பந்திகழ்தரு திண் மதிற்றில்லைச் சிற்றம் பலத்து' என்று மாணிக்கவாசகர் திருக் கோவையாரில் குறித்துள்ளதைக் கொண்டு உணரலாம்.

இறைவனை வழிபடத் திருக்கோயி லுக்கு வருவோர் அவனுடைய பெருமைகளைச் சிந்திக்க வேண்டும், பேச வேண்டும், வழிபடவேண்டும் என்பதற் காகவே திருக்கோயில்களில் புராண ஓவியங்களை எழுதியுள்ளனர். மறைப் பொருள்களைக் கதை உருவாகப் புரியும் வகையில் எழுதப்பட்டவை புராணங்கள். புராண ஓவியங்களை உடன் வருவோர்க்குக் காட்டி, உரையாடி மகிழும் முறையில் கோயில்களில் எழுத்து நிலை (ஓவிய) மண்டபங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

"இந்திரன் பூசை யிவளக லிகை யிவன்
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றியபடி இது"

என்று நப்பண்ணனூர் பாடிய பரிபாடல் 'அகலிகையின் கதை ஓவியமாக எழுதப் பட்டிருந்ததைத் தெரிவிக்கிறது. திருப்பரங் குன்றத்தில் அமைந்த மண்டபத்தினைப் பரி பாடலில், பதினெட்டாம் பாடல், 'எழு தெழில் அம்பலம்' என்று சுட்டுகிறது. நாயக்க மன்னர்கள் காலத்தில் தில்லைச் சிவகாமி அம்மையின் திருக்கோயிலின் மண்டபத்தில் அழகிய வண்ண ஓவியங்கள் வரையப்பட்டன. ஆயிரக்கால் மண்டபத் தில் இறைவன் ஆடிய வடிவங்களும், பஞ்ச பூதத் தலக்காட்சிகளும் காணப் படுகின்றன. திருமூலநாதர் கோயிலின் மேற்குத் திருச்சுற்றின் மேல்தளத்தில் அட்ட நாகபந்தப் பாடல் ஒன்று சித்திர கவியாக அமைந்துள்ளது.

"தில்லைத் திருமூலத் தேவர் அணியரவே
கல் வளைத்தே நீறுபடக் காத்தனையால்–
செல்வர்பணி
பூண்டு புகழ் கொண்மூர் பூளைப் பரனேனே
தீண்டு விடமேரு திரு"

என்பது அப்பாடலாகும். இப்பாடலை ஓவியமாக்கிய திறம் மகிழக்கூடியதே. இது பிற்கால ஓவியமாக இருக்கலாம்.

உலகில் காணப்படும் பெரும் ஆற்றல் கள் ஐந்து. இவை குவலயம், நீர், தீ, கால், நீள்வான் என்பார் திருமூலர். ஒவ்வொரு ஆற்றலுக்கும் உரிய இடத்தைத் தேர்ந் தெடுத்துப் பஞ்சபூதத் தலங்களை நம்முன் னோர் அமைத்துள்ளனர்.

"பூதங்கள் ஐந்தாகிப் புலனுவப் பொருளாகிப்
பேதங்களைத்து மாய்ப் பேதமிலாப்
பெருமையினைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரெளியை
மரகதத்தை"

என்று மாணிக்கவாசகர் பாடியது தமிழர் களின் அறிவியற்கலை அறிவுக்குச் சான்று ரும். இறைவன் ஆகாய வெளியிலும் திகழ் கிறார் என்ற உண்மையை விளக்கத் தில்லை யைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். 'அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்' என்ற தொடர் வரிகளில் கோள்கள் முதலி யவற்றின் தன்மைகளை பழந்தமிழர் உணர்ந் திருந்தார்கள் என்பது தெரியவரும். இராம லிங்க அடிகளார், 'அணுவில் அணுவா யிருந்தார் வெண்ணிலாவே' என்று கூறும் போது அணுவின் இயக்கம் பற்றியும் தெரிந்து வைத்திருந்த தன்மை புலனுகும். அணுவின் இயக்கமே நடராஜத் தத்துவம். கோயில்களில் மிகப் பெரிய பிரகாரங் கள், உட்பகுதியில் சாளரங்கள் அமைத்தல் முதலியன காற்றும், சூரிய ஒளியும் மன நலத்திற்கும் உடல் நலத்திற்கும் அவசியம் என்பதை எடுத்துக்காட்டும், இடத்தூய்மை இன்றியமையாதது என்பதை நாவுக் கரசரின் உழவாரப்பணியால் அறியலாம். கோயில் அமைப்பு, சிற்சபையின் கூரை யில் அமைந்துள்ள பொன் ஓடுகள், இணைக்கும் ஆணிகள், தூண்கள், பஞ்சாட் சரப் படிகள் ஆகியவற்றை அமைத்த விதங் களையும், அவற்றின் தத்துவங்களை எண் ணிப்பார்க்கும்போது, தமிழர்கள் அறிவி யற்கலையில் எவ்வளவு தூரம் முன்னேறி யிருந்தார்கள் என்பது தெரியவரும்.

சடையவர்மன் வீரபாண்டியன் கோயி லின் வடபகுதியில் உள்ள நூற்றுக்கால் மண்டபத்தருகில் முடிசூட்டிக் கொண் டான்; நரலோக வீரன் கல்வெட்டுகளிலி ருந்து சோழர்கள் காலத்தில் குழந்தைகட்கு எண்ணெயும், பாலும் வழங்கப்பட்டன; மூவர் தேவாரம் செப்பேடுகளில் எழுதப் பெற்றன; திருநீலகண்ட நாயனூர் புராணத் தில் அறம் கூறும் அவையாகவும், கோயில் திகழ்ந்தது; பெரியபுராணம் அரங்கேற்றம் பெற்றது ஆயிரக்கால் மண்டபம் என்ற செய்திகளால் சமுதாயப் பண்பாட்டுக் கலை யினை வளர்க்குமிடமாகத் தில்லைப் பெருங் கோயில் விளங்கி வந்துள்ளது என்பது தெரிய வரும். வரம் பெறுவதற்காக வழி பாடு என்ற நிலைமாறி வழிபாட்டினையே வரமாக வேண்டும் முறையில் 'மனித்தப் பிறவியும் வேண்டுவதேயிந்த மாநிலத்தே' என்று வேண்டுகின்றார் திருநாவுக்கரசர்.

இவ்வாறு கலைகளுக்கெல்லாம் பொருளாகிய கடவுளே வேண்டி நிற்கும் பக்தர்களுக்குச் சிற்சபை பொலியத் திருநடம் புரியும் அற்புதக் கூத்தன் அருள்பாலிக்கும் திருக்கோயிலைக் கலைகளின் சங்கமம் எனக் கூறலாம்.

பேரொளியைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே

–திருநாவுக்கரசர்

திருச்சிற்றம்பலம் □

(பாண்டிச்சேரி 10.2.87 வானொலிப்பேச்சு. பாண்டிச்சேரி அகில இந்திய வானொலி நிலையத்தாரின் அனுமதியுடன் வெளியிடப்படுகிறது. நிலையத்தாருக்கு நன்றி)

With best compliments from

Best & Crompton Engineering Ltd.,

INDUSTRIAL BUS DEPARTMENT,
39, INDUSTRIAL ESTATE, AMBATTUR,
MADRAS—600 098.



தில்லையின் தனிச்சிறப்பு

க. நடராஜரத்ன தீக்ஷிதர், B.A.,
சிதம்பரம்.

சைவ சமயத்தில் கோயில் என்றால் தில்லைக்கோயிலையே குறிக்கும். காரணம் மூர்த்தி, தலம், தீர்த்தம், ஆகிய மூன்றாலும் சிறப்புற்றுள்ளது. மூர்த்தி - நடராஜர் திரு உருவம், தலம் - சிதம்பரம், தீர்த்தம் - சிவகங்கை என்பதாகும். பஞ்சபூத தலங்களில் ஞானவெளியாகிப் பரம் பொருளாக விளங்கும் ஆகாய தலம் அளவுகடந்த சிறப்பாக இங்கு அமைந்துள்ளது. வேதங்களாலும், ஆகமங்களாலும், புராணங்களாலும், சாத்திரங்களாலும், சமயகுரவர் நால்வர்களாலும் இன்னும் விஞ்ஞானிகளாலும் இதன் பெருமை நன்கு பேசப்பட்டு வருகின்றது. இக்கோயில் பழமைக்கும், புதுமைக்கும் சிறந்து விளங்கி வருகின்றது. எல்லாவற்றுக்கும் இதயக் கோயிலாக அமைத்துள்ளது. உயிர்கள் யாவும் இரவில் நடராஜரிடத்தில் ஒடுங்கிக் காலையில் தம் இருப்பிடம் செல்கிறது என்று தலபுராணம் கூறுகிறது.

ஆனந்தத் தாண்டவம்:—

இது பொன்னம்பலத்தில் அம்மை சிவகாமி காண, உலக உயிர்கள் யாவும் மகிழ்ச்சி வெள்ளத்தில் என்றும் திளைக்கச் செய்யவும், பக்தகோடிகளின் துன்பங்களை அகற்றவும் கற்பனைக்கு எட்டாமலும், குமிண் சிரிப்பும், தாள்சடையும், சிரசில் கங்கை, எருக்கம்பூ, வலப்புறம் பிறைச் சந்திரனையும் தரித்துக்கொண்டு, முன்கைகள் ஒன்று அபய முத்திரையும், மற்றொரு கை குஞ்சிதபாதத்தைக் காட்டியும், பின் கைகளில் ஒன்று உடுக்கையும், மற்றொரு கையில் அக்னியோடும் காட்சி தருகின்றார். வலது பாதம் முயலகன் மீது ஊன்றியும், இடது பாதம் தூக்கியும் உள்ளன. அதன் சிறப்புக்கு ஈடு இணை கிடையாது. அபிஷேக காலங்களில் பார்த்தால் தெரியும். அபய கையில் விழும் தீர்த்தம் வீசிய கையிலும், குஞ்சிதபாதத்திலும் விழுந்து பூமியை அடைகிறது. இந்தச் சிறப்பு வேறு எந்த ஆலயத்திலும் காணமுடியாது. நடராஜரின் சுடர்த் திருவாசி ஓங்காரத்தைக் காட்டுகிறது. பின்புறம் உள்ள வட்டமான திருவாசி உலகம் உருண்டையானது என்னும் தத்துவத்தை விளக்குகிறது. நடராஜர் பீடத்தில் வலப்புறம் பாணுகரன் குடமுழாவும், பானுகம்பன் பொற்றாளமும் போடுகின்றனர். விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் கூட அணுவுக்கும், அண்டத்துக்கும் மூலகாரணம் நடராஜரின் திருக்கூத்துதான் என்று கூறுகின்றனர். நாம் எப்போதும் மகிழ்ச்சியோடு விளங்க நடராஜரின் ஆனந்தத் தாண்டவ தரிசனம் முக்கியமாகும். கலைகளின் தோற்ற மாகவும், அதன் தலைவனுகவும் விளங்குகின்றார். மனிதன் பேசுவதற்கு முன்னரே

ஆடத்தொடங்கிவிட்டான் என விஞ்ஞானிகள் கூறுவர். இவற்றை எல்லாம் நோக்கும்போது பழமையும், பெருமையும் வாய்ந்தது நடனக்கலை என்பது விளங்குகிறது.

தில்லையின் ஐந்து சபைகள்:–

1. சித் ஸபை, 2. களகசபை, 3. தேவ சபை, 4. ராஜ சபை, 5. நிருத்த சபை என்பதாகும்.

சித் ஸபை: (பொன்னம்பலம்):–

ஸ்ரீ நடராஜர், சிவகாமி எழுந்தருளி யுள்ள இடம். இதன் சிறப்புக்கு எல்லையே இல்லை. இங்கே உள்ள படிகள் ஐந்தும் பஞ்சாட்சரங்களாகவும், தங்க ஸ்தம்பங்கள் பத்தில் நான்கு வேதங்களாகவும், ஆறு சாத்திரங் களாகவும், வெள்ளி ஸ்தம்பங்கள் ஐந்து பஞ்ச பூதங்களாகவும், வெள்ளி பல கணிகள் தொண்ணூற்றாறு தத்துவங் களாகவும், ஸ்தம்பங்கள் பதினெட்டு புராணங்களாகவும், கைமரங்கள் அறுபத்துநான்கு கலைகளாகவும் காட்சி தருகின்றன. சித்ஸபை தங்க விமானத்தின் மேல் உள்ள 21600 ஓடுகள் மனிதனின் தினசரிவிடும் சுவாச எண்ணிக் கையையும், அதன்மேல் உள்ள 72000 ஆணிகள் நாடி நரம்புகளையும் குறிக்கின்றன. 9 தங்கக் கலசங்கள் நவசக்திகளாகவும், மேலும் பொன் ஓட்டில் "சிவாய நம" எனப் பஞ்சாட்சரம் எழுதப்பட்டு உள்ளதாகத் தில்லை உலா கூறுகின்றது.

சிதம்பரம் இரகசிய ஸ்தானம்:–

இது கோயிலுக்கு மிகச் சிறப்பாக விளங்குகின்றது. ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் வலப்பக்கத்தில் ஆகாய லிங்கம் மந்திர ரூபமாகச் சிதம்பர எந்திர சக்கரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் முன்னே தங்க வில்வ மாலைகள் தொங்கவிடப் பட்டுத் திருவாசியுடன் காணப்படு கின்றன. இங்கு ஸ்ரீ நடராஜர் சிவகாமி அரூபமாக பக்த கோடிகளுக்கு காட்சி யளித்து, மனோபீஷ்டங்களை நிறைவேற்று கின்றார். இதனை இரகசிய ஸ்தானம் என்று கூறுகிறோம். இரத்தினசபாபதி நடராஜரின் உருவமாகவும் ஸ்படிக இலிங்கம் அரூபமாகவும் வைக்கப்பட்டுத் தினசரி பூஜைகள் நடத்தப்படுகின்றன. தவிர ஸ்வர்ணகால பைரவரும் நித்ய உத்ஸவரும் காணப்படுகிறார். □



நெதிபடு மெய்யெமையன் நிறைசோலை சுற்றி
நிகழம் பலத்தின் நடுவே
அதிர்பட ஆடவல்ல அமரர்க் கொருத்தன்
எமர்சுற்ற மாய இறைவன்
மதிபடு சென்னிமன்னு சடை தாழவந்து
விடையேறி யில்பலி கொள்வான்
நதிபட வுந்திவந்து வயல்வாளை பாயும்
நறையூரின் நம்பனவனே.

தனித் தேவாரப் பாடல்



With best compliments from:

Sathiapal and Company

GLENEDEN PLACE
813, POONAMALLEE HIGH ROAD
KILPAUK ☐ MADRAS—600 010.

PHONE: 664374
POST BOX: 1046
TELEX: 041—6105
GRAMS: BUILDWEL

தத்துவம்



வீணாதரதட்சிணாமூர்த்தி
(நில்லை செப்புத்திருமேனி)

தில்லைச் சிற்றம்பலவன் திருக்கூத்தும் தமிழ் நெறி விளக்கமும்

திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர் பேராசிரியர் வித்துவான். க. வெள்ளை வாரணன்

தில்லைச் சிற்றம்பலப் பெருங்கோயில் சிவநெறிச் செல்வர்களால் 'கோயில்' எனப் போற்றப்பெறும் தனிச் சிறப்புடையதாகும். இத்தலத்தின்கண் பதஞ்சலி முனிவரும் வியாக்கிரபாத முனிவரும் தொழுது போற்ற ஞானமய மாகிய திருச்சிற்றம்பலத்திலே எல்லாம் வல்ல சிவபெருமான் சிவகாமியம்மை காண அருள்நடம் புரிந்தருள்கின்றான். மன்னுயிர்கள் உய்யப் பொன்மன்றில் நிகழும் இத்திருக்கூத்து இடையீடின்றி எக்காலத்தும் நடைபெற்று வருவதாதலின் இதனைப் போதுசெய்யாநடம் (அனவரத தாண்டவம்) என்பர் உமாபதி சிவாசாரியார். பதஞ்சலியும் புலிமுனியும் வேண்டத் தில்லையம்பலத்திலே திருக்கூத்து இயற்றத் தொடங்கியகாலம் மிகவும் தொன்மையுடையதாகும். திருவாரூர்த் திருக்கோயிலின் தொன்மையைப் போற்றும் திருநாவுக்கரசர்

"மாடமொடு மாளிகைகள் மல்குதில்லை
மணிநிகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுவதற்கு முன்னே பின்னே
அணியாரூர் கோயிலாக் கொண்டநாளே"
(6 - 34 - 3)

எனத் தில்லைச் சிற்றம்பலத்தின் தொன்மையினையும் உடன் இயைத்துப் போற்றியுள்ளமை காணலாம்.

மன்று தொழுத பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய முனிவர்களுடன் தில்லையம்பலவன் திருக்கூத்தினைக் கண்டு மகிழ்ந்தவர்களுள், சிவயோகியாகிய திருமூலநாயனாரும் ஒருவராவர். இச்செய்தி

"நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோகமாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னெடெண்மருமாமே"
(திருமந்திரம் - 67)

எனவும்

"செப்புஞ்சிவாகமம் என்னும் அப்பேர்பெற்றும்
அப்படிநல்கும் அருள்நந்தி தாள் பெற்றும்
தப்பிலாமன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகமிருந் தேனே"
(திருமந்திரம் – 74)

எனவும் வரும் திருமூலர் வாய்மொழியால் இனிது விளங்கும்.

திருமூலநாயனார் தாம் தில்லையிற் கண்ட திருக்கூத்தின் இயல்பினைப்பற்றித் திருமந்திரம் ஒன்பதாந் தந்திரத்தில்

திருக்கூத்துத் தரிசனம் என்ற பகுதியில் தெளிவாக அருளிச்செய்துள்ளமை காணலாம். இதிற்கூறப்படும் சிவானந்தக் கூத்து என்பது சிவஞானிகள் என்றும் தம் மெய்யுணர்விற் கண்டு களிக்கும் ஆனந்தத் திருக்கூத்தாகும். இதனை

''அண்ணலார் தமக்களித்த மெய்ஞ்ஞானமே ஆன
அம்பலமுந்தம்
உண்ணிறைந்த ஞானத்தெழும் ஆனந்த
ஒருபெருந் தனிக்கூத்தும்''

எனக் குறிப்பிடுவர் சேக்கிழார் நாயனார். *(பெரிய – சம்பந்தர் – 150)*

பக்குவமுடைய சிவஞானிகளுக்குச் சிறப்பு முறையில் அவர்தம் மெய்யுணர்வில் நின்று நிகழ்த்தப் பெறும் இத்திருக்கூத்தினையன்றி, உலக உயிர்கள் யாவும் நலம் பெற்றுய்தல் வேண்டும் என்னும் பொதுநிலையில் இறைவனால் நிகழ்த்தப் பெறுந் திருக்கூத்து திருமந்திரம் ஒன்பதாந் தந்திரத்திலுள்ள திருக்கூத்துத் தரிசனம் ஆகும். இது சிவானந்தக்கூத்து, சுந்தரக்கூத்து, பொற்பதிக்கூத்து, பொற்றில்லைக்கூத்து, அற்புதக்கூத்து என்னும் தலைப்புக்களில் வைத்து விரித்துக் கூறப்பெற்றுள்ளது. இறைவன் செய்தருளும் ஞானமயமான திருக்கூத்தின் இயல்பினை விரித்துரைக்கும் அற்புதக் கூத்து என்னுந் தலைப்பில் அமைந்தது,

''நெற்றிக்கு நேரே புருவத்திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்றுய்ப் பரமன் இருந்திடம்
சிற்றம்பல மென்று தேர்ந்து கொண்டேனே'' *(270)*

எனவரும் திருமந்திரமாகும். சிவயோகியாராகிய திருமூலநாயனார் சிவபெருமான் நிகழ்த்தியருளும் அற்புதத் திருக்கூத்தினைத் தாம் நேரிற்கண்டு தரிசித்த திறத்தினை இத்திருப்பாடலில் வினங்க அருளிச் செய்துள்ளார். ''நெற்றிக்கு நேரே இருபுருவங்களில் இடைவெளியாகிய நுண்ணிய ஆகாயத்திலே தியானநிலையில் அமுந்தியிருந்து கூர்ந்து நோக்குதலால் ஒளியுருவாகிய மந்திரப்பொருளாய் உயிர்கள் பற்றுதற்குரிய எல்லாப்பற்றிற்கும் பெரும்பற்றுய்ப் பரம்பொருளாகிய இறைவன் எழுந்தருளியிருக்குமிடம் நுண்ணியபேரறிவு வெளியாகிய திருச்சிற்றம்பலமே என்னும் மெய்ம்மையினை இறைவன் திருவருளால் தெளிந்து அறிந்து கொண்டேன்'' என்பது இத்திருமந்திரத்தின் பொருளாகும்.

இதன்கண் 'நெற்றிக்குநேரே புருவத்து இடைவெளி' என்றது, உடம்பினுள்ளே மூலாதாரம் முதலாக வுள்ள ஆறு ஆதாரங்களில் ஆஞ்ஞை என்னும் இடத்தினை உற்று உற்றுப் பார்த்தலாவது, ஒருவழிப்பட மனத்தினை நிறுத்தி அகக்கண்ணால் கூர்ந்து நோக்குதல். ''அகத்திற்கண்கொண்டு காண்பதே ஆனந்தம் *(திருமந்திரம் – 2944)* என அறிவுறுத்தபடி இறைவனைத் தியானிக்கும் நிலையில் நாதாந்தத்தே திருவைந்தெழுத்தாகிய மந்திர வடிவில் ஒளியுருவாய் நின்று ஆடல்புரியும் இறைவனது திருக்கூத்து நன்கு புலனாகும் என்பார், 'உற்று உற்றுப்பார்க்க ஒளிவிடும் மந்திரம்' என்றார். ஆன்மாக்கள் தமக்குப் பற்றுக் கோடாகக் கொண்டுள்ள எல்லாப்பொருள்கட்கும் ஆதாரமாகிய பெரும்பற்றுக் கோடாகத் திகழ்வோன் இறைவன் ஒருவனே எனத்தெளிவு படுத்துவார், 'பற்றுக்குப் பற்றுய்ப் பரமன் இருந்திடம்' என்றார், அப்பரடிகள் 'பெரும்பற்றப்புலியூராளை' எனத்தில்லைப் பெருமானைப் போற்றியுள்ளமையும் இக்கருத்துப்பற்றியே.

எல்லாம் வல்ல இறைவன் ஆன்மாவின் இடமாகத் திருவைந் தெழுத்தினையே தனக்குரிய திருமேனி யாகக்கொண்டு நல்ல தவச்செல்வர்கள் கண்டு இன்புற நிகழ்த்தியருளும் இவ்வற்புதத்திருக்கூத்தினைக் குருவின் அருளால் காணுதல் வேண்டும்,

இவ்வுண்மையினை,

''நற்றவத்தோர் தாம்காண நாதாந்தத் தஞ் செழுத்தால்
உற்றுருவாய் நின்றுடல் உள்ளபடி – பெற்றிட நான்
விண்ணூர் பொழில்வெண்ணெய் மெய்கண்ட நாதனே
தண்ணரு ளாலே சாற்று''

(உண்மைவிளக்கம் – 30)

என மாணக்கர் கேட்கும் வினவாகவும்,

''எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள் – சிட்டன்
சிவாயநம வென்னுந் திருவெழுத்தஞ் சாலே
அவாயமற நின்றுடுவான்''

(உண்மை விளக்கம் 31)

என ஆசிரியர் கூறும் விடையாகவும் வைத்துத் திருவதிகை மனவாசகங்கடந்தார் அறிவுறுத்தியுள்ளமை காணலாம். தில்லையிற் கூத்தப்பெருமானது திருமேனி திருவைந்தெழுத்தின் மந்திரத் திருமேனி என்பதும், இங்கு எட்டும் இரண்டும் வடிவான லிங்கம் என்றது எட்டும் இரண்டும் கூடிய பத்து என்னும் தமிழெண்ணினைக் குறிக்கும் 'ய' கரமாகிய ஆன்ம எழுத்தினைக் குறித்தது என்பதும், இறைவனது திருக்கூத்து அகத்தே ஆன்மாவின் இடமாக நிகழ்கின்ற தென்பதும் மேற்குறித்த உண்மை விளக்கச் செய்யுளால் உணர்த்தப்பெற்றுள்ளமை காணலாம்.

திருவைந்தெழுத்தின் தமிழ் வரிவடிவமாகவே தில்லைக்கூத்தப் பிரான் திருவுருவம் அமைந்துள்ளமையும், அத்திருவுருவத்தைச் சூழ்ந்துள்ள ஒளிவட்டமாகிய திருவாசி தமிழில் எழுதப்பெறும் ஓங்காரத்தின் வடிவாகத் திகழ்கின்ற தென்பதும் ஆகிய வுண்மையினை விளக்கும் முறையில் அமைந்தன.

''ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடுந் திருவடியி லேநகரம் – கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் 'வா' முடி 'ய' ப்பார்''

(32)

எனவும்

''ஓங்கார மேநற் றிருவாசி யுற்றதனில்
நீங்க வெழுத்தே நிறைசுடராம் – ஆங்காரம்
அற்றூர் அறிவர் அணியம்பலத்தான் ஆடலிது
பெற்றூர் பிறப்பற்றூர் பின்''

(34)

எனவும் வரும் உண்மை விளக்கப்பாடல் களாகும், ''மாணக்கனே நல்ல அழகிய பொன்னம்பலவன் ஆடல்புரிந்தருளும் திறத்தினைக் கேட்பாயாக (மன்னுயிர்கள்) விரும்பியடைதற்குரிய திருவடியிலே 'ந' கரமாகவும் பொருந்திய திருவயிற்றிலே 'ம' கரமாகவும், வளர்கின்ற திருத்தோள் களிலே 'சி' கரமாகவும், சொல்லப்படும் திருமுகத்திலே 'வ' கரமாகவும், திரு முடியிலே 'ய' கரமாகவும் கொண் டருளித் திருக்கூத்து ஆடியருள்கின்றான்' என்பது மேற்குறித்த முதற்பாடலின் பொருள், 'பிரணவம்' எனப்படும் தமிழ் ஓங்காரமே கூத்தப்பெருமான் திருவுருவினைச் சூழ்ந்த ஒளிவட்டமாகிய திருவாசியாகவும், அப்பிரணவத்தை விட்டு நீங்காத திருவைந்தெழுத்தே அத்திருவாசியின் ஒளிச்சுடர்களாகவும் அமைந்துள்ள திறத்தினை யான் எனது என்னும் செருக்கற்ற தவச்செல்வர்கள் உள்ளவாறு அறிவர். அம்பலவன் நிகழ்த்தியருளும் இத்திருக்கூத்தினைத் தரிசித்தவர்கள் 'பிறவிப்பிணிப்பின் நீங்கிப் பேரின்ப நிலையாகிய முத்தியினைப் பெற்றவராவர்'' என்பது இரண்டாம் பாடலின் பொருளாகும்.

இவ்வாறு தில்லைக் கூத்தனது திருவுருவ அமைப்பினைத் திருவைந் தெழுத்தின் தமிழ் வரிவடிவில் வைத்துத் தியானித்துப் போற்றும் மரபு செந்தமிழ்ச்

சித்தராகிய திருமூலநாயனார் காலமுதல் நம்நாட்டில் தொடர்ந்து நிலைபெற்று வருவதாகும். இம்மரபு,

''நவ்விரண்டு காலுமாய் தவின்ற மவ்வயிறதாய்ச்
சிவ்விரண்டு தோளதாய்ச் சிறந்தவவ்வு வாயதாய்
யவ்விரண்டு கண்ணதாய் எழுந்துதின்ற நேர்மையிற்
செவ்வை யொத்துநின்றதே சிவாய மஞ்செழுத்துமே''
(97)

என வரும் சிவவாக்கியர் பாடலாலும் நன்கு தெளியப்படும். நமசிவாய என்னுந் திருவைந்தெழுத்தே கூத்தப்பெருமான் திருவுருவாக அமைத்த திறத்தினை இங்கெடுத்துக்காட்டிய சிவவாக்கியர் பாடல் தெளிவாக விளக்கியுள்ளமை உணர்ந்து போற்றத் தகுவதாகும்.

ஒலிக்கின்ற உடுக்கையேந்திய திருக்கையிலே சிகாரமாகவும், நன்முக வீசுந் திருக்கையிலே வகாரமாகவும், அமைத்த திருக்கையிலே யகாரமாகவும், தீயினையேந்திய திருக்கையிலே நகார மாகவும், முயலகனை மிதித்தூன்றிய திருவடியிலே மகாரமாகவும் அமையச் சிவபெருமான் உலகினையியக்கி ஐந்தொழில் திருக்கூத்தியற்றி மன்னுயிர்களை உய்வித்தருளுந்திறத்தினை விளக்குவது,

''சேர்க்குந் துடிசிகரம் சிக்கெனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கிலிறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான்''
(33)

எனவரும் உண்மைவிளக்கப் பாடலாகும். சிவாயநம என்னும் திருவெழுத்து ஐந்தும் கூத்தப்பெருமானுக்கு அங்கமாகவும் (உறுப்பாகவும்) உபாங்கமாகவும் (துணையுறுப்பாகவும்) பொருந்தி அம்முதல்வன் நிகழ்த்தியருளும் ஐந்தொழில் நுட்பங்களைப் புலப்படுத்தும் முறையில் அமைந்தது இவ்வுண்மை விளக்கச் செய்யுளாகும். இது,

''மருவுந் துடியுடன் மன்னிய வீச்சும்
மருவி யமைப்பும் அனலுடன் கையும்
கருவில் மிதித்த கமலப்பதமும்
உருவில் சிவாய நமவென ஓதே''
(2798)

எனவரும் திருமந்திரத்திற்கு விளக்க வுரையாக அமைந்துள்ளமை உய்த்துணரத் தகுவதாகும். இறைவன் நிகழ்த்தியருளும் ஐந்தொழில் நுட்பங்களைச் சிகர முதலாக வுள்ள திருவைந்தெழுத்தில் வைத்து உணர்த்துவது,

''திருந்துநற் சீயென் றுதறிய கையும்
அருந்தவர் வாவென் றழைத்த மலர்க்கையும்
பொருந்தி லிமைப்பிலி யவ்வென்ற பொற்கையும்
திருந்தத் தீயாகும் திருநீல மவ்வே'
(2797)

எனவரும் திருமந்திரமாகும். சிகரமுதல் மகரமீறுக ஐந்தெழுத்தும் குறித்து விளக்கும் இத்திருமந்திரத்தில் யகரத்திற்கும் மகரத்திற்கும் இடையேயுள்ள நகரம் ஏடெழுதுவோர் விழிப்பின்மை யால் விடுபட்டுள்ளது. இதன் நான்காம் அடி 'திருந்துநத்தீயாகும் திருநீல மவ்வே' என்றிருத்தல் வேண்டும் என்பது இத் திருமந்திரப்பொருளைக் கூர்ந்துணர் வார்க்கு இனிதுபுலனாகும். முற்றினமருவு திரோதாயி ஆணவ மலப்பிணிப் பினீங்கிய நிலையில் திருந்தி அருளாய் நின்று உதவுமாதலின் திரோதான மலத்தைக் குறித்த 'ந' கரத்தினைத் 'திருந்துந' எனக்குறித்தார் திருமூலர் எனக்கொள்ளுதல் பொருத்த முடைய தாகும். 'அங்கிநகரம்' (33) என உண்மை விளக்கம் குறித்ததற்கேற்பத் ''திருந்து நத்தீயாகும்'' எனத் திருமந்திரத்திற்குப் பாடங்கொள்ளுதல் மிகவும் பொருத்த முடையதாதல் காணலாம்.

கூத்தப்பெருமான் திருவுருவில்

அமைந்த துடி, அமைத்தகை, தீயேந்தியகை, முயலகனை மிதித்து ஊன்றிய திருவடி, தூக்கிய திருவடி, என்பன படைத்தல் காத்தல், அழித்தல் மறைத்தல், அருளல் என இறைவன் செய்தருளும் ஐந்தொழில் களையும் முறையே குறிப்பனவாகும். இவ்வுண்மை,

''அரன்துடி தோற்றம், அமைத்தல் திதியாம்,
அரன்அங்கிதன்னில் அறையிற் சங்காரம்,
அரனுற் றணைப்பில் அமருந் திரோதாயி
அரனடி யென்றும் அனுக்கிரகம் என்னே
(2799)

எனவரும் திருமந்திரத்தில் வகுத்துரைக்கப் பெற்றது. இதன் மூன்றுமடியில் 'அரன் உற்ற ணைப்பு' என்றது, கூத்தப்பெருமான் தான் ஊன்றிய வலத் திருவடியினுல் முயலகனை அணைத்துள்ள செயலினை, நான்காமடியில் 'அரனடி' என்றது தூக்கிய திருவடியினை. இத்திருமந்திரத்தை அடியொற்றியமைந்தது,

''தோற்றம் துடியதனில், தோயுந் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமாய்
ஊன்றி மலர்ப்பதத்தே உற்றதிரோதம், முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு''
(35)

எனவரும் உண்மை விளக்கச் செய்யுளாகும்.

''உடுக்கை ஏத்திய திருக்கையிலே படைத்தலும், அஞ்சல் என்று அமைத்த திருக்கையிலே காத்தலும், தீயேந்திய கையிலே அழித்தலும், உறுதியாக முயலகனை ஊன்றிமிதித்த திருவடியிலே மறைத்தலும், தூக்கிய திருவடியிலே அருளுதலும் நிகழக் கூத்தப்பெருமான் ஐந்தொழிலின்பக் கூத்தினை ஆடியருள் கின்றான்'' என்பது இதன் பொருளாகும்.

தில்லைச் சிற்றம்பலவன் ஆடியருளும் இத்திருக்கூத்து, மும்மலப் பிணிப்பிற்பட்டு வருந்தும் ஆன்மாக்களின் பாசப் பிணைப்பினை அகற்றி ஆன்மாக்களைப் போரின்பக் கடலில் திளைக்கச் செய்வதாகும். இதன் இயல்பினை விரித்துக் கூறும் முறையில் அமைந்தது,

''மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலஞ்
சாய அமுக்கி அருள்தானெடுத்து – நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தையார் பரதந் தான்''
(36)

எனவரும் உண்மை விளக்கச் செய்யுளாகும். ''உடுக்கை யேந்திய திருக்கையினுலே மாயாமலத்தை உதறித் தள்ளித் தீயேந்திய திருக்கையினுலே கன்ம மலத்தைச் சுட்டெரித்து (முயலகனை மிதித்து) ஊன்றிய திருவடியினுலே ஆணவமலம் மேலிடாமல் அழுத்தித், தூக்கிய திருவடியினுலே அருளே உடம்பாக நிறுத்தி உயிர்களிடத்தில் வைத்த பேரன்பினுல் அஞ்சல் என்று அமைத்த திருக்கையினுலே தனது திருவருளாகிய இன்பக் கடலில் ஆன்மாவை ஆழ்ந்து திளைத்து இன்புறச் செய்தலே எம்முடைய தந்தையாராகிய சிவபெருமானது அருட்கூத்தின் செயல் முறையாகும்'' என்பது இப் பாடலின் பொருளாகும்.

'மோனத்தின் வரம்பாகிய ஞான நன்னிலையையுடைய சிவஞானிகள் இறைவனது திருவருளினுலே மும்மலங் களையும் நீக்கித் 'தான்' என்னும் ஆன்மபோதம் முடிந்தவிடத்திலே ஊற்றெடுத்துப்பெருகும் பேரின்ப வெள்ளத்தை முகந்துகொண்டு அருந்தி நிலைபெற்ற பேரின்பத்தில் திளைக்கச் செய்தலே பேரருளே திருமேனியாகக் கொண்ட தில்லைச் சிற்றம்பலப்பெருமான் நிகழ்த்தியருளும் திருக்கூத்தின் முறைமையாகும்' என அறிவுறுத்துவது,

''மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்
தானந்த மானிடத்தே தங்கியிடும் – ஆனந்தம்

மொண்டருந்தி நின்றாடல் காணும் அருள்
மூர்த்தியாக்
கொண்டதிரு வம்பலத்தான் கூத்து''

(37)

எனவரும் உண்மைவிளக்கச் செய்யுளாகும்.

''நாவின் உரைக்கும், மனத்தின் உணர்வுக்கும் எட்டாதநிலையில் அப்பாற் பட்டு விளங்கும் இறைவன், பெருமைமிக்க திருவைந்தெழுத்தினால் கருணையேயுருவ மாகி, பராசக்தியாகிய திருவம்பலத் தினையே தான் ஆடுதற்குரிய அரங்காகக் கொண்டு நின்று, மலைமகளாகிய சிவகாமியம்மை கண்டுகளிக்கும்படி ஆடியருளுந் திருக்கூத்தினைப் பேணிப் போற்றும் அன்பர்களுக்கு மீண்டும் பிறப்பில்லை (அத்தகையோர் மீண்டுவாரா நெறியாகிய வீடு பேற்றினைப்பெற்று இன்புறுவர்) எனத் தில்லைத் திருக்கூத்துத் தெரிசனத்தின் முடிந்தபயனை எடுத்துரைப்பது,

''பரையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்
உரையுணர்வுக்கெட்டா ஒருவன் – வரைமகள் தான்
காணும்படியே கருணையுருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு''

(38)

எனவரும் உண்மைவிளக்கச் செய்யுளாகும் நிலமுதல் நாதம் ஈறாகிய முப்பத்தாறு தத்து வங்களையும் கடந்த நிலையில் தத்துவங் கடந்த தனிமுதற்பொருளாகிய இறைவன் ஆடியருளும் அற்புதத் திருக்கூத்தினை 'நாதாந்த நாடகம்' எனப்போற்றுவர் உண்மைவிளக்க நூலாசிரியராகிய திருவதிகை மனவாசகங்கடந்தார்.

எல்லாம் வல்ல சிவபெருமான் தேவதாருவனத்தில் தவம்புரிந்த நாற்பத் தெண்ணாயிரவராகிய முனிவர்களின் செருக்கினை அடக்குதல்வேண்டி அவர் களால் தாங்கவொண்ணாத கடுங்கூத்தினை முதற்கண் நிகழ்த்திப்பின் அவர்களுடைய பிழையினைப் பொறுத்து ஆட்கொண் டருளும் நோக்குடன் ஆடியருளிய ஆனந்தத் திருக்கூத்தின் இயல்பும், அதனைநேரிற் கண்டுமகிழ்ந்த திருமாலின் ஆனந்த நிலையையுணர்ந்த ஆதிசேடன் அதனைக் காண விரும்பித் தவம்புரிந்து பதஞ்சலி முனிவராகத் தில்லைக்குவந்து வியாக்கிரபாத முனிவருடன் இறைவனை வழிபட்டிருந்தமையும், அம்முனிவர் இருவருக்கும் அருள்செய்தல்வேண்டி எல்லாம்வல்ல சிவபெருமான் உலக புருடனது நெஞ்சத்தாமரையாகத் திகழும் தில்லைப் பதியிலே நுண்ணிய அறிவு வெளியாகிய திருச்சிற்றம்பலத்திலே உலகமீன்ற தாயாகிய சிவகாமியம்மையார் கண்டுகளிக்க ஐந்தொழிலின்பத் திருக் கூத்தினை இடைவிடாது ஆடியருளுந் திறமும், கோயிற்புராணத்திலே விரித் துரைக்கப்பெற்றன. இவ்வாறு திருவளர் திருச்சிற்றம்பலத்திலே ஆடல்புரிந்தருளும் கூத்தப்பெருமானது திருவுருவம் தமிழ்வரி வடிவில் உள்ள திருவைந்தெழுத்தாகவும் அவ்விறைவனது திருமேனியைச் சூழ்ந்து விளங்கும் ஒளிவட்டமாகிய திருவாசி திருவைந்தெழுத்தினையுள்ளடக்கிய தமிழ் ஓங்காரமாகவும் திகழும் உண்மையினை விரித்துரைக்கும் முறையில் திருமூலர் அருளிய திருமந்திரம் திருவதிகை மனவாசகங்கடந்தார் இயற்றிய உண்மை விளக்கம் ஆகிய தமிழ் நூல்கள் தரும் தமிழ்நெறி விளக்கம் இங்கு மனங்கொளத்தகுவதாகும். □

ஆடிய காலும் அதிற்சிலம் போசையும்
பாடிய பாட்டும் பயிலான நட்டமுங்
கூடிய கோலங் குருபரன் கொண்டாடத்
தேடியு னேகண்டு தீர்ந்தற்ற வாறே திருமந்திரம்

கச்சியப்பர் காட்டும்சமயம்

டாக்டர் ந. இராமலிங்கம்
தமிழ்ப் பேராசிரியர் யாதவர் கல்லூரி. மதுரை–14.

பெரியபுராணத்தைப் போல் சிவபெருமானது திருவருட் சிறப்பையும், சிவனடியாரது அன்புத் திறத்தையும் கூறுவதும், தேவாரம், திருவாசகம் போல் பக்தி விளைவிக்குந் தோத்திரப் பாக்கள் நிரம்பப் பெற்றதும், சரித்திர நூலாகிய சிவஞான சித்தியாரைப்போல சைவசமய உண்மையை நாட்டிப் புறச் சமயங்களைக் கண்டிப்பதும் கந்தபுராணத்தின் இயல்பாகும். ''தொண்டர் தம் பெருமையைக் கூறும் திருத்தொண்டர் புராணம் பெரிய புராணம் ஆயிற்று. இறைவன் பெருமையைக் கூறும் கந்த புராணமோ புராண நன்னூயகம் ஆயிற்று'' என்றும், ''கந்தபுராணம் போல் அவ்வளவு சிறப்பாகப் பிறிதொரு புராணம் சைவ சித்தாந்தம் கூறுவதில்லை. முறைப்படுத்தப் பட்ட சைவ சித்தாந்தக் கருத்துக்களையே இப்புராணம் ஆங்காங்கே புகலுகின்றது'' என்றும், ''இப்புராணத்தைத் திருமுறை வரிசையிலும் கச்சியப்பப் பெருமானைக் குரவர்கள் வரிசையிலும் வைத்துப் போற்றுவது ஆன்றோர் வழக்கம்'' என்றும் அறிஞர்கள் கருத்துரைப்பர். கந்தபுராணப் பண்பாட்டில் தோய்ந்தவர்கள் கூறும் இக் கருத்துக்கள் கந்தபுராணம் சைவக் காப்பியம் என்பதனைப் புலப்படுத்தும். சைவநெறிக்கு மாறின்றி முருகனை முழுமுதற் கடவுளாக உயர்த்துவது கச்சியப்பரின் நோக்கமாக இருந்தாலும், சைவ சமயத்தின் தலைமைக் கடவுளாம் சிவனோடு முருகனை வேறுபாடின்றி (அபேதமாக) ஒப்பக்காட்டுதலால் கந்த புராணம் சைவ சமயத்தையே வலியுறுத்த எழுந்த நூல் என்று துணிந்து கூறலாம்.

உணர்ச்சிக் கூறுகளும், செயற் கூறுகளும் அறிவுக்கூறுகளும் ஒன்றுபட்டு இயங்கும்போதுதான் நிறைவான சமயத்தைக் காண முடியும். உணர்ச்சிக் கூறும் பக்தியும், செயற்கூறும் வழிபாடும், அறிவுக்கூறும் மெய்ப்பொருளும் (தத்துவம்) இணைந்து திகழும் சமயம் தான் மக்களைச் சரியான பாதையில் அழைத்துச் செல்ல முடியும் என்பதனை நன்கு உணர்ந்த கச்சியப்பர் இம்மூன்று கூறுகளையும் தம் படைப்பினுள் அழகுற அமைத்துள்ள பாங்கினைக் காண்போம்.

1. பக்தி உணர்வு:

சமயக்கருத்துக்களை அறிவின் துணைக் கொண்டு விளக்குவன சாத்திரங்கள்; உணர்வின் துணைகொண்டு உணர்த்துவன பக்தி நூல்கள். ஆண்டவனை அறிவின் துணையால் ஆராய்தலைக்காட்டிலும், அன்பின் துணையால் அனுபவிப்பதிலும் ஆன்றோர்கள் பெரிதும் ஈடுபட்டிருந்த காரணத்தால் தமிழில் பக்தி நூல்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. 'பக்தி நெறி அறிவித்துச் சிவமாக்கித் தன்னை ஆட்கொண்டதாக மாணிக்கவாசகர் பாடுதலால் இறைவனை எய்தும் வழிகளில்

பக்தி நெறியும் ஒன்றென உணர்ன்றேம். கச்சியப்பரின் இறை அனுபவம் (பக்தி உணர்வு) நூல்முழுவதும் இழைந் தோடினும் சில எடுத்துக்காட்டுகளால் நாம் அவற்றை மதிப்பிடலாம்.

இறைவனை அனுபவிக்கும் நிலைகள் பல. அவனுடைய திருநாமங்களைச் சொல்லியோ, திருக்கல்யாண குணங்களைக் கூறியோ, வடிவழகைப் பகர்ந்தோ, அனுபவிக்கலாம். இதனை "பகவத் அனுபவம்" என்பர். கந்த புராணக் கதைமாந்தர் கூற்றுக்களில் இத்தகைய அனுபவம் தோன்றுமாறு முருகனைப் பலவிடங்களில் கவிஞர் துதித்துள்ளார். முருகனது இளம்பருவத் திருவிளையாடலை உணராது அவனுடன் எதிர்த்துப் போரிட்டு மடிந்தார்கள் இந்திரன் முதலியோர். மீண்டும் முருகன் அருளால் அவர்கள் உயிர்த்தெழுந்து,

"கந்தநம ஐந்துமுகர் தந்தமுரு கேசநம கங்கை
யுமைந்தன்
மைந்தநம பன்னிரு புயத்தநம நீபமலர் மாலை
புனையுத்
தந்தைநம ஆறுமுக வாதிநம சோதிநம தற்ப
ரமதாம்
எந்தைநம என்றுமினை யோய்நம குமார நம"
(1: 14: 82)

என்று தலையன்புடன் தொழுது அருச் சித்ததாகப் பாடுவதன் மூலம் முருகனது திருப்பெயர்களை அடுக்கிக்கூறிப் பக்தி உணர்வினை மிகுவிப்பார் ஆசிரியர். படிப்போர்க்குப் பக்தி உணர்வு தோன்றும் வண்ணம் முருகனது திருப்பெயர்களில் ஏற்ற அடைமொழிகளை இயைத்துப் பாடுதல் ஆசிரியரின் இயல்பாகும். "கற்போர் கதைச்சிறப்பினுல் திருவருளை மறக்க நேருங்கால், உறங்குபவனை எழுப்புதல் போல் மெய் பொடிப்ப மயிர் சிலிர்ப்பக் கண்ணீர்சொரிவிக்கும் இனிய அடைமொழிகள் சார்ந்த குமாரக் கடவுளது திரு நாமங்கள் அடிக்கடி ஒலித்து நிற்கும்" எனக் கந்தபுராணம் குறித்து அறிஞர் நுவலும் கருத்து இவண் நினையத்தகும்.

நவவீரரின் தலைவனும் வீரவாகுவைத் தொடக்கம் முதல் இறுதி வரை பக்திக் கோட்டில் மாறாது செயற்படுவோனாக ஆசிரியர் படைத்துக்காட்டியுள்ளார். பகைவர்முன் நிற்கும் பொழுதும், பகைவர் மீது படைக்கலன்களை ஏவும் பொழுதும், பகைவரின் மாயவலையிலிருந்து மீண்ட பொழுதும் முருகனை வாழ்த்த மறவாத வாய் உடையவனாகவும், ஒரு நாள் கூட முருகனைப் பிரிந்து வாழமுடியாத வனாகவும் வீரவாகு காட்சி தருகின்றான். சூரபன்மன் மகனும் பானுகோபனைக் கொன்று, வெற்றி பெற்று வந்த அவ்வீரவாகுவைப் பாராட்டிய முருகன் "வேண்டுவ தொன்றனை விரைந்து கேண்மதி நல்குதும்" என்ற பொழுது,

"கோல நீடிய நிதிபதி வாழ்க்கையுங் குறியேன்
மேலை இந்திரன் அரசினைக் கனவிலும் வெஃகேன்
மால யன்பெறு பதத்தையும் பொருளென மதியேன்
சால நின்பதத் தன்பையே வேண்டுவன் தமியேன்"
(4: 11 : 154)

என உரைப்பான் வீரவாகு. குபேரனது செல்வத்தையும், இந்திரபதவியையும் வேண்டிப் பெருமல் முருகன் திருவடியின் பால் பக்தி ஒன்றையே விரும்பிப் பெற்றதாகப் பாடிக் "கூடும் அன்பினில் கும்பிடலே யன்றிவிடும் வேண்டா விறலினராக வீரவாகுவைப் படைத்துக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

கதை நிகழ்வுகளில் கந்தனை வருணிக்கும் பொழுதும் அவனைக் காணும் பேறு பெற்றவர்களைக் சுட்டும் பொழுதும் கச்சியப்பரிடம் பக்தியுணர்வே மேலோங்கி நிற்பதைக் காண்கிறோம். போர்க்களத்தில் முருகனைக் கண்ட சூரன் நிலையினை,

"முண்டக மலர்ந்த தன்ன மூவிரு முகமும் கண்ணும்

குண்டல நிரையுஞ் செம்பொன் மவுலியுங்
கோல மார்பும்
எண்டரு கரமீராறும் இலங்கெழிற் படைகள்
யாவுந்
தண்டையுஞ் சிலம்பும் ஆர்க்குஞ் சரணமுந்
தெரியக் கண்டான்''
(4: 4: 235)

எனப் புகன்று இக் காட்சியைக் கண்ணுற்றதால், 'அவன் தீவினை நீங்கி உய்ந்ததாகவும், அதனால் இனி அவன் துஞ்சில் என் தொலைவுற்றால் என்' (4: 4: 237) என்றும், 'ஆ! இவன் தவத்திற்கன்றி அறத்திற்கும் முதல்வன் அன்றே' (4: 4: 238) என்றும் 'இன்னமும் முனிவர் தேவர் யாவரும் இனையன் என்று உணர முடியாத குமரனை இவன் காணும் பேறுற்றதால் அன்னவன் தவத்தின் பேற்றை ஆரறிந் துரைக்கற் பாலார்' (4: 4: 239) என்றும் வியந்து பாராட்டுவர். 'பதகன்' (1: 20: 59) 'தீயவன்' (2: 18: 10) போன்ற வகைச் சொற்களால் பகைமாந்தரைச் சுட்டும் பண்புடைய ஆசிரியர் இத் தருணத்தில் சூரபன்மனைத் 'தவத்தின் முதல்வன்' 'அறத்தின் முதல்வன்' (4: 4: 238) எனச் சுட்டித் தன் பக்தி அனுபவத்தைப் புலப்படுத்துவர். தனக்குக் கிடைக்காத ஒரு பொருள் தன் குழந்தைகட்குக் கிட்டும்போது மகிழ்ச்சி யடையும் தாயைப் போல் முருகற் காட்சியில் ஈடுபட ஏங்கித்தவித்த கவிஞர் தமது காப்பியத்தில் தாம் படைத்த கதை மாந்தர்க்கு அக் காட்சி கிட்டியதுணர்ந்து உளம் நெகிழும் போக்காகவே இதனைக் கொள்ளல் வேண்டும்.

2. வழிபாட்டுநெறிகள்

உடம்பு நயப்படுதற்கு உணவும், மனம் நயப்படுதற்குக் கல்வியும் தேவைப் படுதல் போல ஆன்மா நயப்படுதலுக்குக் கடவுள் வழிபாடு இன்றியமையாதது. ''வாலறிவன் நற்றாள் தொழுதலே கல்வியின் பயனாகும்'' என்று வள்ளுவரும்,

''ஆக்கை யாற்பயனென்—அரன்
கோயில் வலம் வந்து
பூக்கை யால்அட்டிப் போற்றியென் னுதலிவ்
ஆக்கை யாற்பயனென்''

என்று திருநாவுக்கரசரும் வழிபாட்டின் இன்றியமையாமையினை வற்புறுத்துவர். பக்தி என்பது இறைவன் மீது அடியவர்கள் கொள்ளும் ஆழமான அன்பை அடித்தள மாகக் கொண்டு திகழ்தலால் அதைக் கட்டுப்பாட்டிற்குள் வைக்காவிடில் தடம் புரண்டு போய்விடும் என்பதனை நன்குணர்ந்த நாயன்மார்கள் கோயில் வழிபாட்டுடன் இணைத்தே தமிழகத்தில் பக்திப் பயிரினை வளர்த்து வந்தனர். மன உணர்வாம் பக்தியுடன் நடைமுறைச் செயல்களாம் வழிபாட்டுக்கூறுகளும் (கிரியை) இணையும் பொழுதுதான் சமயம் முழுமை நோக்கி வளர முடியும் என்பதனை இதனால் உணர்கின்றோம். முருகனைத் தேவர்களும், சிவனை முருகனும் சிறப்போடு பூசனை புரிந்து நிகழ்ச்சிகளைப் பாடும் பகுதிகள் இறை வழிபாட்டு நெறிமுறைகளை விரிவாக விளக்க ஆசிரியர்க்கு வாய்ப்பளித்துள்ளன.

அ) முருகனை வழிபடும் முறை

தாரகனைத் தடிந்த பின்னர்த் தேவகிரி அடைந்த திருமால் முதலியோர் அறுமுகனிடம் இசைவு பெற்று அவனை நன்றி முகத்தான் வழிபடுவர். குடத்தில் வான் கங்கை நீரினை முகந்து முருகக் கடவுளை அவனது திருப்பெயராம் ஆறெழுத்து மந்திரத்தை ஒலித்துக் கொண்டு திருமஞ்சனமாட்டிய பின்னர், அவன் அணிந்திருந்த பொற்றுகிலை நீக்கி, புதிய நொய்ய பஃறுகில் சாத்தி, வேறேரு இருக்கையில் எழுந்தருளச் செய்தனர் என்றும் சடாட்சரத்தை நவின்ற வண்ணம் கற்பக மலர் மாலை அணிவித்துச் சந்தனக் குழம்பும் பச்சைக் கருப்பூரமும் அப்பி, நாவியும் நானமும் பூசி, முருகன் திருமேனியை மணிக்கலனால் அழகுறுத் தினர் என்றும் சந்தனம் அகில், கருப்பூரம்,

குந்துருக்கம், குங்கிலியம் ஆகியவை களாலியன்ற நறும்புகையினையும் செந்நிறத் தீபங்களையும் படுமணி ஒலிக்க ஆறுமுகங்கட்கும் சுற்றிப் பணிந்தேத்தினர் என்றும் பாடி (1: 21: 24 – 30) ஆகம வழிபாட்டு நெறியினை விளக்குவர் ஆசிரியர்.

முருகக் கடவுளின் வரலாறு, எழுந்தருளச் செய்யும் முறை (பிரதிட்டை முறை) விழாக்கள், பூசனை, நோன்புகள் முதலியவற்றை விளக்கமாகக் கூறும் நூல் குமார தந்திரமாகும். இவ்வாகமநூல் தென்னகத்தில் தோன்றிய வடமொழி நூல் என்று அறிஞர் கருதுவர். முருக வழிபாடு கார்த்திகேய வழிபாட்டுடன் இணைந்து தென்னகத்தே மிகவும் சிறப்புற்றுத் திகழ்தலால் முருக வழிபாட்டு முறைகளை விளக்கும் நூல் தென்னகத்தில் தோன்ற வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. கச்சியப்பர் காலத்தில் குமாரதந்திரத்தில் கூறியவாறு முருக பெருமானை வழிபடும் வழக்கம் தமிழகத்தில் நிலவியது. சூரனைத் தடிந்த பின்னர்த் திருச்செந்தூர் சென்று தங்கியிருந்த ஆறுமுகனை பிரமன் முதலியோர், 'குமார தந்திர நெறிப்படி கும்பம், அக்கினி, உருவத்திருமேனி (விம்பம்) என்னும் மூவகை இடத்திலும் புந்தி மகிழப் புரிந்து பூசனை புரிந்தனர்' (4: 16: 24) எனச் சுட்டித் தம் காலத்து நிலவிய குமாரதந்திர வழிபாட்டு நெறியினை உரியவிடத்தில் போற்றியுள்ளார் கச்சியப்பர். முருகவழிபாட்டின் கூறுகளாகிய வெள்ளிக் கிழமை நோன்பு, அவற்றை நோற்கும் திறம், நோற்றோர் பெறும் பயன் முதலியன வசிட்டர் வாயிலாகவும் விநாயகர் வாயிலாகவும் கந்த விரதப் படலத்தில் (6:23) விரிவாக ஆசிரியரால் விளக்கப் பெற்றுள்ளன.

ஆ) சிவனை வழிபடும் முறை

தேவர்கள் முருகனைக் குமார தந்திர நெறியில் வழிபட்டதைப் போன்று கந்தப் பெருமான் சிவபெருமானை சிவாகம நெறியில் பூசனை செய்த முறை விளக்கமாக இப்புராணத்தில் இயம்பப் பட்டுள்ளது. திருச்சேய்ஞலூரில் 'சைவ தந்திர' (சிவாகமம்) விதிப்படி சிவனுக்குத் திருவுருவம் நிறுவி, ஆவின் ஓரைந்தும் (பஞ்சகவ்வியும்) அமுதமும் (பஞ்சாமிருதம்) கொண்டு திருமுழுக்காட்டி, வெண்ணிற ஆடையும், சாந்தும், மலரும் அணிவித்து, அட்டில் தொழில் வல்லவர்களால் திருந்திய, நிரலமை கருனையும் புழுக்கலையும், சோற்றையும் பொற் கலத்தில் ஏந்தி, மந்திரம் கூறி அருத்தி, மணப்பொருட்களுடன் தாம்பூலம் வைத்துத் தூபத்தாலும் தீபத்தாலும் மும்முறை சுற்றி முருகன் வணங்கித் துதித்ததாகப் புகன்று (1: 24: 67–70) சைவாகம வழிபாட்டு முறைகளை விளக்குவர்.

சூரனைத் தடிந்த பின்னர்த் திருச் செந்தூர் வந்திறுத்த முருகன் தாணுவில் சிவனை வருவித்து, ஆமயம் முதலிய ஐந்து கந்திகள், மாமலர், மஞ்சனம், அமிர்தம், வான்துகில், நாமணி விளக்கு, தூபம், கண்ணுடி சாமரை முதலியவற்றால் 'இறைவனூல்' (சிவகாமம்) தொடர்பு நாடி வழிபடல் புரிந்ததாகப் பாடுவர் (4: 16: 32–33). வள்ளியம்மையுடன் தணிகை மலை சென்ற முருகன் சிவ சாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்திரு சாதாக்கியம் கர்ம சாதாக்கியம் என ஐவகையுருவில் ஒன்றதாம் கன்ம சாதாக்கிய பீடலிங்க வடிவில் சிவ பெருமானை ஆகம நெறியில் வழிபட்டுச் சிவனருள் பெற்றமையினைச் சுருக்கியுரைப்பர் (6: 24: 230). உலகியலில் மனிதர்கள் இயற்றும் வழிபாட்டு நெறி முறைகளை விவரிக்கக் கந்தபுராணக் கதையமைப்பு இடம் கொடாவிடினும் கச்சியப்பர் தெய்வங்களின் செயல்களாக அவற்றைப் படைத்து அமைதியுறுவது குறிப்பிடத்தக்கது.

3. மெய்ப்பொருள் (தத்துவம்) கருத்துக்கள்

பல்லவர்காலத்து நூலாகிய உதீசி தேவர் இயற்றிய திருக்கலம்பகம் சமண புராணக் கதைகளுக்குப் புது விளக்கங்கள் தந்து அவற்றை அருகக் கடவுளோடு இணைத்துள்ளதால் பல்லவர் காலத் திலேயே புராணக்கதைகளுக்கு உட் பொருள் காணும் மரபு அரும்பியிருத்தலை உணர்கின்றோம். சிவனது தோற்றப் பொலிவிற்கும் அருட் செயல்களுக்கும் உட்பொருள் காண வேண்டும் என்ற தமிழ் மக்களின் முயற்சி நாயன்மார் காலத்திலேயே தொடங்கியுள்ளமை சுந்தரர் தேவாரத்தால் புலப்படுகின்றது. உயிர்களின் அழுக்காம் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் அழித்தருளுபவன் சிவன் என்ற மெய்ப் பொருள் கருத்து விளக்கம் பெறுதற்கே அவன் முப்புரம் எரித்தனன் என்ற புராணக்கதை எழுந்தது என்பது திருமூலரின் கருத்தாகும். எனவே மெய்ப் பொருட் கருத்துக்களின் விளக்கங் களாகவே புராணங்களை ஆன்றோர் கொண்டுள்ளமை புலனாகும். பல்லவர் காலத்தில் உணர்ச்சிப் பேராறுகவும் பக்தி இயக்கமாகவும் வளர்ந்து வந்த சைவசமயம் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர் ஒழுங்குறுத்தப் பெற்று அறிவியல் அடிப் படையில் வளரத் தொடங்கிற்று. வரன் முறைப்படுத்தப் பெற்ற சைவசித்தாந்தக் கொள்கைகளை விளக்கும் சாத்திர நூல்கள் தோன்றிச் சைவத்தை மெய்ப்பொருள் நிலைக்கு உயர்த்தும் பணியைச் செய்தன. கந்தபுராணம் இத்தகு காலச் சூழலில் தோன்றியதால் கச்சியப்பர் மெய்ப் பொருட்கருத்துக்களைக் கதைமாந்தர் வாயிலாகவும் கவிக்கூற்றுகவும் கதை அமைப்பாலும் திறம்பட வெளிப்படுத்தி யுள்ளார்.

அ) கதைமாந்தர் வாயிலாக மெய்ப் பொருட்கருத்துக்கள்

சைவ சித்தாந்தம் முப்பொருள் உண்மைகளை வலியுறுத்தும் சமயக்கோட் பாடாகும். இறை (பதி), உயிர் (பசு), தளை (பாசம்) என்பனவே அம்முப்பொருள்கள். உயிர் தன் அழுக்காம் தளைகளினின்றும் விடுபட்டு இறைவன் திருவடியில் இரண்டறக் கலத்தலே சைவ சித்தாந்தத்தின் முடிந்த முடிபாகும். கச்சியப்பர் இத்தகு சாத்திரக் கருத்துக்களை கதை மாந்தர் வாயிலாகப் பல்வேறு இடங்களில் விவரித்துள்ளார்.

காசிபர் தம் மக்களாம் சூரபன்மன் முதலியோருக்கு முதன் முதலாகச் சைவ மெய்ப்பொருள் கருத்துக்களை எடுத் துரைத்தலை உற்பத்தி காண்டத்திலுள்ள 'காசிபர் உபதேசப் படலத்தில்' காணலாம். "சான்றவர் ஆய்ந்திடத்தக்க பொருள்கள் இறை, உயிர், தளை என்பன. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்றும் ஐந்தொழி லியற்றும் சிவனே பதியாவர். மூவகைத் தளைகளிலும் மூழ்கி உழலும் உயிர்கள் எண்ணிலாதன. அவை என்றுமே உள்ளன (அநாதி). அவை தாம் செய்த நல்வினை, தீவினைகளினாலே இடையறாது பிறத்திறந்து உழலும் தன்மைய. அவ்வுயிர்கள் நிலம், நீர், நெருப்பு, காற்று, விண் என்னும் ஐந்திடத்திலும் மக்களாகவும், விலங் காகவும் பறவையாகவும், தாவரமாகவும், நீர் வாழ்வனவாகவும் தோன்றி அழியும் இயல்பின. இத்தகைய ஒருயிர் தருமத்தைப் போற்றிடின் அதன் வழியாக அன்பு, அருள், தவம், ஞானம் இவைகள் கைகூடப் பெற்றுச் சிவனைச் சேர்ந்து மூவகைத் தளையும், பிறவியும் நீங்கிப் பேரின்பத்தை நுகர்ந்த வண்ணமிருக்கும் (2: 4: 3–14)" என்ற காசிபர் உரை சைவ மெய்ப்பொருட் கருத்துக்களின் பிழிவாகப் பொலிகின்றது. தட்ச காண்டத்தில் அமைந்துள்ள 'உமை கயிலை நீங்கு படலத்தில்' இறைவனும் பதியின் இயல்புகளைச் சிவன் உமைக்குக் கூறுமுகமாக ஐந்து விருத்தத் தொகைகளால் விளக்கமுறப்பாடுவர். இறைவன் ஐவகை சக்திகளை

உண்டாக்குதல், அருவுருவம் தாங்குதல், இருப்பத்தைந்து தேவல உருவமாக இருத்தல், மாயையினை முதலாகக் கொண்டு முப்பத்தாறு தத்துவங்களும் தோன்றுமாறு செய்தல், ஐந்தொழில் புரிதல் முதலிய செய்திகள் அப்பகுதியில் சுட்டப்பெறும் *(6: 5: 3–7)*. பதியின் இலக்கணத்தைப் பதியின் வாயிலாகவே வெளிப்படுத்துவது கருதற்குரியது. மகேந்திரச் சிறையில் வாடும் சயந்தன் சிவனைக் குறித்துப் புலம்புங்கால்,

"பாசங்கொண் டாவி பலவும் பிணிப்போலும்
நேசங்கொண் டாங்கதனை நீக்கியருள் செய்வோலும்
ஈசன் சிவனென் றியம்புமறை நீயிழைத்த
ஆசொன்றும் இத்தீமை ஆர்தவிர்க்க வல்லாரே"
(3: 9: 61)

எனக் கேட்கும் பகுதி தளைகளைக் கொண்டு உயிர்களைப் பிணிப்பதும், பின் கருணையால் அத்தளைகளை நீக்கி அருள் தெய்தலும் ஆகிய பதியின் இயல்பினைச் சுட்டும். சூரபன்மனது சொல்லொணாத் துயருக்கு ஆட்பட்டுழலும் இந்திரனிடம், 'இறைவன் உயிர்கட்குத் தரும் இன்னலும் அவன் அருளின் பாற்பட்டதே. பெற்றோர் தம் மகவு நோயுறின் பிறரைக் கொண்டு அறுத்தல், கீறுதல் முதலிய துன்பங்களைச் செய்தும் அந்நோயினைத் தீர்ப்பர். அது அன்பேயன்றி வன்கணன்று. அது போல நம் பிறவிப்பிணி தீர்க்கவே சிவன் சூரபன்மனைக் கொண்டு அலக்கண் செய்விக்கிறார்' *(1: 3: 44–45)* என்று பிரமன் ஆறுதல் கூறுவான்.

"தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள்
தஞ்சொல் ஆற்றின்
வந்திடா விடினு றுக்கி வளாரினல் அடித்துத் தீய
பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடில் பரிவே யாகும்
இந்தநீர் முறைமை யன்றே ஈசனர் முனிவும் என்னும்"

என்ற சிஞானசித்தியார் கருத்தும் இவண் ஒப்பிட்டுவத்தற்குரியது.

ஆ) கவிக்கூற்றில் மெய்ப்பொருட் கருத்துகள்

காவியங்களில் கருத்து விளக்கத் திற்குப் பயன்படுத்தும் உவமைகள் கவிஞர் தம் உள்ளுணர்வைப் புலப்படுத்தும். சைவ நீதியே உலகில் விளங்க வேண்டும் என்னும் வேட்கையுடைய கச்சியப்பர் தம் உவமைப் பூக்களிலும் மெய்ப்பொருள் மணங்கமழச் செய்வார்.

அகத்தியரின் குடத்திலிருந்த காவிரியினை விநாயகர் காக்கை உருவெடுத்துக் கவிழ்த்து நிலவுலகில் படரச் செய்த நிகழ்ச்சியை,

"விடலருந் தளையின் நீக்கி வியனெறிப் படுத்த லோடும்
அடிகளின் அருளாற் செல்லும் ஆருயிர் போன்ற தன்றே"
(2: 29: 1)

எனப் பாடித் தளை நீங்கியவுடன் ஞானசிரியன் திருவருளால் இறைவனோடு இரண்டறக் கலக்கும் உயிரின் (பசு) இயல்பினைச் சுட்டுவர். முருகனது வரவால் பாலை நிலம் வெம்மை நீங்கித் தன்மை பெறுதற்குச் சிவனருள் பெற்று ஆன்மாக்கள் பசுகரணங்கெட்டுச் சிவகரணமாக மாறியதை ஒப்பிட்டுரைப்பர் *(1: 25: 22)*. உயிர்கட்குப் பிறவிப்பிணி நீக்கி முத்தியளிக்கும் ஆற்றல் சிவன் ஒருவனுக்கே உண்டென்பதும், பிற தேவர் கட்கு இல்லையென்பதும் சைவ சமயத்தின் உட்கிடக்கை. இதனை அறியாத சிலர் பிற கடவுளரையும் வீடுபேற்றின் பொருட்டு வழிபட்டு வறிதே உழலுவர். இக்கருத்தைப் பாலை நிலத்தின் வெம்மைக்காற்றுது அங்கம் நொந்துழலும் கலைமான்கள் விண்ணில் பறக்கும் பருந்தின் நிழலை நாடி ஓடுதலுக்கு ஒப்பிட்டு மகிழ்வர் *(1: 5: 210)*.

இ) கதை அமைப்பில் மெய்ப்பொருட் கருத்துக்கள்

கந்தபுராணக் கதையமைப்பிற்கும்,

கதை நிகழ்ச்சிகளுக்கும், தத்துவவிளக்கம் காணும் முயற்சி பல அறிஞர்களால் மேற் கொள்ளப்பட்டு வந்தமையினை நாம் அறிவோம். சென்ற நூற்றாண்டில் "கந்த புராணம் நவநீதம்" என்னும் நூலை இயற்றிய இலங்கையைச் சார்ந்த செந்தி நாதையரும், "ஸ்ரீ சுப்பிரமணிய தத் துவம்" என்னும் நூல் இயற்றிய ந. சுப்பிரமணிய ஐயரும், "31–வதாகிய ஸ்ரீ சுப்பிரமணிய வியாசமும், குருசிஷ்ய சம்பவ வரலாற்று வியாசமும்" என்னும் நூல் எழுதிய பாம்பன் சுவாமிகளும் "முருகன்" என்னும் ஆராய்ச்சி நூல் எழுதிய மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகரும் குறிப்பிடத் தக்கவர்கள். இறைவனை மறந்து தக்கன் வேள்விக்குச் சென்ற பாவத்தால் நந்தியின் சாபம் பெற்ற இந்திரன் முதலிய தேவர்கள் சூரபன்மன் முதலிய மூவரால் பல நாட்கள் அலைக் கழிக்கப்பட்டு வருந்தி மீண்டும் இறைவனை நினைத்து வழிபாடாற்றி முருகன் துணையால் சூரபன்மன் முதலியோரைத் தொலைவு செய்து இறையருள் பெற்று இன்புற்றிருந்திருந்தனர் என்ற கந்தபுரா ணக் கதையமைப்பின் வாயிலாக இறைவன் ஆணை வழி நில்லாது பாவங்களைச் செய்த உயிர்கள் அவ்வினைப் பயனை நுகர்ந்தே கழிவு தேடிக் கொள்ள வேண்டித் துன்புற்ற பொழுது அன்பால் வழிபாடாற்றி இறைவன் துணையால் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்முல அழுக்கிலிருந்து விடுதலை பெற்று இறையருளில் இன்புற்றுத் திகழும் என்ற சைவ மெய்ப்பொருட் கருத்தினை உணர்த்தியுள்ளார். சூரபன்மன் ஆணவத் தின் உருவென்றும், சிங்கமுகன் கன்மத்தின் வடிவென்றும், தாரகன் மாயை யின் தோற்றமென்றும் அவைகளை அழித்து விடாது அடக்கி அருளுபவர் பரம் பொருளாகிய முருகப்பெருமான் என்றும் உணர்கின்றோம். மும் மலங்கள் என்றும் உள்ள தென்பது சைவ சமயக் கோட்பாடு.

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி"

என்பது திருமந்திரம். ஆகையால் அம் மூவரும் அழியாத நிலையில் கதை நிகழ்ச் சிகள் அமைந்துள்ளன என்பது கருதற் பாலது.

சைவ சமயமே உய்யும் நெறி

சமயத்தை மிகுதியும் வலியுறுத்தும் காப்பியங்களில் பிற சமயக் கொள்கைகள் காரண காரியத்துடன் மறுக்கப்படுதல் இயல்பு. இதற்குத் தோற்றுவாய் செய்த பெருமை மணிமேகலை ஆசிரியராகிய சீத்தலைச்சாத்தனருக்கே உரியது. சைவசித்தாந்த நெறியே மக்கள் கடைப் பிடித்தொழுக வேண்டிய நெறி யென்பதும், பிற நெறிகள் அத்துணைச் சிறப்பிலவென்பதும் சுச்சியப்பரின் உட்கிடக்கையாதலால் உலோகாயதம், மாயாவாதம், மீமாம்சம், வைணவம் ஆகிய சமயங்களில் இழிவை முறையே இந்திரபுரிப் படலம் (5: 5). சுக்கிரன் உபதேசப் படலம் (3: 10), ததீசியுத்திரப் படலம் (6: 12), திருக்குற்றாலப்படலம் (2: 28) என்னுமிவற்றில் பெரும்பாலும் செயலிளை விளக்கியுள்ளார். ஏகான்ம வாதத்தை வற்புறுத்தும் வேதாந்தக் கொள்கை உயிர்கட்கு ஆக்கம் தாராது, என்னும் கருத்தை சூரபன்மன் வாழ்வின் மூலம் வடித்துக்காட்டுவர். தந்தையாம் காசிபரிடம் சைவ சித்தாந்த பாடம் பயின்று வந்த சூரபன்மனைத் தடுத்து நிறுத்திச் சுக்கிரரிடம் வேதாந்த பாடங் கேட்க ஆற்றுப்படுத்தினள் மாயை.

"உற்றத்தோர் மேன்மை நாடி உன்னோடு பிரம
மென்றே
தெற்றெனத் தெளிதி மற்றத் திசைமுகன்
முதலோர் தம்மைப்
பற்றலை மேலோ ரென்று பணியலை இமையோர்
உங்கள்
செற்றலர் அவரை வல்லே செறுமதி திருவுஞ்
சிந்தி"
(2: 10: 47)

என ஆசிரியராம் சுக்கிரர் உரைத்த நெறிகளில் வழுவாது நின்று செய

லாற்றியவன் சூரபன்மன். முருகனது முழுமுதற்றன்மையினைத் தனக்கு விளக்கிய சிங்கமுகனிடம்,

"கடந்த கர்ந்துழி அவற்றிடை வெளிக்கக னத்ததோ
டடைந்த வாறுபோல் யாக்கையின் பேதகம் அனைத்தும்
முடிந்த காலையில் தொன்மைபோல் அபேதமாம் மொழிக்குந்
தொடர்ந்த சிந்தைக்கும் நாடொணு தமர்பெருஞ் சோதி"

"பிரம மேயிவர் அல்லவர் இவரெனப் பேதித்
திருமை யாகவே கொள்ளலை யாக்கையே வேறு
பரம மாகிய உயிரெல்லாம் ஒன்றுபல் பணியும்
பொருள தாகியே ஒருமையாய் முடிந்தவா போல"

(3: 21: 146: 147)

எனச் சூரபன்மன் மறுக்கும் பகுதிகள் சுக்கிரரின் ஏகான்மவாத நெறியில் ஊன்றித் தீளைக்கும் அவன் உளப் போக்கினை நன்குணர்த்தும். வேதாந்தப் பள்ளியில் பயிலும் நன்மாணாக்கனவும் அக்கொள்கையினைத் தன் வாழ்க்கையில் அழுந்தப் பின்பற்று வோனகவும் சூரபன்மனைப் படைத்துக்காட்டி, இறுதியில் உறுதிபெற அக்கொள்கை அவனுக்குத் துணைபுரியவில்லை என்பதனையும் கதைப்போக்கால் உணர்த்திச் சைவ சித்தாந்த நெறியே பிற நெறிகளிலும் விழுப்பமானது என்பதனைக் கச்சியப்பர் கந்தபுராணம் வாயிலாக நமக்குக் காட்டியுள்ளார். □

சீராரும் சதுர்மறையும் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியும் தொழுதேத்த
வாராரும் கடல்புடைசூழ் வையமெலாம் ஈடேற
வேராரு மணிமன்றுள் எடுத்ததிரு வடிபோற்றி

—சேக்கிழார் நாயனார் புராணம்

விழைவாமிரு வினைவேரெனும் இருளோடவு மெமதுட்
பழைதாமருண் மயமாகிய பதிஞானமும் உறவும்
இழைநேரிடை மடவாளுமை இசைபாடவும் ஆடும்
அழகார்தரும் அதிருங்கழல் பெருமான் அல ரடியே.

—அருணகிரி புராணம்



திலலை – ஒரு தனியூர்

நடன காசிநாதன்

உடையார் திருச்சிற்றம்பலமுடையார் கோயில் கொண்டுள்ள பெரும் பற்றப் புலியூர் சில தனிச் சிறப்புகளைக் கொண்டு திகழ்ந்திருப்பதால் தனியூர்களுக்குள் ஒன்றாக விளங்கியிருக்கிறது. பிற்காலச் சோழர் காலத்தில் பல ஊர்கள் தனியூர்களாக விளக்கித் தங்கள் நிர்வாகப் பொறுப்புக்களைத் தாங்களே நிர்வகித்து வந்திருக்கின்றன. கல்வெட்டுக்களின் மூலம் தொண்டை மண்டலத்தில் பல தனியூர்களைப் பறைசாற்றும் கல்வெட்டைத் தன்னகத்தே கொண்டுள்ள உத்தரமேரூர் ஒரு தனியூர் என்று கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. அதே போன்று கல்விச் சாலைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கிய எண்ணாயிரமும், திருமுக்கூடலும் தனியூர் என்ற சிறப்பைப் பெற்றிருந்தன. சோழ நாட்டிலும் பல தனியூர்கள் இருந்திருக்கின்றன.

பிற இடங்களில் உள்ள தனியூர்கள் அனைத்தும் குறிப்பாகப் பிரமதேயங்களாக அதாவது பிராமணர்களது இருப்பிடங்களாக–பிராமணர்கள் நிர்வாகம் செய்யும் ஊர்களாகக் காணப்படுகின்றன. ஆனால் பெரும்பற்றப் புலியூரான தனியூர் பிரமதேயமாகக் குறிக்கப்படவில்லை. அது மட்டுமல்லாமல் இங்குக்குடிகொண்டுள்ள திருச்சிற்றம்பலமுடையானை மூல புருஷராகக் கொண்டு விளங்கும் கோயில் நிர்வாகிகளான மூலப் பருஷையர்தான் அனைத்து நிர்வாகப் பொறுப்புகளையும் பெற்றிருந்திருக்கின்றனர். இத்தனியூரில் மட்டும் ஆலய நிர்வாகிகள், ஆட்சியின் அதிகாரங்களைப் பெற்று நிர்வாகத்தைச் செம்மையுற நடத்தியிருக்கிறார்கள். அந்த வகையிலும் இந்த ஊர் ஒரு தனிச் சிறப்பைப் பெற்றுத் திகழ்ந்திருக்கிறது. இக்கோயில் மிகப் பெரும் கோயிலாக, அதிகச் சொத்துக்களுக்கு அதிபதியாகத் திகழ்ந்திருக்கிறது, என்பதை இக்கோயிலின் நிர்வாகிகளாக "உடையார் திருச்சிற்றம்பலமுடையார் கோயில் ஸ்ரீ மாஹேஸ்வர கண்காணி செய்வார்களும், ஸ்ரீகார்யஞ்செய்வார்களும், சாமுதாயஞ் செய்வார்களும், கோயில் நாயகம் செய்வார்களும், கணக்கரும் கண்டு விடு தந்தது" என்று வரும் கல்வெட்டு வரிகளினால் நன்கு அறியலாம். இவ்வூரில் மூன்று கணக்கர்கள் இருந்திருக்கின்றனர்.[1] ஒருவன் ஊர்க் கணக்கு மற்றிருவர் நிலக் கணக்கு. இருவர் நிலக் கணக்காக இருந்திருக்கிறார்கள் என்பதிலிருந்தே எந்த அளவுக்கு நிலம் இக்கோயிலுக்குச் சொந்தமுடையதாக இருந்திருக்க வேண்டுமென்பதும், எவ்வளவு வருவாய் வரப்பெற்றிருக்கும் என்பதும், எத்துணை விழாக்களும் வழிபாடுகளும் நடைபெற்றிருக்கும் என்பதையும் ஊகித்தறியலாம். உதாரணத்துக்கு ஒன்றைக் கூறலாம். கோப்பெருஞ்சிங்கன் காலத்தில்[2] திருச்சிற்றம்பலமுடையார் கோயிலுக்கும் திருக்காமக்கோட்டமுடைய நாச்சியார் கோயிலுக்கும் பால் அமுது செய்தருளவும், பாற்போனகப் பாலுக்கும், வெண்ணை உருக்கு நெய்க்கும், உடலாகப் பசு ஆயிரத்து நானூற்றுத் தொண்ணூற்றாறு;

1) S.I.I. Vol. VIII No. 43
2) S.I.I. Vol. VIII No. 54

உரு ஒன்றுக்கு இராசகேசரியால் உழக்காக அளந்து வருகிற பால் இருகலனே இரு தூணிக் குறுணி எழுநாழி உரி ஒரு நாளைக்கு வழங்கப்பெற்றிருக்கிறது. 'குலோத்துங்க சோழன் கோசாலை' என்று மாட்டுத்தொட்டில் ஒன்று இருந்திருக்கிறது. ஒரு நாளைக்குப் பால் மட்டுமே இந்த அளவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்றால் மற்ற பொருட்கள் எந்த அளவுக்கு வழங்கப் பெற்றிருக்கும் என்பதை நம்மால் ஊகித் தறிய முடியும்.

இத்தனியூரைச்சுற்றி நான்கு பக்கத்திலும் நான்கு பேரிளமை நாடுகள் இருந்தன என்பது தெரியவருகிறது. பெரும்பற்றப் புலியூரின் கிழக்குப் பக்கம் கீழ் படாகை கிடாரங்கொண்ட சோழப் பேர் இளமை நாடும்,[3] தெற்குப்பக்கம் தென்பிடாகை பூலோக மாணிக்க வள நாடும்,[4] மேற்குப் பக்கம் மேல் பிடாகை கங்கைகொண்ட சோழப் பேரிளமை நாடும்[5] வடக்குப் பக்கம் வட பிடாகை மதுராந்தப் பேரிளமை நாடும்[6] கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பிடாகையும் சேர்ந்த சில ஊர்களும் தெரியவருகின்றன. அவ்வூர்களில் சில இன்றும் அதே பெயர்களோடு அழைக்கப்பட்டு வருகின்றன. பெரும்பற்றப் புலியூரின் பிடாகைகளாக அதாவது சிற்றூர்களாக ஏறக்குறைய பதினொன்று ஊர்கள் குறிப்பிடப் படுகின்றன.[7] மேலே குறிக்கப்பெற்ற பேரிளமை நாடுகளின் பெயர்களைப் பார்க்கையில் முதலாம் இராஜேந்திரனின் பட்டப் பெயர்களைத் தாங்கியவைகளாகக் காணப்படுகின்றன. இக்கோயிலில் காணப்பெறும் கல்வெட்டுக்களில் மிகப் பழமையானது முதலாம் இராஜேந்திரன் காலத்தியதே ஆகும். ஆதலால் முதலாம் இராஜேந்திரன் காலத்தில் இக்கோயில் தனித்த புகழ் எய்தி விளங்கியிருக்கிறது என்று ஊகித்தால் அது தவருகாது என்று கொள்ளலாம். மேலும் சோழர்களின் குல தெய்வமாக விளங்கிய திருச்சிற்றம்பல முடையான், கங்கைகொண்ட சோழபுரத்தில் மாளிகையை அமைத்துக் கொண்டு முதலாம் இராஜேந்திரன் கங்கை கொண்ட சோழபுரத்தில் தங்கிய நாளிலிருந்து பெரும் சிறப்பை எய்தத் தொடங்கிவிட்டது என்று நாம் கருதலாம்.

பெரும்பற்றப்புலியூர் எந்த ஒரு நாட்டுக்கும் அடங்கப்பெற்றதாக இல்லாத காரணத்தாலும் அது தன்னுட்சி அதிகாரம் பெற்று விளங்கியதாலுமே தனியூர் என்ற பெயர் பெற்றிருக்கும் என்று கருதப் படுகிறது.[8]

நாடு ஆற்ற வேண்டிய பணிகளை யெல்லாம் தனியூரிலுள்ள சபாவோ அல்லது கோயிலின் மூலபருஷையோ ஆற்றுவதாலும் இவ்வூர்களுக்குத் தனியூர் என்ற தனிச் சிறப்புத் தரப்பட்டிருக்கலாம் என்று எண்ணுகின்றனர். நாட்டு ஆளுகையிலிருந்து இவ்வூர்கள் விடுதலையடைந்தவை என்பதைக் குறிப்பதற்குத்தான் சில தனியூர்கள் "தன்கறு" குறிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. கறு என்பதும் கற்றம் என்பதும் ஒன்றுதான் என்று தெரிகிறது. உத்தரமேரூர்ச் சதுர் வேதிமங்கலம் காலியூர்க் கோட்டத்தின் 'தன்கறு' என்றும்[9], 'தனியூர்' என்றும்[10] கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. இதிலிருந்தே தனியூர், 'தன்கறுக' விளங்கியிருக்கிறது என்பதை அறியலாம்.

பெரும்பற்றப் புலியூர் இராசாதி இராச வளநாட்டிலுள்ள தனியூர் என்பது

---

3) S.I.I. Vol. XII No. 171
4) Ibid. Vol. VIII No. 52
5) Ibid No. 50
6) Ibid No. 709
7) ARE 1913-14, Part II, Para 13.
8) Subbarayalu, Y. Political Geography of the Chola country pp 92-94
9) S.I.I. Vol. VI, No. 285, 368
10) Ibid. No. 340

மற்றொரு ஊர்க் கல்வெட்டினால் அறியப் படுகிறது.[11] பெரும்பாலான கல்வெட்டுக் களில் பெரும்பற்றப்புலியூர் "தனியூர் பெரும்பற்றப் புலியூர்" என்றே குறிக்கப் படுகிறது. ஆதலால் இவ்வூர் எல்லாருக்கும் நன்கு அறிமுகமான ஒரு ஊராகவும் சுயாட்சி பெற்று விளங்கிய ஊராகவும் விளங்கியிருக்கிறது என்று கருதலாம்.

இவ்வூரின் ஆட்சிப் பொறுப்பை மூல பருஷையாரே கவனித்து வந்ததால் எல்லா வித ஆவணங்களையும் கோயிலில் உள்ள ஒரு பண்டாரத்திலேயே வைத்திருக் கின்றனர். வேறு எங்கும் காணமுடியாத ஒரு பெயர் இக்கோயில் பண்டாரத்துக்குக் காணப்படுகிறது. அதாவது "திருக்கை ஒட்டிப் பண்டாரம்" என்று அழைக்கப் படுகிறது. மூலப்பருஷையார் தத்த நியோக மும், பிறர் வழங்கிய நியாகமும் (ஆணை), பிராமணமும் இப்பண்டாரத்திலே ஒடுக்கி வைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இக்கோயில் நிமந்தங்களுக்கு அளிக்கப் பெறும் நெல் இக்கோயில் பெரும் பண்டாரத்தில் அளிக்கப்பட்டதாகக் கல் வெட்டுகள் கூறுகின்றன.

ஆகவே மேற்கூறப்பெற்ற பல தனிச் சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கியதால்தான் இதற்குத் "தனியூர்" என்ற தன்னாட்சி அதிகாரம் வழங்கப் பட்டது, போலும். □

11) S.I.I. Vol. XII No. 153.

மாணிக்கக் கூத்தனை வண்திலைக் கூத்தனைப்
பூணுற்ற மன்றுள் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை
ஆணிப்பொற் கூத்தனை யாருரைப் பாரே.

—திருமந்திரம்







உம்பரிற் கூத்தனை உத்தமக் கூத்தனைச்
செம்பொன் திருமன்றுள் சேவகக் கூத்தனைச்
சம்பந்தக் கூத்தனைத் தற்புரக் கூத்தனை
இன்புறநாடி என் அன்பில்வைத் தேனே.

—திருமந்திரம்

சதரத்னசங்கிரகமும் பௌஷ்கரவிருத்தியும்

பெ. திருஞானசம்பந்தன், M.A.L.T.,
சென்னை.

ஸ்ரீ உமாபதி சிவாசாரியார் சைவசந்தானாசாரியார்களுள் நான்காமவர். தில்லையில் தில்லைவாழந்தணர்கள் மரபில் தோன்றியவர். இவர் 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த வராகக் கருதப்படுகிறார். சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் எட்டு இவரால் அருளப் பெற்றன. இவ்வெட்டு தமிழ் சாத்திரநூல்களல்லாமல் வடமொழியில் சதரத்னசங்கிரகம் என்ற ஆகமத் தொகுப்பு நூலையும், பௌஷ்கராகமத்து விருத்தையும் பாதஞ்ஜல சூத்திரம் நடராஜ ஸஹஸ்ரநாமம், நடராஜத்வனி மந்த்ர ஸ்தலம், குஞ்சிதாங்கிரிஸ்தவம், யந்த்ர-விதானஷோகை, ஆகியவற்றையும் ஸ்ரீருத்ரம், சமகம், வாயுசம்ஹிதை முதலானவற்றிற்கு வியாக்கியானங்களையும் எழுதியிருப்பதைக் கொண்டு வடமொழி, தமிழ்மொழி ஆகிய இரண்டிலும் புலமை உடையவர் என்பது தெள்ளதின் விளங்கும். இவர் திருக்காளாஞ்சேரியில் எழுந்தருளியிருந்து சிவஞானத்தைப் பலருக்கு உபதேசித்து வந்த ஸ்ரீ மறைஞானசம்பந்தருடைய மாணாக்கராவர். வேத சிவாகம நெறியில் நின்று கிரியாபூசையையும் ஞானபூசையையும் விடாது செய்து வந்து தில்லைச் சிற்றம்பல முடையாரை இடையறாது சேவித்து வந்தார்.

அவர் ஆக்கிய வடமொழி நூல்களுள் சதரத்னசங்கிரகம் என்பது முதன்மையானது. ரத்னங்கள் போன்ற நூறு (சதம்) சிவாகம வாக்கியங்களைத் தொகுத்து செய்யப்பட்ட நூலாதலின் சதரத்தனசங்கிரகம் எனப்பட்டது. இந்நூறு வாக்கியங்களும் பதினேரு ஆகமங்களிலிருந்து தேர்ந்து எடுக்கப்பட்டவை. அவையாவன மிருகேந்திரம், தேவியாமளம், சுவாயம்புவம், மதங்கம், கிரணம், பராக்கியம், நிசுவாச காரிகை, விசுவசாரோத்தரம், சர்வஞானேத்தரம், காலோத்தரம், தேவிகாலோத்தரம் என்பன.

ரத்னம் போன்ற இவ்வாகம வாக்கியங்களைப் பட்டை தீட்டி ஒளிவீசும்படி செய்துள்ளார். இவற்றிற்கு உரை எழுதியவர் ஒருவர். அவர் யார் என்பது குறிப்பிடப்படவில்லை.

பதி, பசு, பாசம் சிவ ஆகம வாக்கியங்களைக் கொண்டு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. பதியைப்பற்றிக் கூறும் போது, விசுவசாரோத்தராகமத்திலிருந்து ஒரு வாக்கியம் தரப்படுகிறது. அது தருக்க ரீதியாகப் பதிப்பொருள் ஒன்று உண்டு, என்பதை நிறுவுகிறது. சடப்பொருளாகிற மாயையை இயக்குவதற்கு ஒரு சேதனப் பொருள் வேண்டும். உலகியலிலே நாம் பார்க்கிறோம். ஒரு மோட்டாரை இயக்குவதற்கு உயர்ப்பொருளாகிற மனிதன் தேவைப் படுகிறான். அப்படி சடமாகிற மாயையில் விளைந்த இப்பிரபஞ்சத்தை ஆக்கவும் காக்கவும் அழிக்கவும் ஒருவன் வேண்டும். பிரபஞ்சமாகிற மாபெரும்

சடப்பொருளை ஆக்குகிறவன் அதை முழுவதுமாக அறிந்திருக்கக்கூடிய பேரறிவு பெற்றவனுகவும், பேராற்றல் பெற்றவனுகவும், அனைத்தையும் வியாபித்து நிற்பவனுகவும், என்றும் உளனுகவும் இருத்தல் வேண்டும். அத்தகையவனே பதியாவான் என்று நிறுவப்படுகிறது. இப்படி சூரியனும் கிரணங்களும் போல சிவமும் சத்தியும் பிரிப்பின்றி இருப்பன.

உயிரின் இலக்கணம் பராக்கியாகமத் திலிருந்து எடுக்கப்பட்டது. உயிரானது உடலின் வேறுபட்டது. அழிவற்றது. வியாபகத்தன்மை உடையது. பலவாயிருப்பது. மும்மலத்தோடு கூடியது. அறிவுடையது, தன்னினைப்பயனைத் தானே நுகரும் தன்மையது. செயலாற்றல் உடையது. சிற்றறிவுடையது. தனக்கு மேலாக ஒரு தலைவனை (ஈசுவரனை) உடையது. சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் பான்மையை இங்கே காண்கிறேம்.

பின் மும்மலங்களைப் பற்றிக்கூறும் பகுதிகள் வருகின்றன. விரிவஞ்சி விடுக் கின்றேம்.

சைவசித்தாந்தத்தில் முத்தி சாதனம் ஞானம் என்று சொல்லப்பட்ட போதிலும், ஞானத்தோடு தீட்சைக்கும் சுவாயம்பு போன்ற ஆகமங்களில் உரிய இடம் தரப் பட்டிருப்பதைப் பார்க்கிறேம். சகலாகம பண்டிதரான அருணந்தி சிவாசாரியரும் "அழிவிலாக்கிரியையினுல் சத்திமத்தா னுதல் அத்துவாசுத்தி பண்ணி மலமகற்றி ஒழி விலாச்சிவம் பிரகாசித்ததற்கு ஞானம் உதிப்பித்து உற்பவம் துடைப்பான் அரன்..." என்றும் உமாபதிசிவம் சிவப் பிரகாசத்தில் "கிரியையென மருவும் அவை யாவும் ஞானம் கிடைத்ததற்கு நிமித்தம்" எனக் கூறியிருப்பதையும் காண்கிறேம். அத்வைதம் முத்தி சாதன மாக ஞானம் ஒன்றையே குறிக்க, சித் தாந்தம் தீட்சைக்கும் உரிய இடத்தைக் கொடுத்திருப்பதைப் பார்க்கிறேம். சர்வ ஞானேத்தரம், நிசுவாசம், ஞானதிலகம், பௌஷ்கரம் முதலானவை தீட்சையை வலியுறுத்திப் பேசுகின்றன, என்பதை உரையாசிரியர் எடுத்துக்காட்டுகின்றூர். தீக்ஷை என்ற சொல் 'தா' 'க்ஷி' என்ற இரு பகுதி களால் ஆனது, "தா" என்பது சிவமாம் தன்மையைத் தருவது என்பதையும், "க்ஷி" என்பது மலநாசம் செய்வன என்பதையும் உணர்த்துவன. கேவலர், சகலர், அமலர் முதலான உயிர்வகைகள், சக்திநிபாதம், மாயை முதலான தத்துவங்கள், ஆணவமும், அதன் சக்திகளும், ஜீவன் முக்தி, விதேகமுக்தி முதலானவைகளும் தக்க ஆகமவாக்கியங்களைக் கொண்டு விளக்கப்படுகின்றன.

மூல சிவாகமங்கள் இருபத்தெட்டுக் கும் மேலாக உபாகமங்கள் சில உண்டு. அவற்றுள் பௌஷ்கரம், மிருகேந்திரம் ஆகியவை அடங்கும். காமிகாகமும் பௌஷ்கர உபாகமும் சிவாசாரியார்களி டையே தென்னகத்தில் மிகுதியாகப் பயிலப் பட்டு வருகின்றன.

சைவசித்தாந்திகள் பொதுவாக மூப் பொருளை (பதி, பசு, பாசம்) ஏற்றுக் கொண்டுள்ளனர். திருமூலர் இதையே குறிப்பிடுகிறார். சிலர் பொருள்கள் 4 என்றும் 5 என்றும் 6 என்றும் கூறுவர். இவையெல்லாம் மேற்கூறிய மூன்றினுள் அடங்கும். பௌஷ்கரம் பதி, குண்டலினி, மாயை, பசு, பாசம், காரகன் என்று ஆறு பதார்த்தங்களைக் கூறும். பதியுடன் பிரிப் பற இருக்கும் குண்டலினி எனப்படும் சிவ சக்தி சிருட்டிமுதலாய காரியங்களில் பயன்படுவதால் தனி பதார்த்தமாகக் கருதப் படுகிறது. பாசம் என்று சித்தாந் திகள் சொல்வதில் தத்துவங்களும் மாயை யும் அடங்கும். இருப்பினும் மாயை உலகத் தோற்றத்திற்கு மூலப் பொருளால் (உபாதான காரணமாய்) இருப்பதாலும் தத்துவங்கள் (பாசம்) உயிர் வளர்ச்சிக்குத் துணையாக இருப்பதாலும் இவ்விரண்டை யும் தனித்தனிப் பொருளாகப் பௌஷ்கரம் கொள்கிறது. காரகன் என்பது பல்வேறு

புவனங்களில் உயிர்கள் வினைப்பயனை நுகர்ந்து முத்தியின்பத்தைத் தரும் வாயிலாகச் சிவமாம் தன்மையை வெளிபடுத்துகையான செயலைப் புரிவதால் (க்ருகாரகன் செய்வதற்கருத்தா) அப் பெயர் பெற்றது. கடவுள்தான் வினைப் பயனை உயிருக்கு ஊட்டமுடியும். ஜடமாகையால் வினையே ஒருவனுக்கு இதன் பயனை அளிக்க இயலாது என்பதைக் காந்தத்தை ஒரு மனிதன் இரும்பின் அருகில் கொண்டு சென்றுலொழிய தானே அதைச் சென்ற டையாது என்ற எடுத்துக்காட்டின் வாயிலாகப் பௌஷ்கரம் விளக்குகிறது. அணுக்களே உலகத்தோற்றத்திற்கு அடிப்படை என்ற தருக்க நூலார் கருத்தை மறுத்துப் பிரகிருதிமாயையே அடிப்படைக் காரணம் என்பது நிறுவப்படுகிறது. பௌத்தர்களின் கணபங்கவாதம்—ஒரு பொருள் ஒரு கணமே நின்று நிலவுகிறது. -நிராகரிக்கப் பட்டுப் பரிணமவாதம் ஏற்றுக்கொள்ளப் படுகிறது. சித்தாந்திகள் கூறும் சத்காரிய வாதம்-காரியம் காரணத்தில் உளது-என்ற சித்தாந்தக் கருத்தும் பேசப்படுகிறது.

வேதத்தையொப்ப ஆகமத்தை எப்படிப்பிரமாணமாக ஏற்றுக் கொள்வது என்ற வாதத்திற்கு மறு மொழியாக ஆகமமும் வேதத்தைப் போன்றே சிவனுல் சொல்லப்பட்டது என்பதைத்தவிர, மற்றெரு முக்கியமான காரணம் சொல்லப் படுகிறது. வேதத்தில் சில பூஜைகள் சொல்லப்படுகின்றன. அவை எவ்வாறு செய்யப் பட வேண்டும் என்று அங்கே சொல்லப்பட வில்லை. அப்பூஜைகள் செய்யப்பட வேண்டியிருப்பதால் வேதத்தைப் போல் ஆகமும் பிரமாண நூலே என்ற காரணம் திறம்படக் காட்டப்பட்டுள்ளது.

பௌஷ்கர விருத்தி என்ற பாஷியத்தில் உமாபதிசிவம் "பதி" இயலில் கூறியுள்ள ஒரு சில கருத்துக்களை இனிக் காண்போம்.

பகவான், ஈசுவரன் ஆகிய பெயர்கள் சிவபெருமானுக்கே உரியன என்பதை உமாபதி சிவம் தெளிவுபடுத்துகிறார். "பகவான்" என்ற சொல் "பகம்" என்பதன் அடியாகப்பிறந்தது. "பதத்தை" உடையவன் என்பது பகவான் "பகம்" என்பதால் உணர்த்தப்படும் அறுவகைக் குணங்களை உடையவன் என்பது பொருள். அவை யாவன, அனைத்து ஐசுவரியம் வீரியம், புகழ், லக்ஷ்மி, ஞானம், வைராக்கியம் என்பவை. வேறு தேவர்களுக்கு பகவான் என்ற சொல் வழங்கப் படுகிறதென்றுல் அதற்குப் பொருள் வேறு. தோற்றம், அழித்தல், உயிர்களின் போக்குவரவு, வித்தை, அவித்தை இவற்றை அறிகின்றவர் பகவான் என்று இங்கே பொருள் கொள்ள வேண்டும்.

சிவபெருமான் புலித்தோலை இடுப்பில் உடுத்தியிருப்பதும் கொடிய ஆலகால விஷத்தைக் கழுத்தில் தேக்கி வைத்திருப்பதும் முப்புரங்களையும் காமனையும் எரித்த நெற்றிக்கண்ணைக் கொண்டிருப்பதும், நித்திய எதிரிகளாகிற சிங்கமும் மானும் அவரிடம் சேவிப்பதும் ஆகிய காரணங்களால் ஐசுவரியம், வீரியம், புகழ் முதலாக முன்னர்ச் சொல்லப்பட்ட குணங்களை உடைய பகவான் சிவனே என்பதை அவர் தோற்றமே காட்டுகிறது, என்று உமாபதி சிவம் விளக்குகிறார்.

சிவபெருமான் அருள்கொண்டு ஐந் தொழில் புரிகின்ற சதாசிவருக்குத்தான் வயம், போகம், அதிகாரம் உண்டு, சதாசிவருக்கு அதிட்டானமாகச் சிவபெருமான் இருப்பதால் சிவபெருமானுக்கு அவை உபசாரமாகக் (இலக்கணையாக) கொள்ளப் படுதல் வேண்டும், என்பதை விளக்க வடமொழியில் அட்டப்பிரகரணம் என்ற எட்டு நூல்களில் ஒன்றுன ரத்தினத் திரயத்தை மேற்கோளாகக் காட்டுகிறார். பிறிதொரு இடத்தில் மாவினீ விஜயாகமத்தை மேற்கோளாகக் காட்டுகிறார். சிவ ஞானம் பசு ஞானத்திடமிருந்து எப்படி வேறுபடுகிறது, என்பதைச் சுவேதாசுவதர உபநிடத்தில் "அவ்யயம்....." என்று தொடங்கும் மந்திரத்தைச் சுட்டிக் காட்டி விளக்குகிறார்.

சக்திக்கும் சக்தியோடு கூடிய சிவனுக்கும் உள்ள சம்பந்தம் பேதமல்ல, அபேதமல்ல தாதாத்மியம் என்பதை மதங்கபாரமேசுவராகமத்தை மேற்கோள் காட்டி நிறுவுகிறார். பதிபோகம் என்பதில் அத்வைதிகள் ஆன்கின்ற இத்யாஸத்திற்கு இடமில்லை. பரிபாலத்கத்வம் (காத்தற் செயல்) என்கிற உபாதியால் பதிக்குப் போகம் சொல்லப் படுகிறது, என்பதை விருத்தியில் விளக்குகிறார். சிவன் செயற் படுகிறான் என்றால் அவனோடு தாதாத்மிய மாய் விளங்கும் சக்தி செயற்படுகிறது, என்பது பொருள். சிவன் சிவனேஎன்று தான் இருக்கிறான்.

இவ்வாறுகத் தருக்காீதியாகவும், வேத சிவாகமங்கள், பிற முன்னோர் நூல் கள் ஆகியவற்றை மேற்கோள் காட்டுவதன் மூலம் சப்தபிரமாணத்தை மேற் கொள்ளும், அநுபவ வாயிலாகவும் பல கித்தாந்தக் கருத்துக்களை உமாபதி சிவம் விளக்கிச் செல்வதை அவருடைய விருத்தி யில் ஒரு சில பகுதியை ஆய்ந்ததின் மூலம் இங்கே காட்டினோம். □



சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றெழில் போற்றிதின்(று)
ஆதி யாரருள் ஆதலின் அஞ்செழுத்(து)
ஓதி ஏறினர் உய்ய உலகெலாம்.

—பெரியபுராணம்

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

—பெரியபுராணம்



சாத்திர நூல்களும் தில்லையும்

டாக்டர் கோமதி சூரியமூர்த்தி,
விரிவுரையாளர் மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

முன்னுரை:–

தமிழகத்தின் தொன்மைச் சமயமாகிய சிவநெறியை விளக்கும் நூல்கள் தோத்திரங்கள் எனவும் சாத்திரங்கள் எனவும் இருவகைப்படும். எந்நாட்டவருக்கும் இறைவனை தென்னாடுடைய சிவனைப் போற்றி வழிபடும் நூல்கள் தோத்திரங்களாகும். இறை, உயிர், உலகு பற்றித் தெளிவுறுத்தும் இலக்கண நெறியமைந்துள்ள நூல்கள் சாத்திரங்கள் எனப்படும். மெய்கண்ட சாத்திரங்கள் எனப் போற்றப்படுபவை பின்வரும் பதினான்கு நூல்களாகும். அவை:–

1. திருவுந்தியார்
2. திருக்களிற்றுப்படியார்
3. சிவஞானபோதம்
4. சிவஞானசித்தியார்
5. இருபா இருபஃது
6. உண்மை விளக்கம்
7. சிவப்பிரகாசம்
8. திருவருட்பயன்
9. வினாவெண்பா
10. போற்றிப்பஃறொடை
11. கொடிக்கவி
12. நெஞ்சுவிடு தூது
13. உண்மைநெறி விளக்கம்
14. சங்கற்ப நிராகரணம்

இவற்றுள் தில்லையோடு தொடர்புடைய சாத்திர நூல்களையும், சாத்திர நூல்கள் சிலவற்றில் தில்லையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள சில செய்திகளையும் இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது.

திருவுந்தியார்:–

அண்டங்கள் முதல் அணுக்கள் வரை எல்லாம் எப்பொழுதும் அசைந்து கொண்டேயிருக்கின்றன. இந்த அசைவிற்கு அம்பலக் கூத்தனின் ஆடலே காரணம் என்பர் ' அவனன்றி ஓரணுவும் அசையாது' என்ற பழமொழியும்,

"எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்"
(திருமந்திரம் – 2722)
"அம்பலமாவது அகில சராசரம்"
(திருமந்திரம் – 2775)

என்ற திருமூலர் திருமொழியும் இங்கு நினைவு கூறத்தக்கது. அந்த அம்பலக் கூத்தன் ஆடும்போது காலில் அணிந்துள்ள சிலம்பிலிருந்து ஒலி உண்டாகின்றது. அந்த சிலம்போசை பற்றி திருவுந்தியார்,

"திருச்சிலம் போசை ஒலிவழியே சென்று
நிருத்தனைக் கும்பிடென் றுந்திபற"
(திருவுந்தியார், செ. 17)

என்று கூறுகின்றது. நிருத்தன் என்பது ஐந்தொழிலியற்றும் அம்பலக் கூத்தனைக் குறிக்கும். உள்ளத்துள்ளே இறைவனை நினைந்து அசைவற நிற்கும் யோகிகட்குத் திருச்சிலம் போசையாகிய நாத தத்துவம் தோன்றும். அதன் வழியே சென்று ஐந்தொழில் நடாத்தும் இறைவனைக் கண்டு வணங்குக என்பது பொருளாகும். திருத் தொண்டர்களுள் ஒருவரான சேரமான் பெருமாள் நாயனார் அம்பலக்கூத்தனின் திருவுருவத்தை வைத்து நான்தோறும் முறைப்படி பக்தியுடன் வழிபட்டுவர பூசையின்

முடிவில் சிலம்போசை கேட்டதாகச் சேக்கிழார் கூறுவது இங்கு நினைவு கூறத் தக்கது.

திருக்களிற்றுப்படியார்:–

திருக்களிற்றுப்படியார் சாத்திர நூல்களுள் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டதே அம்பலக்கூத்தனின் அருளினாலாகும். இந்நூலின் ஆசிரியர் ஆடுமேய்க்கும் குலத்தைச் சேர்ந்தவர். எனவே இவர் இயற்றிய இந்நூலை சிலர் ஏற்றுக் கொள்ளவில்லை. பக்குவான்மாக்கள் சிலர் இந்நூலை நடராசர் சந்நிதிக்குச் செல்லும் பஞ்சாக்கரப்படியில் கொண்டுபோய் வைக்க, அந்தப் படியிலே செய்திருக்கிற கல்லானை தன் துதிக்கையினால் அந்நூலை எடுத்து அம்பலக் கூத்தனின் திருவடியில் வைத்தது. ஆடல்வல்லானின் அருளால் நூற்சிறப்பை உணர்ந்து இந்நூலைப் பலரும் ஏற்றுக்கொண்டனர். இந்நிகழ்ச்சி காரணமாகவே இந்நூல் திருக்களிற்றுப் படியார் எனப்பெயர் பெற்றது என்பர். இந்நூலின் ஆசிரியர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார். இவர் திருவந்தியாரின் ஆசிரியர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனாரின் மாணாக்கராவார். திருவந்தியாருக்கு விளக்கமாக இவர் திருக்களிற்றுப் படியாரை இயற்றினார்.

அதில் ஞானாசாரியாரைக் கூறுமிடத்து, பரஞானமாகிய அருள்வெளியிலே நின்று பக்குவமடைந்த உயிர்க்கு ஆனந்தத்தைக் கொடுக்கும் கூத்தப் பிரான் உயிர்க்கு என்னைப் பந்தித்துள்ள ஆணவமாகிய மூலமலத்தை விலகும்படிச் செய்ய, உயிருக்குயிராய் நின்று உண்மை அறிவுறுத்தருளி ஆசிரியனாகத் திருவுருவக் கொண்டெழுந்தருளி வந்து ஆட்கொண்டனன் என்று கூறுகின்றார் (திருக்களிற்றுப்படியார், செய். 4). தில்லையை ஞானாகாசத்தலம் என்பர். இங்கு ஆசிரியரும், ''அகனமய மாய்நின்ற அம்பலத்தெந் கூத்தன்'' எனக் குறிப்பிடுகின்றார்.

திருவந்தியாரைப் போல அம்பலக் கூத்தனின் சிலம்பொலி திருக்களிற்றுப் படியாரிலும் கூறப்படுகின்றது. ''உலகப் பற்றுக்கு ஆதாரமாய் சுட்டறிவினை விளக்கும் ஒசைகளெல்லாம் அற்றுல் நாதகலையாய முதல்வனது திருச்சிலம்பொலி கேட்கும். அதன் தன்மையையுணர்ந்து சென்றால் அது முடிந்த இடத்தே சக்தியோடு கூடிய சிவம் விளங்கும்'' என்று திருக்களிற்றுப் படியார் (செ. 33) கூறுகின்றது.

சிவஞானசித்தியார்:–

மெய்கண்ட சாத்திர நூல்களுள் தகுதி பற்றி முதல் நூலாகக் கருதப்படுவது சிவஞானபோதமாகும். சூத்திரங்கள் மூலம் சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் சிவஞானபோதக் கருத்துக்களை விருத்தப்பா மூலம் விளக்கிக் கூறும் வழிநூலே சிவஞானசித்தியராகும். இந்நூல் பரபக்கம், சுபக்கம் என இரு பிரிவுபடும். பரபக்கத்தில் காப்புச் செய்யுளுக்கு அடுத்து, மங்கலவாழ்த்தில் முதற்கண் 'அம்பலத்தாடும் அரனார் பாதத்திற்கு ஆசிரியரான அருணந்தி சிவாசாரியார் வணக்கம் செலுத்துகின்றார்.

உண்மை விளக்கம்:

மாணாக்கன் தன் ஆசிரியரிடம் சில வினாக்களை வினவி அதற்கு ஆசிரியர் விடை கூறும் பான்மையில் இந்நூல் அமைந்துள்ளது. மாணவன் வினவும் வினாக்களுள் ஒன்று தில்லைப்பெருமானின் திருக்கூத்தனின் இயல்பு யாது என்பதாகும். இந்நூலில் ஒன்பது பாடல்களில் (செ. 30–38) தில்லைக் கூத்தனின் ஆடல் பற்றிக் கூறப்படுகின்றது.

உயிரின்கண் இறைவன் கலந்து ஆடல் புரிவதை ''எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே நட்டம்'' (செ. 31) என்கிறார். எட்டும் இரண்டும் சேர்ந்தது பத்து. பத்தைக் குறிக்கும் தமிழ் எழுத்து ய என்பதாகும். சைவர்களின் சிகாமந்திரமான திருவைந்தெழுத்திலுள்ள (நமசிவய) ஒவ்

வொரு எழுத்தும் ஒவ்வொரு பொருளைக் குறிக்கும்.

அதன்படி நமசிவய என்ற திருவைந் தெழுத்தில் யகரம் உயிரைக்குறிக்கும். எனவே எட்டும் இரண்டும் உருவான இலிங்கம் என்பது உயிராகும். மேலும் கூத்தப் பெருமானின் திருவுருவம் திருவைந் தெழுத்தை உணர்த்தும்.

சிவப்பிரகாசம்:

சிவப்பிரகாசம் முதல் சங்கற்ப நிரா கரணம் ஈறாக உள்ள எட்டு சாத்திர நூல் களையுமருளிய உமாபதி சிவம் தில்லை மூவாயிர அந்தணர்களுள் ஒருவர் என்பது இங்கு முக்கியமாகக் குறிப்பிடப் பட வேண்டிய ஒன்றாகும். சிவப்பிரகாசமானது சிவஞானபோதத்திற்குச் சார்பு நூலாகும். இந்நூலில் காப்புச் செய்யுளுக்கடுத்து நட ராசப் பெருமானுக்கு வணக்கம் கூறப்படு கிறது. நின்மல சொரூபமான பரமசிவம் ஆன்மாக்களுக்குண்டான பிறவித் துன்பத் தை நீக்கவே திருவம்பலத்தின் கண்ணே நின்று திருநடனம் செய்வதாக,

''நீங்கவரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்று
னின்றிமையோர் துதிசெய்ய நிருத்தஞ் செய்யும்''

என்று ஆசிரியர் கூறுகின்றார்.

போற்றிப்பஃறொடை:–

இந்நூலைச் சாத்திர நூல்களுள் தோத் திர நூல் எனலாம்.

''... மாமணி சூழ
மன்றுள் நிறைந்து பிறவி வழக்கறுக்க
நின்ற நிருத்த நிலை போற்றி'' (கண்ணி 4)

என்று தில்லைக்கூத்தனைப் போற்றுகின்றது இந்நூல். மேலும் நூலின் இறுதியிலுள்ள ஒரு வெண்பாவில் தம் ஞானுசாரியரான மறைஞான சம்பந்தரைப் போற்று மிடத்து'', ''போற்றித் திருத்தில்லை'' என்று தில்லையையும் போற்றுகின்றார்.

கொடிக்கவி:

இந்நூலாசிரியரான உமாபதி சிவம் தம் ஞானுசாரியரான மறைஞான சம்பந்தர் கைவழி ஒழுகிய செங்குந்தர் கூழைக் குருப் பிரசாதமாகக் கருதி உண்டதால் தில்லை மூவாயிர அந்தணர்கள் சினம் கொண்டு இவரைத் தீண்டத்தகாதவராக ஒதுக்கி வைத்தனர். எனவே இவர் தில்லையின் கீழ்த்திசையிலுள்ள கொற்றவன்குடி என் னும் ஊரில் ஒரு மடம் அமைத்து வசித்து வந்தார். அவ்வமயம் ஒருநாள் தில்லைக் கோயிலில் திருவிழா வந்தது. திருவிழா வில் கொடியேற்றுதல் மரபு. அவ்வாறு கொடி ஏற்ற முயன்றபோது கொடி ஏற வில்லை. அவ்வமயம், ''உமாபதி வந்தால் கொடியேறும்'' என்று ஆகாயத்தில் அசரீரி எழுந்தது. அந்தணர்களும் உமாபதி சிவா சாரியாரின் இருப்பிடம் சென்று நிகழ்ந் ததைக் கூறி வருகைதர வேண்டினர். உமா பதி சிவமும் தில்லைக்கு வந்து கூத்தனின் அருளை வியந்து பாட மனித முயற்சியின்றி யே கொடியேறிற்று. இவ்வாறு தில்லையில் கொடியேறும் பொருட்டுப் பாடப்பட்ட நூலே கொடிக்கவி என்னும் சாத்திர நூலா கும்.

நெஞ்சுவிடு தூது:–

சாத்திர நூல்களிலே அகப்பொருளில் அமைந்துள்ள நூல் இந்நூலாகும். இந் நூலின் தனிச்சிறப்பு இறைவனுக்குத் தசாங்கம் கூறுவதாகும். இறைவனுக்குரிய ஊரைக் குறிப்பிடுமிடத்து வேதாகமங் களைக் கற்று வல்லவர்கள் வாழ்கின்ற தில்லையம்பதியை ஊராக உடையவன் என்பதைக் ''கற்றவர் வாழ் தில்லையான்'' (கண்ணி 88) என்று ஆசிரியர் குறிப்பிடு கின்றார்.

சங்கற்ப நிராகரணம்:–

இந்நூல் இயற்றியருளிய உமாபதி சிவம் பாயிரத்தில் இந்நூற் காரணமும், இயற்றப்பட்ட இடமும் காலமும் தெரிவிக் கின்றார். தில்லையிலுள்ள முக்கியமான திரு

விழாக்களுள் ஆனித்திரு மஞ்சன விழாவும் ஒன்றாகும். ஆனித்திரு மஞ்சன ஆனித் திரு விழாவின் ஆறாம் நாளன்று தில்லைக் கோயிலிலுள்ள தேர் மண்டபத்தில் குழுமியுள்ள சமயவாதிகள் பலரின் கொள்கைகளைக் கேட்டு மக்களுக்குண்டான மயக்கத்தைப் போக்கி உண்மையை உணர்த்த இந்நூல் ஆசிரியரால் இயற்றப்பட்டது.

"பொற்பொது மலிந்த அற்புதன் ஆனி
யாறும் விழாவில் பொற்றே ராலயத்து"
(பாயிரம் வரி 28 – 29)

என்ற ஆசிரியர் கூற்றால் இந்நூல் தில்லைக் கோயிலில் ஆனித் திருவிழா ஆறாம் திரு நாளன்று இயற்றப் பட்டதென அறிகிறோம்.

HOLTEC

offers

Comprehensive consulting services for cement and mineral based industries, which extend from feasibility studies and project reports to plant commissioning and run through the entire spectrum of cement manufacturing and mineral beneficiation technology, plant operations and management systems.

In Association with HOLDER BANK Switzerland

HOLTEC ENGINEERS PRIVATE LIMITED

CORPORATE CENTRE

201/202 ASHOK HOTEL □ CHANAKYAPURI □ NEW DELHI—110 021.

சிதம்பரேசர் சிந்தியல் வெண்பா

ஆக்கம்: பேராசிரியர் சு. பாலசுந்தரம்,
எஸ். ஐ. வி. இ. டி. கல்லூரி, கௌரிவாக்கம்,
சென்னை.

ஆருயிர்த் தொகுதிகட்கெலாம் தலைவனாகிய எம்மம்மையப்பன் தில்லை நடராசப் பெருமான், அனைத்துயிர்கள் இன்பம் பெற்றுய்திடவும், அனைத் தண்டங்கள் இயங்கவும் எப்பொழுதும் ஆனந்தத் திருநடனம் புரிகின்றனன். என்றென்றும் எம்பெருமானாகிய அவன், பெற்றோர்கள் தம் அன்பு மக்கள் சிறுகையில் தாம்பூலத்தைக் கொடுத்துத் தம்வாயூட்டச் செய்து மகிழும் தன்மை போல், எளியேனுக்கும் தமிழ்கொடுத்து அவனைப் பாடச்செய்தனன். அவன ருளால் யாத்த இந்நூலை எமக்குப் பேரின்பம் நல்கும் ஈசனவன் எடுத்த திருவடியாம் அம்புயத்தாளின்கண் சிற்றஞ் சிறுமலராய்ச் சூட்டிப் பணி கின்றனம்.

திருச்சிற்றம்பலம்

காப்பு
(நேரிசை வெண்பா)

தேனார் பொழில்சூழ்நல் தெய்வச் சிதம்பரத்தே
மீனேர் விழியாள் உமைபாகம் — ஆனார்சீர்
பாடிடும் மைந்தனுக்கே எந்நாளும் உற்றபொருள்
கோடிதரும் ஐங்கரனே கா.

குருவணக்கம்
(கட்டளைக் கலித்துறை)

திருவிழை மூதூர் திருமலைச முத்திரந் தன்னில் நற்சீர்
கருவான வேதத்தில் உட்பொருள் கண்டேநல் அன்புருவாய்
குருவாக வந்தென்னை ஆட்கொண்ட சாதுவே! தில்லைவளர்
அருமருந்தே உன்திருப் பாதமென் சென்னிப்பூ வாக்கும்மே

நூல்
(நேரிசை சிந்தியல் வெண்பா)

மங்கல தீபமாம் மாணிக்க சோதியாம்
எங்கள் சிவகாமி அன்னையுடன் – புங்கவர்
போற்றிட ஆடினு னே. (1)

ஆடினுன் தீபுனல்கால் மண்வெளி தோன்றிட
ஆடினுன் மாலயன் ஓராமல் – ஆடினுன்
அம்பலத்துள் தொண்டருக் கென்று (2)

இதயந்தான் தில்லையே ஞாலமத்தி யுந்தான்
பதியவன் மூலத்தா னம்தான் – மதிசூடி
இன்கருணை தோன்றுமே இங்கு (3)

அரிஅயன் காணவிய லாதோன்சீர் பாடும்
வரிக்குயில் ஆடுமே மஞ்ஞை – அரிவையர்
சூழ்வலஞ்செய் தில்லையூர் தான் (4)

மடநாரை தன்னலகால் செஞ்சாலி கொய்தே
மடவாளை வாயூட்டும் ஊராம் – நடராசன்
தண்ணருள் சூழும் பதி. (5)

ஆனந்தக் கூத்தொன்றை இன்றும்நீ செய்வதானுல்
தானன்றே எவ்வுயிரும் எவ்வுலகும் – மேன்மையுற
நல்லியக்கங் கொண்டது வே. (6)

மைதவழ் நயனி மகேச்வரிநா தாவுன்
கைதவழ் சிறியனேன்சொல் எல்லாம் – நிதியனே
நீதந்த பைந்தமிழ்ச் சொல். (7)

அரிதுயில் கொண்டாரின் அன்பிற் கிணங்கிக்
கரியுரி போர்த்திட்ட எம்மான் – பரிவுடனே
சக்கரம் ஈந்திட்டான் காண் (8)

அந்தணர்கள் போற்றுகின்ற புண்ணியனே எம்மானே
வெந்தணலாம் காமத்தில் தீய்கின்றேன் – எந்தையே
காத்திடல் உன்கடன் காண். (9)

விண்ணவர்க்கும் எட்டா முழுமுதலே ஆரமுதே
தண்ணருள் கொண்ட தயாநிதியே – வெண்ணீறு
என்னீசா நீயே துணை. (10)

கங்கையைச் சென்னியில் வைத்தாய் மலையன்றன்
மங்கையைப் பாகம்வைத் தாயென்றும் – எங்களுக்கே
தூக்கியவுன் பாதம் வைத் தாய். (11)

காடுறை மானினைக் கல்மன வேட்டுவர்
தேடியதைக் கொல்லுமாப்போல் மோகமுதல் – நாடியென்னை
வாட்டுவதையே ஆற்றேன் இனி. (12)

வேய்தோ ளியுமைபங்கா வித்தகனே மெய்ப்பொருளே
சேய்நான் படுகின்ற துன்பமெலாம் – நாய்படுமோ
தாயினும்மே லானவனே சாற்று. (13)

தன்பிள்ளை துன்பமுறத் தாங்குவளோ தாயவளே
இன்னும்நீ பார்த்திருத்தல் ஞாயமோ – சின்மயனே
காத்தலன் றோவுன் கடன். (14)

தொல்லைகள் நீக்கிடும் தில்லைவாழ் நாதனே
எல்லையில் இன்பங்கள் நல்கிடும் – செல்வனே
உன்னடியார் தாழ்தலென்ப தில். (15)

சென்னிசை கங்கையோடு சந்திரனும் சூடியென்றும்
மன்னுகின்ற தில்லையுள்ளே ஆடுகின்ற – என்னரசே
உன்னடிமை நானன்றே காண். (16)

மன்னவனே என்னுயிரே மாமணியே சூழொளியே
தென்னவனே அந்தணனே சிதம்பரனே – உன்னடி
பற்றினரைப் பற்று வினை. (17)

எத்தெய்வங் கொண்டாலும் என்னிறைவா நீயேதான்
அத்தெய்வம் ஆகியங்கே தோன்றிடுவாய் – அத்தனே
நீயன்றே அத்தனைக்கும் மேல். (18)

மாலோன் மலரோன் மதியோன் பகலோன்அம்
வேலோன் கணபதி இந்திரனும் – காலமெலாம்
உன்னடியைப் போற்றினர் நின்று. (19)

பொதியமுனி நாரதன் அக்கினி பார்த்தன்
ரதிபதி காற்றோன் வருணன் – நிதிபதியும்
பெற்றார்கள் நின்னருளால் சீர். (20)

உன்னடியார் அஞ்சுவயா தொன்றுமிலை அஞ்சுவனே
உன்னடியார் பேர்கேட்டால் அந்தகனும் – என்னெனில்
காலனுக்கும் காலனன்றே நீ. (21)

முப்புரத்தைப் புன்முறுவல் பூத்துப் பொடிசெய்தோய்
எப்பொழுதும் உன்நினைவாய் நானிருக்க – ஒப்பாமல்
தீங்கிழைக்கும் மூன்றினை நீக்கு. (22)

பாவியேன் செய்திடும் பாதகம் போக்கியே
தாவியே அன்புடன் காத்திடும் – தேவனே
யாருளார் உன்றனுக் கீடு. (23)

அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தா என்னன்பே
உம்பருக் கெட்டாத நுண்ணியனே – அம்மையப்பா
நாயேற் கருளியவா றென். (24)

இவ்வுலகில் வாழ்தற்கோர் செல்வமும் நற்செயலும்
எவ்வுயிர்க்கும் அன்புபூண் கொள்கையும் – செவ்வியநின்
தாள்மறவா தன்மையும் தா. (25)

உன்னடியார் கூட்டத்தில் சேர்தல்வேண் டும்என்றும்
உலகெலாம் இன்பமாதல் வேண்டும் – புலிப்பாதர்
போற்றும் அரசே அருள். (27)

கல்வியென்றுல் உன்னடியைப் போற்றுவதே உற்றதொரு
நல்லின்பம் ஏதென்றுல் உன்னடியைப் – புல்லுதலாம்
வேறென்ன வேண்டும் இனி. (28)

அடியார்க் கருள்செய் அழகனே போற்றி
துடியிடை அம்பிகைபங் காவுன் – அடிமலரை
அன்பன்என் உள்ளத்தில் நாட்டு. (29)

எந்தையே போற்றி எமையாண்டாய் போற்றியெம்
சித்தையில் ஊறிடுந்தே னே போற்றி – முந்தைக்கும்
முந்தையே நின்றுள் சரண். (30)

நூற்பயன்
(நேரிசை வெண்பா)

நீலமிடற் றண்ணல் நடராசன் தொல்லடியேன்
பாலசுந்த ரம்பகர்பா முப்பதும் – ஞாலத்துள்
அன்புடனே ஓதவல்லார் அத்தனவன் இன்னருளால்
நன்மையெல்லாம் பெற்றுய்வார் தான்.

திருச்சிற்றம்பலம்.

சிதம்பரம் சபாநாயகர் (ஸ்ரீ நடராஜர்)
திருக்கோயில் மகா கும்பாபிஷேகம்
சிறப்பாக நடைபெறப் பாடுபட்ட
அன்பர்களுக்குப் பாராட்டுதல்கள்

முரளிசங்கர் ஏஜன்ஸீஸ்

திருச்சி மெயின்ரோடு □ புலியூர்

போன்: 20421

பார்வேடிங் ஏஜன்ஸீஸ்:
M/S. செட்டிநாடு சிமிண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்
புலியூர்.

WITH BEST COMPLIMENTS FROM

ENEXCO

CONSULTANTS PVT. LTD.

Pioneers in engineering, manufacturing and rendering consultancy services in Cement, Fertilizers and Coal Industries

POST BOX NO. 8848 □ NEW DELHI 110 057.

இலக்கியங்களில் திருமஞ்சனக் குறிப்புகள்

புலவர் எம். கே. பி. தேவகி, எம். ஏ.,
சென்னை.

திருச்சிற்றம்பலம்

மறவாமை யாலமைந்த மணக்கோயில் உள்ளிருத்தி
உறவாதி தனையுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்தம் எனும் திருமஞ்சனம் ஆட்டி
அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத்தர்ச் சனை செய்வார்.

தெய்வச்சேக்கிழார் – வாயிலார் நாயனார் புராணம்.

பூட்டு கார்முகந் தன்னெடும் தோன்றிய புயல் வாய்
ஊட்டு தண்புனல் நந்தியங் கிரிமிசை யுகுத்தல்
வேட்டு வக்குலத் திண்ணனார் மஞ்சனம் விமலற்கு
ஆட்டு கின்றதோர் தனிச் செயல் போன்றுள தன்றே.

கச்சியப்பர் – கந்தபுராணம்

பாட்டிற் கின்புறு குருபரன் பாதமேற் கண்ணீர்
ஆட்டிச் சொன்மலர் அணிந்து தற்போத இன்னமுதை
ஊட்டித் தற்பர ஞானமா மோமவெங் கனலே
மூட்டிச் சம்புவின் பூசைமேன் முயற்சியாளர்

பரஞ்சோதியார் – திருவிளையாடல் புராணம்

கரையிராது அன்பெனும் திருமஞ்சனத்தினர்
கவின்பெற ஆட்டி
புரையிலாது ஒளிரும் தத் துவமலரைத் துபுனைந்து
உயிரோடு நல்லறிவை
விரைநறுந் தூப மாய்காட்டி விண்ளன
விளங்கும் ஆன் மாவை

புரைதருந் தூய அமுதமாய் அருந்தியுள
மகிழ்ந்திடு மேல் வைகும்

– பனசைப்புராணம்

ஏகம்பவாணரை ஏலவார் குழலி பூசித்தல்

விழிகள் ஆனந்த நீர்த்தாரை மெய்யெலாம்
பொழிய நெக்குருகினள் புளகம் போர்த்தனள்
மொழிதடு மாறினள் அறிவின் முற்றிய
தொழில் அமை பூசனை தொடங்கல் மேயினள்.

இணங்கிய நெய்யால் பெய்த இன்னமு திசைய நல்கி
மணங்கமழ் எண்ணெய்க் காப்பும் மாநெல்லி மஞ்சட் காப்பும்
அணங்கருங் கபிலை ஐந்தைந் தமுதுபல் குடத்துத் தீம்பால்
குணங்கெழு தயிர் நெய் செந்தேன் குளிர் இளநீரும் ஆட்டி
கருப்புமிழ் தேறல் ஆட்டிப் பல்கனி வருக்கம் ஆட்டி
அருத்திகூர் அன்பின் ஆன்ற சந்தனக் குழம்பும் ஆட்டி
மருக்கமழ்ந் தெடுத்த கீர்த்தி மதித்தடங் கூவல் தெண்ணீர்
உருத்திர மனுக்கள் ஓதி விதியுளி நிறைய ஆட்டி.....

அகிற்புகை தீபம் எல்லாம் இனிதளித் தரக்கு நன்னீர்
மகிழ்ச்சியில் சுழற்றிப் பல்கால் வலஞ்செய்து வணங்கிப் போற்றி
இகப்பில் அஞ்செழுத்தும் எண்ணி இன்னன பிறவும் ஆற்றி
முகிழ்த்த பேரன்பின் ஆன்ற பூசனை முற்றச் செய்தான்.

மாதவச் சிவஞான சுவாமிகள் – காஞ்சிப்புராணம்

"புதுவிரைப் புனல் நானமும் நியதியும் புரிந்து
கவிய மைந்தமு தைந்தொடு கனிகரும் பிரதம்
செவிய நல்லிள நீர்கள் கந்தோதகம் சேரும்
திவிய மானசுத் தோதகந் திருவெழுத்தைந்தான்
அவியன்னுய் திருவுருத்திரஞ் சமகநன் மனுவால்
முந்தும் அன்பினு லெமை அபிடே கித்து.

– திருச்சோற்றுத்துறைத் தலபுராணம்

அஞ்சுவகை நீராடி அருணந்தி திலம் புரியும்
பஞ்ச நதிப் புராணத்தைப் படிப்பாரும் வரைவாரும்
விஞ்சு பொருள் கேட்பாரும் விட்ட குறையால் வந்த
தஞ்ச முருத் திரர் அவர்க்கே சாரூபம் சத்தியமே.

அஞ்சுவகை நீர்: 1. கங்கை நீர். 2. காவேரிநீர் 3. பிரமகமண்டல நீர்
4. உமையம்மை திருமுலைப்பால் 5. குளநந்தி வாய் நுரை நீர்.

ஞானகூத்தர் – திருவையாற்றுத் தலபுராணம்

பாங்கான பால் செந்தேன் பன்னியமூ வகை இளநீர்
ஆங்கான வைந்து அமிழ்த மருவிரைச் சந் தனக்குழம்பும்
ஓங்காரத் துட் பொருளாம் ஒரு முருக னுரு வாட்டி
நீங்காமை இடையிடையே நிறைநீர் சங்கினிலாட்டல்
கச்சியப்ப முனிவர் – பேரூர்ப்புராணம்.

"அருளெனும் புனலே யாட்டி"– காசிகாண்டம்
"திகழ்மல சுத்தி நிமித்தமாக மகிழ்வுடனே
திருமஞ்சனம் பண்ணி"

மற்றும்திருமஞ்சனம் குறித்துச் சிவப்பிரகாச சுவாமிகள் 'இட்டலிங்க அபிடேகமாலை' என்று ஒரு நூலியற்றியுள்ளார்கள். பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்'பஞ்சாமிர்த வண்ணம்' என்று ஒரு அற்புதமான சந்தப்பாடல் பாடியுள்ளார்கள்.



ஆரூர்தில்லை அம்பலம் வல்லம் நல்லம்
வடகச்சியும் அச்சிறு பாக்கம் நல்ல
கூரூர்குட வாயில் குடந்தை வெண்ணி
கடல்சூழ் கழிப்பாலை தென்கோடி பீடார்
நீரூர்வயல் நின்றியூர் குன்றி யூரும்
குருகாவையூர் நாரையூர் நீடுகானப்
பேரூர்தன் னீள்வயல் நெய்த்தா னமும்
பிதற்றுய் பிறைசூடிதன் பேரிடமே.

–தனித் தேவாரப் பாடல்



தில்லைத் திருமடங்கள்

தி. பொன்னம்பலம், எம். ஏ., எம். ஃபில், எம். எச். ஈடி.,
19, சிலம்பநாதன் தெரு,
சிதம்பரம்.

அம்பலக்கூத்தன் ஐந்தொழில் இன்ப நடம்புரிந்தருளுகின்ற பண்பட்ட தில்லை, திருமடங்கள் நிறைந்த தெய்வ நகரமாகும். சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தை அரங்கேற்றிய ஞான்று எழுநூறு திருமடத்து முதலிகளும் வந்திருந்தனர் என்பது செவிவழிச் செய்தியாகும். இதனுல் அக்காலத்தில் தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனுர்க்கு எல்லையில்ல தோர் தொண்டு புரிதற்கு எழுநூற்றுக்கும் மேற்பட்ட திருமடங்கள் தில்லையில் சிறந்திருந்தன என்பது தெரிய வருகின்றது. இன்றும் சிதம்பரத்தில் புகழோங்கிய நிலையில் பல திருமடங்கள் சைவநெறி தழைத்தோங்கச் செய்து கொண்டிருக்கின்றன.

1. உமாபதி சிவாசாரியார் திருமடம்:—

தில்லைவாழ்ந்தணர் மரபில் தோன்றி மறைஞானசம்பந்தர்பால் உபதேசம் பெற்றுச் சைவசமய சந்தான குரவருள் நாலாமவராகத் திகழ்பவர் உமாபதி சிவாசாரியார் ஆவர். இவர் சிதம்பரத்துக்குக் கிழக்கேயுள்ள கொற்றவன் குடியில் திருமடம் அமைத்துக் கொண்டு, சைவசித்தாந்த உண்மைகளை உபதேசித்தும், பக்குவமுடையவர்கட்குச் சிவதீக்கை செய்தும் சைவசமயத்தை வளர்த்தருளினர். தில்லைப் பெருங் கோயில் திருவிழாவில் கொடி ஏறுது தடைப்பட்ட போது கொடிக்கவி பாடிக் கொடியேறும்படி செய்தருளினர்.

நடராசப் பெருமான் பெற்றுன் சாம்பான் பொருட்டு, இவருக்குப் பரிந்துரைக் கைச்சீட்டு விடுத்தருளினர். அதனைப் பெற்ற இப்பெருந்தவச் செல்வர், சாதிபேதம் பாராட்டாது பெத்தான் சாம்பானுக்குத் தீக்கை செய்து வீடுபேறளித்தருளினர் என்பது செவி வழிச் செய்தியாகும். சித்தாந்த சாத்திரம் பதினன்கினுள் சிவப்பரகாசம் முதல் சங்கற்ப நிராகரணம் ஈருகவுள்ள எட்டு நூல்கள் இவரால் இயற்றப் பெற்றன வாகும்

உமாபதி சிவாசாரியார் மாணவ பரம்பரையில் வந்ததே திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனமாகும். உமாபதி சிவாசாரியார் சமாதி கொண்டு எழுந்தருளியுள்ள இத்திருமடம் இப்போது திருமுதுகுன்றம் குமாரதேவர் ஆதீன மடத்தில் பரிபாலனத்தின் இருந்து வருகிறது.

திருவாவடுதுறையிலிருந்த தம்பிரான் களில் ஒருவராகிய சிவப்பிரகாசர் என்பார் நடராசர் கோயில் வழிபாடு தடைப்பட்டபோது, வேலூரில் இலிங்கம நாயக்கரைக் காணச் சிவலிங்கதாரணம் செய்துகொண்டு சென்றூர் எனவும், இலிங்கம நாயக்கர் உடனே கோயிற் பூசை தடைபடாது, நிகழ ஏற்பாடு செய்தார் எனவும், இதனையுணர்ந்த திருவாடுதுறை யாதீனத் தலைவர் சிவப்பிரகாசரைச் சிவலிங்கதாரணத்துடனேயே இருக்கும்

படிப் பணித்தருளினர் எனவும் அதுமுதலாகச் சிவப்பிரகாசர் தலைமையில் துறையூரில் வீரசைவமடம் தோன்றிய தெனவும் சொல்லப்படுகிறது.

சிதம்பரம் மாலைக்கட்டித் தெருவில் இப்போது இருந்து வருகின்ற திருவாவடு துறை ஆதீன மடாலயத்தை, உமாபதி சிவாசாரியார் வாழ்ந்த இல்லம் என்று சொல்வது வழக்கம்.

2. திருவாவடுதுறை ஆதீனத் திருமடம்:—

திருவாவடுதுறை ஆதீனத்தின் கிளையாகிய திருமடம், சிதம்பரம் மாலைக் கூட்டித்தெருவில் உமாபதி சிவாசாரியார் திருமனையில் அமைந்துள்ளது. பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனஞ்சிய பொய்கண்டகன்ற மெய்கண்ட தேவரின் திருவுருவம் இத்திருமடத்தில் நிறுவப் பெற்றுள்ளது.

திருவாவடுதுறை ஆதீனத்தின் குருமுதல்வர்களின் உபாசனை மூர்த்தியாக விளங்குபவர் சிற்றம்பலத்துச் செல்வப் பெருமானாகிய ஞானமா நடராசர் ஆவர். இந்த ஆதீனத்தின் 21-ஆம் குருமகா சந்நிதானம் திருப்பெருந்திரு சுப்பிரமணிய தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் ''ஆடவல்லான்'' என்னும் அரிய நூலைத் திருமிகு ச. தண்டபாணி தேசிகர் அவர்களைக் கொண்டு எழுதுவித்துச் சைவ நல்லுலகிற்கு அரிய செல்வமாக வழங்கியுள்ளார்கள்.

இத்திருமடத்தின் சார்பாகச் சிதம்பரம் சிங்காரத்தோப்பில், கருணைக்கடலாகிய திருக்களாஞ் செடியுடையார் திருக்கோயில் முற்றத்தில் மறைஞான சம்பந்தர் சமாதிக் கோயிலும் திருமடமும் அமைந்தள்ளன.

3. தருமையாதீனத் திருமடம்:—

சிதம்பரம் கனகசபை நகரில் தருமை யாதீனம் திருப்பெருந்திரு குருஞான சம்பந்தர் திருப்பெயர்கொண்டு அமைந் துள்ள தருமையாதீனத் திருமடம் பல்லாண்டுகளாகத் தருமையாதீனத்தின் தில்லைத் தொண்டுகளை நிர்வகித்து வருகின்றது.

தருமையாதீனத்தை நிறுவிய திருப் பெருந்திரு குருஞானசம்பந்தர் தில்லையில் அர்த்தயாம தரிசனம் முடித்து, ஆயிரக்கால் மண்டபத்தில் நிட்டையில் இருந்தபோது அன்னை சிவகாமி அவர்க்குப் பால்பாயசம் அளித்து உண்பித்தனர் என்பது இனிய அருள் வரலாறாகும். இப்பெருமான் ''முத்திநிச்சயம்'' என்ற நூலையும் இயற்றியருளினர்.

1782 – 1827 ஆம் ஆண்டுகளில் தவத்திரு முத்துக்குமர தேசிகரின் அருளாட்சியின் போது அருள்மிகு தில்லைக் கோவிந்தராசர் திருக்கோயில் நிர்வாகம் சிலகாலம் தருமையாதீனத்தின் ஆட்சியில் இருந்ததாகத் தெரிய வருகிறது.

1949 – ஆம் ஆண்டில் 25–வது பட்டமெய்திய தவத்திரு சுயிலைக் குருமணி சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தில்லை அம்பலவாணர் திருக்கோயிலைப் பற்றிய ''சிதம்பரம்'' என்ற அரிய நூலைத் திருமிகு ச. தண்டபாணி தேசிகர் அவர்களைக் கொண்டு எழுதுவித்து வெளியிட்டுள்ளார்கள் என்பது குறிப் பிடத்தக்க செய்தியாகும்.

தருமையாதீனத்தின் 26–ஆம் குருமுதல்வராகிய திருப்பெருஞ் திரு. சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச் சாரிய சுவாமிகள், தில்லை அம்பலவாணர் திருக்கோயிலில் சமயகுரவர் நால்வர் திருக்கோயிலுக்குத் திருக்குடமுழுக்கு நிகழ்த்தியும், பன்னிரு திருமுறைகட்குக் கோயில் எடுப்பித்தும், சந்தான குரவர் நால்வர் திருக்கோயிலைப் புதிதாக அமைத்தும் திருமுறைப்பணி செய் துள்ளார்கள்.

தருமையாதீனம் தவத்திரு வெள்ளி யம்பலத் தம்பிரான் சுவாமிகள் 'முத்தி

நிச்சய பாஷ்யம்', 'ஞானவரண விளக்கம்'' ஆகிய நூல்களைச் செய்துள்ளார்கள்.

தருமையாதீன ஞான பரம் பரையில் வருபவர்களாகிய திருப்பெருந் திரு மகா சந்நிதானங்களும், திருவடியார் களும் சிதம்பர தரிசனத்தை ஆதீனத்தின் பரம்பரை ஆசாரமாகக் கொண்டு ஒழுகி வருகின்றார்கள் என்பது எண்ணத்தக்கது.

4. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்:—

தருமையாதீனத்தின் நான்காவது பட்டத்தில் எழுந்தருளிய திருப்பெருந்திரு மாசிலாமணி ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளாணைப்படி சிதம்பரத்தில் சில மாதங்கள் தங்கியிருந்து கூத்தப் பெருமானை வழிப்பட்டுச் சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை ஆகிய செந்தமிழ்ப் பனுவல்களைப் பாடியவர் கந்தவேள் அருள்பெற்ற குமரகுருபர அடிகளாராவர். அவர்கள் வழிவந்த தவச் செல்வர்களால் நிறுவப் பெற்ற திருமடம் ஸ்ரீ காசிமடம் ஆகும்.

இத்திருமடத்தின் சார்பில் திருப் பெருந்திரு காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை மிகவும் மலிவுப் பதிப்பில் வெளியிட்டுதவுதற்கு அறக்கட்டளை நிறுவியுள்ளார்கள். இம்மரபில் வந்த தவத்திரு காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் தில்லையில் ''சிவ சிவ'' ஒலி மண்டபத்தில் திருமுறை ஓதுதல், நாளும் பூசைபுரியும் தில்லைவாழந்தணர்களுக்கு அன்னம் பாலித்தல் முதலியவற்றிற்கும், ஆனி, மார்கழி விழாக்காலங்களில் திருத்தேர் முன் 'திருப்பல்லாண்டு' ஓதுதற்கும், அடியவர்க்கு அன்னம் பாலித்தற்கும் அறக்கட்டளையமைத்துள்ளார்கள்.

5. திருவண்ணாமலை ஆதீனமடம்:—

திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி மடத்திற்குத் தில்லையில் செங்கழுநீர்ப் பிள்ளையார் கோயில் தெருவில் மடமும் அதற்குரிய இடங்களும் அமைத்து பல அறக்கட்டளைகளை நடத்தி வந்ததாகத் தெரிகிறது. இத்திருவண்ணாமலை ஆதீனத்தைச் சார்ந்த மயிலாடுதுறை வைத்தியலிங்கத் தம்பிரான் அவர்களால் சற்றேறக்குறைய 185 ஆண்டுகளுக்கு முன்னர் சிவகாமிசுந்தரி அம்மன் திருக் கோயிலின் முன் அமைந்துள்ள 'சொக் கட்டான் மண்டபம்' என்ற பெரிய மண்டபம் அமைக்கப்பட்டது. 'சிவஞான சித்தியார்' என்னும் சைவ சித்தாந்த சாத்திர நூலுக்கு உரைகண்ட அறுவருள் ஒருவராகிய ஞானப்பிரகாசர் திருவண்ணா மலை ஆதீன அடியார்களுள் ஒருவராவர்.

6. அம்பலத்தாடும் சுவாமிகள் மடம்:—

'பாதபூசை அம்பலத்தாடுவார் மடம்' என்னும் திருமடம் சிதம்பரம் அம்பலத் தாடுவார் மடத்துத் தெருவில் அமைந் துள்ளது. இந்த மடாலயத்தில் 32—வது தலைவர் புதுவையிலுள்ள திரு மடத்தில் தங்கியுள்ளார். இத்திருமடத்தில் தலைவர்கள் தமது திருவடிகளை ஒருகாலத்தும் பூமியில் பொருந்துமாறு வைப்பதில்லை. பாதக் குறடுகளிலேயே அவர்களின் பாதம் படுந்திருக்கும்.

மணிவாசகர் சொல்ல அழகிய திருச்சிற்றம்பலமுடையார் தமது திருக் கரத்தால் எழுதிய திருவாசகத் திரு முறையில் மூலப் படியாகிய முதற்சுவடி பூசைக்குரிய மூர்த்தியாக இத்திருமடத்தில் இன்றும் இருந்து வருவது சிறப்புக்குரிய செய்தியாகும்.

7. குருநமச்சிவாய தேவர் மடம் (திருப் பாற்கடல் மடம்):—

குருநமச்சிவாய தேவர் மடம் 'திருப் பாற்கடல் மடம்' எனவும் வழங்கப் பெறுகிறது. ''திருப்பாற் கடல்'' என்னும் சிறு திருக்குளம் ஒன்று இம்மடத்தைச் சார்ந்து வேங்கான் தெருவில் அமைந் துள்ளது. இது சிதம்பரம் திருக்கோயிலுக்

குரிய பத்துத் தீர்த்தங்களில் ஒன்றாகும்.

வியாக்கிரபாதர் மகனார் உபமன்யு முனிவர் குழந்தையாயிருந்து பால்வேண்டி யழுதபோது அவர் பருகத் தில்லை திரு மூலட்டானமுடைய பெருமான் திருப்பாற் கடலிலையே வரவழைத்தருளினான் என்பது வரலாறு. அவ்வாறு பாற்கடல் வந்த இடமே இத்திருப்பாற் கடலாகும். இவ்வருள் நிகழ்ச்சியை, மணிவாசகப் பெருந்தகை,

"பாலகனுர்க் கன்று பாற்கடல் சந்திட்ட
கோலச் சடையார்க்கே உந்தீபற"

எனத்தமது திருவுந்தியாரில் சிறப்பித்துப் பாடியுள்ளார். இத்திருப்பாற்கடல் மடத்தில் மாணிக்கவாசகர் வந்து தங்கி யிருந்தார் என்று கூறுவர். மணிவாசகர்க்கு ஞானோபதேசம் அருளிய குருவாகிய திருப்பெருந்துறைப் பெருமானது திருக் கோயில் இங்குள்ளது. இங்கேதான் மணிவாசகர் சொல்ல அழகிய திருச் சிற்றம்பலப் பெருமான் திருவாசகத் தையும், திருக்கோவையையும் எழுதிக் கொண்டார் என்பர்.

இத்திருமடத்தில் ஆத்மநாதசுவாமி சிவயோகாம்பிகை சந்நிதி திருப்பெருந் துறையில் உள்ளவாறே தெற்குநோக்கி அமைந்துள்ளன. இங்கு மணிவாசகர் அமர்ந்த கோலத்தில் அருட்காட்சி நல்குகிறார். திருப்பெருந்துறை போல இத்திருகோயில் விளங்குவதால் இதனை "வடதிருப் பெருந்துறை" என்றும் குறிப் பிடுவர். பிற்காலத்தில் குருநமச்சிவாயர் இங்கு இருந்தமையால் அவர் பெயரால் இத்திருமடம் வழங்கப் பெறுவதாயிற்று.

8. அகோர சிவாசாரியார் மடம் (மேல மடம்):—

அனந்தீச்சரத் திருக்கோயிலுக்கு அருகே அகோர சிவாசாரியார் மடம் அமைந்துள்ளது. இம்மடத்தில் துருவாச முனிவரின் திருவுருவம் அமைந்துள்ளது. சிதம்பரத்திற்கு நள்ளிரவில் வந்த துருவாசர் நடராச தரிசனம்கிடைக்காமை யால் கடுஞ்சினம் கொண்டபொழுது, விநாயகப் பெருமான் தானே நடனமாடி அவருக்குத் தாண்டவ தரிசனம் காட்டி யருளியதாகப் புராணங்கள் கூறுகின்றன. அவ்விநாயகப் பெருமானின் திருக் கோயில் 'கூத்தாடும் பிள்ளையார் கோயில்' என்ற பெயரில் இம்மடத்திற்கு அண்மை யில் அமைந்துள்ளது. ஊருக்கு மேற்கே இம்மடம் அமைந்துள்ளதால் இதனை 'மேலமடம்' என்றும் சொல்கிறார்கள்.

16—ஆம் நூற்றாண்டில் இம்மடத்தை நிறுவிய அகோர சிவாசாரியார் தில்லையில் வாழ்ந்த ஆதிசைவர் ஆவார். இவர் அகோர பத்ததி, சித்தாந்த சமுச்சயம் ஆகிய நூல்களை இயற்றி யுள்ளார். இவரது 'சித்தாந்த சமுச்சயம்' என்னும் நூலைப்பின்பற்றி, சிவஞான சித்தியார்க்கு மறைஞான தேசிகர் உரை வரைந்துள்ளார். சிதம்பரம் சுண்கட்டி மடத்தை நிறுவியவரும் 'தசகாரியம்' முதலிய சைவ நூல்களை இயற்றியவரு மாகிய 'களந்தை ஞானப்பிரகாசர்' என்னும் மறைஞான சம்பந்தர் அகோர சிவாசாரியார் மாணவர் என்பர்.

9. ஆகம சிவப்பிரகாசர் மடம் (சேக் கிழார் மடம்):—

சைவத்தையும் செந்தமிழையும் தம்மிருகண்ணெனப் போற்றிய தவத்திரு ஆறுமுகநாவலர் பெருமான் அமைத்த சேக்கிழார் பெருமான் திருக்கோயில் சிதம்பரம் ஞானப்பிரகாசம் திருக்குளத்தின் வடகரையில் அமைந்துள்ளது. இக்கோயி லேயன்றி கீழவீதி தேர்நிலைக்குச் சற்று வடபால் 'சேக்கிழார் மடம்' என்று ஒரு மடம் உள்ளது. இஃது தொண்டை மண்டல வேளாளர் சிலரின் உரிமையில் இருந்து வருகிறது. இதனை 'ஆகம சிவப் பிரகாசர் மடம்' என்றும் கூறுவர். இங்கே சேக்கிழார் நாயனார் திருவுருவம் அமைந் துள்ளமை காணலாம்.

10. மௌன சுவாமிகள் மடம்:–

சிதம்பரம் சபாநாயகர் தெருவில் தவத்திரு மௌன சுவாமிகள் மடாலயம் அமைந்துள்ளது. இஃது ஒரு வீரசைவ மடமாகும். ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன், சைவப்பயிர் தழைக்கவும், திருநீற்றின் சிறப்பு விளங்கவும் மௌன சுவாமிகள் என்ற தவமுனிவர் தமிழகம் முழுவதும் உலவி வந்தார். ஞான சித்துக்கள் பல விளங்கப் பெற்ற தவசீலராய் விளங்கிய இவர் சிதம்பரத்திற்கு வந்த நிலையில், இவருடைய மாணவர்கள் இவர் தங்கியிருத்தற்கென சிதம்பரம் ஆயிகுளத்தின் வடகரையில் ஒரு தவச்சாலை அமைந்தனர். இத்தவச் சாலையிலேயே தவத்திரு சுவாமிகள் சமாதி கொண்டுள்ளார். அதுவே இன்று மௌன சுவாமிகள் மடாலயமாக விளங்கி வருகின்றது.

பல அற்புதங்களை நிகழ்த்திய மௌன குருமூர்த்திகளைத் திருப்பேரூர்ச் சாந்த லிங்க அடிகளார் தம் இல்லத்திற்கு அழைத்து உபசரித்துள்ளார். தவத்திரு மௌன சுவாமிகளுக்குப் பின் குருமுதல் வர்கள் வாழையடி வாழையென அமைந்து மாணவர்களுக்கு உபதேசம் புரிந்தும், தில்லைக்கு வரும் அடியவர்களுக்கு அன்னம் பாலித்தும் அறம்பல புரிந்து வருகின்றனர். தில்லைக்கு வந்த பொன்னம்பல சுவாமிகள் தனிமடம் அமைப்பதற்கு முன் இத்திரு மடத்திலேயே தங்கியிருந்தனர்.

திருமடத்தின் ஆரும் பட்டமாகிய தவத்திரு செல்லப்ப ஞான தேசிகர் அவர்கள், சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் ஈசான்ய மடத்தில் தங்கியிருந்த போது அவர்களிடம் சித்தாந்த சாத்திரத்தை முறைப்படி பாடம் கேட்டவராவர்.

திருமடத்தின் ஏழாவது குருமூர்த்தி களாகிய தமிழ்க்கடல் தவத்திரு சபாபதிச் சுவாமிகள், சிங்காரத்தோப்பு திருக்களாஞ் செடியுடையார் திருக்கோயில் திருப் பணிக்காகப் பெரிதும் உழைத்தவர்களா வார்கள். 'மணிவாசக மன்றம்' என்ற அமைப்பின் மூலம் இவர்கள் சைவத்தை யும் தமிழையும் வளர்த்து வந்தார்கள்.

இத்திருமடத்தின் எட்டாவது குருமூர்த்திகளாகவுள்ள தவத்திரு மௌன சுந்தரமூர்த்தி சுவாமிகள், தவத்திரு சபாபதிச் சுவாமிகள் தொடங்கிய திருக் காளஞ் செடியுடையார் திருக்கோயில் திருப்பணியை நிறைவு செய்து திருக் குடமுழுக்கு நிகழ்த்தியதோடு இத்திருக் கோயிலில் நாள் வழிபாடு நிகழ்தற்குரிய அறக்கட்டளையினையும் கண்காணித்து வருகின்றார்கள்.

ஈசான்ய மடம் இராமலிங்க சுவாமிகள் எழுதிய 'நால்வர் நான்மணி மாலை விருத்தியுரை' தவத்திரு சபாபதிச் சுவாமிகள் உரைக் குறிப்புடன் இத்திரு மடத்தால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

11. ஈசான்ய மடம்:–

பொன்னம்பலக் கூத்தன் திருக் கோயிலின் வடகிழக்குத் திசையில் தேரடிப் பிள்ளையார் கோயில் தெருவின் வடகோடியில் ஈசான்ய மடம் அமைந் துள்ளது. இதன் ஆதி நிறுவனர் தவத்திரு பொன்னம்பல சுவாமிகள் ஆவார்கள். எனவேதான் இத்திருமடத்திற்கு "ஈசான்ய பொன்னம்பல சுவாமிகள் மடம்" எனத் திருப்பெயர் ஏற்பட்டது. 19–ஆம் நூற்றாண்டின் இறுதியில் இத்திருமடத்தின் தலைவராக விளங்கியவர் தவத்திரு இராமலிங்க சுவாமிகள் ஆவார்கள். முருகேசர் முதுநெறி வெண்பா, நால்வர் நான்மணி மாலை விருத்தியுரை முதலிய பல அரிய தமிழ்நூல்களை பதிப்பித்தும் பெரியபுராணத்திற்கு ஆறுமுகத் தம் பிரான் எழுதிய உரையினைப் பதிப்பித்தும், உரையெழுதாமல் எஞ்சிய பகுதிக்குத் தாமே எழுதி நிறைவு செய்து பதிப்பித்தும் பிரபந்தங்களை அரும்பொருட் குறிப்பு

களுடன் முதன்முதன் வெளியிட்டும், தமிழுக்கு ஆக்கமாகும் புலமைத் திருப் பணிகளைச் செய்துள்ளார்கள். ஞான சபை தலைவனை நாளும் போற்றிய வண்ணம் திருவருட் பிரகாச வள்ளலார் இத்திரு மடத்தில் சிலகாலம் தங்கி இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

12. கோ. சித. மடாலயம் (பொன்னம்பல சுவாமிகள் மடம்):—

தென்மொழியிற் தேர்ந்து வடநூற் கடற்கு எல்லைகண்ட பெருந்தகை தவத்திரு பொன்னம்பல சுவாமிகள் ஆவார்கள். இளமை காலத்தில் கோவிலூர் மடாலயச் சீடராய் விளங்கிய இவர்கள் பின்னர் நான்கு ஆண்டுகள் சிதம்பரம் மௌன தேசிகர் மடாலயத்தில் தத்துவநூல் போதகராக விளங்கினர்கள். இப் பெருமானுர் காரைக்குடி மு. ராம. ஆவிச்சி செட்டியாரின் உதவியோடு மன்னர்குடி சாலைத் தெருவில், தம் ஞானசிரியராகிய கோவிலூர் சிதம்பர ஞான தேசிகர் பெயர் விளங்கும் வண்ணம் "கோ. சி. மடம்" என்ற மடத்தை நிறுவினர்கள்.

நடராசர் சிற்சபைக்கு நகரத்தார் பணிசெய்த போது இவர்கள் பெரிய உதவிகளைச் செய்தனர். இளமை யாக்கினர் கோயில் திருக்குளத் திருப்பணி யிலும் இவரது தொண்டு சிறந்து விளங்கியது.

மூன்றும் பட்டமாகிய பரஞ்சோதி சுவாமிகளின் காலத்தில் இத்திரு மடத்தில் மகாத்மா காந்தியடிகள் இரண்டு நாட்கள் தங்கியிருந்தனர் என்பது இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இப்போது காளையார் கோயில் திருமடத்தின் அதிபராகிய தவத்திரு இராமநாத சுவாமிகள் அவர்களே இம் மடத்தையும் பரிபாலித்து வருகிறார்கள். திருப்பெருந் திரு பொன்னம்பல சுவாமிகள் இம் மடத்திற்குக் "கோ. சித. மடம்" எனப் பெயரிட்டாலும் இன்று அம்மடம் "பொன் னம்பல சுவாமிகள் மடம்" என்றே அழைக்கப்படுகின்றது. இம்மடத்தின் அடியவராகிய தவத்திரு பரஞ்சோதி சுவாமிகள் ஞானப்பிரகாசம் குளத்தையும், தச்சங்குளத்தையும் சீர் செய்தனர். இம்மடம் ஒரு வேதாந்த மடமாகும்.

பிற்கால மடங்கள்

கேணி மடம்:—

இது சிதம்பரம் அருள்மிகு செல்லி யம்மன் கோயிலுக்கு அருகே அமைந் துள்ளது. 'கோவிலூர் ஆண்டவர் சிக்கூலை யடுத்த பொருள் வைத்த சேரியில் மடம் நிறுவியபோது கேணி மடத்துத் துறவி யாகிய வீரபத்திரசுவாமிகளையே அழைத்துச் சென்று மடாதிபதியாக நிய மித்தார்' என்பது செவிவழிச் செய்தி யாகும். வசனநடை கைவந்த வல்லா ளராகிய தவத்திரு ஆறுமுகநாவலர் பெருமான் தம் வாழ்வைச் சைவ சமயத்துக்கு அர்ப்பணித்த அரிய நிகழ்ச்சி இந்த கேணி மடத்தில்தான் நடந்தது எனக் கூறுவர். கோவிலூர் பரம்பரை நித்தி யானந்த சுவாமிகளின் சமாதி இம்மடத்தில் இருக்கிறது. இம்மடாலயம் செங்குந்தர்கள் சிலரின் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. இன்றைக்கு எழுபத்தைந்து ஆண்டுகட்கு முன்னுல் இம்மடம் மௌனசுவாமிகள் மடத்தின் கண்காணிப்பில் இருந்தது என்பர்.

சுப்பைய சுவாமி மடம்:—

குஞ்சர மூர்த்தி விநாயகர் கோயில் தெருவில் சுப்பைய சுவாமி மடம் அமைந்துள்ளது. தவத்திரு சுயம்பிரகாச சுவாமிகள் கடந்த ஐம்பது ஆண்டுகளாக இதனை நிர்வகித்து வருகின்றார்கள். இத் திருமடத்தின் சார்பில் ஒரு பள்ளிக்கூடம் இயங்கி வருகின்றது.

நால்வர் மடம்:—

நால்வர் மடம் மன்னர்குடி சாலைத்

தெருவில் அமைந்துள்ளது. இங்கு நித்திய பூசையும் நால்வர் குருபூசைகளும் நிகழ்ந்து வருகின்றன. புஞ்சையைச் சேர்ந்த செங்குந்தர் குடும்பத்தவரால் பரிபாலிக்கப் பட்டு வருகிறது.

கொழும்புசாமி மடம்:–

ஆயிகுளம் தென்கரையில் கோமிலூரர் சிதம்பர சுவாமிகள் மாணவராகிய இராம சுவாமி சுவாமிகளால் கொழும்புசாமி மடம் அமைக்கப்பட்டது. இவர் ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்துள்ளார். இப்போது இம் மடத்தைச் சார்ந்த ஒரு பகுதியில் சில நல்லன்பர்களின் முயற்சியால் 'பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்' திருமடம் அமைக்கப் பெற்றுள்ளது.

திங்கட்கிழமை மடம்:–

திங்கட்கிழமை மடம் மன்னார்குடி சாலைத்தெருவில் உள்ளது. இத்திரு மடத்தில் பரமானந்த சுவாமிகள், அவதூத சுவாமிகள் ஆகியோரது சமாதி நிலையங்கள் அமைந்துள்ளன. இம்மடம் செங்குந்த இனத்தைச் சார்ந்த சில குடும்பத்தவரின் பரிபாலனத்தில் இருந்து வருகிறது.

சற்குரு விலாச மடம்:–

இது மன்னார்குடி சாலைத்தெருவில் அமைந்துள்ளது. இதனை நெடுஞ்சேரி புத்தூர் விசாலாட்சி ஆச்சியவர்கள் அமைத்தார்கள். இம்மடத்தில் தவத்திரு குஞ்சிதபாதம் சுவாமிகளின் சமாதியும் தவத்திரு பரஞ்சோதி சுவாமிகளின் சமாதியும் அமைந்துள்ளன. இதனையடுத்து மன்னார்குடி மடமும், சபாபதி சுவாமிகள் மடமும் உள்ளன.

வேப்பிலை மடம்:–

சபாநாயகர் தெருவில் வேப்பிலை சாமி மடம் அமைந்துள்ளது. இதனை அழகானந்தம் கனகசபை முதலியார் சத்திரம் என்றும் அழைப்பர். இங்கு ஆண்டுதோறும் சித்திரைப் பரணியில் சிறுத்தொண்டர் அமுதுபடையல் செங்குந்தர்களால் சிறப்பாக நடத்தப்படுகிறது.

ஆத்திநாட்டார் மடம்:–

ஆத்திநாட்டார் மடம் வடக்குவீதியில் உள்ளது. துறையூரை அடுத்த செட்டிகுளம், மாவிலங்கை முதலிய ஊர்களில் வாழ்கின்ற உடையார் மரபைச் சார்ந்த பொதுவினர் இதனை நிர்வகித்து வருகின்றனர்.

இராமநாத சுவாமிகள் மடம் (தச்சங் குளத்து மடம்):–

இம்மடம் முப்பது ஆண்டுகட்கு முன் திரு. கிருஷ்ணசாமி என்பவரால் பரிபாலிக்கப்பட்டு வந்தது. இதனைத் தச்சங் குளம் மடம் எனவும் அழைப்பர். இம் மடத்தையடுத்து தாதசாமி மடம், ஞாயிற்றுக்கிழமை மடம் முதலிய மடங்கள் உள்ளன.

கள்ளிக்காட்டு மடம்:–

வேணுகோபால் பிள்ளைத் தெருவில் கள்ளிக்காட்டு மடம் அமைந்துள்ளது. இம்மடம் சோழவரச் செட்டியார்களின் பரிபாலனத்தில் உள்ளது. நடராஜர் ஆலய அறக்கட்டளையும் அன்னம்பாலிப்பும் இங்கே நிகழ்கின்றன.

நந்தனர் மடம்:–

ஓமக்குளக்கரையில் திருநாளைப்போவார் நாயனார் நினைவால் எழுந்த திருமடம் நந்தனர் மடமாகும். இம்மடத்தில் 1917 ஆம் ஆண்டில் தவத்திரு சுவாமி ஜகஜ்ஜானந்தா அவர்கள் தவத்திரு சிவப் பிரகாச சுவாமிகளிடம் தர்க்கம், வேதாந்தம் முதலியவற்றைக் கற்றுத் தேர்ந்தனர். இன்று அரசு நடத்தும் நந்தனர் கல்வி நிலையங்களை அமைத்தவர் இவரேயாவர். இம்மடத்தைச் சார்ந்து சிவலோகநாதர் சிவாலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அங்கு நித்திய

பூசைகள் நன்கு நடைபெற்று வருகின்றன.

ரெட்டியார் துறையூர் மடம்:–

ரெட்டியார் துறையூர் மடம் இளமை யாக்கினூர் கோயிலுக்கு அருகில் அமைத் துள்ளது. நல்லம்பலவாண சுவாமிகள் இதனை நிறுவியவராவார். இவர் கோவிலூர் துறவு ஆண்டவராகிய அருணாசல ஞானதேசிகரின் மாணவர். இப்போது இம்மடம் ஸ்ரீரங்கம் வேணுகோபால ரெட்டியாரின் வாரிசு தாரர் மேற்பார்வையில் இருந்து வருகிறது.

குயவர் மடம்:–

குயவன் பேட்டை முதலிய சிற்றூர் களில் வாழும் வேட்கோவர்க்கு உரிமை யுடைய இம்மடத்தை குயவர் மரபில் பொதுவாக நிர்வகித்து வருகின்றனர். இங்கு திருநீலகண்ட நாயனூர் குருபூசை சிறப்பாக நடைபெற்று வருகிறது.

ஸ்ரீ பரஞ்சோதி சுவாமிகள் மடம்:–

கோ. சித. மடத்தின் தலைவரா யிருந்த சிதம்பர சுவாமிகளின் தலை மாணாக்கர் பரஞ்சோதி சுவாமிகள் ஆவார். இவரது சமாதி ஆலயம் சற்குரு விலாச மடத்தில் உள்ளது. இம்மடத்தின் அருகில் சுவாமிகளின் சீடர்கள் 'பரஞ்சோதி ஆசிரமம்' என்ற பெயரில் ஒரு ஆசிரமத்தை நிறுவினர். இப்பரஞ்சோதி சுவாமி களோடு தொடர்புடைய அருணாசல ஐயா என்பவர் சபாநாயகர் கோயில் சீழ் சன்னதியில் 'பரஞ்சோதி சுவாமிகள் மடம்' என்ற நிறுவனத்தைத் தொடங்கி யுள்ளார்கள். இம்மடம் 12 ஆண்டுகளாகச் சீரிய முறையில் பணியாற்றி வருகின்றது.

அறுபத்து மூவர் குருபூசை மடம்:–

நாட்டுக்கோட்டை நகரத்தார்களாகிய பள்ளத்தூர் சு. ப. குடும்பத்தவரால் தெற்குவீதியில் அறுபத்துமூவர் குருபூஜை மடம் ஏற்படுத்தப்பட்டது. இங்கு நாயன்மார் திருநட்சத்திரங்களில் சிறப்பு வழிபாடும், அன்னம்பாலிப்பும் நடை பெறுகிறது. அறுபத்துமூவர் மடம் என்ற பெயரில் கமலீஸ்வரன் கோயில் தெருவிலும் ஒரு மடம் உள்ளது.

சஷ்டி மடம்:–

புதுப்பேட்டை வடக்குத்தெருவில் சஷ்டி மடம் அமைந்துள்ளது. மாத சஷ்டியில் அன்னம்பாலிப்பும், கந்த சஷ்டியின்போது சிறப்புப் பூசனைகளும் இம்மடத்தில் நிகழ்கின்றன. இலையூர் சாமிநாத முதலியார், நாகப்ப முதலியார் மரபினர்களின் வழியே அண்ணாமலை முதலியார் அவர்களும் சோமசுந்தர முதலியார் அவர்களும் இதனைப் பரி பாலித்து வந்தனர். இப்போது திரு என். எஸ். மாணிக்க முதலியார் அவர்களின் பரிபாலனத்தில் இம்மடம் உள்ளது.

விசாக மடம்:–

புதுப்பேட்டை வடக்குத் தெருவில் விசாக மடம் உள்ளது. மாதந்தோறும் விசாக நாளில் அன்னம்பாலிப்பும், வைகாசி விசாக வசந்தோற்சவத்தின் போது சிறப்புப் பூசனைகளும் இம்மடத்தில் நிகழ்கின்றன.

பிற மடங்கள்:–

ஞானப்பிரகாச குளத்தின் வட கரையில் வடக்குமடம், செவ்வாய்க்கிழமை மடம் முதலிய யாழ்ப்பாணத்து நிறுவனங் களும், மாஞ முதலிமடம், சிவபுரி மடம், புண்ணியநாச்சி மடம் முதலிய மடங்களும், கள்ளிக்காட்டு மடத்தைச் சார்ந்த குமரர் குளத்தின் அருகில் குமார குளத்துமடம், கார்த்திகை மடம் ஆகிய மடங்களும், தேரடிப்பிள்ளையார் கோயி லுக்குத் தெற்கே ஆறுநாட்டு வேளாளர் மடமும் சிதம்பரத்தில் அமைந்துள்ள பிற மடங்கள் ஆகும்.

இவையேயன்றி கண்கட்டி மறை ஞானசம்பந்தர் மடம், திருவாதிரை மடம், ஏகாதசிமடம், வேதபாராயணமடம், வீபூதி மடம், சாலியர் மடம், நோக்கர் மடம்,

உலகமூர்த்தி தேசிகர் மடம், சங்காரச்சாரி யார் மடம், சம்பந்தகாரத்தெரு உத்திரா பதியார் மடம், செங்கழுநீர்பிள்ளையார் கோயில் தெரு சிவஞானத் திருத்தளி மடம் முதலிய திருமடங்களும் தெய்வ நகரமாகிய தில்லையில் ஆன்மீக நற்பணி புரிந்து வருகின்றன.

இவ்வாறு திருமடங்களில் சீரிய தொண்டினுல் சிறந்த தில்லைத்திருநகரை மகாவித்துவான் அவர்கள் "பூ மா தங்கு மடம் கல்விச்சாலை ஆர்தில்லை" எனப் பாடி மகிழ்ந்துள்ளார்கள். திருமடங்களின் தொண்டினுல் சைவ நன்னெறியும், செந்தமிழ் இனிமையும் மேன்மேலும் சிறந்தோங்கிச் சிற்றம்பலத்துச் செல்வப் பெருமான் திருவருள் என்றும் பெருகி வளர்வதாக.

திருச்சிற்றம்பலம்.

ஊன டைந்த உடம்பின் பிறவியே
தான டைந்த உறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மான டஞ்செய் வரதர் பொற் ருள்தொழ.

பெரியபுராணம்



உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

பெரியபுராணம்

தருமையும் தில்லையும்

டாக்டர் ஏ.வி. ஜயசந்திரன்,
இயக்குநர், அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், தருமபுரம்.
டாக்டர் ஜி. தெய்வநாயகம்,
இணைப் பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

சமய, சந்தான ஆசிரியர்களுக்கும், திருமுறை, வேதம் ஆகிய அருள் நூல்களுக்கும் தனிக்கோயில் எழுப்பிக் குடமுழுக்கினைச் சிறப்பாகச் செய்து மகிழ்ந்த தருமை ஆதீன 26–வது ஸ்ரீ–ல–ஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் பெரும் முயற்சியினைத் தமிழக மக்கள் அண்மையில் பாராட்டியது எல்லா உள்ளங்களிலும் இன்றும் மறவாது நிலைத் துள்ளது. தருமையையும், தில்லையினையும் வரலாற்று அடிப்படையில் திருப்பணிக்குப் பிணைத்த ஒரு செப்பேட்டினை இங்கு ஆய்வு செய்வோம்.

இந்தச் செப்பேடு தருமையாதீனத்தில் உள்ளது. இரண்டு பக்கங்கள் கொண்டது. தில்லைக்கூத்தன் ஆனந்த நடனத்தில், சிவகாமியுடன் விளங்கும் உருவத்தினைச் செப்பேட்டின் தொடக்கத்தில் பொறித் துள்ளனர். செப்பேட்டின் ஆண்டு சாலி வாகன சகாப்தம் 1724 கலியுக ஆண்டு 4903, ருத்ரோத்காரி வருடம் மாசி மாதம் 13–ம் தேதி வியாழக்கிழமை, பூச நட்சத்திரமும் திரயோதசியும் கூடிய நன்னாளாகும். அந்தக் காலத்தில் தருமை யாதீனக் கட்டளைத் தம்பிரானாக விளங் கியவர் ஸ்ரீ நமச்சிவாயத் தம்பிரான் ஆவார்கள். சபாநாயகர் ஆலயத்தின் தெற்கு வாசலில் அறுபத்து மூவர் குருபூஜை அன்னதான மடம் என்று ஒன்று இருந்தது.

தருமபுர ஆதீனம் நமச்சிவாயத் தம்பிரானவர்களிடத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்கள், சமயாசாரியர்கள், சந்தான ஆசிரியர்கள் இவர்கள் நாட் களில், அபிஷேகம், நிவேதனம், குருபூஜை ஆகியவற்றுடன் அன்னதானமும் நடந்து வருவதற்கு உரிய வருவாயாக,

சோழ நாட்டிலுள்ள 34– ஊர்களில் வாழ்ந்திருந்த நிலக்கிழார்களாகிய வேளாளர் அனைவரும்,

அணக்குடி பெருநிலக்கிழார் கண்ணங்குடி பொன்னம்பல பிள்ளை அவர்கள் தலைமையில் கூடியிருந்து, அவரவர் ஒப்புக்கொண்டு கையொப்ப மிட்டபடிக்கு,

வருடா வருடம், தை, மாசி ஆகிய அறுவடைப் பருவத்தில், அணக்குடி முத்திரை மரக்காலினால் நெல் அளந்து கொடுத்து,

மேற்படி குருபூஜை அன்னதானக் கட்டளை ஆண்டுதோறும் முறைப்படி நடந்து வருவதற்கு, அணக்குடி கண்ணங் குடி பொன்னம்பல பிள்ளை முகாந்திரம் பட்டயம் எழுதிக் கொடுத்துள்ளனர்.

குருபூஜை அன்னதானக் கட்டளைக்கு நெல் அளித்த பெருமக்களின் ஊர்கள், பட்டயப்படி:

அணைக்குடி
கருப்பூர்
பந்தணைநல்லூர்
நெய்வாசல்

திருச்சிற்றம்பலம்
சோதிவளாகம்
காரிகுடி
திருமாத்தூர்
திருப்பனந்தாள்
அந்தமங்கலம்
நந்திவனம்
திருநாகேசுவரம்
கும்பகோணம்
திருசிரபுரம்
விசையமங்கை
திருப்பிரம்பியம்
உள்ளுடையாநத்தம்
திரைலோக்கி
கீழைக்காட்டூர்
அத்திப்பாக்கம்
மண்ணிப்படித்துறை
சீர்காழி
தரங்கம்பாடி
பிறையாறு
குத்தாலம்
வழுவூர்
தெளித்தெரு
சித்தக்காடு
மாங்குடி
செங்குடி
கீழமாத்தூர்
சிறுவெழுந்தூர்

மேலே உள்ள 34 – ஊர்களாகும்.

பட்டயத்தில் அவரவர் மனப் பூர்வமாகச் சம்மதித்துக் கையெழுத்து எழுதினபடிக்கு வருடா வருடம் நெல் கொடுத்து வந்துள்ளனர். வேளாளப் பெருமக்களின் பெயர்கள் பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

கட்டளைப் படிகள்:–

குருபூஜை, அன்னதானச் செல வினங்கள்:

நைவேத்தியம், அன்னதானம், தங்கடிமைப்படி அரிசி, தீக்ஷதருக்கு அரிசி படிகள், சாத மடத்துக்கு ஒருபடி அரிசி வீதம் சாதம். அரிகேசரி குடியானவர்கள், படையாச்சிமார்கள் ஆகியோரின் உரிமைகள் ஆகியவை கட்டமைந்ததாக இருந்துள்ளதனைப் பட்டயச் செய்திகள் உணர்த்துகின்றன.

இப்பட்டயம் தோன்றிய காலத்தில் கி. பி. 1802–ல் தஞ்சையில் மராட்டிய மன்னர் சரபோஜியின் ஆட்சி நிகழ்ந்து துள்ளது. இம்மன்னரின் ஆட்சிக்காலம் கி. பி. 1798 – 1832 ஆகும். இக் காலத்தில் தருமபுர ஆதீனம், ஸ்ரீ ல ஸ்ரீ நமச்சிவாயத் தம்பிரானவர்கள் அருளாட் சியில் நிகழ்ந்துள்ளது. தருமபுர ஆதீனம் தொன்றுதொட்டுச் சோழர்ஆட்சி முதலாக அருளாட்சி செய்து வந்ததுடன் சிதம்பரத்தில் அறுபத்து மூவர் குருபூஜை அன்னதான மடம் நிர்வாகத்தினை மிக்க சிறப்புடன் நிகழ்த்தியதனையும் பட்டயச் செய்திகள் புலப்படுத்துகின்றன.

தஞ்சை அரண்மனை உள்ளாட்சியில் தானிகராக விளங்கியவரும், கல்வி அரசியலறிவு, ஆன்மீகம், சிவபக்தி, தர்ம சிந்தனை, நல்லொழுக்கம் ஆகிய நற்பண்பு களுடன் அதிகாரியாக இருந்தவரும் அணக்குடி சாமிநாதபிள்ளை என்பவ ராவார். அப் பெருமகனுரின் நேர்மை யான பணி களினுல் சரபோஜி மன்னரின், ஆட்சி சிறந்திருந்தது. அரசியரும் "அண்ணு" என்ற சிறப்புப் பெயரால் பிள்ளை அவர்களை அழைப்பார்களாயினர்.

இத்தகைய புகழாபரணமுடைய அணக்குடி அண்ணு அவர்களின் உறவின் வழிவந்தவராகிய அணக்குடி கண்ணங் குடி பொன்னம்பலப் பிள்ளை என்பாரின் முகாந்திரத்துடன் பட்டயம் அளிக்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

கல்வெட்டு வாசகமாவன:–

பட்டயம் எண் – 12

1. உ தறுமபுரம் சுபமஸ்து சாலிவாகன சகார்த்தம் 1724 கலியாப்தம் 4093
2. இதின்மேல் செல்லாநின்ற ருத்திரோ

உரு மாசி மீ 13உ குருசாரமும் பூச நழெத்திரமும் திற

3. யோதெசியும் பெ நாமயோகமுந் தையி துருவோணமுங்கூடின சுப தினத்தில் பூலோ

4. சுகயிலாசமான சிதம்பர சேஷ்த் திரத்தில் ஸ்ரீ சபாநாதர் ஆனந்த நிருத்தஞ் செய்யி

5. ம் சபா சன்னிதானத்தில் தெற்கு வாசலில் அறுபத்துமூவர் குருபூஜை அன்னதா

6. ன மடத்தில் தற்மபுரத்து ஆதீனம் நமசிவாயதம்பிரானவர்களிடத்தி

7. ல் அறுபத்து மூன்று நாயமார் மாணிக்கவாசகசுவாமிகள் சமையாச

8. ரரியர்சந்தான ஆசாரியார் இவர்கள் தினத்தில்அபிஷேக நைவேத்தியம்

9. குருபூஜை அன்னதானம் நடந்து வருகிறத்துக்கு ஆகவேளாளர் அனவரும் அ

10. அணக்குடி கண்ணங்குடி பொன் னம்பலபிள்ளையவர்கள் முகாந்திரம்

11. பட்டையம்யெழுதி குடுத்தபடி அணைக்குடி கருப்பூர் பந்தணைநல்லூர்

12. நெய்வாசல் விளைத்தொட்டி திருச் சிற்றம்பலம் சோதிவிளாகம் கா

13. ருகுடி திருமாத்தூர் திருப்பணைந்தாள் அந்த மங்கலம் நந்திவன

14. ம் திருஞசிசரம் கும்பகோணம் திருசிரபுரம் விசைய மங்கைதி

15. ருப்பிரம்பியம் உள்ளுடையானந்தம் திரிலோக்கி கீழக்காட்டூர்

16. அத்திப்பாக்கும் திருவாளபுத்தூர் மண்ணிபடிந்துறை சீர்காழி

17. தயங்கம்பாடி பிறையாறுகுத்தாலம் வழுவூர் தெளிதடுறு சித்த

18. க்காடுமாங்குடி செங்குடிமேமாத்தூர் சிறுவெழுந்தூர் யிந்த திரும

19. ங்களில் யிருக்குற அனைவரும் இந்த பட்டையத்தில் அவர் அ

20. வர் மனப்பூறுவமாகச் சமதிச்சு கையெழுத்து யெழுதினபடிக்கி

21. வருஷாவருஷம் மாசி மீ பங்குனி மீ குடுத்து வருவோமாக எம்அண

22. க்குடிமுத்திரை மரக்கால் நெல்நாயள் ராமசுவாமிபிள்ளை

23. கயெழுத்து மேல்படியூர் பொன்னம் பலபிள்ளை கையெழுத்து

24. நெல் 200 சுருப்பூர் அழகப்பிள்ளை நெல் 100 அந்த மங்கலம் சாபசிவபிள்

25. ளை புருமுத்துச் சிதம்பரபிள்ளை நெல் 500 திருஞசிசுவரம் சுநகசபாப

26. தி பிள்ளை 100 நெயிவாசல் பொன்னம்பலபிள்ளை பிள்

27. ளை நெல் 100 கையெழுத்து வேளத் தொட்டி சிதம்பரபிள்ளை நெல் 200 பா

28. பாகுடி விளர்ப்பொதுவிடை கள்துக் கீழ்பிறம்கூற நெல் 15

29. இதுக்குச் சட்டையப்பிள்ளை ஆவத் தாறணபிள்ளை சட்டையப்

30. பிள்ளை ஒப்பிலாமணியாபிள்ளை யிருந்தனுவ பெருங் கையெழு

31. த்து சனுசரயத்துறை ஊர்ப்பொது விடை 925 சபாபதி நெ

32. யிவேத்தியம் தங்கடிமை அரிசி படிக்கு தீக்ஷதருக்கு அரிசிபடிக்கு ச

33. ாத மடத்துக்கு ஒருபடி அரிசிசாதம் அரசேரி குடியானவர்கள் படை

34. யாச்சி மார்களைவரும் நெல் 100 நந்தவனம் பொன்னம்பலபி

35. ள்ளை நெல் 200 குத்தாலம் தெய் வராயப்பிள்ளை நெல் 500 திருச் சிரபுரம்அ

36. றுஞசலபிள்ளை பணம்வராகன் 2 கீழமாத்தூர் வரந்தரும் பெருமாள்பி

37. குடி தியாகருசபிள்ளை நெல் 300 சோமனுதபுரம் பொன்னம்பல

---

1. உ பிள்ளை நெல் 100 திருப்பிறம் பியம் சங்கரமூற்தியாபிள்ளை நெல்

2. 100 சாமினுதபிள்ளை நெல் 200 சொக்கனுதபிள்ளை நெல் 100 விசையம

3. ங்கை மருதப்பிள்ளை 1 பணம் ஊருடையாநத்தம் குமாரசாமியாபி
4. ள்ளை நெல் 200 மேக்காட்டுர்ச் சட்டையபளிள்ளை நெல் 2 அத்திப் பாக்கம்
5. சாமிஞதபிள்ளை நெல் 100 பந்தண நல்லூர் வய்யாபுரயாவு ளைபுரு
6. வயித்திஞதபிள்ளை நெல் 400 முத்தியபிள்ளை நெல்500 கறுப்பபிளை
7. நெல் 100 சுப்பிறமணியபிள்ளை நெல் 100 ஞகப்பிள்ளை நெல் 100 திருமேனி
8. யார்கோவில் சாமிஞதபிள்ளை நெல் 200 கும்பகோணம் மாத
9. ளம்பேட்டை சுப்பபிள்ளை நெல் 100 கடலங்குடி வயித்திலிங்க பிள்
10. ளை நெல் 600 வழுவூர் பொது விடை வளையாமபட்டணத்துக்கு மேல்
11. பக்கம் கூத்தாடி மானியத்துக்கு கீழ்பக்கம் நிலம் 1280 களஅய உள
12. ராரான வருஞ்சொல்படிக்கிராம சுவாமியாபிள்ளை கையெழுத்து ெ
13. சங்குடி முத்தியபிள்ளை நெல் 600 புறையாறு அருணசலபிள்ளை வே
14. டம்முளை கைபணம் தலங்ம்பாடி தீத்தியபிள்ளை வெள்ளிபணம் நெத்திய
15. ப்பிள்ளை பணம் 4 மன்னர்கோவில்ச் சீமையார் சிறுவற கெழு நரநல்
16. லூர் அங்கனுடைய சுப்பரூயப் பிள்ளை பசுகா நெல் 200 பணம் விராகன் ஞகப
17. ருக்குடை அறுணசலபபிள்ளை பசுகா நெல் 200 பணம் விராகன் 5 சிம்பரபிரா
18. ணம்நியமச்சுரக்கம் தேனலம்புதாற் செஞ்சடைத் தேவாதெரு அனு
19. றந்த ஞானமானிலமாகிய சிதம்பர நகரக்கண்ணு அன்பினும்
20. ன்பிலாதாயினு மன்னதான முறுப்பவர் சிவபதம் பெறுதல் சத்
21. த்தியமாலகெ உ ஆயிரம் பெயர்க் கறுசுவையடி சிலங்களித்த மெ
22. ய் செல்வர்தம் பயனினுமிடியிடை யொருவனேயவர்க்கொருபிடி
23. வழிதரும் பயனெதூ யதெப்பதி யினுமுளதிருவெண்பர்தூ ே
24. யர் உ பறங்கிப்பேட்டை ஆடியபாத செட்டியார் முத்தியபிள்ளை
25. சுந்தரவாத்தியார் சுப்பராய செட்டி யார் யிந்தப்பட்டையும் பண்
26. ணின நன்மைக்கி வயித சியஞத பிள்ளை நெட்டெழுத்து உ



பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

திருப்பல்லாண்டு

WITH BEST
COMPLIMENTS
FROM

M. S. Sethuraman

8, JAGADAMBAL STREET,
T. NAGAR □ MADRAS-600 017.

With Best Compliments From

CHEMPLAST
MADRAS

கோயில் புராணம்

செந்தமிழ்ச் செல்வர், புலவர், டாக்டர்
ஐ. ஆனந்தநடராஜ தீக்ஷிதர், M.A., B.O.L., Dip. in Sans., Ph.D.,
இணைப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

கோயில் புராணம்:

கோயில் என்பது பொதுப் பெயர். ஆஞல் சிதம்பரத்தைக் குறிக்கும் போது அது சிறப்புப் பெயர் சைவ சமய மரபின்படி 'கோயில்' என்ற சொல் தில்லைப்பதியாகிய சிதம்பரத்தையே குறிக்கும். அல்வாறே வைணவர்கட்குக்-'கோயில்' என்பது திருவரங்கரத்தையே குறிக்கும்.

தில்லைத் திருத்தலம் பற்றி முதன் முதலில் புராண வரிசையில் தோன்றிய நூல் கோயில் புராணம். இதனை இயற்றியவர் கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார். இந்நூலைப் பற்றிய சிறு-விளக்கம் இங்குத் தரப்படுகிறது.

தில்லைத் திருத்தலம்:-

பெரும்பற்றப் புலியூர், தில்லைவனம், பொன்னம்பலம், பூலோக கைலாசம். புண்டரீகபுரம், வியாக்கிரபுரம், சிதம்பரம் என்னும் பெயர்களையுடைய தில்லைத்திருத் தலம் மிகமிகப் பழம்புகழ் வாய்ந்தது. சைவர்களுக்கு 'இதயம்' போன்றது. காரணம், இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றனாலும் சிறப்புற்று விளங்குவதேயாகும். இதனைக் குமர குருபரர்,

"தீர்த்தம் என்பது சிவகங் கையே;
ஏத்தருந் தலம் எழிற்புலி யூரே;
மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே"

எனப் போற்றி மகிழ்வர்.

இத்தலத்தின் திருக்கோயிலில் சிற்றம் பலம், பொன்னம்பலம், பேரம்பலம், நிருத்தசபை, ராஜசபை என்னும் ஐந்து பெருமன்றங்கள் அமைந்திருத்தலும், நட ராசர், கோவிந்தராசர் இருவரது சந்நிதி களும் ஒரிடத்தில் நின்று தரிசிக்கும்படி அமைந்திருத்தலும் ஓர் தனிச்சிறப்பு!

கோயில் புராணம்:

'கோயில்' எனப்படும் தில்லைத தலத்தின் வரலாறு கூறும் நூல் 'கோயில் புராணம்'. இந்நூல் சைவ சந்தானகுரவர் களுள் ஒருவரான கொற்றவன்குடிஉமாபதி சிவாச்சாரியரால் செய்யுள்வடிவில் தல புராணமாகப் பாடப்பட்டது. பாயிரம் உட்பட 415 விருத்தங்களைக் கொண்டது.

வியாக்கிர பாதச் சுருக்கம், பதஞ்சலிச் சுருக்கம், நடராசச் சுருக்கம், இரணியவன்மச் சுருக்கம், திருவிழாச் சுருக்கம் என்னும் ஐந்து சுருக்கங்களை உடையது; தலபுராண நூல்களில் முதன்மையானது; பழமையானது. தில்லைக் கூத்தனின் திரு நடனச் சிறப்பையும், பதஞ்சலி வியாக்கரபாதர்கட்கு அவன் அருள் புரிந்த பாங்கையும் தாருகாவனத்து முனிவர்களின் தருக்கை அடக்கிய திறத் தையும், இரணியவர்மன் நோய் நீங்கிப் பொன்னுடல் பெற்ற சிறப்பையும் விரித் துரைக்கின்றது இப்புராண நூல். இவையே இந்நூலின் பாடு பொருள்கள்.

உமாபதி சிவனார்:-

உமாபதி சிவாச்சாரியார் தில்லை வாழந்தணர் மரபில் தோன்றியவர்; சைவ சந்தானச்சாரிய மரபின் இறுதியில் உள்ளவர். சிவஞான போதம் என்னும் சைவ சித்தாந்த சாத்திரத்தை இயற்றி யருளிய மெய்கண்டாரின் மாணக்கர் அருணந்தி சிவனார். அவரது மாணக்கர் மறை ஞான சம்பந்தர். மறை ஞான சம்பந்தரின் மாணக்கர் உமாபதி சிவனார்! அருள் நமச்சிவாய தேசிகர் போன்றோர் இவரிடம் உபதேசம் பெற்றவராவர்.

உமாபதி சிவனார் தில்லைக் கருகிலுள்ள கொற்றவன் குடியில் தங்கி இருந்த போது கோயிற் புராணத்தை இயற்றினார்.

சிதம்பர மான்மியத்தின் வழியாக நூலாக இயற்றப் பட்ட கோயிற் புராணம் அரங்கேற்றப் படாமல் பேடகத்துள் இருந்த பொழுது இறைவன் தில்லைவாழ் அந்தணர் களின் கனவில் தோன்றி, 'யாம் கொற்ற வன்குடி உமாபதியின் பேடகத்துள் இருக் கின்றோம்' எனக் கூறியருள அவர்கள் இவரது பெருமையை அறிந்து அங்கு வந்து அவர்களைக் கண்டு புராணத்தை அரங் கேற்றும்படி கேட்டனர். உமாபதியார் அதற்கிசைந்து கோயிற் புராண நூலை ஆயிரங்கால் மண்டபத்தில் அன்பர்கள் மகிழ அரங்கேற்றம் செய்தருளினர்.

பெத்தான் சாம்பானுக்கு முத்தி:-

உமாபதி சிவனார்செய்த அருட்செயல் களில் குறிப்பிடத்தக்கது பெத்தான் சாம்பானுக்குத் தீக்கை செய்து முத்தி அளித்ததாகும். 'பெத்தான்' என்பவன் தீண்டத்தகாத வகுப்பில் பிறந்தவன். இறைவன்பால் பேரன்பு பூண்டு வழி பட்டவன். அவனது பரிபக்குவ நிலையை எண்ணிய இறைவன் தம்கைப்பட ஓர் ஓலையில்

''அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங் குடியார்க் கெழுதியகைச் சீட்டு – படியின்மிசைப் பெத்தான்சாம் பானுக்குப் பேதமற தீக்கை செய்து முத்தி கொடுத்த முறை''

என்ற பாடலை எழுதி உமாபதி சிவத்திடம் தரும்படி அனுப்பினார். அதனை ஏற்றுக் கொண்ட இவ்வருளாளர் சாதி வேற்றுமை பாராமல் அவனுக்குத் தீக்கை செய்த தோடு சிவப் பேறு கிடைக்குமாறும் செய்தார்.

இவரால் எழுதப்பட்ட சித்தாந்த சாத்திர நூல்கள் சிவப்பிரகாசம், திரு வருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை வெண்பா, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பன. இவை 'சித்தாந்த அட்டகம்' எனச் சைவப் பெருமக்களால் போற்றப் படுகின்றன.

இவரால் பாடப்பெற்ற பிற பிர பந்தங்கள் திருத்தொண்டர் புராண சாரம், திருமுறைகண்ட புராணம், சேக்கிழார்புராணம், திருப்பதிக்கோவை, திருப்பதிகக் கோவை என்பன ஆகும். இவர் சமாதி பெற்ற இடம் கொற்றவன்குடி.

கோயில் புராணம் கூறும் பொருள்:-

தில்லைத் திருத்தலம் தோன்றிய வரலாற்றைப் புராண மரபின்படி கூறுவது கோயில் புராணம்.

''பொற்ப தப்பொது வார்புலி யூர்புகழ் சொற்ப தப்பொருள் ஆகுவது தூயவர் அற்ப கல்தொழ வாழணி கோபுரக் கற்ப கத்தனி யாணை கழல்களே''

என்னும் கற்பக விநாயகர் துதியோடு கோயில் புராணம் தொடங்குகிறது. தில்லையின் மேற்குக் கோபுர வாசலில் இன்று உள்ள கற்பகத்தின் மேல் பாடப் பட்ட துதிப்பாடல் இது.

வியாக்கிரபாதர்: (புலிக்கால் முனிவர்)

மத்யந்தின முனிவரின் குமாரரான மாத்யந்தின முனிவர் வேதாகமங்களையும் ஆறு சாத்திரங்களையும் கற்றுணர்ந்து தேர்ந்தபின் ஆத்ம ஞானம் பெறுவதற் கான வழியாதெனக் கூறும்படி தந்தையை வேண்டினர். அவர் ''தில்லைவனம்செல்; அங்கு சுயம்புவாய் எழுந்தருளியுள்ள சிவ லிங்கத்தை வழிபட்டுப் பூஜை செய். ஆத்ம ஞானம் கிட்டும்'' என்றார்.

''ஞாலத்தா யிரகோடி நற்றூணம் உள;
அவற்றின்
ஏலத்தான் நலமார இடங்கொண்ட எழிற்
றில்லை
மூலத்தா னத்தொளியாய் முளைத்தெழுந்த
சிவலிங்கக்
கோலத்தா னின்பூசை கொள்வானென்
றுரைசெய்து''
வியாக்கிர - 8

அவ்வுரையின் வண்ணம் தில்லை வன மடைந்த முனிவர் சிவலிங்கம் கண்டு அதனை வழிபட்டுவந்தார். வைகறையில் வண்டுகள் வந்து தேனுண்டு எச்சில் படுத்துமுன் பூசைக்கு மலர் சேகரிப்ப தற்காக ஒளிதரும் புலிக்கண்களையும், மரத்தில் வழுக்காமல் பற்றி ஏறுவதற் காகப் புலிக்கால்களையும் இறைவ னருளால் பெற்றமையின் இவர் வியாக்கிர பாதர் எனப்பெயர் பெற்றவர் என்பர்.

இவ்வரலாற்றை வியாக்கிரபாதச் சுருக்கம் விரித்துரைக்கிறது.

பதஞ்சலி முனிவர்:-

இறைவனது ஆனந்தத் திருக்கூத்தைத் தரிசித்து அருட்பேறு பெற்ற மற்றோர் முனிவர் பதஞ்சலியார். இந்நடனத்தின் பெருமையை ஒரு நாள் ஆதிசேடனகிய பதஞ்சலிக்குத் திருமால் எடுத்துரைத்தார். தாருகாவனத்து முனிவர்களும் தருக் கொழிந்து தாளில் வீழ்ந்து வணங்கிய புயங்கரண நடனத்தை,

''விரவிய அங்கணன் எங்கணும்
விரிசடை மண்டி அலைந்திட,
வெரிவிரி செங்கை சுழன்றிட,
இடிதுடி கொண்டிட, எண்டிசை
பரிபுர புண்டரி கந்தகு
பதுக ளம்பல குந்தொழு
அருள்புரி எந்தையும் மடந்தையும்
அதிர நடங்கள் தொடங்கினன்''.
பதஞ்சலி – 40.

என எடுத்துரைத்தனர். அந்நடனத்தைக் கண்டு கண்களிக்கும் ஆவலோடு ஆதி சேடன் தில்லையம்பதியை அடைந்தான். வியாக்கிரபாதருடன் கூடி இறைவன் திருநடம் கண்டு மகிழ்ந்தான். அங்கேயே தங்கி வழிபட்டதோடு ஆயிரங்கால் மண்டபத்தில் அமர்ந்து கௌடபாதர் முதலான பல மாணவர்களுக்கு வியா கரண சூத்திர பாடத்தையும் உபதேசித் தான். இவ்வரலாற்றைப் பகர்கின்றது இரண்டாம் பகுதியான பதஞ்சலி சுருக்கம்.

இவையேயன்றி உபமன்யுவின் பிறப்பு, அவர் பொருட்டுத் திருப்பாற் கடல் வந்தது, இரண்யவன்மன் சிவகங் கையில் மூழ்கி நோய் நீங்கியமை, அவன் இறைவன் திருக்கோயில் திருப்பணி செய்து பொன் ஓடு வேய்ந்தமை, போன்ற செய்திகளும் இந்நூலில் கூறப்படுகின்றன.

தாருகாவன முனிவர்களும் அவர் தம் பத்தினிமார்களும் தருக்கொழிந்த செய்தி இந்நூலின் சுவையான பகுதியாக உள்ளது.

திருவிழாக்கள்:-

மார்கழி-திருவாதிரை விழா.

இறைவனுக்கு நாள்தோறும் செய்யும் பூசை நித்தியம் என்றும், விசேட காலங் களில் செய்யப்படும் விழாக்கள் நைமித் திகம் என்றும் கூறப்படும்.

தில்லைத் திருக்கூத்தனுக்கு ஓர் ஆண்டில் இரண்டு பெரிய திருவிழாக்கள்

நடைபெறுகின்றன. ஒன்று மார்கழித் திங்களில் நடைபெறும் திருவாதிரை விழா; மற்றது ஆனியில் நடைபெறும் திருமஞ்சனம்.

நித்திய பூசைகள் ஆறுவேளை நடைபெறுகின்றன. அவை இறைவனது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந் தொழில்களைக்குறிக்கும்.

வைகறையில் நடைபெறும் திருவனந்தல் எனப்படும் திருப்பள்ளி எழுச்சி அருளலை (அனுக்கிரகம்)க் குறிக்கும். அதன்பின் பாலாபிடேகத்தோடு நடக்கும் பூசை படைத்தலை (சிருட்டி)க் குறிக்கும் அது முதல் அர்த்தயாமம் வரைநடக்கும் பூசைகள் காத்தலை (திதி)க் குறிக்கும். அர்த்தயாம பூசை அழித்தலை (சங்காரம்)க் குறிக்கும். பள்ளியறை மறைத்தலை (திரோ தானம்)க் குறிக்கும்.

திருவிழாக்களில் கொடியேற்றமாகிய துவஜாரோகணம் முதல் தீர்த்தவாரி ஈறுக உள்ள ஐந்தும் கூட பஞ்சகிருத்தியங்களைக் குறிக்கும் என்பர்.

அவை:-

துவஜாரோகணம்:-

ஆணவ மலமாகிய இருளில் அமிழ்ந்து கிடக்கும் ஆன்மாக்களை உய்வித் தற்காக அதினின்றும் எழுப்புதலைக் காட்டுவதால் சிருட்டியாகும்.

பலி:-

ஆன்மாக்களுக்கு மலபரி பாகத்தின் பொருட்டுத் தரப்பட்டுள்ள தனுகரண புவன போகங்கள் காத்தலைக் குறிப்பதால் திதியை உணர்த்துவதாகும்.

சிருஷ்ணகந்தம்:-

இது ஏழாம் நாள் உற்சவ தினத்தில் இறைவனுக்குச் சாத்தப்படும் திலகம். ஆன்மாக்களைப் பற்றி நின்ற பாச ஞான வீட்சணத்தில் லயிப்பதை காட்டுவதால் இது சங்காரத்தைக் குறிக்கும்.

ரதாரோகணம்:-

துன்பம் நிறைந்த உலக நிகழ்ச்சிகள் அனைத்தும்கீழ்ப்பட மேலுயர்ந்து நிற்பதால் திரோபவமாகும்.

தீர்த்தவாரி:-

அருளுதலைக் குறிக்கும்

மார்கழித் திருநாள்:-

ஆண்டிற்கு இருமுறை நடைபெறும் திருவிழாவில் மார்கழி விழா மிகச் சிறப்புடையது. மார்கழித்திங்கள் திருவாதிரை நட்சத்திரத்துக்கு முன் கொடியேற்றி, பத்து நாள் இவ்விழா நடைபெறும். தினமும் இரவில் உற்சவ மூர்த்திகள் நகருலா வருவர். 10 ஆம் நாள் ஆயிரங்கால் மண்டபத்தில் தில்லைக் கூத்தனுக்கு அபிடேக ஆராதனைகள் ஆகம முறைப்படி நடைபெறும். இவ்விழாவுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. பத்து நாட்களில் மாணிக்கவாசகரை சுவாமியின் சந்நிதி முன்பு எழுந்தருளச் செய்து திருவெம் பாவைப் பாட்டுக்கள் பாடி சுவாமிக்கு தீபாராதனை நடைபெறும். நாள் தோறும் காலையில் மாணிக்கவாசகரை எழுந் தருளச் செய்வதுடன் 10 ஆம் நாள் தரிசனம் முடிந்ததும் இவருக்கும் தீபாராதனை நடைபெறும். இவ்விழா பற்றிக் கோயிற் புராணம் கூறுவது.

மார்கழி ஆதிரை நாளின் முனிவ ரெல்லாம்
வந்துதடம் படிந்து பொது வணங்கி வாழ்த்திப்
பார்தகுமா தொழுதகன்மூர் முன்னமென்று
பன்னமுனி மன்னவனீர் பயிற்று மிந்தச்
சீர்தருமா தினமென்னத் தில்லை வாழுந்
திருவுடையந் தணரெந்தை திரு நாளென்று
சார்தருமா நவதீர்த்த நீத்தங் கொண்டு
தஞ்சமைஞ் சனவிழவு தருவித் தார்கள்.

—கோயில் புரா - திருவிழா. 23.

சித்தாந்தச் செம்பொருள்:-

மெய்கண்டார் அருளிய சித்தாந்த நூட்பக்கருத்துக்கள் கோயில் புராணத்தில் ஆங்காங்கு தட்டுப் படுகின்றன.

உலகம் இறைவனுல் படைக்கப்-பட்டது. தனது அருட் சக்தியின் வாயிலாக இறைவன் படைத்தல் முதலிய தொழில்-களைப் புரிகின்றன்.

இல்லது தோன்றுது; உள்ளது அழி-யாது என்பது சற்காரிய வாதம். சைவசித் தாந்தத்தின் உயிர் நாடியான கொள்கை இது. உலகம் மாயையாகிய முதற்காரணத்-தினின்றும் தாம் செய்த நல்வினை தீவினைகட் கேற்ப இறைவனுல் படைக்கப் படுகின்றது.

குடம் முதலிய காரியப் பொருட்கள் அவற்றைச் செய்யும் குலாலனையன்றி உண்டாவதில்லை. அவ்வாறே உலகமும் இறைவனுலன்றித் தாமாக உண்டாவ-தில்லை. இதனை,

உள்ளதும் இலது மின்றி
நின்ற தொன்றுளதேல் உண்டாம்;
இல்லதேல் இல்லையாகும்
தோற்றமும் இசையா தாகும்;
உள்ளகா ரணத்தி லுண்டாம்
காரியம் உதிக்கு மண்ணில்
இல்லதாம் படம் கடாதி
எழில்தரும் இயற்று வானுல்

என்ற பாடலால் விளக்குவர் அருணந்தி சிவாச்சாரியார். கோயிற் புராணத்துள் வரும்,

'வையகம் மாயை யின்கண்
வினைவழி வருங்க டாதி
செய்பவர் ஒழியத் தோன்றுச்
சிலத்த உயிர்கள் சேர்தற்கு
எவ்வகை உணர்வுண் டெண்ணில்
இலங்கு மைத் தொழிலியாவும்
உய்வகை யாலி யற்றதற்கு
யாமுளோம் எனவு ரைத்து'

–பதஞ்சலி 64

என்ற பாடல் விளக்குகின்றது.

சிருட்டியையும், தத்துவங்களையும் பற்றிக் கூறும் போது சைவசித்தாந்த முறையைப் பின்பற்றி விளக்கம் தருகிறது கோயில் புராணம்.

சிருட்டி என்பது மாயையினின்றும் உலகைத் தோற்று விப்பதுதான். இச்சா சக்தி கிரியாசக்தி என்னும் சக்திகளைக் கொண்டு இறைவன் அழிவில்லாத அருவமாகிய சுத்த மாயையினின்று நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுவரம், சுத்த வித்தை என்னும் ஐவகைத் தத்துவங்களைத் தோற்றுவித்து, முன்பு ஒடுக்கிய சுத்தாத்து வாக்களைப் படைப்பான்.

அசுத்த தத்துவங்கள் ஒடுங்கிய முதற் காரணமாகிய அசுத்த மாயையினின்றும் கலை முதல் பிருதிவி ஈறான தத்துவங் களைப் படைத்து உயிர்கள் இருவினைப் பயன்களை நுகருமாறு பயிற்றுவான். இவ் வாறு தொடர்ந்து உலகம் புவனம் முதலிய தோற்றங்கள் கூறப்படுகின்றன. இதையே கோயிற் புராணம் கூறுகிறது.

சக்திகளிற் கருத்திருத்திக் தாவிலரு
மாமாயை
உய்த்ததனின் நாதாதி யைவகையும்
உதிப்பித்து
வைத்தெழுத்து மொழிமறைநூல் மந்திரமே
முதலாய
சுத்தபழி விரித்தசுத்த தத்துவங்கள்
தொகும் முதலில்,

–இரணியவன் - 2.

இவ்வாறு பல சமய உண்மைகள் ஆங்-காங்கே கூறப்பட்டுள்ளன. அவை உணர்-வார்க்கு இன்பந்தர வல்லன.

உவமை நயங்கள்:-

தல புராணங்கள் உவமைகளால் சிறப்புப் பெறுகின்றன. காப்பியங்களில் வருவது போன்ற உவமைகள் காணப்படா விடினும் சிற்சில அழகிய உவமைகளை இந்நூலாசிரியர் எடுத்தாளுகின்றார்.

வேட்டுவனுகிய குளவியையே நினைத்துக் கொண்டிருந்த மென்மையான பச்சைப் புழுவானது அக்குளவி உருவத்தைப் பெறுவது போல, இறைவனுல் கூறப்பட்ட பதஞ்சலி உருவத்தையே மனத்தால் எண்ணிக் கொண்டிருந்த ஆதிசேடன், மெல்ல மெல்ல அவ் வுருவத்தைப் பெற்ருன் என்பர் ஆசிரியர்.

'வேட்டுவற் குறித்த பச்சை
மென்புழுப் போல நாதன்
காட்டிய மேனி கொண்டு''

என்னும் நயம் வாய்ந்த இவ்வுவமை,

'வேட்டுவனு மப்புழுப் போல் . -
வேண்டுருவைத் தான்கொடுத்துக்
கூட்டானே மண் போல் குளிர்ந்து''

என்னும் சிவஞான போத வெண்பாச் செய்யுளை அடியொற்றுகின்றது. தில்லை வனத்தில் இறைவன் திருநடனம் செய்ய விருக்கும் நாளை எண்ணி எண்ணி ஆவலோடு எதிர்ப்பார்த்திருந்த முனிவர் களுக்கு மூன்று அழகிய உவமைகள் கூறப்படுகின்றன.

தாய்ப்பசுவை எதிர் நோக்கித்துடித்து நிற்கும் கன்று போலவும், மேகம் பொழியும் மழைத்துளியை எதிர் நோக்கிக் காத்திருக்கும் வானம்பாடி போலவும், மேகத்தின் வரவு நோக்கும் மயிற்கணம் போலவும் அன்னேர் காத்திருந்தனர் என்பர்.

'கறவையான் வரவு பார்க்கும் கன்னினம்
எனவும், கார்சேர்
உறையுணவு உணர்ந்து நோக்கி ஓய்ந்தபுள்
எனவும், ஓங்கல்
செறிமுகில் முழவு கேட்கும் திகழ்மயில்
திரளும் போல,
இறையவன் நடமே சிந்தித்து இடைத்தினம்
கடத்தினர்கள்

—நடராச - 3.

இவ்வாறு பல நயமிக்க உவமைகளையும், சித்தாந்த நுட்பங்களையும் உள்ளடக்கிய - கருத்துக் கருவூலமாகக் கோயிற் புராணம் திகழ்கின்றது.



ஒளிவளர் விளக்கே யுலப்பிலா ஒன்றே
உணர்வுதுழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்துத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

—திருவிசைப்பா

தில்லையும் சைவசித்தாந்தமும்

டாக்டர் கு. சாமி ஐயா, எம். ஓ. எல்., பி. எச். டி.,
தமிழ் இணைப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

தில்லை சிதாகாசப் பெருவெளியாகும். கூத்தப் பெருமான் கோயில் கொண்டு விளங்கும் திருத்தலம். இத்தலத்தில் தலமரம் தில்லை மரமாகும். எடுத்தற்கு அரிதாகவுள்ள தில்லம்பால் உடலின் பக்க வாதத்தையும் போக்க வல்லது. உள்ளத்தின் கோணலை நிமிர்க்க வல்லவர் அம்பலத்து ஆடுகின்ற அருள் கூத்தர். ஆன்மாவின் கோணலை நிமிர்க்க வல்லது சைவ சித்தாந்தம். சித்தாந்த உண்மைகள் தமிழ்ச் சித்தர்களாலும், அருளாளர்களாலும் சிந்திக்கப் பெற்று அவர்களால் அங்கங்கே பேசப்பெற்றுள்ளன. பிற்காலத்தே நூல் வடிவம் பெற்றுச் சாத்திர நூல்களாயின. சித்தாந்த உண்மை கூறும் நூல்கள் பலவாயினும் வழிவழியாக வரும் நூல்கள் பதினான்கு; அவற்றைச் சித்தாந்த சாத்திரங்கள் எனக் குறிப்பர். அவை திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, சிவப்பிரகாசம், திருவருட்பயன், கொடிக்கவி, விண்ணெண்பா, போற்றிப் பஃறொடை, நெஞ்சு விடுதூது, சங்கற்ப நிராகரணம், உண்மை விளக்கம், உண்மை நெறி விளக்கம் என்பன. அவற்றை எழுவர் இயற்றி அருளினர். அவர்கள் திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார், திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார், மெய்கண்டார், அருள்நந்தி சிவாச்சாரியார், உமாபதி சிவாச்சாரியார், திருவதிகை மனவாசகங்கடந்தார். சீர்காழி தத்துவநாதர் என்போர். மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் ஆகிய நால்வரும் சந்தான குரவர் என அழைக்கப்படுவர். மெய்கண்ட தேவர் இயற்றிய சிவஞான போதமே முதல் நூல் என்று கூறப்பெறுவது. சந்தான குரவர்கள் நால்வருள் மறைஞான சம்பந்தர் உபதேசம் செய்வதே அன்றி நூல் செய்தார் அல்லர். சிவஞான போதம் முதல் நூல் என்று கூறப்பெற்றாலும், திருவுந்தியாரும், திருக்களிற்றுப்படியாரும் காலத்தால் முற்பட்டவை. சந்தான குரவர்கள் நால்வரும் மறைஞான சம்பந்தரும், உமாபதி சிவனாரும் தில்லைப்பதியில் வாழ்ந்த பெருமைக்குரியவர். திருக்களிற்றுப்படியார் இயற்றியருளிய திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனாரும் தில்லையில் வாழ்ந்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

தில்லையில் நால்வர் திருமேனிகள்:–

தில்லையிலும், தில்லையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சந்தான குரவர் நால்வரின் திருமேனிகள் அமைக்கப் பெற்றுள்ள இடங்கள் அறிதற் குரியன. தில்லைப் பெருமான் கோயில் கொண்டுள்ள திருக்கோயிலின் திருச்சுற்று மாளிகைகளுள் உள் சுற்றில் நால்வர் திருமேனிகளும் அமைக்கப் பெற்றுள்ளன என்பது இத்திருக்கோயிலின் தனிச் சிறப்புகளுள் ஒன்றாகும். அண்மை

யில் குடமுழுக்குச் செய்யப்பெற்று சித் தாந்த நூலுண்மைகளை எடுத்துக் கூறும் வண்ணம் மாநாடுகளும் நிகழ்ந்துள்ளமை பெருமகிழ்ச்சிக்குரியதாகும். சிதம்பரம் மாலைக்கட்டித் தெருவில் மூன்றும் எண் ணுள்ள கட்டடம் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானதாகும். இக் கட்டடத்தில் கீழ்ப்பக்கத்தில் மெய் கண்டாருக்கு ஒரு கோயில் அமைந் துள்ளது. இக்கோவிலில் நாள் வழி பாடும், சிறப்பு வழிபாடும் நடைபெறு கின்றன. சிதம்பரத்தின் வடமேற்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சிங் காரத் தோப்பு என வழங்கும் திருக்களஞ் சேரியில் மறைஞான சம்பந்தர் சமாதி அமைந்துள்ளது. இதிலும் வழிபாடு நடை பெற்று வருகிறது. சிதம்பரத்தின் கிழக்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் அமைந் துள்ள கொற்றவன்குடி என்னும் இடத்தில் உமாபதி சிவனாரின் கோயில் அமைந் துள்ளது. இதிலும் வழிபாடு இயற்றப் பெறுகின்றது. சந்தான குரவர்கள் நால் வரின் திருமேனிகளும் தில்லைக் கோவி லிலும், தில்லையை சூழஉள்ள பகுதி களிலும் அமைந்துள்ளதிலிருந்தே தில்லைப் பதிக்கும், சைவசித்தாந்த வளர்ச்சிக்கும் உள்ள அணுக்கமான தொடர்பினை உணரலாம். ஞானிகளுக்குப் பரிபூரணம் உற்ற நாளே மிகச் சிறந்ததாகக் கருதப் பெறுவது போல இங்கே திருமேனிப் பதிட்டையிலிருந்து தொடர்பை விளக்கு முற்பட்டுள்ளமை கருதத்தக்கதாகும்.

திருக்களிற்றுப்படியும், திருக்களிற்றுப் படியாரும்:—

திருவியலூர் உய்யவந்த தேவ நாயனாருக்குப் பின் அப்பெயரைப் பூண்டவர் திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார். இவர் தில்லையம்பதியில் சில காலம் தங்கியிருந்தார். அங்கு ஞான வேட்கையுடைய பெரியவர் எதிர்ப் பட்டு ஞானம்பெற விழைந்தார். உய்யவந்த தேவர் தம் ஞானசிரியர்பால் கற்றுத் தேர்ந்த உண்மைகளை நூல் வடிவில் ஆக்கி வழங்கினார். சித்தாந்தப்பேருண்மைகளைக் கூறும் இந்நூலின் முழுச்சிறப்பறியாதார் சிலர் இதனை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். பொன்னம்பலத்தில் ஏறுதற்கமைந்த பஞ் சாக்கரப்படியில் அந்நூலினை வைத்துத் திருக் குறிப்பறிய முயன்றனர். அப்படியில் அமைந்த கல்யானை தன் துதிக்கையால் அந்நூலினை எடுத்துக் கூத்தப்பெருமானின் திருவடிகளில் வைத்தது. அதன் பின்னர் அந்நூலின் பெருமை உணரப்பெற்றது என்பது வரலாறு. இந்நூல் 'திருக்களிற்றுப் படியார்' எனப்பெயர் பெற்றமைக்கு இதுவே காரணமாகும். திருக்களிற்றுப்படி யாகிய பொன்னம்பலத்தின் ஏறுவதற் குரியபடியும், திருக்களிற்றுப்படியாராகிய நூலும் பெரும் புகழுக்கு உரியவாயின.

திருக்கடவூர் உய்யவந்த தேவர் பல இடங்களில் தில்லையம்பலவனுடன் தொடர்புறுத்தித் தம் நூலை இயற்றி அருளினர் என்பது நினைத்தற்குரியது. அம்பலக் கூத்தனே மூலமலம் எனப்படும் ஆணவமலம் அகல ஆள்பவன் என்பதை மாணவனுக்கு உணர்த்தும் வகையில் கூறியுள்ளார். [1]

யோகம் கைவந்தவர்களுக்குச் சங் கொலி கேட்கும் என நூல்கள் கூறி யுள்ளன. ஆனால் திருக்களிற்றுப்படியார் தில்லைப் பெருமானின் திருவடிச் சிலம் போசை கேட்கும் என்று கூறி; அதனால் அவ்யோகியர் அப்பெருமானைக் கண்டு மகிழ வாய்ப்பேற்படும் எனவும் கூறுகின்றார். [2]

இவ்வாறு பல்வேறு இடங்களில் தில்லைக் கூத்தனின் தொடர்பினை உணர்த்துகின்ற திருக்களிற்றுப்படியார்,

---

1 திருக்களிற்றுப்படியார் பா. 4
2. மேலது பா. 33

தில்லைக் கூத்தனே ஐம்பெரும் பூதங் களாகவும், எண் வகை வடிவினளாகவும், பெண்ணுற நிற்பவளாகவும் விளங்கு கின்றான் என்று கூறுகின்றது. சிவத்துடன் கலந்த சீவர்களே இவ்வுண்மையை உணர இயலும் எனவும் குறிப்பிட்டுள்ளது.[3]

உண்மை விளக்கமும் நுண்மை விளக்கமும்:-

உண்மை விளக்கம் என்னும் சித்தாந்த நூலின் ஆசிரியர் மனவாசகங் கடந்தார் என்பவர். மெய்கண்டாரின் மாணவராகிய இவர் திருவதிகை என்னும் ஊரினர். 'உண்மை விளக்க' நூலினை, ஐயமுற்ற மாணவன் வினவு வதாகவும், ஆசிரியர் விடை கூறுவதாகவும் இயற்றியுள்ளார். மாணவன் வினவுகின்ற விஞக்களில் திருநடனத்தின் உண்மை அறியும் நிலை யிலும், திருவைந்தெழுத்தின் உண்மை யறியும் நிலையிலும் வினவப் பெற்றுள்ளன. அவ்வினாக்கட்கு விடையிறுக்கும் நிலையில், தில்லைக்கூத்தனின் கூத்தின் தத்துமும் திருவைந்தெழுத்தின் உண்மையும் உணர்த்தப்பெற்றுள்ளன. இப்பகுதியைப் பதினேந்து பாடல்களால் ஆசிரியர் இயற்றியுள்ளார்.[4]

கூத்தப்பெருமான் நான்கு திருக்கரங் களோடு நின்று நடிக்கின்றார். பெரு மானின் ஒரு திருக்கால் ஊன்றிய நிலையில் உள்ளது. மற்றொரு திருவடி தூக்கிய நிலையில் உள்ளது. இறைவன் உமை ஒரு பாகனாக விளங்குகின்றவன்; ஆதலால் இடப்பக்கம் (அம்மையின் பக்கம்) சிறி தாகவும், வலப்பக்கம் (அப்பனின் பக்கம்) பெரியதாகவும் இருப்பதாகச் சிவப்பிரகாச சுவாமிகள் கூறுகின்றார். இரண்டு திரு வடிகளுக்கும் உவமைகூற வந்த சிவப் பிரகாசர், திருக்குறளின் இரண்டடிகளைக் காட்டியுள்ளார். அதனை,

"என் அடிகள் வெண்குறள் நேரடியிரண்டும்
என் தலையில் இறுத்தும் இறை"

என்பதால உணரலாம்.

நான்கு திருக்கங் களில் ஒன்றில் உடுக்கையும் மற்றொன்றில் அழலும் உள்ளன. மற்றொன்று வீசும் கையாகவும், பிறிதொன்று அபயம் அளிப்பதாகவும் உள்ளன. ஊன்றிய திருக்கால் முயலகனின் மீது அமைந்துள்ளது. இன்னகை பொருந்திய முகமும், பின்னல் திரு வாசியும் அமைந்திருக்கக் காணலாம்.

சித்தசாதனம் என்று கூறப் பெறு வனவற்றுள் 'சிவாயநம' என்னும் பஞ்சாக் கரமே முதன்மையானதாகும். இதன் நடுவில் அமைந்துள்ள 'ய' என்பது உயிரைக் குறிப்பதாகும். உயிரின் பிறப்பினை அறுத்து வீடுபெறுதற் பொருட்டு சிதாகாசப் பெருவெளியில் ஆடும் ஆடலைக் குறிப்பதே அருட் கூத்தாகும். நான்காம் எழுத்தாக உள்ள 'ந' என்பது கூத்தப்பெருமானின் திருவடியில் உள்ளது. அவன் உந்திச்சுழியின் 'ம' என்பதும், திருத்தோள்களில் 'சி' என்பதும், திருமுகத்தில் 'வ' என்பதும், திருமுடியில் 'ய' என்பதும் அமைந்து விளங்குகின்றன. 'சிவாயநம' என்றும், 'நமசிவாய' என்றும் மாறி அமைகின்ற திருவைந்தெழுத்துக்கள் கூத்தப் பெரு மானின் வடிவில் அமைந்துள்ளமையை உண்மை விளக்கம் நுண்மையாக விளக்கியுள்ளது.

மறைஞான சம்பந்தரின் நிறைவான உண்மை:-

மறைஞான சம்பந்தர் அருணந்தி சிவஞரின் மாணவர். சந்தான குரவர் களில் மூன்றும் நிலையில் வைத்துப் போற்றப் பெறுபவர். இவர் திருக்களுற்

---

3. மேலது பா. 63

4. உண்மை விளக்கம் பா 30–44

சேரியை வாழிடமாகக் கொண்டவர். தில்லைத் திருக்கோயிலின் மேற்குக் கோபுர வாயிலுள்ள குகையில் இருந்து தவம் இயற்றியவர். ஒருநாள் மறைஞான சம்பந்தரின் மறைமொழியைக் கேட்க நேர்ந்த உமாபதி சிவனுர் உண்மை உணர்ந்து அவரைத்தம் ஞானசிரியராகக் கொண்டார். தம் ஞானசிரியர் உண்ட கூழினை ஏற்று உண்டமையால், கூத்தப் பெருமானின் திருமேனி தீண்டுதற்குரிய தகுதியை இழந்துவிட்டதாகச் தில்லை வாழ் அந்தணர்கள் கூறினர். உமாபதி சிவனுர் அத்தீர்ப்பினை ஏற்றுக்கொண்டு கொற்றவன்குடியில் வந்து தங்கினுர். தில்லைக் கூத்தனும் அவர்தம் வழிபாட்டினை ஏற்க அவருடன் வந்து அமர்ந்தான். இறைவனே குருவடிவாக வந்து அருள் செய்வதாகக் கூறுவது சித்தாந்த மரபு. தம் ஞானுசிரியர் ஆகிய மறைஞான சம்பந்தரை இறைவனுகவே எண்ணி உமாபதி சிவம் வழிபட்டுள்ளார். மறைஞான சம்பந்தரின் நிறைமொழிகளை மறைமொழிகளாகக் கொண்டு ஞானம் அடைந்துள்ளார்.

உமாபதி கூறும் உண்மை:–

இவர் கொற்றவன்குடியில் அமர்ந்து ஞானநிட்டை கூடி விளங்கியமையால் கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் என்று அழைக்கப்பெற்ருர். வடமொழியிலும் தமிழ் மொழியிலும் சிறந்த புலமை பெற்று விளங்கியவர். தமிழ்த்தல புராணங்களில் இவர் செய்த கோயில் புராணமே முதன்முதலில் செய்யப் பெற்றது என்பது கருதத்தக்கது. சித்தாந்த நூல்களில் சிவப் பிரகாசம், திருவருட் பயன், கொடிக்கவி, விணு வெண்பா, போற்றிப்பஃறொடை, நெஞ்சு விடுதூது சங்கற்ப நிராகரணம் என்பவை இவர் அருளியவை. இவர் தில்லையை விட்டு வெளியேறியதால் தில்லைக்கோயிலில் கொடி ஏறவில்லை. அதனுல் கொடிக்கவி என்னும் நூலை இவர் செய்தார் என்று கூறுவர். சிவஞானபோதம், சிவஞான சித்தியார் என்பவை முறையே பொய் கண்டகன்ற மெய்கண்ட தேவராலும், அருணந்தி சிவாசாரியராலும் இயற்றியருளப் பெற்றவை. அவற்றுள் நுண்மையாகவும், செறிவாகவும், உள்ளவற்றை விளங்குமாறு சிவப்பிரகாசம் தெளிவாக இயற்றப் பெற்றுள்ளது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். அவ்வகையில் சிறந்த இந்நூலுக்கு மதுரைச் சிவப்பிரகாசர் என்பவர் விரிவான உரை இயற்றியுள்ளார். திருவருட்பயன் என்னும் நூல் குறள் வெண் பாவில் இயற்றப் பெற்றதாகும். சித்தாந்த உண்மைகளைத் தெளிவாகவும், அழகாகவும், இந்நூல் விளக்குகின்றது. ஆணவமலம் என்பதற்குச் சிறப்பான விளக்கத்தைக் காணலாம். அதனை,

"ஒருபொருளும் காட்டா திருளுருவங் காட்டும்
இருபொருளும் காட்டா திது"

என்பதால் உணரலாம்.

போற்றிப்பஃறொடை குருவைப் போற்றுவதாக அமைந்த பஃறொடை வெண்பாக்களால் ஆன நூல். இதன்கண் மறைஞான சம்பந்தரை இறைவனுகவே கூறியுள்ளமையைக் காணலாம்.

சங்கற்ப நிராகரணம் என்பது பிற சமயவாதிகளின் கோட்பாடுகள் எவ்வாறு ஏற்றுக் கொள்ளத்தக்கவை அல்ல என்பதைத் தெளிவாகக் கூறுவதாகும்.

தாம் பெற்ற ஞானுனுபவங்களை நூல்களில் அருளிச் சைவசித்தாந்த உண்மைகளை உலகறியச் செய்த பெருமை மிக்கவர் உமாபதி சிவனுர் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து மகிழ்தல் வேண்டும்.

சந்தான குரவர்கள் என்று போற்றப் பெறும் நால்வரின் திருமேனிகளும் தில்லைப் பெருங்கோயிலில் இடம்பெற்றுச் சிறப்பாக வழிபாடு செய்யப் பெறுகின்றது. தில்லையிலும், தில்லையைச் சூழவுள்ள பகுதிகளிலும், மெய்கண்டார், மறைஞான சம்பந்தர் உமாபதிசிவம் ஆகிய

மூவர்க்கும் கோயில்கள் அமைந்துள்ளன. திருக்களிற்றுப்படியார் என்னும் நூல் இறைவன் அருளாலேயே போற்றப் பெற்றுள்ளது. அதனை இயற்றி அருளிய திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் தில்லையம்பதியில் சிலகாலம் வாழ்ந்துள்ளார். சந்தான குரவர்கள் நால்வரில் இருவர் இப்பதியை வாழிடமாகக் கொண்டுள்ளனர். அவர்களுள் ஒருவர் தில்லை வாழந்தணர் என்னும் பெருமைக்குரியவர். சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் எட்டு நூல்கள் தோன்றுவதற்குத் தில்லைப் பதியே காரணமாக அமைந்துள்ளது.

மற்றொரு நூல் தில்லைக் கூத்தனின் அருட்டிருமேனியைச் சித்தாந்த உண்மைகளோடு பொருத்திக் கூறியுள்ளது. சைவ சித்தாந்தப் பெருமன்றம் தன் வரலாற்றில் ஐம்பதாம் ஆண்டினையும், அறுபதாம் ஆண்டினையும், எண்பதாம் ஆண்டினையும் இப்பதியோடு இயைபுறுத்திக் கொண்டுள்ளது. எனவே தில்லையம் பதியும், சைவசித்தாந்தப் பேருண்மைகளும் ஒன்றோடு ஒன்று பிரிக்க இயலாத நிலையில் ஒன்றுபட்டுள்ளமையை அறியலாம். □

திருச்சிற்றம்பலம்



ஆதியாய் நடுவு மாகி அளவிலா அளவு மாகிச்
சோதியாய் உணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி!

பெரியபுராணம்

'சிவலோகமாவதும் தில்லைச்சிற்றம்பலமே'

டாக்டர் டி.பி. சித்தலிங்கையா,

தலைவர், சைவசித்தாந்தத் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
மதுரை.

'தோத்திரமும் சாத்திரமும் ஆனூர் தாமே' என்று அப்பர் பாடுகிறார் (6:78:5) திருமுறைகளைத் தோத்திரங்கள் என்றும் மெய்கண்ட நூல்களைச் சாத்திரங்கள் எனறும் கூறுவது சைவ சமய மரபு. திருமுறைகள் பன்னிரண்டனுள் ஒன்பதாவதாக அமைந்துள்ள திருமுறை திருவிசைப்பா திருப்பல்லாண்டு என்றும் அழைக்கப் பெறும். திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்திருத்தி நம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலிய முதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகிய ஒன்பது அடியவர்களின் திருப்பாடல்களைக் கொண்ட தொகை நூல் இந்த ஒன்பதாம் திருமுறை. இதில் 301 திருப்பாடல்கள் உள்ளன. திருமாளிகைத் தேவர் அருளிய திருவிசைப்பா, சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு ஆகியவை முதலும் கடைசியுமாக அமைந்துள்ளன. இவ்விரண்டின் அடிப்படையில், இந்நூல் திருவிசைப்பா திருப்பல்லாண்டு என்றே குறிக்கப்படுகிறது. ஒன்பதின்மர் பாடிய பாடல்களும் திருவிசைப்பா என்றே பெயர் பெறுகின்றன. சேந்தனார் மட்டும் திருவிசைப்பாவோடு திருப்பல்லாண்டும் பாடியுள்ளார். இந்தத்திருமுறை பெரும் பாலும் சிவபெருமானுடைய பெருமையையும் அவன் செயல்களையும் அவனை மனமுருகி வணங்கும் போது உண்டாகும் ஆனந்தத்தையும் கூறுகிறது.

சிதம்பரம் கோயில் என்று குறிக்கப் படும் என்பதை அனைவரும் அறிவர். இவ்வடியவர்களின் எண்மர் திருவிசைப் பாக்களில் கோயிலைப் பற்றிப் பாடியிருக் கிறார்கள். சேந்தனார் மட்டும் திருவிசைப் பாவில் கோயிலைப்பற்றிப் பாடாது, திருப் பல்லாண்டில் பாடியுள்ளார். கோயிலை யும், அதில் உள்ள அம்பலத்தையும், அதில் ஆடும் கூத்தனையும் இந்தத் திருமுறை எவ்வாறு கூறுகின்றது என்று காணலாம். எல்லாம் சென்று அடங்கும் இடம் தில்லைச் சிற்றம்பலம்தான் என்று கூற வந்த பூந் துருத்தி நம்பிகாடநம்பி 'சிவலோக மாவதுவும் தில்லைச் சிற்றம்பலமே' என்று குறிக்கிறார் (190).[1]

1 இந்தக் கட்டுரையில் வரும் பாடல் எண்கள் ஸ்ரீகாசிமடத்துப் பதிப்பில் காணும் தொடர் எண்களாகும். திருவிசைப்பா. திருப்பல்லாண்டு. ஸ்ரீகாசிமடம். திருப்பனந்தாள் 1949.

தில்லை:–

தில்லை என்னும் சொல் 85 இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. குலாத் தில்லை (23–34), திசைமிக்குலவு கீர்த்தித் தில்லை (39), தென்தில்லை (187) அணிதில்லை (188), தெளிகொண்ட தில்லை (191), சேடர் உறை தில்லை (194), சீரான்மல்கு தில்லை (200), திருத் தில்லை (205), அணிநீர்வயல் தில்லை (215), அணியார்தில்லை (216), குதிரை மாவொரு தேர் பல குவிந்தீண்டு தில்லை (220), எற்றிமாமணிகள் எறி நீர்த்தில்லை (223), மடைபாய் தில்லை (224), தேவர் தாம் தொழ ஆடியதில்லை (225), திவளமாளிகை சூழ்தருதில்லை (226), செய்த்தலைக்கமலம் மலர்ந்தோங்கிய தில்லை (230), ஆய்ந்த நான்மறையந்தணர் தில்லை (231), தேனமர்பொழில் சூழ்தரு தில்லை (234), மதில்சூழ்தருதில்லை (235), திருவார் தில்லை (238), மதில் தில்லை (239), திரைவந்துலவும்தில்லை (241), அருளென்று துதித்து மறையோர் வணங்கும் தில்லை (243), செடியும் தவத்தோர் அடையாத் தில்லை (245), வயல்சூழ் தில்லை (247) சிறையணி வண்டறையும் தில்லை (251), சீர்வங்கம் வந்தணவும் தில்லை (254), மாடமோங்கு தில்லை (257), எங்கள் தில்லை (263), இமையோர் பரவும் தில்லை (269), சிட்டார் மறையோ வாத் தில்லை (270), தேரார் விழவு ஓவாத்தில்லை (271), சேணுர்மணி மாடத்தில்லை (272), தேய் மதியம் சூடியதில்லை (273), மறைபயிலும் தில்லை (274), செந்நெல்விளை கழனித் தில்லை (275), சித்தர்கணம் பயிலும் தில்லை (276), சேக்காதலித் தேறும் தில்லை (277), சீர்இயல் தில்லை (280), செம்மலோர் பயில் தில்லை (282), மன்னிய தில்லை (297) என்றெல்லாம் பாடி மகிழ்கிறார்கள் ஒன்பதாம் திருமுறை யாசிரியர்கள்.

தில்லையை நினைந்தபிறகு அங்குள்ள இறைவனே மறக்க முடியுமோ? தில்லைச் சிவனைத் தில்லையான் என்றே குறிப்பிடு கிறார்கள். 'சீரியல் தில்லையாய், சிவனே, என்று வேரிநற்குழலாள் இவள் விம்முமெ' என்பதாகச் சேதிராயர் இறைவனிடம் தன்னை இழந்த பெண்ணெருத்தியைப் பற்றிக் கூறுகிறார் (281). கூத்தன் மீதான காதல் மிகவே அவள் நாணிழந்தாள், 'வெய்துயிர்த்தாள்', அயர்வுற்று அஞ்சலி கூப்பி அந்தோ எனை உயவுன் கொன்றை யந்தார் அருளாய்', என்றாள். 'மாதொர் கூறன் வண்டார் கொன்றை மார்பன் என்று ஓதாய், கிளியே,' நான் உய்வதற்கு வேறு வழியில்லை என்று வருந்தினாள்; என்றெல்லாம் சொல்லி, 'தில்லையுளீர்' என்று விளித்து, அவளைக் காக்க வேண்டுகிறார் அவர் (279–287). புலியூர் (250) என்றும் பெரும்பற்றப் புலியூர் (233) என்றும் சிதம்பரம் குறிக்கப்படுகிறது.

பெருமான்:–

தில்லைவாழ் நாயகனைப் பலவாறு போற்றுகின்றது நிருவிசைப்பா. தில்லை யில் வாழ்பவன் தில்லைவாணனுக (35) த் தானே இருக்க முடியும்! ஆதியாய் அமர்ந்த அத்தேவன் தில்லையத்தன் (185); செல்வன் தில்லைநாதன், தில்லை வேந்தன் (36), தில்லைச்செல்வன் (41) என்று குறிக்கப்படுகின்றான். தில்லைச் சொக்கரம்பலவர் (42), தில்லைச் செம் பொன்னம்பலவன் (45) என்றெல்லாம் பாடி மகிழ்கிறார்கள் அடியவர்கள்.

உயிர்கள் உய்ய ஆடுகின்றவனல்லவா அவன்? அவனுடையது தனிப்பெருங்கூத்து அல்லவா? தெய்வக்கூத்து (1), தில்லைக் கூத்து (39), தொல்லுலகில் நாடகத்தின் கூத்து (192), நட்டம் (297) என்று அக்கூத்து புகழப்படுகிறது. கூத்தனார் (216), நடம்பயில் கூத்தன் (220), தில்லைக் கூத்தன் (225), தில்லைமாநகர்க் கூத்தன் (252) ஆகிய இறைவனே சிற் றம்பலக் கூத்தா (12-22) என்றும் தில்லைக் கூத்தாடி (214) என்றும் அழைத்து இன்புறுகிறார்கள்.

அம்பலம்:–

தில்லைக்குப் பெருமை சேர்ப்பது அம்பலமேயல்லவா? 'அம்பலமே ஆடரங்கம் ஆயிற்றே' (185) என்றும், 'அம்பலம் நின் ஆடரங்கே' (192) என்றும் நம்பி அதன் பெருமையை விளக்குகின்றார். பொன் ஓடு போட்டதல்லவா அது? 'ஆடகத்தான் மேய்ந்தமைத்த அம்பலம்' (192) என்று வருணிக்கிறார் அவர். 'அம்பலம் ஆடரங்காக' என்கிறார் திரு மாளிகைத்தேவர் (1).

அம்பலம் என்னும் சொல் 19 இடங்களில் குறிக்கப்படுகிறது. அம்பலம் செம்பொற்கோயில் (5), அருட்டிரள் செம்பொற்சோதி அம்பலம் (37), தில்லையம்பலம் (232), தென்தில்லை யம்பலம் (195, 197), தில்லைமலங்கு செம்பொன்னின் அம்பலம் (198), தில்லைச் செம்பொன்னம்பலம் (200) இவ்வாறு அம்பலம் குறிக்கப்படுகிறது.

அம்பலவன் (216, 219, 223, 224), அம்பலத்தான் (231) அம்பலத் தன் (215, 230), அம்பலத்தமுது (4) என்றும் அம்பலத்தாடி (38, 204) அம்பலத்தமிர்து (40), அண்ணலம்பலவன் (44) என்றும் இறைவனைக் குறிப்பிடுகிறது இத்தத்திரு முறை. அம்பலவா (8), அம்பலத்தாடீ (3), அம்பலத்தரசே (6), அம்பலக் கூத்தனே (228, 229), அம்பலத்த மிர்தே(40), அம்பலத்துள் நிறைதரு கருணை நிலையமே (11) என் றெல்லாம் அழைத்து மகிழ்கிறார்கள் அடியவர்கள்.

கூத்தாடும் பிரான் கூத்தன் (220, 225, 252, 253), கூத்தனூர் (216) என்று குறிப்பிடப்படுவதுடன் கூத்தா (12, 13, 14, 20, 22), கூத்தாடீ (214) என்று விளிக்கவும்படுகிறான்.

அம்பலம் தனித்தும் அடைமொழி யுடனும் பேசப்படுகிறது. திருச்சிற்றம்பலம் என்று, திருமுறைகள் ஓதும்போது தொடக்கத்திலும் முடிவும் சொல்வது மரபு. எல்லாவற்றின் தொடக்கமும் இறுதியும் இறைவனே என்று காட்டு வதற்காக இவ்வாறு கூறப்படுகிறது.[1] அத்தகைய சிற்றம்பலத்தை ஒன்பதாம் திருமுறை 18 இடங்களிலும் கூறுகிறது. 'திருவளர் தெய்வப்பதிவிதி நியம் திரண்ட சிற்றம்பலம்' (13), செல்வம் நிறைத்த சிற்றம்பலம் (187), சிவலோக மாவதுவும் தில்லைச் சிற்றம்பலமே (190), தெளிகொண்டதில்லைச் சிற்றம்பலம் (191), சேடருறை தில்லைச் சிற்றம்பலம் (194), 'தென்னன் தமிழும் இசையும் கலந்த சிற்றம்பலம்' (237), திருவார் தில்லைச் சிற்றம்பலம் (238), சிந்திப்பரிய தெய்வப் பதியுட் சிற்றம்பலம் (239) 'தீமெய்த் தொழிலார் மறையோர் மல்கு சிற்றம்பலம் (240) திரைவந்துலவும் தில்லைமல்கு சிற்றம்பலம் (241), மறை யோர் வணங்கும் தில்லைச் சிற்றம்பலம் (243), சேலாடும் வயல் தில்லை மல்கு சிற்றம்பலம் (244), செடியும் தவத் தோரடையாத் தில்லைச் சிற்றம்பலம் (245), தேனூர்பொழில் சூழ் தில்லை மல்கு சிற்றம்பலம் (246), சேலுகளும் வயல்சூழ் தில்லை மாநகர்ச் சிற்றம்பலம்' (247, 248, 251, 254, 255) 'மறை வலநாவலர்கள் மகிழ்ந்தேத்து சிற்றம்பலம்' (255), அந்தணர் வாழ் கின்ற சிற்றம்பலம் (297) என்று பாடு கிறது இந்தத் திரு முறை. புரியவர்க்கின்னருள் செய்புலியூர்த் திருச்சிற்றம்பலம் (250), திருச்சிற்றம் பலத்து எங்கள் செல்வனே (264), திருச்சிற்றம்பலம் (265) என்பதாகத் திருச்சிற்றம்பலம் என்னும் சொல்லையே குறிப்பிடுகிறது. 'பெரும்பற்றப் புலியூர்த்

---

1. அதுமறை முதலில் நடுவினில் கடைவில் அன்பர்தம் சித்தையில் அமர்ந்த திருவளர் ஒளிதழ் திருச்சிற்றம்பலம் – பெரிய புராணம் தடுத்தாட்கொண்ட புராணம் 104.

திருவளர் திருச் சிற்றம்பலமே' (80–90) என்றும் விரித் துரைக்கப்படுகிறது.

சிற்றம்பலத்து உறையும் ஈசன், சிற்றம் பலத்தீசன் (255) என்றும், சிற்றம்பலவன் (217, 218, 220, 221, 222) என்றும் சிற்றம்பலத்தான் (246) என்றும் சுட்டப் படுகிறான். சிற்றம்பலவர் என்று மரியாதை யோடும் குறிக்கப்படுகிறான் ஆடவல்லான் (268–277)

இறைவன் ஆடும் ஐந்து சபைகளில் தில்லையம்பலம் கனகசபை அல்லவா? அது பொன்னம்பலம் என்றே கூறப்படுகிறது. அம்பொன்செய் அம்பலம் (6), பொன் னம்பலம் (9, 10), அணுக்கருக்கணிய செம்பொன்னம்பலம் (38), செம்பொன் செய் அம்பலம் (188), செம்பொனின் அம்பலம் (198, 199, 201) தில்லைச் செம்பொன் அம்பலம் (200) என்று அது வருணிக்கப்படுகிறது.

'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று திருத் தொண்டத்தொகை பாடுகிறது. தில்லைக்குப் பெருமை சேர்ப்பதில் அவர்களுக்கும் பங்குண்டல்லவா? அவர் களை மூவாயிரவர் என்று குறிப்பிடுகிறார் கண்டராதித்தர். தம் திருவிசைப்பாவில், 'கற்றாங்கெரியோம்பி' என்று சம்பந்தர் தேவாரம் குறிப்பிடுகிறது. அவ்வாறே 'ஓவா முத்தீயஞ்சு வேள்வியாறங்க நான் மறையோர், ஆவே படுப்பார் அந்தணளர் ஆகுதிவேட்டுயர்வார், மூவாயிரவர் (196) என்றும், முத்தீயாளர் நான்மறை யர் மூவாயிரவர் நின்னெடு, ஒத்தேவாழும் தன்மையாளர் (197) என்றும், தில்லை வாழ்ந்தணர்தம் இயல்பையும் செயல் களையும் எடுத்துக்கூறுகிறது இத்திருமுறை. அம்மூவாயிரவர் 'ஓதிய நான்மறையைத் தெத்தே என்று வண்டு பாடும் தென்தில்லை யம்பலத்துள்' (197) இறைவன் ஆடுகின்றானும்!

அந்த இறைவனைக் காணத்துடிக்கிறது கண்டராதித்தர் திருவுள்ளம். அந்த 'ஆரமுதை எங்கள் கோவை என்று கொல் எய்துவதே' (195), கோவே உன்றன் கூத்துக்காணக் கூடுவதென்று கொலோ' (196), 'அத்தாவுன்றன் ஆடல் காண அணைவது மென்று கொலோ' (197), 'கோனை ஞானக்கொழுந்து தன்னைக் கூடுவதென்று கொலோ' (198), 'ஒளி வான்சுடரே உன்னை நாயேன் உறுவதும் என்று கொலோ' (199), காரார்மிடற் றெங் கண்டனைக் காண்பதும் என்று கொலோ' (200, 201), 'எங்கோன் ஈசன் எம்மிறையை யென்று கொல் எய்துவதே' (202) என்றெல்லாம் பாடித் தமது ஆற்றுமையை, ஆவலை வெளிப் படுத்துகிறார் கண்டராதித்தர்.

சிவபிரானுக்கென்று தனியே ஒரு பெயரில்லை என்றாலும் அவனை ஆயிரம் பெயர்கொண்டு ஏத்துகிறோம்.[1] அவன் யோகமும் போகமுமாக இருக்கிறான். அதாவது மேற்கொள்ள வேண்டிய வழியாகவும் அடைய வேண்டிய குறிக் கோளாகவும் இருக்கிறான்.[2] ஏனென்றால் அவனைத்தவிர வேறொன்றுமில்லை.[3] அவனே மூலமும் முடிவுமாக இருக்கிறான்.[4] அவனே 'அல்லாய்ப் பகலாய் அருவாய் உருவாய் ஆரா அமுதமாய்' (236) இருக்கிறான். அவனே தலைவன், புகலிடம்; மூச்சு என்கிறார் திருவாவியமுதனார்;[5] சைவம் ஒன்றே தெய்வீக நெறி, அறிஞர்கள் சிவத்தைத் தவிர வேறு தெய்வத்தைக் கருதமாட்டார்கள்,

1. பேர்கள் ஆயிரம் ஆயிரம் பிதற்றும் – 21
2. உறவாகிய போகமும் போகமுமாய் – 25
3. யோக நாயகனேயன்றி மற்றென்றும் உண்டென உணர்வேன் – சேத்தனூர் – 48
4. மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய் – கருவூர்த்தேவர் – 121
இறைவனே என்கதியை என்னுள்ளே உயிர்ப்பாகி நின்ற மறையனே – 251

.ன்கிறார் சேந்தனார் (50). சிவனடியார் களுடைய பெருமையைக் குறிப்பிட்டு, 'திருவீழிமிழலையான் திருவடிநிழற்கீழ்ப் புக்கு நிற்பவர் தம் பொன்னடிக் கமலம் பொடி யணிந்தடிமை பூண்டேனே (51, 55) என்று தாம் பெற்ற பேற்றைக் குறிப்பிடுகிறார்.

திருமாளிகைத்தேவர் தமது திரு விசைப்பாவில் இறையருளே விரிவாகப் பேசுகிறார். சிவனில் தன்னையிழந்து இருந்து விட்டால், தனக்கென்று தனியே ஒரு சிந்தனை ஏது? செயல் ஏது? பேச்சு ஏது? இந்த நிலையைத் தர வேண்டுமென்று இறைஞ்சுகின்றார். 'விளம்புமா விளம்பே', 'பணியுமா பணியே', 'கருதுமா கருதே', 'உரைக்கு மாறுரையே', 'நணுகுமா நணுகே', 'இசையு மாறிசையே', 'நுகருமா நுகரே', 'புணருமா புணரே', 'தொடருமா தொடரே', 'விரும்புமா விரும்பே', 'நினையுமா நினையே'[1] என்றெல்லாம் அந்த நிலையை விளக்குகிறார். சமயங்கள் ஏணிப் படி போல் அமைந்திருக்கின்றன என்றும் தாம் அப்படி வழி ஏறி இறைவனோடு கலந்த தாகவும், இவ்வெல்லா நிலை களிலும் இறைவன் தன்னுடன் இருந்த தாகவும் அவ்விறைவன் வாழுமிடம் திருவிடை மருதூர் என்றும் கருவூர்த் தேவர் கூறுகிறார்.[2]

முதலும் முடிவும் இல்லாத ஈசனுக்குப் பல்லாண்டு கூறுகிறார் சேந்தனார். 'வாழ்த்துவதும் வானோர்கள் தாம் வாழ்வான் வேண்டி' என்பது திருமுறை. உலகெலாம் வாழ, இறைவனுக்கு வாழ்த்தும் பல்லாண்டும் கூறுகிறார் இவ் வடியார். 'பின்னைப் பிறவியறுக்க நெறி தந்த பித்தன்' (289), 'பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்' (290) 'என்னைத் தன்பாற் படுத்தான்' (291), 'பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கள்' (293), 'பாவிக்கும் பாவகத் தப்புறத்தான்' (294), 'பாலும் அமுதமும் ஒத்து நின்றான்' (296), 'நட்டம் பயிலவல்லான்' (297), 'எம்மான்' (299), 'பந்தம் பிரியப் பரிந்தவன்' (301) என்றெல்லாம் பாராட்டிப் போற்றிப் பல்லாண்டு பாடுகிறார். அவனுக்கு அது தேவையில்லை; அவன்தான் எல்லாம் கடந்தவன் ஆயிற்றே! 'பல்லாண்டென்னும் பதம் கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே' (292) என்று அவரே அதனை விளக்குகிறார்.

முழுமுதற் பொருளாய இறைவன் ஐந்தொழிலியற்றத் தில்லையம்பலத்தில் திருக்கூத்தாடுகின்றான். சிவன் வாழுமிடம் சிவலோகமேயல்லவா? ஆகவே 'சிவ லோக மாவதுவும் தில்லைச் சிற்றம்பலமே!'

மன்னுக தில்லை! வளர்க நம் பத்தர்கள். □

---

1 திருவிசைப்பா 1–11

2 பத்தரும் பிரிவும் தெரிபொருட் பனுவல் படிவழி சென்று சென்றேறி, சித்தையும் தானும் கலந்தோர் கலவி தெரியினும தெரிவரு வண்ணம் ... மருவிடம் திருவிடைமருதே – 177

> பூங்கமலத் தயனுமலர் புண்டரிகக் கண்ணனும்
> தாங்குபல புவனமுமேற் சகலமுமாய் அகலாத
> ஓங்குமொளி வெளியேதின் றுலகுதொழ நடமாடும்
> தேங்கமழும் பொழில்தில்லைத் திருச்சிற்றம் பலம்போற்றி.
>
> —கோயிற்புராணம்

With best compliments from

Senthil Enterprises

14, SUNDERRAJAN STREET,
ABIRAMAPURAM □ MADRAS—600 018.

WITH BEST COMPLIMENTS FROM

NANALAL M. VARMA & CO LTD.

135, BIPLABI RASHBEHARI BASU ROAD

CALCUTTA-1

அருள் வழி நிற்றல்

டாக்டர் ச. கங்காதரன்,
சைவசித்தாந்த தத்துவத் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

இன்பம் அடையவேண்டும் என்பது எல்லா உயிர்களுக்குமுள்ள குறிக்கோளாக உள்ளது. "எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது,

தான் அமர்ந்து வருஉம் மேவற்று ஆகும்" – என்பது தொல்காப்பியச் (பொருளியல் 27) சூத்திரம் ஆகும். உயிர்கள் விரும்பிய வண்ணம் ஏன் இன்பத்தை அடையவில்லை என்பதற்கு விடையாக, உயிர் இன்பத்தை அடையாதபடி தடுப்பதாகிய தடை பற்றி நமக்கு விளக்கம் வருகிறது. நம் வாழ்வில் தடையாகச் சில பொருள்களைப்பற்றி உணருகிறோம். பருப்பொருள் தடையாக மட்டும் அல்லாமல் அறிவைத் தடைசெய்யும் சில வற்றையும் உணர்கின்றோம்.

இருள், மருள் என்னும் இருவகையான தடைகளைத் திருவள்ளுவர் அருள்கின்றனர்

"அருள்சேர்ந்த நெஞ்சிலார்க்கில்லை
இருள்சேர்ந்த
இன்ன உலகம் புகல்"

"இருள் சேர் இருவினையுஞ் சேரா
இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு"

"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சியவர்க்கு"

"பொருளல்லாவற்றைப் பொருளென்
றுணரும்
மருளானும் மாணாப் பிறப்பு"

என்னும் திருக்குறட் செய்யுள்களில் இருள், மருள் என்னும் தடைகளைப் பற்றிய குறிப்பைக் காணலாம். ஆணவத்தைக் குறிக்க இருள் என்னும் தொடரைப் பயன் படுத்தியுள்ளார் திருவள்ளுவர். இருள் காரணமாகத்தான் இருவினை வருகிறது என்னும் உண்மையினை "இருள்சேர் இருவினை" என்னும் தொடரால் அறிகிறோம். மருள் என்பது இருள் காரணமாக வரும் பொருள்களின் உண்மை நிலையை உணராத மருட்சி அல்லது மாயை ஆகும். மாயை என்பது பொதுவாக விளக்கம் செய்யினும் மயக்கமும் செய்யும் என்னும் நிலையில் மருள் எனப் பயன்படுத்தப் படுகிறது.

சைவ சித்தாந்தத்தில் அருள் வழி நின்று இருள், மருள் ஆகிய குற்றங்களை வெல்லலாம் என்று காட்டப்படுகிறது. சிவஞானபோத எட்டாம் சூத்திரத்தில் 1. இறைவனே உயிர்களுக்குக் குரு வடிவாய் வந்து உண்மையை உணர்த்துகிறான். 2. தவத்தின் காரணமாக இறைவன் உயிர் களுக்கு உணர்த்துகிறான். 3. ஐம்பொறி களாகிய வேடர் கூட்டத்தில் அகப்பட்டு உயிர் தன் உண்மையான தன்மையை உணராமல் மயங்கி இருக்கிறது. 4. ஐம்பொறிகள் காரணமாக உயிர் அறியா மல் இருக்கிற அவற்றிலிருந்து விடுபட வேண்டும் என்று குருவாக வந்து இறைவன் அறிவுறுத்த ஐம்பொறியிலிருந்து விடு பட்டு, அவ்வாறு விடுபட்டதனால் உயி ரானது தனக்கு வேறுகாமல் உடனாக நின்று உதவி வரும் இறைவனை அடையும் என்றும் உண்மைகள் சொல்லப்படுகின்றன.

இறைவன்தான் உயிர்களின் பக்குவம் நோக்கி, உடனின்று உதவி வருகின்ற, குடும்பத்தின் நெருங்கிய உறவினரைப் போல உதவுகிறான் என்று உணர்வது அருள் நிலையின் முதற்படியாகும். உடலுக்கு உயிர் மிக நெருக்கமாக இருப்பதைப்போல, உயிர்களுக்கு இறைவன் நெருங்கியிருந்து வேண்டியன செய்து வருகிறான். எல்லா உயிர்களுக்கும் இருளாகிய ஆணவ மலத்தால் பாதிக்கப்பட்டாலும், உயிர்களின் பாதிப்பு ஆணவத்தோடு உள்ள – ஆணவ மலத்தை நீக்குவதற்காகச் சேர்க்கப்பட்ட – மாயை, கன்மங்கள் என்னும் மலங்களின் சேர்க்கையால் மூன்று வகையாக அமைகிறது. ஆணவ மலம் மட்டும் உடையார் விஞ்ஞானகலர், இவர்களுக்குக் குருவடிவாக இறைவன் உள்நின்று உணர்த்தியே வீடு பேறு ← அருள்வன். ஆணவத்தோடு கன்ம முடைய பிரளயாகலருக்கு இறைவன் முன்னிலையில் தன் முக்கண், கறைமிடறு ஆகிய உருவுடன் வந்து, அருள் செய்வான். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் உடைய நம் போன்ற சகலர்க்குப் படர்க்கையில் மானுட வடிவில் வந்து அருள் செய்து ஆட்கொள்கின்றான் என்னும் செய்திகள் சிவஞான போதத்தில் கூறப்படுகின்றன. இவ்வாறு பல படி நிலைகளில் உயிர் காணப்படுவதால் இறைவன் கருணை உயிர் மேல் ஒரே அளவு இருந்தாலும், உயிர்களின் தன்மைக்கேற்பவே செயல்பட வேண்டியிருக்கிறது. ஆகவே அறிவித்தால் மட்டுமே அறியக்கூடிய உயிர்கள் அறியக் கூடிய நெறியில், இறைவன் உயிர்களுக்கு அறிவிக்கின்றான். இறைவன் உயிரினிடத்தில் வெளியில் தெரியுமாறு இல்லாமல் மறைந்து நிற்கின்றான். நீரின்கண் உள்ள நிழல், வேறு நில்லாது நீரோடு கலந்து நிற்றலால் நீர்போல வெளிப்படத் தோன்றாது. அதுபோல சிவசைதன்யம் எனப்படும் தூய அறிவும்(வாலறிவும்)யான் என்னும் உணர்விற்கு விடமாய்ப் பலப் படும். ஆன்ம அறிவோடு கலந்து வெளிப் படாது நிற்கும் என்று மெய்கண்டார் கூறுகிறார். தாய்க்குக் குழந்தையின்கண் உள்ள அருளாகிய அன்பைப் பிறர் அறியுமாறு வெளிப்படுத்தும் அவ்வன்பின் உருவாகிய கண்ணீரும் முலைப்பாலும், குழந்தையைக் காணுமுன் இல்லாமல் பின் உளதாகி இருத்தல் போல இறைவனும் உயிர்களின் அன்பு வெளிப்படாத போது உயிர்கள் அறிவில் மறைந்தும் உயிர்களின் அன்பு வெளிப்படும்போது உயிர்களின் அறிவில் வெளிப்பட்டும் தோன்றுகிறான். இவ்வாறு இறைவன் தன் அருள் காரணமாகத் தன்னை வெளிப்படுத்தவில்லையாயின், உயிர் தன் முயற்சியினால் மட்டுமே இறைவனை அறிய இயலாது என்ற கருத்து இங்கு மறைந்துள்ளதை நோக்கலாம்..

உயிர்கள் இறைவனை நோக்கித் தவம் செய்தல் அருள்வழி நிற்றலுக்கு அடிப்படையாகும். 'உற்றநோய் நோன்றல், உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தவத்திற்குரு' என்று திருவள்ளுவர் கூறுகிறார். தவத்தின் வெளி உருவத்தைக் கடந்து, தவத்தின் உட்கருவைப் பற்றி மெய்கண்டார் 'இறப்பில் தவம்' என்னும் தொடரில் விளக்குகிறார். தவம் செய்வதனால் நமக்கு நல்ல குடியில் பிறத்தற்குரிய பேறு கிடைக்கிறது. சரியை, கிரியை, யோகம் என்பவை சைவத்தில் இறப்பில் தவம் எனப்படும். சரியை என்பது புறக்கருவிகளால் இறைவனுக்குத் தொண்டு செய்தல். யோகம் என்பது இயமம், நியமம் முதலிய எட்டு வகைப் பயிற்சிகளால் மனத்தைக் கட்டுப் படுத்துதல். மேற்கூறிய சரியை, கிரியை, யோகம் என்னும் இம்மூன்றின் பயனாக வருவது ஞானம். தாயுமானுவர் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றை அரும்பு, மலர், காய், கனி என்னும் நான்கோடு ஒப்புமை செய்கிறார். வேதத்தில் விதிக்கப் பட்டுள்ள வினைகளுக்குப் பயன் வேதத்தில் கூறப்பட்டுள்ளது. ஆகவே இறைவனை நோக்காது வினைகளை மட்டும் விரும்பிச் செய்து வருதல் பசித்துண்டு

பின்னும் பசிக்கும் நிலைக்கே நம்மைச் செலுத்தும். நல்வினை, தீவினை என்னும் இவைகளாலும் இவற்றின் பயனாலும் பாதிக்கப்படாத இருவினை ஒப்பு என்னும் நிலையைத் திருவருளால் பெறும்போது ஞானகுருவைத் தேடி ஞானத்தைச் சாதகன் தலைப்படுவன். ஆகவே சாதகன் எந்தச் செயல்களைச் செய்கிறான் என்பது முக்கிய மன்று. வேதத்தில் சொல்லப்பட்ட செயல் களையும், இறைவன் கருத்தின்றிச் செய் தால், அதனால் நாம் அருளைப்பெற இயலாது. ஆன்ம அறிவோடு கலந்துள்ள இறைவன் திருவுள்ளத்தை அறிந்து, அறிந்தவாறு செயல்படுவதன் மூலமே நாம் அருளைப்பெற இயலும்.

குருவாகி உதவுகிற சிவம் உயிர்களின் உண்மைத்தன்மையை உணர்த்துகிறார். ஐம் பொறிகள் மூலம் கேவல (இருள்) நிலை யிலிருந்து மருள் (சகல) நிலைக்கு நாம் வருகிறோம். இது ஒரு வகையில் முன்னேற் றம்தான். ஆயினும் அருள் நிலையை நாம் அடையாத வரை நம் முன்னேற்றம் முழுமை யானதாகாது. ஆகவே ஐம்பொறிகள் ஒரு வகையில் விளக்கம் அளித்தாலும் காட்டப் படும் பொருளின் தன்மைகளைக் காட்டி, அறியும் உயிரின் உண்மைத் தன்மையை மறைக்கின்றன. ஒரு தூய வெண்மையான பளிங்கின் மேல் சில வண்ணங்களை இட்டால், வண்ணங்கள் தத்தம் நிறத்தைக் காட்டுமேயொழிய, தங்களுக்கு அடிப் படையாக உள்ள பளிங்கின் நிறத்தைக் காட்டா. அதுபோல தன்னால் சாரப்பட்ட பொறிகளில் இயல்பையே உயிர் பெறுமாறு செய்யும். இவ்வாறு ஐம்பொறி களைச் சார்ந்து அறிதல் உயிரின் பொது இயல்பு என்று சிந்தித்து அறிதல் வேண்டும். பொறிகளைச் சார்ந்து அறியும் பொது இயல்பு பொய்யாய் ஒழியுமாறு தெளிந்து, அவ அசத்தாகிய பொறிகளுக்கு வேறுகிய சிவசத்தின் இயல்பு தன்மாட்டு ளிக்குமாறு, அச்சிவத்துக்கு அடிமையாய் ழக வேண்டும். இதனால் கருவிகள் உள்ள போது கருவிகளின் கருத்தானுகிய இறை வன் வழி நடக்க வேண்டிய இன்றியமை யாமையைத் தெரிவிக்கிறார் மெய் கண்டார்.

''தன்னை இந்திரியத்தின் வேறுவான் காணவே தமது முதல் சீபாதத்தை அணை யும்'' என்று வரும் மேற்கோளும், ''ஊசல் கறிறு அற்றால் தாய் தரையேயாம் துணை யான்'' எனவரும் ஏதுவும் சிவஞான போத நூல் முழுமையிலும் மிக உயிர்ப்பான இடமாகும். ஐம்பொறிகளிலிருந்து வேறுய வழி உயிர் நீங்கும்போது தோன்றும் கேவ லத்தை நீக்குதற் பொருட்டு, வேறுக என்று சொல்லாமல், வேறுவான் காணவே என்று கூறியதன் திறத்தை நாம் உணர வேண்டும். ஆன்மீக வாழ்க்கை கருவிகள் நீங்கிய பேதை வாழ்வு அல்லாமல், கருவிகளை இறைவனுக்கு உடைமையாகக் காணும் சிறப்பான வாழ்க்கை என்பதை உணரவேண்டும்.

ஒருவன் ஊஞ்சலில் ஆடும்போது தனக்கு அடிப்படை ஊஞ்சல் என்றே எண்ணுகின்றான். ஊஞ்சல் கயிறு அறும் போது, தனக்கு அடிப்படை பூமியே என்று உணர்கின்றான். அதுபோல உயிர் ஐம்புல இன்பங்களை நுகரும்போது, ஐம் பொறிகளே தமக்கு அடிப்படை எனத் தவருக உணரும். ஆயினும் ஐம்பொறிகள் உண்மையான அடிப்படையன்று, இறை வனே உண்மையான அடிப்படை என்பதை ஐம்பொறிகளிலிருந்து விடுபட்ட பிறகு தான் உணர இயலும். ஊஞ்சல் கயிற்றில் ஆடும் வரை ஊஞ்சலே ஆதாரம் என்று எண்ணுவதைப்போல, ஐம்புல இன்பங் களில் ஆழும்போது ஐம்பொறியே ஆதாரம் என்று எண்ணுகிறோம். உண்மை யான அடிப்படை இறைவன் என்பது ஐம் பொறிகளிலிருந்து விடுபட்ட பிறகே அதாவது ஊசல் கயிறு அறுபட்டபோது தரை ஆதாரமானது என்பது தெரிவது போலத் தெரிகிறது. செழுமையாக நிறைந்த நீரைத் தேக்கிச் சிறையிட்டது போல அணையில் வைத்து, பிறகு அணையி

லிருந்த தடை விடுபட்டபிறகு, சுடலின் கண் அந்நீரேயாய் அவ்ணை நீர் சென்று கலக்கும். அதுபோல கருவிகளால் ஆகிய பாச ஞானத் தடையின்று நீங்கிய வழி, தனக்குக் கேடில்லாத சிவபிரானது திரு வடியைத் தலைக்கூடி, அத்திருவடி நிறை வேயாய் அதன்கண் அடங்கிப் பின் மீளாது.

மெய்கண்டார் மாணவனைச் சிவஞான போதம் சுற்குமுன் "பூதாதி" என்று தொடங்கும் முதல் பாடலில் "பேதாய்!" என விளிக்கின்றார். இறைவனே குருவாகி வந்து அருளும் திருவருள் உண்மையை உணரும் நிலையில் "சிவமென்னும் அந்த தர!" என விளிக்கிறார். "ஐம்பொறிகள் போல ஏகதேச விளக்கம் உடையாய் அல்லை என்று அறிவுறுக்கப்படும் சித்தாந்த மகா வாக்கியத்தைப் பெற்றுடைய மாணவனே!" என்பது "ஐம்பொறியின் அல்லை எனும் அந்த தர!" என்னும் தொடரின் பொருள். ஆகவே சிவஞான போதத்தைக் கற்குமுன் பேதையாக உள்ள வன் சிவஞானபோதத்தை அறிந்து, அறிந்தவற்றைச் செயல்படுத்துவ தனால் சிவமாம்தன்மை பெறுகிறான். என்னும் உண்மையையும் குறிப்பாக மெய்கண்டார் அருள்கின்றார்.

திருவருளால் ஞானம்தான் வீடு பெறுவதற்கு நேர்வாயில் என்று அறிந்த பிறகு, அந்த ஞானத்தை நம் நடைமுறை வாழ்வில் எவ்வாறு பெறலாம் என்னும் கேள்விக்கு விடையாக மெய்கண்டார் ஒன்பதாம் சூத்திரத்தை அருளிச் செய்கிறார். தீவிர பக்குவமுடையவர் கேட்ட அளவானே சிந்தித்தல், தெளிதல் முதலியவற்றையும் உடனே அறிந்து நிட்டை கூடுவர். அவ்வாறு இருக்கும் நிலை பெறுது ஆசையோடும் அங்கும் இங்கு மாகி அவமருவோர் அரும்பாசம் அறுக்கும் வகையை வரும் பத்து, பதினேராம் சூத்தி ரங்களில் அருள்கின்றார் மெய்கண்டார். குறை உணர்வாகிய பசு அறிவாலும் பாச அறிவாலும் உணரப்படாத முதல்வகை அவனது திருவடி ஞானத்தால் தன்னறி வின் கண்ணே ஆய்ந்து அறிதல் வேண்டும். அத்திருவடி ஞானத்தால் நில முதல் நாத முடிவாகிய பாசக்கூட்டம் ஒரே வகையாய் நில்லாது கானல் நீர் போன்ற தன்மையுடையது என்று அறிந்து நீங்கவே, அப்பதிஞானம் பிறவித் துயராகிய வெப் பத்துக்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும்; அவ்வாறு பாசத்தை நீங்கி ஞானத்தைப் பெற்று ஞேயமாகிய பரம் பொருளைக் காணும் காட்சி தளராமைப் பொருட்டுத் திருவஞ்செழுத்தை விதிப் படி உச்சரிக்க வேண்டும் என்பதாக,

"ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணில் சிந்தை நாடி
உராத துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதிவிதியெண்ணும்
அஞ்செழுத்தே"

என்று மெய்கண்டார் கூறுகிறார்.

இறைவனை ஞானக்கண் மூலமாகப் பார்க்க வேண்டும், பாசமானது கானல் நீர்போல நிலையில்லாதது என்ற உணர் வுடன் சிந்தையில் ஞானக்கண் கொண்டு பார்த்தால் இறைவன் வெளிப்படுவான் என்று கூறுகிறார். நாடி முதலியவற்றுள் நான் யார்? என்னைத் தேடியும் அறிகின் றிலேன் என்று, இவ்வாறு தேர்கின்ற

தேர்ச்சியறிவின் கண்ணே, இதனைத் தெளிவிப்பதோர் அறிவு வேறுண்டென ஆராய வேண்டும். அவ்வாறு ஆராயும்போது முதல்வனது திருவடி ஞானத்தால் முதல்வனையும் உணர்ந்து, முதல்வனின் வியாப்பியமாய் நின்று அங்ஙனம் அறியும் பொருளாகிய தம்மையும் உணர வேண்டும். அவ்வாறு அறிய இயலாதவர் முத்திக் காலத்தும் தம்மை அறிய இயலாது. சுண் உயிரறிவால் உணர்த்தப்பட்டுப் பொருள் களைக்காணுங்கால் தன்இயல்பையும் உணராது தன்னைச் செலுத்தி நிற்கும் உயிரின் இயல்பையும் உணராது. அது போல் உயிர் முதல்வனுல் மறைந்து நின்று உணர்த்தப்பட்டு ஒன்றனைத் தேர்ந்தறியினும் அது தன்னியல்பையும் அறிய மாட்டாது, தன்னை உணர்த்தி நிற்கும் முதல்வனையும் அறியமாட்டாது. அத்தேர்ச்சியறிவின் கண்ணும் முதல்வன் கள்வன் போலப் புலப்படாது உடனிருக்கிறான். ஆகவே வெளியே புலப்படாது உடனிருக்கும் முதல்வனை உயிர் தனது அறிவின்கண் நாடித் தெளிய வேண்டும். இறைவனைக் கள்வன் என்று கூறும் பழக்கம் வேதத்திலும் காணப்படுகிறது. 'என் உள்ளம் கவர் கள்வன்' என்று தொடங்கும் பதிகத்தில் கூறுவதை நோக்கலாம். ''கள்ளரோடு இல்லமுடையார் கலந்திடின் வெள்ள வெளியாமென்றுந்தீ பற'' என்னும் திருவுந்தியார் (23) பாடலையும் இங்கு கருதலாம்.

சுட்டி உணரப்படுவதாகிய பிரபஞ்சத்தைச்சுட்டி அசத்தென்று கண்டு கழித்த வழி, முடிவில் செம்மையே வெளிப்படுவது சத்தாகும். சுட்டி அறிந்து வந்த உயிர் (அசத்தின் வேறும் அங்ஙனம் தோன்றும்) சத்து அல்லை. அசத்தின் வயப்பட்டு நின்று சுட்டியறிந்து வந்த உயிர், அசத்தினை நீங்கிச் சத்தின் வயமாய் அதனைப் புணர்வதன் மூலம் சுட்டு ஊணர் வாகிய பொதுவியல்பு உயிரை விட்டு நீங்கும். சுட்டி உணரப்பட்ட உலகை இது சத்தன்று, இது சத்தன்று என ஒவ்வொன்றையும் நோக்கி, அசத்தென்று ஒழிந்து, அவ்வாறு கண்டொழிந்த தன்னறிவின் கண் சுட்டு உணர்வு இன்றி நின்ற கடவுளை ஆராய்ந்து சிவம் நான் (சோகம்) எனப் பாவித்தால், அப்பாவகத்தால் அவ்வித மாய்த் தோன்றும் முதல்வனுல் அநாதியாய்க் கூடியுள்ள பொதுவியல்பை நீங்கும். இது கருட தியானத்தில் விளங்கித் தோன்றும் மந்திர தைவிகக் கருடனுல் விடத்தைத் தீர்த்துக் கொள்வது போன்றது.

ஆன்மாவைச் சுத்தம் செய்வதற்குப் பாசம் நீங்கிய வழி, தண்ணிழலாய் விளங்கும் ஞான சொரூபம் ஒன்றே போதும், வேறு எதுவும் செய்யவேண்டாம் என்று கூறுவாரை நோக்கி, ஞானக்கண்ணுல் பதியைச் சிந்தை நாடிய பின்னர் அவ்விடத்துத் திரு அஞ்செழுத்தையும் விதிப்படி கணிக்கவேண்டும் என்று மெய்கண்டார் கூறுகிறார். அஞ்செழுத்தைக் கணிக்கும் முறை மானதம், மந்தம், உரை என மூவகைப்படும். உரை என்பது பலர் அறியுமாறு திருவைந்தெழுத்து மந்திரத்தை உரைத்தல். மந்தம் என்பது தன் செவிக்கு மட்டும் கேட்குமாறு கணித்தல். சுத்தமான தம் என்பது அறிவால் கணித்தலைக் குறிக்கும். ஆகவே சுத்தமானதம் தன் செவிக்குக் கேட்கும் மானதத்துக்கு அடிப்படையாய் அறிவால் எண்ணுதலைக் (தியானித்தலை) குறிக்கும். வேம்பு நின்ற புழு அதனை நீங்கிக் கரும்பைத் தலைப்பட்டு அதன் சுவை தெரிந்தும் பயிற்சி வாசனையால் வேம்பையே நோக்கி நிற்குமாறு போல அசத்தாயுள்ள வண்ண பேதங்களை அசத்தென்று கண்ட உயிர்களுக்கு அதனுல் ஞானசொரூபம் விளங்கி ஞேயம் (பரம்பொருள்) காட்சிப்பட்ட இடத்தும், அவை பழைய பழக்கத்தால் பண்டைச் சிற்றுணர்வை நோக்கி நிற்குமாதலின் அவ்வாதனை நீங்குற்பொருட்டுச் சீபஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க வேண்டும் என்று மெய்கண்டார் அருள்கின்றார்.

திருவைந்தெழுத்தால் ஆன்மா அரனுடைய உடைமை என்று அறிந்து இதயத்

தில் அஞ்செழுத்தால் அர்ச்சனை செய்ய வேண்டும். இதயத்தாமரையில் அஞ் செழுத்தால் அமைந்த திருமேனியில் முதல் வனைக் கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, அன்பு, தவம் என்னும் எட்டு மலர்களைக் கொண்டு அர்ச்சனை (பூசை) செய்ய வேண்டும் இந்த அஞ்செழுத்து திருமந்திரத் தானே குண்டலித்தானமான உந்தியில் ஞான அனலை எழுப்பி அதன்கண் விந்துத் தானத் தமிழ்தமாகிய நெய்யைச் சுருக்குச் சுருவங்களால் ஓமித்து, விந்துத் தானமா கிய புருவ நடுவில் சிகர யகர வகரங்கள் மூன்றும் முறையே தற்பதப் பொருளும், அசி பதப்பொருளும் ஆம் முறைமை நோக்கி சிவோகம் பாவகை (சிவன் நான் என்று தியானம் செய்தல்) வேண்டும் தத் பதப் பொருள்–சிவம் (சி), துவம் பதப் பொருள்–உயிர் (ய), அசி பதப்பொருள்– அருள் (வ). இப்படிப்பட்ட பாவனையில் விளங்கித் தோன்றும் இறைவனுக்கு உயிர் சேட சேடிய (ஆண்டான் அடிமை) பாவனையால் அடிமையாவான்.

சிவஞானபோத ஏழாம் சூத்திரத்தில் சாதிக்கும் ஆன்மாவின் இயல்பு, எட்டாம் சூத்திரத்தில் சாதித்துப் பெறப்படும் ஞானத்தின் இயல்பு, ஒன்பதாஞ் சூத்திரத் தில் சாதிக்கும் வழி ஆகியவற்றை உணர்த்தி, மேல்பத்து, பதினொன்று ஆகிய சூத்திரங்களில் சாதனத்தின் பயனாகிய வீடு பேற்றைப் பற்றிக் கூறுகிறார். வீடு பேறு என்னும் சொல் பாசத்தை விடுதல், சிவத் தைப் பெறுதல் என்னும் இரு பகுதிகளை உடையது. பாச விடுதலையைப் பற்றிக் கூறும் பத்தாம் சூத்திரம் இரு பகுதிகளை உடையது. முதல் பகுதி பரமேசுவரன் இவ் வான்மாவாய் நின்ற முறையான் அவனி டத்து ஏகனாகி நிற்க என்பது. அவ்வாறு நிற்கவே யான் எனது என்னும் செருக்கு அற்று அவனது சீ பாதத்தை அணையுமாக லான் என்பது இம்மேற்கோளுக்குரிய ஏது. முதல்வனோடு ஒற்றுமைப்பட்டு நிற்காத வழி மலமாறாது, மலம் நீங்காத வழி சீ பாதத்தை அணைதல் பெறப்படாது என மெய்கண்டார் அருள்கின்றார். 'இனி இறை பணி வழுவாது நிற்க' என்பது பத்தாம் சூத்திரத்தில் இரண்டாம் பகுதி. அவன ருளால் அல்லது ஒன்றையும் செய்யான் ஆகவே அஞ்ஞானகன்மம் பிரவேசியா ஆதலால் என்பது இதற்குரிய ஏது. ஆன்மா தனது அறிவு விழைவு செயல்களின் தொழில்பாட்டுக்கு முதல்வனது அறிவு விழைவு செயல்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளது என்னும் நிலையை உணர்ந்து, அம்முதல்வன் வியாபகத்துள் ஆன்மா அடங்கி நிற்பின், ஆன்மாவை உலக வாதனை தாக்காது. இக்காரணத்தால் மேல்வினையும் ஏறாது மாயை தன்மங்க ளின் வாசனை அறுதற்கு உபாயம் இறைபணி நிற்றல் என்று மெய்கண்டார் அருள்கின்றார்.

செவிவாய் முதலிய ஐம்பொறிகள் முதல்வனது உடைமையாகிய மாயேய மாவன அன்றி ஆன்மாவாகிய யாமெனப் படுவன அல்ல. ஐம்பொறிகள் தொழிற் படுதலும் முதல்வன் வயத்தானன்றி நம் வயத்தன அல்ல, ஐம்பொறிகள் சத்தம் முதலியவற்றை விடயித்தற்கு வழியாகிய தநுகரண புவன போகங்களும் அம்மாயேய மாவனவன்றி யாமாவன அல்ல. அவை செயற்படுதலும் முதல்வன் வயத்தானன்றி நம் வயத்தானல்ல. அவற்றோடு கூடி நின்று வினைகளை ஈட்டி நுகர்ந்து வருகின்ற யாமும் ஞானக்கிரியைகளை முதல்வன் விளக்கியவழி விளங்கியும் அல்லாத வழி விளங்காமலும், இவ்வாறு முதல்வனை யின்றி, ஆன்மா ஒன்றை அறியவும் செய்யா, நுகரவும் செய்யா. ஆகவே முதல் வனது உடைமையாகவே நாம் இருப் போம். இவ்வகையில் பசுபாசங்களின் இயல்புகளை உள்ளவாறு உணர்ந்து, செய்வன வெல்லாம் அவனருளின் வழி நின்று செய்வதாகக் கண்டு கொண்டிருப் பாராயின் அவ்விறை பணியாகிய அடிமைத்திறம் உடையார் எவ்வுடம்பி னின்று எவ்வினைகளைச் செய்யினும் அவை

அவரைப் பாதிக்கா. ஆகாமிய வினையை விட்டு நீங்காது உடன் கொண்டு வருவ தாகிய பிராரத்த வினையும் தன்னைக் கூட்டு விக்கும் முதல்வன் சந்நிதியில் உடல் ஊழா யொழியும்; ஏனையோர்க்குப் போல அவரைப் பாதிக்கா.

இறை பணியார்க்கு இவ்வகையில் உதவும் இறைவன் சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன் என்னும் முறையில் சார்ந் தாரைக் காக்கும் செயல்திறம் உடைய வனையினும், வஞ்சனையில்லாதவன். தன்னைச் சார்ந்து தன் அடிப்பணியின் நிற்க வல்ல அடியார் தானேயாய் நிற்குமாறு நிறுவி, அவர்க்கு வரும் ஆகாமிய வினை யைக் கெடுப்பன். இவ்வாறு தானேயாய் நிற்க முயலாத பிறர்க்கு வரும் ஆகாமிய வினையைக் கொடுப்பன். இம்முறையில் செய்வோர் செய்திக்குத்தகப் பிராரத்த வினையின் பயனை நுகருமாறு செய்வன். ஆயினும் இறைவன் வஞ்சனையுடையவன் அல்லன்.

இறை பணியில் நிற்கும் ஞானிகளைப் பிராரத்த வினை பொருந்தினலும், அவர் கள் எவ்வாறு வினையால் பாதிக்கப் படாமல் இருப்பார்கள் என்பதை ஒரு உவமையின் மூலம் மெய்கண்டார் விளக்கு கிறார். ஒரு பாத்திரத்தில் இருந்து பெருங் காயத்தை எடுத்தாலும் அப்பாத்திரத்தில் அப்பெருங்காய வாசனை மெலிதாக இருக்கும். அதுபோல நான் அவன் என்று எண்ணிச் சிவலோகம் பாவனை செய்யும் ஞானிக்கு நாடும் உளம் (பசுத்துணரும் உணர்வு) உண்டாகும். ஆகவே அவனிடம் பிராரத்த வினையும், அதற்கிடமாகிய உடம்பு, முதலிய மாயேயமும் வாசனை மாத்திரமாய் மெலிதாய் வந்து தாக் கினலும் அவ்வழி ஏறுவதாகிய ஆகாமிய வினை மேலும் கினைத்து வளராமல் தனக்குப் பற்றுக்கோடாகிய மாயேயத்தினேடும் கெட்டு ஒழியும். அந்த ஞானி பசுத்துணர்வு மிறந்து ஏகனாகி இறைபணி நின்று சத்தே யாகிய சிவமேயாகிய வாற்றல், ஒருகால் அவ்வாதனை பற்றிப் பிறழினும் பிறழ வொட்டாத அச்சிவனையே உணர்ந்து நிற்பன். ஆகவே ஒளி இருளைத் துரக்கு மாறு போல சிவனைப்பற்றிய உணர்வு ஆகாமியத்தைத் துரக்கும்.

நெருப்பால் பாதிக்கப்படாத அங்கித் தம்பனை வல்லார் நெருப்பில் குளித்தாலும் தம் தன்மையிலிருந்து நீங்காதவாறு போலவும், குதிரைகளை நன்கு வேகத்துடன் செலுத்தக்கூடிய பாகுநூல் கற்று வல்லார் அப் பாய்மாவின் வேகத்துட்படினும் தம் திறனில் நீங்காதவாறு போலவும், ஐம் புலன்கள் தமக்கு வியாபகமாய் அடங்கத் தாம் அவற்றை வியாபித்து மேற்பட்டு நிற்கு முறையை ஆராய்ந்து தாம் அரனடி யாகிய அச்சிவனைப் பற்றிநின்று இறை பணியினின்று நுகர வல்லார் அவ் ஐம் புலனிற் சென்றும் அதனலே தந்திறல் நீங்க மாட்டார்.

சத்தோடு கூடியவழிச் சத்தாயும் அசத் தோடு கூடியவழி அசத்தாயும் இவ்வாறு சதசத்தாம் இயல்புடைய தன் உண்மை உணர்ந்தோன் சத்தாகிய முதல்வன் திரு வருளால் அல்லது ஒன்றையுங் காணுனய் அவ்வருளின் வழி காணுமாயின் அவ்வழி பாசமாகிய அசத்தின் பற்றுச் செய்யமாட் டான். ஆகவே சத்தாகிய அம்முதல்வனைத் தலைப்படுவோர் ஒளியின் முன் இருள் போல, அச்சத்தின் எதில் தனது சத்தியை ஏற்கமாட்டாத அசத்தாகிய பாசத்தின் மாட்டு எய்துவாரல்லர். இவ்வகையில் "நாமல்ல இந்திரியம்" என்று தொடங்கும் பாட்டால் இறைபணியில் நிற்பார்க்குப் பிராரத்தவினை முதல்வன் சந்நிதியில் உடலுழாய்க் கழிவதாகலின் மேலேக்கு வினை ஏறுவதில்லை என்பதும், "சார்ந் தாரைக் காத்தல்" என்று தொடங்கும் வெண்பாவால் பிராரத்தவினை செய்வோர் செய்தியின் பயன் விளையும் வழியில் பெறப்படும் என்பதும் தெளிவாகிறது. செய்வோர் செய்திப்பயன் அல்லாமலும் விளைவது வாதனை மாத்திரையே யாகலான் பிராரத்த வினை ஞானத்தால் அழியும் என்பது "இங்குளிவாங்கும் கலம்"

என்னும் பாவால் விளக்கப்படுகிறது. ஞானம் வாதனைபற்றிச் சலிக்குமாறு இல்லை என்பது "நண்ணனல்" என்று தொடங்கும் பாடலாலும், ஞானம் சலியாமைக்கு ஏது "சதசத்தாம்" என்று தொடங்கும் பாடலிலும் கூறி, இவ்வாறு அஞ்ஞான கன்மம் பிரவேசியாமையை மெய்கண்டார் 10-ஆம் சூத்திர இரண்டாம் அதிகரணத்தில் தெளிவுபடுத்துகிறார். இம்முறையில் அருள்வழிநிற்றல் மூலம் ஆணவம், கன்மம், மாயை என்னும் கட்டுகளிலிருந்து விடுபட்டு, உயிர் இறவா இன்ப அன்பை நுகர்ந்து வாழலாம் என்பது தெளிவாகிறது. □



வையகம்இன் புறதின்ற மருமலிபொற் பதம்போற்றி
கையமரு நிலைபோற்றி கருணைமுக மலர்போற்றி
மெய்யிலகும் ஒளிபோற்றி விரவியெனை எடுத்தாண்ட
செய்யதிரு வடிபோற்றி திருச்சிற்றம் பலம்போற்றி.

கோயிற் புராணம்



இதந்தரு மடந்தையொ டிசைந்துயி ருடம்புபோல்
விதம்படு லகங்களின் விரிந்தொளி விளங்குவார்
மதங்கமொ டுதுந்துபி வளங்கெழ முழங்கவே
சிதம்பர நடம்பயில் செழுங்கழல் இறைஞ்சுவாம்.

திருவாதவூரர் புராணம்



திருநாவுக்கரசர் தில்லைக் காட்சி

தவத்திரு. சுந்தர சுவாமிகள் ஆதீன கர்த்தர்,
கௌமார மடாலயம், கோவை.

சைவர்களுக்குக்கோயில் என்றால் சிதம்பரம். சமய குரவர்கள் நால்வரும் கோயிலாகிய திருத்தில்லை ஆனந்தக் கூத்தனே அநுபவித்த நிலை தனிச் சிறப்பாகும். தேவாரப் பாடலைப் பாடத்தொடங்கும் போதும் முடிக்கும் போதும் 'திருச்சிற்றம் பலம்' என்று சொல்வது மரபு. ''பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே'' என்பார் அப்பர் பெருமான். 'சிற்றம்பலம் மேய செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே'' என்பது திருஞானசம்பந்தர் திருவாக்கு. தெய்வச் சேக்கிழார் பெருமானுக்குத் தில்லையில் தாண்டவப் பெருமான் ''உலகெலாம்'' என்று அடி எடுத்துக் கொடுக்க முதல் திருப்பாட்டில் அப்பெருமான் அருவமாகச் சிதம்பர ரகசியத்தில் விளங்கினாலும் அருவுருவாகிய அலகில் சோதியாக விளங் கினாலும் உருவமாக வெளிவந்து அருளும் கருணையை வியந்து போற்றுகிறார்.

அறையிலிருந்தால் மக்கள் காணமாட் டார்கள் என்று அம்பலத்தில் எழுந்தருளி, இருந்தபடி இருந்தால் பார்க்கமாட்டார்கள் என்று ஆட்டம் காட்டி நாட்டத்தை ஈர்க் கிறான். அவ்வாறு நாடாதவர்களும் ஓசை கேட்டுத்திரும்பிப் பார்க்கும் வகையில் மலர் சிலம்படி சிலம்ப ஆடுகின்றான். தவறு செய்தவனையினும் தன்னடியில் வீழ்ந்தால் உலாவி வாழும் வாழ்வு அருளுகின்றான் என்பதை 'நிலவு உலாவிய நீர்மலி வேணியன்' என்று கூறுகின்றார்.

தில்லையுள் மாநடம் செய்வரதர் பொற்றாள் தொழுதால் தான் ஊன் அடைந்த உடம்பின் பிறவி தான் அடைந்த உறுதியைச் சாரும் என்று கூறுகின்றார்.

திருநாவுக்கரசரை மகேந்திர வர்ம பல்லவ மன்னன் ஆணைப்படி சுண்ணும்பு நீற்றறையில் இருத்தி நெருப்பு வைத்து இரும்பிலும் ஆன திருகு தாளுடன் பூட்டி வைத்தனர். திருநாவுக்கரசர் சுண்ணும்பு நீற்றறையில் இருப்பதாக எண்ணவில்லை. ''நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன். நினையாது ஒரு போதும் இருந்தறியேன்''. என்ற பெருந்தகையாளர். அம்பலவாணர் அடியிணை நிழலில் இருப்பதாக எண்ணிக் ''கொய்மலர்ச் சேவடியிணையே குறுகினேமே'' என்றவர். அம்பலவர் தேனுந்து மலர்ப்பாதத்தின் கீழே இன்பமாக இருப்பதாக எண்ணினார்.

சுண்ணும்புக் கல் வெடிக்கும் ஓசை காதுக்கு மாசில் வீணையாக இருந்தது. சுண்ணும்பு கண்ணில் படுவது மாலை மதியமாக இருந்தது. மூச்சுக் காற்று உள்ளே

இழுக்கும் போது திருநாவுக்கரசருக்கு சுண்ணும்புக் காற்று வீசுதென்றலாக இருந்தது. உடம்பில் சுண்ணும்பு வேகும் வெம்மை இளவேனிலாக இருந்தது. வாயில் சுண்ணும்பு படும்போது வண்டுறை பொய்கைத் தண்ணீராக இருந்தது. சுண்ணும்பு நீற்றறை என்று எண்ணுமல் அம்பலவர் குஞ்சிதபாத நிழலில் இருப்பதாகவே எண்ணியதால் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து வகையிலும் இன்பம் அனுபவித்தனர். சேக்கிழார் பெருமான் மாதில் வீணையும் என்ற பாடலைக் குறிப்பிட்டு பின் ஈசன் எந்தை இணையடி நிழலில் அனுபவித்தமை கூறுகின்றார்.

"ஆனந்த வெள்ளத்தின் இடைமூழ்கி அம்பலவர்
தேனுந்து மலர்ப் பாதத்தமுதுண்டு தெளி வெய்தி
ஊனந்தான் இலராகி உவந்திருந்தார்" என்கிறார்...

திருவதிகையிலே அநத அம்பலவர் திருவடிகளைத் தில்லையில் காணவேண்டும் என்று எண்ணுகிறார். "ஆனை சீர்த்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற 'வானுறு புடை பரக்கும் மலர்ச் சடையார் அடி வணங்கி— ஊனுலும் உயிராலும் உள்ள பயன் கொள" எண்ணிப் பலதலங்களை வணங்கித் திருத் தில்லைக்கு எழுந்தருளுகிறார்.

திருத்தில்லை வரும் வழியில் எல்லை வணங்குதலும் திரு நந்தவனம் காணுதலும் தெய்வச் சேக்கிழார் சிறப்பாகக் கூறுகின்றார்.

பெருமான் எழுந்தருளும் திரு வீதிச் சிறப்பும் அங்கு எவரும் பணி தரும் அடியார் திருவலகிடுதலும், குளிர் புனல் விடுதலும் கண்டு திருவீதி வலம் வந்து, ஆடல் வல்ல பெருமான் திருமுன்னிலையடைகின்றார்.

திருநாவுக்கரசர்,

"அம்பலவர் முன்னிலையில் கை எடுத்து வணங்கினர் என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிடவில்லை; கண்ணீர் வடித்தார் என்று கூறவில்லை; அவை தானே நிகழ்வதாகக் கூறுகின்றார்.

"கையும் தலைமிசை புனை அஞ்சலியன
கண்ணும் பொழி மழை ஒழியாதே
பெய்யும் தகையன கரணங்களுமுடன்
உருகும் பரிவின பேறெய்தும்
மெய்யும் தரைமிசை விழுமுன் பெழுதரும்
மின்தாழ் சடையொடு நின்றருடும்
ஐயன் திரு நடம் எதிர் கும் பிடுவர்.
ஆர்வம் பெருகுதல் அளவின்றால்".

இவ்வாறு பல முறையும் தொழுது தொழும் நாவுக்கரசர் பெருமான் இது வரை மனித்தப்பிறவி வேண்டாம் என்று எண்ணியிருந்தவர்க்கு தில்லைத் திரு நடம் காண்பதற்கு ஊனுலும் உடம்பாலும் ஆன இம் மனித்தப்பிறவி வேண்டத் தக்கதே என்று எண்ணிக் "குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்" என்று பாடுகின்றார். தனக்கு விருப்பமான கொய் மலர்ச் சேவடியாகத் தூக்கிய திருவடி நீற்றறையில் ஐந்து வகையிலும் இனித்தமை எண்ணி "இனித்தம் உடைய எடுத்த பொற்பாதம்" என்று கூறுகின்றார்.

நடராசப் பெருமானுடைய முகக் குறிப்பும் அபயக்கரத்தின் குறிப்பும் 'என்று வந்தாய்' என்று வினவுவதாகக் காண்கிறார். அடியார்களையும் அக்குறிப்பைப் பாருங்கள் தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம் சென்று தொழுமின்கள் ஒன்றியிருந்து பாருங்கள்; "என்று வந்தாய் என்னும் எம்பெருமான் தன் திருக்குறிப்பே" காணலாம் என்று கூறுகின்றார்.

நாம் நாளும் உண்ணும் அன்னம் பாலிப்பவன் அவனே என்பார், "அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்" என்று பாடுகிறார்.

திருக்கழிப்பாலை முதலான தலத்திற் குச் சென்ற போது "அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத் தினைத்தனைப் பொழுதும்" மறக்கமாட்டேன். என்று

பாடிச் சிதம்பரத்திற்கு எழுந்தருளுகிறார்.

பெரும்பற்றப் புலியூராலே நாளும் பேச வேண்டும். அவ்வாறு பேசாத நாள் வாழ் நாள் அல்ல. அவை "சாவு நாள் உணர் வழியும், உயிர் போகும் நாள்" என்று சுந்தரமூர்த்தி நாயனார் கூறுவது போலப் "பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே" என்று திருத்தாண்டகம் அருளிச் செய்கிறார்.

உலகில் எல்லா உயிர்கட்கும் அருந் துணையாக இருக்கும் அம்பலவாணன் "பொது நீக்கித்தனே நினைய வல்லார்க்கு என்றும் பெருந்துணையாக" உள்ளான் என்ற தமது அனுபவத்தைத் திருநாவுக்கரசு சுவாமிகள் உபதேசிக்கிறார்.

வெண்பா

வாகீச மாமுனிவர் வாழ்த்து திருத்
தில்லையினில்
வாகீசம் பிள்ளையுடன் மற்றுமுள்ளோர்–
தேவீசன்
கோயிற் பணிசெய்து கும்பாபி டேக விழா
மேயமுறை செய்தார்கள் மேல்.

கோயிற் பணிக்குக் குலவு பொருளீந்தோர்
சேயமுறை முன்னின்று செய்தவர்கள்–
நேயமுடன்
கும்பாபி டேக விழாக் கோல விழாச்
சேவிப்போர்
தெம்பாக வாழ்க சிறந்து.

□

பூமாது பொலிவெய்த முகுந்தன் காக்கும்
புவிமாது வளம்பெருகப் புலமை சான்ற
நாமாது நலத்தழைப்ப இருள்கால்சீக்கும்
நகைநிலவு தவழ்மவுலி நன்னீர்க் கங்கை
மாமாது புனல்துளிப்ப மறைகள் வாழ்த்த
வளர்தில்லை யம்பலத்துள் வாமநீங்காத்
தேமாது விழிகுளிர்ப்ப அமரர் போற்றத்
திருநடஞ்செய் நூபுரத்தாள் சென்னி சேர்ப்பாம்.

சேது புராணம்



அன்பே திருமஞ்சனம்

புலவர் எம்.கே. பிரபாகரமூர்த்தி, எம். ஏ.

நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே.

—தாயுமானவர்.

எல்லாம் வல்ல இறைவனுடைய திருவருட் கருணையைப் பெறக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க வழிபட வேண்டும் என்பார் திருஞானசம்பந்தப் பெருமான். கசிவினுல் தொழும் அடியார் நெஞ்சில் கண்ணுதல் வீற்றிருப்பார் என்பதனை அப்பர் தம் திருவாக்கில் அறிகிறோம். "ஊனைக் காவல் கைவிட்டு உன்னை உகப்பார் உணர்வார்" என்று சுந்தரர் பெருமான் அருள்கின்றார். திருவாதவூர் அடிகள் "அழுதால் பெறலாம்" என்றிசைக்கின்றார்.

மேற்கண்ட அமுத வாக்குகளுக்கு எல்லாம் மூலமானது அன்பு ஒன்றே. அவ்வன்பினைச் செலுத்திய அடியார்களுள் நாயகமானவர் கண்ணப்பர். "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்" என்பது திருவாசகம்.

"அன்பே மஞ்சனநீர் பூசை கொள்ள வாராய்" என்று பரம்பரனை அழைக்கின்றார் தாயுமானவர், "வாய்கலசமாக வழிபாடு செயும் வேடன், என்று ஆளுடைப் பிள்ளையாரும், "தூயவாய்க் கலசம் ஆட்ட" என்று ஆளுடை யரசும், "ஆரா அன்பின் திண்ணனார்" என்று தெய்வச் சேக்கிழார் பெருமானும் கண்ணப்பர் பூசனையைப் பேரன்பின் முதிர்வு என்றே போற்றிப் பரவியிருத்தல் காணலாம். திருநீலநக்கர், புகழ்த்துணையார், மூர்த்தி நாயனார் போன்ற அருளாளர்கள் அகங் கனிந்த அன்பின் முதிர்வால் இறைவற்கு ஆற்றிய பூசனையைப் பெரியபுராணம் வாயிலாக அறிகிறோம்.

முப்போதும் திருமேனி தீண்டும் பேறு பெற்ற ஆதி சைவப் பெருமக்களைத் தெய்வச் சேக்கிழார் பெருமான், "ஆர்வமிகும் அன்பினர்" என்று போற்றி மகிழ்வர். இறைவனைப் பாலினுல் நறு நெய்யால் பழத்தினுல் பயின்றூட்டும் பெரும்பேறு பெற்றவர்கள். யாவரும் காண்டற்கரிய செம்பொற் சோதியார் திருவையாற்றில் தன்னைத்தானே பூசித் தருளினர் என்பதனை மணிவாசகர் "ஐயாறதனில் சைவனுகியும்" என்றருளிச் செய்தமையாற் காணலாம்.

இறைவர், திருவாலவாயில் சோம சுந்தர பாண்டிய மன்னனுக இருந்து அருளரசு ஓச்சிய காலத்தில் தன்னைத்தான் பூசித்த சிறப்பினைப் பார்க்கின்றோம். அவ்வாறே திருவடைமருதூரில் அம்பி கைக்குப் பூசனை புரியும் முறைமையை விளக்கியுணர்த்துமிடத்து தன்னைத் தானே பூசனை புரிகின்ற நிலையைக் குமரகுருபரர் வழி நின்று அறிகிறோம்.

இறையருள் பெற்றுய்யப் பூசனை இன்றியமையாதது என்பதனை, "சிவ தருமம் பலவற்றுள்ளும் சிறந்தது பூசனையே" என்று கச்சியப்ப முனிவரும்,

''எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும் உண்மையாவது பூசனை'' என்று தெய்வச் சேக்கிழார் பெருமானும், பிறவிப்பயனே ''ஆலிடத்தைந்தும் ஆடும் அரன் பணிக்கு'' என்று சாத்திரச் செல்வரும் அருளுந்திறம் கூர்ந்து உணரத்தக்கது.

அன்பினை புலப்படுத்தப் பூசனை பெரிதும் துணை நிற்பதறிகிறோம். பூண்ட அன்பு இடையருத புண்ணியர் இறைவனுக்குத் திருமுழுக்காட்டித் தூபம், தீபம் மலர்வழிபாடு, திருவமுதமைத்து வழிபடுவர் என்று பேரூர்ப்புராண ஆசிரியர் மருதவரைப் படலத்தில் விரிவாக விளக்கமாகத் தெளிவுற மொழிந்தருளுதல் காணலாம். செய் முறைகள் விரிப்பிற் பெருகும்.

திருமஞ்சனம் 2 நாழிகைக்குள் யாதொரு இடையீடுமின்றி நிகழ்தல் வேண்டும். எவ்வாறு நிகழ வேண்டும் என்பதனை விரிவாக ஆகமம் கூறுவதறியலாம்.

''நெய்யாற் பாலால் ஆமில மற்று மற்றுங் கோதறு தயிரினலும் குழகனன் முடிமேலாட்டிச் சீதம தகன்ற நீராற்றினீளப் புறலாட்டி.... காதலால் வில்வந்தன்னைக் கண்ணுதற்கு அர்ச்சித்து வழிபடுதல் பற்றிச் சிவதருமோத்தரம் என்ற நூலால் சிறப்புற அறிகிறோம்.

பனிநீர், பச்சைக்கருப்பூரம், குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, கத்தூரி, சவ்வாது மலாக்காச்சந்தனம் இவை எட்டும் கலந்த கலவைக்கு ''அட்ட கந்தம்'' என்று பெயர். இதனை இறைவர்க்கு மேற்பூச்சு [இலேபனம்] பூசப் பயன் படுத்துவர்.

முல்லை, இருவாட்சி, பிச்சி, மல்லிகை, பன்னீர், மருக்கொழுந்து வெட்டிவேர் இதனை இறைவற்குச் சாத்த நறுமணம் கமழும். இதனைச் சுகந்தம் என்று அழைப்பர்.

''பூசனை வழுவு மாயின் புலால் உடல் தன்னைப் போற்றிச்
சிவ யான் இருக்க லாற்றேன் இறப்பதே திண்ணம்''.

என்றிருந்த அடியார்க்குத் திருச்செந்தூரில் இரண்டு இளநீர்கள் கடலிலிருந்து கிடைத்த அற்புதத்தைப் பகழிக்கூத்தர் ''இளநீரிரண்டு புணரியின் மிதந்து சந்நிதியேற'' என்று பாடி அன்பின் வழித்திருமஞ்சனத்தின் ஏற்றத்தை வியந் தோதுகின்றார்.

''இளநீரை யொருகலத்து மேலாமைத் தனித் தனியே
அளவார வெடுத்தாட்டின் அதிகப் பலனும்''

என்று மருதவரைப் படலத்தால் அறிகிறோம்,

''நேயமே நெய்யும் பாலா நிறைய நீர் அமைய ஆட்டி'' என்றருளும் அப்பர் பெருமான் திருவாக்கினைப் போற்றி அன்பே திருமஞ்சனம் ஆம் என்பதனை மேற்கண்ட சில கருத்துக்களால் நன்கு அறிய முடிகிறது.

ஆரணங்கள் முடிந்தபதத் தானந்த வொளியுலகில்
காரணங்கற் பனைகடந்த கருணைதிரு வுருவாகிப்
பேரணங்கி னுடனுடும் பெரும்பற்றப் புலியூர்சேர்
சீரணங்கு மணிமாடத் திருச்சிற்றம் பலம்போற்றி.

—கோயிற்புராணம்

கோயில் ஸ்ரீகாரியம்

புலவர் ஸ்ரீ. நா. ஆனந்த குஞ்சிதபாத தீட்சதர்,

சிதம்பரம்

தில்லைப் பெருங்கோயில் மிகத் தொன்மை வாய்ந்த கோயில். அறிஞர்கள் இலக்கியம், கல்வெட்டு கொண்டு முதல் நூற்றாண்டைச் சார்ந்தது எனத்துணி கின்றனர். 2ம் நூற்றாண்டைச் சார்ந்தது என அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப் படும் சிலப்பதிகாரத்தில் "இறைவன் ஆடல் கண்டருளிய அணங்கும் அல்லள்" என்ற வரிகளால் சிலப்பதிகாரத்துக்கு முற்பட்ட புராணப்பெருமையுடைய தலம் எனக் கொள்ள வேண்டும். மற்றும், அருவ வழிபாடும் இறைவன் உறையும் கர்ப்ப கிருஹ விமானம் திராவிட கலைக்குச் சான்றாக கூரை போன்ற அமைப்பில் இருப்பதும் நோக்கத்தக்கதாகும். பல்லவ மன்னன் ஹிரண்ய வர்மன் என்ற சிம்ம வர்மன் கி.பி. 436–458 அரசாண்டவன். இவன் காலத்தில் இக்கோயில் சிறும் சிறப்பும் பெற்று அழகுறக் கட்டப் பட்டது. அதுமுதல் சோழர்களின் முதல் பராந்தகன் முதல் விஜயநகர மன்னர் வரை பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்கள் சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்டன. அவர்களது அரசியல் அதிகாரிகள் சிலராலும் திருப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. வீரப்ப நாயக்கரால் வெளி மதில்கள் கட்டப் பட்டன. இவை பற்றிப் பல்வேறு கல் வெட்டுச் செப்புப் பட்டயச் சான்றுகள் உள்ளன. எனவே, 4ம் நூற்றாண்டு தொடங்கி 16ம் நூற்றாண்டு வரை பல்லவ, சேர, சோழ, பாண்டிய அரசர்கள் செய்த திருப்பணிகளாலும் பெருமை பெற்ற இத்தலம், அரசியல் புயலில் சிக்குண்டு அந்நியப் படையெடுப்புக்கு இடமாகி முஸ்லீம், ஆங்கில, பிரெஞ்சு சண்டை களுக்கு நிலைக்களமாகிக் கோயிலைக் காக்கும் நிலையில் ஒருவரும் அரசு செலுத்த இயலாமல் தில்லை வாழ் அந்தணர்கள் இறைவனை மட்டுமாவது காக்கும்படியாக ஆடலரசனையும் சிவகாமி அம்மையையும் பெட்டகத்தில் வைத்துப் பாதுகாப்பாகத் திருவாரூர் வரை கொண்டு சென்றனர்.

இப்பெட்டகத்தைத் தற்போதும் சிதம்பரம் கோயிலில் தில்லைவாழ் அந்தணர்கள் பாதுகாப்பாக வைத்திருக் கின்றனர். இவ்வாறு சென்ற இடம் திருவாரூர், குடுமியான் மலை, மதுரை, புனியங்குடி, கேரளாவில் உள்ள அம்பலப் புழை என்று பல்வேறு விதமாகச்செய்திகள் உள்ளன. ஆராய்ச்சி யாளர்கள் ஆராய வேண்டிய ஒன்று. இவ்வாறு இறைவனைக் காக்கும்படி பல தீட்சிதர்களும், இங்கு கோயிலையும் ரகசிய ஸ்தானத்தையும் காக்கும்படிபல தீட்சிதர்களும் இருந்து இடையறாது பூசை செய்து வந்தனர். அச்சமயம் கோயிலை அழிக்கும் எண்ணத்துடன் வந்த முஸ்லீம் அரசனுல் ரகஸ்ய ஸ்தானத்தில் தன் மத தெய் வத்தைக் கண்டு தில்லை நடராஜருக்குத் தங்க சரப்புளி மாலை அளிக்கப்பட்டு இன்றளவும் உள்ளது. எனவே இச் செய்திகள் கொண்டு பார்ப்போமானால் இடைவிடாது சிலர் இங்கு இருந்து கொண்டு பூசை செய்தும், மற்றும் சிலர் சுவாமியின் திருவுருவத்தைப்பாதுகாத்தும் உள்ளநிலை அறியலாம்.

பின்பு சண்டை ஓய்ந்த பின்பு சகம் 1696ல் கலி 4874 மாசி மாதம் கிருஷ்ணபட்சம் மூல நட்சத்திரம் திரயோதசி கூடிய நன்னாளில் திரும்ப கூத்தப்பெருமானே தில்லையில் ஸ்தாபனம் செய்தனர் என கல்வெட்டு, பட்டய சான்றுகளால் அறியலாம். ஆங்கில ஆண்டு 1773. பின்பு மடாதிபதிகள், பச்சையப்ப முதலியார் போன்ற தன வந்தர்களைக் கொண்டும், நாட்டுக் கோட்டை நகரத்தார்களைக் கொண்டும், பல்வேறு திருப்பணிகளைச் செய்தும், புதுப்பித்தும் நித்திய, நைமித்திக பூசை, உற்சவங்களுக்கு ஏற்பாடு செய்தும் பரி பாலித்து வருகின்றனர்.

நிர்வாகம்

மேற்கண்ட வரலாற்றுச் சான்றுகளால் தில்லைவாழ் அந்தணர்கள் என்கின்ற பொது தீட்சிதர்களால் பரிபாலிக்கப் பட்டும், ஆற்காடு நவாபிடம் நிர்வாக உரிமையை விலக்கு வாங்கிய அன்றைய ஆங்கில அரசால் இயற்றப்பட்ட 1817ம் ஆண்டு ரெகுலேஷன் ஆக்டின் கீழும் இக்கோயில் வரவில்லை. மற்றும் விக்டோரியா மகாராணியார் அறி விப்பின் கீழ் எந்த முச்சலிக்காகவும் எழுதிக் கொடுக்கப்பட்டுத் திரும்பப் பெறப் படவுமில்லை. பிறகு வந்த எந்த அரசாங்க சட்டத்திற்கும் இக்கோயில் உட்பட வுமில்லை. பனகல் அரசர் கவர்னராக இருந்தபோது வெளிவந்த 1927ம் ஆண்டு அறநிலையச் சட்டத்திலும் இக்கோயிலுக்கு விலக்கு அளிக்கப் பட்டது.

ஆனல், மேற்கண்ட சட்டத்தின்படி, 1930ல் அறநிலைய போர்டால் ஸ்கீம் ஏற்படுத்தப்பட்டது. அதன்மீது தென் னற்காடு மாவட்ட நீதிமன்றத்தில்பொது தீட்சிதர்களால் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டு 1936ல் பொது தீட்சிதர்களின் உரிமைகளுக்கேற்ப பல திருத்தங்களுடன் ஸ்கீம் அமுல் படுத்தப்பட்டது. 1939ல் சென்னை உயர்நீதி மன்றத்தால் மேலும் சில திருத்தங்களுடன் ஸ்கீம் நடைமுறைப் படுத்தப்பட்டது. இவ்வாறு ஆங்கில அரசாட்சியில் இயற்றப்பட்ட ஸ்கீமும் சட்டமும் பின்பு நாடு சுதந்திரம் அடைந்த பின்புமாறிவிட்டது. 1951ம் ஆண்டு இந்திய அரசியல் சட்டம் அமுலுக்கு வந்தது. அரசியல் சட்டத்தில் மத சுதந்திரமும், தனி மனித சுதந்திரமும் வழங்கப்பட்டது. அப்போதைய தமிழக அரசால் 1951ம் ஆண்டு இந்து அற நிலையச் சட்டம் புதிதாகக்கொண்டு வரப் பட்டது. அதன்மீது சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கலாகி இந்திய அரசியல் சட்டம் வழங்கியுள்ள உரிமை களுக்கு முரணுகச் சிதம்பரம் கோயிலைப் பொறுத்தவரை அறநிலையச் சட்டத்தின் ஷரத்துக்களை அமுல்படுத்தக்கூடாது எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. மேற்படி ஸ்கீமும் ரத்தாகியது.

அதன்படி நினைவு தெரிந்தது முதல் வரலாற்றுக் காலமுதல் உள்ள தில்லைவாழ் அந்தணர்களுக்கு இக்கோயிலில் உள்ள உரிமைகளையும் வருமானத்தை அடையும் பாத்தியதையும் தங்களுக்குள் நிர்வாகம் செய்யும் உரிமையையும் சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. தங்களுக்குள் நிர் வாகத்தை 1840–1894 ஆகிய ஆண்டு களில் செய்துகொள்ளப் பட்ட சட்டத் திட்டப்படியும், பழக்க வழக்கப்படியும், மரபுப்படியும், வைதிக முறைப்படி நித்திய, நைமித்திக பூசை உத்சவங்கள், நிர்வாகம் ஆகியவற்றைச் செய்து வரு கின்றனர். அவ்வப்போது பொது தீட்சிதர்கள் சபை கூடி அன்றுட நிர்வாக மத பூசை, வைதிக லௌகிக விஷயங்களை முடிவு செய்து நடத்தி வருகின்றனர்.

வைணவ ஆதிக்கம்

ஆழ்வார்கள் காலத்தில் தில்லைவாழ் அந்தணர்களால் பூஜிக்கப் பட்டதும், இரண்டாம் குலோத்துங்களுல் பிற் காலத்தில் சைவ வைணவ சச்சரவு நிகழக்

கூடாது என்ற காரணத்தினால், கடலில் சேர்க்கப்பட்டதுமாகிய தில்லைக் கோவிந்த ராஜப்பெருமாள் கோயில் பிற்காலத்தில் நாயக்க மன்னர்களில் சிலர் தீவிர வைணவர்களாக விளங்கியமையால் சைவப்பெரும் கோயிலின், சோழர்களின் "தன்குல நாயகன் தாண்டவம் பயிலக்" கூடிய இடங்கள் திருச்சிற்றம்பலவரின் பரிவார தெய்வமும், தில்லைக்கூத்தன் நடனம் காணவந்த திருமால், திண்ணை அளவில் இருந்த திருச்சித்திரக் கூடத்தில் இருந்த பெருமாள் இன்று பல இடங்களை ஆக்ரமித்துக் கொண்டும், நாயக்க மன்னர் களின் அதிகாரத்தினால பெற்றும் விட்டார். இதுபற்றி அக்காலத்தில் சைவக் கோயிலின் இடங்கள் வைணவத்திற்குக் கொடுத்தது பொறாது, தில்லைவாழ் அந்தணர்களின் பெண்கள் பலர் கோபுரம் ஏறி உயிர் துறந்தனர். இதுபற்றி, மேல் நாட்டு யாத்திரைவாசி 'பேமண்டோ' குறிப்பில் காணலாம்.

பிறகு, ஆற்காடு நவாப்பின் ஆட்சி யிலும் சிறு சிறு துன்பங்களை விளை வித்தனர். 1810ம் ஆண்டு சுந்தரரின் பரவை நாச்சியார் கோயிலை ஆண்டாள் கோயில் என உரிமை கொண்டாடினர். அதுபற்றி அன்றைய விருத்தாசலம் கோர்ட்டிலும், பிறகு திருச்சி கோர்ட் டிலும் வழக்கு நடந்து தில்லைக்கோவிந்த ராஜப் பெருமாள் சன்னதியில் தனியாக ஆண்டாள் சன்னதி இடையாது என்றும், பரவை நாச்சியார் கோயில் சைவப்பெருங் கோயிலைசார்ந்தது என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது. பிறகு 1840ல் வைணவர்கள் தில்லைக் கோவிந்தராஜப் பெருமாளுக்கு மாதாந்திர பஞ்சபர்வ உற் சவம் செய்து கொள்வது பற்றித் தில்லை வாழ் அந்தணர்களுடன் 'கூரூர் நாமா' செய்து கொண்டனர். ஆனால் சிறிது காலத்திற்குள் 1860ல் மீண்டும் தில்லைப் பெருங் கோயிலின் அஷ்ட கொடி மரத்தின் ஒன்றைத்தங்கள் கொடிமரம் என்று வீண் வாதிட்டு நீதிமன்றம் வரை சென்ற பிறகு, கொடிமரம் வைத்துக் கொள்கிறோம்; ஆனால் கொடி ஏற்றும் உற்சவம் செய்ய தில்லை என உடன்படிக்கை செய்து கொண்டு நாளதுவரை நடந்து வரு கின்றன. ஆனால், அது சமயம் கருடன் கோயில், தனிக் கோபுரம் போன்ற இடங்களைப் பெற்று விட்டனர். பிறகு, நகரத்தார் திருப்பணி செய்யுபொழுது 1850 முதல் 1935 வரை பல்வேறு துன்பங்களை விளைவித்தும் பல இடங் களுக்கு உரிமை கொண்டாடியும் தில்லைத் திருப்பணியைப் பூர்த்தி செய்ய விட வில்லை. கோயிலில் பல இடங்களைத் தங்களுக்குச் சமசுதந்திரம் பாத்தியம் உண்டு என வாதிட்டும், தொன்றுதொட்டு நடந்துவரும் சைவ சமய நாயன்மார்களின் உற்சவத்தைத்தடை செய்யவும் எத்தனித்தனர்.

முடிவாக 1921ம் ஆண்டு அவர்களது சம சுதந்திரப்பாத்தியம் தென் ஆற்காடு மாவட்ட நீதிமன்றத்தில் நிராகரிக்கப்பட்டு வருஷத்தில் உள்ள சிறிய உற்சவங்கள், கதவு திறக்கும் நேரம், புறப்படும் மூர்த்தி முதலியவற்றை ஒழுங்குமுறைப்படுத்தித் தீர்ப்பு வழங்கி நாளது வரை அமுலில் உள்ளது. இவ்வாறு 1810 முதல் 1930 வரை நடந்த பல்வேறு விவகாரங் களினால் தில்லைவாழ் அந்தணர்கள் பல இன்னல் களையும் துன்பங்களையும், கஷ்டங்களையும் அடைந்து பொருட் செலவிற்கும் ஆளாகி, சைவப் பெருங் கோயிலின் உரிமைகளை நிலை நாட்டிக்காத்து வருகின்றனர். சமீப காலத்தில் மீண்டும் உற்சவம் செய்ய முயன்று வெற்றி அடையவில்லை.

எதிர்காலத்தில் இம்மாதிரி நிகழா வண்ணம் காப்பது சைவப் பெரியோர் களின் கடமை. மற்றும் தில்லைப்பெருங் கோயிலின் திருப்பணி இவர்களது தடங்கலினால் சூத்தப்பிரான் தேர் அன்று எழுந்தருளி வலம் வரும்வழி இன்னும் முடியாத நிலையிலேயே உள்ளது. பிர காரத்தில் ஆழ்வார்கள் காலத்தில் திருச்

சித்திரக் கூடத்தில் திண்ணை அளவில் இருந்த பெருமாள் இன்று சைவக் கோயிலின் பெரும் இடத்தை ஆக்ரமித்துக் கொண்டும் திருப்பணிக்கு இடையூறாக இருப்பதும் எதிர்காலத்தில் சரி செய்ய வேண்டியதொன்று. வரலாற்றுக் காலத்தில் உள்ள தில்லைக் கோவிந்தராஜப் பெருமாள் இடங்களைப் பற்றியும், உள்ள அமைப்புகளையும், இராஜஇராஜன் காலத்திய தஞ்சைப் பெருங்கோயில் ஓவியங்களில் இன்றும் காணலாம்.

சொத்து

பல்வேறு அரசர்களால் விடப்பட்ட நிலங்களைப் பற்றி கல்வெட்டுப் பட்டயங்களில் இருப்பினும் 1890க்குப் பிறகு, 300 ஏக்கர் நிலம் மட்டும் திருவிளக்கு மான்யம் என்ற பெயரால் இருந்து வந்தது. அவற்றில் சுமார் 150 ஏக்கர் வரை அரசாங்கம் எடுத்துக் கொண்டு விட்டது. பாக்கி உள்ள 150 ஏக்கர் நிலமும் சுமார் 100 ஆண்டு காலமாக சாகுபடிதாரர் வசமே இருந்து வருகிறது. பல்வேறு அரசின் சட்டத்தினால் குத்தகை வருமானமும் குறைந்த அளவே வருகிறது. இதுபற்றி அரசாங்கத்தார் பலகாலமாக ஆலோசனை செய்து, தனி தாசில்தாரை 1975ம் ஆண்டு நியமனம் செய்தார்.

அவரும் இக்கோயிலுக்கு உரிய நிலங்கள் பற்றித்தகவல்களைச் சேகரித்தும் 1950க்குப் பிறகு நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் தருமமாக விடப்பட்ட நிலங்களைக் கணக்கிட்டும் சுமார் 300 ஏக்கர் வரை குத்தகைச்சீட்டு எழுதி வசூல் செய்து வருகின்றார். வசூல் செய்யும் தொகையில் மின்சாரக் கட்டணம் செலுத்தி வருகின்றனர். மற்றும் நடராஜர் சன்னதி 6 கால பூஜை மற்ற சந்நிதிகளில் 4 கால பூஜை விசேஷ உத்சவ வேத பாராயணம் ஆகியவற்றுக்காக விடப்பட்ட நிலங்கள் பற்றியும் ஆராய்ந்துள்ளார். தனிப்பட்ட கட்டளைதாரர்கள் தங்கள் முன்னோர்களால் விடப்பட்ட நிலங்களை நேரிடையாகத் தாங்களே நிர்வகித்து அரசாங்கத்தின் அனுமதி பெற்றுக்குறிப்பிட்ட கட்டளைகளையும் தருமங்களையும் இடைவிடாது நடத்தி வருகின்றனர்.

மெ. செ. சபாபதி செட்டியார், வெ. சா. சத்திரம், முகையூர் சுப்பிர மணியப் பிள்ளை காலசந்தி கட்டளை, மாணிக்க முதலியார், வெல்லப்பிறந்தான் முதலியார், தருமபுரம் ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், கோவிலூர் மடம், சிவகங்கை சமஸ்தானம், கல்யாணசோழபுரம், பச்சையப்ப முதலியார், ஆடூர் மங்களம் பிள்ளை, மணலி சின்னையா முதலியார், இராமநாதபுரம் ராஜா, சாலியர், மதுரை உறவின்முறை நாடார்கள், ஆகிய ஸ்ரீ நடராஜர் சந்நிதியில் 6 கால பூஜைக்கட்டளைகளும், சிவபுரி மடம், மாணு முதலியார், பல்வராயப்பட்டு, ஆகிய மற்ற சந்நிதி கட்டளைகளும் மற்ற வர்களால் ஏற்படுத்தப்பட்ட பல கட்டளைகளும் நடந்துவருகின்றன.

பஞ்சபர்வ உத்சவங்களும், நாயன்மார்கள் உத்சவங்களும் ஐப்பசி மாத சிவகாமி அம்மன் 10 நாள் உத்சவங்களும், பங்குனி உத்திர சுப்பிர மணியர் 10 நாள் உத்சவங்களும், மற்றும் ஆவணி மூலம், கார்த்திகை தீபம், ஆடிப்பூரம், விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, ஐப்பசி அன்னபிஷேகம், கார்த்திகை சோமவாரம், தைப்பூசம், மாசிமகம், நடராஜர் மஹாபிஷேகம், மஹாசிவராத்திரி, புராண பிரசித்திபெற்ற தீர்த்தவாரி உத்சவங்கள், பலரால் இடைவிடாது நடத்தப்படுகின்றன.

ஆனி மார்கழி மாதங்களில் நடைபெறும் மஹோத்ஸவம், தெற்கு, வடக்கு செங்குந்த மரபினர்களாலும், தெற்கு வடக்கு வாணியர்களாலும், மேலத்தெரு வேளாளர்களாலும், காஞ்சீபுரம் பச்சையப்ப முதலியார் அவர்களாலும், நாகை விசாலாட்சி அம்மாள் தருமமாகவும், ராஜா சர் அண்ணமலைச் செட்டியார்

குமாரர்களாலும், கொத்தமங்கலம் செட்டியார்களாலும், முத்துமாணிக்க நாடார் குமாரர்களாலும், நாட்டுப்பிள்ளை வாரிசுகள், மன்னர்குடி சின்னப் பண்ணையாலும் நீண்ட காலமாக இடைவிடாது நடத்தப்படுகின்றது.

இந்து சமய அறநிலைய ஆட்சியினரால் 1955ம் ஆண்டு இக்கோயிலில் உள்ள தங்கம், வெள்ளி ஆபரணங்களும், சாமான்களும், வாகனங்களும் மதிப்பீடு செய்யப்பட்டன. பிறகு 1961–1967 மற்றும் 1975ம் ஆண்டுகளில் சரிபார்த்தலுடன் துணை மதிப்பீடும் செய்யப்பட்டது. 1981ம் ஆண்டு மறு மதிப்பீடும் துணை மதிப்பீடும் செய்யப்பட்டது. இவற்றுள் பாண்டியராஜா, நளச்சக்கரவர்த்தி, மைசூர் மகாராஜா, திப்புசுல்தான், போன்ற அரசர்களாலும், பச்சையப்ப முதலியார், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரியார், தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள்மடம், திருவாவடுதுறை ஆதீனம், நாட்டுக் கோட்டை நகரத்துச் செட்டியார் ஆகியோர் அளித்த ஆபரணங்களும் உள்ளன. 1955ம் ஆண்டு கும்பாபிஷேகம் நிமித்தமாக ஆடூர் ரத்தினசபாபதிப்பிள்ளை, எஸ். ரத்தினசாமி செட்டியார் ஆகியோர்கள் அளித்த ஆபரணங்களும் உள்ளன. மற்றும் பொது தீட்சிதர்களாலும், குஞ்சித சபாநாத தீட்சிதர், சின்னது தீட்சிதர் போன்ற பலரும் ஆபரணங்கள் அளித்துள்ளனர். பல சந்நிதிகளில் வெள்ளிக்கவசம் பல அன்பர்களால் அளிக்கப்பட்டுள்ளன. ஆச்சாள்புரம் கோவிந்தராஜம் பிள்ளை முன்னோர்களால் சிவகாமிசுந்தரி அம்மனுக்குத் தங்க கவசம் அளிக்கப்பட்டுள்ளது. திருவிளக்கு மான்ய கணக்கினை 1949ம் ஆண்டுமுதல் அவ்வப்போது தணிக்கை இந்து சமய அறநிலைய துறையினரால் செய்யப்படுகிறது.

நில்லைவாழ் அந்தணர்கள்

தேவார ஆசிரியர்களால் பாராட்டப் பெற்றவர்கள், தொன்றுதொட்டு உள்ள மரபுகள் வழுவாமலும், நித்திய, நைமித்திக பூஜைகளைச்செய்து கொண்டும் கோயிலை நிர்வாகம் செய்து கொண்டும் வருகின்றனர். தங்களுக்குள்சுற்று முறைப்படி வரிசைக்கிரமமாக எல்லா சந்நிதிகளையும் பூஜை செய்து கொண்டும் வருகின்றனர். சொத்துக்களைப் பாதுகாத்துக் கொண்டும், இரவு பகல் காவல் செய்து கொண்டும் வருகின்றனர். பழைய, சோழர்கால முறைப்படி குடவோலை வாயிலாகச்சீட்டுக்குலுக்கல் மூலம் ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் காரியதரிசியாக இருந்து நிர்வாகம் செய்துகொண்டும் வருகின்றனர். தனிப்பட்ட கட்டளைக்காரர்கள் கொடுக்கும் தட்சணையினைக் கொண்டும், பொதுவாக வரும் தட்சணைகளை அனைவரும் சமமாகப் பங்கிட்டுக் கொண்டும், தங்கள் ஜீவனத்தை நடத்தி வருகின்றனர்.

தில்லைவாழ் அந்தணர்களில் மீனாட்சி நாத தீட்சிதர், மீனாட்சி வல்லப தீட்சிதர், சட்டநாத தீட்சிதர், சந்திரசேகர தீட்சிதர், அப்பால்வாமி தீட்சிதர், நடேச தீட்சிதர், பரமேஸ்வர தீட்சிதர் போன்றோர் அக்காலத்தில் வேத சாஸ்திரங்களில் மிகுந்த பாண்டித்யம் பெற்றவர்கள். பல இரத்தங்களைச் செய்தவர்கள். லோமயாகாதிக்ரதுக்களைச் செய்தவர்கள், சமீப காலத்தில் ராஜரத்ன தீட்சிதர், ஞான மூர்த்தி தீட்சிதர், க. மீ. ராஜகுணேச தீட்சிதர் போன்றோர் வேதம், சாஸ்திரம், பூஜை, பிரதிஷ்டை, தர்ம சாஸ்திரம் ஆகியவற்றில் தேர்ச்சி உடைவர்கள். பல கும்பாபிஷேகங்களை முன்னின்று நடத்தியவர்கள்.

மஹா மஹோபாத்யாய தண்டபாணி ஸ்வாமி தீட்சிதர், சோமசேகர தீட்சிதர், ஆனந்த தாண்டவ தீட்சிதர், செல்லப்பா சாமி தீட்சிதர், தாண்டவ தீட்சிதர், சிவகாமசுந்தர தீட்சிதர் போன்றோர் அத்வைத சித்தாந்தத்திலும் வியாகரணத்

திலும் சாஸ்திரத்திலும் புராணத்திலும் பிரசித்தி பெற்றவர்கள். ராம தங்கசாமி தீட்சிதர், சி. எஸ். சச்சிதானந்த தீட்சிதர் போன்றோர் பிரவசனம் செய்வதில் சமர்த்தர்கள். ராஜரத்ன தீட்சிதர், தண்டாயுத தீட்சிதர், அ. கி. ராஜகணேச தீட்சிதர், சிவசங்கர தீட்சிதர் போன்றோர் சங்கீத ஞானம் உடையவர்கள். ஸ்வயமாக சாகித்யம் செய்தவர்கள் தற்போது வெ. வை. ஸ்வர்ணவெங்கடேச தீட்சிதர், ராஜநாயக தீட்சிதர், நடராஜ தீட்சிதர் ஆகியவர்கள் சங்கீத ஞானமும், பாடல் இயற்றுவதிலும் பாடுவதிலும் ஆற்றலும் உடையவர்கள். அ. கி. வெங்கிடு சுப்பிரமணிய தீட்சிதர், செல்லசாமி தீட்சிதர், கல்யாண தீட்சிதர், என்கிற உ. ரத்ன சபாபதி தீட்சிதர், வி. எஸ். வைத்தியநாத தீட்சிதர், செ. சின்மயானந்தசுப்பிரமணிய தீட்சிதர் ஆகியோர் சட்ட சம்பந்தமான விஷயங்களில் தேர்ச்சி உடையவர்கள். இக்கோயில் பற்றிப்பல விவகாரங்களில் ஈடுபட்டுப் பொது தீட்சிதர்களுக்குப் பல நன்மைகள் செய்தவர்கள். இவ்வாறு பல்வேறு துறைகளிலும் சிறப்புடன் பலர் இருந்து வருகின்றனர். தற்போதும், அண்ணமலைப்பல்கலைக் கழகத்தில் தமிழ், ஆங்கிலம், வடமொழி, வணிகவியல் போன்ற துறைகளில் பலர் பயின்று உயர்நிலைப் பட்டங்கள் பெற்று மேல்நிலையில் பணியாற்றுகின்றனர். மற்றும் கல்வி கற்று இறைவனுக்கே தொண்டு செய்கின்றனர் பலர். தற்போது ரா. கணேச தீட்சிதர் குமாரர் பரமேஸ்வர தீட்சிதர், அவர் குமாரர் மஹாதேவ தீட்சிதர் ஆகியோர் வேத சாஸ்திரத்தில் பாண்டித்யம் பெற்றுள்ளார்கள். பரமேஸ்வர தீட்சிதர் நல்ல குருவின் ஆசிபெற்று, கோயில் பிரதிஷ்டை, முதலிய கும்பாபிஷேக வைபவங்களைத் தற்போது செய்து வருகின்றார். சுமார் 40 பட்டதாரிகள் தற்போது உள்ளனர். பல குழந்தைகள் வேத பாடசாலைகளில் பயின்று வருகின்றனர்.

தில்லைவாழ் அந்தணர்கள் ஸ்ரீவத்ஸ கோத்திரம், ரௌக்ஷாயன கோத்திரம், கௌண்டில்ய கோத்திரம், விஸ்வாமித்திர கோத்திரம் ஆகிய நான்கு கோத்திரங்களையும், போதாயன, ஆச்வலாயண சூத்திரங்களையும் தைத்திரீய யஜுர் வேதம், ரிக் வேதம் ஆகியவற்றையும், சார்ந்தவர்கள். கோயிலில் நடைபெறும் நித்ய பூஜைகளையும் மற்ற உற்சவ, பிரதிஷ்டா, பிராயச் சித்தங்களையும், வேத விதிப்படி அதர்வ சிரசில் கூறியுள்ளபடியான ஆவாஹண போதாயண கல்ப சூத்திரங்களையும் இணைத்துப்பதஞ்சலி மகரிஷியால் செய்யப்பட்டுள்ள சூத்திரப்படி செய்துவருகின்றனர். இதன் விரிவினைச் சிதம்பர தத்துவ நிர்ணயம் என்ற கிரந்தத்தில் காணலாம்.

இக்கோயிலில் நடைபெறும் வைதிக நித்திய பூஜை, உற்சவங்கள், கும்பாபிஷேகம் ஆகியவற்றிற்கும், தீட்சிதர்களின் குடும்பங்களில் நடைபெறும் விஷேங்களுக்கும் நாள் பார்ப்பது, செய்து வைப்பது முதலியவைகளை மாதவேளூர் என்ற கிராமத்தைச் சார்ந்த சோழியாள் குடும்ப பிராமணர் செய்கின்றனர். இவர்களில் பலர் பிரபல ஜோதிஷர்களாக இருந்துள்ளனர். தற்போது நடராஜ வாத்தியார், ஜோதிஷர் வெங்கட்டராம வாத்தியார் குமாரன் மோகன் என்கிற ரகுராம வாத்தியார், நடேச வாத்தியார் ஆகியோர் இருந்து வருகின்றனர். இவர்களின் முன்னோர்கள் பரம்பரையாக இங்கு உள்ளவர்கள். வேதம், சாஸ்திரம், பிரயோகம், ஜோதிஷம் ஆகியவற்றில் சிறந்தவர்கள்.

மற்றும், நாதஸ்வர இசையில் பரம்பரையான பெருமையுடைய கலைஞர்கள் இங்கு இருந்து வருகின்றனர். கோயில்களில் விடி தவறாமல் வாசிப்பதிலும் நல்ல சங்கீத ஞானமும் கீர்த்தியும் உடையவர்கள். சிதம்பரம் வைத்திய நாத பிள்ளை அக்காலத்தில் தலைசிறந்த நாதஸ்வர

கலைஞர். தற்போது அவரது சிஷ்யர் இராதாகிருஷ்ணபிள்ளையும் அதே பெருமையுடையவர்.

திருப்பணி

இக்கோவில் பல மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. பிறகு பச்சையப்ப முதலியார் அவர்களால் சிறிது புதுப்பிக்கப்பட்டது. 1850க்குப் பிறகு, நாட்டுக்கோட்டை நகரத்தார் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களது முன்னோர்களால் பல லட்ச ரூபாய் செலவில் மண்டபங்கள் புதிதாகக் கட்டப் பட்டன. பழையவற்றைப் புதுப்பித்தும், பெருமளவில் திருப்பணிகள் செய்யப் பட்டன. அதன்பிறகு, பல இடங்கள் திருப்பணி செய்யும் நிலையில் இலகமாக இருந்ததால் பொது தீட்சிதர்களால், ஏ. கே. சுப்பிரமணிய முதலியார் தலை வராகவும், ஆ. சு. கணபதி பிள்ளை அவர்கள் செயலாளராகவும் தில்லைத்திரு மதில கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டு, 1946ல் பதிவு செய்யப்பட்டது. பிறகு, 1955ல் ஆடுர் ரத்ன சபாபதிபிள்ளை அவர்களாலும், செ. ரத்தினசாமி செட்டி யார் அவர்களாலும் சொந்த செலவில் சித்சபை திருப்பணி செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அது சமயம், காசிவாசி திருப்பனந்தாள் ஆதீனம் அவர்கள் செலவில் வெள்ளிக் கதவு செய்தனர். பின்பு, ஆர். கனகசபை பிள்ளை தலைவராகக் கொண்டு திருமதில் திருப்பணி கமிட்டியைப் புதுப்பித்து அன்றைய அறநிலைய அமைச்சர் கனம் பக்தவத்சலம் அவர்களால் 1963ல் திருப்பணி தொடங்கப்பட்டது. அம்மன் கோயில் திருப்பணி எஸ். வி. கல்யாண ராம பிள்ளை அவர்களால் 1956ல் ஆரம்பிக்கப்பட்டுத் தனிப்பட்ட முறையில் சித்ரகுப்தர் சப்த மாதா–உருவச்சிலை களும் கொடிமரத் திருப்பணியும் செய்யப் பட்டன. பின்பு, எஸ். ரத்தினசாமி செட்டியார் அவர்களால் பெரும் பொருட் செலவில் சுற்று மண்டபம், மடைப்பள்ளி மேல்தளவரிசை முதலியன திருப்பணி செய்யப் பட்டன. என். எம். பொன்னம் பல பிள்ளை தலைமையில் கும்பாபிஷேகக் கமிட்டியாரால் கும்பாபிஷேகம் 1969ல் செய்யப்பட்டது. பின்பு, திருமதில் திருப் பணி மெதுவாக நடந்து வந்தது. மத்திய அரசாங்கத்திடம் வருமான வரிவிலக்குப் பெறவேண்டி சிதம்பரம் ஸ்ரீ சபாநாதர் கோயில் திருப்பணி கமிட்டி என அமைக்கப்பட்டு வலிவலம் தேசிகர் உபயமாக நடவானபத்தி மண்டபமும், பாஸ்கர நாயர் உபயமாக கொடிமரத் திருப்பணியும், ஆடுர் ரத்தினசபாபதி பிள்ளை டிரஸ்ட் உபயமாக மேல்மண்டபத் தளவரிசை திருப்பணியும் நடந்து வந்தன. அதுசமயம், அறநிலைய ஆணையராக இருந்த எம். கே. பாலசுப்ரமண்யம் அவர்கள் திருப்பணிகளைப்பார்வையிட்டு, அவரது ஆலோசனைப்படி மொத்தமாகத் திருப்பணிகள் செய்ய மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டு 1975ல் திருப்பணி துவங்கப்பட்டது.

ஆர். கனகசபை பிள்ளை தலை வராகவும், ஜி. வாசீசம் பிள்ளை செயலாள ராகவும், ஆர். பாலசுப்பிர மணியன் செட்டியார் பொருளாளராகவும் ரத்னவேல் சுப்ரமண்யம் போன்றோர் உறுப்பினராகவும் கமிட்டி செயல்பட்டு வருகிறது. இக்கமிட்டியில் பொது தீட்சிதர்களும் அங்கத்தினராக இருந்து வருகின்றனர். இவ்வாறு பொது தீட்சிதர் உதவியுடன் 1946ம் ஆண்டில் நிறுவப் பட்ட தில்லைத்திருப்பணி சபை இடையில் பல மாற்றங்கள் அடைந்து பல்வேறு திருப்பணிகளைச் செய்து முடித்து, ஸ்ரீ முக்குறுணி விநாயகர் கோயில் முதல் ஸ்ரீ நடராஜா சித்சபை முடிய உள்ள கும்பாபி ஷேகங்களையும் செய்து முடித்துள்ளது. □

Nataraja and the Art of Dance

LEELA VENKATRAMAN,
New Delhi.

Few motifs in art History have enamoured the mind of human beings as the figure of Nataraja. While many see in it an object of religious worship and revere it as such, many others see it as one of the highest attainments of artistic imagination, and still others see it as beauty of abandoned joy of movement, arrested at a point of time by the sculptor's hand. All will agree that this is a visual expression of an eternal force conceived, idealised and imagined in the most aesthetic form.

Art and Religion in India have always existed as integrated streams sharing a common purpose. Art concretises what Religion idealises. Said Projesh Banerjee, "Art comes into religion first as an accessory and stays there as an accomplice as well as an interpreter." Ideals of life always assume certain forms and shapes in imaginative minds and when a form is suggestive enough to embody the quintessense of the racial experience of a people, it becomes a motif. Said Ananda Coomaraswamy, the great art critic, "A great motif in religion or art, any great symbol, becomes all things to all men; age after age, it yields to men such treasure as they find in their own hearts."

How has Nataraja filled this role of being 'all things to all men'? To answer this question, it is necessary to look into the minds of philosophers, past and present. From time immemorial, man has been exercised over the riddle of his position versus Nature and Cosmos. Was there a plan in the Cosmos or was it a haphazard happenstance? Where did one slot the human being in the expanse of Creation? The Why and Wherefore of the Universe and its moving force of energy puzzled even the Vedic Man who put the great question to start the debate for mankind, "Whence this Universe and Creation?"

Was man only an observer or the observed? As early as in the late 15th and early 16th century, Decartes said, "Cogito Ergo Sum" (I think and therefore I exist), putting reasoning man and consciousness as different from matter. There came a series of great minds like Spinoza, Moses, Mendelssohn, Immanuel Kant, John Stuart Mill and several others, to talk of the Universe and Man. Rationalism, Empericism, Scepticism and Utilitarianism all had their day. While some regarded the Universe as a 'Steady State', others spoke of the 'Big Bang' theory. But none seemed to reconcile the difference of men and matter. To-day, science has taken a right about turn to establish that research in science is a matter of perception and it is a continual process of interaction of Consciousness with Nature. Rather than fragment reality, the Universe has to be regarded as a totality — a wholeness of flowing movement, where the inanimate and the animate are projections of the same reality. It was Prof. Carl Sagon who first asked if the Universe was expanding? What happens to the stars which expand, explode and then die? If on the other hand, it is contracting and stars and galaxies are pulled into the Centre of Creation, where do they all go? The answer he felt lay in the Hindu Cosomology

which visualised the cycle of Creation, Preservation, Destraction and Rebirth as an unending flow. Here was Creation visualised as the Unity of the two Principles, male and female, matter and spirit, Purusha and Prakriti, all symbolised in the identity of the supreme Siva.

That dynamic energy which moves the Universe should be concentrated in one ideal is one thing — that it should take the form of Siva as Natarja, the King of Dance is another. Dynamism or movement is here the origin of 'gati or laya', in the language of Music and Dance. Laya is rhythm and Sound (Dhwani) is the beginning of Music. This Universe is the result of the rhythm and music of Siva — what a grand conception! When the evolutionary process is thus visualised, one automatically discards disorder, for rhythm and music symbolise harmony and a definite pattern of functioning.

Holmes refers to the main qualities of all great art — Unity, Vitality, Infinity and Repose.

The Nataraja motif is an integration of the forces of Brahma, Vishnu, Rudra, Maheswara and Sadasiva. Here one sees primal rhythmic energy sets the entire cycle of evolution. His dance is not done with the purpose of setting in motion any process. It just 'is'. It is his 'swa-bhaava' to dance, and his being is beyond the realm of purposes. The expanding and contracting Universe is symbolised in the Damuru (representing Sound) in his right hand. The Fire in his left hand represents the destruction of the Undivine and hence is a purifier. Destruction by the 'Sudalaiyadi', the dancer who dances on the Burning ghat (crematorium), signifies the eradication of the Ego — of the veil of Maya or Illusion. As the two processes of birth and death are performed simultaneously, the Universe is both Finite and Infinite at the same time. The Yugas, the Mahayugas, the Earthly and the Cosmic periods of time are all embodied in Him and death here is change or transformation — in the highest principle of Science. Thus Shrishti (Creation, symbolised in the drum), Sthiti (Preservation, symbolised in the abhaya hasta,), Samhara (Destruction, shown by one leg stamping the evil dwarf Muyalagan), Tirobhava (the embodiment of souls and removing of Maya, signified in the Gajahasta symbol) and Anugraha (Salvation, shown in the uplifted left leg held across the torso with the foot and turned inwards) are enshrined in one principle. Even when regarded as an abstract expression by philosophers as a realistic presentation of an 'other world' the motif belongs to a world of its own.

Here is perpetual movement seen as rhythm of the spirit.

While the form shows dynamic and molten energy in its 'ati-bhanga' stance and the raised leg, it always has a quality of stillness — the face is 'calm listening, as it were, and contemplating' this silence. The simplified planes, the pure lines all convey tension and degrees of self-absorption and realisation. By thinking of the entire Universe in terms of rhythmic Unity, a radiation of thoughts and waves seem to make a harmonious vibration. Thus movement, non-movement, tension, liberation, creation, destruction — all seeming opposites are reconciled in this one figure.

Ingrained in the concept of Nataraja are the five 'Tatvas' or elements. His body is Akasa, the Ganga on his head is Water, the snake is Vayu or Breath or Air, the tongues of flame in his uplifted palm are Agni (or Fire). The Tiruvasi (aureole) framing the entire figure is considered by some to be Nature or Matter or Prakriti. Still others think of it as 'Omkara', and the 'Akshara' which is never separate from the 'Omkara' is the contained splendour. Siva is the universal spirit, touching, the points of the arch —In between is the individual Soul, the 'Ya' in Na-ma-si-va-ya.

Surrounding the Lord is 'Sunya' or Void or Space which is the no-atmosphere belt of bliss. Said Tirumoolar, "Where the self-realised go is pure space; and where they sport is light. What they know is Vedanta. What they find is deep sleep therein." So Nataraja was the embodiment of Kshiti (Earth), Apati (Water), Teja (Flame), Marut (Wind) and Vyom (Space).

The theatre of this great God's activity is the Cosmos itself with his body as Akasa.

It is not strange that Nataraja was represented in the human form for Man saw God in his own form. So absorbed with the human contours was the Indian Mind that the best of our art, inspiring sculptor, painter, even the architect in his perception of the temple, was the geometry of the human form. If the body of the dancer is the temple, it is the abode of a Sadasiva who is the King of Dancers:

(transliterated: Deho Devalaya Prokto, Devo Jeevaha Sadasivam — Sanatanaha)

Nataraja sees the likeness of man transcended into the pre sence of God. "Here is primal, rhythmic energy underlying all phenominal appearances and activity, here is perpetual movement, perpetually poised — the rhythm of the Spirit".

The words of Tirumoolar are ever fresh:

அண்டங்கள் ஓரேழும் அம்பொற் பதியாகப்
பண்டை ஆகாசங்கள் ஐந்தும் பதியாரி
தொண்டில் சக்தி தரு அம்பலமாகக்
கொண்டு பரஞ்சோதி கூத்தகந்தானே!

"Andangal orezhum ambor padiyagap
Pandai akasangal ainthum padiyari
Tondil sakti taru ambalamahak
Kondu paranjoti Kuttahantane"

Like in all great Indian contributions, the motive force for the creation of this great motif was Bhakti. Love, Reverence, Renunciation, Worship were the order of the day. Name or fame never prompted the artist. No wonder, for those conscious of a strong inner reality, have less use for other outer expressions. Said Stella Kramrisch in the 'The Art of India',

"God is the Name, and a work of art is the Body and House in which the Formless, the Beyond-Form, the Goal of Release and Source of all Form, reveals itself. The statues and temples are stages on the road."

'Satyam, Sivam, Sundaram' says the famous alliteration. If Beauty is Truth, then God is Beauty.

Ultimately, this Dance of Nataraja exists in the 'Chit' or the inner perception of a human being. For one who perceives its true nature, there is nothing beyond. □



வினைப்பிறவி என்கின்ற
வேதனையில் அமப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே
தளர்ச்சிறிதும் நினையாதே
எனைப்பெரிதும் ஆட்கொண்டென்
பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகும் தொழுந்தில்லை
அம்பலத்தே கண்டேனே.

—திருவாசகம்



Let the blessings of Lord Nataraja be showered on the people of this world for peace and prosperity.

TIFFIN'S BARYTES, ASBESTOS & PAINTS LTD.,

MINE OWNERS & EXPORTERS OF MINERALS

127, ANGAPPA NAICK STREET □ P.B. NO. 73 □ MADRAS 600 001.

TELEPHONE 24818/28263 **TELEX: 041-7524(A/B—TIFN IN)**

SICPL

SOUTH INDIA CORPORATION PRIVATE LIMITED

Rani Seethai Hall 3rd Floor,
No. 603, Anna Salai,
MADRAS—600 006.
Phone: 474522/470188

STOCKISTS OF IRON AND STEEL,
CLEARING AND FORWARDING AGENTS
AND
CIVIL STRUCTURAL ENGINEERS AND CONTRACTORS.

PAPER STORE AT
NO. 51, ANDERSON STREET,
MADRAS—600 001.

PHONE: 20359.

BRANCHES ALL OVER SOUTH

With
best
compliments
from

FOR

Strength & Durability

"CHETTINAD BRAND"

Portland/Portland Pozzolana Cement

Manufactured by:

CHETTINAD CEMENT CORPORATION LIMITED

Registered Office:

"Rani Seethai Hall Building",
4th & 5th Floors,
No. 603, Anna Salai,
MADRAS—600 006.

Telegram: 'BESTCEMENT'
Telephone: 472727
Telex: 41-7829 CCC IN.

Factory:

"Kumararajah Muthiah Nagar"
Puliyur Cement Factory Post,
Karur Taluk,
Trichy District., Tamil Nadu
Pin Code: 639 114

Telegram: "CEMENT" Karur
Telephone: 21144, 22744, 21745
Telex: 456-215 CCC IN.

Branches at:

BOMBAY □ BANGALORE □ CALCUTTA □ COCHIN

ANNAMALAI UNIVERSITY PRESS AUP